# தாய்வீடு

214

THAIVEEDU JANUARY 2025 ஜனவரி www.thaiveedu.com



## மூத்த பத்திரிகையாளர் ஈ.கே. ராஜகோபால்

சிறப்பிதழ்

## மொழிபெயர்ப்புக் கலை!

- அன்னலட்சுமி இராஜதுரை



## எம்.டி. வாசுதேவன் நாயர்

இலக்கிய வானில் மின்னி மறைந்த ஒற்றை நட்சத்திரம்

- சாங்கிருத்தியன்

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Buying Selling Leasing Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
Dir. 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent
416-939-8789
647-347-8790
thevenk1.tk@gmail.com
theven.kankesu@mtgarc.ca
50 New Delhi Dr, Unit 113,
Markham, ON L3S 0B5


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
சர்வேசன்,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**றொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,

**மொன்றியால்:**
சுகுமாரன் சின்னையா.
**ஒட்டாவா:**
அலெக்ஸ் சிவசம்பு: +1 613 276 7253
**மலையகம், கொழும்பு:**
மல்லியப்புசந்தி திலகர்: +94 71 120 8061
**மட்டக்களப்பு:**
வி. மைக்கல் கொலின்: +94 77 433 8878
**கிளிநொச்சி:**
கிளி மக்கள் அமைப்பு:
**யாழ்ப்பாணம்:**
S. சத்தியதேவன்: +94 77 7294 287

**அஞ்சல் முகவரி**
**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Canada**

**Tel : +1 416 857 6406**
**Fax : +1 416 849 0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

## நம்பிக்கையுடன் பிறந்திருக்கும் 2025!

தென் ஆசியாவினதும் தென்கிழக்கு ஆசியாவினதும் பதினைந்து நாடுகளில் இரண்டு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்துக்கும் அதிகமான மக்களின் உயிர்களைப் பலிகொண்ட கடல்கோள் அனர்த்தத்தின் இருபதாவது ஆண்டு நிறைவு பாரிய சலனமெதுவுமின்றிக் கடந்து போயிருக்கிறது. ஆழிப்பேரலையால் இலங்கையில் இழக்கப்பட்ட உயிர்களின் எண்ணிக்கை 1700 என இலங்கை அரசின் உத்தியோகபூர்வத் தகவல்கள் சொன்னாலும், அனர்த்தம் நடந்த காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பிரதேசங்களில் ஏற்பட்ட அனர்த்தத்தின் பாரதூரத்தை கொழும்பு முழுமையாக அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஒரே நாட்டுக்குள் இரண்டு அரசுகள் இயங்கிக்கொண்டிருந்த காலகட்டம் அது.

இருந்தபோதும், தமிழர், சிங்களவர் என்ற பாரபட்சமின்றி இயற்கை நடத்திய கோரத்தாக்குதலும், இந்த அனர்த்தம் நிகழ்ந்தபோது உலக நாடுகளின் மேற்பார்வையின் கீழ் நிலவிய போர் நிறுத்தச் சூழலும், அமைதிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலைவரமும், இலங்கையின் பல்வேறு இனக்குழுமங்களும் தமக்கிடையேயான புரிந்துணர்வை ஏற்படுத்தி, சுமுக நிலையை வலுப்படுத்துவதற்கான ஓர் அரிய வாய்ப்புத் தோன்றியிருப்பதாக நம்பிக்கை கொண்டிருந்த காலகட்டமாகவும் அது இருந்தது.

ஆனால் அந்த நம்பிக்கை அதிகநாள் நீடிக்கவில்லை. இயற்கையின் அனர்த்தத்தில் இருந்து மீள்வதற்கு முன்னரே தமிழ் மக்கள் மீது பெரும்போர் தொடுக்கப்பட்டு, சொல்லொணாத் துயரங்களும் கொடூரங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டன. மத்தியஸ்தம் பார்க்கவந்த உலக நாட்டினரும் மதில்மேல் மந்திகளாய் இருந்து வேடிக்கை பார்த்தனர், அல்லது ஆக்கிரமிப்புப் படைகளுக்கு மறைமுகமாய் ஆதரவு கொடுத்தனர். இயற்கையாலும் பேரினவாதத்தாலும் கொன்றொழிக்கப்பட்டவர்கள் போக எஞ்சியிருந்த தமிழர்கள் வலிசுமந்தவர்களாகவே வாழ்க்கையைத் தொடர்ந்தனர்.

தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட அந்தப் போர் சீர்குலைத்தது தமிழர்களை மட்டுமல்ல தங்களையும்தான் எனத் தென்னிலங்கையின் சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ள கொரோனா பெருந்தொற்று என்ற இன்னோர் இயற்கைப் பேரிடர் தாக்கும்வரை காத்திருக்க வேண்டியிருந்தது. தென்னிலங்கை மக்களின் அந்தத் தெளிவும், அதன் காரணமாக அவர்களிடையேயிருந்த முற்போக்குவாதிகள் நாட்டின் ஏனைய இனங்களை நோக்கி நீட்டிய நேசக்கரமும், அதைத் தயக்கத்துடனேனும் பற்றி அனைத்து இனங்களின் உரிமைகளையும் மதிக்கின்ற ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப மீண்டும் ஒரு முயற்சியை மேற்கொள்ளத் தமிழ்பேசும் மக்கள் முன்வந்தமையுமே இன்று நாட்டில் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி அமைய வழிசமைத்துள்ளது.

எனவே, சுதந்திரம் பெற்று ஏழு தசாப்தத்துக்கும் மேலாகச் சாத்தியப்படாத சமத்துவ, சமதர்ம இலங்கை, இனிவரும் காலத்தில் சாத்தியப்படும் என்ற நம்பிக்கையுடனேயே 2025 விடிந்திருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை அங்கீகாரத்துடன் ஆட்சி அமைத்தது முதல் இப்போது வரையான சில வாரங்களில் வெளியான அறிகுறிகளில், எல்லாமே இந்த நம்பிக்கைக்கு வலுச்சேர்ப்பவையாக இல்லை என்றாலும், அங்ஙனம் வலுச்சேர்க்கின்ற பலமான அறிகுறிகளும் வெளிப்பட்டுள்ளன என்பதே இப்போதைய மகிழ்ச்சி. அவ்விதமான ஓர் அறிகுறியாக சட்ட விரோதமாக மதத்தலங்கள் நிறுவப்படுவதை அனுமதிக்கமாட்டோம் என அரசின் புத்த சாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி அறிவித்திருப்பதை நோக்கலாம். அநுர குமார திசாநாயக்கவின் அரசிலும் புத்தசாசனத்துக்கென பிரத்தியேகமாக ஓர் அமைச்சர் நியமிக்கப்பட்டமை இலங்கையின் பௌத்த பேரினவாதத்தின் தொடர்ச்சியோவெனச் சந்தேகத்தோடு நோக்கப்பட்ட நிலையில், அந்த அமைச்சரின் இந்தக்கூற்று சற்று நம்பிக்கையூட்டுவதாய் இருக்கிறது.

அதேவேளை, சூழலியல் செயற்பாட்டாளரும் ஊடகவியலாளருமான மு. தமிழ்ச்செல்வன் மீது அண்மையில் அடையாளம் காணப்படாத நபர்களால் நடத்தப்பட்ட கடத்தல் முயற்சியும் தாக்குதலும் நம்பிக்கையைக் குலைக்கும் அறிகுறிகளுக்கு உதாரணம். முந்தைய அரசுகளின் வெள்ளை வான் அராஜகத்தை நினைவுபடுத்துவதாய் இந்தக் கறுப்பு வான் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. இதுபோன்ற சம்பவங்கள் அரசின் மீதான நம்பிக்கையைக் குலைத்து, நாட்டு மக்களின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கும். இதுபோன்ற நிகழ்வுகளை முளையிலேயே கிள்ளி எறிய அரசு என்ன நடவடிக்கைகளை எடுக்கப்போகிறது என்பதே எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை இன்னமும் வலுப்படுத்தும்.

நாட்டில் அனைத்து மக்களும் சரிநிகர் சமானமாகவும் பாதுகாப்பாகவும் உணர இன்னும் நாடும், மக்களும், அரசும் பயணிக்கவேண்டிய தூரம் அதிகம். அந்தப் பயணத்துக்கான திடகாத்திரமான ஆரம்பமாக, பிறந்திருக்கும் 2025 அமையவேண்டும் என்பதே எல்லோரதும் அவா!

# இம்மாதத் தாய்வீட்டில்...


நம்பிக்கையுடன் பிறந்திருக்கும் 2025! 3

இன்று இடதுசாரித் தரப்பு
முதலாளித்துவத்தைத் தழுவவேண்டுமா? 5
- அஜித் ராஜபக்சா
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

ஜே.வி.பி-யின் இந்திய எதிர்ப்பு
ஒரு வரலாற்றுப் பார்வை 10
- என்.சரவணன்

சிரியாவில் அசாத் ஆட்சிபீட வீழ்ச்சி:
புதிய சவால்களும் பிராந்திய, சர்வதேச சக்திகளும் 16
- ரூபன் சிவராஜா

அழிக்கப்படும் சிரியாவில்
வணிகப் போட்டிகளும் குர்திய தேசியமும் 22
- ரதன்

மீட்பரின் வருகை:
எழுச்சியுறும் ஐரோப்பிய அதிவலது 28
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

வலுவிழந்து வருகிறதா இந்தியச் சனநாயகம் 33
- நெல்லை ஜெயசிங்

21-ஆம் நூற்றாண்டின் ஆசிரியர் 37
- அகமட் பிஸ்தாமி

தொடர்ந்து பொய்சொல்லும் பிள்ளைகள் 39
- த. சிவபாலு

பெண்மையின் மென்மையை மாற்றும்
மாதவிடாய் நிறுத்தம் 42
- போல் ஜோசேப்

சாரதிகளின் சில தவறுகள் 45
- செந்தூரன் புனிதவேல்

சூரியக் குடும்பத்தை அறிந்து கொள்வோம் 47
- குரு அரவிந்தன்

அமெரிக்காவில் பறந்த ஆளில்லா விமானங்கள் 50
- சுப்ரமணியம் ஜெயசீலன்

விரல்களே கண்கள் ‘உலக பிரெய்லி நாள்’ 53
- சி. நற்குணலிங்கம்

தொடர்கதை 55
- குமார் புனிதவேல்

நாசி ஆக்கிரமிப்புக் காலத்தைப் பிரதிபலிக்கும்
இரு நோர்வே திரைப்படங்கள்... 57
- சர்வேந்திரா

நடிப்பு என்றொரு கலை 60
- ஓவியர் ஜீவா

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பிதாமகன்
தமிழவேள் க.இ.க. கந்தசுவாமி 63
- வே. விவேகானந்தன்

உலகின் மற்றொரு பக்கம்:
புற்றுநோயின் இருண்ட பக்கத்தில் ஒளியைக் காணுதல் 66
- மீனாள் நித்தியானந்தன்

மலையக இலக்கியத்தில் தேநீரும் பாலும் 69
- மல்லியப்புசந்தி திலகர்

போருக்குப் பின்னரான
சிங்களப் புனைவுலகும் தமிழ்ச் சூழலும் 75
- ஜிஃப்ரி ஹாசன்

நிலங்க அலெக்ஸாண்டரின் ‘சூர்ய மரத்தின் தீர்ப்பு’
பல பரிமாணங்களில் அகவிசாரணைகளை
நிகழ்த்தும் கதைகள் 78
- கருணாகரன்

நடேசய்யரின் 'ஒற்றன்', Havoc என்ற
ஆங்கில நாவலின் அப்பட்டமான தழுவல் 82
- மு.நித்தியானந்தன்

ஒரு நூலின் உருவாக்கம்:
ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல்
- என். செல்வராஜா

தேசியத்தினுள் பால்நிலைப்படுத்தப்பட்ட
உள்ளார்ந்த ஆற்றுகைளை அடையாளம் காணல் 95
– விதுர்ஷா கமலேஸ்வரன்

பால்நிலையினை அடிப்படையாகக் கொண்ட
வன்முறைகளுக்கு எதிரான 16 நாள் செயல்வாதம் 98
– சிவா மாலதி

**மூத்த பத்திரிகையாளர் ஈ.கே. ராஜகோபால்!**
– எஸ். ஜெகதீசன் 102
– சிவபரிமேலழகர் 107
– வேலா சுப்பிரமணியம் 108
– அ. கந்தசாமி 112
– இரத்தினம் கந்தசாமி 114
– சரோஜினி சந்திரகோபால் 116
– பொ. சண்முகநாதன் 119
– உடுவை எஸ். தில்லைநடராசா 120
– பவானி ரவீந்திரன் 124
– எஸ்.எம். வரதராஜன் 126
– நவஜோதி ஜோகரட்னம் 130
– ஆர். தியாகராஜன் 132
– ஈ.கே. ராஜகோபால் 136
– சசிபாரதி 140
– எஸ்.எம். கோபாலரத்தினம் (கோபு) 142

பெரு வனாந்தரங்களைக் கொறிக்கும்
இரும்புப் பற்கள் 144
- சதீஸ் செல்வராஜ்

கல்லறையிலும் தமிழ் ஆராய்ச்சியாளருடன்
உறங்கும் தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் 147
- ச. சத்யதேவன்

எம்.டி. வாசுதேவன் நாயர்
இலக்கிய வானில் மின்னி மறைந்த ஒற்றை நட்சத்திரம் 152
- சாங்கிருத்தியன்

ரிஷபத்தளியிலார் 154
- த. ஜீவராஜ்

ஆரிய - கலிங்க முரணும் ஒரு பேரரசின் மறைவும் 156
- வி. துலாஞ்சனன்

அன்னலட்சுமி இராஜதுரை
ஈழத்தின் முதல் தமிழ்ப் பெண் ‘சாகித்ய ரத்னா’ 159
- கங்கா

யாழ்ப்பாணத்தில் பெயர் சொல்ல மூன்று ஆறுகள் 160
- இயல்வாணன்

காமன் கூத்து
வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலை 162
- அருணாசலம் லெட்சுமணன்

ஈழத்து நவீனத் தமிழ்க் கவிதையில்
பெண்நிலைவாதக் கோட்பாடுகள் 168
- சி. ரமேஷ்

இலங்கைத் தமிழ்க்கவிதைச் சஞ்சிகைகளில்
மகளிர் கவிதைகள் 175
- கோட்டி திருமுருகானந்தம்

மொழிபெயர்ப்புக் கலை! 178
- அன்னலட்சுமி இராஜதுரை

மார்க்சியமும் சமூக விஞ்ஞான முறையியலும் 181
ஆங்கில மூலம் : ஜயதேவ உயன்கொட
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம்

தழுவிக்கொண்ட சொற்களும் நழுவிப்போன சொற்களும் 185
- பால. சிவகடாட்சம்

இனப்படுகொலையின் அரசியல் - 10
பௌத்த தத்துவத்தில் போரும் வன்முறையும் 188
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்தற் பணியில்
ஈழத்தவர் பங்களிப்பு - அறிமுகம் 193
- மைதிலி தயாநிதி

நாக்கில் சனி 196
- நாஞ்சில் நாடன்

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் - 7 199
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

எங்கிருந்தோ வந்த கண்ணன்... 203
- கிருங்கை சேதுபதி

கம்பனின் கருவூலம் திறந்து ... 206
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

வாழ்வுரிமை! 211
மா. சித்திவினாயகம்

இது கதையல்ல கண்மணியே! 214
- அ. கந்தசாமி

கவிஞன் 217
- ஹேமன் ஹெஸ்ஸெ
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

# இன்று இடதுசாரித் தரப்பு முதலாளித்துவத்தைத் தழுவவேண்டுமா?

– அஜித் ராஜபக்சா

தமிழில்: மணி வேலுப்பிள்ளை

சமவுடைமைச் சமூகத்தை நிறுவுவது இடதுசாரிகளின் வேட்கை என்பதும், அதற்கு மாறாக, முதலாளித்துவப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது வலதுசாரிக் கருத்தியல்களின் நோக்கம் என்பதும் எமக்குத் தெரிந்த சங்கதிகள்.

தம்மை சமவுடைமையாளர்கள் என்றும் மார்க்சியர்கள் என்றும் வலியுறுத்தி, நீண்ட காலமாகப் போராடிவந்த ஒரு குழுமம் இலங்கையில் ஆட்சி ஏற்றுள்ள இத்தருணத்தில், ஒரு நியாயமான கேள்வி எழுகின்றது: புதிய அரசாங்கம் சமவுடைமைக்கு அமையவா, முதலாளித்துவத்துக்கு அமையவா செயற்படும் ?

நிதி, பொருளாதாரம், பாதுகாப்பு, வெளியுறவு, காணி, நலவாழ்வு, வேளாண்மை, தொழில், உற்பத்தி, துறைமுகங்கள், போக்குவரத்து சார்ந்த முக்கிய அமைச்சுக்கள் எல்லாம் இந்த இடதுசாரிக் குழுமத்தின் கட்டுப்பாட்டில் வந்துள்ளன.

இதே போன்று 1970-இல் இலங்கைச் சுதந்திரக் கட்சியுடன் (SLFP) கூடி அமைக்கப்பட்ட ஐக்கிய முன்னணி (UF) அரசாங்கத்திலும் மார்க்சியர்களை உள்ளடக்கிய ஓர் இடதுசாரிக் கூட்டணி முக்கிய அமைச்சுக்களைப் பெற்றுக்கொண்டது. குறிப்பாக இலங்கை சமசமாசக் கட்சியின் தலைவர் கலாநிதி என்.எம். பெரெரா வல்லமை மிகுந்த நிதி அமைச்சராக விளங்கினார். அது சிறிய கூட்டணியாக இருந்தாலும்கூட, உலகளாவிய சமவுடைமை நெறியின் செல்வாக்கினால், குறிப்பாக சோவியத் ஒன்றியம் செலுத்திய செல்வாக்கினால், சமவுடைமைப் பொருளாதாரக் கொள்கைகளைச் செயற்படுத்த வாய்ப்புக் கிடைத்தது.

மத்திய மேட்டுக்குடி வர்க்கத்தைச் சேர்ந்த கல்விகற்ற, பெரிதும் மேலைக்கல்வி கற்ற அறிவார்ந்தோர், இடதுசாரிக் குழுமத்தின் பிரதிநிதிகளாக விளங்கிய காலம் அது. எனினும், இடதுசாரித்துவக் கொள்கைகள் மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்த அவர்கள் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. அவற்றால் கணிசமானளவு உணவு நெருக்கடி உண்டாகியது. பண்டங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. வேலையின்மை அதிகரித்தது. பொருளாதாரம் தேக்கநிலை அடைந்தது. அதன் விளைவாக, கட்டுப்பாடற்ற சந்தைப் பொருளாதாரத்தை ஏற்றிப்போற்றிய ஐக்கிய தேசியக் கட்சி 1977-ல் முன்றில் இரண்டு பெரும்பான்மை வலுவுடன் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. பல தசாப்தங்களாக முதலாளித்துவத்துக்கும், அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும், கட்டுப்பாடற்ற சந்தைப் பொருளாதார முறைமைகளுக்கும் எதிராகப் போராடிய மக்கள் விடுதலை முன்னணியின் (JVP) தலைமையில் தேசிய மக்கள் சக்தி (NPP) 47 ஆண்டுகள் கழித்து, ஆட்சி ஏற்றுள்ள இத்தருணத்தில் இந்தக் கேள்வி எழுகின்றது:

சமவுடைமைக் கொள்கைகளில் வேரூன்றிய ஒரு கட்சியினால், பொருளாதார நிலைகுலைவின் தாக்கத்திலிருந்து நாட்டை வெற்றிகரமாக மீட்க முடியுமா ? இந்த வினாவுக்கு விடையிறுக்க சமவுடைமை, முதலாளித்துவம் என்பவற்றின் வரலாற்றை மீள்நோக்குவது நல்லது.

### சமவுடைமையின் எழுச்சியும் வீழ்ச்சியும்:

சமவுடைமை முதலில் சோவியத் ஒன்றியத்தில் தோன்றி, பிறகு கிழக்கு ஐரோப்பா, சீனா, கியூபா, வட கொரியா, வியட்நாம்ஆகிய நாடுகளுக்குப் பரவியது. உலகம் முழுவதும் முதலாளித்துவத்தைப் பரப்ப முனைந்த அமெரிக்காவுக்கும், சமவுடைமையைப் பரப்ப முனைந்த சோவியத் ஒன்றியத்துக்கும் இடையே கெடுபிடிப் போர் நிகழும் வேளையில் அவ்வாறு சமவுடைமை பரவியது.

காலப்போக்கில் சோவியத் ஒன்றியத்தின் நிலைப்பாடு மாறியது. உலகம் முழுவதும் சமவுடைமையைப் பரப்பும் கொள்கையைக் கைவிட்டு, தனது சொந்த நலன்களைப் பேணுவதில் மாத்திரம் அது புலனைச் செலுத்தியது. உலகளாவிய சமவுடைமை அணி எதுவுமின்றி சமவுடைமையால் தன்னை நிலைநிறுத்த முடியாது என்ற மார்க்சிய எண்ணத்தை ஸ்டாலின் நிராகரித்தமை ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

அவரது ஆட்சியில் சோவியத் ஒன்றியம் நிலையிழிந்து கொடுங்கோன்மையாய் மாறியது. மாற்றுக்கருத்துக் கொண்டவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். 1917-ல் முழுமுதற் புரட்சிக்குத் துணை நின்றவர்களே மரண தண்டனைக்கு உள்

ளானார்கள். மெக்சிக்கோவுக்குத் தப்பியோடிய முன்னாள் சோவியத் பாதுகாப்பு அமைச்சர் துரொஸ்கி கூட ஸ்டாலினது கையாட்களால் படுகொலை செய்யப்பட்டார். ஸ்டாலினது ஆட்சியில் 10 இலட்சத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டார்கள். இன்னும் பல இலட்சக் கணக்கானோர் பஞ்சத்தால் தாக்குண்டு மடிந்தார்கள். சமவுடைமைப் பொருளாதாரம் வலுவிழக்கவே சோவியத் ஒன்றியத்தின் மீது தங்கியிருந்த சிறிய சமவுடைமை நாடுகளும் வலுவிழந்தன.

அமெரிக்காவின் தலைமையில் முதலாளித்துவம் உலகெலாம் பரவ, சோவியத் ஒன்றியத்திலும், கிழக்கு ஐரோப்பாவிலும் சமவுடைமைப் பொருளாதார முறைமைகள் நிலைகுலையலாயின. அந்நிலைகுலைவு மக்களின் கிளர்ச்சிகளுக்கு வழிவகுத்தது. சமவுடைமைப் பொருளாதார முறைமைகள் ஈற்றில் முதலாளித்துவத்துக்கு அடிபணிய நேர்ந்தது.

கியூபா, வட கொரியா போன்ற நாடுகள் கடுங்கோன்மை கொண்டு சமவுடைமைப் பொருளாதார முறைமைகளைப் பேணிவந்தாலும்கூட, அந்நாடுகளில் வாழும் மக்கள் குடியாட்சிச் சுதந்திரங்களின்றி, கடுமையான பொருளாதார இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றார்கள். சீனாவும் வியட்நாமும் பொதுவுடைமைக் கட்சியின் வன்கோன்மையைப் பேணிக்கொண்டு, சமவுடைமையைக் கடந்து, முதலாளித்துவத்தைத் தழுவிக்கொண்டுள்ளன.

வேலை வாய்ப்புகள், வீட்டு வசதி, மேம்பட்ட வாழ்க்கைப் பாங்கு போன்ற நன்மைகள் சிலவற்றை முதலாளித்துவம் அளிக்கின்றது. எனினும் ஒரு சிறு மேட்டிமைக் குழாத்திடம் செல்வத்தைக் குவிப்பது முதலாளித்துவத்தின் உள்ளியல்பு. ஆதாயத்துக்காகப் பிறரது உழைப்பை அது சுரண்டும். செல்வந்த மேட்டிமைக் குழாத்துக்கும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் இடைப்பட்ட வெளியை அகட்டும். ஆதலால் மனித விழுமியங்கள், பாதுகாப்பான வாழ்வு, நலவாழ்வு, சூழல், சுதந்திரம் என்பன முதலாளித்துவத்தின் விடாப்பிடியான ஆதாயத் தேட்டத்துக்குப் பெரிதும் பலியாகி வருகின்றன.

எடுத்துக்காட்டாக ஐரோப்பா, அமெரிக்கா உள்ளடங்கிய உலகளாவிய சந்தைகளுக்குப் பண்டங்களை உற்பத்தி செய்யும் சீனத் தொழிலாளிகள் தொழிற்சங்கங்களோ சுதந்திர ஊடகங்களோ இல்லாமல் பெரிதும் கடூரமான நிலைமைகளை எதிர்கொண்டு வருகின்றார்கள். வேலைத்தளங்களைப் பத்திரமாகப் பேணும் கடப்பாடும், நலவாழ்வு நியமங்களும் பெரிதும் அங்கு புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் பொதுவுடைமைக் கட்சியில் பணியாற்றும் அதிகாரிகளின் உடந்தையுடன் உற்பத்தித்துறையில் ஈடுபட்டுள்ள கோடாதிபதிகளைக் கொண்ட புதிய வர்க்கம் ஒன்று சீனாவில் மேலோங்கியுள்ளது.

சீனாவில் முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கைகள் இலட்சக் கணக்கான மக்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளன. அதேவேளை பாரிய பொருளாதார ஏற்றத்தாழ்வையும் அவை தோற்றுவித்துள்ளன. இத்தகைய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படாதிருந்தால், சோவியத் ஒன்றியத்துக்கு நேர்ந்த அதே கதி சீனப் பொதுவுடைமைக் கட்சிக்கும் நேர்ந்திருக்கக் கூடும்.

அந்த வகையில், இந்த வினா இன்னமும் ஒலிக்கின்றது: எத்தகைய ஏற்றத்தாழ்வுகளை முதலாளித்துவம் நிலைநிறுத்துகின்றதோ அத்தகைய ஏற்றத்தாழ்வுகளை ஓர் இடதுசாரித்துவ வேடம் பூண்ட முதலாளித்துவத்தினால் உண்மையிலேயே களைய முடியுமா?

## முதலாளித்துவம்:

ஒரு பொருளாதார முறைமை என்ற வகையில் முதலாளித்துவம் என்பது சமவுடைமையை விட வினைத்திறனும் ஆக்கத்திறனும் மிகுந்தது என்று பரவலாகக் கருதப்படுகின்றது.

முதற்கண் ஒரு முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தின் ஊடாகவே பொருளாதார விருத்தி ஏற்பட வேண்டும் என்று சோவியத் ஒன்றியம் அரும்பிய காலத்தில் லெனின் வாதிட்டார். பொருளாதார விருத்தி குன்றி, பின்னடைந்த நிலையில் இருக்கும்பொழுது, உற்பத்தியைப் பெருக்கி, சமவுடைமையை நோக்கி நகர்வதற்கு முதற்கண் அத்திவாரம் இட வேண்டும் என்று அவர் வாதிட்டார். ரஷ்யா இன்னும் சமவுடைமைக்குத் தயாராகவில்லை என்று கருதிய லெனின், அரச முதலாளித்துவமே நிலைமாறு காலகட்ட பொருளாதார முறைமையாக அமைய வேண்டும் என்று வாதாடினார். அப்பொழுது ஜேர்மனியில் காணப்பட்ட பொருளாதார முறைமையே ரஷ்யாவுக்கு பெரிதும் பொருத்தமானது என்று அவர் கருதினார்.

அப்பொழுது ரஷ்ய பொருளாதாரம் கடுமையான இடர்பாடுகளை எதிர்நோக்கியது. பங்கீட்டுமுறை மூலம் உணவு விநியோகிக்கப்பட்டது. எனினும் ரொஸ்கி போன்ற கடும்போக்காளர்கள் அந்த அணுகுமுறையை எதிர்த்து, முதலாளித்துவப் பொருளாதாரக் கட்டுக்கோப்பினை நிராகரித்து, (நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின்படி) சமவுடைமையை நோக்கி புரட்சிகரப் பாதையில் தங்குதடையின்றி நேரடியாக முன்னகர வேண்டும் என்று வாதாடினார்கள்.

சோவியத் ஒன்றியத்தில் சமவுடைமைக் கொள்கைகளுக்கு அமைய படிப்படியான பொருளாதார வளர்ச்சி எய்தப்பட்டாலும் கூட, அந்த வளர்ச்சியைப் பேணிக்கொள்வது ஒரு சவாலாய் அமைந்தது. அலுவலகச் சிக்கல்கள், வினைத்திறன் இன்மை, போட்டியில்லாச் சந்தை, உலகளாவிய நெருக்குதல்கள் மேன்மேலும் தீவிரமடைந்தன. பொருளாதாரம் தேக்க நிலை அடைந்தது. விலையேற்றமும் பற்றாக்குறைகளும் பெருகின.

ஒருமுகப்படுத்திய பொருளாதாரத் திட்டம் பெரிதும் வினைத்திறனற்றது. எடுத்துக்காட்டாக, மாஸ்கோ மாநகரம் முழுவதற்குமான பாண் உற்பத்தியை ஒழுங்கு விதிக்கு உட்படுத்த நடுவண் அரசு எடுத்த முயற்சிகள் ஒன்றில் மேலதிக உற்பத்திக்கு அல்லது தட்டுப்பாட்டுக்கு இட்டுச்சென்றன.

மாறாக, கட்டில்லா முதலாளித்துவ சந்தை இயங்கிய பாரிஸ் மாநகரில் சுதந்திரமாகச் செயற்பட்ட தனியார் வெதுப்பகங்

கள் பாணுக்கான கிராக்கியை வெற்றிகரமாக நிறைவேற்றின. எவ்வளவு பாண் தேவை என்பதை தீர்மானிப்பதில் அரசாங்கமோ அரசியற் கட்சிகளோ தலையிடவில்லை. பதிலாக, கிராக்கியையும் வழங்கலையும் வைத்து வெதுப்பகர்களே சரியான தொகையைக் கணித்தார்கள்.

கட்டில்லா போட்டிச் சந்தையுடன் ஒப்பிடுகையில் ஒருமுகப்படுத்திய சமவுடைமைப் பொருளாதார முறைமைகளில் காணப்படாத வினைத்திறன்களைப் புரிந்துகொள்வதற்கு மேற்படி சிறிய எடுத்துக்காட்டே போதும். ஒருமுகப்படுத்தித் திட்டமிடும் முறைமைகளைவிட சந்தைப் பொருளாதார முறைமைகள் நன்கு செயற்படுவதாக வலியுறுத்துகிறார்கள் முதலாளித்துவவாதிகள்.

## முதலாளித்துவம் மீதான கண்டனங்கள்:

முதலாளித்துவம் கணிசமான பொருளாதார வளர்ச்சியைக் கைகூடச் செய்துள்ளது. அதேவேளை செல்வந்தர்க்கும் வறியோர்க்கும் இடையே ஒரு பாரிய வெளியையும் அது தோற்றுவித்துள்ளது. சமூகத்துள் ஒரு சிறு தரப்பினரிடமே செல்வம் குவிந்துள்ளது. அதற்கு நிகராகச் சாதாரண தொழிலாளர்களின் வாழ்வாதாரங்கள் மேம்படவில்லை.

அமெரிக்காவில் ஒருவரின் சராசரி வருமானம் 1917-ல் பருமட்டாக $7,500-ஆக இருந்து, 2023-ல் $82,000-க்கு மேற்பட உயர்ந்தது. அதேபோல மொத்த தேசிய வருமானம் $9.8 பில்லியனாக இருந்து, $27 திரில்லியனாக உயர்ந்தது. எனினும் அமெரிக்காவில் செல்வம் மிகுந்த 1 விழுக்காட்டினர் வசமே, தேசிய செல்வத்துள் 30 விழுக்காட்டுக்கு மேற்பட்ட தொகை இருக்கிறது.

தேசிய செல்வத்துள் 2.5 விழுக்காடு மாத்திரமே கீழ்மட்டத்து 50 விழுக்காட்டினர் வசம் இருக்கிறது. இவர்கள் பெரிதும் கிழமைக் கூலி பெற்றுப் பிழைப்பவர்கள். இந்த ஏற்றத்தாழ்வு உலகளாவிப் பரந்துள்ளது. செல்வம் மிகுந்த 1 விழுக்காட்டினர் வசமே, எஞ்சிய 99 விழுக்காட்டினரது மொத்தச் சொத்துகளின் இரட்டிப்பு மடங்கு இருக்கிறது.

உலக வங்கியின் கணக்குப்படி, உலக மக்களுள் 44 விழுக்காட்டினர் நாள் ஒன்றுக்கு $7-க்கும் குறைந்த வருவாய் பெற்று வாழ்பவர்கள். 8.5 விழுக்காட்டினர் நாள் ஒன்றுக்கு $2.5-க்கும் குறைந்த வருவாய் பெற்றுப் பிழைப்பவர்கள்.

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த பொருளியலாளர் அதம் சிமித் (Adam Smith) தற்கால முதலாளித்துவச் சந்தைப் பொருளாதாரத்தின் தந்தை என்று கருதப்படுபவர். கேள்வி, வழங்கல் என்பவற்றால் இயக்கப்படும் போட்டிச் சந்தையை அவர் முன்மொழிந்தார். துவக்கத்தில் அந்த முறைமையில் அனுகூலமான அறிகுறிகள் தென்பட்டன. அப்புறம் கட்டுப்பாடற்ற போட்டி, ஆதாயத் தேட்டம் இரண்டும் ஏகபோகங்களுக்கும், பல்தேசியக் கூட்டுத்தாபனங்களுக்கும், பங்குச் சந்தைகளுக்கும், பெறுமதி வழிவரும் நிதி ஒப்பந்தங்களுக்கும், உண்டியற் சந்தைகளுக்கும் வழிவகுத்தன. எல்லாமே பண்டமயமாக்கப்பட்டன. போட்டியும் சுரண்டலும் மும்முரமடைந்தன. கடுமையான பொருளாதாரத் தளம்பல்களுக்கும், உலகளாவிய சர்ச்சைகளுக்கும் அவை துணைபோயின. இப் பெறுபேறுகள் முதலாளித்துவத்தின் இருண்ட சந்துகளைப் புலப்படுத்தின. சிமித் இவற்றை எதிர்பார்க்கவில்லை.

## மாற்றுவழி என்ன?

செல்வம் பெருக்குவதற்கு சமவுடைமை முதன்மை அளிக்கவில்லை. சமத்துவத்தையும் சகவாழ்வையும் மனித நன்னலத்தையுமே அது வலியுறுத்துகின்றது. அரசை மையப்படுத்திய



அஜித் ராஜபக்சா

முறைமை ஒன்றை அது முன்மொழிகின்றது. எனினும் பொருளாதாரத்தை விருத்தி செய்து, செல்வத்தைப் பெருக்குவது அதற்கொரு சவாலாய் அமைந்துள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சுதந்திர சந்தைப் பொருளாதாரம் இன்றியமையாதது. சுதந்திரமான சந்தைகளையும் ஒப்புரவான செல்வப் பரம்பலையும் ஒருங்கிணைக்கும் புதிய பொருளாதார முறைமை ஒன்று அதற்குத் தேவைப்படுகின்றது.

உச்சத்தை எட்டிய உலகளாவிய முதலாளித்துவம் இன்று அதன் வரம்புகளை எதிர்கொண்டுள்ளது. இந்த நெருக்கடி ஓர் உலகளாவிய அரசியல், சுற்றாடல், சமூகவியல் நெருக்கடியாய் ஓங்கியுள்ளது. இது உலகளாவிய சர்ச்சைகளுக்கு இட்டுச்செல்லக் கூடும். நெடுங்காலமாக உலகின் மிக வலிமை வாய்ந்த அரசாகக் கருதப்படும் அமெரிக்கா கூட கணிசமானளவு சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. அமெரிக்கா ஒரு காலத்தில் விதந்துரைத்த சுதந்திரம், குடியாட்சி, மனித உரிமைகள் போன்ற உலகளாவிய விழுமியங்கள் தற்பொழுது முன்பின் முரண்படுகின்றன. அதேவேளை அமெரிக்காவுக்கு அறைகூவல் விடுக்கும் சீனாவும் இவ்விழுமியங்களைக் கைக்கொள்ளத் தவறுகின்றது. பதிலாக, தனது

சொந்த பொருளாதார, அரசியல் நிகழ்ச்சி நிரலில் அது புலன் செலுத்துகின்றது.

முதலாளித்துவம், சமவுடைமை இரண்டினதும் தவறுகளைக் கருத்தில் கொண்டு, உற்பத்தியையும் ஒப்புரவான செல்வப் பரம்பலையும் சமநிலைப்படுத்தும் புதிய சந்தைப் பொருளாதாரம் ஒன்றைத் தோற்றுவிப்பதே இன்று உலகம் எதிர்நோக்கும் சவால்.

## யனிஸ் வரோவகிசின் கண்ணோட்டம்:

கலாநிதி யனிஸ் வரோவகிஸ் (Dr. Yanis Varoufakis) ஓர் அறிவார்ந்த மார்க்சியர்; ஐரோப்பிய குடியாட்சி இயக்கத்தின் தலைவர்; 'இப்பொழுது சுதந்திர போட்டிச் சந்தை கிடையாது; முதலாளித்துவம் முடிந்துவிட்டது; Amazon, Facebook, YouTube, Netflix, Microsoft, Alibaba, Walmart, Google, Tik-Tok போன்ற உலகளாவிய கூட்டுத்தாபனங்கள் உலகின் தரவுகளையும், நிரலிகளையும் (algorithms), மென்பொருட்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன; இந்நிலைவரம் ஒரு புதுவகை நிலப்பிரபுத்துவத்தை தோற்றுவித்துள்ளது; மத்தியகாலத்து (ஏறத்தாழ பொது ஊழி: 1000 முதல் 1450 வரையான காலப்பகுதி) குடியானவர்கள் நிலக்கிழாருக்கு வாடகை செலுத்தியது போல் தற்காலத்தில் இந்நிறுவனங்களுக்கு நாம் வாடகை செலுத்துகின்றோம்...' என்பது அவர் வாதம்.

சுரண்டும் இயல்புடைய முதலாளித்துவத்தின் தலையீடுகளை ஒழித்து, தொழினுட்ப விருத்தியும் தாராண்மைக் குடியாட்சியும் பொதிந்த ஒரு சமவுடைமைச் சமூகத்தைக் கடியெழுப்ப வேண்டும் என்று வரோவகிஸ் வாதாடுகின்றார். மக்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் முதலாளித்துவத்துக்கு ஒரு மாற்றுக் கண்ணோட்டத்தை முன்வைக்க இடதுசாரிகள் தவறிவிட்டதாகவும், அதன் விளைவாக அவர்கள் செல்லாக் காசாகிவிட்டதாகவும் அவர் கருதுகின்றார். எனவே, ஏகபோக முதலாளித்துவத்தைக் கடந்து, குடியாட்சியுடன் கூடிய ஓர் ஒப்புரவான பொருளாதார முறைமையை நோக்கி நகர்வதே உலகம் எதிர்நோக்கும் சவால்.

## இலங்கை:

மேற்கண்ட சவால்கள் இலங்கை போன்ற சிறிய நாடுகள் மீது கனிசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவற்றை எதிர்கொள்வதற்கான ஆற்றல் பெரிதும் மட்டுப்பட்டுள்ளது. வலிமை வாய்ந்த உலகளாவிய அமைப்புக்களே பெரிதும் தீர்மானங்களை எடுக்கின்றன. உலகளாவிய ஆதிக்க அமைப்புக்களின் அதிகார நகர்வுகளுக்குள் சிறிய நாடுகள் பெரிதும் அகப்பட்டுக்கொள்கின்றன.

அத்தகைய எண்ணிறைந்த சவால்களுடன் இலங்கையும் இன்று மல்லாடி வருகின்றது. தான் பட்ட கடனைத் தானே இறுக்கத் தவறி, படுகடன் பொறியில் அகப்பட்டுள்ள ஒரு நாட்டில், பொருளாதார வளர்ச்சியை எய்துவது எப்படி என்பதே தலையாய கேள்வி. எத்தகைய உபாயங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்? எத்தகைய அரசியற் கருத்தியலைப் பின்பற்ற வேண்டும்?

உலகளாவிய முதலாளித்துவ பொருளாதார முறைமையினுள் நாம் வாழ்கின்றோம். அதனுள் அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா, சீனா போன்ற வலிய நாடுகள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டு வருகின்றன. அந்த வகையில், தற்போதைய நெருக்கடிகளுக்கு சமவுடைமைத் தீர்வுகள் கிடையா என்பது வெளிப்படை. இத்தகைய சூழ்நிலையில் ஓரளவுக்கேனும் பொருளாதா வளர்ச்சியை ஈட்டுவதற்கான ஒரே வழி முதலாளித்துவத்தை மேம்படுத்துவதே.

அதற்குப் பல்வேறு கூட்டுத்தாபனங்களையும், பல்தேசிய வணிக நிறுவனங்களையும், முதலீட்டாளர்களையும் சுரண்டுவதற்கு அனுமதிக்க நேரும். அதாவது: உள்நாட்டுத் தொழிலாளர்களையும், சந்தைகளையும் சுரண்டுவதற்கு மேற்படி தரப்புக்களை அனுமதிக்க நேரும். வணிக நிறுவனங்களைத் திறக்கும்படி முதலீட்டாளர்களை ஊக்குவிக்க நேரும். சந்தைக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த நேரும். வரிச் சலுகைகளையும் மற்றும் பிற உதவிப் பொறிமுறைகளையும் அளிக்க நேரும். அரசுத் துறையைச் சிறுப்பிக்க நேரும். தனியார் துறையைப் பெருப்பிக்க நேரும். இந்த அணுகுமுறை, வேலை வாய்ப்புகளைத் தோற்றுவிக்கும். செல்வத்தைப் பெருக்கும். வாழ்க்கைத் தரத்தைப் பெரிதும் உயர்த்தும்.

அதேவேளை அத்தகைய நன்மைகளுடன், முதலாளித்துவம் அதன் உள்ளியல்புக்கமைய உண்டாக்கும் விளைவுகளும் சேர்ந்துகொள்ளும். அவற்றை ஓரளவு சமாளிக்க நேரும். இதை ஏற்காவிட்டால், ஒரேயொரு மாற்றுவழிதான் உண்டு: நாட்டு மக்கள் அனைவரையும் ஆகக்குறைந்த வாழ்க்கைப் பாங்கிற்கு உடன்பட வைக்க வேண்டும்.

எனினும், நுகரும் வேட்கைக்கு உள்ளூரப் பழக்கப்பட்ட மக்கள் தமது பல்வேறு வேட்கைகளையும் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்று கோருகின்றார்கள். அவர்கள் கோருவது முதலாளித்துவத்தையே. முதலாளித்துவத்தை மேம்படுத்தும் அலுவல் இயல்பாகவே வலதுசாரிக் கருத்தியல்களைச் சார்ந்தது. அதே அலுவலை இடதுசாரிகள் ஆற்ற முயன்றால், அது பெரிதும் திரிபுகளுக்கும் பேரழிவுடன் கூடிய தோல்விகளுக்கும் இட்டுச்செல்லும்.

தற்பொழுது மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையைக் கொண்ட தேசிய மக்கள் சக்தி இந்த இக்கட்டை எதிர்நோக்கியுள்ளது. சமவுடைமைத் திட்டங்களை முன்னெடுப்பது, பொருளாதார நிலைகுலைவுக்கு இட்டுச்செல்லக் கூடும். சர்வதேச நாணய நிதியம் உட்பட வெளியுலக முதலீட்டாளர்களை அது உறுத்தக் கூடும். மறுபுறம், முதலாளித்துவத்தைத் தழுவிக்கொள்வது, கட்சித் தோழர்களை உறுத்தக் கூடும்.

மக்கள் விடுதலை முன்னணி துவக்கத்திலிருந்தே மார்க்சிய நெறிகளிலிருந்து விலகிவந்ததை அவர்களது வரலாறு புலப்படுத்துவதாக சில மார்க்சியர்கள் வாதிக்கிறார்கள். பெரிதும் தேசியவாதத்தின் பக்கம் சாய்ந்து, தேசியவாதப் போர்வைக்குள் முதலாளித்துவக் கொள்கைகளை நிலைநாட்டிய தலைவர்களைக் கூட அது ஆதரித்ததாகவும் அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

எனவே அத்தகைய ஒரு போலி மார்க்சியக் கட்சிக்கு முதலாளித்துவத்தைத் தழுவிக்கொள்வது அப்படி ஒன்றும் மிகுந்த சவாலாக அமையாது போகலாம். எனினும், அதன் கணிசமான ஆதரவாளர்கள் இன்னமும் சமவுடைமைக் கனவு கண்டு வருகின்றார்கள். விளம்பரத்தட்டி இடுதல், பேரணிகளுக்கு ஏற்பாடு செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்வோர் அவர்களே. விரைவில் ஏமாற்றத்துக்கு உள்ளாகக் கூடியோர் அவர்களே. எனினும் தேசிய மக்கள் சக்தி அதன் பரம்பரைத் தோழர்களின் வேட்கைகளுடன் ஒன்றியிருப்பதைக் காட்டிலும், தாராண்மைவாத மத்திய வர்க்க கருத்தியல்களின் பக்கம் சாயும் வாய்ப்பே அதிகமாகத் தெரிகின்றது.

முதலாளித்துவத்தை நடைமுறைப்படுத்த களத்தில் இறங்குவதற்கு இன்றியமையாத தரப்புகளுள் முதலாளித்துவ வர்க்கம், முதலீட்டாளர்கள், முகாமையாளர்கள், ஆலைத் தொழிலாளிகள், மற்றும் பிற தரப்பினர் அடங்குவர். இவர்களை எப்படிக் கவர்வது என்பது அடுத்த சவால். அதற்கு பரம்பரைத் தோழர்களையும், விவசாயிகளையும், தொழிலாளிகளையும், ஆசிரியர்களையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் விட்டு விலகி, முதலீட்டாளர்களுடனும், தொழில் முனைவர்களுடனும், மேட்டிமைக் குழாத்துடனும் உறவுபூண நேரும். அத்துடன் வணிகநேய சூழ்நிலை ஒன்றையும் தோற்றுவிக்க நேரும்.

இன்றைய காலகட்டத்தில் முதலாளித்துவத்தைக் கவிழ்ப்பதைக் காட்டிலும், பெரிதும் முதலாளித்துவத்தினுள் குடியாட்சிப்படியான சீர்திருத்தங்களுக்காக வாதாடுவதுடன் மார்க்சியர்கள் அமைதி காண்கிறார்கள்.

பொருளாதார, சமூக வாரியாகப் பின்னடைந்த இலங்கை போன்ற சிறிய நாடுகளில் முதலாளித்துவத்துக்கு மெய்யான மாற்றுவழிகள் எழ வாய்ப்பில்லை. அவை முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் எழவே வாய்ப்புகள் அதிகம். ஆகவே, வருங்காலத்தில் இந்தியா போன்ற பாரிய பொருளாதார வல்லரசுகளில் அத்தகைய வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம்.

அத்தகைய சமூகத்தை எய்த கணிசமான காலம் எடுக்கக் கூடும். இந்தியத் துணைக் கண்டத்தில் அத்தகைய சமூக இலக்கை எய்துவதற்கான வாய்ப்புகள் அதிகமாகத் தெரிகின்றன. எனவே இலங்கைவாழ் முற்போக்காளர்கள் இந்திய துணைக் கண்டம் எங்கும் இயங்கும் ஒத்த கருத்துடைய குழுமங்களுடன் அணி திரள்வது அத்தியாவசியம்.

(Ajith Rajapaksa, Should the Left Embrace Capitalism Today ?, Colombo Telegraph, 2024-12-05,)



mani.velupillai@thaiveedu.com



# ஜே.வி.பி-யின் இந்திய எதிர்ப்பு

## ஒரு வரலாற்றுப் பார்வை

**- என். சரவணன் -**

‘மூலோபாயமானது முழுப் போராட்டத்தின் மையமாகும் அதற்கான பாதையின் தற்காலிக உடனடி சமரே தந்திரோபாயமாகும்’ என்பார் லெனின்(இடதுசாரி கம்யூனிசம் - இளம்பருவக் கோளாறு’ - நூலிலிருந்து). இந்தியாவுடனான ஜேவிபியின் முரணையும் உறவையும் இந்தக் கோணத்தில் பார்ப்பதா என்பதே இந்த வாரம் பரவலாக இடம்பெற்றுக்கொண்டிருக்கும் விவாதங்களாகும்.

### இந்தியத் தலையீட்டு மரபு:

கிறிஸ்துவுக்கு முன்னர் இருந்தே இலங்கை மீதான ஆக்கிரமிப்பு மரபு இந்தியாவுக்கு உண்டு. இலங்கை சிங்கள மக்கள் மத்தியில் இந்தியாவுக்கு எதிராக கட்டமைக்கப்பட்டிருக்கும் ஐதீகங்களைப் பலப்படுத்தி வந்த காரணிகளை சுறுக்கமாக இவ்விடயப் பரப்புக்குள் உள்ளடக்கலாம்.

- தென்னிந்திய ஆக்கிரமிப்பு படையெடுப்புகள்
- காலனித்துவ கால இந்தியத் தமிழர்களின் குடியேற்றமும். சிங்களவர்களுக்கு அடுத்ததாக பெரும்பான்மை இனமாக அவர்கள் ஆனதும்.
- 1920 களில் இருந்து இந்திய வம்சாவளியினர் வழியாக இந்திய தலையீடுகளும், சிங்களத் தலைவர்களுடனான கருத்து மோதல்களும்.
- தென்னிந்திய திராவிட இயக்கங்களின் செல்வாக்கும், திராவிடஸ்தான் பீதியும்
- இந்திய முதலீடுகளும் சுரண்டலும்
- ஈழப் போராட்டமும் அதற்கான இந்திய மத்திய அரசினதும், தமிழ்நாடு அரசினதும் அனுசரணைகளும் ஆதரவும்
- 1987-ல் இருந்து இலங்கை ஒப்பந்தமும், மாகாணசபை ஸ்தாபிப்பும்
- விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளில் இந்தியத் தலையீடுகள்
- இந்திய - இலங்கை வர்த்தக ஒப்பந்தங்கள்
- தமிழக மீனவர்களின் எல்லை மீறல்

இலங்கை மீதான தென்னிந்திய படையெடுப்புகள் பற்றி சிங்கள பௌத்தர்களின் புனித வரலாற்று நூலான மகாவம்சத்தில் ஏராளமான கதைகள் உள்ளன. சிங்கள மக்களுக்கு இந்திய எதிர்ப்புவாத மனநிலையை நிறுவியதில் மகாவம்ச ஐதீக மரபுக்கு பெரும் பங்குண்டு. அதேவேளை இலங்கையின் பண்பாட்டு வளர்ச்சியில் இந்திய பாரம்பரியங்களின் பங்கு(குறிப்பாக தென்னிந்திய வகிபாகம்) மறுக்க இயலாது. ஏறத்தாழ மொழி, கலாசாரம், உணவு-உடைப் பண்பாடு, மதப் பாரம்பரியம், கலைகள் அனைத்திலும் இந்தியாவின் வகிபாகமின்றி இலங்கை வளர்ந்ததில்லை. ஏன் சிங்கள இனத்தின் தோற்றமே இந்தியாவில் இருந்து வந்த விஜயன் மற்றும் அவனின் தோழர்களின் வழித்தோன்றல்களில் இருந்து உயிர்த்தது தான் என்பதை மகாவம்சமே விளக்குகிறது. பௌத்தம் அங்கிருந்து தான் வந்தது. சிங்கள மொழி உருவாக்கத்துக்கான அடிப்படை அங்கிருந்தே கிடைக்கிறது. எந்த சிங்கள பௌத்தத்தனத்தைப் பாதுகாக்கவேண்டும் என்று கூறப்படுகிறதோ அந்த சிங்களமும் பௌத்தமும் இந்திய இறக்குமதியே என்பதை எவரால் மறுக்க முடியும்?

### ஜேவிபியின் இந்திய எதிர்ப்பின் பின்புலம்:

இலங்கையின் வரலாற்றில் இந்தியாவை அதிகமாக எதிர்த்ததும், வெறுத்ததுமான சக்தியாக ஜேவிபியைத் துணிந்து குறிப்பிடலாம். 1968-ல் ‘இந்திய விஸ்தரிப்பு வாதம்’ என்கிற கருத்தாக்கத்தை ஜேவிபி தோற்றுவித்தது. அதன்படி இந்திய எதிர்ப்பு இலங்கையின் அரசியலில் நேரடியாக தாக்கம் செலுத்தப்பட்டு அரை நூற்றாண்டைக் கடந்து விட்டது. இந்திய விரோதப் போக்கின் ஊற்று சீன மாவோவாத பின்னணியில் இருந்து தொடங்கியது என்று ஜேவிபியின் முதலாவது செயலாளரான லயனல் போபகே குறிப்பிடுகிறார். ரோகண விஜேவீரவும் ஜேவிபியின் ஸ்தாபக உறுப்பினர்களாக இருந்த அன்றைய, இளைஞர்கள் பலரும் அதற்கு முன்னர் சண்முகதாசனின் சீன சார்பு கொம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் அணியைச் சேர்ந்தவர்கள். சண்முகதாசனின் பட்டறையில் வார்த்தெடுக்கப்பட்டவர்கள். இந்தியாவுக்கு எதிரான சீன சார்பு பிரச்சாரங்களை உள்வாங்கியவர்கள். பிற்காலத்தில் சண்முகதாசன் ஈழப் போராட்ட இயக்கங்களிலேயே ஈபி. ஆர். எல்.எப். இயக்கத்தை அதிகம் வெறுத்ததற்குக் காரணமும் கூட அவ்வியக்கத்தின் இந்திய சார்புக் கொள்கையும், இந்தியப் படையுடன் சேர்ந்து இயங்கியதும் தான். அதற்கு மாறாக அவர் புளொட் இயக்கத்தினருடன் நெருக்கமாக இருந்தார். ஏனென்றால் ஈழப் போராட்ட இயக்கங்களிலேயே இந்திய எதிர்ப்பை அதிகம் கொண்டிருந்த இயக்கமாக புளொட் இருந்தது. ‘வங்கம் தந்த பாடம்’ என்கிற நூலை வெளியிட்டு இந்திய எதிர்ப்பு கருத்தாக்கத்தை இயக்க உறுப்பினர்க



ளுக்கு பாடமாக நடத்தியவர்கள்.

ஆனால் 71 கிளர்ச்சிக்குப் பின்னர் இந்திய எதிர்ப்பைக் கைவிட்டதாக குறிப்பிடுகிறார் லயனால் போபகே. ஆனால் 80 களின் அரசியல் கள நிலை மீண்டும் இந்திய எதிர்ப்பு நிலைக்கு கொண்டு வந்து நிறுத்தியது. 'அகண்ட பாரத' கோட்பாட்டிலிருந்து இந்தியா வெளியே வந்து விட்டதா என்றால் இல்லை என்று கூறத் தயங்கத் தேவையில்லை. ஆனால் இந்திய காலனித்துவ அதிகாரத்தை நிறுவுவதாயின் அதனை நேரடியாக கைப்பற்றி மேற்கொள்ளவேண்டும் என்பதில்லை. புதிய உலக ஒழுங்கில் ஆக்கிரமிப்பானது ஆயுதங்களைக் கொண்டு நிறுவுவது அல்ல. மாறாக பல்வேறு நுட்பமான வழிகள் இன்று வளர்ந்துவிட்டுள்ளன. நவகாலனித்துவ முறையியல் என்பது பொருளாதார, கலாசார, தகவல் தொழில்நுட்ப செயற்கை நுண்ணறிவுப் பொறிமுறைகளால் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. முதலாளித்துவம், எகாதிபத்தியம் என்கிற கருத்தாக்கங்கள் எல்லாம் பட்டை தீட்டப்பட்டு மறுவடிவம் பெற்றுள்ளன. மறு கோட்பாட்டக்கம் செய்யப்பட்டுள்ளன. அமெரிக்காவை ஏகாதிபத்தியத்தின் தலைமையாக கருதிவந்த போக்கானது; இன்று அவ்வப்போதைய நலன்கள் சார்ந்து அடிக்கடி மாறி மாறி உருவாகிற அதிகாரத்துவ முகாம்களாக பரிமாற்றம் கண்டிருக்கிறது. அவ்வாறான ஆக்கிரமிப்பு கூட்டு நாடுகள் அவ்வப்போது சேர்ந்தும், பிரிந்தும், புதிய கூட்டுகளை நிறுவிக் கொண்டும் பலவீனமான நாடுகளை சுரண்டும் உலகமே இன்று எஞ்சியிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் நிலையான - நிரந்தமான கூட்டுகள் எதுவும் இல்லை. இந்தப் பார்வையில் இருந்தே இந்தியத் தலையீட்டின் பண்பையும் வடிவத்தையும், அளவையும் கணிப்பிட முடியும்.

1965-ல் ஆரம்பிக்கப்பட்டஜே.வி.பி. 1968-ஆம் ஆண்டளவில் தமது உறுப்பினர்களை கோட்பாட்டு ரீதியில் வளர்த்தெடுப்பதற்காக ஜே.வி.பி நடாத்திய பிரபலமான 5 வகுப்புகளில் முறையே 7Quot பொருளாதார நெருக்கடி, 7Quot சுதந்திரம் 7Quot இந்திய விஸ்தரிப்புவாதம். 7Quotஇடதுசாரி இயக்கம் 7Quot. 7Quot இலங்கையில் புரட்சிக்கான பாதை 7Quot என்பன அடங்கும். இந்திய முதலாளித்துவ வர்க்கம் இந்திய சந்தையை விரிவுபடுத்தி வந்தது. எனவே இந்தியா தனது அரசியல் மற்றும் சந்தைப் பொருளாதாரத்தை நமது நாட்டின் மீதும் சுமத்தி வருவதற்கு எதிராகவே வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இந்தியாவின் அரசியல் பொருளாதார ஆக்கிரமிப்புக்கு இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளியினரைத் தனது நான்காம் படையைப் போல பாவித்து வருகிறது என்கிற கருத்து மேற்படி கருத்தாக்கத்தின் அங்கம் தான். 1970-ம் ஆண்டு தேர்தலுக்கு முன்னர் 'தேசபக்த மக்களுக்கான அறைகூவல்' என்கிற துண்டு பிரசுரத்திலும் இந்திய விஸ்தரிப்புவாதத்தின் சுதேசிய அடிவருடிகள் ஐக்கிய தேசியக் கட்சியே என்று குறிப்பிட்டது.

71 கிளர்ச்சி பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் முன் விஜேவீர சாட்சியமிளித்தபோது எஸ். நடேசன் இந்திய விஸ்தரிப்புவாதம் பற்றி ஜே.வி.பி கொண்டிருந்த கருத்துக்களை உறுதி செய்ய பல கேள்விகளைக் கேட்கிறார். ஓயாமல் அதற்கு பதிலளித்த விஜேவீர. ஒரு இடத்தில் 'இந்திய முதலாளித்துவ வர்த்தகத்தின் நலன்களுக்கு இந்திய வம்சாவளியினர் சாதகமாக இருக்கிறார்கள்' என்றும் குறிப்பிடுகிறார். மேலும் 'தொழிலாள வர்க்கம் ஒரு தொழிலாள வர்க்கமாக ஒழுங்கமைக்கப்படாமல் போனால் தோட்டப்புற மக்கள் ஒரு புரட்சிகர சக்தியாகப் புரட்சிக்கு சேவை செய்யப்போவதில்லை. மாறாக முதலாளித்துவ வர்க்கம் அவர்களை எதிர்ப்புரட்சிக்குப் பயன்படுத்தும். நகர்ப்புறங்களிலும், சிங்கள பிரதேசங்களிலும், தமிழ் பிரதேசங்களிலும் இது தான் நிலைமை.' என்கிறார்.

## 71 கிளர்ச்சியை அடக்க இந்தியா:

- உலக ஏகாதிபத்தியங்கள் தமக்கு தேவைப்பட்டால் தனி நாடொன்றை பிரித்து கூறுபோடவும் முடியும், தேவைப்பட்டால் பிளவுபட்ட நாடுகளை இணைத்துவிடவும் முடியும் என்பதற்கு உலகில் ஏராளமான உதாரணங்கள் உள்ளன. பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், பாகிஸ்தான் போன்ற தனது நேரடி எல்லை நாடுகளிலும் இந்தியா நேரடியாகவோ, மறைமுகமாகவோ தலையிட்டு மாற்றிய ஆட்சி மாற்றங்களை நாம் அறிவோம். 1988-ல் மாலைதீவைக் கைப்பற்றுவதற்காக புளொட் இயக்கம் மேற்கொண்ட சதியை இராணுவ உதவி அனுப்பி அதை முறியடித்ததையும் அறிவோம். அதுபோலவே 1971-இல் ஜே.வி.பியால் மேற்கொள்ளப்பட்ட இலங்கையின் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியைக் முடியடிக்க இந்தியா சகல உதவிகளையும் செய்தது. அக்கிளர்ச்சியின்போது சிறிமா அரசாங்கம் வெருண்டு போயிருந்தது. உலக நாடுகளில் இருந்தெல்லாம் உதவி கோரியது. இந்தியா, பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளின் உதவியோடு அக்கிளர்ச்சியை நசுக்கியது. 71 ஏப்ரல் கிளர்ச்சி குறித்து வெளி

வந்த பல நூல்களில் மிக முக்கியமான நூல் ஜேவிபியின ரின் நியமுவா வெளியீடாக 931 பக்கங்களில் வெளிவந்த ‘71 ஏப்ரல் விசாரணை’ என்கிற நூல்.

- அதில் பல உத்தியோகபூர்வ அரச ஆவணங்கள் பல உள் ளடக்கப்பட்டுள்ளன. இலங்கை விமானப்படை தளபதி ஆணைக்குழுவுக்கு வழங்கிய அறிக்கையும் உள்ளடங் கும். அதில் ‘சமர் நடந்த இடங்களில் இருந்து காயப்பட் டவர் களைக் கொண்டுவருவதற்காக இந்தியாவிடமிருந் தும், பாகிஸ்தானிடமிருந்தும் உதவி கோரினோம். அக்கோ ரிக்கையை அடுத்து இந்தியாவும் பாகிஸ்தானும் 8 ஹெலி கொப்டர்களையும் 25 விமான ஓட்டிகளையும், தொழில் நுட்ப உத்தியோகத்தர்களையும் எமக்கு வழங்கின. அவற் றைக் கொண்டு விநியோக நடவடிக்கைகளை மேற்கொண் டோம். கட்டுநாயக்க விமானத் தளத்தில் இவை தரித்திருந் தன. இந்திய இராணுவத்தைச் சேர்ந்த மேலும் 150 பேர் கட் டுநாயக்க விமானத் தளத்தில் தரித்திருந்து இயங்கினார் கள்’.

## 80–களில் இருந்து:

1986-ம் ஆண்டு விஜேவீர எழுதிய ‘இனப்பிரசினைக்கோர் தீர்வு’ நூலில் கூறப்பட்ட விடயங்கள் மூலோபாய சூத்திரத்துக் குள் அடக்கக்கூடியதல்ல. தற்போதைய ஜே.வி.பி.யின் இந்தியா தொடர்பான மறு அவதார அணுகுமுறை, ஆரம்பத்தில் இந்தியா என்பது ஒரு அரசியல், பண்பாட்டு, பொருளாதார ஆக்கிரமிப்பு நாடாக சித்திரித்து வந்த போதும் மேற்படி நூலிலோ அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் இருந்து இந்தியா பாதுக்காக்கப்பட வேண்டும் என்கிற நிலைப்பாட்டை எடுத்தி ருப்பது புலப்படுகிறது. இலங்கையைப் பிரித்து ஈழ நாட்டை உருவாக்கி அதை தமிழ்நாட்டுடன் காலப்போக்கில் இணைத்து பின்னர் அண்டைய திராவிட மாநிலங்களையும் இணைத்துகொண்டு ஈற்றில் திராவிடஸ்தான்’ என்கிற நாட்டை உருவாக்குவதே திமுக ஆட்சியின் அடிப்படைத் திட்டமென் றும் இந்தியாவைத் துண்டாட முயற்சிக்கிற அமெரிக்க ஏகாதி பத்தியத்தின் அச்சதியில் திராவிட முன்னேற்றக் கழகம் இணைந்து செயலாற்றுவது இரகசியமல்ல என்றும் குறிப்பிடு கிறார். (ப. 173,174) இந்த நூலை விஜேவீர எழுதி ஓராண்டில் இந்திய விமானப்படை அத்துமீறி யாழ் குடாநாட்டுப்பகுதிக ளில் உணவுப் பொதிகளை விமானங்களின் மூலம் போட் டமை, இந்திய மத்திய அரசின் மிரட்டல்கள், இலங்கை - இந் திய ஒப்பந்தம், 13-வது திருத்தச் சட்டம், மாகாண சபைகள், இந்திய அமைதி காக்கும் படையின் வருகை, அப்படையின் அடாவடித்தனங்கள் எல்லாமே இந்தியா பற்றிய கண்ணோட் டத்தை மீண்டும் மாற்றியது. ‘இந்திய ஆக்கிரமிப்பின் வடி வமே இந்தியாவின் போக்கு’ என்கிற முடிவுக்கு வரவேண்டி இருந்தது.

இரு அடிப்படை காரணங்களால் மாகாண சபையை ஜேவிபி எதிர்த்தது. ஒன்று அது நாட்டை பிரதேசங்களாகத் துண்டாடி பிரிவினைவாதத்துக்கு வழிவகுக்கும் என்பதால். அடுத்தது இந்தியாவின் அரசியல் தலையீட்டை இலகுவாக்குவதற்கு ஏதுவாக ‘வடக்கு - கிழக்கு தமிழர் சுயாட்சி’ ஆகிவிடும் என்ப தால். திருகோணமலை துறைமுகத்தின் மீதான அமெரிக்க ஆர்வத்துக்கு ஜே.ஆர் அரசாங்கம் கொடுத்த பச்சை சமிக் ஞையானது இந்தியா உடனடியாக களமிறங்கத் தூண்டிய தன் காரணி என்பதை விஜேவீர அறிவார். அதேவேளை அமெ ரிக்காவை ஒருபோதும் இலங்கைக்குள் அனுமதிப் பதை விஜேவீர விரும்பாதபோதும் இலங்கை - இந்திய ஒப் பந்தத்தின் மூலம் திருமலை துறைமுகத்தின் மீதான இந்தியா தனது செல்வாக்கை ஏற்படுத்தியதையும் எதிர்த்தார். இலங் கையின் இறையாண்மையின் மீதான அச்சுறுத்தலென்றும் பிரச்சாரம் செய்தார்.

87-89 காலப்பகுதியில் இந்திய எதிர்ப்பு வாதம் தலைதூக்கிய போது ஏறத்தாழ பெருவாரி சிங்கள சக்திகள் இந்தியாவை எதிர்த்து ஒன்றிணைந்தார்கள். பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரிக் கட்சிகள், பல்வேறு சிங்கள அமைப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்தது மட்டு மன்றி அதற்குத் தலைமை தாங்கியது ஜேவிபியின் முன்னணி அமைப்புகளின் ஒன்றான தேச மீட்பு முன்னணி. எப்போதும் இந்திய அரசுடன் நட்பைப் பேணி வந்த சிறிமா பண்டாரநா யக்கவும் இந்திய எதிர்ப்பில் முக்கிய பாத்திரம் வகித்தார். இந்தக் கூட்டணி சற்றுப் பலமாக இருந்ததன் காரணம் அக் கூட்டணியானது ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்க்கிற பொதுக் கூட்டணி என்பதாகும். பத்தாண்டுகளாக ஜே ஆரின் அராஜக அரசாங்கத்தை எதிர்க்க வழி தேடிக்கொண்டிருந்த அச்சக்திகளுக்கு இந்தியாவின் அணுகுமுறையை இந்தியா வின் சண்டித்தனமாகவே கருதியது. இலங்கையின் இறை யாண்மையை ஜே.ஆர் இந்தியாவுக்கு பலியாக்கிவிட்டார் என்றே குற்றம் சுமத்தியது. அவ்வாறு எதிர்த்த சக்திகள் 1987க்குப் பின்னர் ஆட்சியிலமர்ந்த எந்த அரசாங்கமும் மாகாண சபை முறையை இரத்து செய்ய துணிந்ததில்லை. மாகாண சபையை தீவிரமாக எதிர்த்த முதன்மை சக்தியான ஜே.வி.பி. கூட இறுதியில் அதனை எதிர்க்க முடியாத இடத் துக்குத் தான் வந்து சேர்ந்தது. உள்ளூர் எதிர்க்கட்சிகள் மட்டு மன்றி ஆளும் கட்சிக்குள்ளிருந்தும் இந்திய எதிர்ப்புவாதம் தலை தூக்கியது. பிரதமர் பிரேமதாச, அமைச்சரவையில் இருந்த காமினி திசாநாயக்க, லலித் அத்துலத் முதலி உள் ளிட்ட முன்னணி தலைவர்களும் இந்திய எதிர்ப்புவாத அலை யில் ஒன்றுபட்டனர்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் போது முக்கிய நிகழ்வுக ளில் பிரதமர் பிரேமதாச கலந்துகொள்வதை தவிர்த்தார். அந்த அலையின் ஒரு வடிவமாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இராணுவ அணிவகுப்பு மரியாதையின்போது ரோஹித்த விஜிதமுனி என்கிற கடற்படை சிப்பாய் ஒருவரால் திடீரெனத் தாக்கப்பட்டார். கைது செய்யப்பட்ட அவரைப் பிரேமதாச விடுவித்தார். அரசாங்கத்துக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையின் போதும் இந்தியாவை பிரிவினைவாதத்துக்குச் சாதகமான சக்தியாகவே ஜே.வி.பி பிரச்சாரம் செய்தது. இவ்வாறான இந் திய எதிர்ப்புவாதத்துக்கு அப்போது தலைமை தாங்கிய சக் தியாக ஜே.வி.பி. இருந்தது. அப்பேற்பட்ட ஜேவிபியின் மக் கள் செல்வாக்கையோ, அரசியல் வளர்ச்சியையோ இன்றைய இந்தியா சாதகமாகப் பார்த்திருக்க வாய்ப்பில்லை.

## இருதரப்பு தந்திரோபாய விட்டுக் கொடுப்புகள்:

எதிர்ப்பரசியலை எங்கே செய்ய வேண்டும், சமரச அரசியலை எங்கே எப்போது, எந்த அளவுக்கு செய்ய வேண்டும் என்ப தையும் சரியாகவே அறிந்து வைத்திருக்கிறது இன்றைய அரசு. அதுவே இன்றைய தேவையும். இந்தியா, சீனா, அமெ ரிக்கா ஆகிய மூன்று வல்லரசுகளையும் சமமாக கையாண்டு

வருவதில் இருந்து அதன் கவனமான ஆட்சிப் பயணத்தைக் கவனிக்கலாம் மூலாபாயம் தந்திரோபாயம் பற்றிய மாக்சிய தத்துவார்த்த வழிகாட்டலை பிரயோகிப்பது எப்படி என்பதைப் பற்றி ஜே.வி.பி. புதிதாக பாடம் கற்க வேண்டியதில்லை. தென்னாசியாவில் இந்தியா சண்டியர் தான். அதன் புவிசார் அரசியல் அணுகுமுறை என்பது தற்காப்பு இராஜதந்திர அணுகுமுறையோடு நின்றுவிடவில்லை. இந்தியாவுக்கென்று அரசியல், பொருளாதார, பண்பாட்டு ஆக்கிரமிப்பு குணம் இருக்கவே செய்கிறது. அது அரசாங்கங்களின் கொள்கையல்ல. இந்திய அரசின் நிலையான அணுகுமுறையே. இந்தியாவின் அனுசரணையின்றி அயல் நாடுகளில் எந்த ஆட்சியையும் நிறுவப்பட்டுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்து வரும் நாடு இந்தியா. அதேவேளை இந்தியாவின்



'அகண்ட பாரத' முனைப்பிலிருந்து இந்தியா பின்வாங்கி விட்டது. என்கிறார் பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி. ஆனால் காங்கிரஸ் ஆட்சியோடு ஒப்பிடுகையில் பிஜேபி ஆட்சியில் அப்படிப்பட்ட நெகிழ்ச்சி இருக்கிறதா என்கிற கேள்வி நமக்கு எழுகிறது. அகண்ட பாரத கருத்தாக்கத்துடன் இந்துத்துவ முலாமையும் பூசிக்கொண்டு 'இந்துத்துவ ராமராஜ்ஜிய விஸ்தரிப்பு'க் கோட்பாட்டைக் கொண்டிருக்கிறது தற்போதைய பிஜேபி என்பதை நாமறிவோம். அந்த வகையில் இந்தியா என்பது தென்னாசியப் பிராந்தியத்தில் நவகாலனித்தைப் பிரயோகிக்கும் நாடு என்பது பரகசியம். ஆனால் அளவு ரீதியில் அதற்கான முனைப்பு அத்தனை வீரியத்துடன் இல்லை என்பது ஒரு தற்காலிக ஆறுதல் எனலாம்.

எவ்வாறாயினும் 'நாடுகள் ஒன்றிலொன்று தங்கியிருத்தல்' கோட்பாட்டின் பிரகாரம் அந்தந்த நாடுகள் தமக்கான பேரம் பேசும் ஆற்றலை வளர்த்து வைத்துக்கொள்வதும் பேணுவதும் அடிப்படியான தகுதிகளே. அந்தவகையில் இலங்கை என்கிற குட்டித்தீவின் பேரம் பேசும் ஆற்றலில் முதன்மையாக அதன் அமைவிடம் தகுதி பெறுகிறது. சுதந்திரத்துக்குப் பின்னர் பிரதானமாக அமெரிக்கா, சீனா, இந்தியா, ரஷ்யா போன்ற நாடுகளின் தலையீடுகளும், ராஜதந்திர ஈடுபாடுகளும் இலங்கையின் அமைவிட முக்கியத்துவத்தின் அடிப்படையிலேயே இருந்து வருவதை கவனித்திருப்பீர்கள். மற்ற காரணிகள் எல்லாம் அதற்கடுத்ததே. இன்றைய இந்திய எதிர்ப்பாளர்கள் இந்திய எதிர்ப்பை இன்றும் பேணி வரும் தரப்பு சிங்களப் பேரினவாதத் தரப்பே. ஆனால் புதிய அரசியல் நிலைமைகளின் கீழ் பலர் சற்று அடங்கி இருக்கிறார்கள். ஆனால் சிங்கள பௌத்தர்களைத் தூண்டக் கூடிய நிகழ்வுகளுக்காகத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கும் தரப்பு அது. குறிப்பாக மாகாண சபை முறைமையை கலைக்க வேண்டும் என்பதில் தீவிரமாக இருக்கும் சக்திகளும் இதில் அடங்கும். இந்தியாவின் இராஜதந்திர வலைக்குள் அரசாங்கம் சிக்கி விட்டது என்கிற விமர்சனத்தையே அவர்கள் முன் வைக்கின்றனர். இந்தியாவுடனான 'நட்பு கொள்ளும் அணுகுமுறை' நடைமுறை அரசியலில் தவிர்க்க முடியாதது. எதில் பிடிவாதமாக இருக்கவேண்டும், எதை விட்டுக்கொடுக்க வேண்டும் என்பது நீண்டகால தேவைகளை மாத்திரம் கொண்டிருக்காது மாறாக சமகால நடைமுறை தேவைகளும் தான் வகிபாகம் செலுத்தும். தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிற ஒப்பந்தங்களில் ஜே.வி.பி எதிர்த்து வந்த எட்கா ஒப்பந்தமும் கூட அந்த 34 ஒப்பந்தங்களில் அடங்கும்.

13-வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த நிர்பந்திப்பது என்பது இந்தியாவின் மானப் பிரச்சினையாகவும் தொடர்கிறது. அதற்காக இந்தியா தனது பிரதமர் ஒருவரை காவு கொடுத்திருக்கிறது. இந்திய அமைதி காக்கும் படையைச் சேர்ந்த 1200க்கும் மேற்பட்டோரை இழந்திருக்கிறது. ராஜீவ் காந்தி இலங்கையில் தாக்கப்பட்டதை இலங்கைப் பெரும்பான்மை இனத்தவர்கள் பெருமிதமாகக் கருதி வருகிறார்கள். இத்தனைக்கும் பிறகும் மாகாணசபை தோல்வியுற்ற தீர்வாகத் தொடர்கிறது. இந்நிலையிலேயே பிரதமர் மோடியின் பேச்சில் 13-வது திருத்தச் சட்டம் பற்றி அழுத்தங்களையும் கவனிக்கலாம். அதை விட அதிகமாக 87-89 காலப்பகுதியில் ஆயிரத்துக்கும் அதிகமான தோழர்களையும் ஜே.வி.பி.யினர் இதே காரணத்துக்காக விலைகொடுத்து இருக்கிறார்கள் என்பதையும் எளிமையாகக் கடக்க முடியாது. அரசியல் களத்தின் இன்றைய வடிவம் மாறியிருக்கிறது.

மாறாக சற்று தாராளவாத சக்திகளையும் இணைத்து கொள்கை நெகிழ்ச்சிப் போக்கைக் கொண்ட, இலங்கையின் இறைமையில் உறுதிகொண்ட இலங்கைக்கான புதிய ஒழுங்கை வேண்டி நிற்கிற இயக்கமே ஜே.வி.பி. அந்த வகையில் இன்றைய ஜே.வி.பியினர் தம் கொள்கைகளில் இருந்து ஓரளவு விட்டுக்கொடுப்பையும் சமரசத்தையும் செய்து கொண்டு புதிய வடிவம் எடுத்துள்ளனர் என்றால் அது மிகையில்லை. இந்த விட்டுக்கொடுப்புகள் ஜேவிபியின் மூலோபாய - தந்திரோபாய அணுகுமுறையின்பாற்பட்டது என்று கூறமுடியும். அதேவேளையில் இருந்து கற்றுக்கொள்கிற நடைமுறைப்பாடங்கள் எதிர்கால ஜேவிபியின் மூலோபாயத்திலும் மாற்றங்களைக் கொண்டுவருமா? என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

## மூலோபாய – தந்திரோபாய மாற்றம்?

இந்தியா மீது ஜேவிபிக்கு இருந்த பார்வை மாறியிருப்பது போல நிச்சயமாக ஜேவிபிக்கு இந்தியா மீதிருந்த பார்வையில் மாற்றம் ஏற்பட்டிருப்பது உண்மை. அதற்கான தேவை ஒருபுறம். அதைவிட இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பில் இலங்கையின் அமைவிடம் முக்கியமானது. தென்னாசிய நாடுகளுக்கு வெளியில் உள்ள நாடுகள் இலங்கையைக் கையாளக்கூடிய சாத்தியங்கள் இலங்கையின் தேவைகளில் இருந்தே வழிதிறக்க இயலும். அப்படியாயின் இலங்கையின் அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மையானது இந்திய உபகண்டத்தின் இருப்பில் தாக்கத்தை செலுத்தக் கூடிய ஒன்று. அதன் நீட்சியாகவே ஒருவகையில் இலங்கைக்கு ஒரு பெரிய அண்ணனாக தன்னைப் பேணிக்கொள்வதிலும், அதனை அனைவருக்கும் நினைவுறுத்துவதிலும் இந்

தியா தீவிர வகிபாகத்தை செய்தாக வேண்டும். இதுவரை இலங்கையில் புதிதாக எவர் ஆட்சியேறினாலும் அவர்களின்



முதல் ராஜதந்திர விஜயம் இந்தியாவுக்கானதாக அமைந்திருக்கிறது. அரச தலைவரின் முதல் விஜயம் இந்தியாவுக்கானதாக இருக்க வேண்டும் என்பதை ஒரு மரபாகவே பேணி வருகிறது. அது ஒருபுதிய அரச தலைவரைக் கௌரவிக்கும் நிகழ்வாக மாத்திரமன்றி, இந்தியாவின் ஆசீர்வாதச் சடங்காகவும், நல்லெண்ண சமிக்ஞைக்கான உடன்பாடுகளையும் கூடவே செய்துகொண்டு வழியனுப்பி வைப்பதையும் வழமையாகக் கொண்டுள்ளது. மூலோபாயம் இல்லாத தந்திரோபாயம் என்பது காலப்போக்கில் தந்திரோபாயத்தையே மூலோபாயமாக மாற்றிவிடும் ஆபத்தை உருவாக்கிவிடும். அதுவே ஈற்றில் சந்தர்ப்பவாத தவறுகளுக்கு வழிவகுத்துவிடும் ஆபத்து உண்டு.

## இலங்கையை இந்தியாவின் அங்கமாக்கலாமா? காந்தி என்ன சொன்னார்?

எதிர்காலத்தில் இந்தியாவின் ஒரு பாகமாக இலங்கையை ஆக்குவது பற்றிய கேள்வியொன்றை 'யங் இந்தியா' (Young india 10.02.1927) பத்திரிகைக்காக ஒருவர் மகாத்மா காந்தியிடம் கேள்வியைக் கேட்கிறார். காந்தி அதற்கு இப்படி பதிலளிக்கிறார். "இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவுகிற நெருக்கமான இன, மொழி மற்றும் மத ஒற்றுமைகள் இருக்கும் நிலையில் எதிர்கால இந்திய சுயராஜ்ஜிய கூட்டமைப்பில் இலங்கை இந்தியாவின் ஒரு பகுதியாக இருப்பது பொருத்தமாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கவில்லையா ?

'பிரிட்டிஷ் இந்தியா' என்பது ஒரு செயற்கையான வர்ணனையாகும். இது அந்நிய ஆதிக்கத்தை, அதாவது பிரிட்டிஷ் ஆதிக்கத்தையே நினைவூட்டுகிறது. ஆகவே அதன் எல்லை நம்மை அடிமைகளாக வைத்திருப்பவர்களின் விருப்பப்படி சுருங்குகிறது அல்லது விரிகிறது. மாறாக சுதந்திர இந்தியா ஒரு ஆக்கபூர்வ முழுமையாக இருக்கும். அதன் சுதந்திரக் குடிமக்களாக இருக்க விரும்புவோர் மட்டுமே அதில் சேர்க்கப்படுவார்கள். எனவே சுதந்திர இந்தியா அதன் புவியியல் இன மற்றும் கலாச்சார வரம்புகளைக் கொண்டிருக்கும். எனவே ஒரு சுதந்திர இந்தியா, பர்மியர்கள் விடயத்தில் இனம் மற்றும் கலாச்சார வேறுபாடுகளை அங்கீகரிக்கும். அது பர்மிய தேசத்திற்கு சக தோழர்களின் கரங்களை நீட்டி உதவும். அதேவேளையில், முழுமையான சுதந்திரத்திற்கான அவர்களின் உரிமையை அங்கீகரிக்கும். இந்தியாவின் அதிகாரத்தில் உள்ள வரையில் அதை மீண்டும் பெறவும் தக்க வைத்துக் கொள்ளவும் உதவும். இலங்கையைப் பற்றி அவ்வளவு நம்பிக்கையுடன் என்னால் பேச முடியாது. நமக்கும் இலங்கைக்கும் பொதுவான கலாசாரம் இருந்தாலும், தென்னிந்தியர்கள் பெரும்பான்மையாக இலங்கையில் வசித்து வந்தாலும், அது ஒரு தனி கட்டமைப்பாகும். நான் கற்பனை செய்கிற இந்தியாவைப் பொறுத்தவரை எனக்கு ஏகாதிபத்திய அபிலாஷைகள் எதுவும் இல்லாததால், இலங்கையை ஒரு முழுமையான சுதந்திர அரசாகக் கருதுவதில் நான் திருப்தியடைவேன்.
ஆனால், அத்தீவின் மக்கள் சுதந்திர இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்க விரும்புவார்களானால், இலங்கையை சுதந்திர இந்தியாவின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள நான் தயங்கமாட்டேன்".

## இலங்கைக்கான எச்சரிக்கை சமிக்ஞைகளா இந்த ஓவியங்கள்:

அனுரா குமார திசாநாயக்க ஜனாதிபதித் தேர்தலிலும், அவரின் தேசிய மக்கள் கட்சி பாராளுமன்றத் தேர்தலிலும் வெல்லும் என்பதை இந்திய உளவுத் துறையினர் கடந்த ஆண்டு இறுதியிலேயே கணித்திருந்தது உண்மை. பெப்ரவரி மாதம்



அனுரவை இந்திய மத்திய அரசாங்கம் இந்தியாவுக்கு அழைத்து பல சந்திப்புகளை மேற்கொண்டது அதன் விளைவாகத் தான். அந்த சந்திப்புகளின் போது வழமையான சாதாரண உடையில் அனுர பிரசன்னமளிக்கவில்லை. மாறாக கோர்ட் சூட் டையுடன் மிக மிடுக்காக அந்த சந்திப்புகளில் கலந்து கொண்டிருந்தார். இன்னும் சொல்லப்போனால் ஜனா



திபதியானதும் டிசம்பரில் மோடியின் அழைப்பின் பேரில் சந்தித்தவேளை கூட மிகச் சாதாரண வெள்ளை சேர்ட்டுடனேயே சந்திப்புகளின்போது அவர் காட்சியளித்தார்.

சரி அது இருக்கட்டும் அதை விட இன்னொரு சுவாரசியமான ஒரு விடயத்தை கவனிக்க முடிந்தது. கடந்த பெப்பரவரி மாதம் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெயசங்கர் அனுர குமார திசாநாயக்கவை அவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்துக்கு அழைத்து சந்தித்த வேளை ஜெயசங்கர் அனுரவை இருத்தியிருந்த இடத்தை எத்தனை பேர் கவனித்து இருப்பீர்கள் தெரியாது. அவர்கள் இருவரும் உரையாடிக்கொண்டிருந்த அந்த இருக்கைகளின் நடுவில் ஒரு ஓவியம். அந்த ஓவியம் சொல்லும் செய்தி என்ன? இராமர் இலங்கை அரசன் இராவணனை 'இராட்சசனை' வென்று திரும்பிய இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைப்பதனை அடையாளப்படுத்தும் ஓவியம் இது. தர்மத்தை நிலைநாட்டியதனை அர்த்தப்படுத்தும் வகையிலான குறியீடு இது. கோட்டபாய ஜனாதிபதியாக ஆனபோது 2021 பெப்ரவரியில் டில்லிக்கு அழைக்கப்பட்ட வேளை பிரதமர் மோடியுடனான சந்திப்பின்போது இலங்கையில் ராவணனுக்கு எதிராக, ராமர் போர் புரியும் தஞ்சாவூர் ஓவியத்தை, கோத்தபய ராஜபக்சேவுக்கு காட்டிய நிகழ்வைப் பற்றி அப்போது தினமலர் பத்திரிகையும் ஒரு செய்தி வெளியிட்டிருந்தது.. அதன் மூலம் நாட்டின் வலிமையையும், ஹிந்து மதத்தின் பெருமையையும், தன் ஆளுமையையும், பிரதமர் மோடி சூசகமாக அறிவித்திருந்தார் எனலாம்.

ஐதராபாத் இல்லம் என்று அழைக்கப்படும் அந்த இல்லத்தில் இரு நாடுகளின் தலைவர்கள் அமர்ந்து பேசும் அறையில் பிரபல ஓவியர் ரவிவர்மா அல்லது வட மாநில ஓவியர் வரைந்த பல ஓவியங்கள் அங்கே மாட்டப்பட்டுள்ளன. அங்கே இருந்த ராமர் பட்டாபிஷேகம் காணும் ஓவியத்தை எடுக்கும்படி அதிகாரிகள் உத்தரவிட்டிருந்தனர். பிரதமர் மோடியின் உத்தரவின்படி, ராமர், சீதை, ராவணன், அனுமர் போன்றவர்களின் படங்களும், இலங்கையை போரின் மூலம் தீக்கிரையாக்கிய படமும், ராவணனுக்கு எதிராக ராமர் போர் புரியும் காட்சியும் நிறைந்த, பெரிய தஞ்சாவூர் ஓவியம் ஒன்று, அங்கு மாட்டப்பட்டது. கோத்தபயா ராஜபக்சே, அங்கே வரவேற்கப்பட்டபோது அந்த ஓவியங்கள் அவருக்கு பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியதாகவும் இந்தியா வலிமையான நாடு என்பதை உணர்த்தும் விதமாக அந்த ஓவியம் இருந்தது. ஆலோசனை மேலும், சீதையை ராவணன், இலங்கைக்கு கடத்தி சென்றதும், அனுமர், சீதையைக் கடல் கடந்து காப்பாற்ற சென்ற காட்சியும், இலங்கையைத் தீக்கிரையாக்கிய காட்சியும், அந்த ஓவியத்தில் இடம் பெற்றிருந்தது. இந்த ஒரு ஓவியத்தின் வாயிலாக, இந்தியாவின் வலிமையையும், ஹிந்து மதத்தின் பெருமையையும், கோத்தபயா ராஜபக்சேவுக்கு, பிரதமர் மோடி மறைமுகமாக சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இராமாயணக் கதைகளை அப்படியே உண்மை என்று ஏற்று அக்கதையின் நாயகனான இராமரை வழிபடுவதையும், இராம ராஜ்ஜியத்தை உருவாக்குவதே தமது இலக்கு என்று பறைசாற்றிக்கொண்டு ஆட்சியமைத்திருக்கும் ஒரு அரசாங்கம், அந்த இராமரின் எதிரியான இராவணனின் நாட்டையும், இராவணனுக்குப் பின் வந்த அந்த நாட்டின் தலைவர்களையும் எப்படி எதிர்கொள்ளும், அவர்களுக்கு எப்படியான சமிக்ஞைகளைக் கொடுக்கும் என்பதற்கான அடையாளங்களே இவை. மறுபுறம் இந்தியாவை ஆக்கிரமிப்பாளர்களாகச் சித்திரிகின்ற சித்தாந்தத்தைக் கட்டமைத்தவர்களும், அக்கருத்தாக்கத்துக்கு ஒரு காலத்தில் தீவிரமாகத் தலைமை கொடுத்தவர்களுமான ஜேவிபியின் தலைவர் அனுர ஜனாதிபதியாகு முன் வரவேற்றபோது இராம பட்டாபிஷேக படத்தின் அருகில் சந்திப்பை ஏற்பாடு செய்தனர். ஆனால் ஜனாதிபதியான பின்னர் ஜெயசங்கருடனான டெல்லி சந்திப்பு ஒரு ஹோட்டலில் நிகழ்ந்ததாலேயோ என்னவோ அவ்வோவியங்களுக்கு வேலை இருக்கவில்லை. ஜெயசங்கருடனான வெளிநாட்டு பிரதிநிதிகளுடனான பல்வேறு சந்திப்புகள் அதே அறையில் அதே பின்னணியில் நிகழ்ந்த படங்களை இணையத்தில் காணக் கிடைத்தது. ஆனால் பின்னணிப் படங்கள் மட்டும் மாறி இருப்பதைக் கவனிக்கும்போது இலங்கைத் தலைவர்களுக்கு குறிப்பான சமிக்ஞைகளை சூசகமாக அறிவிக்கும் சந்திப்புகளும் தானா இது என்கிற கேள்வி எழாமல் இருக்குமா?

ஆணைக்குழு விசாரணையின் போது சிரேஷ்ட வழக்கறிஞர் பாலா தம்பு சமர்ப்பித்த 13 D 1 என்கிற ஆவணம். 2 உதேனி சமன் குமார, '71 ஏப்ரல் விசாரணை: விஜேவீரவின் மனசாட்சி', (RAKTHNTAPAPL) 2016 (சிங்கள மொழி).



sarawanan.n@thaiveedu.com



# சிரியாவில் அசாத் ஆட்சிபீட வீழ்ச்சி : புதிய சவால்களும் பிராந்திய, சர்வதேச சக்திகளும்

- ரூபன் சிவராஜா

சிரியாவின் கிளர்ச்சிக் குழுக்கள் டிசம்பர் 8-ம் திகதி (2024) அல்-அசர்தின் ஆட்சிபீடத்தை வீழ்த்தி, தலைநகர் டமாஸ்கஸ் உட்பட நாடு முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளன. இதன் மூலம் 'அசாத்' வம்சத்தின் ஐந்தரைத் தசாப்த கால ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. நவம்பர் 30-ம் திகதி சிரியாவின் இரண்டாவது பெரிய நகரமான அலெப்போ (Aleppo) கிளர்ச்சிக் குழுக்களின் கூட்டி




னாற் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து 8 நாட்களுக்குள் அதிவேகத்தில் தலைநகர் டமாஸ்கஸ் உட்பட ஒவ்வொரு முக்கிய நகரங்களும் கிளர்ச்சியாளர்களின் கைகளில் வீழ்ந்தன.

சிரியாவின் வடமேற்கு நகரமான இட்லிப் (Idlib)இனைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த கிளர்ச்சிக்குழு மக்கள் மத்தியில் ஹதாஷ் (Hatash) என்று அழைக்கப்பட்டது. இது ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம (Hay'at Tahrir al-Sham - HTS) என்ற அரபுப் பெயராகும். இது அடிப்படையில் அல்-ஹைடாவின் சிரியாவிற்கான கிளை அமைப்பு. 2012-இல் உருவாக்கப்பட்டது. முன்னர் நுஸ்ரா (Nusra) முன்னணி என்று அழைக்கப்பட்ட இந்த அமைப்பு 2016-ல் அல்-ஹைடாவுடனான தனது தொடர்புகளைத் துண்டித்துக்கொண்டு தன்னை நிலைப்பாடு சார் மாற்றத்திற்கு உட்படுத்தியதாக அறிவித்தது. அல்-ஹைடாவுக்கு எதிரான போரிலும் ஈடுபட்டது. மிதவாத எதிர்ப்பு இயக்கங்கள் இதனைத் தொடர்ச்சியாக இடைவெளியிலேயே வைத்திருந்தன. அதேவேளை இன்று அசாத் ஆட்சிபீட வீழ்ச்சிக்குப் பின்னர், HTS ஆயுதக்குழு மிதவாத, மதச்சார்பற்ற மொழியிற் பேசுகின்றது. சிறுபான்மையினரின் உரிமைகள், சட்ட ரீதியான உரிமைகள், அனைத்துத் தரப்பினையும் உள்வாங்குகின்ற ஆட்சிமுறைமை குறித்தும் பேசுகின்றது. அசாத் வீழ்ச்சியை அடுத்து அல்-ஜொலானி கட்டளையின் கீழ் உள்ள படைகள் மூன்று மாத இடைக்கால நிழல் அரசாங்கத்தை நிறுவியுள்ளன.

## கிளர்ச்சிக் குழுக்களுக்கிடையில் உடன்பாடு:

முன்னாள் கிளர்ச்சிக் குழுக்கள் மற்றும் பஷர் அல்-அசாத்தின் (Bashar al-Assad's) இராணுவத்தில் இருந்து வெளியேறிய அதிகாரிகளை உள்ளடக்கியதாகப் பாதுகாப்பு அமைச்சகம் மறுசீரமைக்கப்படும் என்று பிரதமர் முகமது அல்-பஷீர் (Mohammed al-Bashir) அறிவித்திருக்கின்றார். சிரியாவின் பாதுகாப்பு அமைச்சிற்குக் கீழ் இயங்குவது தொடர்பான உடன்பாடு ஆயுதக் கிளர்ச்சிக் குழுக்களுக்கிடையில் எட்டப்பட்டுள்ளதாக புதிய நிழல் அரசாங்கத்தின் (De facto government) தலைவர் அஹ்மத் அல்-ஷரா தெரிவித்திருக்கின்றார். இந்த உடன்பாட்டில் வட சிரியாவை மையமாகக் கொண்டிருக்கும் குர்தீஸ் ஜனநாயகப் படை (Syrian Democratic Forces - SDF) இணையவில்லை. பல ஆயுதக் குழுக்கள் ஒருங்கிணைக்கப்படவுள்ள இந்த நிகழ்வானது, அசாத் ஆட்சிபீடத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் அங்கு நிகழ்ந்த மிக முக்கியமான முன்னேற்றங்களில் ஒன்றாகக் கருதப்படுவதாக அல்-ஜசீரா கருத்து வெளியிட்டுள்ளது. அசாத்தின் வீழ்ச்சியை அடுத்து ஆட்சிபீடத்திற்கு எதிரான போரில் ஈடுபட்டிருந்த ஆயுதக் குழுக்கள் நாடு முழுவதிலுமிருந்து தலைநகர் டமாஸ்கஸ்சிற்குப் படையெடுத்தனர். அவர்களில் சிலர் தலைநகரின் வெவ்வேறு பகுதிகளுக்கு உரிமை கோரினர் என்று அல்-ஜசீரா ஊடகர் Resul Serdar கூறியுள்ளார். இதிலிருந்த பெரும் அச்சம் என்னவெனில், 13 ஆண்டுகள் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருந்த இந்தக் குழுக்கள் கனரக ஆயுதங்களைக் கொண்டிருந்த இந்த ஆயுதக்குழுக்கள் எப்படி ஒன்றி

ணையும் என்ற கேள்வி நிலவியதை அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

### கிளர்ச்சிக் குழு: ஜனநாயக அரசாங்கமே இலக்கு:

இஸ்லாமியக் கிளர்ச்சிக் குழுக்களின் கூட்டாக இணைக்கப்பட்ட எதிர்ப்பியக்க அமைப்பே இன்றைய HTS. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், துருக்கி ஆகியன இதனைப் பயங்கரவாதப் பட்டியலில் இட்டுள்ளன. இதன் தலைவர் பற்றிய தகவல்களைத் தருவோர்க்கு பத்து மில்லியன் டொலர் சன்மானம் வழங்குவதாக அமெரிக்கா முன்னர் அறிவித்திருந்தது. ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னர் இதன் தலைவர் ஜொலானி (Abu Mohammed al-Jolani) சி.என்.என் இற்கு நேர்காணல் ஒன்றினை வழங்கியுள்ளதோடு தமது நிலைப்பாடுகள், இலக்குகள் குறித்த கருத்துகளையும் பகிர்ந்துகொண்டுள்ளார். மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஜனநாயக அடிப்படையிலான ஒரு அரசாங்கத்தை உருவாக்கும் திட்டங்களைப் பற்றி பேசினார். தமது இலக்குகளைப் பற்றி பேசும்போது, 'அசாத் ஆட்சியை அகற்றுவதே புரட்சியின் இலக்காகவே உள்ளது. அந்த இலக்கை அடைவதற்காக கிடைக்கக்கூடிய அனைத்து வழிகளையும் பயன்படுத்துவது எங்கள் உரிமை' என்று கூறினார்.

> **வீழ்த்தப்பட்டிருப்பது சர்வாதிகார ஆட்சி என்பது ஒப்பீட்டளவில் மாற்றத்திற்கான தொடக்கம். ஆனால் இனிக் காத்திருக்கும் எதிர்காலம்தான் சவால்கள் நிறைந்ததாக அமையப்போகின்றது. ஒரு ஜனநாயக நல்லாட்சி சாத்தியமா? அதற்குரிய அரசியல் வெளி உருவாக்கப்படக்கூடியதா என்பன தொக்கிநிற்கும் கேள்விகள். இனி அடுத்தடுத்து நிகழக்கூடிய நிகழ்வு களை வைத்தே எதிர்காலத்தையும் அதன் ஸ்திரத்தன்மை குறித்த எதிர்பார்ப்புகளையும் மதிப்பிடமுடியும்.**

வட சிரியாவிலுள்ள குர்திஷ் தரப்புப் படைகளிடம் உள்ள ஆயுதங்கள் உட்பட நாட்டில் உள்ள அனைத்து ஆயுதங்களும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் என்றும் புதிய நிழல் அரசாங்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னைய ஆட்சிபீடத்தைச் சார்ந்தவர்களுக்கு எதிரான பழிவாங்கல்களையோ அல்லது இன, மத சிறுபான்மையினர் மீதான ஒடுக்குமுறைகளையோ தாம் முன்னெடுக்கப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளது. இதனைப் புதிய நிழல் அரசாங்கத்தின் தலைவர் தன்னைச் சந்திக்கும் மேற்கத்திய அதிகாரிகளுக்கு உறுதிமொழியாக வழங்கிவருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. புனரமைப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தியை அடைவதிற்தான் தனது முதன்மையான கவனம் உள்ளதாகவும், புதிய மோதல்களில் ஈடுபடுவதிற் தனக்கு ஆர்வம் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

### அரபு வசந்தம் – உள்நாட்டுப் போர் – ஆட்சிபீட அகற்றல்:

2011-ல் அரபு வசந்தத்தின் ஒரு கட்டமாக, அல்-அசாத் ஆட்சிபீடத்திற்கு எதிராகத் தொடங்கிய மக்கள் எழுச்சி, தற்போது (08.12.24) அசாத்தின் வீழ்ச்சியோடு கிளர்ச்சிக் குழுக்களின் கூட்டணியின் புதிய ஆட்சிக் கைப்பற்றலுக்கு இட்டுச்சென்றுள்ளது. நாட்டின் பொருளாதாரம் சிதைந்த நிலையிலும் மக்களின் வாழ்வு விளிம்புநிலையிலுமாக ஆக்கப்பட்ட சூழலில் சர்வதேச பொருளாதாரத் தடைகள் அவற்றை மேலும் மோசமாக்கின. மக்கள் எழுச்சி உள்நாட்டுப் போராக மாற்றப்பட்டது. இந்தப் பதின்மூன்று ஆண்டுகாலப் போரில், அரை மில்லியன் வரையானவர்கள் பலியாகியுள்ளனர், ஒரு லட்சம் பேர் வரை காணாமலாக்கப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட 5 மில்லியன் பேர் சிரியாவிலிருந்து, துருக்கி உட்பட்டு அயல்நாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் இடம்பெயர்ந்துள்ளனர். அதனிலும் கூடுதற் தொகையினர் உள்நாட்டுக்குள் (Internally displaced people - IDP) இடம்பெயர்ந்துள்ளனர். நாடு முழுவதும் சொத்தழிவுகளும் சிதைவுகளுடன் மக்கள் சொல்லொணா அவலங்களுக்கு முகம் கொடுத்தனர்.

உள்நாட்டுப் போர் இடியப்பச் சிக்கலையொத்த நிலைக்குள் அகப்பட்டிருந்தது. அதாவது உள்நாட்டில் பல்வேறு ஆயுதக் குழுக்கள் அசாத்திற்கு எதிரான போரில் ஈடுபட்டதோடு, அசாத்திற்கு ஆதரவாகவும் சில குழுக்கள் இயங்கின. துருக்கி, ஈரான் தலைமையிலான பிராந்திய சக்திகள், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய சர்வதேச தரப்புகளின் நேரடி இராணுவப் பிரசன்னம் இருந்தது. இவை வெவ்வேறு நலன்சார் அடிப்படைகளிற் களமிறங்கியிருந்தன என்பதுதான் சிரியாவின் உள்நாட்டுப்போரின் அல்லது அசாத் ஆட்சிபீடத்திற்கு எதிரான கடந்த காலப் போரின் சிக்கலான பரிமாணங்களாகும். மக்கள் எழுச்சியை அசாத் ஆட்சிபீடம் இரும்புக்கரம் கொண்டு நசுக்கியது. மக்கள் எழுச்சியை நசுக்கிய ஆட்சிபீடம் உள்நாட்டுப் போரிலும் 13 ஆண்டுகள் தாக்குப்பிடித்திருக்கின்றது. அசாத்தின் படைகள் களைத்துப் போனதோடு, போர்க்குணத்தினையும் இழந்திருந்தன. அசாத் படைகள் ஆயுதங்களைக் கைவிட்டுத் தப்பியோடியுள்ளன, பலர் நாட்டைவிட்டு ஓடியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஈரானும் ரஷ்யாவும் தொடர்ந்து அசாத் ஆட்சியைக் காப்பாற்ற முனையவில்லை என்பதும் குறிப்பிடப்படவேண்டியது. அசாத் ஆட்சிபீடத்தின் வீழ்ச்சியானது பிராந்தியத்தின் வலுச் சமநிலையைப் பெரும் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது.

### பிராந்திய, சர்வதேச சக்திகளின் இலக்கு:

உள்நாட்டுப் போர் சர்வதேச சக்திகளின் நலன்சார், செல்வாக்குச் செலுத்தும் இலக்குச்சார் போராக மாறியது. துருக்கி



யும் பல வளைகுடா நாடுகளும் கிளர்ச்சியாளர் தரப்பில் தமக்கான செல்வாக்கிற்காகப் போட்டியிட்டன. ஒவ்வொரு நாடுகளும் தமது இலக்கிற்கேற்ப சன்னி இஸ்லாமிய ஆயுதக் கிளர்ச்சிக் குழுக்களுக்கு நிதியுதவி செய்தன. ஐ.எஸ் (IS)இன் ஜிஹாதியக் குழு, பொதுமக்களின் எழுச்சியை அடக்கியது. அமெரிக்கப் படைகள் இஸ்லாமியக் குழுக்களுக்கு எதிராகக் குண்டுவீச்சு தாக்குதல்களை நடத்தியது. குர்திஷ் போராட்டக் குழுக்களுக்கு படைகள் உட்பட்ட வேறுசில ஆயுதக்குழுக்களுக்கும் ஆதரவு வழங்கிப் 'பயங்கரவாதத்திற்கு எதிரான போரை' முன்னெடுத்தது. ரஷ்யா அசாத்திற்கு ஆதரவாகக் களம் இறங்கியது. ரஷ்யாவின் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் மற்றும் ஈரானின் ஆதரவுடன் கிளர்ச்சிக் குழுக்கள் அசாத்திற்கு ஆதரவாக போரில் ஈடுபட்டன. 2015-இன் இறுதியில் கிழக்கு அலெப்போவை (Aleppo) அசாத் ஆட்சிபீடம் மீளக் கைப்பற்றியமை கிளர்ச்சிக்குழுக்களுக்கும் அவற்றின் சர்வதேச ஆதரவுச் சக்திகளுக்கும் பெரும் தேக்கமாக அமைந்தது. அடுத்த இரண்டு ஆண்டுகளில், கிளர்ச்சியாளர்கள் ஒவ்வொரு பகுதியிலும் சரணடைந்தனர்.

இக்காலப் பகுதியில் சிரியாவில் மோதல்கள் குறைந்த அளவிலேயே நிகழ்ந்தன. அதனால் நாடு சர்வதேச செய்திச் சித்திரிப்புகளிலிருந்து மறைந்தும் போனது. ரஷ்யா, துருக்கி மற்றும் ஈரான் ஆகியவற்றின் ஆதரவுடன் தீர்வு முயற்சி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. ஆனால் அந்த முன்னெடுப்பு சிரியாவில் செல்வாக்குச் செலுத்த முனைந்த வெளிநாட்டுச் சக்திகளுக்கிடையில் முரண்களைக் கையாளும் மன்றமாகவே செயற்பட்டதாக எழுத்தாளரும் சுயாதீன ஊடகருமான பென்டிக் சோர்வீக் (Bendik Sorvik) Bendik Sorvik எனும் நோர்வேஜியப் பத்திரிகையில் ஒரு ஆய்வுக்கட்டுரையிற் பதிவுசெய்துள்ளார் (Morgenbladet,13 -19.12.2024). அந்த முயற்சிகளுக்கு அசாத் ஆதரவளிக்கவில்லை. அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய நாடுகள் வழமையான தமது அணுகுமுறைகளில் ஒன்றாகச் சிரியாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை அமுல்படுத்தின. இதற்கிடையில் முதலிற் கிளர்ச்சியை ஆதரித்த பல வளைகுடா நாடுகள் அசாத் அதிகாரபீடத்துடன் உறவுகளை மீள் இயல்புக்குக் கொண்டுவந்தன.

## 'அசாத்' குடும்ப ஆட்சி:

அசாத் 2000-ம் ஆண்டு சிரியாவின் ஜனாதிபதியானார். சிரியாவை அரை நூற்றாண்டுக்கு மேல் தமது குடும்ப ஆட்சிக்குள் வைத்திருந்தவர்கள் அசாத் வம்சத்தினர். தற்போது ஆட்சியை இழந்து நாட்டைவிட்டு வெளியேறியுள்ள பஷார் அல்-அசாத், தனது தந்தையாகிய ஹபெஸ் அல்-அசாத் 2000 ஆண்டு இறந்தபோது தந்தையின் ஜனாதிபதிப் பதவியைத் தனதாக்கிக் கொண்டவர். அதாவது தேர்தலில் ஜனநாயக முறையிற் தெரிவுசெய்யப்பட்டவர் அல்ல. தந்தை 1971இலிருந்து சிரியாவின் ஜனாதிபதியாக ஆட்சிபீடத்தைத் தன் கட்டுக்குள் வைத்திருந்தவர். பஷார் அல்-அசாத் சர்வாதிகார ஆட்சியை நெகிழ்த்துவார் என்ற எதிர்பார்ப்புகள் இருந்தன, ஆனால் சில மேலோட்டமான சீர்திருத்தங்களை மட்டும் மேற்கொண்ட அவர் தந்தையின் இரும்புக்கர ஆட்சியையே தொடர்ந்தார்.

ரஷ்யா மற்றும் ஈரானின் பரந்த ஆதரவுடன், 2016-2017 காலப் பகுதியில் பெரும்பாலான முக்கிய நகரங்களை அசாத் அரசின் படைகள் மீண்டும் கைப்பற்றின. பின்பற்றப்பட்ட கொடூரமான போர் முறைகளையிட்டுப் பல நாடுகள் விமர்சனங்களை முன்வைத்தன. சர்வதேச அளவில் அசாத் தனிமைப்படுத்தப்பட்டார். அசாத்தைப் பொறுத்தவரையில் 2016-2017-இன் மீள்கைப்பற்றல்களுக்கு பின்னரான நிலைமைகள் கிளர்ச்சிகள் ஒடுக்கப்பட்டதோடு, தனது ஆட்சிக்குச் சார்பாகப் போர் வெல்லப்பட்டுவிட்டதான தோற்றப்பாட்டினைக் கொண்டிருந்தார். ஆனால் 2024 நவம்பர் இறுதியில் கிளர்ச்சிக் குழுக்கள் எதிர்பாராத முறையில் தாக்குதல் நடத்தின. சிரியாவின் பெரும்பாலான பெரிய நகரங்கள் ஒரு வாரத்திற்குள் வீழ்ந்தன, மேலும் கிளர்ச்சியாளர்கள் டமாஸ்கஸை 8-ம் தேதி இரவு கைப்பற்றியபோது அசாத் தப்பியோடினார். தற்போது அவரும் குடும்பத்தினரும் ரஷ்யாவில் தஞ்சம் புகுந்துள்ளனர். அசாத் நாட்டைவிட்டு வெளியேறியதை ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது.

## தந்தையிடமிருந்து மகனுக்கு அதிகாரக் கைமாற்று:

தந்தை இறந்தபோது, பஷார் அல்-அசாத் முறையே கட்சியின் பொதுச் செயலாளர், சிரியாவின் ஜனாதிபதி மற்றும் ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதி ஆகிய பதவிகளைத் தனதாக்கிக்கொண்டார். 2000-ம் ஆண்டு ஜூன் 11-ம் தேதி, தந்தை இறந்த மறுநாள், புதிய ஜனாதிபதி வேட்பாளராக ஏகமனதாகக் கட்சியினாற் பரிந்துரைக்கப்பட்டார். பொதுவாக்கெடுப்பில் 97 சதவீத வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2007 மற்றும் 2014-ம் ஆண்டுகளில் எதிர்வேட்பாளர் இல்லாமலும் 2021-ம் ஆண்டில் எதிர்ப்பாளர்களுடனும் மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவற்றில் எவையும் ஜனநாயகத் தேர்தல்கள் என்ற வரையறைக்குள் கருதப்படவில்லை என்பது கவனத்திற்குரியது. தொடக்கத்தில், அசாத் விமர்சனங்களுக்குரிய வெளியை

உருவாக்க முனைந்ததாகக் கூறப்படுகின்றது. எதிர்க்கட்சியினரை இயங்க அனுமதித்ததோடு, சிவில் அமைப்புகளுக்குரிய வெளிகளும் அனுமதிக்கப்பட்டன. ஒரு விதத்தில் இத்தகைய அணுகுமுறை சிரியாவில் ஒரு அரசியல் கலாச்சாரப் புரட்சிக்கான எதிர்பார்ப்புகளை உருவாக்கியது. அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். தனியார் ஊடகங்கள் உரிமம் பெற்றன. அசாத் ஆட்சியின் ஆரம்பகாலங்களில் அவரிடமிருந்து வந்த இந்த நேர்மறைச் சமிக்ஞைகள் சிக்னல்கள் 'டமாஸ்கஸ்-வசந்தம்' (Steve Coll The new Yorker, 23.05.2011) என்று அழைக்கப்பட்டன.

## சர்வாதிகாரத் தொடர்ச்சி:

சிரிய அரசியலிற் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல், தான் சார்ந்த மதக்குழுவைச் சேர்ந்தவர்களுக்கு (Alawites) அதிகாரம் மிக்க பதவிகளை வழங்கினார். சிரிய அரசியலில் ஏற்பட்ட ஜனநாயகச் சமிக்ஞைகள் குறுகிய காலத்திற்குள் முடிவுக்கு வந்தன. தந்தை வழியில் சர்வாதிகார ஆட்சிக்குத் திரும்பினார் பஷார் அல்-அசாத். தந்தையின் ஆட்சிக்காலத்தைப் போலவே இவரது ஆட்சி மீதும் பரந்த அளவிலான பாரிய மனித உரிமை மீறல்கள் சார்ந்து குற்றம்சாட்டப்பட்டது. தந்தையின் வெளியுறவுக்கொள்கை வழியைப் பஷார் தொடர்ந்தார். அது இஸ்ரேலுக்கு எதிரான பகைமையான நிலைப்பாடு மற்றும், ஈரான் மற்றும் லெபனா



னில் ஷியா-முஸ்லீம் ஹிஸ்புல்லாவுடனான நெருக்கமான உறவுகளை உள்ளடக்கியது. 2011-ன் பின்னரான போரில் ஹிஸ்புல்லாவும் அசாத்திற்கு இராணுவ ரீதியில் உதவியது. அரபு வசந்தத்தைத் தொடர்ந்து சிரியாவில் ஏற்பட்ட உள்நாட்டுப்போர் பயங்கரவாதிகள் மற்றும் குற்றவாளிகளாற் தூண்டப்பட்டதாக அசாத் கூறிவந்துள்ளார். அரபு வசந்த மக்கள் எழுச்சியையோ, கிளர்ச்சிக் குழுக்களின் எதிர்ப்புத் தாக்குதல்களையோ தனது ஆட்சிக்கு எதிரான சட்டபூர்வ எதிர்ப்பாக அசாத் கருதவில்லை.

## அசாத் தனிமைப்படுத்தலும் உறவு புதுப்பிப்பும்:

2011-ம் ஆண்டு அமெரிக்கா அவருக்கு தனிப்பட்ட தடை விதித்ததோடு, அன்றைய ஜனாதிபதி பராக் ஒபாமா அவரைப் பதவியில் இருந்து விலகுமாறு கேட்டுக்கொண்டார். ஐரோப்பிய ஒன்றியம் பயணத் தடை விதித்ததோடு, ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள சொத்துகளையும் முடக்கியது. அரபு லீக் சிரியாவை அந்த அமைப்பிலிருந்து தற்காலிக நீக்கம் செய்தது. ஆனால் ரஷ்யா அசாத்திற்குத் தொடர்ச்சியாக ஆதரவு வழங்கியது. அசாத்தைப் பாதிக்கக்கூடிய ஐ.நா தீர்மானங்களுக்கு எதிராக ரஷ்யா திரும்பத்திரும்ப வீட்டோ அதிகாரத்தைப் பிரயோகித்து அசாத்தைப் பாதுகாத்துவந்தது. 2015 - 2016 காலப்பகுதியில், குறிப்பாக ரஷ்யாவின் ஆதரவால், ஆசாத் ஆட்சிபீடம் தனது நிலையை மீள வலுப்படுத்தியது. இதன் விளைவாக அசாத் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை ஒரு அமைதித் தீர்வுக்கான முன்னேற்பாடாகப் பல நாடுகள் விலக்கின. 2020-களின் தொடக்கத்தில், அசாத் படிப்படியாக சில அண்டை நாடுகளில், குறிப்பாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உடன் உறவைப் புதுப்பித்துக் கொண்டது.

சிரியா மீதான பொருளாதாரத் தடைகளை விரைவாக அகற்ற வேண்டும் என்று கட்டார் நாடு அழைப்பு விடுத்துள்ளது. கட்டார் அரசாங்கத்தின் உயர்மட்டத் தூதுக்குழு டமாஸ்கஸுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை, இருநாட்டு உறவுகளில் ஒரு திருப்புமுனையைக் குறிக்கிறது. சிரியாவிலுள்ள கட்டார் தூதரகமும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே 13 ஆண்டுகள் நிலவிய இராஜதந்திர விரிசல் முடிவுக்கு வந்துள்ளது. பொருளாதாரத் தடைகளுக்கு வழிவகுத்த காரணங்கள் தற்போது இல்லாமற்போயுள்ளன, தடைகளுக்கு வழிவகுத்தது முன்னைய ஆட்சியின் குற்றங்கள் என்பதாலும், தடைகளை விரைவாக நீக்குவது அவசியம் என கத்தாரின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மஜீத் அல் அன்சாரி கூறியுள்ளார்(Al-Jazeera, 24.12.2024)

துருக்கியின் அதிபர் ரெசெப் தாயிப் எர்டோகான் (Recep Tayyip Erdogan) சிரியாவில் ஸ்திரநிலைலயை விரும்புகின்றார். ஆனால் அமெரிக்க ஆதரவு பெற்ற குர்திஷ் பிராந்தியங்கள் துருக்கியில் தன்னாட்சி கோரிக்கைகளை வலியுறுத்தும் என்ற அச்சமும் துருக்கிக்கு நெடுங்காலமாக உண்டு. இஸ்லாமியவாதிகளால் வழிநடத்தப்படும் சிரியாவைத் தனக்கு அச்சுறுத்தலாகப் பார்க்கிறது இஸ்ரேல். சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியன தமது நிதிவளங்களைக் கொண்டு சிரியாவின் மறுசீரமைப்புக்கு உதவக்கூடும். ஆனால் அசாத் ஆட்சிபீடத்துடன் இந்நாடுகள் முன்னர் கொண்டிருந்த நட்புறவு புதிய சிரிய ஆட்சியாளர்களுடனான அணுகுமுறையையும் வகிபாகத்தினையும் சிக்கலாக்கவும்கூடும்.

## இஸ்ரேலும் சிரியாவும்:

இதற்கிடையில் அசாத் ஆட்சிபீடத்தின் வீழ்ச்சிக்கு இஸ்ரே-லும் உரிமை கோரியுள்ளது. இஸ்ரேல் சிரியாவிற் தரையிறங்கி, பல கிலோமீட்டர் அகலமான பாதுகாப்பு வலையத்தை உருவாக்கியதாக பிரதமர் நேதன்யாகு பிரகடனம் செய்துள்ளார். 'இஸ்ரேல் கடந்த ஆண்டு முழுவதும் ஈரான் மற்றும் ஹிஸ்புல்லா மீது நடத்திய தாக்குதல்களின் நேரடி விளைவு' அசாத் ஆட்சியின் வீழ்ச்சி என்றும் அவர் கூறியுள்ளார். அத்தோடு டமாஸ்கஸ் மற்றும் ஏனைய சிரியப் பிரதேசங்களை இலக்குவைத்து இஸ்ரேல் பாரிய வான்குண்டுத் தாக்குதல்களையும் நடத்தியது. HTS தலைமையிலான இஸ்லாமியக் குழுக்களின் கூட்டானது, இஸ்ரேலுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடிய ஆயுதங்களைப் பெறுவதைத் தடுக்கவே இஸ்ரேல் நடவடிக்கை எடுத்ததாக இஸ்ரேல் கூறுகின்றது. கிளர்ச்சிக் குழுக்களின் ஆட்சிக் கைப்பற்றலுக்குப் பின்னர், சிரியாவின்



தென் பிரதேசங்களில் இஸ்ரேல் வான்தாக்குதல்களை நடத்தியுள்ளது. வடக்குப் பிரதேசங்கள் மீது குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

ஏற்கனவே இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள கோலான் மலைகளை அண்டிய சிரியாவின் நிலப்பரப்புகளைத் தற்போது இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளது. எந்தவொரு எதிரி படையும் இஸ்ரேல் எல்லையில் தளம் அமைப்பதைத் தடுப்பதே தமது ஆக்கிரமிப்பின் இலக்கு என நேதன்யாகு தரப்பு கூறியுள்ளது. இந்நிலையில் சிரியாவின் நிலப்பரப்புகள் மீதான ஆக்கிரமிப்பு தம்மைப் புதிய யதார்த்தத்தை நோக்கித் நிர்ப்பந்திக்கும் முயற்சி என்று எகிப்தின் வெளியுறவுத்துறை அமைச்சகம் கண்டித்திருந்தது. இந்தச் சம்பவம் குறித்து இஸ்ரேலின் மேற்குலகக்கூட்டாளிகள் எவ்விதக் கருத்துகளையும் தெரிவிக்கவில்லை. அசாத் ஆட்சிபீடத்தின் மீதமுள்ள இரசாயன ஆயுதங்கள் அல்லது நீண்டதூர ஏவுகணைகள் போன்ற மூலோபாய ஆயுதக் களஞ்சியங்கள் கிளர்ச்சியாளர்களின் கைகளில் விழாமற் தடுக்கவே இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலின் வெளியுறவுத்துறை அமைச்சர் கிடியோன் சார் (Gideon Saar) கூறியுள்ளார். அச்சொட்டாக லெபனானிலும் இஸ்ரேல் இதே அணுகுமுறையையே கைக்கொண்டது என்று மத்திய கிழக்கு நிபுணரான ஓரி கோல்ட்பர்க் குறிப்பிட்டுள்ளார் (Klassekampen, 10.12.24)

சிரியாவில் அசாத் மூலம் சாத்தியமாகியிருந்த ஈரானின் செல்வாக்கினை முடிவுக்குக் கொண்டுவருவதில் இஸ்ரேல் முனைப்புக் கொண்டிருந்தது. ஆனால் அங்கு ஒரு ஆட்சி மாற்றம் இத்தனை சடுதியாக ஏற்படுமென்பதை நேதன்யாகு எதிர்பார்த்திருக்கவில்லை. முன்தீர்மானித்த இலக்குகளைத் தாக்கியழிப்பதுவும் முடிந்தளவு ஆள்புலங்களை கைப்பற்றுவதும் (நிலையாக ஆக்கிரமிக்கும் நோக்கமற்று) இஸ்ரேலின் அணுகுமுறை என அவர் மேலும் கூறுகின்றார். அசாத் அதிகாரத்தில் இல்லாத சூழலானது லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பிற்குரிய ஈரானின் ஆயுதவினியோகத்தை கடினப்படுத்தியுள்ளது. இந்நிலையில் அசாத் ஆட்சிபீடத்தின் வீழ்ச்சியைத் தமக்கான ஒரு அரசியல் வெற்றியாகவும் அதற்குரிய பங்கினைத் தமதாக்கிக் கொள்வதிலும் நேதன்யாகு பெருமிதத்தினை வெளிப்படுத்தி வருகின்றார். அத்தோடு இந்நிகழ்வு இஸ்ரேலுக்கு எதிரான போரில் ஈரானின் மற்றொரு முக்கிய கூட்டாளியான ஹிஸ்புல்லா இஸ்ரேலின் தாக்குதல்களிற் பல வீனப்படுத்தப்பட்ட, சில வாரங்களில் நிகழ்ந்துள்ளது.

## துருக்கி, ஈரான், சிரியா:

சிரியாவின் அயல் நாடுகள், பிராந்திய மற்றும் சர்வதேச சக்திகள் புதிய புவிசார் அரசியல் யதார்த்தத்தில் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. மத்திய கிழக்கில் ஈரான் தனது ஒரே அரபு அரசகூட்டினை இழந்துள்ளது. அசாத் ஆட்சியின் வீழ்ச்சி மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் ஈரான் தலைமையிலான அணிக்கு ஏற்பட்ட மிகப்பெரிய பின்னடைவாகும். வட சிரியாவிலுள்ள குர்தீஸ் விடுதலை அமைப்பான YPG (The People's Defense Units) மற்றும் அங்குள்ள சிரிய (குர்தீஸ்) ஜனநாயக அமைப்பினைத் துருக்கி அச்சுறுத்தலாகப் பார்க்கின்றது. இது துருக்கிக்கு நீண்டகாலமாக உள்ள அச்சம். துருக்கியில் பல தசாப்தங்களாக குர்தீஸ் மக்கள் தனிநாடு கோரிப் போராடி வருகின்ற பின்னணியில் இதுவிடயம் பார்க்கப்படுகின்றது. வட சிரியாவின் குர்தீஸ் பிரதேசத்தில் குர்தீஸ் மக்களுக்கான சுயாட்சி நிர்வாகம் நிலவுகின்றது.

அசாத்தின் வீழ்ச்சி ஈரானுக்குப் பெரும் தோல்வி. அதிலும் குறிப்பாக ஈரானின் புரட்சிகரப் படையானது (Islamic Revolutionary Guard Corps) சிரியாவிற் ஈரானின் செல்வாக்கினை நிலைநிறுத்தும் நோக்குடன் நீண்டகாலம் செயற்பட்டு வந்துள்ளது. துருக்கி நீண்ட காலமாக கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆதரவு வழங்கி வந்துள்ளது. அந்த ஆதரவின் அறுவடையாக இனிப் புதிய ஆட்சியில் துருக்கியின் செல்வாக்கு அதிகரிப்பதற்கான புறநிலை தென்படுகின்றது. பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக HTS தலைமையுடன் துருக்கி தொடர்பாடலை மேற்கொண்டதாக அதன் வெளிநாட்டு அமைச்சர் ஹாகான் பிடானை (Hakan Fidan) கூறியதாக பிரித்தானிய டெய்லி நியூஸ் (Daily News) பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. துருக்கிக்கு சிரியா தொடர்பாக இரண்டு முக்கிய நலன்சார் அம்சங்கள் உள்ளன. போரினால் இடம்பெயர்ந்த மில்லியன் கணக்கான சிரிய அகதிகள் துருக்கியில் உள்ளனர். ஒன்று அவர்களைத் திருப்பி அனுப்புவது தொடர்பானது. குர்தீஸ் விடுதலை அமைப்புகளை வட சிரியாவிலிருந்து அகற்றுவது இரண்டாவது இலக்கு.

துருக்கி, ஈரான், இஸ்ரேல் மட்டுமல்லாமல் புதிய சிரியாவிற் செல்வாக்குச் செலுத்தும் முனைப்புக் கொண்டுள்ள வேறு பல தரப்புகளும் உள்ளன. மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இராணுவத்தளங்களை ரஷ்யா சிரியாவில் கொண்டுள்ளது. ஹேமைமிமில் (Khemeimim) விமானத்தளத்தினையும் டார்டஸ்சில் (Tartus) கடற்படைத்தளத்தினையும் கொண்டுள்ளது. மத்தியதரைக் கடலில் ரஷ்யாவுக்குச் சொந்தமான ஒரேயொரு கடற்படைத்தளம் இதுவேயாகும். ரஷ்யாவின் இப்படைத்தளங்களின் பாதுகாப்பிற்குப் புதிய ஆட்சியாளர்கள் உத்தரவாதம் அளித்துள்ளதான செய்திகளும் வெளியாகியுள்ளன.

## அமெரிக்காவும் சிரியாவும்:

இது இவ்வாறிருக்க ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னர் மத்திய சிரியப் பகுதிகளில் அமெரிக்கா பாரிய தாக்குதல்களை நடத்தி

யுள்ளது. 75-இற்கு மேற்பட்ட ஐ.எஸ் அமைப்பின் மையங்களை இலக்குவைத்துத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது. அதேவேளை சிரியாவில் இயல்புநிலையை ஏற்படுத்த அமெரிக்கா பங்களிக்கும் என ஜனவரி 2025 பதவிக்காலம் முடிவடையவுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். அசாத்தின் வீழ்ச்சி என்பது கூடவே ஈரான் மற்றும் ரஷ்யாவின் பின்னடைவுமாகும். இது அமெரிக்காவிற்கு இலாபம் தரக்கூடிய விளைவு. அசாத் வீழ்ச்சிக்கு இஸ்ரேல் மட்டுமல்ல அமெரிக்காவும் ஒரு வகையில் உரிமை கோரியுள்ளது அல்லது தமது பங்கிருப்பதாக வலியுறுத்தியுள்ளது. தாம் பல ஆண்டுகளாக சிரியா மீது பொருளாதாரத் தடை விதித்திருந்ததையும் - சிரியாவிற் தமது இராணுவப் பிரசன்னம் இருந்ததையும் - இஸ்ரேலுக்கு ஆதரவாக சிரியா மீது பல ஆண்டுகளாகத் தாம் வான்படைத் தாக்குதல்களை மேற்கொண்டதையும் அண்மைய ஊடகச் சந்திப்பு ஒன்றில் ஜோ பைடன் பட்டியலிட்டுள்ளார்.

## சிரியாவின் எதிர்காலமும் பிராந்திய, சர்வதேச வகிபாகமும்:

வளைகுடா நாடுகள் புதிய ஆட்சிக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துவருகின்றன. சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் குவைத் தங்கள் தூதரகங்களை அசாத் வீழ்ச்சிக்கு முந்தைய மாதங்களில் தலைநகர் டமாஸ்கஸில் மீண்டும் திறந்தன. வளைகுடா நாடுகளுக்கும் சிரியாவிற்குமிடையிலான உறவும் நெருக்கமான தொடர்புகளும் சிரியாவின் மறுசீரமைப்புக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை. துருக்கியும் புதிய ஆட்சியாளர்களுடன் நட்புறவை நாடும் நாடுகளின் வரிசையில் முக்கிய இடத்தில் உள்ளது. ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னான தற்போதைய சூழல் சிரியாவை நிச்சயமற்ற நிலைக்குள்ளும், நல்லிணக்கம் மற்றும் மீள்கட்டமைப்புச் சார்ந்த சவால்களுக்குள்ளும் தள்ளியுள்ளது. அசாத்தின் வீழ்ச்சியானது திட்டமிட்ட ஒடுக்குமுறைகளையும் அதிகாரத் துஷ்பிரயோகங்களையும் மக்கள் சமூகம் நிரந்தரமாகப் பொறுத்துக்கொள்ளாது என்ற எச்சரிக்கையைச் சர்வாதிகார ஆட்சிகளுக்கு வழங்கியுள்ளது. பொருளாதார நலிவுடன் பலவீனமான அரச நிறுவனங்கள், பலவீனமான சிவில் சமூக அமைப்புகளுடன் நிச்சயமற்ற எதிர்காலத்தை சிரியா எதிர்கொள்கிறது. துருக்கி, இஸ்ரேல், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற சர்வதேச தரப்புகள் சிரியாவின் எதிர்காலத்தில் வெவ்வேறு நலன்களையும் வகிபாகங்களையும் கொண்டுள்ளதாக அசாத்தின் வீழ்ச்சி தொடர்பாக The Guardian 08.12.24 எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

## சிரிய மக்களின் அச்சம்:

ஆட்சிக் கவிழ்ப்பினை மக்கள் வெடிகொழுத்திக் கொண்டாடுகின்றனர். ஆனாலும் எதிர்காலம் தொடர்பான அச்சம் மக்களிடத்தில் நிலவுகின்றது. குறிப்பாக அசாத் ஆட்சிபீடத்தின் எஞ்சியுள்ள, மறைந்துள்ள படைகள் மற்றும் அதிகாரப் பின்னணி கொண்டிருந்த சக்திகள் புதிய ஆட்சியாளர்களுக்கு எதிராக தாக்குதல்களில் இறங்கக்கூடும் என்ற அச்சம் நிலவுகின்றது. அரைநூற்றாண்டுக்கு மேலாக ஆட்சிக் கட்டிலில் வீற்றிருந்த அதிகாரம், கடந்த 13 ஆண்டுகளாகப் பல்வேறு கிளர்ச்சிக்குமுக்களை எதிர்த்து நின்ற ஆட்சிபீடம், இலகுவில் அதிகார இழப்பினை ஏற்றுக்கொண்டு அமைதியாகிவிடாது என்பதே மக்கள் மத்தியிலுள்ள அச்சத்தின் பின்னணி. வீழ்த்தப்பட்டது சர்வாதிகார ஆட்சி என்பது ஒப்பீட்டளவில் மாற்றத்திற்கான தொடக்கம். ஆனால் இனிக் காத்திருக்கும் எதிர்காலம்தான் சவால்கள் நிறைந்ததாக அமையப்போகின்றது. ஒரு ஜனநாயக நல்லாட்சி சாத்தியமா ? அதற்குரிய அரசியல் வெளி உருவாக்கப்படக்கூடியதா என்பன தொக்கிநிற்கும் கேள்விகள். இனி அடுத்தடுத்து நிகழக்கூடிய நிகழ்வுகளை வைத்தே எதிர்காலத்தையும் அதன் ஸ்திரத்தன்மை குறித்த எதிர்பார்ப்புகளையும் மதிப்பிடமுடியும்.

இப்போ மூன்றுமாத கால ஆயுளைக் கொண்ட இடைக்கால அரசாங்கம் அல்லது நிழல் அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு பேண்தகு (Sustainable) ஜனநாயக அரசாங்கம் தான் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளவர்களின் இலக்கு என்றால் அவர்கள் உடனடியாகச் சில விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். நாடு போரினால் சிதைந்துபோயுள்ள சூழலில், சட்டம் ஒழுங்கு நிலைநிறுத்தப்படவேண்டிய தேவை உள்ளது. பொதுச்சேவைகளைச் சீராக இயங்கச் செய்ய வேண்டும். அத்தோடு பல்வேறு தரப்புகளை ஒருமைப்பாட்டுக்குள் கொண்டுவருதல், அரச இயந்திரம் சீர்குலைந்து போகாமற் தடுத்தல் போன்ற நடவடிக்கைகள் முதன்மையானவை. சிரியாவின் பல சிறுபான்மை இனக்குழுமங்கள் அசாத் ஆட்சிபீடத்திற்கு எதிரான கிளர்ச்சியிற் பங்கெடுத்தன. ஆனால் உள்நாட்டுப் போராக அது வெடித்ததையடுத்து அவர்கள் புறமொதுக்கப்பட்டனர். புதிய ஆட்சியில் குர்தீஸ் மக்கள், கிறிஸ்தவர்கள், துருஸ் இனத்தவர், சியா-இஸ்லாமியர்கள் முதலானவர்களின் வகிபாகம் அச்சத்துடனே நோக்கப்படுகிறது. புதிய ஆட்சியில் சன்னி-முஸ்லீம் பெரும்பான்மையின் மேலாதிக்கம் நிலவும் என்று அஞ்சப்படுகின்றது.

**உசாத்துணை:**

- The Guardian view on the fall of Assad: a tumultuous, fragile hope in Syria | The Guardian 08.12.2024
- Syria says ex-rebel groups agree to integrate under Defence Ministry | Al-jazeera | 24.12.2024
- Facts on Hayat Tahrir al-Sham and Bashar al-Assad family dynasty | Store norske leksikon
- The Syrian Problem | By Steve Coll | The new yorker | 23.05.2011
- Den lange revolusjonens overrumplende triumf (The long revolution's surprising triumph)| Bendik Sørvik| Morgegbladet | 13.-19.ldecember.2024
- Får ikke fred fra nabolandene (No peace from neighboring countries) | Klassekampen | 10.12.24
- Assads korthus falt på 11 dager (Assad's house of cards fell in 11 days)| Klassekampen | 09.12.24



rooban.s@thaiveedu.com



# அழிக்கப்படும் சிரியாவில் வணிகப் போட்டிகளும் குர்தியத் தேசியமும்

– ரதன்

The End of History and the Last Man - Francis Fukuyama

பிரான்சிஸ் புகாயமா எழுதிய ஒரு வரலாற்றின் முடிவும், கடைசி மனிதனும் என்ற நூலில் புகாயமா, அமெரிக்கா தான் உலகின் ஒரேயொரு வல்லரசு என்று குறிப்பிட்டுள்ளார். உலகின் மொத்த சனத்தொகையில் வெறும் ஆறு வீதமே அமெரிக்கர். ஆனால் உலகின் மொத்த சொத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்டவை அமெரிக்கர்களின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஜப்பான் மீது அணு குண்டு வீசியதைத் தொடர்ந்து அமெரிக்காவின் ஆதிக்கம் ஆரம்பித்தது. இன்று டொனால்ட் ட்ரம்ப்-இன் ஒவ்வொரு கூற்றும் இதனையே வெளிப்படுத்துகின்றது. தனக்கு விருப்பம் அற்ற தலைவர்களின் ஆட்சிகளை அமெரிக்கா கவிழ்த்துள்ளது. குறிப்பாக மத்திய கிழக்கில் லிபியா, ஈராக் என ஒவ்வொரு அடியையும் எடுத்துவைக்கின்றது. அதன் அடுத்தபடி சிரியா. Zbigniew Brzezinski ஹவார்ட் பல்கலைக்கழக பேராசிரியர் மத்திய கிழக்கை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். எவ்வாறு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதனையும் தனது உரைகளில் தெரிவித்துள்ளார். த கிராண்ட் செஸ்போர்ட் என்ற நூலாக இவை வெளிவந்துள்ளது. அமெரிக்க வெளியுறவுக் கொள்கையை தீர்மானிப்பதில் ஹவார்ட் உட்பட்ட பல்கலைக்கழக புத்திஜீவிகளின் பங்குள்ளது.

ரஷ்யாவிலிருந்து இயற்கை வாயு குழாய்கள் மூலமாக ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உக்ரேனின் ஊடாக குழாய்கள் செல்கின்றன. அதே போல் சிரியாவினூடாகவும் செல்கின்றன. சிரியா உடைகள் தயாரிப்பதில் உலகின் மிக முக்கிய நாடுகளில் ஒன்றாகும். இங்கு தயாரிக்கப்படும் உடைகள் அல்லது நூல்கள் துருக்கி, இந்தியா, குவைட், லெபனான், ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. சிரிய உள்நாட்டு யுத்தத்துக்கு முன்பாக உலகின் ஏழு வீதமான நூல் உற்பத்தியை சிரியா தன்னகத்தே கொண்டிருந்தது, சிரியாவின் மொத்த தேசிய உற்பத்தியில் 20 வீதம் நூல் உற்பத்தியிலிருந்து பெறப்பட்டது.

அண்மையில் சிரியாவின் புதிய ஆட்சியாளர்களால் முதலில் கைப்பற்றப்பட்ட நகரங்களுள் ஒன்றான அலெப்போ (Aleppo) நூல் உற்பத்தியில் முன்னணியில் நின்ற நகரமாகும். இங்கு உற்பத்தியாகும் நூல்கள் உலகத் தரமானவை. (Aleppo's fabrics are known for their vibrant colors and striking patterns) சிரியாவிற்கு அருகில் உள்ள நாடான துருக்கியும் நூல் உற்பத்தியில் மிக முக்கியமான நாடாகும். சிரியாவின் உள்நாட்டு யுத்தம் துருக்கிக்கு பல வகைகளில் இலாபத்தை ஏற்படுத்திக் கொடுத்தன. அவற்றில் ஒன்று தனது போட்டி நாடான சிரியாவின் நூல் உற்பத்தி குறைந்தது.




அதனால் துருக்கியின் நூல் உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்தன. போட்டிக் குறைவினால் துருக்கியினால் அதிக விலைக்கு நூல்களை விற்கக் கூடியதாகவிருந்தது.

த போப்ஸ் ரொயிலட் என்ற படத்தில் பிரேசிலில் இருந்து உருகுவேயிற்கு பொருட்களை ஒரு சைக்கிள் பயணி கடத்திச் செல்வார். உருகுவேயில் பொருட்களின் விலை அதிகம். பல பொருட்களை உருகுவேயில் பெறமுடியாது. அதே போல் சிரியாவும் மத்திய கிழக்கில் ஒரு வணிக வளாகமாக செயல்பட்டது. சிரியாவின் மீது அமெரிக்காவினதும், ரஷ்யாவினதும் அதிக கவனத்துக்கு சிரியாவின் வணிக மையமும் முக்கிய காரணமாகும்.

சிரியாவின் அண்டை நாடான ஜோர்டானில் பொருட்களின் விலை சிரியாவை விட 60 வீதம் அதிகமாகும். bahhara (sailors) என அழைக்கப்படும் அனுமதிப் பத்திரம் பெறப்

பட்ட வாடகை கார் சாரதிகள் பொருட்களை சிரியாவின் நகர மான Karl Heinz-Klinger, Degussa விலிருந்து ஜோர்டானிய நகரமான Ar-Ramtha-க்கு நெடுஞ்சாலை 232 ஊடாக கொண்டு செல்வார்கள். இப் பயணம் மொத்தமாக 52 நிமிடங் கள். ஜோர்டானிய சுங்க அதிகாரிகளும் இவற்றை அறிவார் கள். அவர்களுக்கு இலஞ்சமாகவும் பொருட்கள் கிடைக்கும். சிரிய அரசும் இதனையறியும். சிகரெட் உட்பட்ட அன்றாட பாவனைப் பொருட்களே இவ்வாறு கொண்டு செல்லப்படு பவை.

இவற்றைவிட வேறு முக்கிய பொருட்களும் கடத்தப்படுகின் றன. 1961-ல் மேற்று ஜேர்மனியைச் சேர்ந்த ஆய்வாளர் Karl Heinz-Klinger, Degussa என்ற மருந்து பொருட்கள் உற்பத்தி யாக்கத்தில் Fenethylline என்ற மருந்தை கண்டுபிடித்தார். இது J Amphetamine, theophylline ஆகிய மருந்துகளை இணைத்து கண்டுபிடித்திருந்தார். பின்னையது ஆஸ்த்துமா மருந்தாகும். இப் புதிய மருந்தானது குருதி உயர் அழுத் தத்தை பெரியளவில் அதிகரிக்காது. Degussa நிறுவனம் இந்த மருந்தை Captagon என்ற பெயரில் உலகில் சந்தைப்ப டுத்தியது. எனினும் பின்னர் பல்வேறு ஆய்வுகளின் பின்னர் உலக சுகாதார நிறுவனம் (WHO) இதன் விற்பனையை கட் டுப்படுத்தியது. இந்த மருந்து பின்னர் லெபனானில் உற்பத்தி யானது. ஹிஸ்புல்லாவின் கட்டுப்பாட்டு பிரதேசத்திலேயே இது உற்பத்தி செய்யப்பட்டது. லெபனான் அரசு இந்த மருந்து உற்பத்தியகங்களை மூடச்செய்தது. விளைவு அண்டை நாடான சிரியா இதனை உற்பத்தி செய்யத் தொடங் கியது. நாட்டை விட்டு வெளியேறிய சிரிய அதிபரின் இளைய சகோதரரான மகர் அல் அசாத் சிரிய இராணுவத்தின் 4th Division-க்கு தலைமை தாங்கினார். அவரே இந்த Captagon உற்பத்திக்கும் விற்பனைக்கும் தலைமை அதிகாரியாக செயல்பட்டார். மேலே குறிப்பிட்ட bahhara (sailors) என அழைக்கப்படும் அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட வாடகை கார் சாரதிகள் இந்த மருந்துகளையும் கடத்தினார்கள். Captagon, Amphetamine ஆகிய மருந்துகள் கடத்தப்பட்டன. பின்னையது ADHD-க்கு பாவிக்கப்படுகின்றது.

இந்த மருந்துகளின் உற்பத்திச் செலவு வெறும் 2 சதங்களா கும். இதன் விலை சவூதியின் றியாத் போன்ற செல்வந்த நக ரங்களில் 30-50 டொலர்கள் வரை செல்கின்றது. இதனால் ஆசாத்தின் அரசு பில்லின் டொலர்களை வருமானமாகப் பெற்றது. மத்திய கிழக்கு நாடுகளில் மதுபானம் தடைசெய் யப்பட்டுள்ளதனால், இந்த மருந்துகள் மதுபானத்துக்கு மாற் றீடாக பாவிக்கப்படுகின்றது. இவை ஒரு போதையை ஏற்றக் கூட்டியவை. இந்த மருந்து விற்பனையால் சிரியாவை Narco-State என அழைப்பார்கள். இந்த மருந்து விற்பனை புதிய ஆட்சியாளர்களின் கைகளுக்குச் செல்கின்றது.

சிரியாவிலிருந்து பெற்றோலியம் ஏற்றுமதி செய்யப்படுகின் றது. மொத்த ஏற்றுமதியில் இது 67 வீதமாகும். மேற்கூறப்பட்ட மருந்து விற்பனையால் பெறப்பட்ட வருமானம் மொத்த உற் பத்தியில் உள்ளடக்கப்படுவதில்லை. Lukoil Oil Co ஆகியன ரஷ்யாவிற்கு சொந்தமான பெற்றோலிய நிறுவனங்கள் சிரியா வில் உள்ளன. அமெரிக்காவிற்கு சொந்தமான Chevron நிறு வனமும்சிரியாவில் உள்ளது. இதனை விட பிரான்ஸ், ஸ்பெ யின், ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளுக்கு சொந்தமான பெற்றோலிய நிறுவனங்களும் சிரியாவில் இயங்குகின்றன.

சிரியாவின் உள்நாட்டு யுத்தத்துக்கு முன்பாக 400,000 பரல் எண்ணெய் ஒரு நாளில் உற்பத்தி செய்யப்பட்டது. (2008-2010). உள்நாட்டு யுத்தம் இதனை 25,000 பரலுக்கு குறைத்து விட்டது. இதனை விட பல எண்ணெய் கிணறுகளைப் போரா ளிகள் குழு கைப்பற்றியுள்ளது. Assad's regime lost control of most of Syria's oil fields to non-state actors including the Islamic State (IS) group and later Kurdish-led forces. 40 வீதமான எண்ணெய்க் கிணறுகள் Deir az-Zour governorate உள்ளன. இப் பகுதியை அமெரிக்க ஆதரவு Syrian Democratic Forces (SDF) கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. எனி னும் தற்போது நடைபெறும் தொடர் யுத்தத்தில் துருக்கி ஆத ரவுப் படையினரிடம் இப்பகுதி வீழ்ச்சியடையலாம்.

2009-ல் கட்டார் சிரியா, துருக்கியினூடாக இயற்கை வாயுக் குழாயை ஐரோப்பாவுடன் இணைப்பதற்கான திட்டத்தை முன் வைத்தது. இதனை ஆசாத்தின் அரசு நிராகரித்தது. சிரியா மாற்றாக ஈரான், ஈராக், சிரியாவினூடாக ஐரோப்பாவிற்கான இயற்கை வாயுக் குழாய் திட்டத்தை முன்வைத்தது. இதற் கான காரணம் சியா சார்பு நாடுகளின் வளர்ச்சியை அதிகரிப் பதும், அவற்றை இணைப்பதுமாகும். சிரியா, சுனி முஸ்லீம் கள் அதிகமாக வாழும் நாடு. ஆனால் அசாத் சுனி முஸ்லீம் அல்ல. அவர் சிறுபான்மையினமான சியா முஸ்லீமின் ஒரு பிரிவான Alawites பிரிவைச் சேர்ந்தவர்.

1943-லிருந்து சுனி முஸ்லீம்கள் சிரியாவைத் தங்களது கட் டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயற்சிக்கின்றார்கள். பொது வாக மத்திய கிழக்கு நாடுகளில் socio-ethnic-economic-political-religious (SEEPR) சக்திகள் வளங்களை கட்டுப்படுத்து கின்றன. சிரியாவிலும் அரசின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வளங்கள் இருந்தன. பின்னர் போராளிகள் குழு சிரிய உள் நாட்டு யுத்தத்தின் மூலம் வளங்களை கட்டுப்படுத்தின.

இயற்கை வாயு குழாய்களை ஐரோப்பாவிற்கு இணைப்பதன் மூலம் ஐரோப்பிய சந்தையினூடாக பெருமளவு பணத்தை பெறமுடியும். மத்திய கிழக்கு நாடுகளுக்குள் இதற்கான போட்டி நிலவுகின்றது. குழாய்கள் செல்லும் நாடுகளும் பல கோடிகளை வருமானமாக பெறுகின்றன. உலகில் அதிகளவு இயற்கை வாயு உள்ள நாடுகள் வரிசைப்படி ரஷ்யா 24.3 வீதம், ஈரான் 17.3, கட்டார் 12.5 ஐக்கிய அமெரிக்கா 5.3, சவூதி அரேபியா 4.2, Turkmenistan 3.8 எனச் செல்கின்றது https://www.worldometers.info/gas/gas-reserves-by-country

ரஷ்யா சிரியாவினூடாக ஐரோப்பாவிற்கு குழாய்களை அமைத்துள்ளது. கட்டார் ஐரோப்பாவிற்கு கப்பல் மூலம் திர வமாக்கியே கொண்டு செல்கின்றது. இதற்கான செலவு அதி கம். அதனால் கட்டார் துருக்கி, சிரியாவினூடாக அமைக்கவி ரும்பிய திட்டத்தையே அசாத் மறுத்தார். அவர் ஈரானின் இயற்கை வாயுவை ஐரோப்பாவிற்கு சிரியாவினூடாகவே கொண்டு செல்ல விரும்பினார். இங்கே ஒரு மிகப் பெரிய வியாபார போட்டியும் நிலவுகின்றது. அசாத்தின் வீழ்ச்சியில் எந்த நாடுகள் பங்கு பற்றியிருக்கும் என்பதனை இந்த வணிக போட்டி தெளிவாக்குகின்றது. அமெரிக்காவைப் பொறுத்த வரை தனது இயற்கை வாயுவை ஐரோப்பிய சந்தையில் விற் கவேண்டும். அதற்கு ரஷ்யாவின் இயற்கை வாயு விநியோகம் தடையாகவிருந்தது. கனடாவிலும் இயற்கை வாயு அதிகமாக வுள்ளது. எனவே அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசிய நாடு

களுக்கே விற்பனை செய்யவேண்டியாகவுள்ளது. 1.35 trillion cubic meters இயற்கை வாயுவை அமெரிக்கா உற்பத்தி செய்தது. இது ரஷ்யாவின் உற்பத்தியை (586.4 billion cubic meters) விட ஒரு மடங்கு அதிகமாகும். ரஷ்யாவில் இயற்கை வாயு படிவுகள் அதிகமாகவிருந்தாலும் அதன் உற்பத்தி குறைவு.

GAAT region (Georgia, Armenia, Azerbaijan, and Turkey) Fohaj jpllkhdJ Caspian Sea I ) குழாய்த் திட்டமானது Azerbaijan, Armeniaவை ஐரோப்பாவுடன் இணைக்கின்றது. இங்கும் Baku, the capital of Azerbaijan, through Tbilisi, Georgia, and on to Ceyhan, Turkey நாடுகளுக்கிடையில் மோதல்கள் இடம்பெறுகின்றன. ஆமேனியாவூடாகச் செல்லும் குழாய்கள் தூரம் குறைவானவை.

### The countries with the longest network of oil and gas pipelines include:

| | | |
|---|---|---|
| United States – Oil: | 91,067km | Gas: 333,366km |
| Russia – Oil: | 38,419km | Gas: 92,831km |
| Canada – Oil: | 23,361km | Gas: 84,682km |

### The companies that own most of the of oil pipelines by length include:

| | | |
|---|---|---|
| Transneft, Russia | 42,383km | 15 percent |
| Enbridge, Canada | 33,750km | 12 percent |
| PipeChina, China | 15,947km | 5 percent |

### The companies that own most of the gas pipelines by length include:

| | | |
|---|---|---|
| Gazprom, Russia | 103,212km | 11.2 percent |
| TC Energy, Canada | 99,440km | 10.8 percent |
| Kinder Morgan, US | 82,075km | 9 percent |

மேலே உள்ள தகவல்கள் ரஷ்யாவும், அமெரிக்காவும் ஐரோப்பியச் சந்தையை குறிவைப்பதன் நோக்கத்தை வெளிப்படுத்துகின்றது. மத்திய கிழக்கின் மீதான அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் அக்கறையானது மக்கள் நலனோ, ஜனநாயகத்தை மீளக் கட்டமைத்தலோ, மனித உரிமையை காப்பதோ அல்ல. செல்வத்தின் மீதான குறி.

அமெரிக்காவிற்கு மற்றொரு நோக்கமும் உண்டு. கட்டார். சுவூதி அரேபியா உட்பட்ட சுனி முஸ்லீம் நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்களின் பாதுகாப்பும் முக்கியம். சிரியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் மத்திய கிழக்கில் அமெரிக்கா தளங்களுக்கு ஏதுவாக அமையும். இஸ்ரேல்-பாலஸ்தீன மோதல்களில் பல தடவைகள் அமெரிக்கத் தளங்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அமெரிக்கா மத்திய கிழக்கிலும், ஐரோப்பாவிலும் ஆயுத விற்பனைக்கும், வணிக முயற்சிகளுக்கும் அமெரிக்காவின் இராணுவத் தளங்களின் இருப்பும் முக்கியம். அசாத்தின் வீழ்ச்சியின் பின்னர் ரஷ்யா சிரியாவின் புதிய ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. சிரியாவில் உள்ள கப்பற்படைத் தளம் மட்டுமல்லாமல், ஐரோப்பாவிற்கு செல்லும் இயற்கை வாயுக் குழாய்களும் ரஷ்யாவிற்கு முக்கியம்.

### சிரியா ஒரு சிறு அறிமுகம்:

சிரியா பொ.ஆ.மு. 10,000 ஆண்டளவில் இருந்து அதன் சரித்திரத்துக்கான ஆதாரங்களைக் கொண்டுள்ளது. Neolithic கலாச்சாரத்தை ஆரம்பத்தில் கொண்டிருந்தது. ஆய்வாளர்களின் கருத்துப்படி சிரியா மிகத் தொன்மையான Ebla கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. கலாச்சாரம் மிகப் பழையது. Semitic languages எனப்படும் முதல் எழுத்து வடிவத்தைக் கொண்ட மொழிக் கூட்டத்தில் Ebla மொழியும் உள்ளடக்கப்பட்டது. சிரியா பொ.ஆ.மு. முதலாம் நூற்றாண்டில் Canaanites, Phoenicians(கிறீக்)Arameans ஆகியோர் வசமிருந்தது. பின்னர் வெவ்வேறு கால கட்டங்களில் Egyptians, Sumerians, Assyrians, Babylonians and Hittites போன்றோர் வசமிருந்தது. இவர்கள் அனைவரும் ஒன்றில் கிரேக்கர்(மெசத்தோப்பியர் உட்பட்ட) மற்றையவர்கள் அரேபியர்களாக இருந்தனர். பொ.ஆ.மு. 300 ஆண்டளவில் அலெக்சாண்டரின் Seleucid Empire அங்கமாகவிருந்தது. Antioch சிரியாவை கைப்பற்றியதன் பின்னர் இது ரோம சாம்ராஜ்யத்தின் அங்கமாக மாறிவிட்டது. பொ.ஆ.மு. 62-ம் ஆண்டளவில் நடைபெற்றது. சிரிய நகரமான. Pompey ரோம சாம்ராஜ்யத்தின் மூன்றாவது பெரிய நகரமாக மாறிவிட்டிருந்தது. பொ.ஆ.பி 222-235 வரை ரோம சாம்ராஜ்ய அரசனான Alexander Severus சிரியனவார். ரோம சாம்ராஜ்யத்தில் இதன் பின்னரும் இரு சிரியர்கள் அரசர்களாக இருந்துள்ளனர். மிகப் பழமை வாய்ந்த கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று சிரியாவில் உள்ளது.

பொ.ஆ.பி 640-ம் ஆண்டளவில் சிரியா முஸ்லீம் சாம்ராஜ்யமாக மாறியது. அவர்கள் சிரியாவை நான்கு மாநிலங்களாக பிரித்திருந்தனர். டமாஸ்கஸ், ஹோம்ஸ், லெபனான், பாலஸ்தீனியம் ஆகியவையே அவை. இந்தியாவரை பரவியிருந்த இந்த சாம்ராஜ்யத்தில் டமாஸ்கஸ் மிக முக்கிய நகரமாகவிருந்தது. Abbasid அரசில் அரேபிய மொழி ஆட்சி மொழியாக மாற்றப்பட்டது. இதன் பின்னர் ஒட்டோமன் சாம்ராஜ்யத்திலும் சிரியா முக்கிய பிரதேசமாக விளங்கியது.

### நவீன சிரியாவின் முக்கிய சரித்திர நிகழ்வுகள்

1918 ஒக்ரோபரில் அரேபிய Emir Feisal தலைமையிலான படைகள் பிரித்தானியப் படைகளின் உதவியுடன் ஒட்டோமன் சாம்ராஜ்யத்தை முடிவுக் கொண்டுவந்தன. அதன் பின்னர் நடைபெற்ற தேர்தலின் பின் அமைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் பாலஸ்தீனிய பிரதிநிதிகளும் உள்ளடக்கப்பட்டனர். லெபனான் பாலஸ்தீனியமும் உள்ளடக்கப்பட்ட நாடாக சிரியா விளங்கியது. 1920 San Remo மாநாட்டின் பின்னர் சிரியா பிரென்ச் சட்டத்தின் கீழும், பாலஸ்தீனியம் பிரித்தானிய சட்டத்தின் கீழும் கொண்டுவரப்பட்டன. 1920-ஆம் ஆண்டளவில் பிரென்ச் படைகளின் ஆதிக்கத்தால் Emir Feisal நாட்டை விட்டு வெளியேறினார். அதே ஆண்டு Greater Lebanon என்ற மாநிலம் அமைக்கப்பட்டது.

1925 காலகட்டத்தில் பிரென்ச் அரசுக்கு எதிரான சுதந்திரப் போராட்டங்கள் ஆரம்பமாகிவிட்டன. இரண்டாம் உலகப் போரின் போது 1940-ல் பிரான்ஸ் ஜேர்மனிடம் வீழ்ச்சியடைந்தது. இக்காலத்தில் இடைக்கால ஜேர்மனிய அரசிற்குரிய நாடாக சிரியா மாறியது. ஆனால் அது நீண்ட காலம் நீடிக்க

வில்லை. மீண்டும் பிரித்தானிய படைகளும் பிரெஞ்ச் படைகளும் சிரியாவை கைப்பற்றின. 1945-இல் பிரெஞ்ச் படைகள் அங்கிருந்து மிகவும் குறைந்த வேகத்தில் வெளியேறுவதற்கு எதிராக போராட்டங்கள் தோன்றின. இறுதியாக 1946-ல் பிரெஞ்ச் படைகள் முற்றாக வெளியேறின.

1947-ல் Arab Socialist Baath Party ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும் என்ன பயன்? Adib al-Shishakhli என்ற இராணுவ அதிகாரி ஆட்சியை கைப்பற்றினார். இதன் பின்னர் பல நாடுகளில் நடைபெற்றது போல் சகல அரசியல் கட்சிகளும் கலைக்கப்பட்டன. 1955-ல் நடைபெற்ற தேர்தலில் Shukri al-Quwatli அதிபரானார். 1958-ல் சிரியாவும் எகிப்தும் இணைந்து புதிய பிரதேசமாக United Arab Republic உருவானது. இதன் அதிபராக எகிப்திய ஜனாதிபதி நாசர் இருந்தார். இவ் இணைப்புக்கு போராடி உழைத்த சிரிய பாத் கட்சி உட்பட்ட அனைத்து சிரிய கட்சிகளும் நாசரால் கலைக்கப்பட்டன. 1961-ல் சிரிய இராணுவ வீரர்களால் டமாஸ்கஸ் கைப்பற்றப்பட்டு எகிப்திய-சிரிய இணைப்பு துண்டிக்கப்பட்டது. 1963-லும் 1966-இலும் இரு தடவைகள் இராணுவ அதிகாரிகள் சிரியாவை கைப்பற்றினர்.

1967ல் இஸ்ரேல் நடத்திய ஆறு நாள் யுத்தத்தில் சிரிய இராணுவத் தளம் முற்றாக அழிக்கப்பட்டது. இவ் யுத்தம் சிரியா, ஜோர்டான், எகிப்துக்கு எதிராக இஸ்ரேலால் நடத்தப்பட்டது. இதன் போது சிரியாவின் முக்கிய பிரதேசமான Golan Heights இஸ்ரேலால் கைப்பற்றப்பட்டது 1970-ல் மீண்டும் இராணுவ ஆட்சி. 1971 மார்ச்-ல் நடைபெற்ற தேர்தலில் அசாட் அதிபரானார். இவர் அரசியலமைப்புச் சட்டத்தில் கொண்டு வந்த திருத்தத்தால் அசாட்டுக்கு எதிராக போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கின. அவரது புதிய திருத்தம் முஸ்லீம் அல்லாதவரும் சிரிய ஜனாதிபதியாக வரலாம் என்பதே. இதனால் ஏற்பட்ட கலவரங்களை இராணுவம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. 1973-ல் சிரியாவும் எகிப்தும் இணைந்து கோலான் குன்றுகளை (Golan Heights) மீண்டும் கைப்பற்றுவதற்கான போர் தோல்வியில் முடிவுற்றது. இதன் பின்னர் எகிப்து - இஸ்ரேல் உறவில் ஏற்பட்ட மென்போக்கு சிரியாவையும் தொற்றிக் கொண்டது. இதன் விளைவாக 1980-ல் சிரிய அதிபர் அசாட்டை கொல்லுவதற்கு ஏற்பட்ட முயற்சி தோல்வியில் முடிந்தது. 1982-ல் இஸ்ரேல் லெபானின் மீது தாக்குதல் நடத்தியபோது சிரிய இராணுவத்தையும் தாக்கியது. 1987-ல் பெய்ரூட்டில் அமைதியை ஏற்படுத்த அசாட் சிரியப் படைகளை இரண்டாம் தடவையாக லெபனானுக்கு அனுப்பினார். அமெரிக்க ஈராக் ஆக்கிரமிப்பின்போது சிரிய அமெரிக்காவை ஆதரித்தது. ஈரான்-ஈராக் போரில் சிரியா ஈரானையே ஆதரித்தது.

2000 ஜூன் மாதம் கார் விபத்தொன்றில் இறந்த சிரிய அதிபர் அசாட்டின் இடத்துக்கு ஜனாதிபதியாக அவரது மகன் Bashar al-Assad தெரிவுசெய்யப்பட்டார். 2002-மே மாதம் அமெரிக்காவின் axis of evil பட்டியலில் சிரியாவும் உள்ளடக்கப்பட்டது 2003-ம் ஆண்டு அமெரிக்கா சிரியாவை தான் எடுக்கும் (right decisions) முடிவுகளுக்கு கட்டுப்படவேண்டும் என மிரட்டியது. இதே ஆண்டு சிரியாவின் டமாஸ்கசில் உள்ள பாலஸ்தீனிய முகாம் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதற்கு அடுத்த ஆண்டு சிரியாவில் இருந்து ஈராக்குள் போராளிகள் செல்வதை சிரியா தடைசெய்யவில்லை எனக் கூறி அமெரிக்கா சிரியா மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது. 2005-ம் ஆண்டு மேற்கால் கொடுக்கப்பட்ட தொடர்ச்சியான அழுத்தத்தின் விளைவாக சிரியா தனது படைகளை லெபானில் இருந்து விலத்திக் கொண்டது. இதன் பின்னர் சிரிய ஜனாதிபதி ஈராக்குடனும் மேற்குடனும் நல்லுறவுகளை மேற்கொள்ள முயற்சித்தாலும் அவரால் முடியவில்லை.

லெபானின் முன்னால் ஜனாதிபதி ஆட்சியில் இருந்த போது இவரைக் கொன்றதற்கு முக்கிய காரணம் சிரியா என அமெரிக்க நம்புகின்றது. அமெரிக்கா தொடர்ந்து சிரியாவை மிரட்டி வருகின்றது. கடந்த வருடம் அமெரிக்க பத்திரிகை ஒன்று ஈரான் சிரியாவிற்கு ஆயுத உதவி செய்துள்ளது. இது இஸ்ரேல் ஈரான் மீது தாக்குதலை ஏற்படுத்தினால் தடைசெய்ய உதவி புரியும் என குற்றஞ்சாட்டியது. கடந்த 49 வருடங்களாக தந்தையும் தனயனும் ஆட்சி பீடத்தில் உள்ளார்கள். எகிப்தைப் போன்று இங்கும் இராணுவமும் அரசும் மிக நெருக்கமான உறவைக் கொண்டுள்ளது. சிரியாவில் உள்நாட்டு யுத்தம் தோன்றியது. இதனைத் தொடர்ந்து இது வல்லரசுக்களுக்கான ஒரு யுத்தப் பரிசோதனைக் கூடமாக மாறி விட்டது.

மத்திய கிழக்கில் ரஷ்யாவின் எழுச்சியை, மேற்கு நாடுகளால் தடுக்க முடியாதுள்ளது. இது மேலும் பல போர்களை உருவாக்கும். ஐ.எஸ் போன்ற மேலும் பல தீவிரவாதக் குழுக்கள் தோன்றும். சுனி-சியா முஸ்லீம் பிரிவினை மக்கள் பலரை பலியாக்கும். இஸ்ரேல் தன்னை மிக இலகுவாக அமெரிக்காவின் உதவியுடன் விரிவுபடுத்தும். மிக விரைவில் பாலஸ்தீனம் என்ற நாடு உலக வரைபடத்திலிருந்து மறையும்.

## நவீன சிரியா:

சிரியாவின் ஒரு எல்லையில் துருக்கியுள்ளது. சிரியாவின் மற்றைய எல்லை நாடுகளாக ஈராக், ஜோர்டான், இஸ்ரேல், மத்தியதரைக் கடல் உள்ளன. சிரியா பல இனக் குழுக்களைக் கொண்ட நாடு. பாலஸ்தீனியர்கள் பலர் அகதிகளாக வாழ்கின்றனர். அரபு மக்கள் 80 வீதத்துக்கும் அதிகமாக வாழ்கின்றனர். இவர்களில் பல பிரிவுகள் உள்ளன (Alawite, Shia, and Sunni). சிரியாவின் வடகிழக்குப் பகுதிகளில் குர்தீஸ் மக்கள் வாழ்கின்றனர். Chechens, ஆமேனியர்கள், Yazidis (குர்தீஸ் மக்களில் ஒரு பிரிவு) இவர்களை விட பல மூத்த குடிகள் - பூர்விக மக்கள் (Shammar confederacy, the Dana Bishr, the Dana Muslim, the Tayy, the Hadidiyyin, the Mawali, the Abu Sha'ban, and the Uqaydat) உள்ளனர். இவர்களுடன் துருக்கியர்களும் வாழ்கின்றனர்.

சிரியாவின் அண்மைக் கால வரலாறு Bashar al-Assad உடன் ஆரம்பமாகின்றது. இவரது தந்தையார் Hafez al-Assad 2000-ம் ஆண்டு இறந்த போது, அவரது மூன்றாவது மகனான பசர் அல் ஆசத் சிரியாவின் ஜனாதிபதியாக பதவியேற்றார். தந்தையார் 1971-லிருந்து சிரியாவின் ஜனாதிபதியாக 29 ஆண்டுகள் ஆட்சி செய்தார். பசர் அல் ஆசத் கண் சத்திரசிகிச்சை நிபுணர். இவர் லண்டனில் தனது மேற்படிப்பை முடித்திருந்தார். சிரியா இராணுவத்தில் வைத்தியராகக் கடமையாற்றினார். சிரியாவின் ஜனாதிபதியாக பதவியேற்பதுக்கு ஆகக் குறைந்தது 40 வயதாவது இருக்க வேண்டும். பசருக்காக இவ் வயதெல்லையை சட்டபூர்வமாகக் குறைத்தார்கள். பசர் பதவியேற்ற போது அவரது வயது 34. Ba'ath கட்சி இவர்களது கட்சி. பசர் அல் அசாத் பதவியேற்ற போது மக்கள்

எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். எனினும் ஆரம்பத்தில் பசர் பல சுதந்திரங்களை வழங்கியிருந்தார். ஊடகங்கள் சுதந்திர மாக இயங்க அனுமதித்தார். இவையெல்லாம் சிறிது காலத் துக்கே நடைமுறையிலிருந்தன. பின்னர் இராணுவ ஆட்சி போல் சிரியா மாறத் தொடங்கியது. தேர்தல்கள் நடைபெற் றன. முடிவுகளை அரசே தீர்மானித்தது. ஆசாத்தின் உறவி னர்கள் முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்டனர். தந்தையா ரின் பாதையில் மேற்கு நாடுகளுக்கு எதிராக செயல்பட்டார். இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட சிரியாவின் பகுதிகளை மீளத ரப்பட வேண்டும் என வலியுறுத்தினார். ஈரானுடன் இணைந்து ஹமாஸ், ஹிஸ்புல்லா அமைப்பிற்கு ஆதரவினை வழங் கி னார். ஆசாத் ஒவ்வொரு தடவையும் மக்கள் மத்தியில் பேசும் பொழுது மேற்குநாடுகளுக்கு எதிரான கருத்துகளை கூறி னார்.

அரபு வசந்தத்தின் தொடர்ச்சி சிரியாவிலும் வெளிப்பட்டது. 2011 மார்ச் மாதத்திலிருந்து சிரியாவில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் ஆரம்பித்தன. 2015-ல் ரஷ்யா தனது படை களை அனுப்பி பசர் அல் ஆசத்தின் அரசை காப்பாற்றியது. இதற்கு முன்பாக 2012-ல் தொடங்கி அமெரிக்கா ஒப்பிரேசன் Timber Sycamore என்ற பெயரில் ஆசாத்தின் அரசை கவிழ்க்க முயற்சித்தது. ஒபமாவின் ஆட்சிக் காலத்தில் மூன் றிற்கு மேற்பட்ட தடவைகள் முயற்சிக்கப்பட்டன. சிரியாவில் போராடும் அல்கைடா, ஜிகாதிகள், அல்நுசரா போன்ற ஆயுத அமைப்புகளுக்கு பயிற்சியும் ஆயுதங்களும் அமெரிக் காவால் வழங்கப்பட்டது. அல்நுசரா அமெரிக்காவிற்கு எதி ரான அமைப்பாகும். தேவையேற்படின் எதிரிக்கும் அமெ ரிக்கா ஆயுதம் வழங்கும் என்பது அல்நுசராவின் விடயத்தில் உண்மையானது. சிரியாவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அல்நுசராவிற்கு ஆயுதங் களை அமெரிக்கா வழங்கியிருந்தது.

அமெரிக்காவுடன், பிரித்தானியா, சவூதி அரேபியா போன்ற நாடுகளும் இணைந்து செயல்பட்டன. மத்திய கிழக்கில் அமெரிக்காவிற்கு எதிராக போராடும் அமைப்புக்களுக்கு சிரியா அரசைக் கவிழ்ப்பதற்காக அமெரிக்கா உதவி செய் தது. குர்தீஸ் போராளிகள் அமைப்பு அமெரிக்காவிற்கான ஆதரவு அமைப்பு. இது சிரியாவில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கு எதிராகவும் போராடி வந்தது. டொனால்ட் ரம்ப்-பின் முதலாவது ஆட்சிக் காலத்தில் சிரியாவில் நிலைகொண் டிருந்த அமெரிக்க படைகள் வெளியேறின. எனினும் தற் போது இரண்டாயிரம் படைவீரர்கள் மட்டும் தங்கியிருள்ளனர் என அமெரிக்கா கூறுகின்றது. இத்தொகை அதிகமானது என பல சுயாதீன ஊடகங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

## குர்திஸ்தான்:

அதே சமயம் குர்தீஸ் தீவிரவாதிகளுக்கும் அமெரிக்கா மறை முகமாக ஆதரவினை வழங்கிவந்தது. இவர்களும் சிரியாவில் போராடிவந்தார்கள். இவர்கள் தங்களது பகுதியிலிருந்த முஸ்லீம் ஆயுத அமைப்புக்களான அல்கைடா போன்றவற் றையும் வெளியேற்றினார்கள். கேர்டிஸ்ரான், குர்திஸ்தான் நாடு இன்னமும் சுதந்திரம் பெறவில்லை. இதன் நிலப்பரப்பா னது சிரியா, ஈராக், துருக்கி, ஈரான் ஆகிய நான்கு நாடுகளில் உள்ள குர்தீஸ் மக்கள் வாழும் பிரதேசங்களை இணைக்கும் ஒரு நாடாகும். இவர்கள் தங்கள் சுதந்திரத்துக்காக பல தசாப்தங்களாக போராடிவருகின்றனர். இவர்கள் சுதந்தி ரத்தை ஒடுக்குவதற்கு துருக்கி மிகவும் தீவிரமாகச் செயல்பட் டுவருகின்றது. கேர்டிஸ்ரான் அமையப்பெற்றால் மற்றைய நாடுகளைவிட துருக்கியே அதிக நிலப்பரப்பை இழக்கும்.

ரஷ்யாவின் சிரியா வருகையானது ஆசாத்துக்கு எதிரான போராளிகள் குழுக்களை ஓரளவிற்கு கட்டுப்பாட்டுக்குள்



கொண்டுவந்தது. Regime Change என்ற பெயரில் அமெ ரிக்கா தங்கள் சொல் கேட்கும் தலைவர்களை ஆட்சியில் அமர்த்தும். சிரியாவில் ரஷ்ய தலையீட்டால் அது அமெரிக்கா விற்கு தோல்வியில் முடிந்தது. லிபியா, ஈராக் போன்று ஜனநா யகமற்ற சர்வாதிகார ஆட்சி சிரியாவிலும் நடைபெற்றது. இத னால் மக்களின் எதிர்ப்பு அங்கிருந்தது. இது மேற்கு நாடுக ளுக்கு ஒரு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத் துள்ளது. சிரியா, ரஷ்யாவின் உதவியுடன் எதிர்ப்பாளர்களை அழித்துக் கொண்டிருக்கும் பொழுது, மேற்கு நாடுகள் குறிப் பாக அமெரிக்கா சமாதான பேச்சுவார்த்தை என்ற பெயரில் சிரிய அரசின் முன்னேற்றத்தை தடுத்தது. மேற்கின் இராஜதந் திரம் இன்று அவர்களுக்குச் சாதகமாக அமைந்துள்ளது.

ரஷ்யா-உக்ரேன் போர், ஒக்ரோபர் ஏழு தாக்குதல்கள் (ஹமாஸ்-.இஸ்ரேல்) சிரியாவின் நிலைமையை மாற்றிவிட்டது. சிரியாவின் ஆதரவு ஆயுத அமைப்புகளான ஹமாஸ், ஹிஸ்-புல்லா அமைப்புகள் அதன் முக்கிய தலைவர்களை இழந் துள்ளனர். இரு அமைப்புகளும் மிகவும் பலவீனமான நிலை யில் உள்ளனர். ஈரானும் மேற்குடன் ஒரு போருக்கு தயாரான நிலையில் உள்ளது. ரஷ்யா உக்ரேனுடன் மிகவும் உக்கிர மாக போரிட்டுக்கொண்டிருக்கின்றது. அதே சமயம் ஈராக்கி னுள் முஸ்லீம் ஆயுததாரிகள் சிரியாவிலிருந்து செல்ல சிரியா அனுமதித்ததை எதிர்த்து சிரியா மீது அமெரிக்கா பொருளா தாரத் தடைகளை விதித்திருந்தது. சிரியாவின் பொருளாதார மும் பலவீனமாகவிருந்தது.

ஆசாத்தின் எதிரிகள் தகுந்த சந்தர்ப்பத்துக்காக காத்திருந் தார்கள். 2023-லிருந்து பல தாக்குதல்கள் ஆயுத அமைப்புக் களால் மேற்கொள்ளப்பட்டன. Deir Ezzor மாகாணத்தில் இராணுவ பஸ் ஒன்றில் பயணம் செய்த இராணுவத்தினர் மீது நடைபெற்ற தாக்குதலில் 23 இராணுவ வீரர்கள் கொல்லப்பட் டனர். இஸ்ரேலும் சிரியாவில் உள்ள ஈரானிய இராணுவ மையங்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டது. Jabhat al-Nusra அமைப்பானது அல்கைடாவின் நேரடி அமைப்பாகும்.

இது தற்பொழுது புதிய வடிவம் பெற்ற Hayat Tahrir al-Sham (HTS) அமைப்பாக தோன்றியுள்ளது. சிரியாவில் போராடிக் கொண்டிருந்த சிறிய இயக்கங்களும் இவ்வமைப்புடன் இணைந்து கொண்டன. அமெரிக்கா, ஐரோப்பா, ஐ.நா போன்றவற்றால் பயங்கரவாத அமைப்பாக கருதப்படுகின்றது. இவ்வமைப்பும் முன்னர் Hayat Tahrir al-Sham (HTS) என அழைக்கப்பட்ட Syrian National Army சிரியாவில் ஐம்பது வருடங்களுக்கு மேலாக ஆட்சி செய்து வந்த ஆசாத் குடும்ப அராஜக ஆட்சியை டிசம்பர் எட்டு, 2024 அன்று முடிவுக்கு கொண்டுவந்தன. (எஸ்.என்.ஏ துருக்கி ஆதரவு அமைப்பாகும்.) சிரியாவின் வட-கிழக்கு பகுதியில் குர்தீஸ் அமைப்பான எஸ்.டி.எப்க்கும் துருக்கிய ஆதரவு அமைப்புகளும் சண்டையிட்டு வருகின்றன.

ஆசாத் ரஷ்யாவில் தஞ்சம் புகுந்துள்ளார். ரஷ்யாவின் கடற்படைக் கப்பல் ஒன்றும், விமானப் படைத் தளம் ஒன்றும் சிரியாவில் உள்ளன. அத்துடன் சுமார் ஏழாயிரம் இராணுவ வீரர்கள் தங்கியுள்ளனர். இவர்களின் பாதுகாப்பையும், தளங்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த புதிய ஆட்சியாளர்களுடன் ரஷ்யா உரையாடுகின்றது. இஸ்ரேல் தனது பங்கிற்கு கோல்டன் ஹைட்ஸ் பிரதேசத்தை விஸ்தரிக்க சிரியாவின் நிலப்பரப்பை கைப்பற்றுகின்றது. அது மட்டுமல்லாமல் சிரியாவின் ஆயுத களஞ்சியங்களின் மீதும் தாக்குதல்களை மேற்கொள்கின்றது. அகன்ற இஸ்ரேலின் விரிவாக்கத்தினுள் காசா, மேற்கு கரை, லெபனான், சிரியா என விரிகின்றது. சிரிய மக்கள் ஆசாத்தின் வெளியேற்றத்தை கொண்டாடி வருகின்றார்கள். சிறைகள் உடைக்கப்பட்டு சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆசாத்திடமிருந்து விடுதலை பெற்ற சிரிய மக்கள், மற்றொரு கொடுங்கோல் அமைப்பின் ஆட்சிக்குள் வந்துள்ளனர். இது சிரிய மக்களுக்கு விடுதலையா ?

புதிய இஸ்லாமிய அடிப்படைவாத அரசு சிரிய மக்களின் நலனில் அக்கறை கொள்ளுமா ? சிரியாவில் உள்ள பத்து வீதமான கிறிஸ்தவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமா ? கிறிஸ்தவர்கள் உட்பட்ட 26 வீதமான சிறுபான்மையினரின் எதிர் காலம் சுபீட்சமாக அமையுமா ? ஆசாத் ஒரு சிறுபான்மையினத்தவர். முஸ்லீம் அடிப்படைவாத நாடுகளில் சிறுபான்மையினர் பாதுகாப்பாக இல்லை. பெண்கள் மிகவும் மோசமாக ஒடுக்கப்படுகின்றார்கள். ஊடகங்கள் சுதந்திரமாக இயங்க முடியாது. ஏதிர்க் குரல்கள் அழிக்கப்படும். இந்த நிலை சிரியாவிலும் ஏற்படும். குர்தீஸ் மக்கள் போராட்டத்தை ஒடுக்க துருக்கி புதிய ஆட்சியாளர்களுடன் இணைந்து செயல்படும். இஸ்ரேல், ஹிஸ்புல்லா, ஹமாஸ் போன்று சிரியாவையும் ஒரு பலவீனமான சக்தியாக மாற்றும். சிரிய மக்கள் மற்றொரு லிபியாவை எதிர்நோக்கி சென்று கொண்டிருக்கின்றார்கள்.

## குர்திஸ்தான்–இன் எதிர்காலம்:

Kurdish Workers' Party (PKK) இன் விரிவாக்கமாக சிரியாவில் கேர்ட்ஸ் (குர்தீஸ்) மக்கள் வாழும் பகுதிகள் அமைந்துள்ளன. இவை Syrian Democratic Forces (SDF) கட்டுப்பாட்டில் உள்ளன. எஸ்.டி.எப் ஒரு கேர்டிஸ் ஆயுத அமைப்பாகும். அலேப்போவின் Aleppo கேர்டிஸ் பகுதிகளான Ashrafiyeh, Sheikh Maqsoud ஆகியவற்றிலிருந்து எஸ்.டி.எப் போராளிகளை வெளியேற்ற புதிய ஆட்சியாளர்களான HTS பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். தற்சமயம். எஸ்டி.எப் படைகள் இப்பகுதிகளைவிட்டு வெளியேறிவிட்டனர் எனக் கூறப்படுகின்றது. முள்ளிவாய்க்கால் போன்று, அலெப்போவில் கேர்ட்ஸ் சரணடைந்துள்ளனர். (Aleppo, the Kurds were told either to surrender or to die - and they decided to surrender.) Aleppo, Tal Rifaat, Shahba போன்ற கேர்ட்ஸ் அதிகளவு வாழும் பகுதிகளில் காசாவில் நடைபெற்றது போல் கேர்டிஸ் மக்கள் கொல்லப்படலாம் என்ற அச்சம் நிலவுகின்றது. அதற்கான ஆரம்பத்தை பார்க்கக் கூடியதாகவுள்ளது. துருக்கியின் மிக முக்கிய நோக்கங்களில் ஒன்று கேர்டிஸ் மக்களை அழித்து, அவர்களது கனவான கேர்டிஸ்ரானை இல்லாமல் செய்வதாகும். அமெரிக்கா தனது குறுகிய நலன்களுக்காக கேர்டிஸ் போராளிகளுக்கும் அமைப்புகளுக்கும் உதவிகள் செய்வதாக பாவனை காட்டி அவர்களை நட்டாற்றில் விட்டுவிடுகின்றது.

Afrin சிரியாவின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ளது. இங்குள்ள கேர்டிஸ் மக்கள் கடத்தப்படுகின்றார்கள். பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். சுட்டுக் கொல்லப்படுகின்றார்கள். இது போன்று கேர்டிஸ் மக்கள் வாழும் பகுதிகளில் வன்செயல்கள் நடைபெறுகின்றன. துருக்கயில் கேர்டிஸ் மக்கள் வாழும் பகுதிகளிலும் இவை நடைபெறுகின்றன. Kurdistan Workers' Party (PKK) 1978-இல் Abdullah Ocalan My ஆல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்னர் கேர்டிஸ்தானில் சுதந்திர யுத்தங்கள் போராட்டங்கள் தீவிரமடைந்தன. கேர்டிஸ் மக்கள் வாழும் சிரியா, ஈரான், ஈராக் போன்ற நாடுகளிலும் கேர்டிஸ் மக்கள் போராடினார்கள். துருக்கி கேர்டிஸ் மக்களையும் போராளிகளையும் மிக மோசமாகவே நடத்தியது. 2014-ம் ஆண்டு சிரியாவில் நடைபெற்ற போராட்டங்களைத் தூண்டிய குற்றத்துக்காக பி.கே.கே-யின் தலைவர் Abdullah Öcalanzy-க்கு தூக்கு தண்டனை 2002-இல் வழங்கப்பட்டது. இது பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. இதனைவிட காலத்துக்கு காலம் கேர்டிஸ் போராளிகளை சிரியா தண்டித்துவருகின்றது.

Recep Tayyip Erdogan துருக்கி ஜனாதிபதி கேர்டிஸ்ரான் போராளிகளுக்கு எதிராக உலக ஆதரவை கோரியுள்ளார். இன்றைய புதிய சிரியாவின் ஆட்சியாளர்கள் துருக்கியை ஆதரிக்கின்றனர். எவ்வாறு இஸ்ரேல் தனது அகன்ற இஸ்ரேலை சிரியாவின் ஒரு பகுதியையும் அடக்கி அமைக்கின்றதோ அவ்வாறே துருக்கியும் தனது அகன்ற துருக்கியினுள் சிரியாவின் ஒரு பகுதியையும் அடக்குகின்றது. சிரியாவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றமானது பல புவிசார் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அவ்வகையில் மிக முக்கியமான மாற்றம் சிரியாவில் உள்ள கேர்டிஸ் மக்கள் வாழும் பகுதிகளை சிரிய ஆதரவு படைகள் அழிப்பதாகும். புதிதாக அமையவுள்ள குழப்பமான சிரியாவில் கேர்டிஸ் மக்களுக்கு இடமில்லை. கேர்டிஸ்ரான் மக்களின் தேசியத்துக்கான முதல் அழிவு சிரியாவில் தோன்றியுள்ளது. அவர்களை, கேர்டிஸ் தேசியத்தை, அவர்களுக்கான நாட்டை உலகம் அங்கீகரிக்காவிட்டால், பாலஸ்தீனம் போல், பாலஸ்தீனியர்கள் போல் கேர்டிஸ்ரானும் கேர்டிஸ் மக்களும் அழிக்கப்படுவார்கள்.



rathan@thaiveedu.com

# மீட்பரின் வருகை: எழுச்சியுறும் ஐரோப்பிய அதிவலது

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**முகப்பு:**

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் பெற்ற வெற்றியானது உலகெங்கிலும் உள்ள அதிவலது சக்திகளுக்கு மிகப்பெரிய உற்சாகத்தைக் கொடுத்துள்ளது. குறிப்பாக ஐரோப்பாவில் அவரது வருகை மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கிறது. ஐரோப்பாவின் தீவிர வலதுசாரித் தலைவர்களைப் பொறுத்தவரை, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்பின் வெற்றி அவர்களின் கருத்துகளுக்கும் சொல்லாட்சிகளுக்கும் கிடைத்த மற்றொரு வெற்றியாகும். ஹங்கேரிய பிரதம மந்திரி விக்டர் ஆர்பன் இதை 'உலகிற்கு மிகவும் தேவையான வெற்றி' என்று அழைத்தார், அதே நேரத்



தில் இத்தாலிய பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி 'இரண்டு சகோதர நாடுகள் ஒரே கோட்டில் இணைந்திருப்பது' பற்றி பேசினார். ஜேர்மனியில், தீவிர வலதுசாரிக் கட்சியான யுகனுயின் இணைத் தலைவர், 'இந்தத் தேர்தலைத் தீர்மானித்தது ஹாலிவுட் அல்ல, உழைக்கும் அமெரிக்கர்கள்' என்று கூறினார். ஐரோப்பாவின் ஜனரஞ்சகக் கட்சிகள் ட்ரம்பின் குடியேற்ற எதிர்ப்புச் சொல்லாட்சிகள், பொருளாதாரச் சரிவு பற்றிய கருத்துகள், உயரடுக்கின் நிராகரிப்பு மற்றும் சர்வதேச அமைப்புகள் மீதான அவமதிப்பு ஆகியவற்றில் உடன்படுகின்றன. இதன் விளைவாக, ஐரோப்பாவின் தீவிர வலதுசாரிகள் அமெரிக்கத் தேர்தல் முடிவுகளை தமது வெற்றியாகக் கருதுகின்றனர்.

டொனால்ட் டிரம்ப் 2016-ம் ஆண்டில் அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். பாரம்பரியமாக ஜனநாயகக் கட்சியினரை ஆதரித்த மிச்சிகன், பென்சில்வேனியா மற்றும் விஸ்கான்சின் உள்ளிட்ட அமெரிக்காவின் இரும்புப் பகுதி (rust belt) மாநிலங்களை அவர் வென்றார். இதே கதையே கடந்த நவம்பரிலும் நடந்தது. அமெரிக்காவின் முன்னாள் தொழில்துறை மையப்பகுதி ட்ரம்பிற்கு அதிகளவில் வாக்களித்தது. தொழிலாளர்கள் அவரது 'அமெரிக்காவை மீண்டும் சிறந்ததாக்குவேன்' என்ற வாக்குறுதியை நம்புகிறார்கள். இந்த மாநிலங்களில் உள்ள பெரும்பாலான தொழிலாள வர்க்க மக்கள், பல்கலைக்கழகங்களில் சேராதவர்கள், ஆண்டுக்கு 30,000 முதல் 90,000 டொலர்கள் வரையிலேயே சம்பாதிப்பவர்கள். இவர்களே டிரம்பை ஆதரித்தனர். குறிப்பாக வெள்ளை, இலத்தீன் மற்றும் கறுப்பினம் என்ற வேறுபாடின்றி உழைக்கும் வருமானம் குறைவான, எளிய அமெரிக்க வாக்காளர்களுக்கு ட்ரம்பே கவர்ச்சிக்குரியவராக இருந்தார்.

இந்தப் போக்கு அமெரிக்காவில் மட்டும் அல்ல. கடந்த ஜூன் மாதம், பிரெஞ்சு நாடாளுமன்றத் தேர்தலின் முதல் சுற்றில் 57% தொழிலாளர்கள் தீவிர வலதுசாரிக் கட்சியான ராஸ்ஸெம்பிள்மெண்ட் நேஷனலுக்கு (Rassemblement National) வாக்களித்தனர். செப்டம்பரில், நாட்டின் பொதுத் தேர்தலில் 50% தொழிலாளர்கள் ஆஸ்திரியாவின் ஜனரஞ்சக சுதந்திரக் கட்சியை (FPÖ) ஆதரித்தனர், அதே நேரத்தில் பிராண்டன்பர்க் மாநிலத் தேர்தலில் தொழிலாளர்களின் வாக்குகளில் 46% ஜெர்மனிக்கான மாற்று (AfD) வென்றது.

மேற்கில் மத்திய-இடது கட்சிகளுக்கான ஆதரவு குறைந்து வருவதை ஆராயும் 51 ஆய்வுகளின் முறையான மதிப்பாய்வின் முடிவுகளுடன் இந்தத் தேர்தல் முடிவுகள் பொருந்துகின்றன. அமெரிக்காவில் உள்ள ஜனநாயகக் கட்சி, மேற்கு

ஐரோப்பாவில் சமூக ஜனநாயகவாதிகள் மற்றும் கம்யூனிசத்திற்குப் பிந்தைய நாடுகளில் உள்ள முற்போக்கு சக்திகள் அனைத்தும் தொழிலாள வர்க்கத்தின் ஆதரவை இழந்துள்ளன. இந்தப் போக்கை மாற்றியமைக்க, அவர்கள் தொழிலாளர் நட்புக் கொள்கைகளைச் செயற்படுத்த வேண்டும் மற்றும் வாக்காளர்களின் இந்த முக்கியமான பகுதியினருடன் அவர்கள் தொடர்பு கொள்ளும் முறையை மாற்ற வேண்டும். ஆனால் தொடர்ச்சியாக அவர்கள் அதைச் செய்யத் தவறுகிறார்கள். இதனால் தொழிலாளர்கள் அதிவலதின் பக்கம் சாய்கிறார்கள்.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக சோசலிச ஜனநாயகத்தை கட்டியெழுப்புவதில் தொழிலாள வர்க்கம் முக்கிய பங்கு வகித்துள்ளது. உலகளாவிய வாக்களிக்கும் உரிமைகள், சமூக நலத் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் பொருளாதார நல்வாழ்வை விரிவுபடுத்தும் மற்றும் அரசியல் ஸ்திரத் தன்மைக்கு அடித்தளமிடும் பிற கொள்கைகளுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. ஆனால் கடந்த சில தசாப்தங்களில் மத்திய-இடது கட்சிகள் நகர்சார்ந்த மேல்தட்டுக் கட்சியாக தம்மை வளர்த்துள்ளன. இதற்கான விளைவுகளையே அவை அனுபவிக்கின்றன. மத்திய-இடது மற்றும் இடதுசாரிக் கட்சிகள் தொடர்ந்தும் தோல்வியுற்றால், தீவிர வலதுசாரிகள் தங்கள் ஜனநாயக விரோத செயல்திட்டத்திற்கு எரிபொருளாக தொழிலாளர்களின் கோபத்தைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்வார்கள். ஐரோப்பிய அதிவலதிற்கு ட்ரம்பின் மீள்வருகை மிகப்பெரிய உற்சாகத்தைக் கொடுத்துள்ளது.

## ஐரோப்பிய ஒன்றியத்தில் அதிவலதின் எழுச்சி:

கடந்த நான்கு தசாப்தங்களில் தீவிர வலதுசாரிகளின் எழுச்சி ஐரோப்பிய அரசியல் வாழ்வின் ஒரு முக்கிய உண்மையாகி விட்டது. 1989 முதல், தீவிர வலதுசாரிக் கட்சிகள் தங்களுடைய சராசரி வாக்குப் பங்கை கிட்டத்தட்ட 20 சதவிகிதம் அதிகரித்துள்ளன. முந்தைய தசாப்தத்தில் அவர்கள் போலந்து முதல் பிரான்ஸ் வரையிலான அரசாங்கத்திற்கு எதிரான பிரதான எதிர்க்கட்சியாக வளர்ச்சியடைந்தனர். பிந்தைய போக்கு மத்திய, கிழக்கு ஐரோப்பாவில் 2010-களின் முற்பகுதியில் ஹங்கேரியில் விக்டர் ஆர்பன் மற்றும் போலந்தில் ஆண்ட்ரேஜ் டுடா ஆகியோரின் தேர்தலுடன் தொடங்கியது. இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்தில் தீவிர வலதுசாரிக் கட்சிகள் மிகுந்த செல்வாக்குள்ளவையாக மாறின. அதன் ஏற்றம் எந்த வகையிலும் ஒரே மாதிரியாக இல்லை என்றாலும், வேகம், குறைந்தபட்சம் இப்போதைக்கு, அவர்களின் பக்கத்தில் உறுதியாகத் தெரிகிறது.

தற்போது அதிவலது, ஐரோப்பிய மட்டத்தில் மூன்று வெவ்வேறு முகாம்களில் அணிவகுத்து நிற்கிறது. இந்தப் புதிய தீவிர வலதுசாரி சக்திகள், வரலாற்றுரீதியாக பாசிச மற்றும் பிற்போக்குக் கட்சிகளுக்கு இயலாத, தொழிலாள வர்க்க ஆதரவைப் பெறுவதற்கான திறமையைக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இந்த உண்மை, இப்போதும் எதிர்காலத்திலும் ஐரோப்பாவில் உள்ள எந்தவொரு இடது திட்டத்திற்கும் கடினமான ஆனால் முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது. புதிய பாட்டாளி வர்க்கம் வலப்புறமாக மாறுவதை எவ்வாறு புரிந்து கொள்வது ? அதைவிட முக்கியமாக, அவ்வாறு நிகழாமல் அதை மாற்றியமைக்க முடியுமா ?

தீவிர வலதுசாரிகள் 2024-ல் ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியல் நிலப்பரப்பில் ஆழமாகக் காலூன்றியுள்ளார்கள். கடந்த ஜூன் மாதம் இடம்பெற்ற தேர்தலைத் தொடர்ந்து அதிவலது இப்போது 187 ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இந்த அதிவலதுகள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் குழுவானது ஐரோப்பாவிற்கான தேசபக்தர்கள், இதில் பிரான்சின் ராஸ்ஸெம்பிள்மென்ட் நேஷனல், ஹங்கேரியின் ஃபிடெஸ், ஸ்பெயினின் வோக்ஸ் மற்றும் இத்தாலியின் லெகா ஆகியவை அடங்கும். இரண்டாவது ஐரோப்பிய கன்சர்வேடிவ்கள் மற்றும் சீர்திருத்தவாதிகள். இதில் ஃப்ரெரெஸ் டி இத்தாலி மற்றும் போலந்தில்



உள்ள சட்டம் மற்றும் நீதிக் கட்சி ஆகியவை அடங்கும். இறுதியாக, மூன்றாவது குழுவானது ஐரோப்பிய நாடுகளின் இறையாண்மையை வலியுறுத்துவன, இதில் பெரும்பாலும் ஜெர்மனியின் AfD உள்ளது.

இந்த போக்கை ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளிலும் காணலாம். ஜூலை மாதம் பிரான்சில் ஆரம்பமான நாடாளுமன்றத் தேர்தல்களைத் தொடர்ந்து, மரி லு பென்னின் ராஸ்ஸெம்பிள்மென்ட் நேஷனல், சட்டமன்றத்தில் மூன்றாவது பெரிய அரசியல் சக்தியாக மாறியது. இதற்கிடையில், ஆஸ்திரியாவின் சுதந்திரக் கட்சி செப்ரெம்பர் மாதம் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பழைமைவாதிகளை விட முன்னிலைக்கு வந்து வெற்றி பெற்றது.

1990-களின் முற்பகுதியில் தீவிர வலதுசாரி சித்தாந்தம் ஐரோப்பிய கண்டத்தில் அதன் முதல் முன்னேற்றங்களை அடைந்தபோது ஒரு புதிய, தொழில்துறைக்கு பிந்தைய சமூகத்தின் தொடக்கத்துடன் அது தன்னைப் பிணைத்துக் கொண்டது. இது ஐரோப்பிய தொழிலாள வர்க்கங்கள் கம்யூனிஸ்ட் மற்றும் சமூக-ஜனநாயகக் கட்சிகளில் தங்களுடைய இருப்பிடத்தை சீராக விட்டுவிட்டு எதிர் முனைக்கு இடம்பெயர்ந்ததைக் குறிக்கிறது. இக்காலப்பகுதியில் தோற்றம் பெற்ற அதிவலது கட்சிகளின் எல்லைகள் பார்ப்பதற்கு தெளிவாக இருந்தன. பண்பாட்டுத் தனித்துவத்திற்காக இன அடையாளத்தை வலியுறுத்தும் புதிய தீவிர வலதுசாரியின் சொல்லாட்சிக் கூறுகளில் சிலவற்றை அவை கைப்பற்றியிருந்தாலும், இந்தச் சொல் பெரும்பாலும் பாசிசத்திற்குப் பிந்தைய பாரம்பரியத்துடன் கறைபடிந்த தொடர்புகளை அடக்குவதற்கு அவர்களை அனுமதித்தது, மேலும் அவற்றை அடிக்கடி மாற்றியது. அதன் இடதுசாரி பிரதிநிதிகளால் கைவிடப்

பட்ட தொழிலாள வர்க்கத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட நிர்வாகிகளாக தம்மை நிலைநிறுத்தியது. அதே நேரத்தில், 'ஜனரஞ்சகவாதி' என்ற சொல் சந்தேகத்திற்கு இடமின்றி இந்த கட்சிகளில் சிலவற்றின் புதுமைக்கு அதன் ஈர்ப்புக்கு கடன்பட்டது. தெளிவான இராணுவப் பிரிவுகள் இல்லாமல், விரக்தியடைந்த படைவீரர்களோ, மக்கள் தொகையோ இல்லாததால், அவர்கள் தங்களை தமது பாசிச முன்னோடிகளுடன் ஒப்பிடுவது கடினமாக இருந்தது.

புதிய செயல்தந்திரம் அவர்கட்குத் தேவைப்பட்டது. அது படிப்படியாக, ஒரு முழுமையான அரசியல் திட்டமாக மாற்றப்பட்டது. இதில் இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவுத் தளத்தை தீவிர வலதுசாரிக் கட்சிகள் கைப்பற்றுவது, உருவாகியுள்ள ஒரு புதிய நடுத்தர வர்க்கத்தின் ஆதரவைத் திரட்டுவது, பெருகிய முறையில் வேறுபட்ட ஒரு புதிய மக்கள் தளத்தை தேடுவது, நவீன நிலைமைகளின் விளைவால் உருவான 'சேவைத் துறை பாட்டாளி வர்க்கத்தை' கைப்பற்றுவது என்பன இதன் முக்கிய நோக்குகளாக இருந்தன.

இன்று, இந்த மாறுதல் அரசியலின் விளைவு இன்னும் தெளிவாகிவிட்டது. ஒருபுறம் பழைமைவாதிகளின் தீவிரத் தன்மையுடையவர்கள் அதிவலதின் பக்கம் சாய்கிறார்கள். ஜனநாயகவாதிகளில் ஏற்பட்டுள்ள விரக்திநிலை அவர்களை அதிவலதின் பக்கத்தில் கொண்டு சேர்க்கிறது. இடதுகள் உழைக்கும் மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கத் தவறியதால் தொழிலாளர்கள் அதிவலதிற்கு தமது ஆதரவை நல்குகிறார்கள். அதிவலதிற்கான ஆதரவு என்பது புதிய மக்கள் குழுவிடமிருந்து வரவில்லை. தாரண்மைவாத ஜனநாயகக் கட்டமைப்பில் தோல்வியடைந்துள்ள அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களிடமிருந்தே வருகிறது.

ஐரோப்பாவின் பாசிஸ்டுகள், தீவிரமான சமூக மோதலின் காலகட்டத்தில் அதிகாரத்திற்கு உயர்ந்தனர்; தொழிலாளர் இயக்கங்கள் புரட்சிகளைத் தூண்டுவதற்கு முயற்சித்த பின்னர் வெற்றி பெற்றனர். மேலும் இவர்கள் சமூக ஒழுங்கை நிலைப்படுத்துவதற்கும் தொழிலாளர்களை மீண்டும் நிலைநிறுத்துவதற்கும் சிறந்த வாய்ப்பாக உயரடுக்கினரால் பார்க்கப்பட்டனர். இந்த நிலை இன்று ஐரோப்பிய காட்சியில் வெளிப்படையாக இல்லை. தொழில்மயமாக்கல் மற்றும் தளர்வான தொழிலாளர் சந்தைகளால் பழைய காலத்திற்கு திரும்பும் வாய்ப்பு பலவீனமடைந்துள்ளது. பாசிச தெரு வன்முறை செழித்தோங்கிய 1930-களுக்கு மாறாக, சமகால தீவிர வலதுசாரிகள் தேர்தல் மற்றும் தேர்தல் அல்லாத அணிதிரட்டலில் வளர்கின்றனர். உதாரணமாக: மெலோனியின் கட்சி பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றது, அதில் கிட்டத்தட்ட பத்து இத்தாலியர்களில் நான்கு பேர் வீட்டிலேயே இருந்தனர், வாக்குப்பதிவு கிட்டத்தட்ட 10 சதவீதம் குறைந்துள்ளது. பிரான்சில் லு பென்னின் கட்சி, அதிக வாக்காளர்கள் வாக்களிக்காத விகிதங்களைக் கொண்ட நாட்டின் சில பகுதிகளில் நீண்ட காலமாக அது சிறந்த வாக்கு எண்ணிக்கையைப் பெற்றுள்ளது.

பொதுவாக ஐரோப்பிய அதிவலது வாக்குகளுக்கான ஆதரவின் அடிப்படையில், மிகவும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், அது மறுசீரமைப்பைக் காட்டிலும் அணிதிரட்டலைச் சார்ந்துள்ளது: பெரும்பாலான தொழிலாள வர்க்க வாக்காளர்கள் அரசியலில் இருந்து வெளியேறுகிறார்கள், அவர்களில் சிலர் தீவிர வலதிற்கு இடம்பெயர்ந்து, பின்னர் அவர்கள் மெதுவாக அதிவலதிற்கான ஆதரவைத் திரட்டுவோராகின்றனர்.

ஐரோப்பாவில் தொழிலாள வர்க்க வாக்காளர்கள் புதிய கட்சிகளை பரிசோதித்து வருகின்றனர், ஆனால் தேர்தல்களில் அவர்களின் முக்கிய பதில் அக்கறையின்மை மற்றும் பின்வாங்குதல் ஆகியவற்றின் கலவையாகும், கிளர்ச்சியற்ற விலகல் அல்ல. வலப்புறம் இடம்பெயர்ந்த வாக்காளர்கள்கூட, அதன் மூலம் ஒரு பொதுவான மாறுதலின் ஒளியியல் மாயையை ஊட்டுகிறார்கள், பொதுவாக அந்த புதிய தீவிர வலதுசாரிக் கட்சிகளுடன் தங்கள் முந்தைய இடதுசாரி ஆடைகளுடன் பயன்படுத்தியதை விட மிகவும் பலவீனமான உறவுகளைக் கொண்டுள்ளனர். பிரான்சின் வடக்கில், லு பென் முன்னாள் கம்யூனிஸ்ட் கோட்டைகளைக் கைப்பற்றினார். அதிவலது AfD கிழக்கு ஜேர்மனியைக் கைப்பற்றியது.

ஐரோப்பாவில் அதிகரிக்கும் உள்நாட்டு இனவெறியின் தற்போதைய எழுச்சிக்கு தவிர்க்க முடியாத சர்வதேச பரிமாணம் உள்ளது. வீழ்ச்சியடைந்து வரும் ஏகாதிபத்திய மேலாதிக்கத்திற்கு தங்களைத் தாங்களே தாக்கும் நாய்களாகக் காட்டிக் கொள்ளும் நாடுகள், மத்திய கிழக்கில் நடந்து வரும் இனப்படுகொலைக்கு நிபந்தனையின்றி ஆதரவளிக்கும் நாடுகள், இத்தகைய போர்க் குணத்தை மீண்டும் வீட்டிற்குள் நுழைவதைக் காண்பதில் ஆச்சரியம் உண்டா? இங்கிலாந்து மற்றும் ஜேர்மனி ஆகிய இரண்டும், பலஸ்தீனத்தில் நடந்து வரும் போர்க்குற்றங்களை இயல்பாக்கியும், மீண்டும் மீண்டும் பாதுகாத்தும், உள்நாட்டில் முஸ்லீம்-விரோத வன்முறையைச் செயற்படுத்த விரும்புவோருக்கு வலுவான உத்வேகத்தை அளித்துள்ளன. ஆண்டிசெமிட்டிசத்தின் மேலாதிக்க வகைகளைப் போலன்றி, இஸ்லாமிய எதிர்ப்பு உணர்வு பொதுவாக உலகளாவிய சர்வ வல்லமையின் கணிப்புகளில் ஈடுபடுவதில்லை. இது முஸ்லிமை ஆபத்தான தெளிவற்ற உருவமாக காட்டுகிறது. இவையனைத்தும் நேரடியாகவும் மறைமுகமாகவும் அதிவலதின் செல்வாக்கு அதிகரிப்புக்குப் பங்களிக்கின்றன.

## தொழிலாளர், அதிவலது, சமூகநல அரசு:

சமீபத்திய அரசியல் நிகழ்வுகள் தொழிலாள வர்க்கத்தை மீண்டும் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளன. இது பொதுவான அரசியல் உரையாடல்களில் இருந்து கிட்டத்தட்ட மறைந்திருந்தாலும், 2016-ம் ஆண்டின் அரசியல் எழுச்சிகளுடன் அது தனது பெரிய மறுபிரவேசத்தை மேற்கொண்டுள்ளது. பிரெக்ஸிட் மற்றும் அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டமை போன்ற மாற்றத்தக்க அரசியல் நிகழ்வுகளுடன் இது பரவலாகத் தொடர்புடையவை. தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் அதிருப்தி இதில் முக்கிய காரணியாகத் தெரிகிறது. அமெரிக்காவில் குறிப்பாக, முன்னாள் தொழில்துறை பகுதிகளில் ட்ரம்ப் பெற்ற வெற்றிகள் அவரது வெற்றிகரமான பிரச்சாரத்தில் ஒரு தீர்க்கமான கூறுபாடு ஆகும். இந்த சமீபத்திய முன்னேற்றங்கள் தொழிலாள வர்க்க வாக்குகளின் மாற்றம் குறித்து பல கேள்விகளை எழுப்பியுள்ளன.

வர்க்கம் மற்றும் இடதுசாரிகளுக்கான வாக்குகளுக்கு இடையே உள்ள பலவீனமான இணைப்பு, சமூகநல அரசு குறித்த புதிய பார்வையை வேண்டுகிறது. ஏனெனில் தொழிலாள வர்க்கம் நீண்ட காலமாக வலுவான சமூக பாதுகாப்பு வலையின் முக்கிய ஆதரவாளராகக் கருதப்படுகிறது. இச்சூழலில், தொழிலாள வர்க்கத்தின் சமகால சமூகநலத் திட்டங்களை முன்மொழிவோராக அதிவலது தம்மை முன்னிறுத்துகிறது. ஜனரஞ்சக தீவிர வலது கட்சிகள் தங்கள் வாக்காளர்களை பாட்டாளிமயமாக்கும் செயல்முறையை கடந்து வந்துள்ளன. பிரதான இடதுசாரி கட்சிகள் பாட்டாளிமயமாக்கலின் தலைகீழ் செயல்முறை வழியாக சென்றுள்ளன. அதே நேரத்தில், வாக்குப்பதிவு குறைந்துள்ளது. குறிப்பாக குறைந்த வருமானம் உள்ள வாக்காளர்களைப் பாதித்துள்ளது. இடது மற்றும் தீவிர வலதுசாரிகள் தொழிலாள வர்க்கத்தின் மீது போட்டியிடுகின்றனர். இந்தப் புதிய போட்டியின் வரையறைகள், காரணங்கள் மற்றும் விளைவுகள் பற்றி நாம் சில வினாக்களை எழுப்ப வேண்டும். இடதுசாரிகளும், தீவிர வலதுசாரிகளும் உண்மையில் ஒரே தொகுதியான வாக்காளர்களுக்கு மத்தியில் போட்டியிடுகிறார்களா? மாறிவரும் வேலைவாய்ப்பு அமைப்பு மற்றும் வழக்கமான வேலைகளின் சரிவு ஆகியவை முக்கியமா? மற்றும் எந்த தரப்பினர் இதனால் பயனடைகிறார்களா? தீவிர வலதுசாரிகளின் புதிய தொழிலாள வர்க்க அடிப்படையானது, சமூக-பொருளாதார பிரச்சினைகளில் அதன் நிலைப்பாட்டை மாற்றி, அதன் முன்னாள் நவதாராளவாத நிலைப்பாட்டைக் கைவிடச் செய்கிறதா? பொதுநல அரசு சீர்திருத்தங்களுக்கு இந்த மறுசீரமைப்புகளின் தாக்கங்கள் என்ன?

சமீபத்திய ஆண்டுகளில், ஜனரஞ்சக தீவிர வலதுசாரிகளின் கட்சிகளின் எழுச்சியில் சமூகநல அரசு குறித்த அவர்களின் கவனம் செல்வாக்குச் செலுத்துகிறது. மற்றும் குறிப்பாக அவர்களின் இனவெறி எதிர்ப்பு புலம்பெயர்ந்தோர் மீதான காழ்ப்புணர்வு என்பனவோடு சமூகநலன் குறித்த கவனம் நெருக்கமாக இணைந்துள்ளது. இதை பலரும் 'சமூகநலப் பேரினவாதம்' (welfare chauvinism) என்று அழைக்கிறார்கள். இது பூர்வீக மக்களுக்கு முன்னுரிமை கொடுப்பதா?, அல்லது நாட்டினர் அல்லாதவர்களை நலன்புரி வழங்கலில் இருந்து முற்றிலும் விலக்குவதா?, போன்ற வினாக்களுக்கு இன்னமும் தெளிவாகப் பதிலளிக்கவில்லை. குடியேற்றவாசிகள் இங்கு இலக்கு வைக்கப்படுகின்றனர். தற்போதுள்ள பெரும்பாலான ஐரோப்பிய அதிவலது கட்சிகள், புலம்பெயர்ந்தோரை பொதுநல ஏற்பாடுகளில் இருந்து விலக்குவதற்கான அழைப்புகளை முதன்மையான தமது மரபுரிமை சார் கலாசார நிகழ்ச்சி நிரலின் ஒரு அம்சமாகக் கருதுகின்றன. இருப்பினும் புலம்பெயர்ந்தோர் ஏன் விலக்கப்பட வேண்டும் என்பதற்கான வாதங்கள் பிழையான பொருளாதாரத் தன்மையைக் கொண்டிருக்கின்றன.

மறுபகிர்வுக்கான தீவிர வலதுசாரிகளின் விருப்பத்தேர்வுகள் மேற்கு ஐரோப்பாவில் முக்கியத்துவம் மற்றும் உள்ளடக்கம் ஆகிய இரண்டிலும் உருவாகியுள்ளன. சில சந்தர்ப்பங்களில், குடியேற்றத்திற்கு எதிரான சட்டத்திற்குள், சில கட்சிகள் மறுபகிர்வு பிரச்சினையில் நலன்சார்ந்த நிலைப்பாடுகளை ஆதரிப்பதன் மூலம் வாக்காளர்களைத் திரட்ட முயற்சிக்கின்றன. சமீபத்திய தசாப்தங்களில், தொழில்நுட்ப மாற்றம் பல மேம்பட்ட முதலாளித்துவ ஜனநாயக நாடுகளின் வேலைவாய்ப்பு கட்டமைப்பை ஆழமாக மாற்றியுள்ளது. இது ஒருபுறம் பொருளாதார நெருக்கடியையும் நிச்சயமின்மையையும் அதிகரித்துள்ளது. மறுபுறம் அதிவலதிற்கான ஆதரவையும் குடியேற்றவாசிகள் மீதான வெறுப்புணர்வையும் அதிகரித்துள்ளது. இடது கட்சிகள் இந்த நெருக்கடியை அடையாளங்காணத் தவறியுள்ளன.

ஐரோப்பாவின் இடதுசக்திகள், வழக்கமான வேலைகளில் வேலை வாய்ப்புகள் குறைவது, குறைந்த நடுத்தர வர்க்கத்தை பொருளாதார பாதிப்பின் அறியப்படாத நிலைகளை அடையாளங்காண்பது, சமூகத்தில் அடைக்கலமான நிலை அச்சுறுத்தலுக்குள்ளாவது போன்றவற்றை இனங்காணத் தவறியுள்ளதோடு அவை குறித்துக் கவனம் செலுத்தவில்லை. தொழிலாளர் வர்க்கத்தின் இந்த முக்கியமான நெருக்கடிகள் பெருகிய முறையில் ஏற்படுத்தியுள்ள அரசியல் விளைவுகள் என்ன என்பதை ஆராய்வது முக்கியம். நவீனமயமாக்கல் மற்றும் தொழில் மாற்றத்தின் அரசியல் விளைவுகளைப் புரிந்து கொள்வதற்கு தனிப்பட்ட வேலைவாய்ப்புப் பாதைகளை நோக்குவது முக்கியம். ஒப்பந்த வேலைச் சூழலில் தங்கியிருப்பது அடையாள அரசியலுக்கான தேவையை அதிகரிக்கிறது, வழக்கமான வேலையில் வேலை இழப்பது பொருளாதாரப் பதிலைத் தூண்டுகிறது. ஜெர்மனி, சுவிட்சர்லாந்து பிரித்தானியா ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி, காலப்போக்கில் தனிப்பட்ட வேலைவாய்ப்பு வாழ்க்கை வரலாறுகளே பெரும்பாலும் தேர்தல் நடத்தைகளைத் தீர்மானிக்கின்றன என்பதைக் காட்டுகின்றன.

முரண்நகையாக, அதிவலது சக்திகளே சமூகநல அரசின் பிரதான பிரச்சாரகர்களாக இருக்கிறார்கள். அவர்கள் குடியேற்றவாசிகளையும், மற்றோரையும் சமூகநலக் கட்டமைப்பில் இருந்து வெளியேற்றுவதை அதன் நிகழ்ச்சி நிரலாகக் கொண்டுள்ளனர்.

இது ஆழ்ந்த நெருக்கடிகளின் தொகுப்பாகும், இது சமகால சூழ்நிலையை மிகவும் ஆபத்தானதாக ஆக்குகிறது. அதிலும், அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் தீவிர காலநிலை நிகழ்வுகளின் வேகம் மில்லியன் கணக்கானவர்களை தங்கள் உயிர்கள் மற்றும் வாழ்வாதாரம் குறித்த அச்சத்தில் தள்ளுகிறது. இந்த புயலில் குடிமக்களுக்கு பாதுகாப்பான இடம் தேவை. சமூக ஜனநாயகவாதிகள், அவர்களின் ஒற்றுமை சார்ந்த சித்தாந்தம், பரந்த நிறுவன மரபுகள் மற்றும் சகோதரக் கட்சிகளைப் புதுப்பிக்க உதவிய சமீபத்திய பிரதிபலிப்புகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அதை வழங்கக்கூடிய நிலையில் இல்லை. ஆனால், அண்மைக்காலமாக சில தேர்தல் வெற்றிகளுடன் அவர்களது நிலை வலுப்பெற்றுள்ள போதிலும், அவர்களுக்கு இந்த வாய்ப்பை இயல்பாக வழங்குவதற்கான வழிமுறைகள் இல்லை. மேலும் அவர்கள் சவாலை எதிர்கொள்ளவில்லை என்றால், தீவிர வலதுசாரி ஜனரஞ்சகவாதிகள் அதற்குப் பதிலாக அவர்களின் போலித் தீர்வுகளுடன் போட்டியிடலாம்.

பாரம்பரிய தொழிலாள வர்க்கத்தின் சுருக்கம் சமூக ஜனநாயகத்தின் முக்கிய வாக்காளர்களைக் குறைக்கிறது, அதே நேரத்தில் தொழில்துறைக்கு பிந்தைய தேர்தல் வர்த்தக பரிமாற்றங்கள் பாகுபாடான போட்டியை மாற்றி புதிய தேர்தல் கூட்டணிகளை உருவாக்குவதை சிக்கலாக்குகின்றன. முந்

தைய தேர்தல் உயரத்திற்கு திரும்புவது என்பது சாத்தியமற்றது. சமூக ஜனநாயகத்தின் புதிய தாராளமயமாக்கலின் விளைவுதான் தேர்தல் நெருக்கடி என்பது ஒரு நேர்மறையான செய்தி. சமூக ஜனநாயகவாதிகள் சமீபத்தில் இடதுசாரி பொருளாதார நிலைகளை முழுமையாக மறுத்து, அவர்களுக்கும் மத்திய-வலது, அதிவலது கட்சிகளுக்கும் இடையே சிறிது வளர்ந்து வரும் கொள்கை உடன்பாடுகள் சமூக ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையின்மையின் சில அறிகுறிகளை வழங்குகின்றன. மறுபுறம் இடதுசாரிகள் தங்களைச் சமூக ஜனநாயகவாதிகளாகக் கட்டமைக்கிறார்கள். இதனால் இன்றைய நலிவடைந்த நவதாராளவாதத்திற்கு தெளிவான மாற்றீட்டை முன்வைக்க அவர்களால் இயலவில்லை.

ஐரோப்பியத் தொழிலாளர்களிடையே எந்தக் குழு வாக்காளர்கள் மத்திய-இடதைக் கைவிடுகிறார்கள், இந்த வாக்காளர்கள் எந்தக் கட்சிக்குச் செல்கிறார்கள்? போன்ற கேள்விகளை ஆழமாக நோக்கவேண்டும். இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், மத்திய-இடதுசாரி, சமூக ஜனநாயகக் கட்சிகள் இன்று தேர்தல் இக்கட்டான சூழ்நிலையில் போராடுகின்றன, தொழிலாள வர்க்கம் மற்றும் நடுத்தர வர்க்கத் தொகுதிக்கு இடையேயான வர்த்தகம் இதில் பங்களிக்கிறது. தொழிலாள வர்க்கம், சமீபத்திய இரண்டு தசாப்தங்களில், மத்திய-இடதுகளின் முக்கிய வாக்காளர்களாக, நடுத்தர வர்க்கத்தால் அதிகளவில் மாற்றப்பட்டுள்ளது. ஆயினும்கூட, சமூக ஜனநாயகக் கட்சிகள் தங்கள் வாக்குப் பங்கைத் தக்கவைத்துக் கொள்ள, அவர்களுக்கு நடுத்தர மற்றும் தொழிலாள வர்க்க வாக்காளர்கள் தேவைப்படுவார்கள், எனவே பெரும்பாலும் இந்த வாக்காளர் குழுக்களின் தனித்துவமான விருப்பங்களுக்கு இடையில் சமநிலைப்படுத்த முயற்சிப்பதால், பிளவுபட்டதாகத் தெரிகிறது. மத்திய-இடது கட்சி ஒரு வலுவான தொழிலாள வர்க்க சுயத்துவத்தை தக்க வைத்துக் கொண்டால் மட்டும் குறிப்பாக தொழிற்சங்கத் தொழிலாளர்கள் வெளியேறுவதற்கான நாட்டம் குறையும். ஆனால் கட்சி வலுவான நடுத்தர வர்க்கக் குணாம்சத்தைக் கொண்டிருந்தால், தொழிலாள வர்க்க வாக்காளர்கள் வெளியேறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இரண்டாவதாக, மத்திய-இடது கட்சியை விட்டு வெளியேறுபவர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் உண்மையில், தீவிர வலதுசாரிகளுக்கு வாக்களிக்க நகர்கின்றனர் என்று ஆய்வுகள் சொல்கின்றன. ஆனால் ஏன்? உழைக்கும் வர்க்க வாக்காளர்கள் ஏன் தீவிர உரிமைக்கு வாக்களிக்கத் தேர்வு செய்கிறார்கள்? சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளுடன் ஒப்பிடும்போது சமூக-கலாசார அரசியல் பிரச்சினைகளின் அதிகரித்த முக்கியத்துவம் இங்கு மிக முக்கியமானது. இதைக் கவனிக்காதவரையில் தொழிலாளர்களை ஈர்ப்பது இடது கட்சிகளுக்கு மிகவும் சவாலானது.

## முடிப்பு:

மேலும், இளம் தலைமுறையினர் தீவிர வலதுசாரிகளை நோக்கி நகர்வது, நவீன ஐரோப்பாவில் பாசிசக் கருத்துகளின் நிலைத்தன்மை பற்றிய கவலைகளை எழுப்புகிறது. ஆஸ்திரியாவில், வாழ்க்கைச் செலவு மற்றும் குடியேற்றக் கவலைகள் மீதான விரக்திகளுக்கு மத்தியில், தீவிர வலதுசாரிக் கட்சி 34 வயதிற்குட்பட்டவர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுள்ளது. இதேபோல், பிரான்சில் ராஸ்ஸெம்பிள்மென்ட் நேஷனல், 34 வயதிற்குட்பட்ட வாக்காளர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான கட்சியாக மாறியுள்ளது. ஜெர்மனியில், AfD இளைஞர்களிடையே கணிசமான ஆதரவைப் பெற்றுள்ளது. நோர்வேயில் இளம் வாக்காளர்களிடையே மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பில் தமது வாக்களிக்கும் உரிமை இருந்தால் தாம் ட்ரம்பிற்கே வாக்களிப்பதாக பெரும்பான்மையாக இளையோர் கருத்துரைத்துள்ளனர்.

இவை இளந்தலைமுறையினர், தீவிர வலதுசாரி மதிப்புகள் மற்றும் பாசிச சித்தாந்தங்களை இயல்பாக ஏற்றுக்கொள்வதைக் குறிக்கிறது. சமூக ஊடகங்கள், கலாசார தாக்கம் மற்றும் அரசியல் பிளவுகள் விரிவடைதல், டிரம்பின் கலாசாரப் போர்கள் மற்றும் அவரது பரந்த நிகழ்ச்சி நிரலுடன் அதிவலது இணைந்திருப்பது ஆகியன, பல தசாப்தங்களாக ஐரோப்பாவின் அரசியல் நிலப்பரப்பை மறுவடி வமைக்கக் கூடிய ஆழமான தலைமுறை தாக்கத்தை பரிந்துரைக்கிறது.

அமெரிக்கக் கொள்கை எதேச்சாதிகாரத்தை நோக்கிச் செல்லும் போது, ட்ரம்ப்பின் இரண்டாவது ஜனாதிபதி பதவிக்காலம், ஐரோப்பாவின் அரசியல் எதிர்காலம் பற்றிய முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது. தீவிர வலதுசாரிக் கட்சிகள், வெளிப்படையான தாராளவாத நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு, மேலும் வலதுபுறமாக மாறுமா? தீவிர-வலது கருத்துகள் முக்கிய ஏற்றுக்கொள்ளலைப் பெற்றால், ஐரோப்பிய பன்மைத்துவத்தின், குடியேறிகளின் எதிர்காலம் என்ன?

சமீபத்திய ஆண்டுகளில், அதிவலது கருத்துகள் அரசியல் மைய நீரோட்டத்தில் சீராக ஊடுருவி, எதிர்வரும் ஆண்டுகளுக்கான சவாலை உயர்த்துகின்றன. ஒரு காலத்தில் மறுக்க முடியாத தாராளவாத ஜனநாயகக் கோட்பாடுகள் இப்போது ஐரோப்பிய தீவிர வலதுசாரிக் கட்சிகளின் தளங்களுக்குள் போட்டியிடுகின்றன, இது சர்வாதிகாரத்தை மேலும் இயல்பாக்குவது ஒரு உண்மையான சாத்தியமாக உள்ளது என்பதைக் குறிக்கிறது. மைய வலதுபுறத்தில் கூட, 'வலுவான மதிப்புகளுக்கு' திரும்பவும் முற்போக்கான இலட்சியங்களுக்கு எதிரான நிலைப்பாட்டிற்கும் அழைப்பு விடுக்கும் குரல்கள் சத்தமாக வளர்ந்துள்ளன. இந்த தைரியமான விளைவு ட்ரம்பின் விவரிப்புக்கும் ஐரோப்பிய தீவிர வலதுசாரிகளுக்கும் இடையிலான இயக்கத்தை எடுத்துக்காட்டுகிறது. இரண்டுக்கும் இடையிலான ஒரு பரஸ்பர ஒப்புதல், முன்பு மிகவும் தீவிரமானதாகக் கருதப்பட்ட கருத்துகளை இயல்பானதாக்கிப் பரப்புகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு தீவிர வலதுசாரி விரிவாக்கத்திற்கான வளமான நிலம் காணப்படவில்லை. தற்போது, அமெரிக்க செல்வாக்கு, குறிப்பாக சமூக ஊடகங்களால் இயக்கப்படும் நிலையில், ட்ரம்பின் பதவிக்காலம் அதற்கான நிலத்தை மீண்டும் வளமாக்கிச் செழிக்கச் செய்யலாம். இது ஐரோப்பிய தீவிர வலதுசாரிகளை முன்னெப்போதும் கண்டிராத வகையில் மறுவடிவமைக்கக்கூடும். இதனாலேயே ஐரோப்பிய அதிவலது சக்திகள் அவரை ஒரு மீட்பராகக் கருதுகின்றனர்.



meenilankco@thaiveedu.com



# வலுவிழந்து வருகிறதா இந்தியச் சனநாயகம்?

– நெல்லை ஜெயசிங்

உலக நிலப் பரப்பில் ஏழாவது பெரிய நாடாகவும், மக்கள் தொகையில் முதல் இடத்தில் இருக்கும் நாடாகவும் இந்தியா திகழ்கிறது. ஐந்து வருடத்திற்கு ஒரு முறை தவறாமல், நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நடைபெற்று வருகிறது. தேர்தல் நடத்துவதன் மூலம் உலக நாடுகளுக்கு, இந்தியா முன்னோடியாக இருப்பதாக, இந்திய பிரதமர் அடிக்கடி கூறி வருகிறார். ஆனால் இந்தியாவின் சனநாயகம், அண்மைக் காலங்களில் உலக அரசியல் ஆய்வாளர்களின் விமர்சனத்திற்கு உள்ளாகி வருவதையும் அவதானிக்க முடிகிறது. தேர்தல் மட்டுமே சனநாயகத்தின் அளவுகோலாகி விடாது. அது சனநாயகத்தின் ஓர் அம்சம் மட்டுமே என்பது ஆய்வாளர்களின் கூற்றாகும்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், மதச்சார்பின்மை, நீதி, சகிப்புத்தன்மை, எழுத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் என்பன சனநாயகத்தின் சிறப்பு அம்சங்களாக பார்க்கப்படுகின்றன. 28 மாநிலங்களையும், 8 யூனியன் பிரதேசங்களையும் கொண்ட இந்தியா, பன்முகத்தன்மை மிகுந்த நாடாகும். நூற்றுக்கணக்கான மொழிகள், பல்வேறுபட்ட சமூகங்கள், பல விதமான மதங்கள், நூற்றுக்கணக்கான சாதிய அமைப்புக்கள், வெவ்வேறான பண்பாட்டு கலாச்சாரங்கள் என்பவற்றை தாங்கி நிற்கும் இந்திய மக்கள், அவை அனைத்தும் பாதுகாக்கப்படும் வகையில், நடைமுறை சனநாயகம் இருக்க வேண்டும் என விரும்புகின்றனர். இதனை அனைத்து சமூகங்களும், ஒவ்வொரு குடிமக்களும் அடையும் வகையில், இந்திய அரசியல் அமைப்பும், அதன் செயல்பாடுகளும் சனநாயகமயமாக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

சமூக, பொருளாதார கட்டமைப்பில் ‘சனநாயகம் இல்லையெனில் அரசியல் சனநாயகம் வெற்றி பெறாது’ என அரசியல் மேதை அண்ணல் அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் மிகப் பெரிய சனநாயக நாடு என்று கூறப்படுகின்ற இந்தியாவில், பொருளாதார சமமின்மை, சாதி, மத பாகுபாடுகள், வறுமை, சுரண்டல் என்பன அரசியல் பாதுகாப்புடன் தலைவிரித்தாடுவது இன்று வரையிலும் நின்றபாடில்லை. நாடு முழுவதும் தேர்தலை நடத்தி வருகிறோம், என உலக அரங்கில் கைதட்டல் வாங்குவது பெரிய விடயமல்ல. அதற்கு முன்னதாக மக்களின் சமூக பொருளாதார தேவைகள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை.

இந்தியாவில் 1% பணக்காரர்களிடம் 50 வீதத்திற்கு மேற்பட்ட செல்வம் குவிந்துள்ளது. உலகில் சமத்துமற்ற சமூக, பொருளாதாரக் கட்டமைப்பு உள்ள நாடுகளில் இந்தியா முதலிடத்தில் இருக்கிறது. மறுபுறம் 80 வீதத்திற்கு மேற்பட்ட இந்திய மக்கள், இலவச அரிசி விநியோகத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். வறுமைக் கோடு குறையவில்லை. கோடிக்கணக்கான மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி அடையவில்லை. வீடற்றவர்கள், கழிப்பிட வசதி இல்லாதவர்கள், போதிய உணவு இல்லாதவர்கள், மருத்துவ வசதி இல்லாதவர்கள், கல்வி பெற முடியாதவர்கள் கோடிக் கணக்கில் இன்னும் இந்தியாவில் வாழ்ந்து வருகிறார்கள்.

## பெரும்பான்மை பெயரில் சர்வாதிகாரம்:

தனி ஒரு கட்சி, பெரும்பான்மை என்ற பெயரில் ஆட்சி புரியும் போது, அங்கே சர்வாதிகாரம் மேலோங்கி, சனநாயகம் பலவீனப் படுத்தப்பட்டுவிடும். கடந்த சில வருடங்களாக இந்தியாவில் சனநாயக அம்சங்கள் புதைக்கப்பட்டு வருகின்றன. தேசத் துரோகம், பயங்கரவாதம் என்ற பெயரில் விசாரணை இன்றி ஏராளமான புத்தி ஜீவிகள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், கைது செய்யப்பட்டு, இந்திய சிறைகளில் நீண்ட காலமாக அடைபட்டு கிடக்கின்றனர். பத்திரிகை சுதந்திர குறியீட்டில், 180 நாடுகளில் இந்தியா 161-வது இடத்தில் உள்ளது. இவை இந்திய சனநாயகம் கீழ் நோக்கிச் செல்ல வழி வகுக்கின்றன.

சனநாயகத்தின் முக்கிய கூறான நீதித்துறை சுதந்திரமாக, அரசியல் தலையீடு இன்றி இயங்க வேண்டும். ஆனால் நீதித்துறையிலும் அரசாங்கம் தலையிட்டு வருவதாக கூறப்படுகிறது. பணி ஓய்வுக்குப் பின்னர், நீதிபதிகளை அரசு பதவிகளில் நியமிக்கும் போக்கு அதிகரித்து வருகிறது. இதனால் அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டை நீதிபதிகள் எடுக்க வேண்டிய மறைமுக நிர்ப்பந்தம் அல்லது ஆசை தூண்டப்ப

டுகிறது. மேலும் சில நீதிபதிகள், ஒரு குறிப்பிட்ட கட்சி சார்ந்து, அரசியல்வாதிகளைப் போன்று கருத்துக் கூறவும் தொடங்கி உள்ளனர். சிலர் நீதிபதி பதவியைத் துறந்து தேர்தலில் போட்டியிடவும் முன்வந்துள்ளனர். மிக அண்மையில் அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர், இஸ்லாமிய சமூகத்திற்கு எதிராக தெரிவித்த கருத்து பலராலும் கண்டிக்கப்பட்டது. சனநாயக விழுமியங்களைப் பாதுகாக்க வேண்டிய நீதித்துறை பாரபட்சமாக செயல்படுவது சனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையைச் சிதைத்து விடும்.

### நாடாளுமன்ற சனநாயகம்:

சனநாயகத்தின் கோயில் 'நாடாளுமன்றம்' என அழைக்கப்படுகிறது. இந்திய ஆட்சியாளர்களும் அதனை அடிக்கடி கூறி வருகின்றனர். ஆனால் அது வெறும் வார்த்தையாக மட்டுமே இருந்து வருவதைக் காண முடிகிறது. ஆட்சியாளர்கள் தேர்தலில் குறைந்தளவு வாக்கு விகிதத்தை பெற்றபோதும், தங்களிடம் உள்ள ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி, சனநாயகத்திற்கு உட்படாத, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். பிரதி சபாநாயகராக நியமனம் பெறும் சனநாயக வாய்ப்பு, எதிர் கட்சிகளுக்கு மறுக்கப்பட்டு வருகிறது. நாடாளுமன்ற நிலைக்குழு நியமனங்களிலும் பாரபட்சம் காட்டப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகள் பேசுவதற்கான வாய்ப்பு குறைக்கப்படுகிறது. முக்கியமான மசோதாக்கள் விவாதம் இன்றி நிறைவேற்றப்படுகின்றன. தனிநபர் மசோதா அனுமதிக்கப்படுவது பெருமளவு குறைந்து வருகிறது. கூச்சல் குழப்பங்களால் நாடாளுமன்றம் தொடர்ச்சியாக நடைபெறுவது தடைப்படுகிறது. ஆரோக்கியமான விவாதங்களைக் கேட்பது அரிதாகவே இருக்கிறது. மசோதாக்களின் குறை நிறைகளைப் பற்றி பேசுவதை விட, கடந்த காலக் குற்றம் குறைகளைப் பற்றிய உரையாடல்களே நாடாளுமன்றத்தில் அதிகம் இடம் பெற்று வருகின்றன.

'மினி நாடாளுமன்றம்' என அழைக்கப்படும் நிலைக்குழுக்களுக்கு மசோதாக்கள் அனுப்பப்படுவது பெருமளவு குறைந்து வருகிறது. மிகவும் ஆழமாகப் பல்வேறு கோணங்களில் மசோதாக்களை ஆய்வு மேற்கொள்ளும் இடம் நிலைக்குழுவாகும். இன்றைய ஆட்சியாளர்கள் அவை எதையும் கவனத்தில் கொள்வது இல்லை. விவாதம் இன்றி மசோதாக்களை நிறைவேற்றுவதும், குறைந்த கால இடைவெளியில் அதிக அளவில் மசோதாக்களை நிறைவேற்றுவதும் இந்திய நாடாளுமன்றத்தில் காணக் கூடியதாக இருக்கிறது. இவை சனநாயகத்திற்கு மிகப் பெரிய ஆபத்தாகும். 2002 முதல் 2009 வரை 60% மசோதாக்கள் நிலைக்குழுக்களுக்கு அனுப்பப்பட்ட நிலையில், 2019-ஆம் ஆண்டு பாஜக ஆட்சியில் 12% மசோதாக்களே அனுப்பப்பட்டுள்ளன. இது நாடாளுமன்ற சனநாயகத்தை பலவீனப்படுத்தும் செயலாகும்.

## இந்திய தேர்தல் முறை:

ஒரு மாதத்திற்கு மேலாக, பல கட்டங்களாக நடைபெறும் இந்திய தேர்தலில், 90 கோடிக்கும் மேற்பட்டவர்கள் வாக்களிப்பதை, உலக நாடுகள் பிரமிப்புடன் இன்று பார்த்து வருகின்றன. இந்திய தேர்தல் நடைபெறும் நாட்களை, மிகப் பெரிய சனநாயக திருவிழா என இந்திய ஆட்சியாளர்கள், தமக்குத் தாமே புகழாரம் சூட்டிக்கொள்கின்றனர். ஆனால் இங்கு தேர்தல் நடைபெறும் முறையையும், முடிவுகளையும் மிகவும் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், அவற்றில் உண்மையான சனநாயக அம்சங்கள் சிதையுண்டு போயிருப்பதைக் காணலாம்.

சுதந்திரம் பெற்றது முதல், கடந்த 76 வருடங்களாக, பிரித்தானிய தேர்தல் முறையையே இந்தியா பின்பற்றி வருகிறது. இதனடிப்படையில், 543 தேர்தல் தொகுதிகளைக் கொண்ட இந்தியாவில், ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் பங்கு கொள்ளும் போட்டியாளர்களில் அதிக வாக்குகள் பெறுபவர் தேர்ந்தெடுக்கப்படுவார் எனத் தேர்தல் விதி கூறுகிறது. இதன்படி, ஒரு வேட்பாளர், செலுத்தப்பட்ட வாக்குகளில் 50 வீதத்திற்கு மேல் பெற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. போட்டியாளர்களில் ஒருவர், ஒரே ஒரு வாக்கு அதிகம் பெற்றால், அவரே வெற்றி பெற்றவராவார். இதனால் வெற்றி பெறும் வேட்பாளர் 10 - 12% வாக்குகள் பெற்றால் கூட போதும் என்ற சூழ் நிலை உள்ளது. அவருக்கு எதிராக அதிக அளவில் வாக்களிப்பு இருந்த போதும், அவரே தேர்ந்தெடுக்கப்படுகின்ற 'சனநாயக விரோத நிலை' உருவாகி விடுகிறது. இதன் மூலம் மக்களுக்கான உண்மையான பிரதிநிதித்துவம் இல்லாமல் போய் விடுகிறது. இத்தகைய தேர்தல் முறையே இந்தியாவில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அனைத்து மக்களுக்குமான முழுமையான பிரதிநிதித்துவம் கிடைத்தால் மட்டுமே உண்மையான சனநாயகத்தை இந்தியாவில் காண முடியும்.

இதுவரை இந்தியாவில் பதவிக்கு வந்த எந்த ஒரு கட்சியும் 50 வீதத்திற்கு மேல் மக்கள் ஆதரவைப் பெற்றதில்லை. 2019-ம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 50%-க்கும் குறைவாக, 37.36% வாக்குகளைப் பெற்று ஆட்சி அமைத்த பாஜக, 2024-ம் ஆண்டு தேர்தலிலும், 36.56% வாக்குகளைப் பெற்று ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ளது. இவ்வாறு பெரும்பான்மை மக்களின் விருப்பம் அல்லது பிரதிநிதித்துவம் பின்னுக்கு தள்ளப்பட்டு, குறைவானவர்களின் சம்மதத்துடன் ஆட்சி அமைவது என்பது சனநாயகத்திற்கு விரோதமான செயற்பாடாகும். இலங்கை, அமெரிக்கா போன்ற சனநாயக நாடுகளில் 50 வீதத்திற்கு அதிகமான வாக்குகளைப் பெற்றவரே, நாட்டின் உச்ச அதிகாரம் உடையவராகக் கணிக்கப்படுகிறார். ஆனால் இந்தியாவில், தேர்தல் தொகுதி சனநாயகத்தில், 50 வீதத்திற்கும் குறைவான வாக்குகளைப் பெற்ற கட்சியின் தலைவர் ஒருவர், பிரதமராக தேர்ந்தெடுக்கப்படும் முறை இருந்து வருகிறது.

இன்றைய தேர்தல் முறையில் அனைத்து மக்களுக்குமான பிரதிநிதித்துவம் கிடைக்கப் பெறவில்லை என்றே கூற வேண்டும். அதாவது மக்கள் தொகைக்கு ஏற்பவும், வாக்களித்த விகிதாச்சாரத்திற்கு ஏற்ற அளவிலும் பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை. விகிதாச்சார தேர்தல் முறைமை, இந்தியத் தேர்தல் முறையில் இல்லாமை, இந்திய சனநாயகத்தில் வெளிப்படையாக காணப்படும் மிகப் பெரிய குறைபாடாகும். கடந்த காலங்களில் நடைபெற்ற நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல் முடிவுகளை கூர்ந்து கவனித்தால், சனநாயகத்திற்கு

மாறான, மக்களாட்சி தத்துவத்திற்கு எதிரான தேர்தல் முடிவு களைக் காணலாம்.

2019-ம் ஆண்டு இந்திய நாடாளுமன்ற தேர்தலில், 37.36% வாக்குகளைப் பெற்ற பாஜக, 303 ஆசனங்களைப் பெற, 19.49% வாக்குகளைப் பெற்ற தேசிய காங்கிரஸ் 52 இடங் களை மட்டுமே பெற முடிந்தது. விகிதாசார தேர்தல் முறை இருந்திருப்பின் அகில இந்திய தேசிய காங்கிரஸ், 110-க்கு மேற்பட்ட ஆசனங்களைப் பெற்றிருக்கும். 2024 தேர்தலிலும் இதே நிலையே காணப்பட்டது. 36.56% வாக்குகளைப் பெற்ற பாஜக 240 ஆசனங்களைப் பெற, இந்திய தேசிய காங்கிரஸ் 21.19% வாக்குகளுக்கு 99 ஆசனங்களை மட்டுமே பெற முடிந்துள்ளது.

இதேபோன்று வரலாற்று சிறப்புமிக்க 1967-ஆம் ஆண்டு, தமி ழக சட்டமன்ற தேர்தலில் 40.69 வீதத்துடன் 62,30,556 வாக்கு களைப் பெற்ற தி.மு.க. 137 இடங்களைப் பெற, 41.10 வீதத்து டன் 62,93,378 வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ் ஆட்சியை இழந்த, சனநாயக முரண்பாட்டைக் காணலாம். மேலும் கடந்த 2021-ம் ஆண்டு தமிழக சட்டமன்ற தேர்தலில் 37.70 வீத வாக்குகளைப் பெற்ற திமுக 133 உறுப்பினர்களைப் பெற, 33.29 வீத வாக்குகளைப் பெற்ற அதிமுக 66 இடங்க ளைப் பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இவ்வாறு அனைத்து இந்திய தேர்தல்களிலும் கட்சிகள் பெறும் வாக்குகளுக்கு நிக ரான பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை என்ற குறைபாடு நீடித்து வருகிறது.

ஏனைய சிறு கட்சிகள் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு இலட்சக்கணக்கான வாக்குகளைப் பெற்ற போதும், எந்த விதமான பிரதிநிதித்துவத்தையும் பெற முடியாத அவல நிலை இந்திய சனநாயகத்தில் வேரூன்றி காணப்படுகிறது. கடந்த 2024-ம் ஆண்டு தேர்தலில் 131000 வாக்குகளைப் பெற்ற பகுஜன் சமாஜ் கட்சி, 94 லட்சம் வாக்குகளைப் பெற்ற பிஜு ஜனதா தளம், 89 லட்சம் வாக்குகளைப் பெற்ற அதிமுக போன்ற கட்சிகளுக்கு ஒரு பிரதிநிதி கூட கிடைக்கவில்லை. அதே நேரம் ஒரு கோடி 17 லட்சம் வாக்குகளைப் பெற்ற திமுக 22 நாடாளுமன்ற பிரதிநிதிகளைப் பெற்றுள்ளது. மேலும் 35 கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டு லட்சக்கணக் கான வாக்குகளைப் பெற்ற போதும், அவைகளால் ஒரு பிரதி நிதியைக் கூட பெற முடியவில்லை.

இதுபோன்ற பிரதிநிதித்துவம் மறுக்கப் படுகின்ற தேர்தல் முறை என்பது உண்மையான சனநாயகத்தின் மீதான தாக்கு தல் ஆகும். வெறும் போலியான சனநாயகத்தின் வெளிப்பா டாகவே இது பார்க்கப்படுகிறது. இவ்வாறு குறைந்த வீதாச் சார வாக்குகளைப் பெற்ற கட்சியின் ஆட்சி, இந்தியாவில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதனால் ஒரு கட்சியின் கொள்கை கோட்பாடுகள், பெரும்பான்மை மக்களின் விருப் பத்திற்கு மாறாக திணிக்கப்படும் நிலை உருவாகிறது. மிக வும் முக்கியமான சட்ட அமலாக்கத்தின் போது, மக்களி டையே பொது வாக்கெடுப்பு நடத்துவது என்ற ஒரு சனநாயக அம்சம், இந்திய அரசியல் அமைப்பில் இல்லாததால், தனி ஒரு கட்சி எடுக்கும் முடிவுகளால் சனநாயகம் வலுவிழந்து வருகிறது.

கட்சிகள் மற்றும் குழுக்கள் பெறும் வாக்கு விகிதாச்சாரத் திற்கு அமைய நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெறுவதே உண்மையான மக்கள் சனநாயகமாக இருக்க முடியும். அதில் அனைத்து சமூகங்களும் பாரபட்சம் இன்றி பிரதிநிதிக ளைப் பெற முடியும். பன்முகத்தன்மை கொண்ட இந்திய தேசத்தில் உண்மையான மக்கள் சனநாயகம் நிலைபெற, விகிதாசார தேர்தல் முறை மிகவும் அவசியமான ஒன்றாகும். இலங்கையில் 1978-ம் ஆண்டு முதல் விகிதாசார தேர்தல்மு றையின் கீழ் தேர்தல் நடத்தப்பட்டு, அனைத்து சமூகங்களுக் குமான பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட்டு வருவது சிறந்த சனநாயக நடைமுறையாகும். அண்மையில் இலங்கை யில் நடந்து முடிந்த தேர்தலில் 0.16 வீத வாக்குகளைப் பெற்ற தொழிலாளர் கட்சி, விகிதாசார தேர்தல் முறையின் காரணமாக வாக்களித்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத் தும் வகையில், ஒரு ஆசனத்தை பெற முடிந்தமை மக்கள் சனநாயகத்தின் சிறப்பு அம்சமாகப் பார்க்கப்படுகிறது. இதே போன்று இலங்கையில் பரவலாக வாழும் மலையக மக்கள், விகிதாசார தேர்தல் முறையின் காரணமாக அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் 9 ஆசனங்களைப் பெற முடிந் தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மறுக்கப்பட்ட பிரதிநிதித்துவம்:

இந்தியாவில் இலட்சக்கணக்கான வாக்குகளைப் பெற்ற கட்சி மட்டுமல்லாமல், காழ்ப்புணர்ச்சி காரணமாக குறிப்பிட்ட சில சமூகங்கள் மட்டுமே பிரதிநிதித்துவம் பெறுவதும் ஏனைய சமூகத்தினர் உரிமைகள் மறுக்கப்பட்டு ஓரங்கட்டப்படும் நிலையே காணப்படுகிறது. உத்தரப்பிரதேச தேர்தலில், அம் மாநில மக்கள் தொகையில் 20 வீத இஸ்லாமியர்கள் இருந்த போதும், பாஜக கட்சியில் இருந்து ஒரு இஸ்லாமியர் கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை. அது மட்டுமல்ல தேசிய அள வில் 15 வீத இஸ்லாமியர்கள் இருந்தும், பாஜக சார்பில் ஒரு வர் கூட தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தால், அமைச்சரவை யிலும் இஸ்லாமிய பிரதிநிதிகள் இடம் பெறவில்லை. மறுபு றம் ஏனைய கட்சிகளில் இருந்து, மக்கள் தொகைக்கு மாறாக 5 வீதத்திற்கும் குறைவான இஸ்லாமிய பிரதிநிதிகளே தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான தேர்தல் முறையால் இன்னும் பல சமூகங்கள் பிரதிநிதித்துவம் இல்லாது இருக் கின்ற போக்கு இந்திய சனநாயகத்தில் காணப்படுகிறது. இது மக்களாட்சி என்ற கோட்பாட்டிற்கு எதிரானதாகும்.

தற்போதைய இந்திய தேர்தல் முறையில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் குறிப்பிடும்படியாக இல்லை. மக்கள் தொகையில் 50 வீதமாக பெண்கள் இருக்கும் நிலையில், அவர்களுக்கான உறுப்பினர்கள் 10 வீதத்திற்கும் குறைவா கவே நாடாளுமன்றத்தில் இருக்கின்றனர். கடந்த முறை நாடா ளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீடு மசோதா, அமுலாக்குவதற்கான எந்தவிதமான நடவடிக்கையும் இன்றைய அரசால் எடுக்கப்படவில்லை. இந் திய சனநாயகத்தில் ஆண்கள் மட்டுமே பங்குதாரர்களாக வும், பெண்கள் புறக்கணிக்கப்பட்டவர்களாகவும் காணப்படு கின்றனர்.

இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், தொழில்நுட்ப

புரட்சியில், சமுதாய முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கும் இளைஞர்கள், சனநாயக கட்டமைப்பில் ஓரங்கட்டப்பட்டு வரும் போக்கை, இந்திய சனநாயகத்தில் காணமுடிகிறது. இந்திய நாடாளுமன்றத்தில் 40 வயதுக்கு உட்பட்டவர்களாக, 10 வீதத்தினர் மட்டுமே இருப்பதாக கூறப்படுகிறது. வயதானவர்களின் கட்டுப்பாட்டில் இந்திய சனநாயகம் சிக்குண்டு நலிவடைந்து வருவதைக் காண முடிகிறது. இது இந்தியாவின் வருங்காலத்தையும், வளர்ச்சியையும் பாதிக்கும் அபாயம் உண்டு. இந்தியாவில் 28 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் எண்ணிக்கை 65 கோடி எனப் புள்ளி விவரம் தெரிவிக்கிறது. அவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு அதிகம். ஆனால் அரசியல் அமைப்புக்களில் அவர்களுக்கான இடம் மிகவும் குறைவு. தேர்தலில் போட்டியிடுவதற்கான அதிக பட்ச வயது வரம்பை கொண்டு வருவதன் ஊடாக, இளைஞர்கள் அரசியலில் உள்வாங்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும். இது இந்திய சனநாயகத்தையும், நாட்டையும் ஆரோக்கியமான பாதைக்கு அழைத்துச் செல்லும் என கூறப்படுகிறது.

## தேர்தல் முறைகேடுகள்:

சுதந்திரமான, நியாயமான, வெளிப்படையான தேர்தல் என்பது மக்களாட்சி முறையில் முக்கியமான அம்சமாகும். ஆனால் தேர்தல் நடைமுறையில் பல்வேறு குறைபாடுகள், பலவீனங்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். குறிப்பாக தேர்தல் நடத்துகின்ற தேர்தல் ஆணையத்தின் உறுப்பினர்களை, பிரதமர் உள்ளடக்கிய அமைச்சர்கள், தங்களுக்கு சாதகமானவர்களை நியமிக்கும் நிலைமை இருப்பதால், தேர்தல் நடைபெறும் திகதி நிர்ணயிப்பது முதற்கொண்டு, அனைத்து விடயங்களிலும் ஆளும் கட்சிக்கு சாதகமான நிலைப்பாட்டை தேர்தல் ஆணையம் எடுப்பதாகவும் கூறப்படுகிறது. ஒரு தேர்தல் ஆணையம் நடுநிலையாக, நேர்மையாக நடந்து கொண்டால் மட்டுமே சனநாயக விழுமியங்கள் காப்பாற்றப்படும்.

தொழில் நுட்பத்தில் மிகப் பெரும் வளர்ச்சியை எட்டியுள்ள பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனி போன்ற நாடுகளில் இன்று வரையும் வாக்குச் சீட்டு முறையே தேர்தலில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இந்தியா EVM எனப்படும் மின்னணு வாக்கு இயந்திரங்களை பயன்படுத்தி வருகிறது. தொழில் நுட்ப வழிமுறைகளைப் பயன்படுத்தி, ஆளும் கட்சிக்கு சாதகமாக மின்னணு வாக்கு யந்திரம், தவறாக பயன்படுத்தப்படுவதாக எதிர் கட்சிகள் குறை கூறி வருகின்றன. அத்துடன் மின்னணு வாக்குகளுடன் ஒப்பிட்டு பார்க்கக் கூடிய VVPAT எனப்படும் ஒப்புகைச் சீட்டு முறையை, 5 வீதம் மட்டுமே பயன்படுத்த முடியும் என தேர்தல் ஆணையம் கூறுவது ஏற்கத்தக்கது அல்ல என அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். செலுத்தப்பட்ட அனைத்து வாக்குகளையும், ஒப்புகைச் சீட்டு யந்திரத்தில் பதிவான வாக்குகளுடன் ஒப்பிட்டு பார்ப்பதே நேர்மையான சனநாயக தேர்தல் எனக் கூறப்படுகிறது. ஆனால் நடைமுறையில் தேர்தல் ஆணையம் அதற்கு மறுப்பு தெரிவித்து வருவது சனநாயகத்திற்கு விரோதமானது எனக் கூறப்படுகிறது.

சனநாயக நாட்டில் எதிர்க்கட்சிகளின் பங்கு மிகவும் முக்கியமான ஒன்று. அரசாங்கம் தடம்புரண்டு போகாமல், மக்கள் நலனையும், சனநாயக அம்சங்களையும் பாதுகாக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு எதிர் கட்சிகளுக்கு உண்டு. எதிர் கட்சிகள் சுதந்திரமாக செயல்பட, அரசியல் சூழ்நிலை உகந்ததாக இருப்பது மிகவும் அவசியம். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை கடந்த சில வருடங்களாக எதிர்கட்சிகள் பெரும் நெருக்கடியை எதிர் கொண்டு வருகின்றன. மத்தியில் ஆளும் கட்சி, தேர்தல் நெருங்கும் நேரங்களில் எதிர்கட்சிகளைப் பிளவுபடுத்துவது, கட்சி மாற வற்புறுத்துவது, பொய் வழக்கு போடுவது, கைது செய்வது போன்ற சனநாயக விரோதச் செயற்பாடுகள் அதிகரித்து வருகிறது.

மேலும் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வருமான வரித்துறை, புலனாய்வுத்துறை போன்றவற்றைக் கொண்டு எதிர்கட்சி உறுப்பினர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எதிர்கட்சிகளை, எதிர்கட்சி உறுப்பினர்களை, விலைக்கு வாங்க அல்லது பலவீனப்படுத்த பெருமளவு பணமும் செலவிடப்பட்டு வருகிறது. இதுபோன்ற சனநாயக விரோத செயல்களில் ஈடுபடுவது அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகிறது. இவை அரசியல் அமைப்பின் அடித்தளத்தையும், சனநாயக பெருமைகளையும் சிதைத்து விடும் என ஆய்வாளர்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

அண்மைக் காலங்களில் ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ முறை இந்தியாவில் கொண்டு வரப்பட வேண்டும் என, ஆளும் பாஜக தீவிர முயற்சி செய்து வருகிறது. இது இந்திய சனநாயக அரசியல் அமைப்பை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, செயல் பாட்டில் உள்ள சனநாயகத்தை சீர்குலைக்கும் செயலாகும். இது கூட்டாட்சி தத்துவத்திற்கும், மாநில மக்களின் சனநாயக உரிமைக்கும் எதிரான செயற்பாடாகும். பல்வேறு பிரதேசங்களில், பல்வேறு சமூகங்களாக, வாழ்ந்துவரும் மக்களின் அடிப்படை சனநாயக உரிமைகளை இது பலவீனப்படுத்தும் என அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். இது இந்திய சனநாயகத்தின் அடிப்படை அம்சமாக விளங்கும் கூட்டாட்சி தத்துவத்தைப் பலவீனப்படுத்தி விடும். ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ என்பது, ஒரு கட்சி ஆட்சியை நோக்கி நாட்டை கொண்டு செல்லும் முன் முயற்சி என்றே கூறப்படுகிறது.

142 கோடி மக்கள் வாழும் இந்திய நாட்டில், காணப்படும் பல்வேறு பெருமைகளுள், சனநாயக அம்சங்கள், முதன்மையானதாகப் பார்க்கப்படுகின்றன. இவற்றை உலக நாடுகள் வியந்து பார்த்து வந்தன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் கடந்த சில வருடங்களாக ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் செயற்பாடுகள், இந்திய சனநாயகத்தைப் பலவீனப்படுத்தும் வகையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்துத்துவா கொள்கைகளை மட்டுமே முன்னிறுத்தி, நாட்டு மக்களை மதரீதியாக பாகுபடுத்தி செயல்படும்போது, சனநாயக அம்சங்கள் சிதைந்து விடுகின்றன. நல்லாட்சி நடந்து மக்கள் நல்வாழ்வு பெற, தேர்தல் ஒன்று மட்டும் போதாது. அனைத்து செயல்பாடுகளிலும் சனநாயக அம்சங்கள் இடம்பெற வேண்டும்.



jeyasingh@thaiveedu.com

# 21-ஆம் நூற்றாண்டின் ஆசிரியர்

– அகமட் பிஸ்தாமி

முன்னெப்போதும் இல்லாத அளவு பாடசாலைகள் மீதிலும் அது சார்ந்த நிறுவனங்கள் மீதிலும் கல்வித் துறையினர் மீதிலும் பொதுமக்களதும் சட்டத்தினதும் அவதானம் முனைப்பாக்கப்பட்டுள்ளது. கல்விச் சட்டங்கள், சிறுவர் உரிமைகள், மனித உரிமைகள் தொடர்பிலான தன்னார்வலர்களும் இது விடயத்தில் கவனம் செலுத்தி வருகின்றனர். கற்பிப்பது மிகுந்த சிரமம் என்ற அளவுக்கு அது அரசோடும் அமைப்புகளோடு நிறுவனங்களோடும் சட்டத்தோடும் தொடர்புபட்டிருக்கின்றது. கழுகு பார்வையுடன் கூர்ந்து அவதானிக்கின்ற வகையில் வெகுசன ஊடகங்களும் சமூக ஊடகங்களும் களத்தில் குதித்து இருக்கின்றன.

ஊடக மாநாடுகளும் அச்சு ஊடகங்களும் சமூக ஊடகங்களும் தமது பிரபல்யத்திற்கு தீனி போட்டுக் கொள்வதற்காக இது விடயத்தில் அலைந்து திரிவதையும் புறக்கணிக்க முடியாது

அதே நேரம், தேசத்தின் தலைவிதி பாடசாலைகளில் தீர்மானிக்கப்படுவதாக சொல்லப்படுகிறது. அதனையும் தாண்டி வகுப்பறையின் தலை விதியை தீர்மானிக்க கூடியவர்களாக ஆசிரியர்கள் மாறிவிட்டனர். ஆசிரியர்கள் இன்றி வகுப்பறையின் தலைவிதி தலைகீழாகத்தான் எழுதப்படும். ஆசிரியர்களை புறக்கணித்துவிட்டு அடுத்த தலைமுறையை உருவாக்க வேண்டும் என்று நாங்கள் ஆகாய கோட்டை கட்ட முடியாது. ஆசிரியர்களுக்குரிய அத்துணை கண்ணியமும் மதிப்பும் கொடுக்கப்படுகின்ற பொழுது அவர்களுடனான நெருக்கமான சுமுகமான உறவு மேம்பட்டிருக்கும் வரை சமூகத்தின் தலைவிதி உச்சந்தொடும் கொடிகட்டிப் பறக்கும்.

சிறந்த தலைமுறை, ஒளிமயமான எதிர்காலம், நட்பிரஜைகள் போன்றன வெறும் கோஷங்களாக ஆகாய கோட்டைகளாக மாத்திரம் இருந்துவிடக் கூடாது. பரீட்சையை மாத்திரம் மையப்படுத்திய சூழலில் இவை கோஷங்களாக இருக்கும் ஆனால் கல்வித்திட்டங்கள் அவற்றின் அடைவுகள் மனித வாழ்வுக்கு பொருந்தக் கூடியதாக, பயன் தரக்கூடியதாக பரிவர்த்தனை செய்யப்பட்டால் மாத்திரமே இவற்றை அடைய முடியும். அனுபவிக்க முடியும். கல்விக் கொள்கைகளில் அடைய வேண்டும் என எழுதப்படக்கூடிய அடைவுகளை கோசமாக, காட்சி பொருளாக ஆகாயக் கோட்டைகளாக கட்டி வைப்பதை விடவும், அவற்றை ஆகாயத்திலிருந்து தரையிறக்கி விடக்கூடிய படிக்கட்டுகளைப் படிப்படியாக நிர்மாணிக்க வேண்டிய கடப்பாடு சமூகத்திற்கு இருக்கின்றது.

இது கல்வி சார்ந்த பணி என்பதற்கு அப்பால் உலகமே வேண்டி நிற்கின்ற அறப்பணியாக இருக்கின்றது. முழு உலகமும் இத்தகைய உன்னத ஆசிரியர்களின் பால் தேவையுடையதாக உள்ளது. வீட்டுச் சூழலை விடவும் பாடசாலைச் சூழலில் ஆசிரியர்களே அடுத்த தலைமுறை உருவாக்கத்தின் பிரதான பங்காளிகள். இதனால் தான் இவர்களை சட்டரீதியாக loco parents இடம் சார் பெற்றோர்கள் என சிறப்பாக அழைக்கின்றோம் முன்னைய நூற்றாண்டுகளை விட, அல்லது கடந்த கால கல்வி வரலாறுகளில் கண்டதை விட, இப்பொழுது களம் வெகுவாக மாறி இருக்கின்றது. கற்றல் கற்பித்தலும் தான், அவற்றை பெற்றுக் கொள்ளக்கூடிய மாணவ பரம்பரையும் தான், அவர்களது பெற்றோரும் தான். கலைத்திட்டம் கல்வி முறைமை, பரீட்சை முறைமை இவை எல்லாவற்றோடும் நேரடியாக தொடர்பு படக்கூடிய மாணவர்களும் மாணவர்களது பணிகளும் பாணிகளும் பார்வைகளும் பதிவுகளும் அவர்களது ஆர்வங்கள் விருப்புகளும் எதிர்பார்ப்புகளும் துடிப்புகளும் அனைத்துமே மாறி உள்ளன.

மாணவர்களை மாற்றங்களுக்கு ஏற்றாற்போல் தகவமைத்து தக்க வைப்பவர்களால் மாத்திரமே இந்த புதிய தலைமுறையை எதிர்கொள்ள முடியும். வழிகாட்ட முடியும். நெறிப்படுத்த முடியும். நெருங்க முடியும். அனைத்தையும்விட அவர்களை நேசிப்பது, புரிந்து கொள்வது, இந்த நூற்றாண்டில் ஆசிரியர்களின் அடிப்படை தகைமையாக இருக்க வேண்டும் அவர்கள் பயன்படுத்துகின்ற திறன் பேசிகள் போலவே அவர்களது சிந்தனைகளும் முன்னெப்போதும் இல்லாத அளவு innovative and creative-ஆக மாறி உள்ளன. Smart நிலையில் உள்ளன. கடந்த கால அனுபவங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு கடந்த கால முறைமைகளுக்கூடாக அவர்களை அணுகவோ கற்பிக்கவோ முடியாது. அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வையும் வழங்க முடியாது. இவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் அதன் மூலங்களும் புத்தம் புதியது. அவற்றுக்கான தீர்வுகள் அத்தன்மை பெற்றதாக இருக்க வேண்டும். காலம் கடந்த தீர்வுகளாக அவை இருக்க முடியாது.

நிலைமாற்று வகிபாகம் (Transformation role) ஒன்றுக் கூடா



கவே அவர்களை தரமான முன்மாதிரிகளாக, சிறந்த நட்பிர ஜைகளாக மாற்ற வேண்டிய கடப்பாடு கொண்டவர்களாக ஆசிரியர்கள் மாறி உள்ளனர். A teacher affects eternity. no one can say where his influence stops. சமூகத்தின் ஒட்டு மொத்த தலைவிதியையும் தலைகீழாகப் புரட்டி ஒரு வித மான திருப்புமுனையை புரட்சியை ஏற்படுத்தக்கூடிய ஆற் றலை பெற்றவர்கள் ஆசிரியர்கள். மாணவர்களை நேரடியாக அணுகி வழிப்படுத்தி நெறிப்படுத்தி அவர்களை மிகச்சிறந்த வர்களாக நிலை மாற்றம் செய்யக்கூடிய தன்மையைப் பெற்ற வர்கள் ஆசிரியர்கள். அதே நேரம் இதனை வெறுமனே கட மையாக மாத்திரம் செய்யாமல் பொறுப்புணர்வோடும் வகி பாக உணர்வோடும் செய்ய வேண்டியவர்களும் ஆசிரியர்கள் தான். ஆசிரியர்கள் நினைத்தால் அடுத்த தலைமுறை மிகச் சிறந்த நிர்மாணிகளாக உருவாக்கவும் முடியும். தேசத்தின் விருத்திக்கு மாத்திரமன்றி அகிலத்தின் அனைத்து விதமான விருத்திக்கும் அர்த்தபூர்வமாக பங்காற்றக்கூடிய பங்காளிக ளாக அவர்களை மாற்ற முடியும்

இன்றைய நவநாகரிக உலகில் மனித வாழ்க்கைக் கோலம் முன்னரை விடவும் தலைகீழாக மாறி உள்ளது. கடந்த காலங் களில் இயல்பாக மரபாக இருந்த விடயங்களை எல்லாம் இப் பொழுது கலைத்திட்டத்தின் வழியாக, சட்டத்தின் வழியாக, பாடத்திட்டங்களின் வழியாக, கொள்கை கோட்பாடுகளாக உருவாகி அதனூடாக முன்னெடுத்துச் செல்ல வேண்டிய நிலைமைக்கு உலகம் மாறி உள்ளது. அடுத்தவர்களைப் புரிந்து கொள்வது, கூட்டாக வாழ்வது, விட்டுக் கொடுப்பது, மன்னிப்பது, உரிமைகளைப் புரிந்து கொள்வது, கலாச்சாரங் களை மதிப்பது, பிறரது தேவைகளை உணர்ந்து உதவி யொத்தாசை புரிவது போன்றன என்றளவு பாடத்திட்டங்களின் வழியாக கற்பித்து நடைமுறைப்படுத்த வேண்டியதாக மாறி உள்ளன

வகுப்பறைகளுக்கு அல்லது பாடங்களுக்கு பொறுப்புச் சாட் டப்படக்கூடிய ஆசிரியர்களின் பொறுப்பு மகத்தானது. வர லாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரங்களைக் கொண் டது. ஆசிரியர்கள்தான் தலைமுறை உருவாக்கத்தின் பிதாம கன்கள் என்று சொன்னாலும் பிழையாகாது. அந்த அளவு அடுத்த தலைமுறை பொறுப்புணர்வோடு ஆளுமை உரு வாக்கத்துடன் கூடிய வகையில் முழு நிறைவான மனிதர்க ளாக, சிந்திக்கக் கூடியவர்களாக உருவாக்கும் பணியைத் தான் ஆசிரியர்கள் செய்து வருகின்றனர். சமுதாய உணர் வோடு நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்ய வேண் டிய கடப்பாட்டோடு, உயர்ந்த உன்னத விழுமியங்களை எல் லாம் சுமந்தவர்களாகத்தான் ஆசிரியர்கள் மாணவர்களை உருவாக்க வேண்டி இருக்கின்றனர்

பொருளாதாரத்தை மாத்திரம் நோக்காக கொண்டு மனிதரை மனிதர் விழுங்கி ஏப்பம் விடக்கூடிய மிருகத்தனமான உணர்வு நிலையில் இருந்து அவர்களை விடுவித்து, பண்பா டுகளை ஒழுக்க விழுமியங்களை மதிக்க கூடிய உணர்வு கொண்ட விழுமியங்களையும் பேணிக்கொள்ளக்கூடிய மனி தர்களை உருவாக்க வேண்டிய தேவையும் இன்று பரவலாக எழுந்திருக்கின்றது. மாணவர்கள் வீட்டுச் சூழலில் இழந்து போயிருக்கின்ற ஆத்ம சுகத்தை, ஆனந்தத்தை, குதூக லத்தை பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவையும் ஆசிரியர்க ளுக்கே உண்டு.

மனிதம், மானுடம், தேசம் காக்கக்கூடிய உணர்வை ஆழ்மன தில் பதிக்க வேண்டிய தேவையும் ஆசிரியர்களுக்கு முன் னால் குவிந்து கிடக்கின்றது. இவை எல்லாவற்றையும் தாண்டி குழந்தைகளின் மனதை, அவர்களின் உலகத்தில் இருந்து புரிந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய உள்ளத்தை புரிந்து கொண்டு அவர்களுக்கு ஏற்றாற் போல கற்றல் கற்பித் தல் செயல்பாடுகளை செய்து கொள்ள வேண்டும். புரிந்து ணர்வின் ஊடாக அவர்களுக்கு கற்றுக் கொள்ளப்படுகின்ற பொழுது மாத்திரமே அவர்கள் ஆசையோடு ஆர்வத்தோடு கற்றலில் ஈடுபடுவார்கள். அத்தகைய ஆசிரியர்களே இன் றைய இருபத்தியோராம் நூற்றாண்டில் ஆழமான தாக்கம் விளைவிக்க கூடிய தன்மை கொண்டவர்களாக கருதப்படு வர்.

இவர்கள் அல்லாதவர்கள் எத்தகைய காகித திறமைகளை, தகைமைகளை கொண்டிருந்தாலும் மேற்படி விடயங்களை உள்ளடக்கப்படாத கற்பித்தல்கள் உப்புச்சப்பற்ற செயற்பா டுகளாக, அலுவலக கடமைகளாக மாத்திரமே கருதப்பட வேண்டும். மனித மனங்களை புரிந்து கொள்ளாமல், மானசீக உணர்வுகளை வெளிப்படுத்த முடியாத பரம்பரையை உரு வாக்கி என்ன தான் பயன்! ஆனால், துரதிஷ்டவசமாக இன் றைய பரீட்சை மைய உலகு மாணவர்களது புள்ளிகளை மையப்படுத்தி சந்தைப்படுத்த முனைகின்றது கசப்பான உண்மையாக, கவலைக்கிடமான யதார்த்த மாக உள்ளது.



bisthamy.ahamed@thaiveedu.com



# தொடர்ந்து பொய்சொல்லும் பிள்ளைகள்

– த. சிவபாலு

பொய் சொல்வது பற்றி பல்வேறு மருத்துவர்களும் உளவியலாளர்களும் ஆய்வுகள் செய்துள்ளனர். குழந்தைகள் பொய் சொல்லுவதற்குப் பல்வேறு காரணிகள் உள்ளன. பெற்றோரும் மிக இறுக்கமாக இருப்பதும் பொய் சொல்வதற்குக் காரணிகளாகின்றன. குழந்தைகள் ஏன் பொய் சொல்கின்றார்கள் என்பதை அறிந்துகொள்ளுதல் மிக முக்கியமானது. களையை முளையிலே கிள்ளவேண்டும் என்பார்கள். பிள்ளை பொய் சொல்கின்றது என்றால் அக்குழந்தைக்குத் தீர்வு தெரியாது அல்லது கிட்டவில்லை என்பதுதான் பொருள். எதற்காகப் பொய் சொல்கின்றது குழந்தை என்பதை மிக அக்கறையோடு அறிந்து அதற்கான தீர்வைக் காணவில்லை, என்றால் அந்தக்குழந்தை பொய் சொல்லுவதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும்நிலை ஏற்படும். வயதானா லும் இது நீடிக்க வாய்ப்பு உண்டு. அதற்கு வழி வகுப்பவர்களாக பெற்றோர் இருத்தல் கூடாது.

பொய் சொல்வது நியாயமானது அல்லது சரியானது அதில் பெரிய தவறுகள் ஏதும் இல்லை என்னும் சமாதான மனப்பாங்கு அவர்களிடம் காணப்படலாம். வயது குறைந்த குழந்தைகள் தாம் எதையாவது செய்வதற்கு முன்னர் அதைப்பற்றித் தீர்க்கமாகச் சிந்திக்கமாட்டார்கள். எனவே தாம் செய்யும் செயல்களினால் ஏற்படும் விளைவுளைப் பற்றிச் சிந்திக்கும் பக்குவம் அவர்களிடம் இருக்காது. அவர்கள் ஒரு தவறு செய்துவிட்டார்கள் என்றால் அதனை ஒரு முக்கியமான விடயமாகப் பெற்றோர் எடுத்துக் கொண்டார்களானால் பிள்ளைகள் சொல்வது பொய்யாகவே அமையும். சரி. நடந்துவிட்டது பரவாயில்லை எனத் தட்டிக்கொடுத்தால் அவர்களுக்குப் பொய் சொல்லவேண்டிய தேவை ஏற்படாது. தாம் செய்த தவறைச் சரிசெய்ய விரும்புவார்கள். அவர்கள் ஏமாற்ற முயற்சிப்பதாகக் கருத முடியாது. தெரியாத்தனமாகவே தவறு இழைக்கின்றார்கள். அவர்கள் செய்த தவறை அவர்களோடு சேர்ந்துச் சரிசெய்துவிட்டால் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். மீண்டும் அந்தத் தவறைச் செய்யமாட்டார்கள். விளைவை அவர்கள் அறிந்துகொண்டால் அதனை மீணடும் செய்யவேண்டிய தேவை ஏற்படாது.

***பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை***
***எல்லா அறமும் தரும்*** *297*

இக்குறளின் மூலம் வள்ளுவர் ‘பொய்யாமை போலப் புகழ் தருவது ஏதும் இல்லை; அதில் தளராமல் உறுதியாயிருப்பது ஒருவனுக்கு எல்லா அறத்தின் சிறப்பையும் தரும் என்பதை விளக்கி நிற்கிறார். அதாவது பொய் பேசாது ஒழுகுவதைச் சிறப்பித்துக் கூறுகின்றார். எனினும் நாம் பொய் பேசுவது ஏன்? பொய் பேசாது உண்மைபேசி வாழ முடியுமா? பொய் பேசாது மனிதரால் வாழமுடியுமா? பொய் பேசாவிட்டால் அவரை மனிதராக ஏற்றக்கொள்ளமுடியுமா? அவர் இறைவனா, மனிதரா? இறைவன் கூடப் பொய் சொன்னதற்கான பல்வேறு கதைகளை எடுத்துக்காட்ட முடிகின்றது. இறைவன் இருக்கிறாரா, இல்லையா என்பது ஒரு புறம். ஆனால் இறைவன்தான் அனைத்திற்கும் என்றால் அவன்தானே நன்மைக்கும் தீமைக்கும் காரணம். அவனது படைப்புத்தானே அனைத்தும். எனவே பொய் சொல்வதும் அவனது படைப்புகள் தானே. இவ்வித பல்வேறு கதைகளை இதிகாசங்களில் காண முடிகின்றது. எனக்குச் சாகாத வரம் வேண்டும் எனக் கேட்ட சூரபத்மன் இறக்கவில்லையா? இன்றும் இருக்கின்றானா? என்பன போன்ற பல கேள்விகள் எம்முன்னே எழுகின்றன. பொய்யாமைபற்றிச் சொல்ல வந்த வள்ளுவர் பொய்மையும் நன்று எனக்கிறாரே. பொய்யாமை புகழைத்தரும் எனக்கூறிய வள்ளுவர் பொய்யையும் சொல்லலாம் என்று கூறுகின்றாரே.

***பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த***
***நன்மை பயக்கும் எனின்***

என்றார் வள்ளுவர். எனவே நாம் பொய்சொல்வதில் தவறில்லை என்றும் அதிலும் எல்லோருமே பொய்சொல்பவர்கள் தான் என நினைப்பவர்கள் ஏராளமானவர்கள் உளர் என்பதும் அனைவரும் அறிந்த உண்மை. ஆனால் எமது குழந்தைகளை நாம் பொய்சொல்லப் பழக்கலாமா? அல்லது அவர்கள் பொய்சொல்ல எவ்விதம் ஆரம்பிக்கின்றார்கள் என்பதும் அதற்கு யார் காரணம் என்பதும் மிகமுக்கியமானது. பொய்யாமை பற்றி ஔவையார் என்ன சொல்லுகின்றார் தெரியுமா? நீதிமன்றில் சாட்சியம் சொல்லப் புகும்வேளை பொய்யே சொல்லக்கூடாது என்பது அவரின் கூற்று. அவ்விதம் பொய் சொல்பவர்களுக்கு என்ன நேரும் என்பதனையும் அவர் முன் வைக்கின்றார்.

***வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே***
***பாதாள மூலி படருமே - மூதேவி***
***சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே***
***மன்றோரும் சொன்னார் மனை***

என நல்வழி நாற்பதில் அவர் தந்துள்ளமையை நோக்கும்

போது நீதிமன்றில் ஒரு பக்கம் சாய்ந்து பொய்ச்சாட்சியம் கூறு வாரானால் அவரின் வீட்டில் பேய் பிசாசுகள்தான் குடி கொள்ளும்; நல்லவர்கள் வரமாட்டார்கள். அப்படியானவர்க ளின் வீட்டில் நல்ல பயனுள்ள பயிர்கள் வளர்வதற்குப் பதி லாக வெள்ளெருக்குப் போன்ற பயனற்ற மரங்கள்தான் வள ரும். அத்தோடு நல்ல பூஞ்செடிகள் வளரவேண்டிய இடத் தில் அழகிழந்த முட்செடிதான் படரும். அத்தோடு செல்வத் தைத் தருகின்ற திருமகள் அந்த வீட்டைவிட்டு வெளியேறிவி டுவாள். அதற்குப்பதிலாகத் தரித்திரத்தைத் தருகின்ற மூதேவி வந்து குடியேற செல்வத்திற்குப் பதிலாகத் தரித்தி ரமே வீட்டில் நிலைத்திருக்கும். அதுமட்டுமன்றி புற்றில் மறைந்திருக்கும் பாம்புபோன்ற விடத்தைத் தலையிலே கொண்டுள்ளவர்கள்தான் அந்த வீட்டில் வந்து தங்குவர் எனக்குறிப்பிடுவதனை நோக்கும்போது அது பொய்சொல்லி வாழ்வோர் ஒவ்வொருவரின் வாழ்விலும் இடம்பெறுகின்றமை நீண்டகாலப் போக்கிலே மக்களால் அறியப்பட்டு அவர்கள் புறத்தொதுக்கப்படுவர் என்பது இதன் விளக்கமாகக் கொள் ளலாம். பலரை ஏமாற்றி தாம் நன்றாக வாழ்வதாக எண்ணிக் கொண்டு பொய்யும் பித்தலாட்டமுமாக சிலர் நடந்துகொள் கின்றார்கள். தாம் செய்யும் செயல்கள் மற்றவர்களுக்குத் தெரியவராது என்று எண்ணுகின்றார்கள். அவர்கள், தாம்தாம் செய்யும் வினையைத் தாமே அனுபவிக்கும்போது உணர்ந்து கொள்வார்கள்.

'தொட்டிலில் பழக்கம் சுடுகாடு வரையும்' என்பதும் 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' என்பதும் முதுமொழி கள். இளமைப் பருவத்தில் பழகிக்கொள்ளும் பழக்கம் இறுதி வரை தொடர்கின்றது என்பது இதன் பொருளாக இருந்தாலும் சில நடத்தைகளை மாற்றிக் கொள்வதும் வளர்ந்த பின்னர் புதிய நடத்தைகளைப் பின்பற்றுவதும் நடைமுறையில் உள் ளன. புகைபிடித்தல், மது அருந்துதல் என்பது இளமைப்பரு வத்துப் பழக்க வழக்கமாக இல்லாத விடத்தும் இடையிலே பழகிக்கொள்ளும் அல்லது ஒட்டிக்கொள்ளும் பழக்கவழக்க மாக அமைகின்றமை எல்லோரும் அறிந்த ஒன்று. பதின்ம வயதில் ஏற்படும் நட்பு, குழு உணர்வு என்பனவற்றால் புதிய தொடர்புகளும் புதிய நடத்தைகளும் ஒட்டிக்கொள்கின்றன. 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பது இளமைப்பரு வத்தே மனதில் பதிவது அழியாது இடம்பெறும் என்பதே இதன் பொருள் ஆகும். உளவளர்ச்சியின்படி இளமைப் பரு வத்தே கற்றுக்கொள்பவையும் மனதில் பதியவைக்கப்படுப வையும் மிக அதிகம். எனவே இளமைப் பருவத்தே கண்டு, கேட்டு, பார்த்து அறிந்து கொள்பவை நல்லவையோ தீய வையோ குழந்தைகளின் மனதிலே இடம்பிடித்துக் கொள்கின் றன. எனவேதான் குழந்தைகளின் முன்னே நல்லவற்றைப் பேசவேண்டும், நல்லவற்றைச் செய்யவேண்டும் என உளவிய லாளர்கள் வற்புறுத்துகின்றனர்.

'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக் கையிலே...' என்று புலமைப்பித்தன் பாடி வைத்தமை, உளவி யல் ரீதியாக பிள்ளைகள் வளர்ந்து வரும்போது ஏற்படும் மாற்றங்களில் அவர்கள் வளரும் சூழல் எத்துணை தாக் கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. குழந்தைகளைப் பொய் சொல்லாதவர்களாக, நற்பண்புள்ள வர்களாக வளர்க்கவேண்டி பாரிய பொறுப்பு பெற்றோரிடமுள் ளது. மென்மையாக வளர்க்கப்படவேண்டிய குழந்தைகளிடம் மிக கடினமான போக்கையோ, கண்டிப்பையோ காட்டினால் அவர்களது பிஞ்சு மனத்தில் இவை பதியப்பெற்று வன்மம், பழிவாங்கும் மனநிலை, என்பன வளரும். இளமையில் துன்பு றுத்தப்படுதல், வன்கொடுமைகளுக்கு ஆளாதல், அப்படியா னவற்றைப் பார்த்தல், கேட்டல் என்பனவற்றால் பிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் வளர்ந்து வரும்போது இவையும் அவர்களோடு வளர்ந்து வருவதால் அவர்களும் பின்னாளில் குற்றச் செயல்களைப் புரிபவர்களாக மாறுகின் றார்கள். இன்றைய இளம் குற்றவாளிகள் இளமையில் பல் வேறு வகையான பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்தவர்களா கவோ, அனுபவித்தவர்களாகவோ இருந்துள்ளார்கள் என்ப தனை உளவியலாளர்கள் எடுத்துக்காட்டுகின்றனர்.

புகைப்பிடித்தல் பழக்கமுள்ள பெற்றோர் குழந்தைகளின் முன் புகைப்பிடிக்க முனையும்போது பிள்ளைகள் அதனைப் பார்த்து பாசாங்கு செய்வதினை சிரித்துவிட்டு சாதாரணமா னது என கடந்துசெல்கின்றார்கள். அந்தச்செயல் அந்த பிஞ்சு உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை பலரும் உணர்வதில்லை. எம்மில் பலர் வீட்டில் நிற்கும்போது தொலைபேசி மணி அடித்தால் அப்பா இல்லை என்று சொல்லு, அல்லது அம்மா இல்லை என்று சொல்லு என்று, ஏதோ நன்மைக்கோ அல்லது அதிலிருந்து தப்பித்துக் கொள் ளவோ, அல்லது தூக்கத்தைக் குழப்பாது இருப்பதற்கா கவோ சொல்லுகின்றோம். ஆனால், இந்தச் செயலால் பிள் ளைகளை நாம் பொய் சொல்ல வைக்கின்றோம் என்பதனை உணர்ந்து கொள்வதில்லை. அப்பா, அம்மா பொய் சொல் கின்றார்கள் அல்லது சொல்லச் சொல்கின்றார்கள் என ஒரு பிள்ளை நினைக்குமானால் அந்தப் பிள்ளையும் தானும் பொய் சொல்லலாம் என்பதனை அவர்கள் வெளியே சொல் லாவிட்டாலும் மனதில் எண்ண இடம் ஏற்படுகின்றது. இது பிள் \ளைகளைப் பொய்சொல்லத் தூண்டும் ஒரு காரணியாக அமைகின்றது. இவற்றைவிட கல்வி தொடர்பாக அல்லது வேறு ஏதாவது விடயம் தொடர்பாக பிள்ளையின் மனநி லையை அல்லது இயல்திறனை அறியாமல் அவர்களுக்கு அதிகளவில் அழுத்தத்தைக் கொடுக்க முற்படும்போது அந் தப் பிள்ளை வேறு வழியின்றிச் சிலவேளைகளில் பொய் சொல்ல ஆரம்பிக்கின்றது. எடுத்துக்காட்டாகப் பாடசாலை யில் அதிகளவு வீட்டுப் பாடங்களைச் சுமத்திவிடும் ஆசிரியர் களாலும், பெற்றோரின் வற்புறுத்தலாலும் பல பிள்ளைகள் பொய் சொல்ல ஆரம்பிக்கின்றார்கள். தாங்கள் வீட்டுப்பாடங் களைச் செய்வதனைத் தவிர்த்துக்கொண்டு கணினியில் விளையாடுதல், தொலைக்காட்சி பார்த்தல் அல்லது கதைப் புத்தகம் வாசித்தல் போன்றவற்றின் ஈடுபடும் குழந்தைகளி டத்தில் பெற்றோர் வீட்டுவேலைகள் ஏதேனும் தரப்பட்டுள் ளதா? என வினவும் சூழலில் வீட்டுவேலை இல்லை என்று பெற்றோருக்குப் பொய் சொல்லுகின்ற பல பிள்ளைகள் உள் ளனர். பெற்றோர் தகுந்தமுறையில் பிள்ளைகளைக் கையா ளாமையே அவர்கள் பொய்சொல்லித் தப்பித்துக் கொள்ளக் காரணமாகின்றது.

பெற்றோர், பிள்ளைகளுக்கு நீங்கள் பொய்சொல்லுங்கள் என்று கற்றுத்தருவதோ, சொல்லித்தருவதோ இல்லை. ஆனால், பெற்றோர் அவர்களை அறியாது செய்யும் சில செயல்களினால் பிள்ளைகள் பொய் சொல்லத் தூண்டப்படு கிறார்கள், தூண்டிவிடப்படுகின்றார்கள். பெற்றோர் அறியாது செய்யும் இச்செயல்கள் குழந்தை பொய்சொல்லக் கற்றுக் கொள்வதாகவே அமைகின்றது. எனவே, பிள்ளைகள் தொடர்ந்து பொய்சொல்வதற்கு காரணம் என்ன என்பதனைப் பெற்றோர் அறிந்து, அதனைத் தவிர்த்துக்கொள்ளத்தக்க நட வடிக்கைகளை மேற்கொள்ளுதல், பிள்ளையின் எதிர்கால நல்வாழ்வுக்கு அவசியமாகும். பொய் சொல்வதுகூட நடத்தை

யின் பாற்படும் என்பது அனைவரும் அறிந்ததே. நாம் சில நிகழ்வுகளுக்குப் போக முடியவில்லை என்றால் அதற்கான உண்மையைச் சொன்னால் சிலர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதனால்... ஏதோ பொய்சொல்லி அவர்களை நம்பவைப்ப தோடு, அவர்களைச் சமாதானப்படுத்த முனைவது இயல்பு. இதனால் இருவருக்குமே தீங்கில்லை. ஆனால், இத்தகைய பொய்யினைப் பிள்ளைகளை வைத்துக்கொண்டு சொன்னால், அவர்கள் நீங்கள் சொல்வது பொய் என அறிவார்கள். எனவே அவர்களைப் பொய்சொல்லாது தடுப்பதற்கு உங்களுக்குச் சரியான காரணம் கூறமுடியாத நிலை ஏற்படும்.

எம்மில் சிலர் மற்றவர்களின் கவனத்தைத் தம்பக்கம் ஈர்த்துக் கொள்வதற்காகப் பொய்யுரைகளைக் கூறுவர். அவர்கள் கூறுவது பொய் என்று தெரிந்தபின்னர் அவர்கள் உண்மைச் சொன்னாலும் அது ஓநாயும் இடைச்சிறுவனும் ஆகிவிடுவ தனை அவர்கள் உணர்வதில்லை. எனவே பிள்ளைகளைப் பொய் பேசாதவர்களாக வளர்ப்பதற்குச் சில வழிமுறைகளைப் பெற்றோர் பின்பற்றுதல் அவசியமாகும்.

- *‘உண்மை பேசும்’ முன்மாதிரியானவர்களாக இருப்பதோடு பகிடிக்காவது பிள்ளைகளிடம் பொய் பேசாதிருத்தல் வேண்டும்.*
- *உங்கள் பிள்ளைகள் உண்மை பேசுவதனால் ஏற்படும் பெறுமதியினை அவர்கள் உணரக்கூடிய வகையில் அவர்களை வழிப்படுத்தவேண்டும். இதற்கு நீண்டகாலம் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியமாகின்றது.*
- *பொய் பேசியதற்கு மன்னிப்பை ஏற்றுக் கொள்ளக்கூடாது. பொய் சொல்லுதலை அனுமதிக்க முடியாது என்பதனை உணர வைத்தல் வேண்டும்.*
- *அவர்கள் பொய்சொல்வதனால் ஏற்படக்கூடிய தாக்கத்தினை அல்லது பாதிப்பின் விளைவினை அவர்கள் அறிந்து உணர்ந்து கொள்ளத்தக்க வகையில் அவர்களுக்கு உணர்த்துதல் வேண்டும்.*
- *என்னவாக இருந்தாலும் பொய் சொல்லுதல் ஒருபோதும் அனுமதிக்கப்பட முடியாததும் சகித்துக் கொள்ளமுடியாததும் ஆகும் என்பதை, பெற்றோர் தம் குழந்தைகளுக்கு உணர்த்தல்.*
- *பிள்ளைகள் தங்கள் பெற்றோரையோ ஆசிரியரையோ மகிழ்விப்பதற்காகப் பொய்சொல்லும் வேளையில் அதனைச் சுட்டிக்காட்டலும் அது தவறு என்பதை பிள்ளைகளுக்கு உணர்த்தவும் வேண்டும். அத்தோடு நீங்கள் உண்மை பேசுவதையே மிகக் கூடுதலாக மதிக்கின்றீர்கள் என்பதனையும் பொய் சொல்வதைவிட உண்மை பெறுமதி வாய்ந்தது என்பததைனயும் குழந்தைகளுக்கு உணர வைக்கவேண்டும்.*
- *பொய் சொல்லும் பிள்ளைகள் அதற்கான விளைவுகள் மாற்று தீர்மானங்கள் எடுப்பதில் பங்குகொள்ளல் வேண்டும். பொய்சொல்வதற்குப் பதிலாக என்ன செய்யலாம் அல்லது என்ன தண்டனை தரலாம் என்பதனை அவர்களிடமே கேட்கவேண்டும்.*
- *பொய் சொன்னமையினால் நீங்கள் பட்ட கஷ்டத்தை, அடைந்த மனக்குழப்பத்தை பிள்ளைக்கு நினைவூட்டுங்கள். யார் செய்தார்கள் என்பதனை விடுத்து என்ன செய்தார்கள்? அதனால் எவ்வாறு நீங்கள் ஏமாற்றம் அடைந்துள்ளீர்கள்? அல்லது நம்பிக்கை இழந்துள்ளீர்கள்? என்பதனை மீள வலியுறுத்துங்கள். அவர்களிடம் காணும் நல்லனவற்றை அல்லது சிறப்பை எடுத்துக் கூறி தவறு செய்யாதிருக்க அவர்களை மறைமுகமாக வழி நடத்துங்கள். நீ நன்றாகச் செய்கின்றாய் எனத் தட்டிக் கொடுங்கள். உண்மை பேசுவதை மெச்சுங்கள், தேவையான சந்தர்ப்பத்தில் பரிசில்களை வழங்கி அவர்களைக் கௌரவப்படுத்துங்கள்.*
- *பொய் பேசும் குழந்தைகளிடத்தில் இயன்றவரை விரிவுரையாற்றுவதைத் தவிருங்கள்; உடனடியாக அவர்களுக்கு எரிச்சலூட்டும்விதமாகவும் நடந்து கொள்ளாதீர்கள்.*

***யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற.***

பொய் சொல்லாமை மிக நல்லது. எல்லாவற்றுள்ளும் தலைசிறந்தது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டாலும் அதன் வழி நடக்க முடியுமா? என்பது எம்முன்னே எழும் கேள்வி. வள்ளுவத்தின் வழி நடப்பதற்கு பிள்ளைகளைத் தூண்டுதல் இன்றியமையாதது. ‘குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று’ எனக் கவிஞர் கண்ணதாசன் கூறிய வார்த்தைகளின் பொருள்பொதிந்த உண்மையை நாம் மனதில் கொள்ளுதல் வேண்டும். குழந்தைகளுக்குப் பொய் சொல்லத் தெரியாது என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஆனால் அந்தக் குழந்தைகள் எவ்விதம் பொய்சொல்லக் கற்றுக்கொள்ளுகின்றார்கள் என்பதனை சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒரு குழந்தையின் வளர்ச்சியில் அதன் ஆரம்பச் சூழ்நிலைதான் மிக முக்கியமானது.

நல்ல அயலில் வாழவேண்டும் என்பதின் பொருள் என்ன? அயலவர்கள் நல்லவர்களாக இருந்தால் நம்மோடு உறவாடவோ எங்கள் குழந்தைகளுடன் உறவாடவோ பயப்படத்தேவையில்லை. ஆனால் பொய், களவு, வஞ்சனை நிறைந்தவர்கள் அயலவர்களானால் என்ன நடக்கும். பிள்ளைகள் தாம் கற்றுக் கொள்கின்றவற்றினால், வளரும் சூழலால் புதிய நடத்தைகளைக் கைக்கொள்கின்றார்கள் என்பது உண்மை. எனவேதான் உளவியலாளர்கள் பிள்ளை வளரும் சூழல் ஆரோக்கியம் மிக்கதாக அமையவேண்டும் என்கின்றனர். ஆரோக்கியமான சூழல் என்பது நல்ல இயற்கையமைவு, காற்றோட்டம், போக்குவரத்து வசதி என்பவை மட்டுமல்ல, முக்கியமாக நாம் வாழும் சமூகத்திலும் அது தங்கியுள்ளது. எப்படியான அயலவர்கள் எமக்குக் கிடைத்துள்ளனர் என்பதை நாம் அறிந்து செயல்படவேண்டும். சில சமூகங்களில் தினந்தினம் பொய், களவு, சண்டை, சச்சரவு மட்டுமல்லாது போதைப்பொருட்கள் விற்பனை, பாவனை என்பன நடக்கும் சூழலில் நாம் இருந்தால் எமது பிள்ளைகள் அவற்றை இலகுவாகக் கற்றுக் கொள்ள நாம்தானே வழிவகுக்கின்றோம்.

தாய் தந்தையரிடையே இடம்பெறும் உரையாடலை பிள்ளைகள் உற்றுக் கேட்டுக்கொண்டே இருக்கின்றன. அவை வளர்ந்து வரும்போது இவை அவர்களின் மனத்திரையிலிருந்து வெளித்தோற்றம் பெறுகின்றன. எனவே பெற்றோர், பிள்ளைகள் வளரும் சூழலை ஆரோக்கியம் நிறைந்ததாக ஆக்கிக் கொள்ளவேண்டும் அதற்காகப் பிள்ளைகளின் மீது தீவிர கட்டுப்பாடுகளைப் போட்டு அவர்களின் மனவளர்ச்சியைப் பாதிக்கவிடக்கூடாது என்பதும் முக்கியமானது.



sivapalu@thaiveedu.com




இவ்வளவு நாளும் அன்பான அமைதியாக இருந்தவர், ஏனென்று தெரியவில்லை இப்பொழுது கொஞ்சநாளா எதுக் கெடுத்தாலும் சிடுசிடு என்று எரிந்து விழுகிறா என்று புலம் பும் கணவன்மார், அம்மா இப்ப முந்தி மாதிரியே இல்லை 'ஆங்கிரி பேர்ட்' அம்மா என்று கவலை கொள்ளும் பிள்ளை கள்... இப்படி பல வீடுகளில் சட்டென்று மாற்றம் வருவதற்கு என்ன காரணம். பெண்களின் மென்மைக்கு காரணம் அவர்க ளுக்கு உள்ளே இருக்கும் அந்த ஹோமோன்கள்தான்.

பெண்களைத் தெய்வமாகப் போற்றுகிற சமூகம் எங்கள் சமூ கம். மகள் வயசுக்கு வந்துட்டா, 'பெரிய பிள்ளையாகிவிட்டா' என்று வீட்டுக்குள்ளேயே கொஞ்சம் நெருங்கிய உறவுக ளோடு கொண்டாடி மகிழ்ந்திருப்பது பரவாயில்லை. ஆனால், ரொம்பவும் ஆடம்பரமாக பல்லக்கில் தூக்கி, ஹெலிகாப்ட ரில் பூப்போட்டு கொண்டாடும் கூட்டத்தினரைப் பார்க்கும்போ துதான் கொஞ்சம் கேவலமாகத் தெரிகிறது. அவர்களிடம் காசு இருக்குது. இலன் மஸ்க்கோட ஸ்பேஸ் எக்ஸ் வாட கைக்கு எடுத்து, செவ்வாய் கிரகத்திலேயே பூப்புனித நீராட்டு விழா நடத்துவார்கள், நீங்களேன் புலம்புறீர்கள்? என்று நீங் கள் நினைப்பது எனக்கு புரிகிறது.

சினைப்பையில் உள்ள முட்டைகளின் இருப்பு முற்றிலும் காலியாவதுதான் இதற்கான காரணம். ஒரு பெண் குழந்தை தன் தாயின் கருவறையில் இருக்கும் போதே இருபதாவது வாரத்தில் கருமுட்டைகள் உருவாகிவிடும். அதன் சினைப் பையில் எத்தனை முட்டைகள் இருக்கப்போகின்றன என்பது தீர்மானமாகிவிடும். அந்தக் குழந்தை பிறந்து வெளியில் வந் ததும் அந்த முட்டைகள் சிறிது குறையும். அந்தக் குழந்தை வயதுக்கு வந்து, மாதம்தோறும் மாதவிடாய் வரும்போது அந்த முட்டைகள் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வரும். அந்த முட்டைகளின் இருப்பு முற்றிலும் குறைந்துபோ வதையே மாதவிடாய் நிறுத்தம் அல்லது இறுதி மாதவிடாய் (menopause -மெனோபாஸ்) என்கிறோம். மாதவிடாய் நிறுத் தம் என்பது நோயல்ல. அதற்கு சிகிச்சைகள் தேவையில்லை. 12, 13 வயதிலிருந்து முதல் மாதவிடாய் தொடங்கி மாதம் தோறும் இயற்கையான அந்த சுழற்சி முறையாக இருக்கிற தென்றால் அது திருமணத்துக்கு பின்பு தாய்மைக்கான அடையாளம். பிறகு 45 முதல் 55 வயதுக்குள்ளே ஏதோ ஒரு காலகட்டத்தில் கருமுட்டை வெளியாவது நின்று மாதவிலக் கும் நின்று போய்விடுகிறது. இப்படி மாதவிலக்கு நிறைவடை யும் வயது ஒரு பெண்ணின் பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை, உணவு, மனநிலை, இனம், பரம்பரை இயல்புகள், இதர நோய்கள்... இப்படி பல காரணிகளால் தீர்மானிக்கப்படு கிறது.

இந்த மாதவிடாய் நிறுத்தக் காலகட்டத்தில் ஒரு பெண் பல் வேறு விதமான உடல் உள உபாதைகளைச் சந்திக்க நேரிடு கிறது. இது ஏன் அவ்வளவு பாரதூரமான பிரச்சினையா? ஏனென்றால், இந்த உபாதைகள் சிலருக்கு மாதக்கணக்காக ஏன் பலருக்கு வருடக்கணக்காகவும் தொடரலாம். சிலருக்கு ஒரு தீவிர பிரச்சினையாகி விவாகரத்து, தற்கொலை என் றெல்லாம் நடந்த பல நிகழ்வுகளும் உண்டு. இந்தப் பிரச்சி னைக்காக ஆலோசனைக்கு வந்த ஒரு பெண்மணி சொன் னது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. இந்த Menopause Mood swings பிரச்சினையால தற்கொலை செய்ய முயன் றேன், நான் வேலைசெய்த பணியிட மேலதிகாரியுடன் சண்டை போட்டதால் நல்ல வேலையும் பறிபோய் விட்டது, கணவரையும் தற்காலிகமாக பிரிந்து, இரண்டு பிள்ளைக ளோடு நிர்க்கதியான நிலையில் நிற்பதாக, கண்ணீரோடு தன் வாழ்க்கையின் மாதவிடாய் நிறுத்தத்தின் கறுப்பு நினைவுக ளைப் பகிர்ந்து கொண்டார்.

சில பெண்களுக்கு எந்தப் பிரச்சினையும் இன்றி மாதவிடாய் நிறுத்தம் வருவதும் போவதும் தெரியாமல் கடந்து போவதும், சிலருக்கு அதிக ரத்தப் போக்கினால் கருப்பையை அகற்றி செயற்கையான மாதவிடாய் நிறுத்தம் (Surgical Menopause) உண்டாக்குவதும் அவரவர்களின் ஹோம்களின் மாறுதல்க ளின் விளையாட்டுத் தான். நம்ம மூளைக்கு நடுவில் பிற்யூட்டரி என்ற ஒரு தலைமை சுரப்பி இருக்கிறது, அவர்தான் நம்ம உடலில் பல செயல்பாடுகளை ஒழுங்கமைக்கும் முக்கிய பத வியில் இருக்கிறார். அதனால் மூளைக்கு அருகிலேயே அவ ருக்கு மட்டும் ஒரு தனி இருப்பிடமும் பல பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளது. இந்த சுரப்பியில் இருந்துதான் பல ஹோமோன்கள் சுரக்கிறது. இவற்றுடன் இணைந்து தான் சினைப்பையில் இருந்து சுரக்கும் ஈஸ்ட்ரோஜன், புரோஜெஸ் ரிரோன் போன்ற ஹோமோன்கள்களின் முறையான செயல்பா டுகள்தான் சரியான மாதவிலக்கு மாதம் தோறும் வருவதற்கு

வடிகாலாக அமைகிறது. இவற்றின் ஒருங்கமைப்பினால் தான் தாம்பத்தியத்தின் பின்பு கருகட்டல் நடைபெற்று குழந்தை பேறுக்கும் இந்த சுரப்பிகள் தான் முன்னிலை வகிக்கின்றன.

சில பெண்களுக்கு கருப்பையில் கட்டிகள் (Fibroids) அல்லது என் டோமெட்ரி யோசிஸ் (Endometriosis) மற்றும் சினைப்பைகளில் கட்டிகள்(Ovarian cysts) போன்றவை இருப்பின் அதிகமான ரத்தப்போக்கும் ஏற்படலாம். மற்றும் ஈஸ்றரோஜன் என்ற ஹோமோன் இருக்கும் வரைதான் பெண்மையின் தன்மைகள் பேணப்படுகின்றன. இல்லையென்றால் உடலில் மற்றைய சுரப்பிகளின் செயற்பாடுகளையும் வளர்சிதை மாற்றங்களையும் பாதிக்கும். உதாரணமாக தைராய்டு சுரப்பியுடன் ஈஸ்றரோஜன் இணைந்து செயல்பட்டால்தான் எலும்புகளின் உறுதிக்கு தேவையான கல்சியம் எலும்புகளில் சேமிக்கப்படும். ஆகவேதான் மாதவிடாய் நிறுத்தத்துக்குப் பின்பு எலும்புகள் பலமிழந்து ஒஸ்ரியோ பொரோசிஸ் என்ற எலும்பு இளகல்நோய் உண்டாகி உடல் வளைந்து கூனலாகி, இலகுவாக எலும்புகள் உடைந்து போவதற்கான வாய்ப்புகள் அதிகமாகிறது.

45 - 55 வயதை எட்டிவிட்ட பெண்ணுக்கு, ஆறு மாதம் முதல் ஒரு வருடத்திற்கு மாதவிடாய் வரவில்லையென்பதே மாதவிடாய் நிறுத்தம் என உறுதி செய்யப்படுகிறது. மாதவிடாய் நிறுத்தம் உறுதியான பிறகு, அந்தப் பெண்ணுக்கு சினைப்பைகள் வேலை செய்யாது, கருமுட்டை வெளியேறாது என்பதால் கர்ப்பம் தரிக்க வாய்ப்பில்லை. மாதவிடாயும் வராது. பெரிமெனோபாஸ் என்பது முழுமையான மாதவிலக்கு நின்று போறதுக்கு முன்னரான காலம், பிந்திய மாதவிடாய் நிறுத்தம் என்பது மாதவிலக்கு முழுமையாக நின்ற பிறகு தொடர்ச்சியாயாக வருகிற காலம். இவற்றை நிலை மாறுகாலம் என்று அழைக்கலாம் இந்த காலத்திலேயே பல பெண்களுக்கு உடல் உள உபாதைகள் வெளிப்படத் தொடங்கும். பெரும்பாலான பெண்கள் சிரமப்படுவது Hot flashes என்ற பிரச்சினையால் தான். உடம்பு திடீரென சூடாகும், உடனே குளிர்ச்சி அடையும், திடீரென வேர்த்துக் கொட்டும், இதயமும் படபடக்கும். குளிர்ச்சியான இடங்களிலும் வேர்க்கும், இதனால் எப்போதும் பதட்டத்தோடு குளிருக்கும் நெருப்புக்கும் நடுவில் அங்கும் இங்கும் அமைதியற்று அலைந்து கொண்டிருப்பர்.

உடல் ரீதியாக பல்வேறு மாற்றங்கள் உண்டாகும் உடல் பலமிழந்து வலுவிழந்தது போன்ற உணர்வு, மூட்டுகளிலும் தசைகளிலும் இனம் புரியாத வலி, முடி உதிர்தல், தைராய்ட் சுரப்பியில் குறைபாடுகள், மார்பகங்களில் மாற்றமும் வலியும், உடல் பருமன் அதிகமாகும். வயிற்றில் சமிபாடு குறைபாடு, பசியின்மை அல்லது அதீத பசி, தோலில் வறட்சி, சிறுநீர்ப் பாதைகளில் தொற்றும் எரிச்சலும் அழற்ச்சியும் உண்டாகும். சிறுநீர்ப்பை பலவீனத்தால் அடிக்கடி சிறுநீர் கழிக்கும் பழக்கம், பெண்ணுறுப்பில் வறட்சியும் வலியும், வெள்ளைப்படுதலும், தாம்பத்தியத்தில் விருப்பமின்மையும் அதன் போது வலியும்... இப்படி பலவிதமான குணங்குறிகள் பெரும்பாலான பெண்களில் காணப்படுகிறது. மனநிலையிலும் பாரிய மாற்றங்கள். குறிப்பாக மனநிலை சட்டென மாறும். எரிச்சல், அழுகை, தனிமை, எதற்கெடுத்தாலும் எரிஞ்சு விழுதல், கோபப்படுதல், சிடுசிடுப்பு, மன அழுத்தம், தூக்கமின்மை, ஞாபகசக்திக் குறைபாடு, வழக்கமான வேலைகளில் விருப்பமின்மை, குடும்பத்தில் புரிந்துணர்வுகளில் சிக்கலும் உறவுகளில் விரிசல்களும், பதட்டம் படபடப்பு இப்படி மாதவிடாய் நிறுத்தத்தின் ஆட்டம் தொடர்கதைதான்.

இந்த சூழ்நிலைகளில் தான் மாதவிடாய் நிறுத்த காலப் பெண்கள் பல தவறான முடிவுகளை எடுக்க வாய்ப்புகள் உண்டு. அந்த நேரங்களில் கணவரும் பிள்ளைகளும் குடும்ப உறவுகளும் மாதவிடாய் நிறுத்தத்தின் தன்மையை - பெண்மையின் மென்மையின் மாற்றங்களை உணர்ந்து பெண்மையைப் போற்றி ஆறுதலாக அரவணைப்பாளராக பாசத்தோடு அன்பு காட்டினாலே போதும், மாதவிடாய் நிறுத்தத்தினை வென்று பெண்கள் 'பாசாகி' மீண்டுவர வழிகோலும். பெண்ணுக்கு மட்டுமல்ல ஆணுக்கும் இதே காலகட்டத்தில் தான் இதே வயதுள்ள ஆணுக்கும் அன்றோபாஸ் (Andropause)




என பெண்ணுக்கு மாதவிடாய் நிறுத்தம் ஏற்படுவது போல உடல் உள சிக்கல்கள் உண்டாவது பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இதனால் தான் திருமணத்துக்கான பெண்ணின் வயது ஆணை விட சில வயதுகள் குறைந்து இருப்பது நல்லது என்று நம் முன்னோர்கள் முன்னேற்பாடாக சொல்லி வைத்துள்ளனர். இப்படி இருவருக்குமான இந்த மெனோபாஸ் மற்றும் அன்றோபாஸ் பிரச்சினைகளின் உச்சக்கட்ட தாக்கத்தினால் பல குடும்பங்களில் விரிசல்கள் உண்டாகி பிரிவினைகளால் விவாகரத்து வரை கூட சென்று விடலாம்.

மாதவிடாய் நிறுத்த அறிகுறிகள் எல்லாப் பெண்களுக்கும் ஒன்றுபோல் இருப்பதில்லை. சிலர் அதை மிக எளிதாக, இயல்பாகக் கடப்பதுண்டு. சிலருக்கு அது நரகவேதனையாகவும் அமைவதுண்டு. மேற்குறிப்பிட்ட அறிகுறிகளுக்கு ஏற்பவே, அவர்களுக்கான தீர்வுகள் முடிவு செய்யப்படும். சில பெண்களுக்கு 40 வயதிலேயே சினைப்பைகள் தம் செயல்பாட்டை இழக்கத் தொடங்கும். பொதுவாக 50 வயதில் வரக்கூடிய பிரச்சினைகளை இவர்கள் 40 வயதிலேயே எதிர்கொள்வார்கள். இத்தகைய மாதவிடாய் நிறுத்த காலங்களில் வழக்கமானதை விட அதிக இரத்தப்போக்கு மிகவும் ஆபத்தானதாகும். இதற்கு உடனடியாக மருத்துவ கண்காணிப்பும் சிகிச்சையும் அவசியமானதாகும். அடுத்த றிஸ்க்... ஹார்ட்அற்றாக் 50-60 வயதுக்குப் பிறகு பெண்களின் உடல் ஆண்களுக்கு இணையாக மாறுகிறது. அதாவது மாதவிடாய் நிறுத்தம் வரை பெண்களுக்குப் பாதுகாப்பை அளிக்கும் ஈஸ்ரோஜென் ஹார்மோன், மாதவிடாய் நிறுத்தத்துக்குப் பிறகு முற்றிலும் இல்

லாமல் போவதால், அதுவரை இல்லாத மாரடைப்பு ஏற்படும் தன்மை அவர்களுக்கு அதிகரிக்கிறது. பெண்களைவிட ஆண்களுக்கு றிஸ்க் அதிகம் என்ற கூற்றும் மாதவிடாய் நிறுத்தத்துக்கு பிறகு பொய்யாகி, இருவருக்கும் சமமானதாக மாறுகிறது. இரத்தக் குழாய்கள் தடிப்பதும், குழாய்களுக் குள்ளே இரத்தம் உறைவதற்காக தன்மைகளும் அதிகமாவ தால் மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகி றது.

50 வயதில் அடியெடுத்து வைக்கும் பெண்கள் வருடம் ஒரு முறை முழுமையான உடல் பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். ரத்தப் பரிசோதனை, கல்லீரல் மற்றும் சிறுநீரகங்க ளின் ஆரோக்கியம் போன்றவற்றைப் பரிசோதிக்க வேண்டும். மார்பக ஆரோக்கியத்துக்கு மமோகிராம் பரிசோதனை அவ



சியம். தாம்பத்திய உறவில் ஈடுபடும் பெண்கள் எல்லோரும் 25 வயதுக்கு மேல் பாப் ஸ்மியர் Pap Test பரிசோதனையை அவசியம் எடுக்க வேண்டும். 25 முதல் 50 வயது வரையிலான பெண்களுக்கு மூன்று வருடங்களுக்கொரு முறை இந்த பரி சோதனை செய்யப்படும். அதன் பிறகு 5 வருடங்களுக்கொரு முறை செய்யப்படும். கர்ப்பப்பை உள்ள அனைத்துப் பெண் களுக்கும் (திருமணமான, ஆகாதவர்களுக்கும்) HPV என்ற Human papillomavirus-ஆல் உண்டாகும் கர்ப்பப்பை வாசல் புற்றுநோய்க்கான அபாயம் இருப்பதால், அதைக் கண்டறி யவே இந்தச் சோதனை செய்யப்படுகிறது. திருமணம் தவிர்த்த living together-ஆக வாழும் பெண்களின் எண்ணிக் கையும் அதிகரித்து வருகிறது. ஒரே பார்ட்னருடன் வாழ்வோ ரும் இருக்கிறார்கள், அடிக்கடி பார்ட்னரை மாற்றும் பெண்க ளும் இருக்கிறார்கள். இவர்கள் சந்திக்கும் பிரதான பிரச் சினை சிறுநீர் பாதைத் தொற்றும் அழற்ச்சியும் மற்றும் பாலி யல் நோய்த் தொற்றுகளும். ஒன்றுக்கு மேலான நபர்களுடன் பாலியல் உறவு கொள்ளும்போது இந்தத் தொற்று மற்றவர்க ளுக்கும் பரப்பப்படுகிறது.

மாதவிடாய் நிறுத்தம் என்பது நோயல்ல, இயற்கையான பெண்களின் வாழ்வியல் உடலியல் சுழற்சியின் ஓர் அங்கமா கும். நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல இதன் விளை வாக உண்டாகும், உடல், உள பிரச்சினைகள் சற்று அதிகமா கும் போது மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள் வது அவசியமாகும். குணங்குறிகளும் அதன் தீவிரத்தன்மை யைக் குறைக்கவும் ஹோமியோபதி மருத்துவத்தில் நல்ல தீர் வுகள் உள்ளன. குறிப்பிட்ட பிரச்சினைகள் உள்ள பெண்க ளின் உடல், உள, குடும்ப, சமூக மற்றும் அவர்களுக்கு இருக் கக்கூடிய இணைநோய்கள், நோயாளியின் வரலாறு. பின்பு லம் போன்றவற்றை அடிப்படையாக வைத்து ஹோமியோபதி மருந்துகளைத் தேர்வு செய்து கொடுக்கிற பொழுது முழு மையாக நலமடைய வாய்ப்புகள் உண்டு. அதை விடுத்து ஹோமோன் தெரபி என்ற சிகிச்சை முறைகளை மேற்கொள் வோர்க்கு பல பக்க விளைவுகள் ஏற்படலாம். இயற்கைக்கு மாறாக செயற்கையான ஹோமோன்களை உடலுக்குள் பல் வேறு வழிகளில் செலுத்தும்போது அவை உடலில் பல மாற் றங்களை உருவாக்கும். அத்தோடு இதனால் மார்பகங்களி லும் கர்ப்பப்பையிலும் சினைப்பையிலும் புற்று நோய்கள் உருவாகவும் வாய்ப்புள்ளது. அது மட்டுமல்ல ரத்தத்திலும் மாற்றங்களை இந்த ஹோமோன்கள் ஏற்படுத்துவதால் ஸ்ரோக் என்ற பக்கவாதம் மற்றும் மாரடைப்பு போன்றவை யும் வர வாய்ப்புள்ளது.

மேலும் விழிப்புணர்வும் புரிந்துகொள்ளுதலுமே இதற்கான முதல் தீர்வு. கூட இருக்கும் குடும்ப உறவுகள் நிலைமையை உணர்ந்து அன்பாகவும் ஆதரவாகவும் அரவணைப்போடு இருப்பது மிக முக்கியமானதாகும். நல்ல ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்வதும் பிரச்சினைகள் அதிகமாக இருக்கும் காலகட்டத்தில் மாமிச உணவுகள், செயற்கை உணவுகள், துரித உணவுகள், மதுபானங்கள், செயற்கைக் குளிர்பானங்கள் போன்றவற்றை அறவே தவிர்த்து விடுவது நல்லது. நீங்களே வீட்டில் இயற்கையாக செய்த பழச்சாறுகள் நிறைய அருந்தலாம். இவற்றோடு புரதச்சத்து அதிகம் நிறைந்த கடலை, பயறு வகைகள் மற்றும் பாதாம், முந்திரிப் பருப்பு, வால்நட், பிஸ்தா, சோயா போன்றவற்றையும் அதிகம் சேர்த்து உணவில் சேர்த்துக் கொள்ளலாம். லேசான மித மான சூடுள்ள தண்ணீரைத் தொடர்ச்சியாக அருந்துவது நல் லது. இரண்டு அல்லது மூன்று முறை மிதமான வெந்நீரில் குளிப்பதோ மிகநன்று. யோகப் பயிற்சிகள், மூச்சுப் பயிற்சி கள், தியானம், உடல் பயிற்சி, நீச்சல், நடைப்பயிற்சி என்பன வும் தொடர்ச்சியாக செய்து கொள்ளுதல் வேண்டும் மெனோ- பாஸ் மற்றும் அன்றோப்பாஸ் காலங்களிலும் அதற்குப் பின் னர் உருவாகும் பக்கவாதம் மற்றும் மாரடைப்பு போன்ற நோய்கள் வராமல் பாதுகாப்பது மட்டுமல்ல உடல் பரும னைச் சமநிலையில் பேணவும் இந்த பயிற்சிகள் மிக அவசிய மானது. அது மட்டுமல்ல இதற்கென்று சில பிரத்தியேகப் பயிற்சிகளைச் செய்வது நல்லது. குறிப்பாக Pelvic floor muscles exercises போன்ற பயிற்சிகளின் வாயிலாக வயிற் றின் அடிப்பகுதி தசைகளை பலப்படுத்துவது அவசியமா னது. கர்ப்பப்பை கீழ் இறங்குதல் மற்றும் அடிக்கடி சிறுநீர் கழிக்கத் தூண்டும் சிறுநீர்ப்பையின் பலவீனம் போன்றவை வராமல் பாதுகாக்க இந்தகைய சிறப்பு பயிற்சிகள் அவசியமானது.



paul.joseph@thaiveedu.com




நவீன வாகனங்கள் கண்களுக்குப் புலப்படாத Blind Spot எனும் இடங்களில் உள்ளவர்களை உங்களுக்கு காட்டுவதுடன், நீங்கள் உங்கள் எதிரில் உள்ள வாகனத்திற்கு மிக நெருக்கமாகச் சென்றாலும் அல்லது வேகமாக உங்கள் வாகனத்தைச் செலுத்தினாலும் உங்களுக்கு எச்சரிக்கை செய்யும். ஆபத்து ஏற்படும் வேளையில் சாரதியின் உந்துதல் இல்லாமலே வேகத்தைக் கட்டுப்படுத்தி விபத்தின் தாக்கத்தைக் குறைக்கும். இத்தகைய வளர்ச்சி வாகனம் செலுத்துவதனை இலகுவாக்கும் வேளையில், சாரதி வாகனம் செலுத்துவதில் உள்ள அடிப்படை பொறுப்புகளை மறக்கவும் ஏதுவாகின்றது.

பாதையில் வாகன செலுத்துதலின் அடிப்படை பொறுப்புகள் இன்றும் செல்லுபடியாகும் என்பது மறக்க முடியாத விடயமாகும். இன்னும் பல சாரதிகள் பெறுப்பில்லாமல் வாகனத்தைச் செலுத்தி மற்றவர்களுக்கும் தமக்கும் ஆபத்தை விளைப்பதை காணக்கூடியதாயுள்ளது. ஒரு சின்ன வாகனத்தின் எடை 1,300 கிலோ கிராமிற்கும் கூடியதாயுள்ளதுடன், அவை வேகமாக ஓடும் வேளையில் அதனுள் அடங்கி இருக்கும் சக்தியின் ஆற்றல் மிகையானது. இவ்வாற்றல் ஒரு வெடிகுண்டிலும் அதிகமாயிருக்கும். இந்நிலையில் வாகனத்தை செலுத்த முற்படுபவர் மிகுந்த பொறுப்புணர்வுடன் இருத்தல் மிக அவசியமாகும்.

## புலப்படாத இடத்தில் இன்னுமொரு வாகனம் இருப்பின் சமிக்ஞை காட்டுவதன் அவசியம்:

இத்தவறு கொஞ்சம் அதிகமாகவே இடம்பெறுகிறது என்றால் மிகையாகாது. பொதுவாகத் திரும்பும் வேளையில் சமிக்ஞை செய்து காட்டி திரும்புவதை யாவரும் அறிவோம். இது மற்ற சாரதிகளுக்கும் துவிச்சக்கரவண்டி ஓட்டுபவர்களுக்கும் ஏன் நடப்பவர்களுக்கும் உங்கள் நோக்கத்தை அறிவுறுத்தும். ஒரு ஒழுங்கை மாற்றம் செய்வதற்கு முற்படுகையில் முதலாவதாக சாதாரணமாக கண்ணுக்கு புலப்படாத இடத்தை கவனித்து, அங்கு வேறு வாகனம் இல்லாத வேளையில் திருப்பும் சமிக்ஞையைக் காட்டி மெதுவாக நீங்கள் ஒழுங்கை மாறுவது அவசியம்.

மேலே கூறிய விடயம் மிக எளிதாகப்பட்டாலும் பலரும் புலப்படாத இடத்தில் அதாவது Blind Spot-இல் வரும் வாகனத்தில் இடிபட்டு விபத்துக்குள்ளாவது சகஜமாயுள்ளது. இத்தகைய செயற்பாட்டிற்கு விதிவிலக்கு உண்டு என்பதனை நாம் ஏற்கத்தான் வேண்டும். அதாவது பல வாகனங்கள் நெரிச




லாக உள்ள வேளையில் கிடைக்கும் சிறு இடைவெளியில் புகத்தான் வேண்டும். ஆனால் சீரான வேகத்தில் வாகனத்தைச் செலுத்துகையில் புலப்படாத இடத்தில் அதாவது Blind Spot-ல் ஏதாவது வாகனம் உள்ளதா எனக் கவனிக்கத் தவறாதீர்கள்.

## அவசர வாகனங்களுக்கு போதிய வழி விட்டுக் கொடுக்காமை:

பாதை பிரிக்கப்படாத வீதியில் எத்திக்கில் இருந்து அவசர சேவை வாகனம் வந்தாலும் ஒரு பக்கமாக ஒதுங்கி அதற்கு வழிவிடுவது மிகவும் அவசியமாகும். அடிப்படையான விதி என்னவென்றால் அவசர தேவைக்கு செல்லும் தீயணைக்கும் வாகனம், வைத்திய சேவை வாகனம் மற்றும் காவல் வாகனம்

ஆகியவற்றுக்கு வழிவிடுவது அவசியமாகும். அவை சேர வேண்டிய இடத்தை மிகவும் விரைவாக அடைவது அவசியம். பல சமயங்களில் சாரதிகள் போட்டிக்கு செல்வது போல் வேகமாக செல்வதும், சைரன் ஊதிக்கொண்டு செல்லும் அம்பியூலன்ஸினை முந்துவதையும் காணக்கூடியதாயுள்ளது. மேலும் அவசர வாகனம் தாண்டிய பின் குறைந்தது 150 மீட்டர் இடைவெளிவிட்டு அதனை தொடரலாம். இது வாகனம் ஓட்டும் போட்டி அல்ல.

## இடது ஒழுங்கையை பிடித்துக் கொள்வது:

சில நாடுகளில் ஒரு வாகனத்தை ஓடும் பக்கத்தின் எதிர்ப்பக்கத்தால் முந்துவது ஒரு பெரும் குற்றமாகவே கணிக்கப்படுகின்றது. இச்செயல் மிக ஆபத்தானதாகும். இது பாதை இரண்டாகப் பிரிக்கப்பட்டதன் அடிப்படை நோக்கினை கெடுப்பதாகும். சட்டத்தின் பார்வையில் பாதை இரண்டு ஒழுங்கையாக பிளவுபடுத்தியன் நோக்கம், ஒரு பக்கத்தால் தொடர்ந்து செல்லும் வாகனங்கள் செல்ல, அவற்றை முந்தும் வாகனங்கள், பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்தியபின், எதிர்ப்பக்க ஒழுங்கையால் செலுத்தி, முந்தியபின் தானும் ஓடும் பக்க ஒழுங்கைக்கு வந்து, பயணத்தை தொடர வேண்டும் என்பதாகும்.

## தவறாக அவசர ஒளிகளைப் பாவித்தல்:

தேவைக்காகப் பாவிக்கப்படும் அவசர ஒளிகளை அதாவது Hazard Light-களைப் பாவிப்பது அவசியமே. ஆனால் அவற்றை பாதையிலிருந்து விலகி நிறுத்தி வைக்கும் வேளைகளில் மட்டுமே பாவிக்க வேண்டும். வாகனத்தைச் செலுத்திக் கொண்டு அவசர விளக்கைப் போடுவது தவறாகும். அவசர ஒளி, மற்றைய சராதிகளுக்கு பாதையில் ஏதோ தடையுள்ளதாய் அல்லது உங்களுக்கு ஏதோ கஷ்டமுள்ளதாய், அதனை மற்றவர்களுக்கு அறிவிப்பதாய் இருக்கும். உங்களுக்கு பழக்கமில்லாத தெருவில் செல்லும்போது அன்றேல் சீதோஷ்ண நிலை தவறாய் இருக்கும்வேளை அதைப் பாவிக்கும்போது அவதானமாக இருக்கவேண்டும். காரணம், நீங்கள் திரும்புவதற்கு அறிவிக்கும் வேளை அது பயனற்றுவிடும். திருப்பும் சமிக்ஞை மற்றும் நான்கு பக்க ஒளிரும் பார்வையால் செய்யும் அறிவுறுத்தல் என்பதை மறக்கக்கூடாது. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் எதிரில் செல்லும் வாகனம் திடீர் என நிறுத்தினால் அவசர ஒளிகளை ஏற்றுவது ஏற்கக்கூடியதே. அதனால், பின்னால் வரும் வாகனம் வேகத்தைக் குறைக்க கூடியதாயிருக்கும்

## தவறாக இணைவது:

வாகனங்கள் தொடராகச் செல்லும்போது கோட்டிற்கு மேலால் பாய்ந்து தொடராக வரும் வாகனங்களுக்குள் இடைச் செருகுவது, அல்லாவிடில் தொடராக வாகனங்கள் செல்லும் வேளையில் திடீர் என வாகனத்தை நிறுத்துவது போன்ற செயல்களைச் செய்வதனால் விபத்துகள் ஏற்படுவதை பெரிதளவும் காணக்கூடியதாயுள்ளது. நெடுஞ்சாலைகளுடன் இணையும்போது நெடுஞ்சாலை வாகனங்களுக்கும் திடீர் என இடைச் செருகுவது விபத்தில் முடியும். அப்படிச் செருகும் வேளையில் உங்கள் வாகன வேகத்தை பெருவீதி வாகன வேகத்திற்கு இணையாகக் கூட்டுவது அவசியம். அதன் பின் தான் பெருவீதி வாகனங்கள் செல்லும் ஒழுங்கையில் இணையலாம். பல வாகன ஒழுங்கைகள் ஒன்றாகக் குவியும் வேளையில் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவோமானால் அது மேலும் அதிகமாக இடர்களை ஏற்படுத்தும். இத்தருணங்களில் வாகனத் தொடர்கள் நீண்டுகொண்டு செல்ல இரு பக்கத்தாலும் அந்த ஒழுங்கையில் இணையும் வேளையில் விபத்து ஏற்பட்டு பிரச்சினைகள் அதிகரிக்கும்.

ஓடும் வேளையில் வரிசையில் இணைவது ஒரு கலை. அதில் வல்லவரானால் ஓடும் வாகனங்களுடன் இணைந்து நேரத்தை சேமிக்கலாம்.

அவதானமாக வாகனத்தைச் செழுத்தி வளமுடன் வாழ்ந்து மகிழ வாழ்த்துகள்.



senthuran.p@thaiveedu.com





# சூரியக் குடும்பத்தை அறிந்து கொள்வோம்

– குரு அரவிந்தன்

அறிவியல் வளர்ச்சியின் வெளிப்பாடு காரணமாக, நாம் வாழும் சூரியக் குடும்பத்தைப் பற்றி வானியல் சார்ந்து நான் அறிந்து கொண்ட சில விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். வானத்திற்கு எல்லை இல்லை என்றாலும், அதைப்பற்றித் தமிழர்கள் ஆதிகாலத்தில் ஓரளவு அறிந்து வைத்திருந்தார்கள். ஆனால் முன்னேறிய மேலை நாடுகளைப் போல அவற்றை எழுத்து வடிவில் ஆவணப்படுத்த அவர்கள் பெரிதாக முயற்சிக்கவில்லை. ஏடுகளையும், கல்வெட்டுகளையும், சுவர் ஓவியங்களையும் கொண்டுதான் தமிழரின் நீண்டகால வரலாற்றை உலகுக்கு எடுத்துச் சொல்ல முடிகிறது.

அண்டவெளி பற்றி தமிழர்களிடம் இருந்த அறிவும் அது சார்ந்த ஆதாரங்களும் தகுந்த முறையில் பாதுகாக்கப்படவில்லை என்பதை ஓரளவு எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இயற்கையின் கட்டுப்பாட்டில் பூமி இருந்த காலத்தில், பூமியில் இருந்து விண்வெளியைப் பார்த்தால் பகலிலே மேகக்கூட்டமும், சூரியனும், பறவைகளும், இரவிலே பார்த்தால் சில நாட்களில் சந்திரனும், நட்சத்திரங்களும் தெரிந்தன. கண்ணுக்குத் தெரிந்த நட்சத்திரங்கள் சிறு புள்ளிகளைப்போல தெரிந்ததால், அவை சூரியனைவிட அளவில் பெரியவை என்று யாரும் அப்போது நம்பவில்லை. குறைந்த பட்சம் 100 பில்லியன் நட்சத்திரங்களாவது அண்டவெளியில் இருந்தாலும், அவற்றில் சில நட்சத்திரங்களைத் தெரிவு செய்து அதை வைத்துத்தான் தமிழர்கள் திசையறிந்து அந்த நாட்களில் கடலோடினார்கள்.

இயற்கை வழிபாடு காரணமாகத் தமிழர்கள் ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒவ்வொரு பெயர் சூட்டி வழிபட்டார்கள். நவக்கிரகங்கள் என்று குறிப்பிட்டு ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது (Sun, Moon, Mars, Mercury, Jupiter, Venus, Saturn, Raghu, Kethu) என்றும் ஒன்பது கிரகங்களுக்குப் பெயர் சூட்டினார்கள். அதேபோல கிழமைகளுக்கும் கண்ணுக்குத் தெரிந்த கிரகங்களின் பெயர்களைச் சூடினார்கள். இயற்கையின் செயற்பாடுகளை வைத்தே ஜாதகம், சோதிடம் என்றும் கணித்தார்கள்.

பூமி உருண்டை வடிவமாக இருக்கிறது என்பதையே நம்பமறுத்த காலம் ஒன்றிருந்தாலும், அதையெல்லம் கடந்து, வானியல் அறிவியல் வளர்ச்சி காரணமாக, இன்று விண்வெளியுகம் முதலிடத்தைப் பெற்று நிற்கிறது. சந்திரனில் மனிதன் கால் பதித்தான் என்பதை 1969-களில் நம்பமறுத்த நாடுகளும் இருந்தன. இன்று அந்த நாடுகளே சந்திரனுக்கு செயற்கைக் கோள்களை அனுப்பத் தொடங்கி விட்டன. விண்வெளி நோக்கிய அறிவியல் வளர்ச்சி, மனிதரின் அவசிய தேவை காரணமாக மிகவேகமாகவே முன்னெடுக்கப்படுகிறது. காரணம் நாம் வாழும் பூமியில், மனித இனத்திற்கு ஏதாவது நடந்தாலும், மனிதர் பாதுகாப்பாய் வாழ்வதற்கு மாற்றுக் கிரகம்



ஒன்று அவசியம் தேவை என்பதை மனிதர் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

எமக்குக் குடும்பங்கள் இருப்பது போல அண்டவெளியில் உள்ள நட்சத்திரங்களுக்கும் குடும்பங்கள் இருக்கின்றன. நாம் வசிக்கும் பூமி, அண்டவெளியில் உள்ள சூரியக் குடும்பத்தைச் சேர்ந்தது. எங்கள் சூரியக்குடும்பத்தைப் போல, ஏராளமான நட்சத்திரங்களைக் கொண்டதுதான் பால்வெளி அண்டமாகும். சூரியன் சுமார் 4,500 பில்லியன் வருடங்களுக்கு முன் தோன்றியதாகக் கருதப்படுகின்றது. சூரியனின் ஈர்ப்பு விசையால் கவரப்பட்டுச் சூரியனைச் சுற்றிவரும் கோள்களைச் சூரியக் குடும்பம் என்று அழைக்கின்றோம். இதுவரை நடந்த ஆய்வுகளின் படி, இந்த சூரியக்குடும்பம் முக்கியமாக எட்டுக் கோள்களையும் ஐந்து குறுங்கோள்களையும் கொண்டிருப்பதாகக் கணித்திருக்கிறார்கள்.

எமது சூரியக் குடும்பத்தில், சூரியனைச் சுற்றி வரும் எட்டு கோள்கள் உள்ளன. அவற்றின் தூரத்தின் அடிப்படையில் சூரியனிலிருந்து வரிசையாகப் பார்த்தால், முதலில் புதன், அடுத்து வெள்ளி, பூமி, செவ்வாய் (இவை நான்கும் நிலப்பரப்பைக் கொண்டவை) வியாழன், சனி (இரண்டும் வாயுக்கிரகங்கள்) யுரேனஸ், நெப்டியூன் (இரண்டும் பனியாலான கிரகங்கள்) என்ற ஒழுங்கில் அமைந்துள்ளன. இந்த எட்டுக் கிரகங்களும் சூரியனின் ஈர்ப்பால் கவரப்பட்டுச் சூரியனைச் சுற்றி வரு

கின்றன. இதில் முதல் நான்கையும் உள்ளகக் கோள்கள் என்றும், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகிய நான்கையும் வெளிப்புறக் கோள்கள் என்றும் அழைக்கின்றனர்.

இதைவிட சிறிய கோள்களான செரெஸ், புளுட்டோ, ஹௌமியா, மேக்மேக், எரிஸ் (Ceres, Pluto, Haumea, Makemake, Eris) போன்ற சிறிய கோள்களும் இருப்பினும், 2006-ம் ஆண்டு கிரகத்திற்கான வரையறை செய்யப்பட்ட போது, அவற்றை இந்த வகையில் சேர்க்காமல், குறுங்கோள் என்று வகைப்படுத்தி உள்ளனர். இந்தக் குறுங்கோள்களில் புளுட்டோ மிக நீளமான கோளாகப் பட்டியலிடப்பட்டது. இதைவிட சிறிய குள்ளக்கோள்களாக ஓர்கஸ், குவாவர், கொங்காங், செட்னா (Orcus, Quaoar, Gonggong, Senda) போன்றவையும் இனங்காணப்பட்டுள்ளதால் மொத்தம் ஒன்பது குள்ளக் கிரகங்கள் இப்போது சூரியக் குடும்பத்தில் இருக்கின்றன.

சூரியனுக்கு மிக அருகில் உள்ள கிரகத்தைப் புதன் என்று அழைக்கிறோம். இதை ஆங்கிலத்தில் Mercury என்று அழைப்பார்கள். இது சுமார் 36 மில்லியன் மைல் தொலைவில் உள்ளது. சூரியனுக்கு மிக அருகில் இது இருந்தாலும், இதைச் சூரியக் குடும்பத்தில் வெப்பமான கிரகம் என்று சொல்ல முடியாது. காரணம் இதற்கு அடுத்துள்ள வெள்ளிக் கிரகத்தின் வெப்பம் இதைவிட அதிகமானது. சூரியக் குடும்பத்தில் உள்ள எட்டு கிரகங்களில் புதன்தான் மிகச்சிறிய கிரகமாகும். இது எமது சந்திரனை விட சற்று பெரியது. ஆனால் வியாழனின் நிலவுகளில் ஒன்றான 'கனிமீட்டை' விடச் சிறியது. புதன் கிரகத்திற்கு இயற்கை நிலவுகள் கிடையாது.

பூமியைப் போலவே, புதனும் ஒரு கிரகமாக இருப்பதால், அதிக அடர்த்தியைக் கொண்டுள்ளது, மேலும் இது பாறை மற்றும் இரும்புத் தாதுக்களால் ஆனது. அதன் மேற்பரப்பு பூமியின் சந்திரனைப் போலவே மிகவும் பள்ளம் மேடுகளைக் கொண்டது. புதன் சூரியனை 87.97 பூமி நாட்களுக்கு ஒரு முறை சுற்றி வருகிறது, விநாடிக்கு 48 மைல் வேகத்தில் சூரியனைச் சுற்றி வரும். புதன் கிரகத்தின் மேற்பரப்பு வெப்பநிலை 173 முதல் 427 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும். புதன் கிரகத்தின் விட்டம் 3.032 மைலாகும்.

சூரியனுக்கு மிக நெருக்கமான இரண்டாவது கிரகம் வெள்ளியாகும். அதிகாலையில் காணக்கூடியதாக இருப்பதால் இதை விடிவெள்ளி என்றும், ஆங்கிலத்தில் வீனஸ் (Venus) என்றும் அழைப்பர்; இதற்கும் இயற்கை நிலவு கிடையாது. இது சராசரியாக 67 மில்லியன் மைல் தொலைவில் உள்ளது. இதன் வளிமண்டலம் வெப்பநிலையைக் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக வைத்திருப்பதால், சூரிய மண்டலத்தின் வெப்பமான கிரகமாக இது இருக்கிறது. இதன் வெப்பநிலை சுமார் 462 டிகிரி செல்சியஸ்ஸாக இருப்பதால் நீரை ஆவியாக்குவதற்குத் தேவையான வெப்பத்தைவிட சுமார் நான்கு மடங்கு அதிகமாக இருக்கிறது. வெள்ளியின் விட்டம் 7.521 மைல் என அளவிடப்பட்டுள்ளது. இது 225 நாட்களுக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றி வருகிறது. அதன் வளிமண்டலம் மிகவும் அடர்த்தியானது, முக்கியமாகக் கார்பன் டை ஆக்சைடு, நைட்ரஜன் மற்றும் சல்பூரிக் அமிலம் கலந்த மேகங்களைக் கொண்டது.

நாங்கள் வசிக்கும் பூமியைப் புவி என்றும் அழைப்பர். உட்கோள்களில் மிகப்பெரியதும் மிக அடர்த்தியானதாகவும் இருக்கிறது. சூரியக் குடும்பத்தில் உள்ள கிரகங்களில் உயிர்கள் வாழ்வதற்கான திரவநீர், உயிர்வளி போன்ற தகுதிகள் இருப்பதால், இதுவரை எமக்குத் தெரிந்த வகையில் புவியில் மட்டும் தான் உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. உயிரினங்கள் வாழத் தேவையான 21 சதவீதம் உயிர்வளியைக் கொண்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும். இதன் இயற்கைத் துணைக் கோளை சந்திரன் அல்லது நிலா என்று அழைக்கின்றோம். பூமி தன்னைத்தானே சுற்றுவதால் இரவு பகலும், சூரியனைச் சுற்றி வருவதால் கால நிலை மாற்றங்களும் ஏற்படுகின்றன.

உயிர்கள் வாழக்கூடியதாக ஒரு கிரகம் அமைய வேண்டுமானால் அதற்குச் சில தனிப்பட்ட பண்புகள் இருக்க வேண்டும். தண்ணீர், காற்று, சூரிய ஒளி, அளவான வெப்பநிலை, உயிர் வாழ்வதற்குத் தேவையான வேதியல் கூறுகள், போதுமான ஈர்ப்புசக்தி, கதிர்வீச்சுப் பாதுகாப்பு, நிலையான சுற்றுப் பாதை, மற்றும் தேவையான இயற்கை வளங்கள் போன்ற முக்கியமான காரணிகள் அவசியமானதாகும். இவை புவியில் இருப்பதால்தான் இங்கு உயிரினங்களால் வாழமுடிகிறது.

புவிக்கு அடுத்து இருக்கும் செவ்வாய்க் கிரகம் புவியின் வெளிப்பரப்பில் இருக்கிறது. இது புதனைவிடப் பெரிதாகவும் புவி மற்றும் வெள்ளி ஆகிய இரண்டைக் காட்டிலும் சிறிய கோளாகவும் உள்ளது. செவ்வாயின் வளிமண்டலத்தில் கரியமில வாயுவே அதிகம் உள்ளது. செவ்வாய்க் கிரகத்திலும் எரிமலைகளும் பள்ளத்தாக்குகளும் காணப்படுகின்றன. செவ்வாய்க் கிரகத்திற்கு 'டைமோஸ்' மற்றும் 'போபோஸ்' என்றழைக்கப்படும் இரண்டு நிலாக்கள் உண்டு.

கிரகங்களின் வரிசையில் அடுத்து இருப்பது வியாழன். இது 318 மடங்கு புவியின் நிறையைக் கொண்டுள்ள கோளாகும். இது ஐட்ரசன் மற்றும் ஈலியம் இரண்டாலும் உருவாகியுள்ளது. வியாழன் கிரகம் 95 நிலவுகளைக் கொண்டுள்ளது. இதில் மிகப்பெரிய நிலவுகளான கனிமீடு, கலிஸ்டோ, அயோ, மற்றும் ஐரோப்பா ஆகிய நான்கும் எரிமலை, மற்றும் வெப்பமூட்டல் போன்ற செயற்பாடுகளில் பூமியைப் போலவே இருக்கின்றன.

அடுத்து இருக்கும் சனிக்கிரகம் தன்னைச் சுற்றி பனிப்படலத்தையும், வளையத்தையும் கொண்டது. இதன் நிறையைப் பொறுத்த மட்டில் மூன்றாவதாக உள்ளது. சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்களில் சனி மட்டுமே நீரை விட அடர்த்தி குறைந்த கோள் ஆகும். இதற்கு சுமார் 146 நிலாக்கள் உள்ளன. அவற்றில் 'டைட்டான்' (Titan) மற்றும் 'என்சடலாடஸ்' ஆகிய நிலவுகளில் புவியியல் தொடர்பான செயல்பாடுகள் இப்பொழுதும் நடப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளன.

யுரேனஸ் வெளிப்புறக் கிரகங்களுள் மிக மென்மையானதாகும். இதன் தனிச்சிறப்பு என்னவென்றால், சூரியனை அதன் வட்டப்பாதையில் அதன் பக்கமாகவே சுற்றிவலம் வருவதேயாகும். இக் கோள் மிகக்குளிர்ந்த மையப்பகுதியைக் கொண்டுள்ளது மட்டுமல்ல, அண்ட வெளியில் மிகக்குறைந்த வெப்பத்தையே கதிர்வீச்சாக வெளியிடுகிறது. இது 28 நிலாக்களைக் கொண்டுள்ளது.

கடைசியாக இருக்கும் நெப்டியூன், யுரேனசைக் காட்டிலும் சிறிதாக இருந்தாலும், புவியை விட பதினேழு மடங்கு நிறையைக் கொண்டுள்ளதால் அதிக அடர்த்தியுடன் உள்ளது. வியாழன் மற்றும் சனியை விட உள்வெப்பக் கதிர்வீச்சு அதிகமாக உள்ள நெப்டியூன் 16 நிலாக்களைக் கொண்டுள்ளது. இதன் பெரிய நிலவான ட்ரைட்டான் (Triton) புவியியல் செயல்பாட்டுடன் உள்ளதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இது வெந்நீர் ஊற்றுகள், நீர்ம நைட்ரஜன் போன்றவற்றைக் கொண்டுள்ளது. இந்த ட்ரைட்டான் மட்டும் தான் அதன் வட்டப்பாதை

யில் பின்னோக்கிச் செல்லும் நிலாவாக இருக்கிறது.

சூரியக்குடும்பத்துக் கோள்களில் வெள்ளி மற்றும் யுரேனஸ் கோள்களைத் தவிர பிற கோள்கள் அனைத்தும் சூரியனை எதிர்க் கடிகாரச்சுற்றில், அதாவது மேற்கிலிருந்து கிழக்காக தமது அச்சில் சுற்றி வருகின்றன.

சிறுகோள்கள், வால் நட்சத்திரங்கள், சென்டார்ஸ், விண்கற்கள் போன்ற ஏராளமான சிறிய சூரிய மண்டல உடல்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன. இவற்றில் சில சிறுகோள்பட்டியிலும், ஏனையவை கைபர்பட்டியிலும் இருக்கின்றன. இந்த சிறுகோள்பட்டி செவ்வாய் மற்றும் வியாழன் சுற்றுப்பாதைக்கு இடையிலும், கைபர்பட்டி நெப்டியூன் சுற்றுப்பாதைக்கு வெளியேயும் இருக்கின்றன. இதுவரை சூரிய குடும்பத்தில் உள்ள 8 கோள்களில் 193 நிலாக்களை வானியல் ஆய்வாளர்கள் கண்டு பிடித்து உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். இந்த நிலாக்களை ஆய்வாளர்கள் இயற்கைச் செயற்கைக்கோள் என்று குறிப்பிடுகின்றனர். இனிவரும் காலங்களில் இன்னும் பல நிலாக்கள் கண்டுபிடிக்கப்படலாம். இதில் புதன், வெள்ளி, செரெஸ், மேக்மேக் ஆகியவற்றுக்கு நிலாக்கள் இல்லை. பெரிய நிலாவான வியாழனின் 'கனிமீடு' நிலா புதன் கோளைவிட அளவில் பெரியதாகும். இரண்டாவது பெரிய நிலா சனிக்கிரகத்தின் டைட்டனாகும். மூன்றாவது பெரிய நிலா வியாழனின் காலிஸ்டோவாகும். எங்கள் நிலா இப்போது ஐந்தவது இடத்தில் இருக்கிறது. நவீன தொழில் நுட்பத்தின் உதவியோடு வாயேஜர்-1, வாயேஜர்-2 ஆகியன பல புதிய நிலாக்களைக் கண்டு பிடித்திருக்கின்றன.

நெப்டியூனின் சுழற்சிப் பாதைக்கு அப்பால் உள்ள, பனிப் பொருட்களைக் கொண்ட ஒரு பகுதியை கைபர்பட்டி என்று அழைக்கிறார்கள். இது சூரியனில் இருந்து 30 வானியல் அலகுகள் தொடக்கம் 50 வானியல் அலகுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ளது. இப்பகுதியில்தான் புளுட்டோ, ஹௌமியா மற்றும் மேக்மேக் போன்ற குறுங்கோள்கள் உள்ளன. சூரியனுக்கு மிக அருகாமையில் இருக்கும் நட்சத்திரம் என்று பார்த்தால், நான்கு ஒளியாண்டுகளுக்கு அப்பால் பாராக்ஸிமா செண்டாரி என்ற நட்சத்திரம் இருப்பதை இப்போது நவீன ஆய்வுகள் மூலம் எம்மால் அறிய முடிகிறது. சூரியனின் உள்மையப் பகுதியில் இருக்கும் எரிபொருளான ஹைட்ரஜன் தற்போது ஹீலியமாக மாற்றப்படுகிறது. காலம் செல்லச் செல்ல இந்த எரிபொருள் முடிவுறும் போது, பெரிய மாற்றங்கள் ஏற்படலாம் என ஆய்வாளர்கள் நம்புகின்றனர். சூரியனின் அதிகரித்த வெப்பம் காரணமாக பூமியில் உள்ள தண்ணீர் விரைவாக ஆவியாக்கப்படலாம். இதனால் உயிரினங்கள் அழியக்கூடிய வாயப்புகள் அதிகமாகலாம். இவை நடப்பதற்கு பில்லியன் ஆண்டுகள்கூட எடுக்கலாம்.


**உசாத்துணை:**

- https://en.wikipedia.org/wiki/Solar_System





kuruaravindan@thaiveedu.com







உலகின் தொழில்நுட்ப வளர்ச்சியின் முக்கிய மைல் கல்லாக ஆளில்லா விமானங்கள் என்று அழைக்கப்படுகின்ற ட்ரோன்கள் விளங்குகின்றன. இன்று தன்னுடைய பல்வேறு தேவைகளுக்கு மனிதர் இவற்றைப் பயன்படுத்துகிறனர்.

காணொளி தயாரிப்பு, பொருள் விநியோகம், மீட்புப் பணிகள், போர் எனப் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், இவ்வாறான ஆளில்லா விமானங்களின் மர்மமான சஞ்சரிப்பு அமெரிக்க மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்பியுள்ளது. அண்மையில் அமெரிக்க ஊடகங்களில் பெரிதும் பேசப்பட்ட இந்த ஆளில்லா விமான தென்படுகைகள் தொடர்பில் எவ்வாறான கருத்துப் பரிமாற்றங்கள் சமூக வெளியில் காணப்படுகின்றன என்பது குறித்த ஊடாடலாகவே இந்தப் பத்தி அமைந்துள்ளது.

அமெரிக்காவின் நியூ ஜெர்சி மற்றும் பிற மாநிலங்களில் ஒரு மாதத்திற்கு முன்னதாக வானில் ஆளில்லா விமானங்கள் அல்லது ட்ரோன்கள் தென்பட்டமை குறித்த மர்மம் தொடர்ந்தும் நீடித்து வருவதுடன், நாட்டு மக்களையும் அச்சத்தில் ஆழ்த்தி பீதியடையச் செய்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அமெரிக்க அதிகாரிகளால் திட்டவட்டமான பதில்களை வழங்க முடியவில்லை. எனினும், ‘இவை பொது அல்லது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் என்று கருதவில்லை’ என அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

‘விமானங்களின் தென்படுகைகள் பொதுவாக ஆளில்லா விமானங்களாகத் தவறுதலாக அடையாளப்படுத்தப்படுவதாக’ உள்நாட்டுப் பாதுகாப்புச் செயலர் அலெஜான்ட்ரோ மயோர்காஸ், தெரிவித்திருந்தார்.

‘இந்த ஆளில்லா வான்வழி வாகனங்களுடன் வேறு நாடுகளுக்குத் தொடர்பு இல்லை என்பது தனக்குத் தெரியும்’ என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

‘ஆளில்லா விமானங்கள் தொடர்பான அறிக்கைகளைக் கையாளுகை மற்றும் தகவல்களைப் பேணுதல் தொடர்பில் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுவதில்லை’ என சில அரசியல்வாதிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

## ட்ரோன்கள் எங்கு தென்பட்டன?

கடந்த நவம்பர் 18-ம் திகதி முதல் அமெரிக்காவின் நியூ ஜெர்சியில் டசின் கணக்கான ட்ரோன் தென்படுகைகள் பதிவாகியுள்ளன, ஆனால் ஏனையவை அமெரிக்காவின் வட-கிழக்கில் பதிவாகியுள்ளன.

சில விமானங்கள் Picatinny Arsenal என்ற அமெரிக்காவின் முக்கியமான இராணுவ ஆராய்ச்சி நிலையத்திற்கு அருகாமையில் தென்பட்டுள்ளதுடன், நியூ ஜெர்சி, பெட்மின்ஸ்டர் நகரில் அமைந்துள்ள, அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் டிரம்பிற்கச் சொந்தமான கோல்ஃப் மைதானத்திற்கு அருகிலும் தென்பட்டுள்ளன.

பெட்மின்ஸ்டர் மற்றும் பிகாடின்னி ஆகிய பகுதிகளில் ஆளில்லா விமானங்கள் பறப்பதனைத் தடைசெய்து தற்காலிக கட்டுப்பாடுகளைச் சமஷ்டி விமானசேவை நிர்வாக நிறுவனம் விதித்துள்ளது.

## வேறு பல மாநிலங்களிலும் காட்சிகள் பதிவாகியுள்ளன:

நியூயோர்க் நகரின் பிராங்க்ஸில், கடந்த டிசம்பர் 12-ம் திகதி பல ட்ரோன்கள் பறந்ததாகக் கூறப்படுகிறது.

‘ட்ரோன் செயற்பாடு காரணமாக நியூயோர்க் மாநிலத்தில் உள்ள ஸ்டீவர்ட் ஏர்ஃபீல்ட் டிசம்பர் 13 அன்று சுமார் ஒரு மணி நேரம் மூடப்பட்டது’ என்று ஆளுநர் கேத்தி ஹோச்சுல் குறிப்பிட்டிருந்தார்.

சந்தேகத்திற்கு இடமான ஆளில்லா விமானத்தின் செயற்பாட்டைக் கனெக்டிகட் பொலிஸார் உறுதிப்படுத்தினர். க்ரோடன் மற்றும் நியூ லண்டன் நகரங்களுக்கு அருகில் ட்ரோன்களைக் கண்டறியும் கட்டமைப்பு தற்பொழுது நிறுவப்பட்டுள்ளது.

மேரிலெண்டில், குடியரசுக் கட்சியின் முன்னாள் ஆளுநர் லாரி ஹோகன் டேவிட்சன் வில்லில் உள்ள தனது வீட்டின் மீது டசின் கணக்கான ட்ரோன்கள் இருப்பதைப் பார்த்ததாகக் கூறினார்.

பாஸ்டனின் மாசசூசெட்ஸில், உள்ள லோகன் சர்வதேச விமான நிலையத்தின் வான்வெளிக்கு அருகே ட்ரோன்களைக்கொண்டு ஆபத்தான செயற்பாடுகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த 14-ஆம் திகதி இரண்டு பேரை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

பிலடெல்பியா உட்பட கிழக்கு பென்சில்வேனியாவில் இவ்வாறான பல ஆளில்லா விமானக் காட்சிகள் தென்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

வேர்ஜீனியாவில் உள்ள அமெரிக்க இராணுவ முகாமிற்கு அருகாமையில் மர்மமான ட்ரோன்கள் 17 நாட்கள் தென்பட்டதாகக் கடந்த ஒக்ரோபரில், வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் தகவல் வெளியிட்டிருந்தது.

நவம்பர் பிற்பகுதியில், இங்கிலாந்தில் உள்ள மூன்று அமெரிக்க விமானத் தளங்களிலும் ட்ரோன்கள் தென்பட்டன. இந்த விடயத்துடன் அரசாங்கத்திற்குத் தொடர்பிருக்கலாம் என பிரித்தானிய பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

டிசம்பரின் தொடக்கத்தில் ஜெர்மனியில் உள்ள ராம்ஸ்டீன் அமெரிக்க இராணுவத் தளத்திற்கு அருகிலும் ட்ரோன்கள் தென்பட்டுள்ளன.

## ட்ரோன்கள் பற்றி ஆய்வாளர்களின் நிலைப்பாடு என்ன?

‘இந்த ட்ரோன்களினால் பொதுப் பாதுகாப்பிற்கு எவ்வித அச்சுறுத்தல்களும் கிடையாது’ என அமெரிக்க பாதுகாப்பு முகவர்கள் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தனர்.

‘இந்த ட்ரோன்கள் தென்படுகை தொடர்பில் சிறிதளவு மிகைப்படுத்தப்பட்ட எதிர்வினை ஏற்பட்டுள்ளதாகத் தாம் கருதுவதாக’ அமெரிக்க புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

‘வடக்கு-கிழக்கில் ஆளில்லா விமானங்கள் தென்பட்ட விவகாரத்திற்கும் வெளிநாட்டுத் தலையீடுகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது’ என்பதே தமது நிலைப்பாடு என உள்நாட்டுப் பாதுகாப்புச் செயலர் தெரிவிக்கின்றார்.

மேலும் ‘இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்துவதில் நாங்கள் விழிப்புடன் இருக்கின்றோம்’ எனக் குறிப்பிட்டிருந்ததோடு ‘இந்த விடயம் தொடர்பில் கரிசனை கொள்ள வேண்டியேற்பட்டால், ஏதேனும் வெளிநாட்டு தலையீடு அல்லது குற்றச் செயல்களை நாங்கள் கண்டறிந்தால், அதற்கேற்ப அமெரிக்க மக்களுடன் தொடர்புகொண்டு அறிவுறுத்துவோம்’ எனவும் தெரிவித்திருந்தார்.

‘உலங்கு வானூர்திகள் மற்றும் வானொலி அலை போன்ற பாரம்பரிய முறைகளால் கண்டறியப்படுவதைத் தவிர்ப்பதற்காக ட்ரோன்கள் உருவாக்கப்பட்டதாக’ நியூ ஜெர்சி சட்டமன்ற உறுப்பினர் டான் ஃபேன்டாசியா கூறினார்.

‘இந்த வகை ஆளில்லா விமானங்களின் விட்டம் 6 அடி (1.8 மீ) வரை இருப்பதாகவும், விளக்குகள் அணைக்கப்பட்டு, ஒருங்கிணைந்த முறையில் செயல்படுவதாகவும்’ அவர் மேலும் தெரிவித்திருந்தார்

‘கடந்த ஆண்டு ட்ரோன்களை இரவில் பறக்க அனுமதி வழங்கியதனால் அதிகளவில் ட்ரோன்களை அவதானிக்க முடிவதாக’ செயலர் Mayorkas தெரிவித்திருந்தார்.

‘இப்போது மக்கள் முன்பு இருந்ததை விட அதிகமான ட்ரோன்களைப் பார்ப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம், குறிப்பாக விடியற்காலையில் இருந்து மாலை வரை,’ என்று அவர் மேலும் கூறுயிருந்தார்.

## எங்கிருந்து வருகின்றன?

அவற்றை இயக்குவது யார் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

‘அட்லாண்டிக்கில் காணப்படும் ஈரானிய கப்பலில் இருந்து ட்ரோன்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கலாம்’ என குடியரசுக் கட்சியின் நியூ ஜெர்சி பிரதிநிதி ஜெஃப் வான் ட்ரூ தெரிவித்திருந்தார். அதே நேரத்தில் ‘சீனாவிலிருந்து இந்த ட்ரோன்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கலாம்’ என இல்லினாய்ஸ் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ராஜா கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டிருந்தார்.

பென்டகன், வெள்ளை மாளிகை மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை அனைத்தும் ‘இந்த பொருட்கள் வெளிநாட்டிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டமைக்கான சாட்சியங்கள் எதுவும் இல்லை’ என்று வலியுறுத்தியுள்ளன.

கடந்த நவம்பர் 30 அன்று சாண்டா பார்பராவுக்கு அருகில் அமைந்துள்ள வாண்டன்பெர்க் விண்வெளிப் படைத்தளத்தின் மீது ட்ரோனைப் பறக்கவிட்டு புகைப்படம் எடுத்ததாக வடக்கு கலிபோர்னியாவைச் சேர்ந்த நபர் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

39 வயதான சீன நாட்டவரான யின்பியாவோ சோவ் என்ற நபரே, சீனாவுக்கு விமானம் ஏறுவதற்கு சற்று முன்பு கைது செய்யப்பட்டார்.

எனினும், இந்தச் சம்பவத்திற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளில் ட்ரோன் தென்படுவதாகக் கிடைக்கும் அறிக்கைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

## ட்ரோன்களை நிறுத்த முடியுமா?

‘அரசாங்கத்திற்குத் தெரியாமல் ஆளில்லா விமானங்கள் பறக்க முடியாது’ என அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ‘பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் அல்லது அவற்றை சுட்டு வீழ்த்த வேண்டும்’ என ட்ருத் சமூக ஊடகத்தில் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.

‘ஆளில்லா விமானங்களைச் சுட்டு வீழ்த்த வேண்டும்’ என ஜனநாயகக் கட்சியின் செனட்டர் ரிச்சர்ட் புளூமென்டலும் கருத்து வெளியிட்டுள்ளார்.

இருப்பினும் ட்ரோன்களை சுட்டு வீழ்த்துவது சட்டவிரோதமானது என்பது குறிப்பிடத்தக்கது.

ட்ரோன்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாநிலங்களை அனுமதிக்குமாறு மத்திய அரசுக்கு நியூயோர்க் மாநில ஆளுநர் ஹோச்சுல் அழைப்பு விடுத்துள்ளார்.

‘மத்திய அரசாங்கம் நியூயார்க் மற்றும் நியூ ஜெர்சிக்கு ட்ரோன் கண்டறிதல் அமைப்புகளை அனுப்ப வேண்டும்’ என்று செனட் பெரும்பான்மைத் தலைவர் சக் ஷுமர் கோரியுள்ளார்.

ஒரு அறிக்கையில், ‘ட்ரோன் ஒப்ரேட்டர்கள் பாதுகாப்பற்ற அல்லது ஆபத்தான செயற்பாடுகளில் ஈடுபட்டால் $75,000 வரை அபராதம் விதிக்கப்படும்’ என்றும் ‘அவர்களின் ட்ரோன் செலுத்துவதற்கான உரிமச் சான்றிதழ்கள் ரத்து செய்யப்படும்’ என்றும் மத்திய விமான சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

எனினும் இந்த மர்ம ஆளில்லா விமானங்கள் எவை அல்லது எங்கிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பது பற்றிய விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

வெளிநாட்டுத் தொடர்பு கிடையாது எனவும், இவற்றினால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் கிடையாது எனவும் ஊகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்த போதிலும் திடமான வகையில் எவ்வித விபரங்களும் வெளியிடப்படவில்லை.

உலகின் மிக அதி நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட அமெரிக்கா போன்றதொரு வல்லரசு நாட்டினால் சிறிய அளவிலான இந்த ஆளில்லா விமானங்கள் எங்கிருந்து வருகின்றன, யாரால் அனுப்பி வைக்கப்படுகின்றன என்பது பற்றிய தகவல்களைக் கண்டறிய முடியாத நிலைமை தொடர்வது, அமெரிக்க மக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.



jeyaseelan.s@thaiveedu.com





# விரல்களே கண்கள்

## உலக பிரெய்லி நாள்

– சி. நற்குணலிங்கம்

பார்வைத்திறன் சவால் உடையவர்கள், தொடக்கத்தில் எல்லா விடயங்களுக்கும் மற்றவர்களது உதவியை நாட வேண்டிய சூழ்நிலை இருக்கும். போகப்போக இவர்கள் எல்லா விடயங்களையும் யாருடைய உதவியும் இல்லாது தாங்களாகவே செய்யப் பழகிக்கொள்வார்கள். ஆனால் சுய மாகப் படிக்க மட்டும் அவர்களால் முடியவில்லை. பார்வை இல்லாமல் கற்பது என்பது முடியாத காரியமாக இருந்தது. இதற்கு விடிவு உண்டா என ஏங்கிய காலம் ஒன்று இருந்தது. இது இப்படி இருக்க, 1809-ல் பிரான்ஸ் நாட்டில் பரிஸ் நகரத் திற்கு அண்மையில் உள்ள ஒரு சிறு கிராமத்தில் குழந்தை ஒன்று பிறந்தது. அந்தக் குழந்தைக்குப் பெற்றோர் லூயிஸ்பி ரெய்லி (LOUISBRAILLE) எனப் பெயர் வைத்தார்கள். பிறந்த பொழுது அந்தக் குழந்தை நல்ல ஆரோக்கியமாகவும், நல்ல கண் பார்வை உடையதாகவும் இருந்தது. பிரெய்லியின் தந்தை தோற்பொருட்களைத் தயாரிக்கும் தொழிலாளி. பிரெய்லிக்கு மூன்று வயதாக இருந்தபோது தந்தையின் தோற்பொருட்களைச் செய்யும் கருவி ஒன்றை எடுத்து விளை யாடிக்கொண்டிருந்தவேளை தற்செயலாக அந்தக் கருவி பிள்ளையின் கண்ணில் குத்தியது. பிள்ளைக்கு உடனடியாக வைத்தியம் பார்த்தபோதும் கொஞ்சம், கொஞ்சமாக கண் ணில் பாதிப்பு உண்டாக்கத் தொடங்கியது. ஐந்து வயதாகும் போது பிள்ளையின் பார்வை முழுமையாகப் பறிபோனது.

பார்வை போனாலும் பிரெய்லியின் தன்னம்பிக்கை குறைய வில்லை. பார்வைத்திறனை இழந்தாலும் பள்ளியில் சிறந்த மாணவனாக இருந்தான். ஆனால் பார்வையற்ற மாணவ னுக்கு சாதாரண மாணவர்கள் படிக்கும் பள்ளி ஒரு சவாலாக இருந்தது. தேவையான சரியான கல்விமுறை தனக்கு கிடைக் கவில்லை என்பதை பிரெய்லி புரிந்துகொண்டான். அவனுக் குப் பத்து வயது இருக்கும்போது 1819-ல் பாரிசில் இருக் கும் ROYAL INSTITUTE FOR BLIND YOUTH என்னும் பார்வைத்தி றன் சவாலுடைய பிள்ளைகளுக்கான பள்ளியில் சேர்ந்தான். அந்தப் பள்ளியின் நிறுவுநர் வேலண்டின்அவு (VALENTIN-HAUY) பார்வைத்திறன் சவாலுடைய பிள்ளைகளுக்கான சில புத்தகங்களை உருவாக்கி வைத்திருந்தார். பிரெய்லி சேர்ந்த போது அப்பள்ளியில் மொத்தம் 14 புத்தகங்கள் இருந்தன.

சாதாரணமாக நாம் பயன்படுத்தும் எழுத்துகளைப் பார்வைத் திறன் அற்ற குழந்தைகள் படிக்கிறமாதிரி கொஞ்சம் மேடாக அச்சடிக்கப்பட்டிருந்தது இருந்தது. அந்த எழுத்துகளைத்



தொட்டுப் பார்த்து அதன் வடிவத்தை உணர்ந்து இவர்கள் படித்திருக்கலாம். இவர்களுக்கான வாலண்டின்ஹோய் எழுத் துமுறை கடினமாக இருந்தது. படிக்க அதிக நேரம் எடுத்தது. அத்துடன் புத்தகங்களும் மிகவும் கனமாக இருந்தன.

பிரான்ஸ் இராணுவம் பயன்படுத்துகிற NIGHT WRITING முறைபற்றி தெரியவந்தது. இராணுவத்தில் போர் முனையில் இருக்கும் சிப்பாய்க்கு வழக்கமான முறையில் தகவல் அனுப் பினால் இரவு நேரங்களில் அதைப் படிக்க நெருப்பைப் பயன் படுத்துவார்கள். அது எதிரிகளின் படைக்கு இலக்காகிவிடும். இதைத் தவிர்க்கத்தான் இந்த NIGHT WRITING முறையை சார்ல்ஸ்பார்பியர் எனும் பிரெஞ் கப்டன் உருவாக்கியிருந் தார்.

12 புள்ளிகளை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட இந்த முறையால் காகிதத்தில் புள்ளிகள் மேலெழுந்து மேடு மாதிரி ஒரு அமைப்பைக் கொண்டிருக்கும். குறிப்பிட்ட வரி சையில் புள்ளிகள் இருந்தால் அது ஒரு எழுத்தையோ, எண்

ணையோ குறிக்கும். அதேமாதிரி எல்லா எழுத்துகளுக்கும் எண்களுக்கும் புள்ளிகளை வைத்துக் குறியீடுகள் உருவாக் கப்பட்டன. இதை விரலால் தொட்டுப் பார்த்து என்ன தகவல் சொல்லியிருக்கிறது என இரவு நேரத்தில் விளக்கு வெளிச்சம் இல்லாமல் போர் முனையில் இருக்கும் சிப்பாயால் தெரிந்து கொள்ள முடிந்தது.

பார்வைத்திறன் சவால் உடையவர்களுக்கான பள்ளியில் சேர்ந்த இரண்டு வருடத்தில் பிரெய்லி இந்த முறையை முழு மையாகக் கற்றுக்கொண்டார். ஆனால், இந்த முறையிலும் படிக்க நிறைய நேரம் தேவைப்படுவதாக நினைத்து இதே முறையை கொஞ்சம் மாற்றி எளிமையானதாக ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

12 புள்ளிகள்கொண்ட NIGHT WRITING முறைமாதிரி இல்லா மல், ஆறு புள்ளிகள் மட்டும் வைத்து 63 விதமான சேர்க்கை யில் எழுத்துகளையும் எண்களையும் உருவாக்கும் முயற்சி யில் 1824 முதல் 1829 வரை ஈடுபட்டு தனது இந்தப் புதிய முறையை உலகத்துக்கு பிரெய்லி அறிமுகப்படுத்தினார். அறிமுகப்படுத்திய புதிய எழுத்துமுறைக்கு 'பிரெய்லி' என பின்நாளில் இவரின் பெயரை இட்டனர். இப்போது, பிரெய்லி என்பது பார்வையற்றவர்களால் பயன்படுத்தப்படும் தொடுதி றன் எழுத்து முறையாகும். இவ் எழுத்து முறையை அறிமுகப் படுத்தியதோடு நிற்காமல் தன் திறமையால் அவர் படித்த பள்ளியிலேயே வரலாறு, கணிதம் அல்ஜிபுரா, ஜியோமற்றி ஆகிய பாடங்களைப் பிள்ளைகளுக்கு கற்பித்தார். இவர் இசைக் கருவிகளை இயக்குவதிலும் ஆர்வம் கொண்டிருந் தார். ஆர்வம் மட்டுமல்ல அவற்றை இயக்குவதிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். 1829-ல் இசைக் குறியீட்டை உள்ளடக்கிய தனது புதிய அமைப்பை வெளியிட்டார். 1834-இல் இருந்து 1839 வரை கிறிஸ்தவ ஆலயங்கள் பலவற்றில் இசைக் கருவி களை இசைத்தார். பிரெய்லி என்பது ஒவ்வொரு எழுத்தினை யும் எண்ணினையும் இசை, கணிதம் மற்றும் அறிவியல் குறியீ டுகளையும் குறிப்பிடுவதற்காக ஆறு புள்ளிகளைப் பயன்ப டுத்தி அகர வரிசையையும் எண்ணியல் குறியீடுகளையும் தொட்டு உணரக்கூடிய வகையிலான ஒரு பிரதியாகும். அவர் உருவாக்கிய பிரெய்லி எழுத்துமுறைக்கு ஆரம்பத்தில் அவர் கற்ற ROYAL INSTITUTE FOR BLIND YOUTH பள்ளியில் சரி யான வரவேற்புக் கிடைக்கவில்லை. 1854-இல்தான் அந்தப் பள்ளியில் பிரெய்லி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த மகிழ்ச்சியை அவரால் அனுபவிக்க முடியவில்லை. 1852ல் பிரெய்லி சுவாசக் கோளாறு காரணமாக ROYAL INSTITUTE மருத்துவமனையில் காலமாகிவிட்டார். இவர் மறைந்தாலும் 'விரல்களே கண்கள்' என்பது இன்றும் மறையவில்லை.

19-ம் நூற்றாண்டில் பிரெய்லிமுறை உலகம் எங்கும் பயன் பாட்டிற்கு வந்தது. வெறும் புத்தகத்தோடு மட்டும் நிற்காமல் பிரெய்லி தட்டச்சு இயந்திரம், பிரெய்லி விசைப்பலகை எனப் பார்வைத்திறன் சவால் உடையவர்கள் தினசரி வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கு பிரெய்லிமுறை மிகவும் வசதியாகவும், எளிமையாகவும் இருந்தது. இரண்டு நூற்றாண்டுகள் கடந்து இன்றைக்கும் நாட்காட்டி, ஏரிம் புத்தகம் எனச் சாதாரண மக் கள் பயன்படுத்தும் அதே வசதிகளை எவரினதும் உதவி இல் லாமல் இவர்கள் பயன்படுத்த முடிகிறது என்றால் அதற்கு பிரெய்லி கண்டறிந்த கற்றல் முறையே காரணமாகும்.

பிரெய்லியின் சாதனையைப் போற்றும் விதமாக பிறந்த ஊரில் புதைக்கப்பட்ட பிரெய்லியின் உடலை எடுத்துவந்து பரிசில் உள்ள பேந்தியான்சில் (PANTHEON) முழு அரசு மரி யாதையுடன் மறுபடியும் பிரெஞ்சு அரசு அடக்கம் செய்தது. பிரான்ஸில் மிகவும் மரியாதைக்கு உரியவர்களை இங்குதான் அடக்கம் செய்வார்கள். இவரது பங்களிப்பைக் கொண்டாடும் விதமாகவும், 2018-ம் ஆண்டு ஒரு பிரகடனத்தின் மூலமும் ஐ.நா. பொதுச்சபையால் சனவரி நான்காம் திகதியை பிரெய் லியின் கற்றல் முறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் தினமாக தேர்ந்தெடுக்கப்பட்டது. இதில் குறிப்பிடத்தக்க முக் கிய விடயம் என்னவெனில் பிரெய்லி பிறந்த நாளையும் இத்தி கதி குறிக்கிறது. பிரெய்லி தினம் (WORLD BRAILLE DAY) 2019-ம் ஆண்டு ஜனவரி நான்காம் நாள் முதன் முதலாகக் கொண்டாடப்பட்டது.

பார்வை என்பது உயிரினங்கள் அனைத்திற்கும் மிக முக்கிய மான ஒன்று. பார்வை இல்லையென்றால் வாழ்வே இல்லை என்ற முடிவுக்கு வரக்கூடாது. பார்வை இல்லை என்பதை ஒரு பொழுதும் குறைபாடு என்ற அர்த்தத்தில் பார்க்கக்கூடாது. அதனால்தான் பார்வைத்திறன் குறைபாடுடையவர்கள் மாற் றுத்திறனாளிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவ்வாறு தான் அழைக்கவும் வேண்டும். அதுதான் மனிதம். அறிவிய லும், விஞ்ஞானமும் பெருகிவரும் இக்காலகட்டத்தில் மாற் றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் உலகின் முழு நாடுகளி லும் இன்னும் முழுமை பெறவில்லை என்பது வருந்தத்தக் கது. கண் இருந்தும் பார்வை இல்லை எனக் கவலைப்படத் தேவையில்லை. கண் இருந்தும் பார்வையற்றவர்கள்போல் வாழ்கிறார்களே அவர்கள்தான் கவலைப்படவேண்டும், வெட் கப்படவேண்டும். கண்கள் இருந்தும் அதற்கான பயனை வெளிக்கொணரவில்லையாயின், இழந்த கண்களின் செயலை விரல்களால் வெளிக்காட்டுபவர்கள் மேலானவர்களே. அவர் களை நாம் மேலும் உயர்த்தி மதிப்பிட வேண்டும்.

பிரெய்லியின் எழுத்துமுறை ஞானப்பார்வையாக இருந்துவரு கிறது. அவர் எழுத்து வடிவத்தைத் தொலைநோக்குச் சிந்த னையுடன் உருவாக்கினார். இது பல்வேறு மொழிகளில் பார் வைக் குறை உடையவர்க்குப் பெரிதும் பயனளித்துவருகிறது. பார்வை இழந்தோரது வாழ்வில் வெளிச்சம் என்ற ஒன்றைக் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாது. அவர் உயிருடன் இருந்தபோது பேசப்படாத பிரெய்லியின் கண்டுபிடிப்பு அவ ரது மறைவுக்குப்பின் பெரும் புகழைத் தேடித்தந்தது. இருட் டுக்குள் முடங்கிக் கிடக்காமல் விரல்களால் தடவிப்பார்த்து கல்வி கற்பதன்மூலம் வெளிச்சமான முன்னேற்றம் காண உத வும் பிரெய்லி முறைக்கு நன்றி செலுத்தி மகிழ்கின்றனர் உலக மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே உலக நாடு களெங்கும் விரல்களால் கண் திறந்த பிரெய்லி நாளை, ஜன வரி நான்காம் நாள் கொண்டாடுவோமாக.



natkunalingam@thaiveedu.com

# தொடர்கதை

– குமார் புனிதவேல்

சுந்தரம் வாசிப்பதற்கு அன்றைய செய்தித்தாளைக் கையில் வைத்திருந்தாலும் அவரது சிந்தனை யாவும் வேறு எங்கோ லயித்திருந்தது. இரண்டு மாதங்களுக்கு முன் அவரது மனைவி திடீர் என மாரடைப்பால் இறந்து போனாள். அவர்கள் உறவு பள்ளிப்படிப்புக் காலத்தில் மலர்ந்தது. கள்ளமாகக் கடிதம் பரிமாறி, அப்பா அம்மாவுக்குத் தெரியாமல் வளர்ந்த உறவு. சுந்தரம் பல்கலைக்கழகப் படிப்பு முடித்து காதலித்த சாந்தியையே திருமணம் செய்து மகிழ்ச்சியாக வாழ்ந்தார். அவர்கள் தாம்பத்திய வாழ்க்கையில் இரண்டு பையன்கள். அவர்களும் படித்துமுடித்து வெளிநாட்டு வேலை. இருவரும் தத்தமது குடும்பத்தோடு அம்மாவின் இழவு வீட்டிற்கு வந்து கடமைகளைச் செய்துவிட்டு ஒரு வாரத்துள் திரும்பி விட்டார்கள்.

சுந்தரத்திற்கு தனிமை வாட்ட மனம் ஒன்றிலும் அக்கறை இல்லாதிருந்தது. ஓய்வு பெற்ற பின்பும் தொடர்ந்து வேலைக்குச் சென்று வந்த சுந்தரம், மனைவி இறந்தவுடன் வீட்டில் தனிமையில் இருந்தார். செய்த பகுதி நேர வேலையில் இருந்து அவர் விலகவும் இல்லை. ஆனால் வேலைக்கு போவதுமில்லை. கையில் பத்திரிகை விரித்தபடி இருப்பினும் அவரது சிந்தை அவரிடத்தில் இல்லை. அப்போது அவர் கவனத்தை வீட்டுத் தொலைபேசி ஈர்த்தது. அவரை அழைத்தது, அவரது பாடசாலை காலத்திலிருந்து நண்பனாயிருந்த ரவி. அவனுக்குச் சாந்தியையும் நன்கு தெரியுமாதலால் கடந்த கால நினைவுகளை இருவரும் அசைபோட்டுக் கொண்டார்கள். ரவி சில சமயங்களில் அவர்களுடைய காதல் கடிதங்களைப் பரி மாறியதும் உண்டு.

தற்போது, தான் வேலை விடயமாக வருவதால் அடுத்த செவ்வாய்க்கிழமை காலை பதினொரு மணியளவில் எங்கு சந்திக்கலாம் என்று கேட்டான்.

தான் இன்னும் வேலைக்கு செல்வதா, இல்லையா? என்று தீர்மானிக்காததால் வீட்டில்தான் இருப்பதாகவும், வேண்டிய போது வரலாம்' எனக் கூறினார் சுந்தரம்.

சாந்திக்கும் தனக்கும் இடையில் தூதுபோன ரவியின் சிறந்த பங்களிப்பை எண்ணியபடி... அவனை மீண்டும் சந்திக்கும் வேளையை ஆவலுடன் எதிர்பார்த்தபடி இருந்தார் சுந்தரம்.

சொன்னபடி, செவ்வாய் பத்தரைக்கு கதவு தட்டும் சத்தம் கேட்கவும், ஓடிப்போய்க் கதவை திறந்த சுந்தரம்.. அங்கு ரவி நிற்க அவனைக் கட்டித் தழுவினார். பல தசாப்தங்களாகப் போற்றி இருந்த நட்பு அல்லவா?

'Sorry மச்சான், எனக்கு செய்தி கிடைத்தது மரண வீட்டிற்குப் பிறகு தான். So பிள்ளைகள் பாவம், வெளிநாடுகளில் வேலைப் பளுவால் உடனே திரும்பி விட்டார்களாக்கும். உனக்கும் பெரும் இடிதான் 'நீ எப்படி இருக்கிறாய்?' என்ற கேள்வியுடன் முடித்தான் ரவி.

'மச்சான் உனக்குச் சொல்லாமல் யாரிடம் சொல்வது... நான் கடைசி வரையும் எதிர்பார்க்கவில்லை இப்படி நடக்கும் என்று. முதல் நாளும் உற்சாகமாக ஓடி ஆடித் திரிந்தவள்... திடீர் என்று போய் விட்டாள்.

இருவரும் நீண்ட நேரம் உரையாடினார்கள்.

தூதுபோன ரவியின் பங்களிப்பில் தொடங்கி அவளின் இறுதி நாள் வரை... வெறுப்பின் விளிம்பில் இருந்தது சுந்தரத்தின் பேச்சு.

நீ ஒரு மனோதத்துவ டாக்டர் தானே. எனக்கு ஒரு கேள்வி. உன்னிடம் தான் கேட்க வேண்டும்'. என்று தரையைப் பார்த்தபடி நின்றிருந்தார் சுந்தரம்.

'என்ன சந்தேகம் இருந்தாலும் தயங்காமல் கேள். என்னால் ஆன உதவியை நான் கட்டாயம் செய்வேன்...'

சுந்தரம் தொடர்ந்து தலை குனிந்து தரையைப் பார்த்தபடி கேட்டான், 'மச்சான் எனக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. சாந்தி ஏன் எனக்கு முன் சாக வேண்டும்? நான் வைத்தியனாய் இருந்தாலும் எனக்கு இரத்த அழுத்தம் இருக்கிறது. ஆரோக்கியமாய் இருந்த அவள் ஏன் எனக்குமுன் சாக வேண்டும்?

தனது நண்பனின் மன நிலையை அலசுவதற்கோ அல்லது ஆலோசனை வழங்குவதற்கோ ரவி முனையவில்லை. மெதுவாக தான் அமர்ந்திருந்த இருக்கையை விட்டு எழுந்தபடி 'மச்சான், எனக்கு ஒரு சந்தேகம், சாந்தி இறப்பதற்கு முன்பாக நீ இறந்து இருந்தால், அவள் தனித்து விடப்பட்டு, பிள்ளைகளும் இல்லாமல்... வாழ்க்கை எப்படி போய் இருக்கும்? நீ அதை யோசிச்சுப் பாக்கவில்லையா?

அந்த கேள்வியைக் கேட்டதுமே சுந்தரம் நிலைகுலைந்து போனார். ஒரு சில நிமிடம் சுவரில் மாட்டி இருந்த சாந்தியின் பெரிய படத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, 'ஐயோ! அது பெரும் கொடுமையாய் போயிருக்கும் ரவி. உனக்கு சாந்தியை தெரியும் தானே! மூக்கைப் பிடித்தால் வாயை திறக்கத் தெரியாது. நான் இல்லாமல் அவளால்

வாழவே முடியாது. பாவம் சுருண்டு போயிருப்பாள்' என்றார்.

ரவி, கதவை நோக்கி நடந்தபடி சொன்னான், 'சுந்து, நீ எவ்வளவு பெரிய சுமையை சாந்தியின் தோளில் இருந்து எடுத்துச் சுமக்கிறாய் என்று யோசித்துப் பார். வாழ்க்கையை வெறுக்கும் முன்பு, நீ செய்த தியாகம் தான் தொடர்ந்து வாழ்வது என்று எண்ணினால், மனதில் வந்த வெறுப்பு அடங்கி அமைதி நிலவும். வாழ்க்கையும் தொடரும்' என்று கூறியபடி விடை பெற்றுச் சென்றான் ரவி.

அவனுக்கு விடை கொடுத்து அனுப்பிய சுந்தரம் மீண்டும் அறையில் வந்த அமர்ந்தபடி ஆழ்ந்த சிந்தனையில் ஈடுப்பட்டார். 'மரணம் ஏற்பட்ட பாதிப்பால்தான் சாந்தியை நொந்து கொண்டேன். ஆனால், அவள் இங்கு தனித்து வாழ்ந்தால் எவ்வளவு வேதனைப் படுவாள்... தனியாக இருந்து கடைத் தெருவுக்குப் போவதானாலும் வங்கி, வேலை... எதுவானாலும் அவளால் முடியவே முடியாது. ஆனால், அவள் என்றும், எப்போதும் தனக்கு ஒத்தாசை புரிவதிலேயே மகிழ்ச்சியாக இருந்தாள் என்று பட்டது அவருக்கு.
ஓர் உண்மை புலப்பட்டது. தான் இறந்த பிறகு, என் வேதனையை பார்த்துத்தான் அவள் ரவியை அனுப்பி இருக்கிறாள். அவள் என்றும் என் கூடவே இருக்கிறாள் என்று எண்ணினார். சுவரில் மாட்டியிருந்த சாந்தியின் படத்தை வணங்கிக் கொண்டு, 'சாந்தி உன் எண்ணம் போலவே, நேரம் வரும்வரை இருந்து எங்கள் பிள்ளைகளை வழி நடத்துகிறேன்' என்று முணுமுணுத்தார். அந்த வினாடி முதல் தான் தனியாக வாழவில்லை சாந்தியும் உடன் இருப்பதாக உணர்ந்தார்.

தனது ஆசனத்திற்கு திரும்பிச் சென்று அமர்ந்து சிந்தித்தார். ஒரு முடிவு எடுத்து,

தொலைபேசியில் வேலைக்கு அழைத்து, தான் நாளை காலை வேலைக்கு வருகிறேன் என்றார். கொஞ்சம் கொஞ்சமாக அவருக்குப் புதிய வாழ்க்கை பழகியது. இறந்த மனைவிக்காக வருந்தினாலும், அவளுக்காக இரங்கி அவளுடன் வாழ்ந்த வாழ்க்கையின் இனிய நினைவுகளில் நிம்மதி அடைந்தார் சுந்தரம்.

வாழ்க்கை என்பது நெடும் பயணம், அதில் பல திருப்பங்கள் வருவது இயல்பு. திருமணம் என்பது ஒருவரின் மரணத்துடன் முடிவது அல்ல. கடந்த காலத்தை அசைபோட்டபடி... பயணத்தைத் தொடர்வது தான் வாழ்க்கை...



kumar.punithavel@thaiveedu.com



# நாசி ஆக்கிரமிப்புக் காலத்தைப் பிரதிபலிக்கும் இரு நோர்வேத் திரைப்படங்கள் - இரசனைக் குறிப்பு

– சர்வேந்திரா

இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் (1940-1945) இடம் பெற்ற நாசி ஆக்கிரமிப்பை மையமாகக் கொண்டு 'Quislings siste dager' (Quisling-இன் இறுதி நாட்கள்), 'Nr24' என இரண்டு நோர்வேஜிய மொழித் திரைப்படங்கள் 2024-ம் ஆண்டு செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் வெளியாகியுள்ளன. செப்ரெம்பர் 2024-ல் வெளியாகிய Quislings siste dager, நாசிகளின் வீழ்ச்சிக் காலத்தில் இருந்து ஆரம்பிக்கிறது. ஒக்ரோபர் 2024-ல் நோர்வே திரையரங்குகளில் வெளியாகிய Nr 24 திரைப்படம் நோர்வே நாட்டை நாசிப்படை ஆக்கிரமித்த காலத்தில் ஆரம்பமாகி நாசிகளின் வீழ்ச்சிக்காலத்துடன் முடிவடைகிறது.

இவ்விரு படங்களதும் ஓர் அறிமுகக் குறிப்பே இப்பதிவு. படம் பார்க்கும் வாய்ப்புள்ளவர்களுக்கு இப்படங்களைப் பார்க்கத் தூண்டும் வகையிலும், பார்க்க வாய்ப்பில்லாதவர்களுக்கு இப்படங்கள் பற்றிய புரிதல் வரும் வகையிலுமான இரசனைக் குறிப்பாக இப்பதிவு எழுதப்பட்டுள்ளது.

## Nr 24– நாசி எதிர்ப்பியக்கப் போராளி!

Nr 24 எனும் நோர்வேஜியத் திரைப்படம் தற்போது நோர்வேயின் திரையரங்குகளில் காண்பிக்கப்படுகிறது. 1940-ல் இரண்டாம் உலக மகாயுத்தக் காலத்தில் நோர்வேயை ஹிட்லர் தலைமையிலான நாசிப் படையினர் ஆக்கிரமித்தபோது நோர்வே மன்னர் உட்பட அரசாங்கத்தினர் பிரித்தானியாவில் தஞ்சம் புகுந்து கொண்டனர். நோர்வே முற்றாக நாசிப் படையினரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டது. Vidkin Quisling நாசிகளுடன் இணைத்து நோர்வேயின் அரச தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றார். வேறு பல நோர்வேஜியர்களும் நாசிப் படைகளுடன் சேர்ந்தியங்குகின்றனர்.

இச்சூழலில், நாசி ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்பியக்கம் ஒன்று இயங்கத் தொடங்குகிறது. பல சிறிய குழுக்களாக இவர்கள் இயங்குகிறார்கள். பிரித்தானியாவில் தஞ்சமடைந்திருந்த நோர்வே அரசாங்கத்தின் ஆதரவுடனும், பிரித்தானியாவின் உதவியுடனும் இயங்கிய இவ் எதிரப்பியக்கத்தில் நாசி ஆக்கிரமிப்புக்கு எதிரான, தேசப்பற்றுள்ள பல நோர்வேஜிய இளைஞர்கள் இணைந்து கொள்கின்றனர். நாசி ஆட்சிக்கு எதிரான நாச வேலைகள்-நாசியுடன் இணைந்து அநீதி புரிவோர்-காட்டிக் கொடுப்போருக்கு எதிரான மரண தண்டனைகள், தகவல் சேகரித்து சுவீடன் ஊடாக பிரித்தானியாவுக்கு அனுப்பி வைத்தல் - இவையே இவ் எதிர்ப்பியக்கத்தின் பிரதான நடவடிக்கைகளாக இருந்தன.

இவ் எதிர்ப்பியக்கத்தில் இணைந்து ஒரு முக்கிய போராளியாகச் செயற்பட்ட Gunnar Sønsteby என்பவரின் எதிர்ப்பியக்க நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே இந்த Nr24 படம் உருவாக்கப்பட்டிருக்கிறது. எதிர்ப்பியக்கத்தில் Gunnar-க்கு வழங்கப்பட்ட Nr24 என்ற இரகசியக் குறியீடே படத்துக்குப் பெயராக வைக்கப்பட்டிருக்கிறது.

Gunnar Sønsteby தான் கல்வி கற்ற உயர்பள்ளியில் மாணவர்கள் மத்தியில் எதிர்ப்பியக்கம் தொடர்பாக உரையாற்றும் காட்சியில் ஆரம்பித்து, அவர் உரையில் கூறும் கதை, காட்சிகளாக திரையில் விரியும் வகையில் திரைப்படம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இத்திரைப்படம் விமர்சகர்கள் மத்தியில் நல்ல விமர்சனங்களைப் பெற்றிருக்கிறது. நான் பார்த்த காட்சி முடிவடைந்த பின்னர் பார்வையாளர்கள் கைகளைத் தட்டி தமது ஆதரவினைத் தெரிவித்தனர்.



இத்திரைப்படத்தின் பல காட்சிகள் எமது தாயகத்தில் இடம் பெற்ற போராட்டத்தை நினைவுபடுத்தின. நாசிகளுக்கு எதிரான நாச வேலைகளில், நாசிகளுடன் இணைந்து சோவியத் யூனியனுக்கு எதிராகப் போராடுவதற்கு 3000 நோர்வேஜிய இளைஞர்களை இணைக்கும் நாசிகளின் முயற்சியைத் தடுப்

பதற்காக ஓஸ்லோ தொழிற்கந்தோர் குண்டு வைத்துத் தகர்க் கப்பட்டமையும், நாசிகளுக்கான ஆயுத உற்பத்தியைத் தடுப் பதற்காக Kongsberg ஆயுதத் தொழிற்சாலை குண்டு வைத் துத் தகர்க்கப்பட்டமையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நாசிகளுடன் இணைந்து செயற்பட்ட போலிஸ் அதிகாரிகள், Nr 24 உட்பட எதிர்ப்பியக்கப் போராளிகள் பற்றித் தகவல் கொடுத்த Nr 24-ன் இளவயது நண்பன் உட்பட பலர் சுட்டுக் கொல்லப்படுகின்றமை காட்சிகளாகப் படத்தில் வருகின்றன. நாசிகளால் கைது செய்யப்பட்டால் எதிர் கொள்ளும் சித்திரவ தைகளை எதிர்ப்பியக்கப் போராளிகள் எவ்வாறு எதிர்கொள் வார்கள் என்பதும் படத்தின் ஒரு பேசுபொருள். இதனை முன் கூட்டியே சொல்ல முடியாது என்கிறார் Nr 24. சித்திரவதைக ளில் உண்மைத் தகவல்களை நாசிகளிடம் சொன்னவர்கள் உண்டு. இதனைத் தவிர்க்க தற்கொடை செய்த போராளியின் கதையும் படத்தில் உண்டு. நாசிகளிடம் உயிருடன் பிடிபடக் கூடாது என்பதற்காகத் தன்னுடன் கிரேனட் குண்டு ஒன்றைக் கொண்டு திரிவார் Nr 24. ஒரு தடவை நாசிகளின் சோதனையி லும் அகப்பட்டுக் கொள்வார். அப்போது குண்டை வெடிக்க வைக்கத் தன்னைத் தயாராக்கிக் கொள்வார். அடையாளப் பத்திரம் சோதிக்கப்பட்டு, உடற்சோதனை மேற்கொள்ளப்ப டாமையினால் அதில் Nr. 24 தப்பித்துக் கொள்வார்.

எதிர்ப்பியக்கத்தின் ஆரம்ப நாட்களில் பணத் தேவைக்காக நோர்வே மத்திய வங்கி தலைமை அதிகாரியிடம் நோர்வே பணத்தை அச்சிடுவதற்கான அச்சுத்தகட்டை இரவல் வாங்க முடிவு செய்யப்படுகிறது. இதற்காக வங்கியின் தலைமை அதிகாரியை Nr 24 சந்தித்து தான் வந்த நோக்கத்தைச் சொல்வார். அதிகாரி தயங்குவார். 'உங்கள் பேரப்பிள்ளை கள் ஜேர்மன் மொழி பேசும் நிலை வரும். வரலாற்றில் சரி யான பக்கத்தில் நிற்கும் வாய்ப்பு உங்களுக்கு கிடைத்திருக் கிறது' என்பார் Nr 24.

பிரித்தானியாவில் உள்ள நோர்வே அரசாங்கத்தின் பிரதிநிதி யாக வந்துள்ளீர்கள் என்பதை எவ்வாறு நம்புவது எனக் கேட்ட அதிகாரி, ஓர் இரகசிய வாக்கியத்தை எழுதிக் கொடுத்து, இது இலண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் நோர்வே அரச வானொலியில் ஒலிபரப்பாகின் இவ்விடயம் குறித்த முடிவை எடுப்பேன் என்கிறார் அதிகாரி. இவ் இரக சிய வாக்கியம் ஏனைய 10 வாக்கியங்களில் ஒன்றாக மறுநாள் ஒலிபரப்பாகின்றது. அதிகாரி அச்சுத் தகட்டை Nr 24 இடம் வழங்க, அதனைப் பிரதி செய்து தமக்குத் தேவையான பணத்தை அச்சிட்டு. அதனைத் தமது இயக்கத்துக்குள் எதிர்ப்பியக்கத்தினர் விநியோகிக்கின்றனர். அச்சுத் தட்டு வங்கி அதிகாரியிடம் மீள வழங்கப்படுகிறது. இச் சம்பவம் சுவாரசியமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

படத்தில் Gunnar Sønstebyக்கும் மாணவர்களுக்கும் இடையே நடைபெறும் உரையாடல் முக்கியமானதாக எனக் குப்படுகிறது. எதிர்ப்பியக்க நடவடிக்கைகள் குறித்த கேள்வி களை மாணவர்கள் எழுப்பினார்கள். நோர்வேஜியர்களுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனைகள் தொடர்பான கேள்விகள் முக்கியம் பெற்றன. ஒரு மாணவி தனது உறவினர் ஒருவர் சுட் டுக் கொல்லப்பட்டது தொடர்பாகக் கேள்வி எழுப்பினார். நீங் கள் நேரடியாக இதில் ஈடுப்பட்டீர்களா? என்பதுவும் மாணவர் ஒருவர் எழுப்பிய ஒரு கேள்வி. இதற்கு Gunnar பதில் சொல் லாமல் அடுத்த கேள்வி என்பார். தொடர்ந்து இவர் நேரடி யாக மேற்கொண்ட மரணதண்டனை நடவடிக்கைகள் காட்சி யாகப் படத்தில் வரும்.

Gunnar இன் இளம் பிராயத்து நண்பர், கடிதம் மூலம் வழங் கும் தகவல் நாசிகளிடம் செல்லாமல் தபால் ஊழியர்கள் ஊடாக எதிர்ப்பியக்கப் போராளிகளை வந்தடைகிறது. Gun-nar Sønsteby உட்பட எதிர்ப்பியக்கப் போராளிகள் சிலர் பற் றிய தகவல் தம்மிடம் இருக்கிறது. நேரில் வந்து தெரிவிக்க லாம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடிதத் தைப் படித்த பின்னர் தனது நண்பருக்கு மரண தண்டனை வழங்கும் உத்தரவை Gunnar வழங்குகிறார். ஏனைய இரு போராளிகள் தண்டனையை நிறைவேற்றுவார்கள். உரையாட லின் இடையில் இக்காட்சி திரையில் வரும். தனது உறவி னர்க்கு வழங்கப்பட்ட தண்டனை தொடர்பாக உங்களுக்கு ஏதும் தெரியுமா? என மாணவி கேட்பார். Gunnar 'தெரிய வில்லை எனக்கூறி பல விடயங்கள் நடந்தன' எனப் பதிலளிப் பார்.

உரையாடலின் ஒரு கட்டத்தில் 'நீங்கள் போர்க்காலத்தில் வாழ்ந்திருக்கிறீர்களா' என Gunnar மணவர்களிடம் கேட்பார். இதற்கு, கேள்வி கேட்ட மாணவன் 'இல்லை. எனது பெற்றோர் கள் வாழ்ந்திருக்கிறார்கள்' எனப் பதிலளிப்பான். அப்போது ' நான் கூறுவது அவர்களுக்கு கூடுதலாகப் புரியும்' என்பார் Gunnar. மாணவர்கள் அவரை இத்துடன் விடவில்லை. உற வினர் பற்றிக் கேள்வி எழுப்பிய மாணவி, காந்தியைக் குறிப் பிட்டு அவரைப்போல வன்முறையற்ற எதிர்ப்பியக்கத்தை நடத்தியிருக்க முடியாதா? என்று கேட்பார். நாசிகளுக்கு அந்த மொழி புரியாது என்பார் Gunnar. உரையாடல் முடிந் தாலும் கேள்வி கேட்ட மாணவர்களுக்கு Gunnar இன் பதில் கள் திருப்தி தரவில்லை என்பதை பார்வையாளர்கள் உண ரக்கூடியதாகக் காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

இவ்வுரையாடல் உண்மையாக நடைபெற்றதா அல்லது திரைக்கதைக்காக இணைக்கப்பட்ட புனைவா? என்பது தெரி யவில்லை. ஆனால், ஓர் ஆயுத எதிர்ப்பியக்கத்தின் நடவடிக் கைகளை, யுத்தத்துக்குள் வாழாத, தற்போதைய இளைய தலைமுறையினரிடம் நியாயப்படுத்துவதில் உள்ள சிரமங் களை இவ் உரையாடற் காட்சி உணர்த்துகிறது. எனினும் 2012-ல் தனது 94-வது வயதில் இயற்கையடைந்த Gunnar Sønsteby இன்றும் தேசபக்தராக நோர்வேயில் போற்றப்படுகி றார்.

Nr 24 திரைப்படம் நோர்வேயில் இன்னுமொரு விவாதத்தை யும் கிளப்பியிருக்கிறது. நாசிகளுக்கான எதிர்ப்புப் போரில் எங்கும் ஆண்களே முன்நிறுத்தப்படுகின்றனர். இப்போராட் டத்தில் ஈடுபட்ட பெண்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா? என்ற கேள்வி எழுப்பப்பட்டு விவாதிக்கப்படுகிறது. இவ் எதிர்ப்பியக்கத்தில் ஈடுபட்ட இரு பெண் சகோதரிகளின் கதை Drontheim எனும் பெயரில் ஓர் அரங்காற்றுகையாகத் தயாரிக்கப்படுகிறது. இவ்வாற்றுகை 31.01.2025-ல் அரங்கேறு கிறது. இதே Nr 24 இன்று ஏதோ ஒரு நாட்டின் விடுதலைப் போராளியாக இயங்கி, அன்று செய்த அதே நடவடிக்கை களை இன்று செய்திருந்தால், தற்போதைய உலகப் பார்வை யில் இன்று அவரது பெயர் தேசபக்தர் அல்ல பயங்கரவாதி அல்லவா!

## Quisling–இன் இறுதி நாட்கள் Quislings siste dager:

ஆக்கிரமிப்பாரோடு ஒத்துழைத்து இயங்கும் ஆக்கிரமிக்கப்பட்ட தேசத்தை சேர்ந்த மக்களை அல்லது குழுக்களை Quisling குழுக்கள் என அழைக்கப்படுவதுண்டு. எமது தாயகத்திலும் அவ்வாறு அழைக்கப்பட்டவர்கள் உண்டு. இந்த Quisling அடைமொழி நோர்வேயின் வரலாற்றில் இருந்துதான் உலகம் முழுவதும் பரவிற்று. இரண்டாம் உலகப்போர் காலகட்டத்தில் நோர்வேயினை ஹிட்லர் தலைமையிலான நாசிப்படைகள் ஆக்கிரமித்தபோது Vidkun Quisling எனும் நோர்வேஜிய அரசியல்வாதி, நாசிப்படையுடன் சேர்ந்தியங்கி நோர்வேயின் அரச தலைவராக ஏறத்தாழ 5 வருடங்கள் செயற்பட்டார். 1945-ல் நாசிப்படைகள் வீழ்ந்து ஹிட்லர் தோல்வியடைந்த பின்னர் Quisling கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின் மரணதண்டனை விதிக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார். இதன் பின்னர்தான் ஆக்கிரமிப்பாளர்களுடன் சேர்ந்தியங்கு பவர்கள் Quisling குழுக்கள் என அழைக்கப்படத் தொடங்கினர்.

நாசிகளின் வீழ்ச்சியில் இருந்து Quisling மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டது வரையிலான காலப்பகுதியில் நோர்வேயில்நிகழ்ந்த நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட Quislings siste dager(Quisling-இன் இறுதி நாட்கள்) எனும் நோர்வேஜியத் திரைப்படம் தற்போது அந்நாட்டுத் திரையரங்குகளில் காண்பிக்கப்படுகிறது. Quisling சிறைவைக்கப்பட்டபோது அவரைச் சந்தித்து ஆற்றுப்படுத்த முனையும் Peter Olsen எனும் கிறிஸ்தவ மதகுரு ஒருவர் எழுதி வைத்த நாட்குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டே இத்திரைப்படத்துக்கான திரைக்கதை அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இத்திரைக்கதையில் புனைவுகள் ஏதும் இணைக்கப்பட்டதா என்பது குறித்த தகவல் தெரியவில்லை. இத்திரைப்படத்துக்கான திரைக்கதையை எழுதிய இருவரில் ஒருவர் நோர்வேக்கு முதன் முதலில் வந்து குடியேறிய ஈழத் தமிழரான குட்டி அங்கிள் என அழைக்கப்பட்ட அன்ரனி ராஜேந்திரம் அவர்களின் மகளாகிய Siv Rajendram Eliassen என்பதுவும் இத்திரைப்படம் குறித்த ஒரு மேலதிகத் தகவல் ஆகும்.

இது திரைப்படத்தைப் பற்றிய ஒரு விமர்சனக் குறிப்பல்ல. திரைப்படம் பற்றிய ஓர் அறிமுக, இரசனைக் குறிப்பு. திரைப்படத்தைப் பார்வையிடவும் விருப்பத்தைத் தூண்டவும் இது உதவக்கூடும்.

இத்திரைப்படத்தில் Quislingக்கும் மதகுருக்கும் இடையில் நடைபெறும் உரையாடல்களும் நீதிமன்ற விசாரணைக்காட்சிகளும் முக்கியமானவை. Quisling மீதான குற்றச்சாட்டுகளும் இதற்கு அவரது பார்வையில் அவர் முன்வைக்கும் நியாயங்களும் படத்தில் பேசப்பட்டுள்ளன. தண்டனையைக் குறைப்பதற்காகத் தன்னை மனநிலை பிறழ்ந்தவராகக் காண்பிப்பதற்கு Quisiling உடன்படவில்லை. அவர் தண்டனைக் குறைப்புக்காகத் தனது நடவடிக்கைகள் குறித்து நீதி மன்றத்தில் மன்னிப்பும் கோரவில்லை. பெரும் யுத்தகாலத்தில் நோர்வே மக்களைத் தான் பாதுகாத்ததாக அவர் வாதிட்டார். சோவியத் யூனியனின் ஆக்கிரமிப்பு ஆபத்தைத் தடுப்பதையும் தனது நடவடிக்கைக்கு ஒரு நியாயமாக முன்வைத்தார். Quisling நோர்வேயின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது நாசிகளிடம் கையளிக்கப்பட்ட சுமார் 800-1000 வரையிலான யூதர்களில், உயிருடன் மீண்ட 12 பேரில் ஒருவரான மருத்துவரின் நீதிமன்றச் சாட்சி தாக்கமுள்ள வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

படத்தில் drama என வர்ணிக்கப்படக்கூடிய உணர்வு ததும்பிய காட்சிப் படிமங்களும் உண்டு. மதகுருவின் மனைவி. Quisling-ன் மனைவி பாத்திரங்கள் படத்தின் உணர்வுப் பரிமாணத்துக்கு உதவுகின்றன. இத்திரைப்படம் ஒரு காலகட்டத்தைப் பிரதி பலிக்கும் ஒரு period திரைப்படம். ஒப்பீட்டளவில்



குறைந்த செலவுடன் நம்பகத்தன்மை குறையாமல் படமாக்கப்பட்டுள்ளது. திரைப்படத்துக்கு அதிக செலவு செய்யும் தமிழ்நாடு தமிழ்த் திரைப்பட உலகினர் இத்திரைப்படத்தை ஒரு தடவை பார்ப்பது நல்லது.

Quisling சுட்டுக் கொல்லப்பட முன்னர் அவரின் இரு கைகளும் விலங்கிடப்படுகின்றன. பொலிஸ் அதிகாரியொருவர் அவரது கண்ணைக் கறுப்புத் துணியால் கட்டுகிறார். 'எனது சாவை எனது கண்ணால் பார்க்க வேண்டும். கண்ணைக் கட்டாதே' என்று சத்தமிடுவார் Quisling. இது விதிமுறை எனக் கூறி அதிகாரி கண்ணைக் கட்டுவார். 'நான் குற்றமற்றவன். ஒரு குற்றமற்றவனை சுட்டுக் கொல்கிறார்கள்' என Quisling உரத்துக் கத்த, தண்டனை வழங்க அணிவகுத்து நின்ற காவலர்களின் துப்பாக்கிகள் முழங்குகின்றன. Quisling தலைசாய சுவருடன் சரிகிறார். அருகில் சென்ற தலைமை அதிகாரி அவரது தலையில் தனது கைத்துப்பாக்கியால் சுடுகிறார். இப்படியாக Quisling மீதான மரணதண்டனை நிறைவேற்றப்படுகிறது. இதற்குச் சாட்சியாக மதகுரு நிற்பார்.

இது நிகழ்ந்து 79 வருடங்களாகிவிட்டன. நோர்வே சமூகமும் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி விட்டது. மரண தண்டனை முறையும் இல்லாதொழிக்கப்பட்டுவிட்டது. தான் குற்றமற்றவன் என்பதை வரலாறு சொல்லும் என Quisling கூறுவதாகத் திரைப்படத்தில் காட்சியொன்று வரும். ஆனால், இன்றும் வரலாறு அவரைக் குற்றவாளியாகத்தான் வைத்திருக்கிறது. ஆக்கிரமிப்பாளர்களுடன் கைகோர்ப்பவர்களை வரலாறு இலகுவில் விடுதலை செய்வது இல்லைப் போலும்!



sarvendra@thaiveedu.com



# நடிப்பு என்றொரு கலை

– ஓவியர் ஜீவா

நிகழ்த்துகலைகளின் முக்கியமான அங்கம் நடிப்புக்கலை. நடிப்பு சிறப்பாக இருந்தால் மட்டுமே அந்த காட்சியும் அழகாக அமையும். நடிப்பை நாம் எவ்வாறு அறிந்துகொள்கிறோம்?. இன்னொரு மனிதரின் தோற்றம், நடத்தை, அணுகுமுறை மற்றும் குணாதிசயங்களை பிரதியெடுத்து காண்பிப்பதே நடிப்பு என்பது நடிப்புக்கலையின் பொதுவான விளக்கம். ஒரு சிறந்த நடிகராக உருவெடுப்பவருக்கு நடிப்புக் கல்லூரிகளில் நடிப்பு, அசைவுகள், மெருகேற்றுதல், நிகழ்த்து கலை வரலாறு அனைத்தும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. அப்படியென்றால், கல்லூரிகளில் படித்தவர்கள் மட்டுமே இதற்கெல்லாம் தகுதியானவர்களா என்று ஒரு கேள்வி வரலாம். அப்படியும் சில சமயங்களில் வாதங்கள் வரலாம். உதாரணமாக இந்தியாவில் நாட்டியம், இசை போன்ற கலைகளை



தனியாரிடம் கற்று தேர்ந்தவர்கள் அதிகம். அவர்களுக்கும் இசைக்கல்லூரி மாணவர்களுக்கும் பெரிய பேதம் இல்லை. ஆனால், ஓவியக் கல்லூரிகளில் படித்தவர்கள் ஒரு தனிக் குழுவாகவே இயங்குவதுண்டு. நடிகர்களில் இப்படி இல்லை. பூனே திரைப்படக் கல்லூரி, சென்னை திரைப்படக் கல்லூரி, சென்னை பிலிம் சேம்பர் போன்ற பயிலகங்களில் ஒரு காலத்தில் நடிப்புக்கென்று தனி வகுப்புகள் இருந்தன. பிரமாதமான நடிகர்கள் இங்கு கற்றுத் தேர்ந்து வெளியே வந்து திரைப்படங்களில் பிரகாசித்தனர். இப்போது நடிப்புப் பயிற்சியை திரையுலகத்திலிருந்து ஓய்வு பெற்ற கலைஞர்களும் கூத்துப்பட்டறை போன்ற அமைப்புகளும் நடத்துகின்றனர்.

ஹிந்தித் திரையுலகில் 70-களில் யதார்த்த மற்றும் Parallel என்று அழைக்கப்பட்ட இணைத்திரைப்படங்கள் அதிக அளவில் தயாரிக்கப்பட்டபோது, பூனே பிலிம் இன்ஸ்டிடியூட் மற்றும் தேசிய நாடகப் பள்ளியிலிருந்து திறமைமிக்க பல நடிகர்கள் நடிக்க வந்தனர். புகழும் பெற்றனர். நசீருத்தின் ஷா, ஷபானா ஆஸ்மி, ஓம் பூரி, அஸ்ரானி, சத்ருகன் சின்ஹா, மிதுன் சக்ரவர்த்தி, டேனி என்ற ஒரு நீண்ட வரிசை. கலைப்படங்கள் தொடங்கி பொழுதுபோக்கு படங்கள் வரை தங்கள் தனித் தன்மையான திறமையால் கோலோச்சி வந்தார்கள். சென்னைக் கல்லூரியிலிருந்து நாசர்,ரகுவரன், அர்ச்சனா போன்றவர்கள் பெரும் புகழ் பெற்றனர். பிலிம் சேம்பர் வகுப்புக்களிலிருந்து வந்து சூப்பர் ஸ்டார் அந்தஸ்த்தை அடைந்தவர்கள் ரஜினிகாந்தும் சிரஞ்சீவியும். இவர்களுக்கெல்லாம் அப்போது உலகத் திரைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்பும், ஸ்டானிலாவ்ஸ்கி போன்ற திரைப்பட மேதைகள் நடிப்பு தியரி குறித்து எழுதியவற்றை எல்லாம் படிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. இவை அவர்களை மெருகேற்றின.

அதற்கு முன் நடிகர்கள் எல்லாம் எங்கிருந்து பயிற்சி எடுத்தனர்...? நாடக மேடைகளில் இருந்துதான். இந்தியாவில் திரைப்படங்கள் எடுக்கத் தொடங்கிய காலத்தில், மேடை நாடகங்களில் நடித்துக்கொண்டிருந்தவர்களுக்கு புகைப்படக் கருவி என்றால் என்ன, அவற்றுக்கு முன் எப்படி நடிக்க வேண்டும் என்றெல்லாம் கற்றுக்கொடுத்து நடிகர்களை நடிக்க வைத்தனர். மேடைகளில் நடிகைகள் அப்போதெல்லாம் நடிப்பது அபூர்வம். ஆண்களே பெண் வேடமிட்டு நடித்தனர். ஆரம்பத்தில் திரைப்படங்களில் கூட அப்படி முயற்சிகள் நடந்திருக்கின்றன. ஆனால் அபத்தமாக இருந்தது என்பதால் உண்மையான பெண்களை தேடிச் சென்றனர். விபச்சார விடுதிகளில் இருந்து கூட பெண்களை அழைத்து வந்து நடிக்கவைக்கும் முயற்சிகளும் நடந்தேறின. சத்யஜித் ரோயின் முதல் திரைப்படமான 'பதர் பாஞ்சாலி' உருவாகும்போது முக்கிய கதாபாத்திரங்களுக்கு சில தொழில்முறை நடிகர்களை ஒப்பந்தம் செய்து நடிக்க வைத்தார். அதில் வரும் தொண்டு கிழமான இந்திர் தாக்ருன் என்ற பாத்திரத்திற்கு எங்கோ ஒரு விடுதியில் மூலையில் கிடந்த சுனிபாலா தேவி என்ற மூதாட்டியை அழைத்துவந்து நடிக்க வைத்தார். சிறு



வயதில் ஓரிரு திரைப்படங்களில் சிறிய வேடத்தில் வந்த இவரது நடிப்பு இன்னும் ரசிகர்களால் சிலாகிக்கப்படுகிறது!

சேகர், கிரேசி மோகன், மௌலி போன்றவர்கள் இந்த வரிசையில் குறிப்பிடத் தகுந்தவர்கள். இவை பெரும்பாலும் அமெச்

நடிகர்களுக்கு இங்கு நாடகக் குழுக்களே அந்த காலத்தில் பயிற்சிக் களங்களாகத் திகழ்ந்தன. தென்னிந்தியாவில் சிறு பிராயத்திலேயே நடிக்க வந்தவர்கள் இருந்திருக்கிறார்கள். பெரும்பாலும் வீட்டை விட்டு ஓடிவந்தவர்கள். இவர்களை பயன்படுத்தியே பாய்ஸ் நாடகக் கம்பெனிகள் நிறைய இயங்கின. முக்கிய வேடங்களில் சிறுவர்களே நடிப்பார்கள். அதி முக்கிய வேடங்களில் பெரியவர்கள் நடித்திருக்கலாம். இவர்களுக்கு மூன்று வேளை உணவு, பகலில் கடும் பயிற்சிகள், மாலையில் நாடகங்கள் என்று கால அட்டவணைகள் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தன. தவறுகளுக்கு கடும் தண்டனைகள் தரப்படும். குருநாதர்கள் வாத்தியார் என்றே அழைக்கப்பட்டனர். யதார்த்தம் பொன்னுசாமிபிள்ளை, கந்தசாமி முதலியார் என்று புகழ் பெற்ற வாத்தியார்கள் இருந்தனர். இவர்களில் சங்கரதாஸ் ஸ்வாமிகள் போன்றவர்கள் நாடகங்களையும் இயற்றி, நடித்து, பயிற்சியும் கொடுத்து வந்தனர். நவாப் ராஜமாணிக்கம் குழு, டி.கே.எஸ் குழு, சக்தி நாடக சபை, கன்னடத்தில் குப்பி வீரண்ணா குழு என்று நிறைய வெற்றிகரமான குழுக்கள் இந்தியா மட்டுமல்ல, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளுக்கும் பயணம் செய்து நாடகங்கள் நடத்தியவர்கள். இப்படி சிறுவர்களாகவே நடிக்க வந்த கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், டி.கே.எஸ். சகோதரர்கள், எம்ஜிஆர், சிவாஜி கணேசன், கே.ஆர். ராமசாமி, பாலையா, வி.கே. ராமசாமி, காக்கா ராதாகிருஷ்ணன், எஸ்.வி. சுப்பையா, கன்னட ராஜ்குமார் போன்றவர்கள் பின்னர் வெள்ளித்திரையில் புகழ் பெற்ற நடிகர்கள் ஆனார்கள். இவர்களில் பலர் பின்னர் தனியாக நாடகக் குழுக்கள் அமைத்து நாடகங்களை மேடையேற்றியவர்கள். என்.எஸ்.கே. நாடக சபா, சிவாஜி நாடகக் குழு, எம்ஜிஆர் குழு, மனோகர், ஹெரான் ராமசாமி, எம்.ஆர். ராதா என்று நிறைய கலைஞர்கள் திரைக்கு வந்தும் கூட நாடக மேடை மீதிருந்த காதலை விடவேயில்லை. பிறகு படித்த பிராமண இளைஞர்கள் பலர் மேடை நாடகங்களை தங்கள் ஓய்வு நேரங்களில் அரங்கேற்றத் தொடங்கினார்கள். வைஜிபி, கே. பாலச்சந்தர், சோ, மேஜர் சுந்தரராஜன், எஸ்.வி.



சூர் சபா நாடகங்கள் என்று அழைக்கப்பட்டன. பெரும்பாலும் சென்னை, மற்றும் முக்கிய நகரங்களில் மட்டுமே நிகழ்த்தப்பட்டன.

ஆரம்பத்தில் திரைப்படங்கள் நாடக மேடைக் கதைகளை மறு ஆக்கம் செய்துகொண்டிருந்ததால், பாடல்களால்

நிறைந்து வழியும். ஆகவே பாடத் தெரிந்தவர்களே நடிகர்களாக ஒப்பந்தம் செய்யப்பட்டனர். பருவா, சைகல் என்று ஹிந்தியிலும், தியாகராஜ பாகவதர், ஹொன்னப்ப பாகவதர், பி.யு. சின்னப்பா, கிட்டப்பா, சுந்தராம்பாள், தண்டபாணி தேசிகர், டி.ஆர். மகாலிங்கம், என்.எஸ். கிருஷ்ணன் என்று தமிழிலும் பாடத் தெரிந்தவர்கள் திரைப்படங்களில் நடிக்கத் தொடங்கினர். பின்னணிப்பாடல் பதிவும், அதற்கென்றே பிரத்யேகக் கலைஞர்களும் உருவானபோது, இத்தகைய கலைஞர்கள் வாய்ப்பிழக்கத் தொடங்கினர். பாகவதரின் கடைசிக் காலம் கொஞ்சம் சோகமயமாக இருந்தபோதிலும் சின்னப்பா புகழின் உச்சியில் இருக்கும்போதே மறைந்தார். ஹிந்தியில் முகமது ரபி, மன்னாடே, கிஷோர் குமார், லதா மங்கேஷ்கர், கீதா தத், தலாத் முகம்மது மற்றும் தென்னக மொழிகளில் சிதம்பரம் ஜெயராமன், திருச்சி லோகநாதன், டி.எம். சவுந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ஏ.எம். ராஜா, பி.பி.



ஸ்ரீனிவாஸ், சுசீலா, லீலா, கோமளா, ஈஸ்வரி போன்றவர்கள் அறிமுகமானபோது காட்சிகள் மாறின. நன்கு நடிக்கத்தெரிந்த, மக்கள் நாடித்துடிப்பை உணர்ந்த நடிகர்கள் தோன்றினர்.

மேடை நாடக நடிப்புக்கும் திரைப்பட நடிப்புக்கும் உள்ள வேறுபாட்டை கற்றுத் தெளிந்தவர்கள் வெற்றி பெற்றனர். மேடையில் நடிக்கும்போது, கடைசி வரிசையில் இருக்கும் பார்வையாளருக்கும் கேட்கும் வகையில் வசன உச்சரிப்புகள் தேவைப்பட்டன. நடை உடை பாவனைகள், உடல்மொழி, உரத்த குரல், ஒப்பனை என்று அனைத்துமே அந்த கடைசி வரிசை ரசிகருக்காக உருவானவை. திரையிலோ குளோஸ் அப், முகபாவனைகள், சிறு அசைவுகள், காமெரா கோணங்கள், அரங்க ஒளியை சரியான கோணத்தில் வாங்குவது என்று பல நுட்பங்கள் தேவைப்பட்டன. ஹாலிவுட்டில் லாரன்ஸ் ஒலிவியர், மார்லன் பிராண்டோ, இந்தியாவில் உத்பல் தத், அமோல் பாலேகர், ஓம் புரி, அமரிஷ் புரி போன்ற மாபெரும் நடிகர்கள் மேடையிலிருந்து திரைக்கு வந்தவர்கள். திரைமொழியை அப்படியே உள்வாங்கி நடித்து பெரும் புகழைப் பெற்றவர்கள். இதே போல தமிழில் சிவாஜி கணேசன் தொடங்கி நிறைய கலைஞர்கள் திரைக்கேற்ப தங்களை மாற்றிக்கொண்டவர்கள்.

சிவாஜி மீது மிகை நடிகர் என்ற குற்றச்சாட்டு எப்போதும் உண்டு. ஓரளவுக்கு அது உண்மையாக இருந்தாலும், அவர் அளவுக்கு திரைக்கேற்ப தன்னை செதுக்கிக்கொண்டவர்கள் யாரும் இல்லை. அவரது நாடக மேடைப்பின்னணி இதற்கு ஒரு காரணமாக இருந்தது. கட்டப்பொம்மனாக மேடையில் அவர் நடிக்கும்போது, பலமுறை உரத்த குரலில் கர்ஜித்து, தொண்டையின் நரம்பு நாளங்கள் அறுந்து உதிரம் கொட்டியதாக படித்திருக்கிறேன். திரைப்படத்திலும் அவர் நாடக பாணியில் பேசினார். கட்டபொம்மன் திரையில் இயல்பாக பேசியிருந்தால் அந்த திரைப்படம் இந்நேரம் மறக்கப்பட்டிருக்கும் என்பதே உண்மை. சில விஷயங்களுக்கு மிகை நடிப்பு தேவையே. இதே கட்டபொம்மன் படத்தில் அவர் தளபதி தானாபதிப்பிள்ளையுடன் உரையாடும் ஒரு காட்சி இருக்கும். பிள்ளையவர்கள் அடித்த கொள்ளை பற்றிய அந்த உரையாடலில், சிவாஜியின் குரலின் தளுதளுப்பு, ஏற்ற இறக்கங்கள் அனைத்துமே ஒரு மாபெரும் நடிகனால் மட்டுமே முடியும்! சிவாஜியின் மிகையற்ற நடிப்பை கப்பலோட்டிய தமிழன், உயர்ந்த மனிதன் போன்ற படங்களில் பார்க்கலாம்! உயர்ந்த மனிதனில், தந்தையின் கண்டிப்பான வார்த்தைகளால், காதலைத் துறந்த ஒரு கோழையாக, ஒரு நடுத்தர வயது கோடீஸ்வரனாக, நாசுக்கும் நளினமும் மிளிர்ந்த உடல்மொழியாலும் வசன உச்சரிப்பிலும் வெளிப்படுத்தும் ஒரு கனவானாக, கடந்த காலத்தை எண்ணிக் குமையும் மனிதனாக மிக யதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தியிருப்பார் சிவாஜி. ‘Playing to the gallery’ என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள், அதையும் செய்யவேண்டிய நிலை எப்போதுமே இங்குள்ள நடிகர்களுக்கு இருந்தது.

எம்.ஆர். ராதா தன்னுடைய எல்லா திரைப்படங்களிலும் மிகை நடிப்பையே தந்தவர். அதன் உச்சம் அவரது புகழ்பெற்ற ‘ரத்தக்கண்ணீர்’. மக்கள் அவரை எப்போதுமே ரசித்தனர். இரட்டை குரலில், எகத்தாளம் மின்னும் உச்சரிப்பாலும் வசனங்களாலும், ஊடுருவி நிற்கும் நகைச்சுவையாலும் நடிகவேள் என்று அழைக்கப்பட்டார் ராதா. எம்ஜிஆர், ஜெமினி கணேசன் போன்ற நடிகர்கள் பெரும்பாலும் இயல்பான நடிப்பையே தந்தனர். மிகை நடிகர்கள் என்று என்றுமே குற்றம் சாட்டப்பட்டதில்லை! தமிழ்ச் சூழலில் மிகை நடிப்புக்கென்று ஒரு நல்ல இடம் தரப்பட்டிருந்தது. மலையாளத்தில் கேசவதேவ் எழுதி, சத்யன் நடிப்பில் ‘ஓடையில் நின்னு’ என்று ஒரு திரைப்படம் வெளியானது. வெகு இயல்பான நடிப்பும், கதாபாத்திரங்களுக்கிடையே இருந்த நுட்பமான உறவும் இந்த திரைப்படத்தின் சிறப்புகள். நாயகனுக்கு விசேஷமான பாடல்கள் எதுவும் இல்லை. சத்யன் தோன்றாமலேயே, ரிக்சா தொழிலாளிகள் பாடும் ஒரு பாடல் ‘ஓ ரிக்சாவாலா’, தமிழில் உருமாற்றம் பெற்று, நாயகனுக்கு ஒரு ஜோடியை சேர்த்து ஒரு ஜனரஞ்சகமான பாடலாக மாறியது. ‘வரதப்பா வரதப்பா’ என்று சிவாஜியே டப்பாங்குத்து ஆடுவார். ஆனாலும் ‘பாபு’-வும் ஒரு வெற்றிப்படமாக ஆனது. நடிப்பின் வரைமுறைகள் பிராந்தியத்துக்கேற்ப மாறுவதன் அடையாளம் இது!

நடிப்பு என்றால் சிவாஜி என்ற ஒரு காலகட்டம் இன்னும் தமிழ்த் திரைப்பட சரித்திரத்தில் முத்திரையாய் நீடிக்கிறது!



jeeva@thaiveedu.com

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பிதாமகன்

# தமிழவேள் க.இ.க. கந்தசுவாமி

- வே. விவேகானந்தன்



தமிழும், சைவமும், இசையும், கலையும் செழித்தோங்கிய இணுவில் பதியில் வாழ்ந்து வந்த, இலகுப்பிள்ளை கந்-தையா அவர்களுக்கும் அவரின் வாழ்க்கைத் துணைவி சிவக் கொழுந்து அவர்களுக்கும் மகனாக 1919-ஆம் ஆண்டு செப் ரெம்பர் மாதம் முதலாம் திகதி கந்தசுவாமி பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியைக் கோண்டாவில் சைவத் தமிழ் வித்தியாலயத்திலும் உயர் கல்வியை கொக்குவில் இந்து கல்லூரியிலும் கற்றார். பின்னர் ஆசிரியர் கலாசாலைப் பிரவேசப் பரீட்சையிலும் சித்தியடைந்து 1936-1937 காலப் பகுதியில், கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று, பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். பாடசாலை மாணவனாக இருந்தபோதே மாணவர் சங்கங்க ளின் செயலாளராகப் பணிபுரிந்து ஆசிரியர்களினதும் சக மாணவர்களினதும் பாராட்டைப் பெற்றிருந்தார்.

1938-ம் ஆண்டு இணுவில் சைவ மகாஜன வித்தியாலயத்தில் ஆசிரியராகத் தனது பணியினை ஆரம்பித்தார். அதே வேளை, தனது தமிழ் அறிவினை மேலும் கூர்மைப்படுத்த மாணிக்கச் சட்டம்பியார், முத்துச் சட்டம்பியார், கதிரித்தம்பி ஆகியோரிடம் கற்று, 1946-ம் ஆண்டு மதுரை பண்டிதர் பரீட் சையில் சித்தியடைந்து, தமிழ்ப் பண்டிதரானார். 1957-ம் ஆண்டு சென்னை சைவசித்தாந்த சமாஜத்தின் சைவப் புல வர் பரீட்சையிலும் சித்தியடைந்து, சைவத் தமிழ் அறிஞரா னார்.

கந்தசுவாமி அவர்கள் இணுவில் சைவ மகாஜன வித்தியால யத்தில் ஆசிரியராகப் பணி புரிந்த காலத்தில் சமய, சமூகப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இணுவில் கிழக்கு சிவநெறி மன்றம், இளைஞர் விளையாட்டுக் கழகம், கமத்தொழில் மன்றம், ஐக்கிய நாணய சங்கம், இணுவில் மத் திய சந்தை ஆகியவற்றின் தோற்றத்துக்கும், செயற்பாட்டுக் கும் பெரும் பங்காற்றினார். இணுவில் தபாற்கந்தோர் உருவா கவும், சின்னத்தம்பிப் புலவர் வீதியை, அப்போதைய அர சாங்க அதிபர் முருகேசம்பிள்ளை அவர்கள் திறந்து வைக்க வும், முன்பு மருதனார் மடம் என்றழைக்கப்பட்ட புகையிரத நிலையம் இணுவில் புகையிரத நிலையம் என அழைக்கப்பட வும் பெருமுயற்சி செய்தார்.

1962-ம் ஆண்டு கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்ட இவர், இசப்பத்தான கல்லூரியில் ஆசிரியராகத் தனது பணி யைத் தொடர்ந்தார். 1967-ம் ஆண்டு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பாடவிதான அபிவிருத்திப் பிரிவில், தமிழ்ப் பாடப்புத்தகப் பதிப்பாசிரியர்களில் ஒருவராக இணைந்து கொண்டார். அங்கு பணியாற்றி மாணவர்களுக் கான பாட நூல்களையும் பயனளிக்கக் கூடிய பயிற்சி நூல்க ளையும் வெளியிட்டார். சிறுவர் இலக்கிய நூல்கள், சமயபாடப் பயிற்சி நூல்கள், தமிழ் மொழி இலக்கியப் பயிற்சி நூல்கள் என முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். சில காலத்தின் பின் மீண்டும் ஆசிரியர் பதவிக்குத் திரும்பி கொழும்பு றோயல் கல்லூரியில் சேர்ந்தார்.

இசப்பத்தான மற்றும் றோயல் கல்லூரியில் பணியாற்றிய காலங்களில், தமிழ் மாணவர் பிரிவுக்குப் பொறுப்பாசிரியராக விளங்கியதோடு, தமிழ்மொழி, சைவ சமயம் தமிழ் இலக்கி யம் மற்றும் கலைகளை ஆர்வத்துடன் போதித்தார். மேலதிக வகுப்புகளைக் கட்டணம் அறவிடாது நடத்தினார். கொழும் பில் பணியாற்றிய காலத்தில், தான் ஆரம்பத்தில் ஆசிரியரா கப் பணிபுரிந்த, இணுவில் சைவ மகாஜன வித்தியாசா லையை, இணுவில் மத்திய கல்லூரியாகத் தரம் உயர்த்தப் பெருமுயற்சி செய்து, அதில் வெற்றியும் கண்டார்.

கந்தசுவாமி அவர்களின் தமிழ், சமயப் பற்றினை அறிந்து கொண்ட, அப்போதைய தமிழ்ச் சங்கச் செயலாளரான மு.வ. வயிரவப்பிள்ளை அவர்கள் 1963-ம் ஆண்டு அவரைத் தமிழ் சங்க அங்கத்தவராக்கினார். 1964-ம் ஆண்டு இவரைத் தமிழ் சங்க நூலகச் செயலாளராக்கி, சங்கத்திலேயே தங்கியி ருந்து, பணியாற்ற ஏற்பாடு செய்தார். பத்து ஆண்டுகள் தன்னை முழுமையாக அர்ப்பணித்துப் பணியாற்றிய கந்தசு-வாமி அவர்கள், 1974 ஏப்ரல் மாதம் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். 1997-ம் ஆண்டு வரை இருபது ஆண்டுகளுக்கு மேலாக அப்பதவியை வகித்து, கொழும்புத் தமிழ் சங்கத்தை இலங்கையில் மட்டு மின்றி தமிழர்கள் வாழும் இடமெங்கும் புகழ் பரவச் செய்த பெருமை இவரைச் சாரும்.

சங்கத்திற்குப் புதிய கட்டடம் தேவை என்பதை உணர்ந்த கந் தசுவாமி அவர்கள், அப்போதைய தலைவர் மு.வ. வைரவப் பிள்ளை மற்றும் ஏனைய அங்கத்தவர்களுடன் சேர்ந்து பணம் சேகரித்து 1974-ம் ஆண்டு ஜூன் மாதம் முதலாவது கட்டடத் தொகுதி வேலைகளை ஆரம்பித்தார். படிப்படியாக வேலை

கள் நடைபெற்று, 1992-ம் ஆண்டு நடுப்பகுதியில் மூன்றாம் மாடிக் கட்டட வேலையும் நிறைவு பெற்றது. இக்கட்டட வேலைகள் பூர்த்தி அடையத் தனது சொந்தப் பணமாக ஒரு இலட்சத்து முப்பத்தையாயிரம் ரூபாவை செலவிட்டார்.

1979-ம் ஆண்டு மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா தமிழ் சங்கத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப் பட்டது. அப்போது, கந்தசுவாமி அவர்கள் தமிழ் நாட்டின் நிதி அமைச்சராக இருந்த இரா. நெடுஞ்செழியனைப் பிரதம விருந்தினராக அழைத்து, சிறப்புரை ஆற்றுவித்தார். பின்னர் தமிழ் நாட்டுக்குச் சென்று, அப்போதைய முதலமைச்சராக இருந்த எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களை நேரடியாகச் சந் தித்து, பதினையாயிரம் நுல்களை அன்பளிப்பாகப் பெற்று



வந்தார். இவரது பெரு முயற்சியால் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, நோர்வே போன்ற நாடுகளிலிருந்தும் ஆயிரக் கணக்கான நூல்கள் பெறப்பட்டன.

தமிழ் சங்க நூலகம் இன்று எழுபதினாயிரம் நூல்களைக் கொண்டுள்ளதுடன், நாளிதழ் பகுதி, பருவ இதழ் பகுதி, உடன் உதவும் பகுதி, இரவல் வழங்கும் பகுதி, படிப்புக் கூடம், சிறுவர் பகுதி, எண்ணிம நூற்பகுதி எனப் பல பகுதிக ளைக் கொண்ட சிறந்த நூலகமாகக் காட்சியளிக்கிறது. 1983-ஆம் ஆண்டு இனக்கலவரம் நடைபெற்ற, மிக நெருக்கடி யான காலகட்டத்தில், தனது உயிரையும் பொருட்படுத்தாது, தமிழ்ச் சங்கத்தையும் தமிழ்ச் சங்க நூலகத்தையும் பாது காத்த பெருமை கந்தசுவாமி அவர்களைச் சாரும்.

தமிழ்ச் சங்கத்தோடும், அதற்கு அப்பாலும் கந்தசுவாமி அவர்கள் ஆற்றிய தமிழ்ப் பணிகள் அளப்பரியன. 1974 -ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மகாநாடு, 1987-ம் ஆண்டு மலேசியாவில் நடந்த ஆறாவது உலகத்த மிழ் ஆராய் ச்சி மகாநாடு, 1989-ம் ஆண்டு மொறீசியசில் நடந்த ஏழாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு, தென்னிந் திய கீழக்கரையில் நடந்த இஸ்லாமியத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு ஆகியவற்றில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப் பித்து, பாராட்டுகளைப் பெற்றார். 1992-ம் ஆண்டு தமிழ்ச் சங் கப் பொன்விழாவைச் சிறப்பாக நடத்தியதோடு பொன்விழா மலரையும் வெளியிட்டுச் சிறப்பித்தார். 2000-ம் ஆண்டு திருக் குறள் மகாநாட்டைச் சிறப்பாக நடத்தி, திருக்குறளின் பெரு மையினையும் பறை சாற்றினார்.

2003-ம் ஆண்டு ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழ கத்தை உருவாக்கி, அதன் செயலாளராகப் பணிபுரிந்து, 2005-ம் ஆண்டு ஈழத்தமிழ் புலவர் மகாநாட்டை நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடத்தினார். அந்த மகா நாட்டில் ‘ஈழத்துப் பூதந்தேவனார் வரலாறும் பாடல்களும்’ என்ற நூலை வெளியிட்டதோடு மகாநாட்டு மலரையும் வெளி யிட்டார். 2004-ம் ஆண்டு இக்கழகத்தின் சார்பில் தமிழ் சங் கத்தில் தொல்காப்பியர் மகாநாட்டை நடத்தியதுடன், ‘ஒல்-காப் பெரும்புகழ் தொல்காப்பியக் கட்டுரைகள்’ என்ற நூலை யும் வெளியிட்டார். போத்துக்கீசர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த இணுவில் சின்னத்தம்பிப் புலவர், இணுவில் சிவகாமி அம் மன் மீது பற்றுக் கொண்டு, பாடிய பல பதிகங்களைத் தொகுத்து, ‘சிவகாமியம்மைத் தமிழ்’ என்னும் நூலை 2007-ம் ஆண்டு வெளியிட்டார். தமிழ் சிற்றிலக்கியப் பரப்பில், தூது இலக்கிய வகையுள் அடங்கும், அவர் எழுதிய ‘பஞ்சவன்னத் தூது’ என்ற நூலையும் வெளியிட்டார்.

2008-ம் ஆண்டு சிலப்பதிகார விழாவை முத்தமிழ் விழாவாக மூன்று நாட்கள் நடத்தினார். கல்விச் சான்றோர்கள் பலர் கலந்து சிறப்பித்த இவ்விழாவில் ‘சிலப்பதிகாரக் கட்டுரை கள்’ என்னும் மலர் வெளியிடப்பெற்றது. அம்மலரில் கந்தசு-வாமி அவர்கள் எழுதிய ‘தமிழகத்துக்கு செந்தமிழ்க் காப்பி யம் சிலப்பதிகாரம்’ என்னும் கட்டுரை அவரது தமிழ் ஆய் வின் சிறப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். 2007-ம் ஆண்டு தமிழறிஞர் சைமன் காசிச் செட்டி நினைவு மன்றச் செயலாள ராகப் பணியாற்றி, அவரது ஊரான புத்தளம் - கற்பிட்டியில் பெருவிழா எடுத்து, அவரை நினைவு கூர்ந்தார். அங்கு நூல் களை அன்பளிப்புச் செய்து ஒரு நூலகத்தையும் ஆரம்பித் தார்.

தமிழ்ச் சங்கத்தின் பாதுகாவலராக விளங்கிய தமிழறிஞர் பொ. சங்கரப்பிள்ளை அவர்கள் அவ்வப்போது எழுதிய கட்டு ரைகளைத் தொகுத்து, ‘ஈழத்துப் பேரறிஞர் பொ. சங்கரப் பிள்ளை அவர்களின் சிந்தனைகள்’ என்ற நூலைப் பதிப் பித்து, 2000-ம் ஆண்டு, தமிழ்ச் சங்கத்தில், சங்கரப்பிள்ளை மண்டபத் திறப்பு விழாவின் போது வெளியிட்டார். அதுபோ லவே தமிழ்ச் சங்கத்தை ஸ்தாபித்தவரும், அதன் முன்னாள் தலைவருமான ச.சு. பொன்னம்பல முதலியார் எழுதிய ‘பனை நூறு’ என்ற நூலையும் தமிழ்ச் சங்க வெளியீடாக வெளியிட் டார்.

பாவலர் சரித்திர தீபகம் - பகுதி 1, 2, தமிழ்ச் சங்கப் பொன் விழா மலர், க.த. ஞானப்பிரகாசம் எழுதிய பாரதி பிள்ளைத் தமிழ், கலாநிதி கே.எஸ். நடராசா எழுதிய ஈழத்து இலக்கிய வளர்ச்சி, க.செ. நடராசா பதிப்பித்த வையாபாடல், சிவங் க ருணாலய பாண்டியனார் நினைவுப் பேருரை, மருத்துவக் கலாநிதி அ. சின்னத்தம்பி நினைவுப் பேருரை, பேராசிரியர் வி. செல்வநாயகம் நினைவுப் பேருரை ஆகிய நுல்கள் தமிழ்ச் சங்க வெளியீடுகளாக வெளிவரக் கந்தசுவாமி அவர் கள் பெரும் ஆதரவை வழங்கினார்.

இலங்கைக் கல்வித் திணைக்களத்தின், பாடவிதானப் பிரிவில், பதிப்பாசிரியராகப் பணியாற்றிய அனுபவத்தினைக் கொண்டு, க.பொ.த. சாதாரண, மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ்மொழி, சமயம் தொடர்பான பல நுல்களை எழுதியுள்ளார். திருவெம்பாவை - திருவம்மானை மூலமும் உரையும், இரட்சணிய யாத்திரிகம் சிலுவைப்பாடு - மூலமும் உரையும், பெரிய புராணம் - காரைக்கால் அம்மையார் புராணம் மூலமும் உரையும், கம்பராமாயணம் சுந்தரகாண்டம் - காட்சிப் படலம் மூலமும் உரையும், மகாகவி பாரதியார் - கண்ணன் பாடல்களும் விளக்க உரையும், தேம்பாவணி மகனேர்ந்த படலம் விளக்கவுரை, கண்ணன் பாட்டு - பாரதியார் பாடல், திருக்குறள் - ஒழிபியல் விளக்கவுரை, தமிழ் இலக்கியத் தொகுப்பு என்பன அவற்றுள் சிலவாகும்.

மாணவர்களின் மொழி ஆளுமைத் திறனை மேம்படுத்தும் நோக்குடன், மாணவரிடையே மொழித்திறன் போட்டிகளை நடத்திப் பரிசளித்து, ஊக்குவித்ததுடன், பதிப்பாசிரியராக அவர்களது ஆக்கங்களைத் தொகுத்து, மலராகவும் வெளியிட்டார். 1993-ம் ஆண்டு மலையக மாணவர்களுக்கான தமிழ்த் திறன் போட்டிகள் நடத்தப்பட்டு ‘மலையருவி' என்ற சிறப்பு மலரும், 1995-ம் ஆண்டு வடமேல் பிரதேச மாணவர்களுக்கான தமிழ்த் திறன் போட்டிகள் நடத்தப்பட்டு ‘அலையருவி' என்ற சிறப்பு மலரும், 1998-ம் ஆண்டு வன்னிப் பிரதேச மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு ‘கலையருவி' என்ற மலரும் தமிழ்ச் சங்க வெளியீடுகளாக வெளிவந்தன. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் போட்டிகளை வைத்து, தரமான ஆக்கங்களைத் தொகுத்து, ‘விபுலானந்தம்' என்ற நூலையும் தமிழ்ச் சங்கம் ஊடாக வெளியிட்டார்.

சிறுவர்களின் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட கந்தசுவாமி அவர்கள் சிறுவர்களுக்கான நூல்களையும் எழுதியுள்ளார். 1982-ம் ஆண்டு ‘பாலர் மலர்' என்ற நூலையும், 1993-ம் ஆண்டு ‘அம்மா சொன்ன கதைகள்' என்ற நூலையும் எழுதியுள்ளார். பாலர் மலர் என்ற நூல், சிறுவர் பாட நூலை அடிப்படையாகக் கொண்டு, அவர்களது எழுத்துப் பயிற்சியை ஊக்குவிக்கும் வகையில் அமைந்தது. அம்மா சொன்ன கதை என்னும் நூல், பன்னிரண்டு தமிழ் அறிஞர்களை சிறுவர்கள் இலகுவில் விளங்கிக் கொள்ளும் வகையில், மிக எளிமையாகக் கோட்டுச் சித்திரங்களுடன் எழுதப்பட்டது.

கந்தசுவாமி அவர்கள் நூல்களை எழுதி வெளியிட ஆர்வம் கொண்டவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து உற்சாகமூட்டினார். குறிப்பாக உடுவை எஸ். தில்லைநடராஜா அவர்கள், தான் எழுதிய சிறுகதைகளுள், பன்னிரண்டு சிறுகதைகளைத் தெரிவு செய்து, தொகுத்த, ‘நிர்வாணம்' என்ற சிறுகதைத் தொகுப்பு நூலை 1992-ம் ஆண்டு, இந்தியாவில் நடைபெற்ற சிறுகதைப் போட்டிக்கு அனுப்ப முயற்சித்தார். உள்நாட்டுப் போர் காரணமாகப் போக்குவரத்து, மற்றும் தபால் சேவைகள் சீர்குலைந்த நிலையில், கந்தசுவாமி அவர்களின் பெரு முயற்சியால் அந்நூல் போட்டியில் இடம்பெற்றது; பரிசையும் பெற்றது; ஏனைய நாடுகளுக்கும் அறிமுகமானது.

கந்தசுவாமி அவர்கள் தமிழ்ச் சங்கச் செயலாளராக, முப்பது ஆண்டுகள் பணியாற்றிய காலத்தில், தமிழ் மொழியை நேசித்த பல இஸ்லாமியப் பெரியோர்களும் உள்வாங்கப்பட்டனர். அகில இலங்கை, திருக்குர்ஆன் ஸ்தாபகத் தலைவர் எஸ்.எம். சஹாப்தீன் தமிழ் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார். அறிஞர் பெருமக்களான ஏ.எம்.ஏ அஸீஸ், டாக்டர் ம.மு. உவைஸ், எஸ்.எம். கமால்தீன், ஏ.எம். சமீம் போன்ற பலர் தமிழ்ச் சங்க மேடையை அலங்கரித்தனர். கிழக்கு மாகாணம் மருதமுனையைச் சேர்ந்த டாக்டர் ஜின்னாஹ் சரிபுத்தீன் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகப் பதவியேற்க, கந்தசுவாமி அவர்கள் பக்கபலமாக இருந்தார்.

அரசியல் ரீதியாக மகாத்மா காந்தியின் அகிம்சைக் கொள்கையில் ஈடுபாடு கொண்ட கந்தசுவாமி அவர்கள், அதே கொள்கையை அடிநாதமாகக் கொண்ட, தமிழரசுக் கட்சியில், அதன் ஆரம்ப காலம் தொடக்கம், விசுவாசம் கொண்ட தொண்டராக விளங்கினார். தந்தை செல்வநாயகத்தின் கொள்கையால் கவரப்பட்ட இவர், அகிம்சை, சத்தியம், உண்ணா நோன்பு, மௌன விரதம் ஆகியவற்றையும் கடைப்பிடித்தார்.

கந்தசுவாமி அவர்கள், பிரம்மச்சரிய வாழ்க்கையை மேற்கொண்டு, தமிழ்ச் சங்கத்திலேயே தங்கியிருந்து, சங்கத்தின் வளர்ச்சிக்கும், தமிழ் மொழி, மற்றும் சைவ சமயத்தின் மேம்பாட்டுக்கும், தனது வாழ்வை முழுமையாக அர்ப்பணித்ததைப் பாராட்டிப், பலரும் கௌரவித்துள்ளனர்.

1979-ம் ஆண்டு மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா தமிழ்ச் சங்க மண்டபத்தில் கொண்டாடப்பட்டபோது, பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட, தமிழ் நாடு நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ‘தமிழ்க் காவலன்' என்னும் பட்டமளித்துப் பாராட்டினார். 1974-ம் ஆண்டு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராட்சி மகாநாட்டில், ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்த கந்தசுவாமி அவர்களுக்கு, ‘தமிழ வேள்' என்ற பட்டம் வழங்கப்பட்டது. 1994-ம் ஆண்டு இந்து சமய கலாசார அமைச்சு ‘தமிழ் மணி' எனப் பட்டமளித்து கௌரவித்தது. தமிழ்ச் சங்கம் தனது நிறுவுநரின், அறுபத்தாறாவது நினைவு தின விழாவில் ‘சங்கச் சான்றோர்' விருதினை வழங்கிப் பெருமை கொண்டது. 2007-ம் ஆண்டு கனடாவில், இணுவில் திருவூர் ஒன்றியம், இணுவில் சின்னத்தம்பிப் புலவரின் ‘பஞ்சவன்னத் தூது' என்னும் நூலை, கந்தசுவாமி அவர்களின் ஆழமான உரையுடன் வெளியிட்டதோடு, ஒரு இலட்சம் ரூபா பெறுமதி கொண்ட பொற்கிழியும் வழங்கி மதிப்பளித்தது.

சிறந்த ஆசிரியராகவும், நூலாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், ஆளுமைமிக்க நிர்வாகியாகவும், சமூக சேவகராகவும், தனது வாழ்வை முழுமையாக அர்ப்பணித்து, தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சிக்காகவும், தமிழ் மொழியின் மேம்பாட்டுக்காகவும் இறுதி வரை அயராது உழைத்த க.இ.க. கந்தசுவாமி அவர்கள் 2008-ம் ஆண்டு அக்ரோபர் மாதம் பத்தொன்பதாம் திகதி அமரத்துவம் அடைந்தார். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கல்விப்பணியாற்றி, இருபது ஆண்டுகளுக்கு மேலாக, கொழும்புத் தமிழ்ச் சங்கச் செயலாளராகச் செயற்பட்ட கந்தசுவாமி அவர்களைத் தமிழ்ச் சங்கத்தின் பிதாமகன் என அழைத்தல் சாலப் பொருத்தமானதாகும்.



vivekananthan.v@thaiveedu.com

# உலகின் மற்றொரு பக்கம்:
# புற்றுநோயின் இருண்ட பக்கத்தில் ஒளியைக் காணுதல்



– மீனாள் நித்தியானந்தன்

ஆபத்தான மார்பகப் புற்று நோயிலிருந்து வெற்றிகரமாக மீண்டு வந்திருக்கும் தோழி கலா வி. பிள்ளை அவர்கள் தனது அனுபவங்களை, The other side of the world - Finding Light in the darkness of Cancer (Kala V. Pillai,2024) என்ற ஆங்கில நூலில் வெளியிட்டிருக்கிறார்.

கலா என் இனிய தோழி. செந்தளிப்பான முகத்துடன், எங்கு கண்டாலும், ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் நேசம் அவரிடம் எப்போதும் குடிகொண்டிருக்கும். அடிக்கடி இலக்கியக் கூட்டங்களில் நாங்கள் சந்தித்துக்கொள்வோம். நடக்கின்ற ஒவ்வொரு கூட்டத்திலும் கலா தனித்துத் தெரிவார். ஒரு இலக்கியக் கூட்டத்தில் அவர் இல்லையென்றால், ஏன் அவர் வரவில்லை என்று நான் யோசிப்பேன். சென்ற ஆண்டில் நித்தியின் நான்கு நூல்களின் வெளியீட்டு விழாவினை நான் ஒழுங்கு செய்து கொண்டிருந்தபோது, நித்தியின் ஒரு நூலை கலா ஸ்ரீரஞ்சனி விமர்சனம் செய்யவேண்டும் என்று நான் விரும்பியிருந்தேன். நீண்ட இடைவெளிக்குப் பின் கலாவுடன் தொடர்பு கொண்டேன். கலா நீங்கதான் பேசவேண்டும் எனக் கூறி ஆசையோடு நான் அவரைக் கேட்டபோது, அவர் கூறிய செய்தி என்னைப் பெருந்துயரத்தில் ஆழ்த்தியது.

என் இனிய சகோதரி புற்று நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்பதும் அது stage 3 என்றதும் நான் அதிர்ந்து போனேன். ஒரு நர்சாக, புற்றுநோயாளர்களுக்குச் சிகிச்சை அளித்துப் பராமரித்த பெரும் அனுபவம் கொண்டவள் என்றபோதும், என் நெஞ்சிற்கு நேசமான ஒரு சகோதரிக்கு இந்த நோய் வந்திருக்கிறது என்பதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. அப்போதும் 'நான் வருகிறேன். என்னை முதலில் பேசப் போடுங்கள். நான் சிறிது நேரம் கூட்டத்தில் இருப்பேன். எனக்கு களைக்கும்... முடியும் வரை இருந்து விட்டுப் போய்விடுவேன்' என்றார்.

ராசாத்தி, ஓர் இளவரசி போல், எப்போதும்போல, ஒய்யாரமாகக் கூட்ட மண்டபத்திற்கு வந்திருந்தார். அவர் கேட்ட மாதிரியே எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தேன். ஒரு சிங்கப் பெண்ணாய் மேடையில் தோன்றி, தனக்கேயுரிய கம்பீரத்துடன் தனது விமர்சனத்தை முன்வைத்தார் கலா. அந்த கெத்து அவருக்கு மட்டுமே உரியது. கலாவை அந்த மேடையில் பார்த்து நான் சிலிர்த்தேன். அப்போது அந்த அரங்கில் கலாவின் நோய் பற்றி யாருக்குமே தெரியாது. நானும் அது பற்றி யாரிடமும் சொன்னதில்லை.

இன்று என் சகோதரி, சிங்கப்பெண்ணாக, அந்த நோயிலிருந்து மீண்டு, தன் அனுபவத்தை ஒரு நூலாக வடித்துத் தந்திருப்பது பற்றி நான் பெருமைப்படுகிறேன். கலா நூறாண்டு காலம் வாழ வேண்டும் என்று என் இனிய சகோதரிக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.

'சவாலான நிலையில் என் போராட்டத்தில் எவ்வாறு வெற்றி கண்டேன் என்ற தன் அனுபவம், புற்றுநோயால் தனிமையில், முடங்கிக்கிடக்கும் மற்றவர்களுக்கு உதவும்' என்ற நோக்கில் இந்த நூலை எழுதியிருப்பதாக கலா தன் நூலில் தெரிவிக்கிறார். பெண்களுக்கு மட்டுமல்ல, தனிமையில் நோயால் துயருறும் அனைவருக்குமாகவே இந்த நூல் எழுதப்பட்டிருக்கிறது என்கிறார் கலா.

எல்லாரையும் போலவே mammogram பரிசோதனைக்குச் சென்ற கலாவிற்கு radiographer அவரது மார்பில் வெள்ளை மேகம் போல calcification இருப்பதாகக் கூறுகிறார். அடுத்த சோதனையில், அவரின் நோய் stage 3-ஐ அடைந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள். புற்றுநோய்க்கான விசேஷ மருத்துவமனையான Royal Marsden-க்குச் சிகிச்சை பெற அனுமதிக்கப்படுகிறார்.

நம்பமுடியாத, ஆனால், நம்பியாகவேண்டிய, ஓர் அபாயகரமான, அச்சமூட்டும் நோயை கலா எதிர்கொள்கிறார்... யாருக்குமே அதிர்ச்சியூட்டும் செய்திதான்.

'துணிச்சலாகத் தன் நோயை எதிர்ப்பதைத் தவிர, தனக்கு முன் எந்தத் தெரிவும் இல்லை' என்று இந்தத் துணிச்சல்காரி தைரியமாகவே இருந்திருக்கிறார் என்பது நமக்கெல்லாம் தெம்பூட்டும் செய்திதான்.

கலா ஆரோக்கியமான வாழ்வைக் கொண்டு நடத்தியிருக்கிறார். ஜிம்முக்குப் போய்வந்திருக்கிறார். நீச்சல் பயிற்சி செய்திருக்கிறார். தனது செல்ல நாய்க் குட்டியுடன் தினமும் நடைப்பயணம் போயிருக்கிறார். தனது ஆசிரியத் தொழிலில் ஓடியாடிப் பரபரப்புடன் இருந்திருக்கிறார். வீட்டுச் சமையலை விரும்பித் தானே சமையல் செய்து, ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பேணி வந்திருக்கிறார்.

வெளியுலகிலும் கலா எப்போதும் கலகலப்பானராகவே இருந்திருக்கிறார். முகநூலில் மிகப்பெரும் வாசகர்களைக் கொண்டவர். நகைச்சுவையாகவும், நேசத்துடனும், உண்மையாகவும் அவர் முகநூலில் எழுதும் பதிவுகளுக்கு நிறையப் பின்னூட்டங்கள் வரும். பாடசாலை வாழ்வும் அவருக்கான சந்தோஷ

மான சூழலை உருவாக்கியிருந்தது. இலக்கியக் கூட்டங்களில், ஓர் ஆசிரியைக்கேயுரிய தயாரிப்புடன், அவர் கூட்டங்களில் பேசும்போது, நேரத்தைக் கருத்தில் கொண்டு, கவர்ச்சியாகப் பேச வல்லவர். பத்திரிகைகளில் எழுதி, தனக்கென ஒரு வாசகர் கூட்டத்தையும் வைத்திருக்கிறார். பாசத்துடன் பழகும் பக்குவம் அவருக்கு நல்ல நண்பர்கள் வட்டத்தைச் சேர்த்துக் கொடுத்திருக்கிறது.

இவ்வளவு பரந்த நண்பர்களை, தொடர்புகளைக் கொண்டிருக்கும் கலா தனிமையை உணர்கிறார். 'தான் தனிமையில் இருக்க நேர்ந்திருக்கிறது' என்று ஓரிடத்தில் எழுதுகிறார். வீட்டில் தனக்கு வரும் தொலைபேசி அழைப்புகளுக்குப் பதில் கூற ஒருவருமில்லை என்கிறார். கணவர் என்ற ஒருவரின் துணை இல்லாத நிலையில், தன் பாசம்மிக்க மகன்களின் ஆதரவோடு மட்டுமே எதிர்நீச்சல் போட்டிருக்கிறார் கலா.

புற்றுநோய்க்குள்ளான சகல நோயாளிகளுக்கும் உள்ள சோதனைகள், சிகிச்சைகள், intensive Chemotherapy, anti-hormone therapy, infusion, radiation therapy, lumpectonomy, mammogram, oncologist, immunosuppressive medication என்று எல்லாக் கட்டங்களையும் தாண்டுகிறார்.

இந்த நோய்க்கான சிகிச்சைக் காலத்தை ஒரு 'பயணமாக'ப் பார்க்கிறார் கலா.

'அது மிக நீண்ட பயணம்' என்கிறார்.

'எங்கள் மனம் வலிமை மிக்கது' என்கிறார்.

'எப்போதும் நம்பிக்கையோடு இருங்கள்!'- இதுதான் இந்த நூலின் ஸ்டார் மந்திரம் என்று கூறுகிறார்.

புற்றுநோய்ச் சிகிச்சையை மேற்கொண்டு, அந்த நோயை வென்று, மீண்ட இரண்டு வருட அனுபவத்தை கலா இந்த நூலில் பேசுகிறார்.

தனி நபர்கள் ஓர் உலகம். அதிலேயும் இரண்டு வகை.

இன்னுமொரு பரந்த உலகம். அதிலேயும் இரண்டு வகை.

தனிநபர்களில், ஏற்கனவே புற்றுநோயால் பீடிக்கப்பட்டு, அந்நோயின் உக்கிரத்தை உணர்ந்தவர்களாய், வெற்றி பெற்று, இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிய நண்பிகள் எனக்குப் பெரும் ஆதரவாய் இருந்தார்கள். என்னைப் போலவே அவர்களும் துணை இல்லாத தனிப் பெண்களாய்க் குடும்பச் சுமையைச் சுமந்து வருபவர்கள். இதுவும் எனக்குப் பெரும் பலமாயிருந்தது.

இது ஒரு அற்புதமான உலகம்.

தனிநபர்களின் இன்னொரு கூட்டம் சகித்துக்கொள்ள முடியாத மனிதர்களைக் கொண்டது. இவர்கள் நம்மை இழிவுபடுத்தி, காயப்படுத்த முனைபவர்கள். இம்மாதிரி மனிதர்களையும் கலா தன் வாழ்வில் சந்திக்க நேர்ந்தது துரதிர்ஷ்டமானது. 'ஆனால், இம்மாதிரி மனிதர்களை நான் கணக்கில் கொள்ளவில்லை' என்கிறார் கலா.

கலா எதிர்கொண்ட பரந்த உலகில் அவருடைய நோய்க்கான சிகிச்சை வழங்கிய மருத்துவ நிபுணர்கள், செவிலியர்கள், தேவையான நேரங்களில் எல்லாம், அக்கறையோடு ஆலோசனைகளை வழங்கிய மருத்துவத்துறை சார்ந்தோர் என்று அற்புதமான உலகம் விரிகின்றது. தனக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி, உற்சாகத்தோடும் அக்கறையோடும் அவர்கள் இந்த நோயிலிருந்து மீள எவ்வளவு உதவியாய் இருந்திருக்கிறார்கள் என்பதை கலா மிகுந்த நன்றியுணர்வோடு இந்த நூலில் எடுத்துக்கூறுகிறார்.

அண்மையில், சென்னையில் கலைஞர் மருத்துவமனையில், வறுமைப்பட்ட ஒரு தாய் உக்கிரமான புற்றுநோயால் பீடிக்கப்பட்ட நிலையில், அவருக்குச் சிகிச்சை வழங்கிய டாக்டர் பாலாஜி என்பவர், அப்பெண்மணியை மோசமாக நடத்தினார் என்று, அத்தாயின் மகன் அந்த டாக்டரை கத்தியால் குத்தியிருக்கிறார். டாக்டரைக் கத்தியால் குத்தியதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால், மிக மோசமான நிலையில், புற்றுநோயின் ஐந்தாம் கட்டத்தை எட்டிவிட்ட ஒரு தாயின் வலியை உணராமல், அந்த டாக்டர் அவரை நடத்திய விதத்தை நாம் கவனத்தில் எடுக்கவேண்டும். அந்த விதத்தில், கலாவைக் கண்காணித்த மருத்துவர்கள் மருத்துவ உலகின் ஒளிரும் நட்சத்திரங்களாகக் காட்சியளிக்கிறார்கள்.

புற்றுநோய்ச் சிகிச்சை பெறுபவர்களுக்காக இங்கிலாந்தின்



அரசாங்க மருத்துவ சேவைக்கு வெளியில் செயற்படும் Maggie's Centre என்ற அற்புதமான, உல்லாச வசதிகள் கொண்ட நிலையத்தைப் பற்றி இந்த நூலில்தான் அறிகிறோம். மிக ருசிகரமான மனிதர்களை இந்த நிலையத்தில் சந்திக்கிறார் கலா. 83 வயதான ஒரு பெண்மணியை இங்கு சந்திக்கிறார் கலா. 'வார இறுதியில் ஒரு கிளாஸ் வைனைக் குடி, நல்லது' என்று கலாவிற்கு ஆலோசனை கூறியிருக்கிறார். 'வைனா? அது எனக்குத் தடைசெய்யப்பட ஒன்றாயிற்றே!' என்று கூறியிருக்கிறார் கலா.

அதற்கு அந்தப் பெண்மணி எப்படிப் பதில் சொல்லியிருக்கிறார் என்பது சுவையானது.

'இதையெல்லாம் ஏன் அவர்களுக்குச் சொல்கிறாய். எப்போதாவது குடித்தால் ஒன்றும் பாதகமில்லை' என்று கூறியிருக்கிறார் அந்த நல்ல மனதுக்காரி. அந்த Maggie's Centre ஒரு அற்புதமான உலகமாக இருந்திருக்கிறது.

அவர் எதிர்நோக்கிய வலி, வேதனை, உபாதைகளுக்கு அந்த இடம் கலாவிற்கு ஒத்தடம் கொடுத்திருக்கிறது.

கலாவைப் பீடித்திருந்த நோயின் உக்கிரத்தால், அவருக்கான சிகிச்சையும் மிகக் கடுமையாக இருந்திருக்கிறது. அவர் உடல் இளைத்திருக்கிறது; கையால் ஒரு கிளாசை எடுப்பது

கூட அவருக்குக் கஷ்டமாக இருந்திருக்கிறது; படியில் இறங்கும்போது, நிலை தடுமாறி விழுந்திருக்கிறார்; அவருக்குப் பசி எடுப்பதில்லை; எதைச் சாப்பிட்டாலும் அவருக்குக் குமட்டிக்கொண்டு வருகிறது; தலை முடி உதிர்கிறது; நகங்கள் உதிர்கின்றன; சுவரைப் பிடித்துக்கொண்டு மாடியில் இருந்து இறங்க நேர்கிறது. கைவிரல்கள், பாதங்கள் உணர்ச்சியிழந்து, மரத்துப்போய் விடுகின்றது.

ஆனால், எங்கள் சிங்கப்பெண் இவற்றையெல்லாம் வென்று, தன் அனுபவங்களை எல்லாம் நூலில் வடித்து, ஒய்யாரமாக வெளியில் வந்திருக்கிறார் கலா.

18 மாதங்கள் தீவிர சிகிச்சை பெற்று, 6 சுற்று Chemotherapy-க்குள்ளாகி, இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில், தனது அனுபவங்களைத் துல்லியமாகப் பதிவு செய்து, ஒரு நூலாக எழுதி, சாதனையைச் செய்திருக்கிறார் கலா. ஏற்கனவே சில நூல்களை எழுதிய அனுபவத்தோடு, கலா எழுதியுள்ள இந்த நூல் நம் எல்லோருக்கும் நம்பிக்கையையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தக் கூடியது என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. இந்த நூலை எழுதிய கலா எல்லாப் பாராட்டுகளுக்கும் உரியவர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கலாவிற்கு என் பணிவான வேண்டுகோள். ஆங்கிலத்தில் இம்மாதிரி நூல்கள் நிறையவே கிடைக்கின்றன. எமது தமிழ்ச் சகோதரிகளும் பயனடைவதற்கு இந்த நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பது மிகச் சிறந்த பணியாக இருக்கும். இந்த நல்ல தருணத்தில், என் இனிய சகோதரி, அழகுத் தேவதை கலா நீண்ட நெடு நாட்கள் வாழ வேண்டும் என்று மனம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.



meenal.n@thaiveedu.com






இலங்கையில் 'மலையகம்200' நிகழ்வுகள் 2023 / 2024 ஆண்டு காலப்பகுதிகளில் நடைபெற்று ஓய்ந்த பின்னரும் கூட அவை சார்ந்த உரையாடல்கள் தொடர்கின்றன. அந்த வகையில் மலையகத் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வாதாரத் தொழில் அடிப்படையில் அவர்களின் இலக்கிய படைப்புகள் எவ்வாறு விரிந்தன, இன்னும் எவ்வளவு அகலமாகத் தனது சிறகை விரிக்கலாம் என்பதையும் ஆராயும் முயற்சியே இந்த 'மலையக இலக்கியத்தில் தேநீரும் பாலும்' எனும் கட்டுரையின் நோக்கமாகிறது.

## அறிமுகம்:

ஈழத்து தமிழ் இலக்கியத்தில் ஒரு கூறாக அமைந்த மலையக இலக்கியம் குறித்துப் பேராசான் கார்த்திகேசு சிவத்தம்பி பின் வருமாறு குறிப்பிடுகின்றார். 'இலங்கையில் தமிழ் என்கிற நதி சில வேளைகளில் ஒன்றையொன்று சந்திக்கின்ற சில வேளைகளில் சந்திக்காத பல நீரோடைகளின் சங்கமிப்பாக அமைகிறது. இதற்குள் யாழ்ப்பாணம் வருகிறது. மட்டக்களப்பு வருகிறது. வன்னி வருகிறது. கொழும்பு வருகிறது. இஸ்லாமிய வாழ்க்கை வருகிறது. மலையகம் வருகிறது. இந்த நீரோடைகளின் சலசலப்பான பாய்ச்சல்கள் ஒன்றோடொன்று சேருகின்றபோதுதான் நான் நம்புகிறேன் ஈழத்து இலக்கியம் என்கிற நதி ஓடும்' என (மல்லியப்பு சந்தி -குரல் பதிவு - ஒலி இறுவட்டு, பாக்யா பதிப்பகம், திலகர், 2007)

மலையக சமூக உருவாக்கத்தின் இப்பின்னணியிலேயே மலையக இலக்கியத்தை நாம் நோக்க வேண்டும். மலையக இலக்கியம் என்பது மலையகத் தமிழரின் வரலாறு, பண்பாடு, சமூக அரசியல் பிரச்சினைகளின் அடையாளமாக உருவாகியுள்ளது. அது ஈழத்து இலக்கியத்தின் தனித்துவமான ஒரு பகுதியாகும். 'இந்த இலக்கிய உருவாக்கம் 1920-களில் ஆரம்பித்தது எனலாம்' என குறிப்பிடும் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான், 'மலையக மக்களின் வாய்மொழி இலக்கியம் அவர்கள் இந்த நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட காலத்திலேயே ஆரம்பித்து விட்டது' என்றும் கருதுகின்றார். (எம்.ஏ.நுஃமான், 2019, இலக்கியம் - தொகுப்பு நூல், விஷேட மலர், அரச இலக்கிய ஆலோசனைக் குழு, கொழும்பு).

இந்தப் பின்னணிகளுடன் மலையக இலக்கியத்தில் தேயிலை சார்ந்த வாழ்வு பேசப்பட்ட அளவுக்கு இறப்பர் சார்ந்த வாழ்வு பேசப்பட்டுள்ளதா அல்லது பேசப்படுகின்றதா என ஆராய்ந்து பார்க்கும் முயற்சியே இந்த கட்டுரை.

## கோப்பியும் மலையக இலக்கியமும்:

தேயிலைக்கு முன்பதாகவே கோப்பி பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை அந்தக் கால நாட்டார் பாடல்கள் எடுத்துக்காட்டியுள்ளன.

***'கூணி அடிச்ச ம(லை)ல***
***கோப்பிக் கன்னு போட்ட ம(லை)ல***
***அண்ணனை தோத்த ம(லை)ல***
***அந்தோ தெரியுதுபார்'***

எனும் நாட்டார் பாடல் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட அந்த ஆரம்ப நாட்களில் கோப்பிக்கன்றுகளை நடுவதற்காக மலையேறிச் சென்ற வேளை தங்கள் உறவுகளை இழந்த சோக நிலையை பகிர்கின்றது. அதே போல

***'ஊரான ஊரிழந்தேன்***
***ஒத்தப் பனைத் தோப்பிழந்தேன்***
***பேரான கண்டியிலே***
***பெத்த தாயை நா மறந்தேன்'***

என தங்களது தமிழ்நாட்டு வாழ்க்கைச் சூழலையும் கூட பாடி வைத்துள்ளனர். கூடவே,

***'கோண கோண மலையேறி***
***கோப்பிப் பழம் பறிக்கையிலே***
***ஒத்தப்பழம் தப்பிச்சினு***
***ஒதைச் சானையா சின்னத்துரை'***

என இலங்கையின் கோப்பித் தோட்டத்தில் தாம் படும் துன்பங்களையும் ஒடுக்குமுறைகளையும் கூட தமது நாட்டார் பாடல்களில் பாடி வைத்துள்ளனர் மலையக மக்கள்.

இலங்கை மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் கண்ணீர் வரலாற்றை மலையக நாட்டார் வரலாறு விளக்கிநிற்கிறது. 1824-ம் ஆண்டில் இந்தியத் தமிழர்களின் குடியேற்றத் துயரத்தை இந்நாட்டார் பாடல்கள் சித்திரித்துள்ளன என்றும், இத்தகைய பாடல்களை 'முனியாண்டி' எனும் ஆங்கிலப் பத்திரிகையை நடாத்திய ஜோன் கெப்பர் 1869-ம் ஆண்டு சேகரித்துள்ளார் என்றும் அந்தனி ஜீவா குறிப்பிடுகின்றார் (அந்தனி ஜீவா, மலையகமும் இலக்கியமும்,1995, மலையகம் வெளியீட்டகம், கண்டி)

மக்கள் கையில் இருந்த நாட்டார் பாடல்கள் மக்கள் பாடல்கள் என்ற பொது நிலையில் இருந்து தனிப்பட்டவர்களின் படைப் பிலக்கியமாக மாறுகின்றபோது நம்முன் நிற்பவர்

அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர். இவ்வாறு இவர் அடையாளப்படுத்தப்படுவது அவரது பெற்றோரது வருகை மற்றும் அவரது பிறப்பு மலையகத்தோடு தொடர்பு பெற்ற வகையில் அமைவத னாலாகும். இவர் 30.06.1866-ல் கண்டி போப்பிட்டிய எனும் இடத்தில் பிறந்தார் என்பதுவும் இவரது தந்தையார் இந்தியாவின் திருப்பெருந்துறையினைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்றும் இவர் சிறு 'கோப்பித்தோட்டச் செய்கைக் காக' இலங்கை வந்தார் என்றும் சொல்லப்படுகிறது. இவரது பிறப்பு தொடர்பான பின்னணி மலையக சமூக உருவாக்கத்தின் ஆரம்ப கட்டமான கோப்பி பயிர்ச்செய்கை, மற்றும் தென்னிந்திய வருகையோடு தொடர்புபடுவதனால் இவர் மலையக இலக்கியக் கவிதைப் பாரம்பரியத்துக்குள் வைத்து பேசப்படும் கவிஞராகப் பார்க்கப்படுகின்றார். தவிரவும் அக்கால நாட்டார் பாடல்கள் போன்று மலையக மக்களின் வாழ்வியலை இவரது படைப்புகளில் தரிசிக்கக் கிடைத்ததாக எந்தக் குறிப்புகளும் இல்லை. எவ்வா றெனினும் அப்துல் காதிர் புலவரே மலையகக் கவிதை இலக்கியத்தின் பிதாமகனாகத் திகழ்கிறார்.

இவரைப் போன்றே ஆபிரஹாம் ஜோசப் எனும் கோப்பித் தோட்டக் கண்டக்டர் எழுதிய பாடல்கள் 'கோப்பிக் கிருஷிக் கும்மி' எனும் நூல் 1869-ல் மலையகத்தில் இருந்து வந்த முதல் நூல் என்ற பெருமையைப் பெறுகின்றது. 150 ஆண்டுகளுக்கு முன் எழுந்த மலையகத்தின் முதல் நூல் 'கோப்பிக் கிருஷிக் கும்மி'எனத் தனது தொடர் கட்டுரையில் ஒரு விரிவான ஆய்வினைத் தந்துள்ளார் ஆய்வறிஞர் மு. நித்தியானந்தன். யாழ்ப்பாணம் ஸ்ட்ரோங் அன்ட ஆஸ்பரி பிரிண்டர்ஸ் எனும் அச்சகத்தில் இந்த நூல் நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'தோட்டத்தொழிலாளர்கள் பாடித்திரியும் ஆட்சேபகரமான நாட்டார் பாடல்களுக்கு மாற்றீடாக இந்தப் பாடல்களை எழுதியுள்ளதாக ஆபிரஹாம் ஜோசப் தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்' எனச் சொல்லப்படுகிறது. இதன் காரணமாகவே இந்த 'கோப்பிக் கிருஷிக் கும்மி' கும்மிப் பாடல்கள் நாட்டார் பாடல்களிடம் மண்டியிட்டு மறைந்து போகின்றன. ஆனாலும் மலையகத்தின் முதல் நூல் என்கின்ற பெருமையை இந்தக் 'கோப்பிக்கிருஷிக் கும்மி' நூலே பெறுகின்றது.

அதேபோல மலையகத் தமிழர்களின் இலங்கை வருகை குறித்தான விஞ்ஞானபூர்வ ஆய்வு நூலாக விளங்கும் டொனொவன் மோல்ரிஜ் எழுதிய Bitter Berry Bondage எனும் ஆய்வு நூலும், கிறிஸ்டின் வில்சன் எழுதிய the Bitter Berry எனும் புதினமும் கோப்பி காலத்தை நினைவுபடுத்தும் அறுவடைகளாகும். இதில் Bitter Berry எனும் நூலைத் தழுவியதாக 'கண்டிச் சீமையிலே' என்ற ஆய்வுக் கட்டுரை நூலையும், Bitter Berry எனும் நாவலை 'கசந்த கோப்பி' எனும் புதினமாகவும் தமிழில் தந்துள்ளார் இரா. சடகோபன்.

## தேயிலையும் மலையக இலக்கியமும்:

மலையகத் தமிழ் மக்கள் கோப்பிப் பயிர்ச்செய்கையை வாழ்வாதாரமாகக் கொண்டிருந்த காலத்தில் எழுந்த இலக்கியங்களை வரிசைப்படுத்துவது போல மலையகத் தேயிலை வாழ்வை மையப்படுத்திய பல படைப்புகளை கவிதைகளாக, கதைகளாக, கட்டுரைகளாக, கலைப் படைப்புகளாக அடையாளம் காட்ட முடியும்.

இலங்கை மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையைத் துன்பம் நிறைந்த கேணியாக சித்திரித்த புதுமைப்பித்தன் கதைக்கு முன்பாகவே, 1928-ம் ஆண்டு 'தேச மக்களை நாசப்படுத்தும் தேயிலைத் தோட்டப்பாட்டு' எனும் சிறு பிரசுரம், குஜிலிப் பதிப்பாக சங்கீதச் சரபம் டி. சபாபதி முதலியார் பதிப்பித்து உள்ளார் (ஸ்ரீ மயில்வாகனம் பிரஸ், சென்னை, 1928). இந்த நூலில் இரண்டு நெடும்பாடல்கள் அடங்கியுள்ளன. முதல் பாடல் திருச்சி டி.எம். ஜனாபா புலவர் இயற்றிய 'கண்டி காப்பித் தோட்டப்பாட்டு', இரண்டாவது பாடல் புலவர் யாசீன்தாஸ் இயற்றிய 'தேயிலைக் கோப்பித் தோட்டப் பாட்டு'

***தேயிலைத் தோட்டத்திலே நம***
***திந்தியர் சென்று மிரண்டு மெய் மறந்து***
***வாயிலாப் பூச்சது போல மனம்***
***வாடிக் கிடப்பது கோடிக்கு மேலுண்டு***
***தாயில்லாப் பிள்ளைகளும், வீட்டில்***
***தந்தைக் கடங்காமல் வந்ததூர் மைந்தரும்***
***சேயினை மார்களுடன் கூடிச்***
***சென்றுபார்த்த பின்பு நின்று புலம்பரார்***
***என ஜனாப்பா புலவர் பாடியுள்ளார்.***
***சிங்கையிலே ரப்பரு கூலி வேலை சும்மா***
***செட்டில்லை யம்மா***
***தெருவைச் சுற்றி யலைவது சோடி***
***உருவமுற்றிக் குழைவது தேடி கட***
***சிங்களத் தேச லங்கை விட்டு மீட்டு ...***

என யாசீன்தாஸ் புலவர் பாடுகிறார். (தொகுப்பாசிரியர் பா. ஆனந்த குமார், 2017, 'தேச மக்களை நாசப்படுத்தும் தேயிலைத் தோட்டப் பாட்டு'-மறுபதிப்பு, காந்திகிராமம் கிராமிய பல்கலைக்கழகம், திண்டுக்கல்)

இந்த இரண்டு பாடல்களிலும் இந்திய வம்சாவளியினரான மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையில் படும் பாடுகள் பாடப்பட்டிருப்பதுடன் அவர்களை மீளவும் இந்தியாவுக்கு அழைத்து வரவேண்டும் என அழைப்பதும் கண் கூடு. மலையகத்தில் மட்டுமல்லாது இலங்கையில் மொழிபெயர்ப்பு இலக்கியத்துறையில் ஆழத்தடம் பதித்த தலாத்துஓயா கே.கணேஷ் தமிழில் கவிதைகளையும் எழுதியுள்ளார். அவர் வெளியிட்ட 'பாரதி' சஞ்சிகையில் (1946) எழுதிய கவிதையொன்று பின் வருமாறு அமைகிறது.

***வான் நோக்கி உயர்கின்ற மலைகள் யாவும்***
***மதுவொக்கும் எனப்புகழும் தேயிலைகள் மேவும்.***
***கான் ஒழித்துச் சோலை நிகராக இதைச் செய்தோர்***
***கடல் கடந்து தொழிலாளர் வியர்வை நீர் பெய்தோர்***

***உழைப்போர் கள் இருக்கின்ற வாழ்க்கையோ தாழ்வு***
***உழைக்காத துரைமார்கள் சுகபோக வாழ்வு***
***மழைக்காற்று மதியாது உதிர்க்கின்ற மேல் நீர்***
***மனம் குளிர நாமுண்ணும் ஒரு கோப்பைத் தேநீர்***

இந்தக் கவிதையில் ஒரு கோப்பைத் தேநீருக்கு பின்னால் உள்ள உழைக்கும் தொழிலாளர் மக்களின் வாழ்வைப் பதிவு செய்கிறார்.

கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளை 1931களிலேயே ஆங்கிலத்தில் 'விஸ்மாஜினி' எனும் பெயரிலும் 1948-ல் 'வழிப்போக்கன்' (Way farer) எனும் பெயரிலும் கவிதை நாடக ஆங்கில நூல்களை வெளியிட்டுள்ளார். இந்தியாவின் கவியரசர் ரவீந்திர நாத்தாகூர், கவிக்குயில் சரோஜினிதேவி போன்ற இந்திய கவிஞர்களின் கவிதைகளால் உந்தப்பட்டு ஆங்கிலத்தில்

கவிதைகளைப் படைத்தவர். 1956-ம் ஆண்டு வெளிவந்த 'இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே' என்ற ஆங்கிலக் கவிதை நூல் இவருக்குப் பெரும் புகழை ஈட்டித்தந்தது.

1963-ம் ஆண்டு The Afro Asian Writers Bureau தொகுத்து வெளியிட்ட ஆங்கிலக் கவிதை நூலில் இலங்கையிலிருந்து ஆறு கவிஞர்களின் ஆங்கிலக் கவிதைகள் சேர்த்துக் கொள் ளப்பட்டன. வண. மஹிந்த தேரோ (Payers of Independence) ஜே.பி. விக்கிரமதிலக்க (Awaken Sinhala Youth) இ.சி.வி. வேலுப்பிள்ளை (Tea Pluckers) இ ஈவா ரணவீர (Down Them) இ. வண. சார்ல்ஸ் வில்லியம் டி சில்வா (A petition) என்போரே இந்த கவிஞர்களாவர். இவர்களுள் ஒரே ஒரு தமிழ் கவிஞராகவும் அவரது கவிதை மலையக தோட்டத் தொழிலா ளிகளின் உழைப்பைப் பற்றியதுமாக அமைந்தமை சி.வி.யின் முக்கியத்தவத்தைக் காட்டி நிற்கிறது.

அந்த ஆங்கிலக் கவிதை இவ்வாறு அமைகிறது.

***Tea Pluckers***
***My Bronze bodied men***
***Noose the morning light;***
***From dell to Dale***
***From uplands and inclines***
***Echoes rise and fall***
***To the rhythm of pickaxe***
***Mammoty, fork and crowber***
***Forkers and pruners***
***Ferners and sprayers***
***Each skilled in the task;***
***They enter the field***
***Disturbed beehives their hearts***
***Their hands honey combs***
***Drip warm with the sweet,***
***Eight hours a day***
***Seven times in a week;***
***Thus their life blood flows***
***To fashion this land***
***A paradise for some***

Afro – Asian Poems Anthology Vol 1 Part 1 -Page 7,

இந்தக் கவிதை சி.வி.வேலுப்பிள்ளையின் 'In Ceylon Tea Garden' என்கிற நெடுங்கவிதையின் ஒரு பகுதியாகும். இதனை 'இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே' என சக்தி அ.பாலையா தமிழில் தந்ததையும் நாமறிவோம். இந்த நூல் தேயிலை தொழில் துறையை முன்வைத்து மலையக இலக்கி யம் நகர்த்தப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். மலையகத் தில் மரபுக் கவிதைகளை எழுதுவதில் புகழ்பெற்ற 'குறிஞ்சித் தென்னவன்' தேயிலை வாழ்வை இவ்வாறு பதிவு செய்கிறார்.

***'கூடையை முதுகில் தாங்கி***
***கோணலாய் உடல்வளைத்து***
***சாடையில் விழிகள் நோக்கும்***
***தன்னிலை பிறழ்ந்து சென்ற***
***ஆடையை கரங்கள் நீண்டு***
***அள்ளியே மார்பை மூடும்***
***வாடையில் மேனியாட***
***வரையிடை கால்கள் ஓடும்***

இவர் இலங்கையில் புகழ்பெற்ற கவிஞர். மஹாகவியைப் போல குறும்பாக்கள் எழுதுவதிலும் வல்லவராக இருந்தார். இந்தக் காலப்பகுதியில் எழுதிய கவிஞர்களுள் பூண்டு லோயா தர்மு (எஸ்.எம். தர்மலிங்கம்) தன்னுடைய 'மலைய ரசி' (ராஜி பதிப்பகம் 2000) என்ற கவிதைத் தொகுதியில்

***கூடை சுமந்து தலையில்***
***கொங்காணி மடித்துப் போட்டு***
***ஆடை சுருக்கி அதன்மேல்***
***அழகாக படங்குக்கட்டி***
***காடுமலை கானகம் நோக்கி***
***கல்லுக்குறுக் குப்பாதையிலே***
***வாடைக்காற்றைக் கிழித்தொதுக்கி***
***வஞ்சியர் போகிறார் கொழுந்தெடுக்க***

என தேயிலை வாழ்வை தனது கவிதையிலே பதிவு செய்கிறார். இலங்கையிலும் இந்தியாவிலும் தனது எழுத்துக் களால் இலக்கியத்தில் தடம் பதித்த எழுத்தாளர் சி.பன்னீர் செல்வம் தனது கவிதை ஒன்றில் இவ்வாறு எழுதுகிறார்.

***இரண்டு தளிர்கள் ஒரு மொட்டு***
***இதயம் பாடும் உயிர்ப்பாட்டு***
***காலைப் பனியில் முகம் மூடும்***
***தேயிலைச்செடியில் கரம் மேவும்***
***பறித்த கொழுந்தோ கூடையிலே***
***பட்டினிக் குழந்தையோ அழுகையிலே***

தமிழ்நாட்டில் பீடி சுற்றும் தொழில் செய்வோரின் வாழ்வி யலை 'விரல்கள்'எனும் தலைப்பில் நாவலாக்கி தமிழ்நாடள வில் பரிசும் பாராட்டும் பெற்றவர் சி. பன்னீர்செல்வம். தனது 'தேயிலைப் பூக்கள்' எனும் நெடுங்கவிதைத் தொகுப்பினூ டாக மலையக வாழ்வைக் காவியமாகவும் படைத்தவர் இவர். 'கொழுந்துகூடை'(கிஷோக்குமார்) 'தேயிலைப் புஷ்பங்கள்' (கோவுஸ்ஸ கே.ராம்ஜி உலகநாதன்) போன்றவர்களின் நூல் தலைப்புகளையும் தேயிலைத் தலைப்புக்கு உதாரணம் காட் டலாம். கவிஞர் சு. முரளிதரன் தனது ஹைக்கு கவிதையான,

***கூடையை கனக்க***
***கனக்க சுமந்து சென்றார்கள்***
***உள்ளே இந்தத் தேசம்***

எனும் தனது கவிதையையே 'கூடைக்குள் தேசம்' எனத் தலைப்புக் கவிதையாக தெரிவு செய்துள்ளார். இவ்வாறு தேயிலை வாழ்வு பதிவாகும் பல கவிதைகளை மலையக இலக்கியத்தளத்தில் அடையாளம் காட்ட முடியும். கூடைக் குள் தேசம் எனும் தலைப்பில் பிபிலை ஜெயபாலனின் கவி தைகளையும் சிறுகதைகளையும் தொகுத்து யோகநந்தினி நூலொன்றையும் வெளியிட்டார். மலையகச் சிறுகதைகள் என்று வரும்போது மலையக சிறுகதைச் சிற்பி என்.எஸ்.எம். இராமையா எழுதிய 'ஒரு கூடைக்கொழுந்து'என்னும் நூலும் சி.வி. வேலுப்பிள்ளையின் 'Born to Labour' தொகுப்பில் உள்ள கதைகளை மொழி பெயர்த்து மு. சிவலிங்கம் தந்த 'தேயிலைத் தேசம்' என்ற நூலும் தேயிலையின் பெயரிலேயே வந்துள்ளன. இதைப்போல பல ஆய்வுக் கட்டுரை நூல்களும் தேயிலையை நேரடித் தலைப்பாகக் கொண்டுள்ளன. சட்டத் தரணி ஏ.பி. கணபதிப்பிள்ளையின் 'Tea and Solidarity' (தேயிலைக் காவியம்), மைத்ரி ஜெகதீசனின் 'Tea and Sol- idarity' (தேயிலையும் தோழமையும்), கலாதிதி எ.எஸ். சந்திர போஸ், பி.பி. சிவப்பிரகாசம் இணைந்து எழுதிய Red Colour of Tea (தேயிலையின் செந்நிறம்) போன்றவற்றையும் குறிப்பி டலாம்.

## இறப்பரும் மலையக இலக்கியமும்:

இந்தப் பின்னணியில் மலையக இலக்கியத்தில் தேயிலை சார்ந்த வாழ்வு பேசப்பட்ட அளவுக்கு இறப்பர் சார்ந்த வாழ்வு பேசப்பட்டுள்ளதா அல்லது பேசப்படுகின்றதா என ஆராயமிடத்து கோப்பி மட்டுமின்றி இறப்பரும் பேசப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

***'இறப்பர் மரமானேன்***<br>
***நாலுபக்க வாதுமானேன்***<br>
***இங்கிலீசு காரனுக்கு***<br>
***ஏறிப்போக காருமானேன்'***

என இறப்பரைப் பற்றியும் கூட மலையக நாட்டார் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. ஆக மலையக நாட்டார் பாடல்களிலேயும் கூட பேசப்பட்ட இறப்பர் சார்ந்த மலையக இலக்கிய பார்வையை ஆராயுமிடத்து, 1960களில் மலையகக் கவிதைகளைத் தொகுத்து 'குறிஞ்சிப்பூ' எனும் தலைப்பில் கதம்பமாக வெளியிட்ட கவிஞர் ஈழகுமாரின் கவிதையொன்று இவ்வாறு அமைவதனை அவதானிக்கலாம்.

***கத்தி பட்ட ரப்பர் மரச்சுரப்பைப்போல***<br>
***கருத்தினிலே புத்துணர்வு கலை பறக்க***<br>
***நித்திரைக்கு விடைகொடுத்து இந்த நாடே***<br>
***நிலையான நாடென்ற உணர்வு கொண்டார்...***

குடியுரிமை பறிக்கப்பட்ட மலையக மக்கள் உணர்வுபூர்வமாக இலங்கையையே தனது தாய்நாடாகக் கொண்டனர் என்பதற்கு உவமானமாக 'கத்தி பட்ட ரப்பர் மரச் சுரப்பைப் போல' என றப்பர் மரப்பால் சுரப்பை கவிஞர் காட்டுகிறார். அதே போல இலங்கை இந்திய பரப்பில் இலக்கியம் படைத்த மலையக எழுத்தாளர் மு.சி.கந்தையா தனது 'நிசங்களின் சத்தம்' எனும் கவிதைத் தொகுப்பில்,

***இலங்கை பொருளாதார***<br>
***வண்டியில்***<br>
***புல்லும் சில்லுமாகி***<br>
***காப்பி, தேயிலை***<br>
***இறப்பருக்குள்***<br>
***புதைந்தவர்களின்***<br>
***வாரிசுகள்!***

என மலையக மக்களை அடையாளம் காட்டுகின்றார். இலங்கையில் அதிகம் இரப்பர் பயிரிடப்படும் களுத்துறை மாவட்டத்தில் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள அகலவத்தை பகுதியை வாழிடமாகக் கொண்டவரான மத்துகமையூர் ஜோதி (இரத்தினஜோதி) எழுதியுள்ள ('வடம்' கவிதை இதழ்) கவிதையை ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

**பால் வாளியைத்**<br>
**தூக்கியே உன்**<br>
**பழுத்துப்போன கைகள்**<br>
**கத்திப்பிடித்தே**<br>
**கறைபட்ட உன் விரல்கள்...**<br>
**உன் வச்சிரமெடுத்த உடம்பும்**<br>
**வரிசைப்பட்ட அடையாளங்களும்–எம்**<br>
**ஒவ்வொரு வாழ்நாளையும்**<br>
**சுட்டிச் செல்கின்றது...**<br>
**அன்புத்தந்தையே**<br>
**எத்தனை ஜென்மம் எடுத்தாலும்**<br>
**நீயே**<br>
**என் தந்தையாய்**<br>
**உனக்கே நான் மகனாய்**<br>
**பிறக்க வேண்டும்...**

இறப்பர் பால் வாளியைத் தூக்கித் தூக்கி தனது பழுத்துப் போன தனது தந்தையின் கரங்கள் பற்றி ஜோதி எழுதுகிறார். இங்கு குறிப்பிடத்தக்க அம்சம் தேயிலை சார் படைப்புகளில் தாய் (பெண்) முதன்மைப்படுத்தப்படுகின்ற அதே வேளை, இறப்பர் சார் படைப்பில் தந்தை (ஆண்) முதன்மைப்படுத்தப்படுகின்றமையாகும். மத்துகமையூர் ஜோதியிடமிருந்து தொடர்ச்சியாகப் படைப்புகள் வராமை வருத்தத்தையளிக்கின்ற செய்தியாகவே அமைகின்றது. '1938-ல் மஸ்கெலிய அ.போலின் நாவலுடன் ஆரம்பமாகும் மலையக நாவல்துறை, தனது 80 வருட நாவலிலக்கிய வரலாற்றில் 60 நாவல்களைக் கொண்டிருக்கிறது. இவை நூலுருப்பெற்றவை, 'இந்த 60 நாவல்களுமே தேயிலைத் தோட்டங்களில் இயங்குபவையாகவே அமைகின்றன' என மலரன்பனின் பால்வனங்களில்... நாவலுக்கு எழுதியுள்ள முன்னுரையிலே தெளிவத்தை ஜோசப் குறிப்பிடுகிறார். மலரன்பனின் இந்த நாவல் இதுவரையும் பேசப்படாத இறப்பர் தோட்டங்களையும் அங்கு வசிக்கும் மக்களின் வாழ்வையும் பேசுபொருளாகக் கொண்டவை. மலையகம் என்றதும் தேயிலையும் இறப்பருமே பொதுவாக மனதில் எழுவதுண்டு.

***தேயிலை றப்பர் தோட்டங்களில்***<br>
***வேலை செய்வோர் யார்?***<br>
***தென்னிந்திய தேச மக்கள்***<br>
***வேலை செய்கின்றனர்...***

எனும் பாடலும் இதனை ஊர்ஜிதம் செய்தாலும் தேயிலை போல பெருவாரியான பிரதேசங்களின்றி குறிப்பிட்ட சில பிரதேசங்களில் மட்டுமே இறப்பர் தோட்டங்கள் அமைந்துள்ளன. இலங்கையில் இறப்பர் பயிரடப்படும் மாவட்டங்களில் ஒன்றான மாத்தளை மாவட்டத்தில் இருந்து மலரன்பனின் பால்வனங்களில்... (2019) நாவல் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதே மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்ட மாத்தளை சோமு 'பால்வனம்' எனும் புதினத்தை மலேசியத் தளத்தில் எழுதியுள்ளதாகவும் அறிய முடிகின்றது. அல் அஸூமத்தின் 'சுடுகந்தை' நாவல் இறப்பர் தொழிலாளர்களின் வாழ்வையும் தொட்டுச் செல்வதாகவும் காணப்படுகிறது. மாத்தளை அலவத்துகொடையைப் பிறப்பிடமாகக் கொண்ட சாமானியரான கனகராஜா என்பவர் தனது வாழ்க்கை வரலாற்றை 'ஒரு நதியின் பயணம்' (2020) எனும் தலைப்பில் நூலாகத் தந்துள்ளார். பின்னாளில் பெரும் தொழில் அதிபராக விளங்கிய கனகராஜா சிறுவயதில் இறப்பர் மரக்குற்றிகளைத் தூக்கிச் சுமந்து வாழ்வை ஆரம்பித்தவர். தொழிலதிபராகி நுகேகொடை மிரிஹான பகுதியில் 30 ஏக்கர் இறப்பர் தோட்டத்தையே சொந்தமாக வாங்கியுள்ளார் எனும் சுவாரஸ்யமான பதிவும் அவர் சுயசரிதையில் உள்ளது. இறப்பர் தொழில் சார்ந்த இவரது சுயவரலாற்றுப்பதிவு நம்பிக்கை தரத்தக்கது.

இரத்தினபுரி மாவட்டத்தின் எஹெலியகொட பகுதியில் அமையப்பெற்ற ஒரு வீட்டுத்திட்டத்தை முன்னிறுத்தி எழுதப்பட்ட ஒரு உரைநடைச் சித்திரம் 'பால்மரக்காடு' எனும் தலைப்பில் வெளிவந்துள்ளது. இந்நாவல் இறப்பர் வாழ் மக்களின் வாழ்வியலை முழுமையாக வெளிப்படுததாத போதிலும் இறப்பர் தோட்டச் சூழலில் இந்நாவல் இடம்பெறுவது

குறிப்பிடத்தக்கது. இரத்தினபுரி மாவட்டத்தில் இறப்பர் தொழில் வாழ்வு சார்ந்து எழுதக் கூடிய ஆளுமை உள்ளவர் கள் இருந்தபோதும் அதுபற்றிய கரிசனை குறைவாகவே உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

மொனராகலை மாவட்டத்தில் ‘பாலாறுவ’ ஓர் ஊரின் பெயர். அதில் ‘சின்ன பாலாறுவ, பெரிய பாலாறுவ’ என்றும் பிரிவுகள் உண்டு. அங்கே இன்றும் காமன் கூத்து கலையை ஆண்டு தோறும் அரங்கேற்றும் கலைஞர்கள் வாழ்கின்றனர். காமன் பொட்டல்கள் காணப்படுகின்றன. முற்றிலும் இறப்பர் தோட் டங்கள் நிறைந்த இந்த ஊர் ஒரு காலத்தில் செழித்து வளர்ந்த இறப்பர் மரங்களால் ‘பாலாறு’ எனப் பெயர் பெற்றி ருக்கிறது. இந்த ஊர் இப்போது ‘பாலாறுவ’ எனும் சிங்கள பெயராகி நிற்கிறது. இன்று ஊர் பெயர் மட்டுமல்ல ஊரே மாறிப்போய் இருக்கிறது. அங்கு பாரம்பரியமாக இறப்பர் தோட்டத்தில் வாழ்ந்த மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளி யேற்றப்பட்டு வருகிறார்கள்; கிழக்கிலங்கைப் பகுதியான பொத்துவில் பகுதிக்கு கூலி வேலைக்காக இடம் மாறுகிறார் கள்; சிங்களவர்களாகி தமது இன அடையாளத்தை இழக் கின்றனர்; இந்த வாழ்வை இலக்கியமாக்குவது யார்?

குருநாகல் மாவட்டத்தில் ஒரு தனியார் தென்னந்தோட்டத் தைப் பராமரிக்கும் குடும்பம் ஒன்றைச் சந்திக்க நேர்ந்த பொழுதில், சிங்கள பாணி உடை அணிந்த சிங்கள மொழி யில் பேசிய அந்தப் பெண்ணின் பெயர் ‘லெச்சுமி’என அறிந்த தும் விசாரித்ததில், அவர்கள் தமிழர்கள்தான் என்றும் ஆனால் காலப்போக்கில் தமிழ் தெரியாதவர்களாக மாறிப் போனோம் என்றும் கூறுகிறார். இவ்வாறு தென்னந்தோட்டங்க ளில் தொலைத்த மலையகத் தமிழர் வாழ்வை எந்த இலக் கிய வகையறாவில் பதிவு செய்வது?

களுத்துறை மாவட்டத்தில் இறப்பர் தோட்டங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டு முள்ளுத் தேங்காய்த் தோட்டங் களாக மாற்றப்பட்டு வருகின்றமையை அவதானிக்கலாம். அந்த புதிய பயிர் ஏற்படுத்தும் வேலைத்தள மாற்றங்கள் அத னால் வரும் சமூகவியல் மாற்றங்களை வெளிப்படுத்தும் இலக்கியங்களை எழுதப்போவது யார்? காலி, மாத்தறை மாவட்டங்களிலும் இந்த முள்ளுத்தேங்காய்த் தோட்டங்கள் பரவலடைந்து வருவதனை அவதானிக்கலாம். கேகாலை மாவட்டத்தின் வரக்காபொல வரைக்கும் முள்ளுத்தேங்காய்த் தோட்டங்கள் வந்துவிட்டன. முள்ளுத்தேங்காயின் இந்த ஆக் கிரமிப்பு பற்றி யார் எழுதுவது? அது அந்தத்தப் பிரதேச இலக்கியப் படைப்பாளர்களின் பொறுப்பு. அதனை நிறை வேற்ற அவர்கள் முன்வராதபோது சாத்தியமற்றது.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் வேரூன்றிய முள்ளுத்தேங் காய்த் தொழில் சூழலில் நிலவும் தோட்டத்தைக் கதைக்கள மாகக் கொண்டு வெளிவந்த பிரமிளா பிரதீபன் எழுதிய ‘கட் டுப்பொல்’ நாவல் (2018)-ம் ஆண்டு வெளிவந்துவிட்ட நிலை யில் நூறு ஆண்டுகளுக்கு முன்னரே நாட்டார் பாடல்களிலும் இடம்பெற்ற இலங்கை இறப்பர் தொழில் சார்ந்த வாழ்வி யலை வெளிப்படுத்தும் முதல் புதினத்தை மலரன்பனின் பால்வனங்களில்.. நாவல் ஊடாகவே, 2019-ம் ஆண்டுதான் பெற்றுக்கொள்ள முடிகின்றது என்றால் தேயிலைக்கு நிகராக அமைந்த இறப்பர் சார்ந்த வாழ்வியலை மலையக இலக்கி யம் கணக்கில் எடுக்காமல் விட்டுவிட்டது என கணிப்பது தவ றாகுமா?

முள்ளுத்தேங்காய் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தன்மை கொண்டது என்பதை அறிந்து ‘தேங்காய் எண்ணை யில் இருந்து முள்ளுத் தேங்காய்க்கு’( சூரியகாந்தி - 2018), ‘தேயிலை, இறப்பர் தென்னையைக் கொல்லும் முள்ளுத் தேங்காய்’ (தமிழர் தளம்-2019) ஆகிய இரு தொடர்களை மல் லியப்புசந்தி திலகர் (கட்டுரையாளர்) ஆய்வுக்கட்டுரையாக எழுதிய நிலையில், இறப்பர் தொழில் துறையின் சாதக பாத கங்கள் குறித்து ஆய்வுக்கட்டுரைகள் ஏதேனும் இலக்கியத் தளத்தில் எழுதப்பட்டுள்ளதா? எனும் கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது.

களுத்துறை மாவட்ட முள்ளுத் தேங்காய்த் தோட்ட ஆய்வுக ளின்போது அடர்ந்து வளர்ந்த முள்ளுத் தேங்காய்த் தோட் டங்களில் உதவியாளர்களாகச் செல்லும் பெண்கள் பாலி யல் சுரண்டலுக்கு உள்ளாவதும், கசிப்பு போன்ற சட்டவி ரோத மதுபான பாவனைக்கு தொழிலாளர்கள் உள்ளாவதும் நிருபணமாகியுள்ளன. இத்தகைய சமூக அவலங்களை மலையக இலக்கியங்கள் எப்போது வெளிப்படுத்தும்? அது அந்தந்தப் பிரதேச இலக்கியப் படைப்பாளர்களின் பொறுப்பு. அதனை நிறைவேற்ற அவர்கள் முன்வராதபோது இவ்வா றான இலக்கியம் எழுவது சாத்தியமற்றது. தமிழக எழுத்தாளர் எழுதிய இறப்பர் நாவலில் வரும் ஒரு பாத்திரம் தொடர்ச்சி யாக இருமுவதற்குக் காரணம் தொடர்ச்சியாக அந்த இறப்பர் மரக்காற்றை சுவாசிப்பதால்தான் என்று சொல்லப்பட்டது. ஆதலால் இது போன்று இலங்கையின் இறப்பர் தோட்ட வாழ் வைப் பதிவு செய்யும் இலக்கியத்தை எதிர்பார்க்கத்தானே வேண்டும்.

அல்அஸூமத் எழுதிய ‘அறுவடைக்கனவு’ என்ற புதினம், எப் படி தேயிலைத் தொழிலாளர்களின் வாழ்வைக் காட்டி நிற்கி றதோ அதுபோல இலங்கையில் இறப்பர் பயிரின் வாழ்வு எழு தப்பட வேண்டும். ‘அறுவடைக்கனவு’ தனியே தேயிலைத் தோட்டத்தில் இடம்பெறும் கதை மட்டுமல்ல. தேயிலைத் தொழிலில் அந்த மரங்களை வளர்ப்பது, அந்தத் தோட்ட நிர் வாகம், அங்கு கையாளப்படும் உபகரணங்கள், ஆவணங் கள் என அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு தேயிலைத் தோட்டத்தையே முன்னிறுத்தும் உன்னதமான படைப்பு. அது போல இலங்கை இறப்பர் தோட்டத் தொழிலை, இறப்பர் உற் பத்தி செய்யும் முறையை, அங்கு கையாளப்படும் உபகர ணங்களை, ஆவணங்களை, அங்கு வாழும் மக்களைப் பதிவு செய்யும் இறப்பர் தோட்டக் கதை எழுதப்படுதல் அவசியம்.

## முடிவுரை:

கோப்பிக்காலம் முதல் தேயிலை, தென்னை, இறப்பர், முள் ளுத்தேங்காய் என அமைந்த மலையக மக்களின் வாழ்வாதா ரத் தொழில் அடிப்படையில் மலையக இலக்கியம் வளம் பெற்று வளர்ந்த கதையைக் கவிதைகளாக, கதைகளாக, கட் டுரைகளாக ஆதாரங்களுடன், எடுத்துக்காட்டுகளுடன் இலக்கியச் சுவையுடன் எழுதிவைப்பதற்கு மலையக இலக்கி யம் இன்னும் சிறகு விரித்துப் பறக்க வேண்டும். மலையக இலக்கியத்தில் தேநீருக்கு வழங்கப்பட்டுள்ள இடம் இறப்பர் பாலுக்கும் வழங்கப்படல் வேண்டும். கோப்பிக் காலம் கொடுத்த இலக்கியக் கொடை முள்ளுத்தேங்காயையும் கடந்து வளம் சேர்க்க வேண்டும்.



thilagar@thaiveedu.com

# வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
# VASANTHAM TAMIL WELLNESS CENTRE
## PRESENTS...

VASANTHAM
HEALTH & WELLNESS CENTRE

**சமூக உளவளம் பேணும் தொடர் - 87**
**Psychosocial Educational Series - 87**

## தமிழர் நாட்டுப்புறக் கலைகளில் இளையோர்
## Youth Participation in Tamil Folk Tradition in the Diaspora

**06 January 2025 (Monday)**
Canada EST: 7:00 - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 5:30a.m - 7:30am (Tuesday)

**Zoom ID: 918 584 6813**
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588



**வழங்குவோர்: தமிழர் நாட்டுப்புறக் கலை மன்றம் - கனடா**

Join us via zoom: CLICK HERE or go to link below in the email

Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!



Hosted by
Dr. Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172

VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
647-374-4685
VASANTHAM.CA





# போருக்குப் பின்னரான சிங்களப் புனைவுலகும் தமிழ்ச் சூழலும்

– ஜிஃப்ரி ஹாசன்

இலங்கையில் சுமார் முப்பது ஆண்டுகளாக இடம்பெற்ற போர் இலங்கை மக்களின் வாழ்வியலில் எல்லாப் பரிமாணங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த வாழ்வியலின் ஒட்டுமொத்த முகத்தையும் ஈழ இலக்கியம் பதிவுசெய்தது போல், சிங்கள இலக்கியமும் பதிவுசெய்துள்ளது. குறிப்பாக இந்தப் போர், அதற்குப் பின்னணியான அரசியல், மற்றும் தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் குறித்தெல்லாம் சிங்கள மக்கள் என்ன கருதுகிறார்கள்? என்பதை நாம் புரிந்துகொள்வதற்கு இந்த சிங்கள போர் இலக்கியங்கள் மீதான வாசிப்பு நமக்கு அவசியமாகின்றது. சிங்கள எழுத்தாளர்கள் போருக்குப் பின்னரான தங்களின் சிங்களப் புனைவுகளில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் குறித்தான கருத்துருவங்கள், சிங்கள சமூக அமைப்புக்குள் எத்தகையன என்பதை பரந்தளவில் முன்வைத்திருக்கின்றனர். இத்தகைய பெரும்பாலான சிங்களப் படைப்புகள் தமிழிலும் இன்று கிடைக்கின்றன என்பது மிகவும் கவனத்தக்குரியது. இந்தக் கட்டுரை அத்தகைய ஒரு புரிதலை நோக்கிய ஒரு முயற்சியாக அமைகிறது.

சிங்கள மொழியும், பண்பாடும் இன்று நோக்கும்போது இலங்கையில் மட்டுமே உள்ளது. வரலாற்றுரீதியாக சிங்களமும், சிங்களப் பண்பாடும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்ததாகும். இன்று இலங்கையின் பெரும்பாலான மக்களின் மொழியாகவும் பண்பாடாகவும் அதுவே இருக்கிறது. இலங்கையில் முப்பது ஆண்டுகளாக இடம்பெற்ற இனப்போர் சிங்கள மொழி இலக்கியம், பண்பாடு குறித்து ஒரு பரவலான பார்வைக்கும் தேடலுக்குமான ஆர்வத்தளத்தை தமிழ் தரப்புக்குள் குறைத்துவிட்டது. அதேபோன்று, சிங்கள சமூகத்துக்குள்ளும் தமிழர் பண்பாடு, முஸ்லிம் பண்பாடு, இலக்கியம் குறித்த தேடலை, உரையாடலை இந்த சூழல் சுமூகமான அமைப்பில் இடம்பெற வழியமைக்கவில்லை. ஆனால் இன்றைய நிலையில் சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுக்குள்ளிருந்து சிங்கள-தமிழ்-முஸ்லிம் பண்பாட்டுப் பரிவர்த்தனையில் அக்கறை உள்ள ஓர் இளம் இலக்கிய சமூகம் உருவாகி வந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. அரசியலுக்கும் போருக்கும் அப்பால் இலங்கையின் அறிவுப்புலத்தில் இந்தப் புதிய தோற்றப்பாடு நிகழ்ந்திருக்கிறது. இதன் மூலம் அரசு, ஆயுதத் தரப்புகள் போன்ற வட்டங்களுக்கு வெளியில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலையக மக்கள் பற்றிய பரஸ்பர சமூகப் பிரக்ஞையும், புரிதலும் எப்படி இருந்தன? என்பதையும், நாசகாரப் போரை நோக்கி அவை எப்படி மடைமாற்றப்பட்டன என்பதையும் இந்த புதிய தலைமுறையினர் இலக்கியத்தினூடாகப் புரிந்துகொள்ள எடுத்துள்ள முயற்சிகள் மிகவும் பயனளிக்கக்கூடிய மாற்றமாக பார்க்க வேண்டி இருக்கிறது. இந்த புதிய போக்கு போரை முன்னெடுப்பதற்கு வசதியாக கட்டமைக்கப்பட்ட பிற மக்கள் குறித்த பிம்பங்களை ஆழமாகப் புரிந்துகொள்ளவும், நம் புறத்திலிருந்து நாம் செய்ய வேண்டியதை இலகுவில் அடையாளம் காணவும் உதவும்.

இந்த சிங்களப் புதிய தலைமுறையினர் சில குறுகிய அரசியல் நலன் கொண்ட சிங்கள அரசியல் தலைமைகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் சென்று இன்று தமிழ் மக்களின் இலக்கியம், பண்பாடு, மொழி குறித்தும், முஸ்லிம் பண்பாடு குறித்தும் புரிந்து கொள்ள முற்படுகின்றனர். தேடிக்கற்கின்றனர். திறந்த உரையாடலுக்கு தயாராகின்றனர். சில வருடங்க



ளுக்கு முன் எழுத்தாளர் சயந்தனின் ஆதிரை பதிப்பகமும், வனம் இணைய இலக்கிய இதழும் இணைந்து இலங்கையின் அக்கரைப்பற்றில் ஏற்பாடு செய்திருந்த மொழிவழிக்கூடுகையில் கலந்துகொண்டிருந்த சிங்கள எழுத்தாளர்களுடன் ஈழத் தமிழ் வாழ்வியல்-முஸ்லிம் வாழ்வியல் குறித்து சிங்கள இலக்கியங்களில் என்னவெல்லாம் பேசப்பட்டிருக்கிறது என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. போர்ச் சூழல் குறித்த சிங்கள இலக்கியங்களில் பெரும்பாலானவை தமிழர்களையும் சிங்களவர்களையும் தூரப்படுத்தக்கூடிய உள்ளடக்கத்தையே அதிகம் கொண்டிருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டினர். சமஅளவில், தமிழ்ப்புனைவுகளும் கூட இராணுவ அடக்குமுறையும், வன்முறையும் தமிழர் வாழ்வை எப்படி ஈவிரக்கமின்றிச் சிதைத்தது என்பதையே மையமாகப் பேசுகின்றன.

இந்தப் பார்வைகளுக்கு அப்பால், இலங்கை அரசின் போலித்தன்மைகள், தமிழர் போராட்டம் குறித்த அரசின் புனைவுகள் குறித்து ஓரளவு திறந்த மனதோடு பேசக்கூடிய படைப்புகளும் சிங்கள இலக்கியச் சூழலில் ஆங்காங்கே வெளிவந்துள்ளன என்பதையும் மனங்கொள்ள வேண்டி இருக்கிறது. அத்தகைய இலக்கியப் படைப்புகள் சிங்கள மக் களின் உளவியலில் மனப்பாங்கில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. அத்தகைய படைப்புகளுக்கு சிங்




கள சூழலிலிருந்து வந்த எதிர்வினைகளிலிருந்து அதைப் புரிந்துகொள்ளலாம். தவிர ஆதிரை பதிப்பகமும் சில முக்கி யமான தமிழ் படைப்புகளைத் தேர்ந்தெடுத்து சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டு வருகிறது. இது சிங்கள சமூக மனப்பாங்கில், புலமைத்துவ வட்டாரத்தில் மிக முக்கிய கவ னத்தைப் பெற்றுள்ளன. நாம் எதிர்பார்த்த மாற்றங்களையும் தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய மனப் பாங்கு கொண்டவர்களே சிங்கள இலக்கியப் புலத்தில் அதி கம் வினைபுரிந்துள்ளனர். மார்ட்டின் விக்ரமசிங்க-வில் தொடங்கி இன்றைய தக்ஷிலா ஸ்வர்ணமாலி, இசுருசோமவீர வரைக்கும் நாம் இத்தகையவர்களைக் காண்கிறோம். இவர்க ளது படைப்புகள் சில சிங்கள அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரல் எல்லைகளைத் தாண்டி மக்களுக்கிடையிலான ஒரு திறந்த உரையாடலும் புரிதலும் நிகழக்கூடிய சாத்தியப் பாட்டை மிகத் தீவிரமாக உருவாக்கியுள்ளன. இந்த சித்திரிப் புகள் அண்மையில் சிங்கள இலக்கியப் புலத்தில் அபுனைவு கள், மற்றும் புனைவுகள் குறித்த ஆய்வுகளிலும் முன்வைக் கப்பட்டு வருவதைக் காண்கிறோம். இலங்கையின் சிங்கள-ஆங்கில இலக்கியச் சூழலில் சமீபத்தில் வெளியான, பேராசி ரியர் மதுபாஷினி திசாநாயக்க ரத்நாயகவின் The Routledge Companion to Sinhala Fiction from Post-War Sri Lanka எனும் நூல் இத்தத் தளத்தில் மிக முக்கியமானது.

ஈழப் போருக்குப் பின்னரான நமது (தமிழர்-இஸ்லாமியர்க ளின்) அரசியல், சமூக உளவியல், பண்பாட்டு முரண்கள், (ஓரளவு) வரலாறு போன்ற தளங்கள் சமகால சிங்களப் புனை வுகளில் எவ்வாறு பேசப்படுகின்றன என்பதற்கும், சிங்கள இலக்கியம் போருக்குப் பின் நமது பிரச்சினைகளை-நம்மைப் பற்றிய விசயங்களை எந்தக் கோணத்தில் மக்கள் மயப்படுத் துகின்றன என்பதற்கும்-சிங்கள இலக்கிய உலகு தமிழ்ச் சூழலை நோக்கி நிகழ்த்த விரும்பும் பண்பாட்டு உரையாட லுக்கும் மிக முக்கிய திறப்பு இந்நூல்.

சிறிஜயவர்தனபுர பல்கலைக்கழக ஆங்கிலத்துறைத் தலைவ ரும் பேராசிரியருமான மதுபாஷினி திஸாநாயக ரத்நாயக மொழிபெயர்த்துத் தொகுத்திருக்கும் இந்நூலின் பக்கமாக தமிழ் முஸ்லிம் மக்கள் தங்கள் பார்வையைச் செலுத்த வேண்டி இருக்கிறது. போருக்குப் பின்னரான சிங்கள இலக் கிய உலகு, ஈழத் தமிழர்கள் மற்றும் இஸ்லாமியர் மீது கொண்டிருக்கும் கவனமும், நோக்கும் என்ன என்பதைப் புரி யவும், இந்தத் தளத்தில் உரையாடவும் இந்நூல் வகை செய் கிறது.

இந்த விடயம் சார்ந்து பேசும் முக்கியமான சிங்கள எழுத்தா ளர்களின் சில கதைகளையும், நாவலின் சில அத்தியாயங்க ளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அறிமுகக் கட்டுரை களோடு இந்நூலில் தந்திருக்கிறார் மதுபாஷினி திஸாநாயக. இதன் முதல் அத்தியாயமான 'Tamil identity, ethnic politics and violence' என்ற தளம் முக்கியமான சிங்களக் கதைக ளைத் தொகுத்துப் பேசுகிறது - நாவல் பகுதிகளை முழுமை யாகவும் முன்வைக்கிறது. மூன்றாவது அத்தியாயம் 'Sinhala and Muslim identity politics' சார்ந்த கதைகளை, நாவல் பகு திகளை முன்வைக்கிறது. தவிர, போருக்குப் பின்னரான சிங் கள சமூகத்தின் பல்வேறு நெருக்கடிகளையும் பேசும் கதை கள் ஏனைய அத்தியாயங்களில் பேசப்படுகின்றன. எனவே, போருக்குப் பின் இலங்கையில் வெளியான முக்கியமான வெகுசில நூல்களுள் ஒன்று இது. ஆனாலும், இதுவரை ஈழத் தமிழ்ச் சூழலில் உரையாடல் வெளிக்கு இந்நூல் வரவில்லை என்பது துயரமானது. தமிழர் வாழ்வும் அரசியலும், முஸ்லிம் அரசியலும் வாழ்வும் குறித்து சிங்களச் சூழலில் நிகழ்ந்துள்ள கவனத்துக்குரிய புனைவுகள் பற்றிய உரையாடலைத் தொடக்கி வைக்கிறது. இத்தகைய சிங்கள கதைகள், நாவல் களை அவர் தேர்ந்தெடுத்து மொழிபெயர்த்திருக்கிறார். அத னூடாக சமகால சிங்கள இலக்கிய சூழலில் நம்மைப் பற்றி (தமிழர்கள்-இஸ்லாமியர்கள்) அங்கு எத்தகைய மனவெளிப் பாடுகள் உள்ளன. புனைவுகளில் நமது அரசியல், பண்பாடு, மத நம்பிக்கைகள் பற்றி எத்தகைய பார்வைகள் உளளன என்பதை இதனூடே நமக்குப் புரிந்துகொள்ள முடிகிறது.

கத்யானா அமரசிங்கவின் ‘தரணி’ நாவல் இந்தப் புலத்தில் குறிப்பிடத்தக்க ஒன்று. மதுபாஷினி இந்நாவலிலிருந்து ஒரு பகுதியை மொழியாக்கம் செய்து தந்திருக்கிறார். தரணி நாவ லில் இருந்து எடுக்கப்பட்ட இந்த நாவல் பகுதி, மூன்று தசாப்த கால ஈழப்போரின் பின்னர் யாழ்ப்பாணமும் அதன் மக்களும் நடைமுறையில் பாதிக்கப்பட்டிருந்ததை விபரிக்கி றது. நிஸ்ஸங்க விஜயமான்னவின் நாவலான தாரா தமிழ்-சிங் கள உறவை தமிழ் அடையாளத்தைப் பேசும் முக்கிய நாவல். இந்நாவல் இரண்டு பகுதிகளாக எழுதப்பட்டிருக்கிறது. இதன் முதல் பகுதி கலப்பினத்திருமணத்தில் பிறந்த மகளின் குர

லில் கதைசொல்லப்படுகிறது. இன்னொரு பகுதி ஒரு சிங்கள இளைஞனால் சொல்லப்படுகிறது. நாவலின் இந்தப் பகுதியில் அவர்கள் இருவரும் ஏன் காதலர்களாக இணைய முடியவில்லை என்பதற்கான காரணத்தை அறிந்துகொள்வதில் ஆர்வமாக இருக்கிறார்கள். ஆனால் மொத்த கதையின் சாரமும் தாரா எனப்படும் பெண் தெய்வத்தின் சிலையைத் தேடும் ஒரு மனிதனைப் பற்றியதாகவே இருக்கிறது. நாவலின் பெண் கதைசொல்லியின் கதைப் பகுதியையே இந்நூலில் மதுபாஷினி தருகிறார். இப்பகுதி 1983 வன்முறையுடன் தொடர்புபடுகிறது. நாவலில் ஓரிடத்தில் சந்துன் தாராவிடம் சொல்கிறான் 'மன்னித்துக்கொள். எனக்குத் தெரியாது. நான் நினைத்தேன் நீ சிங்களமென்று' அவள் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். சந்துன் தொடர்ந்தான்.

'நீயும் எங்களப் போலத்தான் இருக்காய். இல்லையா ? வித்தியாசம் எங்க இருக்கு ? நான் நினெச்சன் தமிழ்ப் புள்ளைகள் நீண்ட முடியும் கறுப்பாவும் இருக்குமெண்டு. ஆனா... நீ அப்புடி இல்லையே...' அவள் சொல்கிறாள் 'என்ட அப்பா ஒரு ஆசிரியர். யாழ்ப்பாணத் தமிழர். அம்மா சிங்களம்...' என அவள் தன்னை சுய அறிமுகம்செய்துகொள்ளும்போது தமிழர்கள் பற்றிய சிங்களப் புரிதல் என்ன என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடிகிறது. இலங்கையின் சிங்கள அரசதரப்பு தனது மோசமான வன்முறை யுத்தத்தை தொடர தமிழ் மக்கள் குறித்த உருவ பிம்பங்களைக்கூட எப்படி கட்டமைத்திருந்தன என்பதை இந்த உரையாடல் வெளிப்படுத்துகிறது.

நாவலின் மற்றொரு இடத்தில் தாரா யோசிக்கிறாள். 'என் நடத்தையிலுள்ள சிங்களப் பண்புகள் என்ன ? தமிழ்ப் பண்புகள் என்ன ?' என்று. ஈழப்போர் நடந்த சூழலில் எல்லா பக்கமும், எல்லா சமூகங்களும் பாரிய அழிவைச் சந்தித்திருந்த போதிலும், பரஸ்பர சந்தேகங்களும், மனக்காயங்களும் இருந்த போதிலும், சிங்கள-தமிழ் உறவு ஆழமான அர்த்தத்தில் சமூக மட்டத்தில் உள்ளோடி இருந்ததை இந்நாவல் நமக்குச் சொல்கிறது. யுத்தத்தின் அனைத்து இழப்புகள், மனக்காயங்களுக்கு மத்தியிலும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு வெளியே சமூக மட்டத்தில் இருந்த பரஸ்பரப் புரிந்துணர்வையும், அன்பையும் இந்தப் படைப்புகள் முன்வைக்கிறது.

ஜயதிலக கம்மல்வீரவின் Are you alright ? போருக்குப் பின்னரான தமிழ் மக்களின் வாழ்க்கையைப் பேசும் கதை. கிராமங்களினதும், வாழ்க்கை முறைகளினதும் முழுமையான இழப்பை இக்கதை பேசுகிறது. எந்த விதத்திலும் ஈடுசெய்ய முடியாத காதலின், நம்பிக்கையின் இழப்பைக் கதையின் மையச் சித்திரமாக கொண்டு வருகிறார் ஜயதிலக. பியல் காரியவசத்தின் 'கடற்கரையில் ராதா' இலங்கையின் பொருளாதார நெருக்கடியையும் அதன் அரசியலையும், சீனமயமாதலையும் மையமாகப் பேசும் இக்கதைக்குள் தமிழர் அரசியலும், பிரச்சினையும் கொண்டுவரப்படுகிறது. கொழும்பு காலிமுகத்திடல் கடற்கரையின் ஒரு பகுதியை மூடி சீனக் கம்பனி ஒன்று மேற்கொண்ட அபிவிருத்தித்திட்டத்தினுள் காணப்பட்ட ஊழல் ஒன்றால் அதிருப்தியுற்று அதிலிருந்து விலகிச்செல்லும் ஒரு தமிழ் யுவதியின் நிலைப்பாடுகளும் போர் அவளது வாழ்க்கையைக் கொண்டு சேர்த்த இடங்களும் இச்சிறுகதையில் பேசப்படுகிறது. போருக்குப் பின்னரான தமிழ் மக்களின் வாழ்க்கை நிலைமைகளையும் இச்சிறுகதை சித்திரிக்கிறது. நிஸ்ஸங்க விஜயமான்னவின் Handa paluva thani tharuva (தேய்பிறையும் தனித்த நட்சத்திரமும்) கதை சிங்கள முஸ்லிம் உறவையும், அதன் வண்ணங்களையும் பேசும் கதை. ஜலாப்தீன் என்கிற முஸ்லிம் நபருக்கும் அயேஷா என்கிற சிங்களப் பெண்ணுக்குமிடையிலான உறவைக் கதை மையமாகக் கொண்டு நகர்கிறது.

இந்தத் தளத்தில் கவனிக்கத்தக்க நிஸ்ஸங்க விஜயமான்னவின் மற்றொரு கதை தம்பி ஹாமதுருவோ. இக்கதை சிங்கள-முஸ்லிம் உறவை, இரு பண்பாடுகளின் ஊடாட்டத்தை பேசுகிறது. இக்கதை ஹாமதுரு ஒருவரின் வாழ்வியலைப் பேசுவதினூடாக பௌத்த பண்பாட்டையும், துறவறத்தையும், அதன் தனிமையையும் முன்வைக்கிறது. தம்பி ஹாமதுருவோ என்பது முஸ்லிம் ஹாமதுரு என்பதாகவே நாம் புரிந்துகொள்ள வேண்டி இருக்கிறது. கதைக்குள் ஒரு முஸ்லிம் கதாபாத்திரம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது சிங்கள சமூகத்தில் முஸ்லிம்கள் குறித்த எத்தகைய பார்வைகள் நிலவுகின்றன என்பதைக் குறித்த உரையாடலைத் திறந்து விடுகிறது என நினைக்கிறேன்.

இது ஒரு பௌத்த பிக்குவுக்கும், ஒரு முஸ்லிம் நபருக்கும் இடையிலான நட்பை பேசும் கதை. சமகால இலங்கையின் அரசியல் களத்தில் தூரமாகியுள்ள சிங்கள-முஸ்லிம் உறவின் கொதிப்பான சூழலில் நாம் கற்பனையும் செய்து பார்க்க முடியாத ஒரு கதை இது. இவர்கள் இருவரும் மிக நீண்டகால நண்பர்கள். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டவர்கள். பிற பண்பாடுகளைப் பற்றியும் அறிந்துகொண்டவர்கள். பிக்கு ஒரு சந்தர்ப்பத்தில் குர்ஆன் வசனங்களை ஆதாரமாக வைத்துப் பேசுகிறார். கதையில் வரும் முஸ்லிம் நபர் புத்தரின் போதனைகளை முன்வைக்கிறார். இருவரும் மற்றவரின் மதங்களைப் பற்றிய தேடலும் புதிய நோக்குகளையும் கொண்டவர்கள். எரிக் இல்லியப்பஆராய்ச்சியின் 'பிக்கு வார்ட்' கதையும் இன்றைய இலங்கையின் அரசியல் சூழலில் சிங்கள-முஸ்லிம் உறவையும் விரிசலையும் பேசும் கதை. ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை கதையின் மையமாக கொண்டு செல்லும் இல்லியப்ப ஆராய்ச்சி இந்தத் தாக்குதலின் பின் பல்வேறு அரசியல் நலன்களுக்காக முஸ்லிம்கள் குறித்து பரப்பப்பட்ட புனைவுகளையும் கதைக்குள் கவனப்படுத்துகிறார். குறிப்பாக சிங்களப் பெண்களுக்கு கருத்தடை சத்திர சிக்கிச்சை செய்ததாக குற்றம் சாட்டப்படும் முஸ்லிம் வைத்தியருக்கும் கதைக்குள் இடம் தரப்பட்டிருக்கிறது.

சமகால சிங்கள இலக்கியத்தில் இலங்கைச் சிறுபான்மைச் சமூகங்கள் பற்றிய இந்த உள்ளீடுகள் ஒரு படைப்பாளியின் தனிப்பட்ட அரசியல் நிலைப்பாடுகளிலிருந்து உருவாகுபவைதான். ஆனாலும் அவை சிங்களப் பொதுச் சமூகவெளியிலும் உளவியலிலும் மாற்றத்தையும் கருத்தியலையும் உருவாக்குவதில் பங்களிக்கின்றன. பொதுவாக இங்கு நான் முன்வைத்திருக்கும் படைப்புகளும், படைப்பாளிகளும், சிறுபான்மைச் சமூகத்தின் மீதான நேர்மறைத்தன்மையுடன் பிரச்சினைகளை கையாண்டுள்ளனர். சிறுபான்மைச் சமூகங்கள் பற்றிய எதிர்மறைத்தன்மையான படைப்புகளும் அதேயளவில் சிங்கள இலக்கியவெளியில் உள்ளன என்பதைப் பற்றியும் நாம் உரையாட வேண்டியுள்ளது.



jiffry.hassan@thaiveedu.com




## நிலங்க அலெக்ஸாண்டரின்

# ‘சூர்ய மரத்தின் தீர்ப்பு’

## பல பரிமாணங்களில் அகவிசாரணைகளை நிகழ்த்தும் கதைகள்

– கருணாகரன்

மிகச் சிறந்த பரிசாக-கொடையாக எப்போதும் எனக்குக் கிடைப்பது இலக்கியமும் நண்பர்களுமே. ‘சூர்ய மரத்தின் தீர்ப்பு‘ என்ற கதைகள் அந்தப் பரிசுகளில் - அந்தக் கொடைகளில் - ஒன்று. இன்னொன்று இந்தக் கதைகளை எழுதிய நிலங்க அலெக்ஸாண்டர். இந்த இரண்டு பரிசுகளையும் (கொடைகளையும்) மொழிபெயர்ப்பின் வழியாகச் சேர்த்துத் தந்திருப்பவர் ரிஷான் ஷெரீப். எனக்கு மட்டுமல்ல உங்களுக்கும் (தமிழ்ச் சூழலுக்கும்) சேர்த்துத்தான் இந்தப் பரிசுகளை (கொடைகளை) தந்திருக்கிறார் ரிஷான். மட்டுமல்ல அவரும் ஒரு மகத்தான பரிசே (கொடையே).

இந்தக் கதைகளைப்போல ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக கதைகளையோ கவிதைகளையோ படிக்கிறேன். அவற்றைப் படிக்கப்படிக்க வெவ்வேறு பிரதேசங்கள் அறிமுகமாகின்றன. அந்தப் பிரதேசங்களின் சூழல், அங்குள்ள மனிதர்கள், அவர்களுடைய பிரச்சினைகள், அங்கே நிகழ்கின்ற வாழ்க்கை, அது எதிர்கொள்ளும் சவால்கள், அதுவரையிலும் அறிந்திராத பண்பாடு எனப் பலதையும் அறிய முடிகிறது. கூடவே அவற்றை எழுதி அளிப்போரும் அறிமுகமாகின்றனர். அவர்கள் வெறுமனே எதையோ எழுதி அளிக்கும் தொழில்முறை (இயந்திரத் தனமான) அளிக்கையாளர்களாக இல்லாமல், தாமும் புதியனவற்றைத் தேட விழைவோராகவும் தாம் கண்டடைந்த தரிசனத்தைப் பகிரத் தவிப்போராகவும் உள்ளனர். முதன்மையாக தாமறிந்த மெய்யை, அதனுள்ளே தவித்துக் கொண்டிருக்கும் அறத்தைத் தாம் வாழும் சமூகச் சூழலிலும் அதற்கப்பால் முழுமையான மானுடச் சூழலிலும் வலுப்படுத்த விளைகின்றனர். அது வாழ்க்கையைப் பற்றிய புதிய நோக்காக, சூழலைப் பற்றிய புதிய புரிதலாக, இயற்கையைப் பற்றிய புதிய தேடலாக, அதிகாரத்தினுள்ளே பதுங்கிக் கிடக்கும் நீதிமறுப்பின் புதிய முகத்தைக் கண்டு பிடிப்பதாக, அதை மோதி உடைத்து விடுதலைக்கான ஒளியைக் காண்பதாக எனப் பலவிதமாக அமைகிறது என்பதால் அவர்கள் கண்டடையும் அந்தந்த தரிசனம் முக்கியமானது. அது நம்முடைய சூழலுக்குத் தேவையான அல்லது நம்முடைய அகத்திலிருந்தும் புறத்திலிருந்தும் விடுபட்டுப்போன அல்லது மறுக்கப்பட்ட அறம், நீதி, நியாயம், மனச்சாட்சி, பெருந்தன்மை, பொறுப்பு, பொறுப்பேற்றல் போன்றவற்றை கோருகின்ற - வெளிப்படுத்த விளைகின்ற - உத்வேகமாக அமைகிறது.

அறம், நீதி, நியாயம், மனச்சாட்சி, பெருந்தன்மை, பொறுப்பு, பொறுப்பேற்றல் போன்ற சொற்கள் உணர்த்துகின்ற பொருளுக்கும் அப்பாற் சென்று இவற்றின் மெய்மைக்கு மேலும் அழுத்தத்தையும் செறிவையும் அளிக்கும் வகையில் இவர்கள் சிந்திக்கின்றனர்; செயற்படுகின்றனர். இத்தகைய இலக்



கிய உருவாக்கத்தில் அல்லது வெளிப்பாட்டில் - உளவியல், அரசியல், பண்பாட்டியல், வரலாற்றியல், சூழலியல், சமூகவியல், மானுடவியல் எனப் பலவும் ஒருங்கிணைந்து ஒரு மகத்தான பெறுமானம் உருவாகிறது. அது நம்முடைய அகத்திலும் புறத்திலும் தூண்டல் விசையாகச் செல்வாக்குச் செலுத்துகிறது என்பதால், அகப்புரட்சிக்கான - புறப்புரட்சிக்கான விதைகள் இவை எனலாம். இதனால் இலக்கியம் எல்லாவற்றையும்விட மிகப் பெறுமதியுடையது என்ற நிலையைப் பெற்

றுக் கொள்கிறது. ஆகவே இலக்கியத்தைப் படிக்கும்போது நானும் புதிதாகிக் கொள்வதோடு புதியவர்களுடைய அறிமுகத்தையும் பெறுகிறேன்.

இந்த அடிப்படையில் இங்கே ரிஷான் ஷெரீப்பின் வழியாக நிலங்க அலெக்ஸாண்டர் அறிமுகமாகிறார். நிலங்க அலெக்ஸாண்டரின் வழியாக அவருடைய கதைகள் அறிமுகமாகின்றன. அது சிங்களச் சமூகச் சூழலையும் அதனுடைய சமகால (மாற்றமடைந்து கொண்டிருக்கும்) நிலவரத்தையும் காண்பிக்கிறது - உணர்த்துகிறது. முக்கியமாக சிங்களச் சூழலைப் பற்றித் தமிழ்ச் சூழல் சரியாக அறியாதிருக்கும் பகுதியையும் அறிந்து கொள்ள வேண்டிய பிராந்தியத்தையும் அறிமுகப்படுத்துகிறது. 1948-க்குப் பிந்திய இலங்கையின் ஆட்சி மற்றும் சிங்களச் சமூகச் சூழல் வேறு. அது முற்று முழுதாக இனவாதத்தினால் நிரம்பியது. 2022-ல் ஏற்பட்ட 'அரகலய'வுக்குப் பிறகான சூழல் வேறு. விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான யுத்தம் முடிந்த பின்னரும் பெரிய அளவுக்கு சமூக உளவியல் நிலவரங்கள் மாற்றமடையவில்லை. ஆனால், அரகலயவுக்குப் பின்னரான சமூக உளவியல் நிலைமைகளில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இலங்கைச் சமூகங்களிடையே இனவாத வேற்றுமைகளைக் கடக்க வேண்டும் என்ற சிந்தனை மாற்றத்தின் புதிய நம்பிக்கை உருவாகத் தொடங்கியுள்ளது. அதை வளர்த்தெடுப்பதற்கான முனைப்புகள் பல வழிகளிலும் உருவாகியுள்ளன. அதில் ஒன்றே இந்தக் கதைகளும்.

நிலங்கவின் கதைகள் அதிகாரத்துக்கு எதிரான போர்க்குரலாக, மக்களின் தளத்திலிருந்து ஒலிக்கும் வெளிப்பாடாக இயக்கமுறுகின்றன. இதனூடாக நிலங்க அலெக்ஸாண்டரின் விரிந்த மனதை, பரந்த சிந்தனையை, அவர் விளையும் புதிய அரசியலை, செழுமையான பண்பாட்டுச் சூழலை, புதிய சமூகத்தை எனப் பலவற்றோடும் அறிமுகமாகிறேன். இப்படி அறிந்து கொண்டு செல்லும்போது நம்முடைய மூளையும் இதயமும் இளகி விடுகிறது. ஒரு கணம் திகைத்து, ஆடிப் போய்விடுகிறோம். நம்முடைய தலைகள் வெட்கத்தால் தாழ்கின்றன. 'ஒட்டுமொத்தச் சிங்களச் சமூகமும் தமிழ் மக்களுக்கு எதிராகவே உள்ளது எனத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கும் தமிழ்ப்பொது மனதில், அப்படியல்ல, சிங்களச் சமூகத்திற்குள்ளே வலுவான மாற்றுக் குரல்கள் உண்டு. அவை அனைவருக்குமான நியாயத்தையும் நீதியையும் உச்சத்தொனியில் வலியுறுத்துகின்றன என நிரூபித்து இந்த வெட்க உணர்வை ஊட்டுகிறார் நிலந்த.

இரத்தம் சிந்தப்படும் அளவுக்குக் கூர்மையாக்கப்பட்ட இன முரண்களால் நம்பிக்கையீனமும் கசப்பும் நிரம்பிய இலங்கைச் சூழலில், ஒரு சிங்களவரால் இப்படியெல்லாம் சிந்திக்க முடியுமா? அதைப் பகிரங்கமாக வெளிப்படுத்த முடியுமா? என்று தமிழ்ப் பொது மனதில் கேள்விகள் எழுகின்றன. இவ்வாறான கேள்விகள் தமிழ்ச் சூழலிலிருந்து எழுகின்ற குரல்களைக் குறித்துச் சிங்களத் தரப்பிலும் எழக்கூடும். ஏனென்றால், இனவாதம், மதவாதம், நிறவாதம் போன்றவை மேலோங்கியிருக்கும் சூழலில் நீதி, நியாயத்தைப் பற்றிச் சிந்திப்பதையும் விட அந்தத் தரப்பை நியாயப்படுத்தச் சிந்திப்பதே வலியுறுத்தலாக இருப்பதுண்டு. இதனால் இரண்டு சமூகங்களின் பொதுவெளியும் உண்மைக்கும் நியாயத்துக்கும் எதிரான முறையில் வலுவாகக் கட்டமைக்கப்பட்டேயுள்ளன. அதை மீறிச் சிந்தித்தால் சொந்தச் சமூகத்தினாலேயே நிராகரிப்புக்கும் அவமதிப்புக்கும் உள்ளாக வேண்டும். அதுவே நிகழ்கிறது. தமிழர்களுடைய விடுதலைப்போராட்டத்தில் நடந்த தவறுகள் உட்படத் தமிழ்ச் சமூகத்திற்குள் நிலவும் சாதிய, பால் ரீதியான ஒடுக்குமுறைகள், அநீதிகளைப் பற்றி எழுதுவோரும் பேசுவோரும் ஒதுக்கப்படுகின்ற, துரோகிகளாகச் சித்திரிக்கப்படுகின்ற நிலையே உண்டு. மாற்றுச் சிந்தனை இனத்தின் நலனையும் பலத்தையும் பாதிக்கும் என்று சொல்லப்படுகிறது. இதேநிலைதான் சிங்களச் சமூகத்திலும்



என்பதால்தான் மஞ்சுள வெடிவர்தன, பிரஸன்ன விதானகே, ரோஹித பாஷண போன்ற பலர் நாட்டை விட்டே வெளியேறி வாழ வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஆக, பொய்யான ஒரு தோற்றத்தைப் பேணவே அதிகாரத் தரப்புகள் முயற்சிக்கின்றன. இதைப் புரிந்து கொள்ளாமல் பெருந்திரள் மக்களும் உள்ளனர். ஆனால், எப்போதும் பொய்யே பாதிப்பை உண்டாக்கும். உண்மையே சமூகத்தை வலுவாக்கும். இதைப் புரிந்து கொள்ளாமல் பொய்யில் திளைப்பதே சமூக நிலவரமாக உள்ளது. எனவே, நிலங்கவும் நெருக்கடிகளை எதிர் கொள்வார் என நம்புகிறேன். நிலங்க, சிங்களப் பொது உளவியலோடு மட்டுமல்ல, அரச அதிகாரத்தோடும் மோதுகிறார். ஆகவே அவருக்கு மேலும் நெருக்கடிகள் நிச்சயமாக இருக்கும். அதை எதிர்கொண்டவாறே தன்னையும் தன்னுடைய

எழுத்தியக்கத்தையும் அவர் முன்னிறுத்துகிறார். இதைப் பாராட்ட வேண்டும். இவ்வாறான துணிச்சலோடு இயங்கும் நிலங்கவுக்கு நன்றி.

இலங்கையில் இனவாதத்தை அரசியல் முதலீடாகப் பயன்படுத்தும் போக்கினால் சமூகங்களுக்கிடையில் கசப்பும் நம்பிக்கையீனமுடைய பிராந்தியமே வலுவாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், தொடர்ச்சியாகவும் கூர்மையாகவும் சிங்களச் சமூகத்தை அவதானிப்போருக்கு உண்மை நிலவரம் என்னவென்று தெரியும். உண்மையில் சிங்களச் சமூகம், தமிழ்ச் சமூகத்தை எதிர்நிலையாகக் கொள்ளவில்லை. அவ்வாறே தமிழ்ச் சமூகமும் சிங்களச் சமூகத்தைப் பகையாகப் பார்க்கவில்லை. அவற்றை எதிரெதிர்ச் சமூகங்களாக்கி, அதற்குள் வலுவாகப் பகையை நிரப்பி வைத்திருக்கின்றன அரசியற் தரப்புகள். வரலாறு முழுவதும் இதுதான் நிலவரம், ஆனால், அதே வரலாறு முழுவதிலும் இதற்கெதிரான கலகக் குரலாகவும் மறுப்புக் குரலாகவும் இலக்கியவாதிகளும் கலைஞர்களும் தங்களை முன்னிறுத்தியே வந்துள்ளனர். அதாவது மாற்று வரலாறாக. இந்த மாற்று வரலாற்றிற்கான பங்களிப்பாளர்களாக சமகாலத்தில் பிரஸன்ன விதானகே, தர்மசிறி ப-ண்டாரநாயக்க, பேராசிரியர் சுனில் ஆரியரத்னா, சோமரத்ன-திசானாயக்கா, அசோக ஹந்தகமா, சுதத் ரோஹனா, ஜயந்த சந்தரசிறி போன்ற சினிமாக் கலைஞர்களும் மஞ்சுள வெடிவர்த்தன, அயேஷா சேனாநாயக்க, சூலானந்த சமரநாயக்க, ஆனந்த பண்டார, மஞ்சுள சேனரத்ன, சுஹாஷினி தர்மரட்ன, தம்மிக்க பிரசாத் தேனுவர, அசோக்க ஹந்தகம, லக்சாந்த அத்துகோரலா, பெனடிக் தர்மசிரி போன்ற கவிஞர்களும் இஸுரு சாமர சோமவீர, தக்ஸீலா ஸ்வர்ணமாலி, சரத் ஆனந்தன, மஹிந்த ப்ரசாத் மஸ்இம்புலா, நிஸ்ஸங்க விஜேமான்ன, கத்யானா அமரசிங்க போன்ற எழுத்தாளர்களும் உள்ளனர். அதில் இன்னொரு வலுவான குரல், செழிப்பான அடையாளம் நிலங்க அலெக்ஸாண்டர். தமிழ்ச் சூழல் இதை ஆழ்ந்து கவனிப்பது அவசியமாகும். இதற்கு நிகராக தமிழ், முஸ்லிம் தரப்பிலிருந்தும் மாற்றுக் குரல்கள் எழுந்து உயர வேண்டும்.

அழகும் வளமும் கூடிப் பொருந்திய இலங்கையின் துரதிஸ்டத்தைக் குறித்து நிலங்க அலெக்ஸாண்டரும் நம்மைப் போலவே தாழாத துயரத்திலிருக்கிறார். எந்த வகையிலும் பயன்படாத, தேவையற்ற, மிகக் கீழ்மையான இனவாதத்தினால் இலங்கை சீரழிந்து கொண்டிருப்பதை நிலங்கவினால் அனுமதிக்க முடியவில்லை. இந்த முட்டாள்தனத்துக்கும் அநீதிக்கும் எதிராக அவர் தன்னுடைய எழுத்துகளை முன்வைக்கிறார். தன்னைப் போராட்டங்களில் ஈடுபடுத்துகிறார். மட்டுமல்ல, அவருக்கு இந்த உலகளாவிய அரசியல் சித்து விளையாட்டுகள் எல்லாம் தெளிவாகவே புலப்படுகின்றன. 2022-ல் கொழும்பில் நடந்த ‘அறகலய‘ (எழுச்சி) உட்பட இலங்கையில் நடந்த - நடந்து கொண்டிருக்கின்ற அரசியல் நிகழ்ச்சிகளையும் அவதானித்துக் கொண்டிருக்கிறார். அந்தப் போராட்டங்களில் நிற்க வேண்டும் எனக் கருதுகிறார். இதேவேளை இவற்றின் பின்னாலுள்ள உலகளாவிய அரசியல் நிகழ்ச்சி நிரலைக் குறித்தும், உலக வல்லாதிக்கத்தின் கரங்கள் எப்படி, எங்கெல்லாம் நீளும் என்பதையும் தெளிவாக உணர்ந்திருக்கிறார். சமநேரத்தில் அவர் தன்னுடைய சமூகத்தின் பொறுப்புகளைக் குறித்தும் பேசுகிறார். குறிப்பாக இனவாதத்துக்கு எதிரான விடயங்களைப் பற்றிச் சொல்ல முயற்சிக்கும் போது தமிழ்த்தரப்பின் மீது (கவனிக்கவும்: எதிர்த்தரப்பு என்று அவர் யோசிக்கவே இல்லை. மறுதரப்பு அல்லது இன்னொரு சமூகத்தினரின் மீது என்றே சிந்திக்கிறார்) குற்றச்சாட்டுகளை முன்னிறுத்தாமல் தன்னுடைய சமூகத்தின் பொறுப்புகளைக் குறித்து நிதானமாகப் பேசுகிறார். இது ஒரு முக்கியமான விடயம். ‘கொலைநிலத்தில் ஓலமிடும் உள்ளங்கள்’, ‘ஆகாயத்துக்கு எறியப்பட்ட கவிதைகள்’ ஆகிய இரண்டு கதைகளும் இதற்குச் சான்று. கொலைநிலத்தில் ஓலமிடும் உள்ளங்கள் கதையில் முன்னிறுத்தப்படுகின்ற பேராசிரியர் பண்டுக, சிங்களப் புத்திஜீவிகள், அதிகாரத்தில் - பொறுப்பான பதவிகளில் இருப்போரிற் பலருக்கான ஒரு சிறந்த குறியீடு. இதையொத்தவர்கள் தமிழ்த்தரப்பிலும் நிகராக உண்டு. இவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மிகத் தந்திரோபாயமான பதில்களைத் தயாரித்துக் கொண்டேயிருக்கிறார்கள். அந்தப் பதில்கள் ஒருபோதும் நாட்டையோ சமூகத்தையோ பாதுகாப்பதேயில்லை. ‘ஆகாயத்துக்கு எறியப்பட்ட கவிதைகள்’ பல பரிமாணங்களில் அகவிசாரணைகளை உண்டாக்கும் கதையாகும். இந்தக் கதையில் நிறுத்தப்படும் தருக்கம் மிகச் சுவாரஸ்யமான பல கேள்விகளை கதைக்குள் மட்டுமல்ல, நமக்குள்ளும் தூண்டுகின்றன. இதே தருக்கம் கொலைநிலத்தில் ஓலமிடும் உள்ளங்கள் கதையிலும் உண்டு.  நிலங்கவின் படைப்பாற்றலுக்குச் சிறப்பான கதை, ‘ஆகாயத்துக்கு எறியப்பட்ட கவிதைகள்’.

எப்போதும் நாம் நம்முடைய குற்றங்களையும் தவறுகளையும் மறைத்துக் கொள்வதற்காக - அவற்றிலிருந்து தப்பித்து விடுவதற்காக எதிர்த்தரப்பொன்றைக் கட்டமைத்து, அதன் மீது தள்ளி (சுமத்தி) விடுகிறோம். இதை மோசமான அரசியல்வாதிகள்  செய்யலாம். ஒரு எழுத்தாளரோ, கவிஞரோ செய்ய முடியாது. செய்யவும் கூடாது. அவர்கள் தான் சார்ந்த சமூகத்தின் பொறுப்புக் கூறும் பண்பை உருவாக்க முயற்சிக்க வேண்டும். அதற்கான முன்னுதாரணத்தை உருவாக்க வேண்டும். அதை நிலங்க அலெக்ஸாண்டர் மிகச் சரியாகச் செய்திருக்கிறார். இலங்கையின் சமகாலச் சூழல் என்பது பொறுப்புக் கூறலையே வலியுறுத்தி நிற்கின்றது. கடந்த காலத் தவறுகள் அனைத்துக்குமான பொறுப்பேற்றலை அவற்றை நிகழ்த்திய தரப்புகளும் அந்தத் தரப்புகளை ஆதரித்து நின்ற அந்தச் சமூகங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் அமைதிக்கும் சமாதானத்துக்குமான பாதையின் முதற் சுவடுகள். பொறுப்புக்கூறலே பரஸ்பரத் தளத்தில் சமூக நம்பிக்கையை உருவாக்கக் கூடியது. சமூக நிலையில் மட்டுமல்ல, தன்னுடைய பங்கிலும் நிலங்க பொறுப்புக்கூறலையும் இனவாதச் சூழலுக்குள் நிலவும் போக்கையும் வெளிப்படுத்துகிறார். நிலங்க அலெக்ஸாண்டர் இதோடு நிற்கவில்லை. சிங்கள அதிகார வர்க்கத்தின் அடுக்குகள் ஒவ்வொன்றிலும் நிகழும் நிகழ்த்தப்படும் அநீதியையும் அதற்கெதிரான உணர்வையும் வெளிப்படுத்துகிறார். ‘சூர்ய மரத்தின் தீர்ப்பு’, ‘கங்கையாழப் பிரேமாலிங்கனம்’ ஆகிய கதைகள் இதற்கு அடையாளம்.

பெரும்பாலும் வரலாற்று நிகழ்ச்சிகளை மையப்படுத்தியே எழுத முற்படுகிறார் நிலங்க அலெக்ஸாண்டர். அவருடைய அரசியலுணர்வும் களச் செயற்பாடுகளும் இதற்குக் காரணமாக உள்ளன என எண்ணுகிறேன். இந்தக் கதைகளும் அந்தச் சாயலைக் கொண்டவையே. ஆனால், வெறுமனே அரசியல் நிகழ்ச்சிகளின் சித்திரிப்பாகவோ எதிர்ப்புக் குறிப்புகளாகவோ சுருங்கி விடாமல், இலக்கியப் பிரதிகளாகியுள்ளன. இதற்கு இலக்கியம் பற்றிய ஆழமான புரிதலும் நல்ல பரிச்சயமும் படைப்பாற்றலும் நிலங்கவுக்கு உள்ளது. யதார்த்தவா

தத்தில் நிகழ்த்தப்படும் கதைகள் ஒரு கட்டத்தில் மாய யதார்த்தவாதத்துக்குத் தாவிச் செல்கின்றன. இந்தத் தாவலில்தான் அவற்றின் அழகும் ஆழமும் செழிக்கின்றன.

என்னுடைய வாசிப்பின் வழியே கண்ட கவிஞர்கள் ஏறக்குறைய ஐயாயிரத்துக்கும் அதிகம். கதையாளர்கள் அதற்குச் சற்றுக் குறைவு என்றாலும் மிகப் பெரிய - மகத்தான படைப்பாளிகள். ஒவ்வொரு கவிஞரும் தம்முடைய கவிதைகளின் வழியே காட்டுகின்ற உலகம் மகிழ்ச்சியைத் தருவது ஆச்சரியத்தை அளிப்பது. ஒரு கவிதையைப் படிக்கும்போது மட்டுமல்ல, அதற்குப் பின்னரும் அது மனதிலே மீள மீள எழுந்து வியப்பைக் கூட்டிக் கொண்டே செல்கிறது. இந்த வியப்பு வேடிக்கை ஒன்றைக் கண்டு வியப்பதைப்போல எளியதல்ல. நம்முடைய அகத்துக்குள்ளே நிகழ்ந்து கொண்டிருக்கின்ற, புதிய புதிய வெளிகள் திறக்கப்பட்டு, புதிய காட்சிகள், புதிய உணர்நிலைகள் தென்படுவதால் உண்டாகும் வியப்பாகும். அப்படித்தான் கதைகளிலும். நிகர் வாழ்க்கைச் சித்திரங்களை அவை விதவிதமாகத் தீட்டிக் கொண்டேயிருக்கின்றன. எண்ணற்ற மனிதர்கள். ஏராளம் நிகழ்ச்சிகள், பல விதமான வாழ்க்கை. வானத்தையும் விட மிக விசாலமாக விரியும் மனதின் பெரும்பரப்பில் எண்ணற்ற வகையில் இந்தச் சித்திரங்கள் ஆயுள் முழுவதற்கும் (நினைவுள்ளவரை) இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆம், இயக்கமுறும் சித்திரங்களே இவை. இந்தக் கதைத் தொகுதியிற் கூட பல நிகழ்ச்சிகள். பல மனிதர்கள். அவர்களுடைய வெவ்வேறு இயல்புகளும் குணங்களும். பல விதமான வாழ்க்கையின் நிறங்கள்.

இதுதான் படைப்பாற்றலின் (Creative) சிறப்பு. கடவுள் அல்லது இறைவன் என்று சொல்வார்களே, அதற்கு நிகரானவரே ஒரு படைப்பாளி. கடவுளே, ஆகப் பெரிய ஆற்றலுடைய கிரியா சக்தி (Creative power) என்பது (மத நம்பிக்கையற்றவர்களைத் தவிர்த்த) உலக நம்பிக்கை. அப்படியென்றால் நான் எத்தனை கடவுளுடன் வாழ்ந்திருக்கிறேன், வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று கணக்கிட்டுக் கொள்ளுங்கள். தினமும் அவர்களுடைய உலகத்தில் என்னைப் பிணைத்துக் கொண்டாடுகிறேன். வழி காட்டுபவர், மீட்பர், முக்தியை அளிப்பவர், ஞானத்தை ஊட்டுகின்றவர் என்றெல்லாம் கடவுளைச் சுற்றிய கருதுகோளுண்டு. இலக்கியத்தின் அடிப்படையும் இதுவே. இதனால்தான் இலக்கியத்தை ஆக்கியளிப்பவர் படைப்பாளி (Creator) என்று சொல்லப்படுகிறார்.

இலக்கியத்தின் அடிப்படை எப்போதும் அது புதிய வழிகளைக் காண்பதும் காட்டுவதுமாகும். இதை வெளிப்படையாகப் பாடம் நடத்திக் காட்டுவதாக பொருள்கொள்ளக் கூடாது. அந்த வழிமுறையை இலக்கியம் ஒருபோதுமே கொள்வதில்லை. அது உணர்த்துவது. இன்னொன்று இன்னொன்று, இப்படி இப்படி என உணர்ந்து கொண்டேயிருப்பதன் வழியாக காணாதவைகளைக் காண்பது. காண்பவற்றிலும் காணாதவைகளைக் காண வைப்பது - உணர வைப்பதாகும். சமநேரத்தில் வாழ்வை மீட்டெடுப்பதும் நிகழ்கிறது.

இங்கும் வாழ்வை மீட்டெடுப்பது என்பதை அறிவியல் பூர்வமாகவோ தொழில் நுட்பரீதியாகவோ அல்லது நிவாரணமளிக்கும் நிர்வாக நடவடிக்கை ஒன்றாகவோ புரிந்து கொள்ளக்கூடாது. அவ்வாறு புரிந்து கொள்ள முற்பட்டால், அது நம்மை ஏய்த்து விளையாடும். அதனுடைய பண்பே நம்மை நாமே மீட்டுக் கொள்வதற்கான அகத்தூண்டல்களைச் செய்வதாகும். முக்கியமாக நமக்குள் செறிந்திருக்கும் இருண்ட பகுதிகளில் அது ஒளியைப் பாய்ச்சுகிறது. உறங்கிக் கிடக்கும் செயலுக்கான விதைகள் முளைப்பதற்கான ஈரப்பதனையும் சூட்டையும் அளித்து முளைக்க வைக்கிறது. நிலங்க அலெக்ஸாண்டர், விதையாகவும் ஒளிச் சூடாகவும் திகழ்கிறார். நிலங்க அலெக்ஸாண்டர் இதுவரையில் ஜெகன் (நாவல்), வஸா தெமூ கதை (மூடப்பட்ட கதைகள்) ஆகிய நூல்களை எழுதியிருக்கிறார். இந்தக் கதைகள், 'அஹசடதமா கெஸூ கவி' (ஆகாயத்துக்கு எறியப்பட்ட கவிதைகள்) என்ற பெயரில் வெளியானவை. இந்தக் கதைத் தொகுதி தமிழில் பெயர்க்கப்பட்டு வெளியாவது மகிழ்ச்சி.

சிங்களத்திலிருந்து தமிழுக்கு ஏராளமான மொழிபெயர்ப்புகள் வந்துள்ளன. தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. சரோஜினி தேவி அருணாசலம், தம்பிஜயா தேவதாஸ், சிவா சுப்பிரமணியம், இப்னு அஸூமத், எம்.ஏ. நுஃமான், செந்தீரன், எம்.எல்.எம். மன்சூர், எஸ்.எம்.ஜே. பைஸ்தீன், நீள்கரை நம்பி, பெரி. சண்முகநாதன், யாதவன், கனகசபை துரைராஜா, ஏ. பியதாச, திக்குவெல்லை ஸப்வான், கனகரத்தினம், திக்குவெல்லை கமால், வ.ஆ. தங்கவேலாயுதம், அனுஷா சிவலிங்கம், லறீனா ஹக், ரிஷான் ஷெரீப் எனப் பலர் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அண்மைக்காலத்தில் மிகத் தீவிரமாகவும் மிகக் கூடுதலாகவும் மொழிபெயர்ப்புகளைச் செய்து கொண்டிருப்பவர் ரிஷான் ஷெரீப். மூலத்திலேயே படிப்பதைப் போன்ற உணர்வை அளிப்பவை ரிஷானின் மொழிபெயர்ப்பு. ரிஷானின் மொழிபெயர்ப்பில் இதுவரையில் நாற்பத்தியெட்டு நூல்கள் வந்துள்ளன. இதில் ஆழமாகக் கவனிக்க வேண்டியது, ரிஷானின் தேர்வுகளாகும்.

ஒரு மொழிபெயர்ப்பாளர் இரண்டு அடிப்படைகளில் முக்கியமான பணியைச் செய்கிறார். ஒன்று, குறித்த மொழிச் சூழலிலிருந்து தேர்ந்து கொள்ளும் படைப்புகள். அங்கிருந்து எதை, எவ்வாறானவற்றை இங்கே எடுத்து வரவேண்டும் என்ற தெளிவோடு செயற்படுதல். இரண்டாவது, எழுத்தாளரின் அல்லது கவிஞரின் மூல வடிவத்துக்குச் சேதாரம் நிகழாத வகையில் சிறப்பாக அவற்றை மொழிபெயர்த்து அளிப்பது. இரண்டிலும் ரிஷான் வெற்றிபெற்றவராகவே உள்ளார். கடந்த பதினைந்து ஆண்டுகளில் ரிஷானின் பல நூல்கள் மொழிபெயர்ப்புக்கான மதிக்கத் தக்க விருதுகளையும் பரிசுகளையும் பெற்றுள்ளன. இந்த விருதுகளுக்கும் பரிசுகளுக்கும் மேலாக, வாசகர்களுடைய பாராட்டுகளும் அன்பும் ரிஷானுக்குண்டு. ஆமாம், அவர் நமக்களிக்கும் கொடைகளுக்கு நிகராக நாமும் அவருக்குக் கொடைகளை அளிக்க வேண்டும். அது தனியே மொழிபெயர்ப்புகளை அறிமுகப்படுத்துவதற்கு மட்டுமானதல்ல, அதற்கப்பால் இனமுரண்பாட்டினால் சிதைவுண்டிருக்கும் இலங்கைத் தேசத்துக்கு அன்பினாலும் புரிந்துணர்வினாலும் ஒரு மீள் நிலையை நல்ல நிலையை உருவாக்க முயற்சிக்கும் பெரும் பணிக்காகவுமாக இருக்கும். காலத் தொண்டினை ஆற்றுவது அந்த நாட்டிற் பிறந்தோரின் பொறுப்பு. அதை உணர்ந்து செயற்படும் நிலந்த அலெக்ஸாண்டருக்கும் ரிஷான் ஷெரிப்புக்கும்
அன்பும் வாழ்த்தும்.



karunagaran@thaiveedu.com

# நடேசய்யரின் 'ஒற்றன்'
# Havoc (பேரழிவு) என்ற ஆங்கில நாவலின் அப்பட்டமான தழுவல்

– பூ. நித்தியானந்தன்



**கோ**. நடேசய்யர் (1887-1947) அவர்கள் 1915-ல் தமிழகத்தில் வெளியிட்ட 'ஒற்றன்' என்ற நாவல், 107 ஆண்டுகளின் பின் மறுபதிப்புக் கண்டிருப்பது, நடேசய்யர் பற்றிய ஆய்விற்குப் புதிய சாளரத்தைத் திறந்திருக்கிறது. நடேசய்யரின் நூல்களை மீளப் பதிப்பிப்பதிலும், நடேசய்யரின் பணிகள் பற்றிய ஆய்விலும் ஆத்மார்த்தமான ஈடுபாட்டோடு செயற்பட்டுவரும் கலாநிதி பெருமாள் சரவணகுமார், 'ஒற்றன்' நாவலை மறுபதிப்புச் செய்து சாதனை புரிந்திருக்கிறார். கரந்தைத் தமிழ்ச் சங்க நூலகத்திலும், தஞ்சாவூர் மாவட்டப் பொது நூலகத்திலும் இரண்டு பாகங்களாகக் கிடந்த 'ஒற்றன்' நாவலைத் தேடிக் கண்டு பிடித்து, முழுமையான நாவலாகக் கொணர்ந்தமை பாராட்டுக்குரியதொன்றாகும்.

நடேசய்யரின் இலக்கியப் பணியின் ஒரே சாட்சியமாகத் திகழ்வது 'ஒற்றன்' என்ற நாவல் ஆதலால், இந்நூலின் மறுபதிப்பு தனி முக்கியத்துவத்தைக் கோருகிறது.

### வர்த்தமித்திரன்:

'வர்த்தக மித்திரன்' என்ற பத்திரிகையை நடேசய்யர் 1915-ம் ஆண்டு டிசம்பர் 9-ம் திகதி வெளியிட்டார். இப்பத்திரிகை வியாபாரம், கைத்தொழில், விவசாயம், பொருளாதாரம், எஞ்சினியரிங் போன்ற விடயங்களுக்கே முன்னுரிமை அளித்தது. இந்தியப் பொருளாதாரம் குறித்து 'வர்த்தமித்ரன்' பத்திரிகையில் வெளியான கட்டுரைகள், தமிழில் வேறெந்தப் பத்திரிகையிலும் காண முடியாத கட்டுரைகள் என்பதில் ஐயமில்லை. மிகத் துல்லியமான தரவுகளுடன் இந்தியாவின் பல்வேறு தொழில் முயற்சிகள் பற்றிய கட்டுரைகள் இப்பத்திரிகையின் உயர்ந்த தரத்தைக் காட்டுவன.

நடேசய்யர் தான் எழுதிய 'ஒற்றன்' நாவலை 'வர்த்தகமித்ரன்' பத்திரிகையில் தொடராக எழுதவில்லை. அவர் அதனைத் தனியே நூலாகப் பிரசுரித்து, அந்த நூலுக்கான விளம்பரங்களை மட்டுமே தனது பத்திரிகையில் வெளியிட்டுவந்தார்.

**விளம்பரங்கள்:** *'சமீபத்தில் நடந்த சண்டையில், சர்வியா நாட்டைப் பிடிப்பதற்காக ஆஸ்திரியாவும் ஜெர்மனியும் செய்துகொண்ட சூழ்ச்சிகளும் அவற்றைக் கண்டு பிடிப்பதற்காக, சர்வியா தேசத்து வேலைக்காரியான ஆனி என்னும் பெண்மணியும், இங்கிலாந்து தேசத்து ஒற்றனும் பட்ட பாடுகளும், கடைசியாக இவர்களுடைய சாமர்த்தியத்தால் ஜெர்மனி, ஆஸ்திரிய ஒற்றர்களை எவ்வாறு ஏமாற்றித் தங்கள் நாட்டை எவ்வாறு காப்பாற்றினார்கள் என்னும் மிகவும் இனிமையான தமிழ் நடையில் எழுதப்பட்ட தமிழ் நாவல். (வர்த்தக மித்திரன், 16.11.1919).*

*'இப்பொழுது நடக்கும் மகாயுத்தத்தில் ஆஸ்டிரிய, ஆங்கிலேய, சர்விய ஒற்றர்கள் தத்தம் நாட்டின் நன்மைக்காக ஒருவரையொருவர் ஏமாற்றி நன்மையடைந்தார்களென்பது சர்விய ஒற்றியான ஆன்னி என்னும் பெண்பால் தன்னுடைய சாகஸ சாதுர்யங்களினால் ஆஸ்டிரிய, ஆங்கிலேய ஒற்றர்களைத் தன் வயப்படுத்தி தன்னுடைய நாட்டிற்கு ஒப்பற்ற நன்மையை எவ்வாறு செய்தாளென்பதைப் பற்றித் தெரிவிக்கும் மிக அருமையான தமிழ் நாவல். படிக்கப் படிக்க மனத்தைக் கவரத்தக்கது. ஒவ்வொருவருக்கும் மிக அவசியமானது. 100 பக்கங்கள் கொண்டது. விலை அணா 10.*

நடேசய்யர் 1915-ல் 'ஒற்றன்' நாவலை வெளியிட்ட காலப்பகுதியில் நாவல்களைத் தொடராக வெளியிடாத இதழே இல்லைஎன்று சொல்லலாம். 'ஆனந்தபோதினியும் விவேகாதயமும் தம் முதல் இதழின் தலையங்களிலேயே நாவல்களைத் தொடராக வெளியிடுவது தம் குறிக்கோள் என்று அறிவித்தன. ஆனந்தபோதினியை நடத்திவந்த நாகவேடு முனிசாமி முதலியார், நாவல்களை மட்டுமே வெளியிடுவதற்கென 'மன மோகினி' என்றோர் இதழைத் தொடங்கியதாகத் தெரிகிறது. நாவல் என்றொரு 'மாதாந்தத் தமிழ்ப் புத்தகம்' காரைக்குடி நாவல் பப்ளிஷிங் கம்பெனியால் 1916-ம் ஆண்டின் கடைசியிலிருந்து வெளியிடப்பட்டிருக்கிறது.' என்றொரு நீண்ட பட்டியலைத் தருகிறார் ஆ. இரா. வேங்கடாசலபதி.[1] சில நாவலாசிரியர்கள் தங்களது சொந்த அச்சுக்கூடங்களையே வைத்துத் தமது நாவல்களை அச்சிட்டுக்கொண்டிருந்தனர்.

'பதினெட்டாம் நூற்றாண்டிலேயே இங்கிலாந்தில் நாவல் புதிய பாணியாக(genre) தோற்றம் பெற்றுவிட்டது. ஆங்கில நாவல்கள் இங்கிலாந்தில் வெகுவிரைவிலேயே பிரபல்யம் அடைந்ததும், உடனடியாகவே அவை இந்திய வாசகர்களையும் சென்றடைந்துவிட்டது. ஆங்கில நாவல்களை வாசித்து, அவற்றின் தாக்கத்தால் புதிய நாவல்களை எழுதும் முயற்சி, முதலில் வங்காளத்திலும், அடுத்து தமிழகத்திலும் இடம்பெற்றது. தென்னிந்தியாவில் வாசிப்பவர்களின் ஆர்வத்தை ஈர்த்தவை இலக்கிய நாவல்கள் அல்ல, மாறாக, ஜனரஞ்சகரீதியிலான துப்பறியும் கதைகளும் ஏனைய மர்மக்கதைகளுமேயாகும்'[2]

ரெய்னால்ட்ஸின்(Reynolds) செல்வாக்கு அதிகரிக்க அதிகரிக்க, தமிழ் நாவல்களின் தரம் மோசமாகிக் கொண்டு செல்ல ஆரம்பித்தது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால நாவல்களில் பெரும்பாலானவை ரெய்னால்ட்ஸின் நாவல்களைத் தழுவி எழுதப்பட்டவையே. அந்த நாவல்கள் சிலவற்றில் அதீதமான மிகையுணர்ச்சி, பரபரப்பு போன்ற அம்சங்கள் இல்லாமலிருந்தாலுங்கூட அவை ரெய்னால்ட்ஸ் பாணி நாவல்கள் தாம். தமிழ் நாவல் அரங்கில் 'கல்கி' என்ற திறன்மிக்க நாவலாசிரியன் தோன்றுவதற்கு ஒருதலை முறை காத்திருக்க வேண்டியதாயிற்று. ஆரம்பகாலத் தமிழ் நாவல்களுடன், தமி



ழின் மறுமலர்ச்சி என்பது சிறப்பாகவே ஆரம்பம் கண்டதெனினும், தரமான எழுத்தாளர்கள் தங்களின் எழுத்துவன்மையால் தம்மை நிலைப்படுத்திக் கொள்ளும் காலம் வரை, கணிசமான தேக்கநிலை காணப்படவே செய்தது.[3]

'ஆங்கிலேய பாஷையில் ஆயிரக்கணக்காக, மாதந்தோறும் நாவல் என்று பெயரிட்டுள்ளகதைகள் எழுதப்படுகின்றன. நமது தேசத்தார்கள் 'நாவல், நாவல்' என்று சொல்லுகிறார்களே! அதில் என்ன அவ்வளவு ருசி. அதுவும் ஒரு கதைதானே!' என்று இங்கிலீஷில் படிப்பவர்களைக் கேட்பார்கள். இவ்வாறு இங்கிலீஷில் அப்பியாசமில்லாத நமது நாட்டார்கள், நாவல் என்பது இவ்வாறு இருக்கலாம் என்பதை ஒருவாறு அறிந்துகொள்ளும்பொருட்டு, நாம் தமிழில் ஓர் நாவல் எழுதிப் பிரசித்தம் செய்கின்றோம்... நமது 'தீனதயாளு'தான் தமிழில் முதல் நாவல்' என்று தீனதயாளு நாவலின் முகவுரையிலே 1902-ல் பண்டித நடேச சாஸ்திரி குறிப்பிடுகிறார்.[4]

'மேலக்காவில் தாத்தா வீட்டில் இருந்த இரண்டு வருஷங்களில் நான் சுமார் முந்நூறு நானூறு தமிழ் நாவல்களாவது படித்திருப்பேன் என்று இப்போது எண்ணிப்பார்க்கும்போது தோன்றுகிறது' என்று க.நா.சுப்ரமண்யம் 'முதல் ஐந்து தமிழ் நாவல்கள்' என்ற நூலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார்.[5]

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து, இருபதாம் நூற்றாண்டின் முதல் தசாப்தம்வரை வெளியான நாவல்கள் தமிழ் நாவல் வரலாற்றிற்குச் செழுமையான மரபை உருவாக்கிச் சென்றிருக்கின்றன என்பதில் ஐயமில்லை. ச.வேதநாயகம்பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்'(1879), பி.ஆர்.ராஜம் ஐயரின் 'கமலாம்பாள் சரித்திரம்'(1893), அ.மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரம்' (1898), ச.நடேச சாஸ்திரியின் 'தீனதயாளு' (1902), ம.பொன்னுசாமிப்பிள்ளையின் 'கமலாக்ஷி' (1903) ஆகிய நாவல்கள், ஒரு மொழியின் முன்னோடி முயற்சிகள் என்ற வகையில் சாதனை படைத்தவை என்பதில் ஐயமில்லை. இருபதாம் நூற்றாண்டின் முதல் மூன்று தசாப்தங்களில் 1050 புனைகதை நூல்கள் வெளியாகியுள்ளன.[6] 'தமிழ்ப்புதினங்கள் வெளியாகும் வேகத்தைக் காணும்போது, இன்றுவரை ஏறத்தாழ 10,000 புத்தகங்கள் வந்திருக்கவேண்டும் என்று ஊகிக்க முடிகிறது' என்கிறார் முனைவர் வே.சீதாலட்சுமி.[7] அவரால் 1983-ம் ஆண்டுவரைப்பட்ட காலத்தில் தமிழகத்தில் வெளியான 6298 நூல்களையே பதிவு செய்ய முடிந்திருக்கிறது. இலங்கையில் 1856- 2019 காலப்பகுதியில் 1420 நாவல்கள் வெளியான விபரத்தைப் பதிவு செய்கிறார் நூலகர் என்.செல்வராஜா.[8]

1915-ல் நடேசய்யர் 'ஒற்றன்' நாவலை வெளியிட்ட காலப்பகுதியில் துப்பறியும் கதைகளும் மர்ம நாவல்களும் பரபரப்பு நாவல்களும் நூற்றுக்கணக்கில் குவியத்தொடங்கியிருந்தன. இந்த 'ஒற்றுவேலை செய்தல்- வேவுபார்த்தல் பாணியில் பல நாவல்கள் வெளிவந்தன. ஆரணி குப்புசாமி முதலியார் (1866- 1925) ஜே.ஆர்.ரங்கராஜு (1875- 1947), வடுவூர் துரைசாமி ஐயங்கார் (1880-1942) ஆகியோர் சென்ற நூற்றாண்டின் இருபதுகளில் தமிழ் வாசகப்பரப்பை விரிவுபடுத்தியவர்கள் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

'ஜே.ஆர்.ரங்கராஜுவின் ஐந்தாறு நாவல்களும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒன்றாக 1916 முதல் 1923 வரையில் வெளிவந்தன. பிரஸ் சொந்தக்காரரான ரங்கராஜு பத்தாயிரம் பிரதிகளை அச்சிட்டு, ஒவ்வொரு ஐந்நூறு பிரதிகளையும் ஒரு பதிப்பாகக் குறிப்பிட்டு 10, 20 பதிப்புகள்வரை தன் நாவல்களை வெளியிட்டார். 'வரதராஜன்' என்ற இவரது நாவலின் பல பகுதிகள் இலக்கியத் திருட்டு என்று கேஸ் போட்டு, மேலே எதுவும் எழுதிப் பிரசுரிக்கக்கூடாது என்றும், ஆறு மாதம் ஜெயில் வாசம் அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம் என்றும் கோர்ட் அவருக்குத் தண்டனை விதித்தது என்று எண்ணுகிறேன். ஜெயிலில் இருந்துவிட்டு எழுதுவதை நிறுத்தி விட்டார்.' என்கிறார் க.நா.சுப்பிரமணியம்.[9]

'ரெய்னால்ட்ஸின் நாவல்களை எந்த மொழியிலென்றாலும் ஒருவர் ஏன் இப்போதும் வாசிக்கவேண்டும் என்பதற்கு ஒரு நவீன ஆங்கில வாசகனுக்கு விடை காண்பது என்பது சிரமமாகவே இருக்கும்' என்கிறார் ஆர்.ஈ.ஆஷர் (R.E.Asher). நாவல் எழுதும் தொழில்முறைகள் பற்றி 'சுதந்திரச் சங்கு' (8.7.1933) பத்திரிகையில் வெளியான பின்வரும் குறிப்புக்கள் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

- புத்தகத்தின் பெயர் ஒரு ஸ்திரீயின் பெயராகத்தானிருக்கவேண்டும்.பெயரிலும் ஒரு புதுமை கலந்திருக்கவேண்டும்.'மிஸ் லீலா காமனி', 'மோஸ்தர் வல்லிபாய்'- இந்த ரகங்களில் பெயர் வைக்க வேண்டும்.

- கதைகளைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். ரெய்னால்ட், லீக்வே போன்ற ஆங்கில நாவலாசிரியரின் கதைகளைத் தழுவி எழுதிவிடலாம். கதையில் குறைந்தது ஒரு டஜன் காதலர்களும், அரை டஜன் விபசாரிகளும், பத்து டஜன் திருடர்களும், சில துப்பறிபவர்களும் இருந்தே தீரவேண்டும்.
- கதை ஆரம்பத்தில் கொலை நடக்கவேண்டும். மத்தியில் ஆங்காங்கு திருட்டு இருக்கவேண்டும். எங்கேயாவது பற்றிக்கொண்டு எரியவேண்டும். இவைகளெல்லாம் நவீன நாவலின் லக்ஷணங்கள்.
- சிற்றின்பமூட்டும் வண்ணம் கதைகளைச் சித்தரித்தால் தான் காசு. மாதவையாவின் பத்மாவதி சரித்திரம், ராஜம் அய்யரின் கமலாம்பாள் சரித்திரம்-இந்தத் தினுசுகளில் புத்தகம் எழுதினால் ஒருபோதும் விற்பனையாகாது. உஷார்! ஸ்திரீ வாசகர்களின் மனதையும் கவர முடியாது. ஆகவே ஜாக்ரதை.[10]

இப்படி நாவல்கள் வெள்ளமாகக் குவிந்து கொண்டிருந்த காலப்பகுதியில், தானும் ஒரு நாவலை எழுத முனைந்திருக்கிறார் நடேசய்யர். துப்பறியும் நாவல்களும் மர்ம நாவல்களும் எழுதிக்கொண்டிருந்த தமிழ் எழுத்தாளர்கள் தாம் வகித்து வந்த தொழில்களையே விட்டுவிட்டு முழுநேர எழுத்தாளர்களாக மாறுமளவிற்கு நாவல் விற்பனை கொடிகட்டிப்பறந்தது. நடேசய்யர் ஆற்றல் மிக்க எழுத்தாளர் என்பதில் ஐயமில்லை. எந்த விடயத்தையும் எளிமையான நடையில் பொதுமக்களுக்குப் புரியும் வகையில் எழுதும் கலை கைவரப்பெற்றவர். அக்காலத்தில் முனைப்புற்றிருந்த மர்ம நாவல்களுக்கும் - துப்பறியும் நாவல்களுக்குமிருந்த பெரும் வரவேற்பை அவதானித்த நடேசய்யர் நாவல் எழுத முனைந்ததில் ஐயமில்லை. ஆனால், அந்த நாவலைத் தனது பத்திரிகையில் அவர் தொடராக வெளியிடவில்லை என்பது அவதானத்திற்குரியது. அறிவியல் சார்ந்த தனது கனதியான பத்திரிகையின் இலட்சியத்திற்கு, உளவு பார்க்கும் வெகுசன நாவல்த் தொடரை வெளியிடுவது பொருத்தமற்றது என்று அவர் நினைத்திருக்க வேண்டும். ஆனால், இம்மாதிரி நாவல்கள் நன்கு விலைப்படும் என்ற நோக்கிலேயே அவர் இந்த நாவலை எழுதி வெளியிட்டிருக்கிறார். ஆனால், 'ஒற்றன்' நாவல் வெளியாகி, நான்கு ஆண்டுகள் கழிந்த பின்னும், அந்த நாவலுக்கு விளம்பரம் வந்து கொண்டிருந்தமை, நாவல் அதிகம் விலைபோகவில்லை என்பதையே காட்டுகிறது. இதே காலப்பகுதியில் துப்பறியும் நாவல்களை எழுதிக்கொண்டிருந்த ஜே.ஆர். ரங்கராஜுவின் துப்பறியும் நாவல்கள் 70,000 பிரதிகளுக்கு மேல் விற்பனை ஆகியுள்ளது. பல நாவல்கள் வெளியாகி, ஒரு மாதத்திற்குள்ளேயே மறு பதிப்பினைக் கண்டுள்ளன. 'ஒற்றன்' நாவலின் பின்னர் நடேசய்யர் வேறெந்த நாவல் முயற்சியிலும் ஈடுபடவில்லை.

•

'முதலாம் உலகப்போரைப் பின்புலமாகக் கொண்ட தமிழின் முதல் நாவல்' என்ற முன் அட்டையின் மகுட வாசகமும், 'முதலாம் உலகப்போர் குறித்துப் பெரும் மௌனத்தைக் கடைப்பிடித்த தமிழ்ப் படைப்புலகில், பாரதியைக்கடந்து மற்றொரு பேராளுமை அற்புதமான புனைவு ஒன்றை ஆக்கித் தமிழிலக்கியக் கருவூலத்தில் சேர்த்திருக்கிறார்' என்ற பின் அட்டைக் குறிப்பும் நுட்பமான ஆய்வுக்குரியன. முதலாம் உலகப்போர் குறித்தும், இப்போருக்கு முன்னும்பின்னும் ஆங்கில இலக்கிய உலகில் நிலவிய ஒற்றர்கள் பற்றிய பீதி எத்தகையதாக இருந்தது என்றும் , 'ஒற்றர் பற்றிய ஜன்னி' (spy fever) எப்படிப் பிரித்தானிய மக்களிடம் வேகமாகப் பரவியது என்றும், ஆதாரம் எதுவுமின்றி, எப்படி நாவலாசிரியர்கள் தமது நாவல்களில் இந்தப் பீதியை வளர்த்தெடுத்துச் செல்வதில் வெற்றி கண்டனர் என்பதனையும் நோக்குதல் அவசியம்.

1914 ஜூன் 28-ம் திகதி செர்பியாவில் ஆஸ்திரிய- ஹங்கேரியச் சிம்மாசனத்தின் அடுத்த வாரிசான ஃபிரான்ஸ் பேர்டினனட் (Franz Ferdinand), செர்பிய பிரஜை ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வு, முதலாம் உலகப்போருக்கான முதல் திரியைக் கொளுத்திப்போட்டது. 1914 ஜூலை 28-ம் திகதி ஆஸ்திரிய- ஹங்கேரி செர்பியா மீது போர்ப்பிரகடனம் செய்தது. அன்று முளைவிட்ட உலகப்போர், 1918 நவம்பர் 11-ம் திகதி முடிவுக்கு வந்தபோது, இருபது கோடிக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டிருந்தனர்; இருபத்து மூன்று கோடிக்கு மேற்பட்டோர் காயமுற்றிருந்தனர். முதலாம் உலகப்போர் ஆரம்பிக்கும் முன்னதாகவே வேவு பார்த்தல் என்பது பிரித்தானியாவில் காட்டுத் தீயாகப் பரவிக்கொண்டிருந்தது. ஜெர்மனிய உளவாளிகள் பிரித்தானியாவில் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள் என்னும் பீதி, ஒற்றர்களை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட நாவல்களின் மூலம் மக்களைப் பெரிதும் பீடித்திருந்தது. புனைவையும் உண்மையையும் ஒன்றெனக் கண்டனர் பொதுமக்கள். டேவிட் பிரெஞ்ச் (David French)என்ற ஆய்வாளர் 'பிரித்தானியாவில் ஒற்றர் பற்றிய ஜன்னி' என்ற கட்டுரையில் இந்த ஒற்றர் பற்றிய புரளி எவ்வாறு கட்டி எழுப்பப்பட்டது என்பதை நிறுவுகிறார்.[11]

1914-ம் ஆண்டில், முதலாம் உலகயுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னரேயே, ஒரு தசாப்த காலமாக, பிரித்தானியாவில் ஜேர்மனி ஒற்றர்கள் ஊடுருவியிருப்பதாகப் பெரும் புரளி கிளப்பப்பட்டது. 1903-ல் ஜேர்மனியக் கடற்படை உருவாக்கப்பட்டபோது, அது பிரித்தானியா மீதான தாக்குதலுக்கான நடவடிக்கை என்று பிரித்தானியா கருதியது. ரோயல் கடற்படை எந்நேரமும் தங்கள்மீது சடுதியான தாக்குதலைத் தொடுத்து, தங்களின் புதிய கப்பல்களை மூழ்கடித்துவிடக்கூடும் என்று ஜெர்மனி அஞ்சியது. இரண்டு நாடுகளுமே தவறான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன. பிரித்தானிய ரோயல் கடற்படைக்கு நிகரான வலிமையுடன் ஜெர்மனியப் பேரரசின் கடற்படை உருவாக்கப்பட்டால், பிரித்தானியா ஜெர்மனியின் மீதான மோதலைத் தவிர்க்கும் என்ற ஜெர்மனியக் கடற்படைத் தளபதி அல்பிரெட் ட்ரிப்ஸ்(Alfred Tirpitz) அவர்களின் திட்டத்தில் ஜெர்மனி செயற்பட்டது. இந்த இரு நாடுகளுக்கிடையேயான பரஸ்பர அச்சமானது பொருளற்றது என்று இரு நாடுகளுமே ஒருவருக்கொருவர் உறுதிமொழி வழங்கிக் கொண்டிருந்தாலும், இந்த உறுதிமொழிகளை இரண்டு நாடுகளுமே நம்பத் தயாராக இல்லை. நாடுகளைச் சூறையாடும் பேராசையில், தங்கள் வலிமையைப் பெருக்கும் வல்லரசு நாடுகளின் வெறித்தனமான வேட்டைக்குப் பின்னால், 'தேச பக்தி' என்ற முலாம் பூசப்பட்டது ஒரு மோசடி.

இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும், பரஸ்பரம் இரு நாடுகளுக்கிடையேயான தாக்குதல் அச்சுறுத்தலுக்கெதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தவேண்டுமென எழுத்தாளர்கள் எழுதிக்குவிக்க ஆரம்பித்தனர். இந்த வேலையை இங்கிலாந்தில் வெற்றிகரமாகச் சாதித்தவர் வில்லியம் லெ கியு (William le Queux) என்ற எழுத்தாளராவார். பிரெஞ்சுத்



William le Queux

தந்தைக்கும் ஆங்கிலேயத் தாய்க்கும் பிறந்த லெ கியு, இளம் வயதில் பிரெஞ்சுப் பத்திரிகைகளுக்கு எழுதிக்கொண்டிருந்து விட்டு, பின் லண்டனுக்குச் சென்று, ஆங்கிலப்பத்திரிகைக ளுக்கு எழுத ஆரம்பித்தார். பின் பத்திரிகைகளுக்கு எழுதுவ தைக்கைவிட்டுவிட்டு, முழுநேர எழுத்தாளர் ஆனார். இங்கி லாந்திற்குள் ஜேர்மனிய உளவாளிகள் எவ்வாறு ஊடுருவி, நாட்டை ஆக்கிரமித்துள்ளனர் என்று அவர் கதை பண்ண ஆரம்பித்தார். ஹோட்டல் ஊழியர்களாகவும் எழுதுவினை ஞர்களாகவும், முடிதிருத்துபவர்களாகவும் பேக்கரிக்காரர்க ளாகவும் பிற பணியாட்களாகவும் வேலைகளில் அமர்ந்து, இரகசிய உளவாளிகளாக இயங்குகிறார்கள் என்று அவர் எழு தித் தள்ளினார். இவரது நூல்கள் லட்சக்கணக்கில் விற்பனை யாகின. இந்த ஒற்றர் வகை இலக்கியத்தில் லாபக் கணக் கோடு கொஞ்சம் தேசபக்தியையும் சேர்த்துக்கொண்டால், எப்படி ஆதாயம் பார்க்கலாம் என்பதற்கு வில்லியம் லெ கியு அவர்களின் நாவல்கள் அச்சொட்டான உதாரணமாகும். லெ கியுவும் ரொபர்ட்ஸ் பிரபுவும் இணைந்து எழுதப்போகும் புதிய நூலிற்காக- நாவலில் உள்ளூர் மணம் வீசவேண்டும் என்பதற்காக, தென் கிழக்கு இங்கிலாந்திற்குப் பயணம் செய்து, புதிய அனுபவம் பெற்றுவர, Daily Mail பத்திரிகை உரிமையாளர் நோத்க்ளிப் (Northcliff) பிரபு, இருவரையும் நான்கு மாதச் சுற்றுப்பயணம் செய்துவர ஒழுங்கு செய்தார். தேசியப் பாதுகாப்புக்கான சேவையைப் பிரபல்யப்படுத்த இந்தநூல் நல்ல வாய்ப்பை நல்குகிறது என்று ரொபர்ட்ஸ் பிரபு கருதினார். ஜேர்மனி இங்கிலாந்திற்கு எதிராகப் படை யெடுத்து வரும்போது, எந்தெந்த வழிகளுக்கூடாக வரக்கூ டிய சாத்தியம் உண்டு என்று ஊகித்து, ஒரு வரைபடத்தை உருவாக்கினார்கள். அந்தத் திட்டம் நோத்கில்ப் பிரபுவிற்கு உடன்பாடானதாக இருக்கவில்லை. தேசபக்தி சரிதான், ஆனால், அதனை லாபத்தோடு சரிப்படுத்தவேண்டும் என்று பத்திரிகை உரிமையாளர் கருதினார். நூலாசிரியர்கள் இருவ ரும் ஜேர்மன் படைகள் ஊடுருவிவரக்கூடியதாகக் காட்டப் பட்ட பாதையானது மிகப்பல சின்னச்சிறு கிராமங்களை உள் ளடக்கியதாக இருந்தது. இந்தப் பின்தங்கிய சின்னஞ்சிறு கிராமங்களில் தனது பத்திரிக்கைக்கு அவ்வளவு விற்பனை இராது என்று கருதிய நோத்க்ளிப், ஜேர்மன் படைகள் ஊடு ருவி வரும் பாதைகள் பெருமளவு பெரிய நகர்களுக்கூடாக வருவதாக அமைத்தால், அப்பகுதிகளில் பத்திரிகை விற் பனை அமோகமாக இருக்கும் என்று எதிரிப்படைகள் ஊடுரு வும் பாதைகளின் வரைபடத்தையே மாற்றி அமைத்தார். இப் படித்தான் உளவுபார்க்கும் நாவல்களில் தேசபக்தி பொங்கி வழிந்தது.

எளிதில் ஏமாற்றப்படக்கூடிய வாசகர்கள் புனைகதைகளை உண்மைகள் என நம்பினார்கள். பிரித்தானியாவில் 90,000 ஜேர்மனிய சேமப்படைவீரரும் உளவாளிகளும் ஊடுருவி இருப்பதாக Morning Post (6.5.1907) பத்திரிகை கடிதம் ஒன்றை வெளியிட்டது. பிரித்தானியாவின் போர் அலுவலகத் தின் உயர் அதிகாரிகளும் இதில் உண்மையுள்ளது என்றே நம்பினார்கள்.

1909-ல் லெ கியு Spies for the Kaiser, Plotting the downfall of England என்ற நூலை வெளியிட்டார். இந்த நூல் வலியுறுத் துவதெல்லாம் பிரித்தானியாவின் கிழக்குக்கரையோரத்திலும் லண்டனிலும் ஜெர்மன் உளவாளிகள் நிறைந்து வழிகின்றனர் என்பதுதான். அவர்கள் ஹோட்டல் வெய்ட்டர்களாகவும் முடி திருத்துபவர்களாகவும் உல்லாசப் பயணிகளாகவும் இருந்து கொண்டு வேவு பார்த்துவருகிறார்கள் என்று எழுதினார். ஜெர் மன் படைகள் பிரித்தானியாவில் இறங்கும்போது எந்தெந்த இடங்கள் பாதுகாப்பானவை என்று அந்த இடங்களை எல் லாம் பட்டியலிட்டிருக்கிறார்கள் என்றும், தேவையான போது, தொலைபேசி இணைப்புகள், தந்திச் சேவை, ரயில்வே சேவை, பாலங்கள், தண்ணீர் விநியோகச் சேவை என்பனவற் றைத் தாக்கி அழிக்கும் திட்டத்துடன் தயாராக இருக்கிறார் கள் என்றும் லெ கியு எழுதினார்.

லெ கியு எழுதிய புத்தகம் வெளியானதும் தொலைபேசி, தந்தி நிலையங்கள், ரயில்வே நிலையங்களுக்கு அருகில், ஜெர்மன் உளவாளிகள் சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்து கொள்வதாக வாசகர்களிடமிருந்து கடிதங்கள் குவிய ஆரம்பித்தன. 1908-1909 காலப்பகுதியில் ஜெர்மன் உளவா ளிகள் பற்றிய வதந்தி இங்கிலாந்தில் தீயாகப் பரவிக்கொண் டிருந்தது. பிரிட்டிஷ் அரசாங்கமும் இந்த வதந்திகளை நம்பி, ஜெர்மனியின் திடீர்த் தாக்குதலுக்கு எதிரான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாயினர். 1911-ல் ஜெர்மன் பத் திரிகையாளர் மெக்ஸ் ஷுல்ட்ஸ் (Max Schultz) என்பவர் மீது ஜெர்மன் உளவாளி என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் பட்டது. யுத்தத்திற்குத் தயாராகவிருக்கும் பிரிட்டிஷ் கப்பற் படை பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவர் இரண்டு ஆங்கிலேயர்களுக்கு லஞ்சம் வழங்கினார் என்பது அவர் மீதான குற்றச்சாட்டு. இந்தத் தகவல் ஒன்றும் பரம ரக சியம் இல்லை என்றும், இந்தத் தகவல் உள்ளூர்ப் பத்திரி கையிலேயே காணக்கிடைக்கிறது என்றும் ஜெர்மன் பத்திரி கையாளர் வாதிட்டார். அவர் தன்னை ஜெர்மன்காரர் என்று வெளிப்படையாகவே அறிவித்துக்கொண்டவர் என்றும், அவ ரது நதியோரப் படகில் ஜேர்மன் கொடியையே பறக்கவிட்டி ருந்தார் என்றும், யாராவது ஓர் உளவாளி இப்படிச் செய்வாரா என்றும் பேசப்பட்டது.

முதலாம் உலகப் போர் ஆரம்பிக்கு முன்னரே ஜெர்மனிய

உளவாளிகள் பற்றிய வெறும் வதந்தி இங்கிலாந்தில் வேகமாகப்பரவிக்கொண்டிருந்தது. 1915-ம் ஆண்டில் சந்தேகத்திற்கிடமான ஜெர்மனிய உளவாளிகள் பற்றி 9000 புகார்கள் பெறப்பட்டன. ஒவ்வொரு புகாருமே விசாரிக்கப்பட்டு, அனைத்துப் புகார்களுமே ஆதாரமற்றவை எனக்கூறப்பட்டது. 1915-ல் லிவர்பூலில் ஆரம்பமாகி, மூன்று நாட்களாக ஜெர்மன்காரரின் கடைகள் தாக்கப்பட்டன. தாக்குதலைக் கட்டுக்குள் கொண்டுவர முடியாத நிலைமையே காணப்பட்டது. பல்லாயிரக்கணக்கான அப்பாவி ஜெர்மனியர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர். பிரித்தானியா எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஜெர்மனிய உளவாளிகளுக்கு எதிரான, ஒரு சிலுவை யுத்தம் என்று கருதுமளவிற்கு, இந்த உளவாளி என்னும் வதந்தி பரப்பப்பட்டிருந்தது.

வில்லியம் லெ கியு ஜெர்மனிய ஒற்றர்கள் பற்றிய பீதியை உருவாக்கியவர்களில் தலையாயவர். வருஷத்திற்கு ஐந்து நாவல்கள் என்று இறுதிக்காலம் வரை எழுதிக் கொண்டிருந்தவர் லெ கியு. அவரது காலத்தில் ஆயிரம் வார்த்தைகளுக்கு ஆயிரம் டொலர் (இன்றைய கணக்கின்படி) வாங்கியவர் லெ கியு. 1906-ம் ஆண்டு, எழுத்தாளர் லெ கியு, The Invasion என்ற நாவலைத் தொடராக Daily Mail பத்திரிகையில் எழுதியபோது, ஜெர்மனியர்கள் எந்தெந்தப் பாதைகளுக்கூடாகத் தாக்குதலை மேற்கொள்வார்கள் என்று ஒரு வரைபடத்தையே பத்திரிகையில் வெளியிட்டிருந்தார். பிரித்தானியாவில் தேசியப் பாதுகாப்புச் சேவையை அரசாங்கம் ஏற்படுத்திக்கொள்வதற்கு லெ கியு பெருங்காரணமாக இருந்தார். The Invasion என்ற தொடர் நூலாக வெளிவந்தபோது, பத்து லட்சத்திற்கு மேலாக அந்த நூல் விற்பனையானது. அந்த நாவல் 27 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.

வில்லியம் லெ கியு (1880-1920) வெகுசன நாவல் மன்னன் என அறியப்பட்டவர். பிரித்தானியத் தேசியப் பாதுகாப்புப் பற்றிய பீதியை எல்லை மீறி வளர்த்துச் சென்றவர். தான் கையாண்ட விடயப் பரப்பைச் சிதைத்து, வாசகர்களுக்குத் தவறான செய்திகளைப்பரப்பி, தான் வகுத்திருந்த பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலுக்குத் தக, உண்மைக்கும் புனைவுக்கும் இடையேயான எல்லைக்கோட்டை மழுங்கடித்து இலக்கியம் செய்த லெ கியு 'தவறான தவல்களைப் பரப்புவதில் கைதேர்ந்தவர்' (Master of Mis-information) என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.[12]

•

லெ கியு எழுதிய 'Whoso findeth a wife' என்ற ஆங்கில நாவலை V.T.மஹாதேவன் தமிழில் 'எல்லாள் அல்லது நல்ல மனைவியே நல்ல பொருள்' (1914) என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இந்த நூலுக்கு மஹாதேவன் எழுதியுள்ள முன்னுரையில், 'இது உல்லியம் லேக்வா (William Le quex) என்பவர் ஆங்கிலத்தில் இயற்றிய 'ஹூஸோ பைண்டெத் எ உவைப்' (Whoso Findeth a wife) என்னும் நூலின் மொழிபெயர்ப்பு. சில அநாவசியமான சங்கதிகளை நிறுத்திவிட்டு வேண்டுவனவற்றை மாத்திரம் எடுத்துக்கொண்டு பொருத்தமாக ஒருவாறு எழுதப்பட்டிருக்கிறது. நாம் இங்கிலாந்தின் பிரஜைகளாதலால், அவர்களுடைய நடையுடை பாவனை ராஜ பாரம் முதலியவைகளை சிறிது தெரிந்து கொள்வது நமது கடமை. அக்கருத்துக் கொண்டே இம்மாதிரியான நூல் மொழிபெயர்க்கப்பட்டது' என்று குறிப்பிடுகிறார்.

'ஆங்கில நாவல்களைத் தழுவித் தமிழில் வெளியாகியுள்ள பெரும்பாலான நாவல்கள் தவறான திசைக்கு இட்டுச் செல்கின்றன. இரட்சணிய சேனையைச் சேர்ந்த ஆங்கிலேயர் இந்து ஆடைகளை அணிந்து கொள்வதைப்போல் அவலட்சணமாக இருக்கிறது. சில பிரபலமான நாவல்களை அப்படியே தமிழில் மொழிபெயர்த்து வழங்குவது, ஆங்கிலம் தெரியாத எம் மக்கள், ஓரளவிற்கு ஐரோப்பிய வாழ்க்கையைப் புரிந்து கொள்ளவும் மதிப்பிடவும் துணை புரியும். உல்லியம் லேக்வாவின் 'Whoso Findeth a Wife' நாவலை திரு V.T. மஹாதேவன் பகட்டுப் புலமையைக் காட்டாமல், மிக எளிய நடையில், தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இந்த நாவல் இங்கிலாந்தில் நடமாடும் அந்நிய ஒற்றர்களின் வாழ்க்கையைப் பற்றிய ஒரு சித்திரத்தை வாசகர்களுக்குத் தருகிறது. திரு மகாதேவன், எங்களின் சகோதரிகள் பயன்பெறும்பொருட்டு, இங்கிலாந்தின் சமூக வாழ்க்கையையும் குடும்ப வாழ்க்கையையும் சித்திரிக்கும் மேலும் பல ஆங்கில நாவல்களை, பரந்த உள்ளத்துடன் மொழிபெயர்த்து, வெளியிடுவார் என்று நம்புகிறேன். இத்தகைய முயற்சி, தற்போது அவர்களுடைய கலாசாரத்தைப் பற்றி நாம் கொண்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட அறிவினை மேலும் விரிவுபடுத்தும்.' என்று இந்த நூல் பற்றிய தனது எண்ணத்தைப் பதிவு செய்கிறார் சென்னை, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் T. செல்வகேசவராய முதலியார்.[13]

'உல்லியம் லேக்வா அவர்களின் பிரபல நாவலை மொழிபெயர்த்தலானது, பாரிய பணி என்றும் அவர் அதனை வெற்றிகரமாகக் கொண்டுவந்திருக்கிறார் என்றும், இந்த அநுபவத்திலிருந்து தமிழில் சுயமான நாவல்களைத் தரவேண்டும் என்று' பம்மல் சம்பந்த முதலியார் வாழ்த்துகிறார். இங்கிலாந்தில் ஜெர்மானிய ஒற்றர்கள் என்ற வதந்தியைக் கிளப்பிய லெ கியு எழுதிய நாவல்கள் மூலம் இந்தப் பொய்யான வதந்திகள் தமிழ் உலகுக்கும் வந்து சேர்ந்தன. இது தேசபக்தி என்று உயர்ந்தேத்தும் கைங்கரியமும் கூடவே நடந்தேறியது.

'முதலாம் உலகப்போர் குறித்த உள்ளார்ந்த முதல் நாவல்' (the first sincere novel based on the war) என்று போற்றப்படும் Under Fire (1916) என்ற நாவலை பிரெஞ்சு மொழியில் எழுதிய ஹென்றி போஷ்(Henri Barbusse) இந்த உலகப் போரை மகோ ன்னதமான போர் என்றோ, அப்போர்வீரர்களைப் போர்க்களத்து வீரபுருஷர்கள் என்றோ அழைக்க மறுத்தார். இரண்டு பக்கங்களிலும் தேசியக் கடமையுணர்வுடனோ தேசப்பற்றுடனோ வீரர்கள் படைகளில் சேர்ந்திருக்கக்கூடும். ஆனால், போரில் இடம்பெற்ற படுகொலைகளும் மோசமான நிலைமைகளும் தாங்கள் கொண்டிருந்த கருத்துகளை மறுமதிப்பீடு செய்யவும், தாங்கள் மேற்கொண்ட தீர்மானங்களுக்காக வருந்தவும் செய்தனர். ஹென்றி போஷ் போரின்மீது கொண்டிருந்த பெரும் அதிருப்தியே Under Fire என்ற நாவலை எழுதத் தூண்டியது. 'பெரும்பாலானோரைப் போலவே, ஹென்றி போஷும் வெகுவிரைவிலேயே நம்பிக்கை இழக்கலானார். அவர் முன்னர் கொண்டிருந்த தேசபக்தியின் இடத்தை, வெறுப்பும் சினமும் பிடித்துக் கொண்டன.[14]

ஏகாதிபத்திய நாடுகள், பின்தங்கிய நாடுகளைச் சூறையாடவும், மூலப்பொருட்கள், சந்தை வாய்ப்பு, மலிந்த ஊழியம் ஆகியவற்றைத் தேடியும் நடத்திய கோர யுத்தத்தில் தேச

பக்திக்கு எந்த இடமுமில்லை என்றுணர்ந்தார் ஹென்றி போஷ். பின்னர் அவர் கம்யூனிச இயக்கத்தில் இணைந்து, இறுதிவரை சர்வதேச சகோ தரத்துவத்திற்காகப் போராடினார்.

இருபதாம் நூற்றாண்டின் முதல் மூன்று தசாப்தங்களில், ஆங்கில நாவல்களைத் தமிழில் மொழிபெயர்த்தவர்கள் ஆங்கில மூல நூல்களின் பெயர்களைத் தெரிவித்தனர். சிலர் ஆங்கில நாவல்களைத் தழுவித் தமது நாவல்களைப் படைத்தனர். பலர் எந்த நாவல்களைத் தழுவி எழுதுகிறோம் என்று கூறாமல் தமது சொந்த நாவல்கள் என்றே கூறிவந்தனர். 'மாண்புமிக்க ஆங்கில நாவலொன்றின் சுருக்கிய தமிழாக்கத்தைத் தூய இயல்பானசெந்தமிழ் நடையில் இயற்றத் துணிந்ததாகக் கூறும் மறைமலை அடிகள் தான் இயற்றிய 'நாகநாட்டரசி குமுதவல்லி' என்ற தழுவல் நூலின் மூல ஆசிரியர் பெயரைக் குறிப்பிடாதது ஏனோ தெரியவில்லை' என்கிறார் கலாநிதி க.கைலாசபதி [15]

தனது ஆங்கில நாவலைத் தழுவித் தமிழில் நாவல் எழுதியுள்ளார் என்று ஆங்கில மூலாசிரியர் தொடுத்த வழக்கில், பிரபல நாவலாசிரியர் ஜே.ஆர். ரங்கராஜு சிறைவாசம் அனுபவித்திருக்கிறார். ஆங்கில நாவல்களைத் தமிழில் தர்ஜுமா செய்வது அந்தக் காலத்தில் மிக இயல்பானதாக இருந்தது. நடேசய்யர் ஈ.பிலிப்ஸ் ஒப்பன்ஹைம் (E.Philips Oppenheim 1866-1946) என்ற பிரபல ஆங்கில எழுத்தாளர் எழுதிய 'பேரழிவு' (Havoc,1911)[16] என்ற ஆங்கில நாவலைத் தழுவியே தனது 'ஒற்றன்' என்ற நாவலைப்படைத்துள்ளார்.



E.Philips Oppenheim 1866-1946

பேரழிவு (Havoc) என்ற ஆங்கில நாவலை எழுதிய ஈ.பிலிப்ஸ் ஒப்பன்ஹைம் (E.Philips Oppenheim 1866-1946) ஜெர்மனியிலிருந்து மூன்று தலைமுறைகளுக்கு முன்னர் வெளியேறிய யூத இனத்தின் வழிவந்தவர். மர்மநாவல்களின் மன்னனாக அவர் போற்றப்பட்டார். ஒரு சந்தர்ப்பத்தில், தனது நாவல்களைத் தான் எப்படி சிருஷ்டிக்கிறேன் என்பது பற்றி ஒப்பன்ஹைம் குறிப்பிட்டிருக்கிறார்: ஒரு கவர்ச்சிமிக்க ஆளுமையை முக்கிய கதாபாத்திரமாக சிருஷ்டித்துக்கொள்வேன். அந்தக் கதாபாத்திரத்தை, பரபரப்பான ஒரு சூழலுக்குள் நிறுத்திக் கதையை வளர்த்துச் செல்வேன். பின்னால் கலங்கலாக அமையப்போகும் நிகழ்ச்சித் தொடர்களின் ஆரம்பமாக இது அமையும். ஒப்பன்ஹைம் தனது நாவலுக்கு ஒரு பூரணச் சட்டகத்தை ஒருபோதும் கொண்டதில்லை.'எனது கதாபாத்திரங்கள் இம்மாதிரிச் சட்டகத்தை ஏற்றுக்கொள்வதில்லை' என்கிறார் ஒப்பன்ஹைம். தனது நாவலில் 'ரகசிய ராஜாங்க, அரசியல் விவகாரங்களில் ஈடுபடும் வில்லன்கள் தேவைப்படும் போது, ஜெர்மனிய இராணுவப்படைகளிலிருந்தும், அரசைத் தூக்கி எறிய நினைக்கும் அராஜகவாதிகளிடமிருந்தும் கதாபாத்திரங்களை எடுத்துக்கொள்வேன்' என்று ஒப்பன்ஹைம் வெளிப்படையாகக் கூறுகிறார். A people's Man (1915) என்ற நாவலில் சர்வதேச சோசலிஷ அமைப்பு ஒன்று, ஜெர்மனிய இரகசிய உளவுப்படையால்தான் இயக்கப்படுகிறது என்றும் கதை பண்ணக்கூடியவர் ஒப்பன்ஹைம்.[17]

மாயக்கவர்ச்சி கொண்ட உலகம், சர்வதேச ரகசியத் திட்டங்கள், மேற்குடிமாந்தர், சங்கிலித் தொடராக அவிழும் மர்மச் சம்பவங்கள், பேரழகிகள், காதல் என்று வாசகர்களை மகிழ்ச்சியில் திளைக்கவைப்பதையே நோக்கமாகக்கொண்டே இவரது நாவல்கள் உருப்பெற்றன. ஒரு வசந்தகால விடுமுறையின்போது வாசித்து மகிழக்கூடிய நாவல்கள் அவை. அவரே கூறுவதுபோல், அவரது நாவல்கள் எழுதுவதற்கு இலகுவானவை; அதே போன்று அவை வாசிப்பதற்கும் எளிதானவை. தனது நாவலை தன் செயலாளரிடம் சொல்லச் சொல்ல அவர் படியெடுத்து, ஓர் ஆண்டில் மட்டும் ஏழு நூல்களை வெளியிட்டிருக்கிறார். ஒப்பன்ஹைன் மக்களை மகிழப்பண்ணும் விதத்தில் நாவல்களைப் படைப்பதில் தனித்திறமை கொண்டிருந்தார். நாவல்கள், சிறுகதை, நாடகம் என்று நூற்றிஐம்பது நூல்களுக்குமேல் அவர் எழுதிக் குவித்திருக்கிறார்.

•

'ஒற்றன்' நாவலை வாசிக்க ஆரம்பித்ததுமே, அது ஆங்கில நாவலின் தழுவல் என்ற கருத்து ஒருவருக்கு உருவாகவே செய்யும்.

முழுக்க ஐரோப்பியக் களத்தில், வெள்ளைக் கதாபாத்திரங்களையே கொண்டியங்கும் நாவல் அது.

'எனது சித்திரம் வியாசர் பாரதக் கருத்தைத் தழுவியது, பெரும்பான்மையாக. இந்நூலை வியாசபாரதத்தின் மொழிபெயர்ப்பென்றே கருதிவிடலாம். அதாவது, 'கற்பனை' திருஷ்டாந்தங்களில் எனது 'சொந்தச் சரக்கு' அதிகமில்லை; தமிழ் நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி' என்று 'பாஞ்சாலி சபதம்' (1912) என்ற காவியத்திற்கு எழுதிய முன்னுரையிலே குறிக்கிறார் மகாகவி பாரதியார்.[18]

'ஒற்றன்' நாவலில் நடேசய்யரின் 'சொந்தச் சரக்கு' எதுவுமில்லை. அந்நூல் ஈ.பிலிப்ஸ் ஒப்பன்ஹைம் எழுதிய Havoc என்ற ஆங்கில நாவலின் அப்பட்டமான தழுவலாகும்.

Havoc என்ற நாவலின் தேர்ந்த சில பகுதிகளை, 'ஒற்றன்' நாவலோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தத் தழுவலைப் புரிந்துகொள்ளலாம். ஆங்கில நூலில் உள்ள பாத்திரங்களின் பெயர்களை நடேசய்யர் தனது நாவலில் மாற்றிப் போட்டிருக்கிறார். ஒரு கதாபாத்திரத்தின் செயற்பாடுகளைப் பிறிதொரு பாத்திரத்தின் மேலேற்றிச் செல்கிறார். ஆங்கில நூலின் விரி

வான வர்ணனைகள், நீண்ட உரையாடல் ஆகியவற்றைத் தவிர்த்து, சம்பவங்களைத் தொடுத்துச் செல்வதிலேயே நடேசய்யர் அக்கறை கொண்டிருக்கிறார். ஒப்பன்ஹைம் முப்பத்தெட்டு அத்தியாயங்களில், 323 பக்கங்களில் எழுதியுள்ள Havoc நாவலை நூறு பக்கங்களில் சுருக்கமாகவும், சம்பவங்களை அடுக்கிக்கொண்டும் எழுதும் பணியை நடேசய்யர் செய்திருக்கிறார்.

சில முக்கிய பகுதிகளை மூல நூலோடும் 'ஒற்றன்' நாவலோடும் ஒப்பிட்டுப்பார்க்கலாம்.

*

வியன்னாவில் ஆஸ்திரிய, ஜெர்மனிய, ருஷ்ய சக்கரவர்த்திகள் சந்திக்கிறார்கள். ஆங்கிலேய ஒற்றனான பெல்லாமி(Bellamy), அமெரிக்கப் பத்திரிகையாளரான டோர்வர்ட் (Dorward) இருவரும் தாங்கள் தங்கியிருக்கும் அறையிலிருந்து பேசிக்கொள்கிறார்கள். 'அந்தச் சந்திப்பில் அவர்கள் ரகசியமாக என்ன ஆலோசனை மேற்கொண்டனர்' என்ற தகவல் மட்டும் எனக்குக் கிடைக்கும் என்றால், ஒரு நூறு வார்த்தைகளுக்கு ஐயாயிரம் டொலர் கொடுக்கத் தயாராயிருக்கிறேன் என்று டோர்வர்ட் என்ற அமெரிக்கப் பத்திரிகையாளன் கூறுகிறான். (Havoc, Chapter 1,Crowned Heads Meet)

*'ஆஸ்டிரியா நாட்டின் தலைமைப் பட்டினமான வியன்னாவில் ஜர்மன் சக்கரவர்த்தியும் ருஷ்ய சக்கரவர்த்தியும் ஆஸ்டிரியச் சக்கரவர்த்தியைக் காண வருவதாக ஏற்பாடாயிருந்தது. 'இம் மூவரும் பேசப்போகிற விஷயத்தை யாராவது எனக்கு வெளியிடுவாராகில் அவருக்கு எவ்வளவு ஆயிரம் டாலர் கேட்டாலும் கொடுக்கத்தயார்.' என்று அமெரிக்கப் பத்திரிகையாளன் கூறுகிறான். (ஒற்றன்)*

*

'நான் மாட்சிமை தங்கிய முதல்வரை எனக்காகக் காத்திருக்க வைக்க முடியாது. நான் உடனே சென்றாக வேண்டும். ஆனால், உங்களுடைய பழம்பெரும் நாடு இப்போதைக்கு இந்தச் சிக்கலிலிருந்து விடுபடப்போவதில்லை என்பது மட்டும் உண்மை' என்று கூறிவிட்டு அமெரிக்கப் பத்திரிகையாளன் டோர்வன் உடனே அவசரமாகப் புறப்பட்டுப் போய்விடுகிறான். டோர்வன் சென்றதும், இங்கிலாந்தின் ஒற்றனான பெல்லாமி அங்கேயே உட்கார்ந்து, சில கடிதங்களை எழுத ஆரம்பித்தான். கடிதங்களை எழுதி முடித்த நேரத்தில், அவனது அறைக்கதவினை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. உடனேயே ஒருவர் உள்ளே நுழைகிறார். 'லூயிஸ்! நான் எவ்வளவு பெரிய அதிர்ஷ்டக்காரன்' என்று உள்ளே நுழைந்த அந்த அழகிய பெண்மணியின் கைகளைப் பற்றிக்கொண்டான். லூயிஸ் வியன்னாவின் கவர்ச்சி மிக பிரபல்ய பாடகி. 'என் பாடலில் மயங்கிக் கிடக்கும் இந்த ஆஸ்திரியப் பெருங்குடிப் பிரதானிகளை நான் வெறுக்கிறேன். அவர்கள் வழங்கும் வைரங்களை நான் எடுத்துக்கொண்டு, அவர்கள் அனுப்பும் செய்திகளை கிழித்தெறிந்து விடுகிறேன். என்னுடைய கோரஸில் பாடிக்கொண்டிருக்கும் பெண்களுக்கு அந்த ஆபரணங்களைக் கொடுத்துவிடுகிறேன். அல்லது, ஆஸ்திரியாவிற்கு எதிராகப் போராடுவதற்காக, எனது அன்னை பூமியான செர்பிய தேசத்திற்கு ஆயுதங்களைத் திரட்டுவதற்காக என் பணத்தை அனுப்பிவைக்கிறேன். இனிமேல், இந்த நாட்டில் நான் ஒருபோதும் பாடப்போவதில்லை. இன்றிரவோ அல்லது நாளையோ நான் இங்கிலாந்திற்குப் புறப்பட்டுப் போகவிருக்கிறேன்' என்கிறாள் லூயிஸ் ' (havoc, Chapter 1, Crowned heads meet))

*இராபின்ஸன், ஆங்கிலேயே ஒற்றனிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே சென்றான். பின் வெளியே புறப்படுவதற்காக உடைகளை மாற்றிக்கொண்டிருந்தான். அப்பொழுது வாசற்படியில் ஒரு பெரிய மோட்டார்வண்டி வந்து நின்றது. அதினின்றும் ஒரு அழகிய பெண் ஒருத்தி இறங்கி வருகிறாள். வந்தவளை எதிர்கொண்டு அழைத்துவரத் தன்னிடத்தை விட்டு எழுந்துபோய் 'ஆன்னி வாருங்கள். என்ன விசேஷம்!; என்று கேட்டான். 'எங்களுக்கும் ஆஸ்டிரியருக்கும் விரோதம் நாளுக்குநாள் விருத்தியாகிக் கொண்டிருக்கிறது. நான் இந்த வியன்னா நகரத்தில் வெகுநாளாய் இசைபாடிச் சம்பாதித்து வந்த தொகையில் பெரும்பாகத்தை யுத்ததளவாடங்கள் சேகரிக்கும்படியாக எங்கள் நாட்டிற்கு அனுப்பிவந்திருக்கிறேன். இவ்வூரிலுள்ள எவ்வளவோ பிரபுக்கள் என் காலில் வந்து விழுகிறார்கள். நான் அவர்களை லட்சியம் செய்கிறதில்லை. நான் இனி வியன்னாவில் பாடுந்தொழிலை வைத்துக் கொள்வதாகவே உத்தேசமில்லை. நான் அவர்களை வெறுக்கிறேன். என் தேசத்து நண்பர்களான ஆங்கிலேயருடன் போய்ச் சேரப்போகிறேன்' என்று ஆன்னி கூறுகிறாள். (ஒற்றன், பக் 32, 33)*

*

முதல்வர்( Chancellor), மூன்று பேரரசர்களும் கூடிப்பேசிய அனைத்து விஷயங்களையும், தானே கைப்பட எழுதிய பிரதியை எடுத்து, அமெரிக்கப்பத்திரிகையாளர் டோவர்ட் வசம் கொடுக்கிறார். அந்த ரகசியப் பிரதி நீண்ட உறைக்குள் இடப்பட்டு, இரு முனைகளிலும் கறுத்த அரக்கு மெழுகுச் சீலிடப்பட்டு, இரண்டு புலிகள் எதிரெதிரே நோக்கியவண்ணம் மரபுவழிப் படைக்கலச் சின்ன முத்திரையிடப்பட்டிருந்தது. 'அமெரிக்கா பெருந்தேசம், ஞானம் கொண்ட நாடு. அவர்கள் யதார்த்த உண்மையை அறியும்போது, ஐரோப்பா தம்மிடமிருந்து வெகுதொலைவில் உள்ளது என்பதனையும், அங்கு நிகழும் விவகாரங்களுக்கும் தங்களுக்கும் எந்த அக்கறையுமில்லை என்பதனை நினைவிற் கொள்வர்' என்று முதன்மந்திரி டோவர்ட்டிடம் கூறுகிறார். அந்த ரகசிய ஆவணத்தை டோவர்டிடம் ஒப்படைத்து, 'இந்த ஆவணம் உன்வசம் உள்ளது என்று வெளியுலகத்திற்குத் தெரியவேண்டியதில்லை. இது எனக்கும் உனக்கும் இடைப்பட்ட விவகாரம்' என்கிறார். அவர் கைகளைக் குலுக்கிக் கொண்டு உடனடியாக அந்த இடத்தை விட்டு டோவர்ட் வெளியேற நினைக்கிறான். அவர் கைகளைப் பற்றிக் குலுக்கியபோது, அவரின் கைகள் கனன்று எரிந்து கொண்டிருக்கும் கரித்துண்டுகளைப் போல அவ்வளவு உஷ்ணமாயிருந்தது. நான் அங்கிருந்து வெளியேறும்போது, யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. அப்போது அவர் வெறியாட்டம் ஆடத் தொடங்கியிருந்தார். தனது இருக்கையை உதைத்துத் தள்ளினார். தாள் பறக்காமல் வைக்கப்படும் பளுவான பொருளை ஜன்னலை நோக்கி வீசி எறிந்தார்.என்னவெல்லாமோ பிதற்ற ஆரம்பித்தார். அவற்றை விளங்கிக்கொள்ள முடியவில்லை. மெதுவாகக்கதவைத் திறந்து கொண்டு டோர்வர்ட் வெளியில் வந்து விட்டான். அப்படியே முதல்வரின் ஆவணத்தோடு பெலாமி இருந்த அறைக்கு நேரே வந்துவிட்டான். (Havoc, Chapter II, Arthur Doward's 'Scoop')

*'சதியாலோசனை முடிந்ததும் முதன்மந்திரி அப்பத்திரங்களை எடுத்து ஒரு பையில் போட்டு முத்திரையிட்டுத் தன் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு தனது இடத்திற்கு வந்து உட்கார்ந்து கொண்டிருந்தார். நான் அங்கே போனதும் அவர் என்னை வெகு மரியாதையுடன் வரவேற்றார். என்னைத் தன்*

*அருகில் வைத்துக்கொண்டு 'நமது நாட்டிற்கும் உமது நாட்டிற்கும் இனி நேசம் விருத்தியாகும் என்பதில் தடையேயில்லை. இந்த நல்ல செய்தியை உமது நாட்டாருக்குத் தெரிவிக்கவும். நீர் அமெரிக்கனாகவிருக்கிற படியால்தான் உம்மை உள்ளே வரவழைத்துப் பேசுகிறேன். மற்றெவரும் இங்கே வரக்கூடாது. இன்று காலை முதல் இதுவரையில் சக்ரவர்த்திகளின் பேச்சு வார்த்தைகளை என் கையாலேயே எழுதி வந்தேன். எனக்கு வேலை அதிகமாயிருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கையிலேயே வழக்கமாயுள்ள மயக்கம் வந்துவிட்டது. ஸ்தம்பித்தவராய் நாற்காலியில் சாய்ந்தார். சுற்றிலும் பார்த்தேன். தெய்வச் செயலால் ஒருவருங் காணப்படவில்லை. உடனே அவர் பையிலிருந்த பத்திரங்களை மெல்ல எடுத்துக்கொண்டு சரேலென்று வந்துவிட்டேன். அவர் மயக்கம் நீங்கி ஞாபகம் வந்துவிட்டால் இந்தப்பத்திரங்களைப்பற்றித் தேடாமலிரார். தேடினால் என் பேரில்தான் சந்தேகமுண்டாகும். பிறகு என் உயிருக்கே அபாயமுண்டாகும். ஆகவே, நான் வெளியே போய் ஓரிடத்தில் ஒளிந்து கொள்ளப்போகிறேன். இரவில் லண்டனுக்குப் புறப்படும் வண்டியில் கிளம்புவேன். (ஒற்றன், பக் 35,36)*

*

'நாங்கள் இப்போது எங்கே நிற்கிறோம்? என்று தூக்கக் கலக்கத்தில் பெலாமி ரயில்வே சேவகனிடம் கேட்கிறான். 'அடுத்து முனிச் ஸ்டேசன் வருகிறது. இரவில் நமது ரயில் ஓரிடத்தில் தாமதித்து நிற்கவேண்டியதாயிற்று என்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள்', 'நான் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தேன். எனக்கு எதுவுமே கேட்கவில்லை.' என்று பெலாமி கூறினான். 'ஒரு விபத்து நடந்து விட்டது. வியன்னாவிலிருந்து ரயில் ஏறிய ஓர் அமெரிக்கக் கனவான் இரவு முழுவதும் விஸ்கி குடித்தவண்ணமே பயணம் செய்து கொண்டிருந்தார். ஒரு சுரங்கத்தைக்கடந்து போகும் போது அவர் வெளியில் பாய்ந்து இறந்துபோனார். (Havoc, Chapter IV, The night train from Vienna)

*'இரவில் சுமார் 2.30 மணியிருக்கலாம். அச்சமயத்தில் இராபர்ட்ஸ் திடீரென எழுந்து கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.தன்னருகிலிருந்த மின்சார மணியையடித்ததும் ஒரு சேவகன் எதிரில் வந்து நின்றான்.*

*இராபட்ஸ்: இப்பொழுது வரப்போகும் ஸ்டேஷன் எது?*

*சேவகன்: மூனிச் அய்யா.*

*இராபர்ட்ஸ்: வண்டி மெதுவாகப்போகிறது. வழக்கப்படி 1.30 மணிக்கு மூனிச் போய்ச் சேரவேண்டாமா? ஏன் இவ்வளவு நேரம்?*

*சேவகன்: நீங்கள் தூங்கி விட்டீர்கள் போலும். சுமார் இரண்டு ஸ்டேஷன்களுக்கு முன்னர் வண்டியினின்றும் ஒருவன் கீழே விழுந்து இறந்துவிட்டான். அவனை எடுத்து அடுத்த ஸ்டேஷனிற்குக் கொண்டு சேர்ப்பதற்கு 1மணி நேரம் ஆயிற்று.*

*இராபர்ட்ஸ்: விழுந்தவன் யார்? விவரம் ஒன்றும் தெரியவில்லையா?*
*ஏன் விழுந்தான்? காரணம் தெரியவில்லையா?*

*சேவகன்: யாரோ அமெரிக்கன் என்று சொல்லிக்கொண்டார்கள். அவன் சட்டைப்பையிலிருந்து சிறு கடிதங்களைக் கொண்டு அவன் பெயர் இராபின்சன் என்று தெரியவந்தது. லண்டன் நகருக்குப்போக சீட்டு வைத்துக்கொண்டிருந்தானாம்.வேறு விவரம் தெரியவில்லை. (ஒற்றன், பக். 45,46)*

*

'உன்னிடம் இருக்கும் பத்திரத்திற்காக இருபதாயிரம் பவுண்டுகள் தருவதாக இங்கிலாந்து ஒற்றன் கூறுகிறான். நண்பனே! யோசித்துப்பார். வாழ்க்கையைப் புதிதாக ஆரம்பிப்பதற்கு இது நல்ல ஆரம்பமில்லையா? நான் லண்டன் போனதும், டோவர் வீதியில் 15-ம் இலக்கத் தொடர்மாடியில் தங்கியிருப்பேன். ஆஸ்டிரியன் தூதரகத்திற்கு உன்னிடமுள்ள பத்திரத்தைக் கொண்டுபோய்க் கொடுக்காமல், என்னிடம் கொண்டு வந்து தந்தால், உனக்கு இருபதாயிரம் பவுண்டுகள் கிடைக்கும்' (Havoc, Chapter VI, Von Behrling is tempted)

*ஆன்னி: உன்னிடம் இப்பொழுது இருக்கும் பத்திரங்களை இங்கிலீஷ் ஒற்றனான இராபர்ட்ஸினிடம் கொடுத்துவிட்டு 25,000 பவுன் பெற்று அமெரிக்காவிற்குப்போய்விடுவது என்ற எண்ணத்துடன் அமெரிக்கன் எடுத்து வந்தான். அப்பத்திரங்கள் உன்னிடமிருப்பின் அவனிடமிருந்து 25,000 பவுன் வாங்கித்தருகிறேன். நீ இதற்குச் சம்மதித்தால் பணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன். (ஒற்றன், பக்.55)*

லெவெரிக் அன் மொரிசன் (Leveric and Morrison) நிறுவனத்தின் அலுவலகத்தில் ஒரு மேசையில் எதிரெதிராக அமர்ந்த வண்ணம், அந்நிறுவனத்தின் இரண்டு பங்காளிகள், முறிந்து போகும் நிலையிலுள்ள தங்கள் தொழில் நிலைமையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மொரிசனால் அந்த நிறுவனத்திற்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டு, தொழிலைக் கொண்டு நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 'மீதி இருக்கின்ற பணத்தில், 250 பவுண்டுகள் உனக்குத் தருகிறேன். தென் ஆபிரிக்காவிற்குச் செல்ல முயற்சி செய்' என்று கூறிக்கொண்டு, லெவரிக் இருநூற்று ஐம்பது பவுண்டுகளுக்கான தாள்களை எண்ணி, மொரிசனிடம் கொடுக்கிறான். (Havoc, Chapter VIII, The hand of misfortune)

*பிற்பகல் மணி 3 இருக்கலாம். அச்சமயத்தில் 'எவ்லினும் ஜோன்ஸ¨ம்' என்று சொல்லப்பட்ட கடையிலுள்ள முதலாளிகளின் அறையில் எவ்லின் என்பவரும் ஜோன்ஸ் என்பவரும் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். ஜோன்ஸ் எவ்லின் என்பவரைப்பார்த்து, 'எவ்லின் நீ செய்த புத்தியீனமான காரியத்தால் தொழிலே முறிந்துபோகுமென்று தோன்றுகிறது. நான் உனக்குக் கொஞ்சம் பணம் தருகிறேன். எங்கேயாவது ஓடிப்பிழைத்துக்கொள். ஆப்ரிக்கா போன்ற இடங்களுக்கு போய்விடு' என்று சொன்னான் ஜோன்ஸ் கணக்கு முடித்து விடுதலைப் பத்திரத்தை எவ்லினிடமிருந்து பெற்றுக்கொண்டு, அவனிடம் 300 பவுன் பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டான். (ஒற்றன், பக் 61,62)*

'லூயிஸ், இன்றைய செய்திகளைப் பார்க்கையில், சமாதானம் என்பது உறுதியாகிவிட்டது என்று தெரிகிறது. இதனை அடைவதற்கு என்னவெல்லாம் நடந்தது என்று உனது தேசத்தவர்கள் அறிவார்களானால்,அடுத்தமாதம் நாங்கள் அங்கே செல்லும்போது, அவர்கள் எங்களுக்கு ராஜமரியாதை தருவார்கள்' என்று ஆங்கிலேய ஒற்றன் பெல்லாமி, சர்பிய நாட்டின் பிரபல பாடகி லூயிஸை நோக்கிக்கூறுகிறான். 'நாங்கள்

அங்கு போகவேண்டும் என்று நீங்கள் உண்மையாகவே சொல்கிறீர்களா? 'அது மட்டுமல்ல, தள்ளித்தள்ளிப் போய் விட்ட எங்களின் தேன்நிலவை அங்கேதான் அனுபவிக்கப் போகிறோம். பல ஆண்டுகளாக நான் பெல்கிறேடிற்குச் (செர்பிய நாட்டின் தலைநகர்) செல்லவில்லை. நீ உங்கள் நாட்டு மக்களைக் காண விரும்புவாய் என்பதை நான் அறிவேன்.' என்கிறான் பெல்லாமி. 'நான் கனவிலும் காணாத மகிழ்ச்சிச் செய்தி இது. வியன்னாவைக் கடந்து போகும்போது, எங்களுக்கு அந்தப் பயணம் பாதுகாப்பாக இருக்கும் என்று நினைக்கிறீர்களா?' என்று கேட்கிறாள் லூயிஸ். பெல்லாமி இதைகேட்டுச் சிரித்தான். 'லூயிஸ், வேட்டைநாயின் சின்னத்தைச் சங்கிலிக்கோர்வையில் மாட்டிக்கொண்டு, வெளிநாடுகளில் வெறுக்கத்தக்கவனாகத் திரிந்து கொண்டிருந்த டேவிட் பெல்லாமி என்றா என்னை நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நான் டென்செஸ்டர் மாகாணத்தின் பிரபு ஆவேன். பிரித்தானியாவின் உயர்குடிக்கோமகன் தனது தேன்நிலவுக்காகப் போய்க்கொண்டிருக்கிறார். இந்தப்பட்டத்தை நீ விரும்புவாய் என்று நினைக்கிறேன்.' என்கிறான் பெல்லாமி. 'நான் அதற்குப் பழக்கப்பட்டதும், நான் அதனைக் கட்டாயம் விரும்பி மகிழ்வேன்.' என்கிறாள் லூயிஸ். 'ஆங்கிலக் கோமகள் என்பது எவ்வளவு பெருமிதமானது!' என்கிறாள் லூயிஸ். 'பிரியாவிடை வைபவம்' என்னும் கடைசி அத்தியாயம், ஆங்கிலேய ஒற்றனும், செர்பியப் பாடகியுமான லூயிஸும் பெல்கிறேடிற்குத் தேன்நிலவுக்குப் போவதாக முடிகிறது.

நடேசய்யருக்கு இப்படி மூல நாவல் முடிவதில் உவப்பில்லை போலும்! ஒரு அவுன்ஸ் தேசபக்தியைத் தனது தழுவல் நாவலில் சேர்த்து மகிழ்கிறார் நடேசய்யர். 'இச்சண்டையில் தேச ஊழியம் செய்வதற்காக இரண்டு தம்பதிகளும் காயம்பட்ட யுத்தவீரர்களுக்கு வைத்தியம் செய்யும் தொழிலை மேற் ஒவ்வொரு நாட்டாருக்கும் இருக்கவேண்டியது அவசியம்.' என்று சுபமங்களம் பாடிக் கதையை முடிக்கிறார் நடேசய்யர்.

தேன்நிலவுக்குப் போகும் பிரித்தானிய உயர்குடிக் கோமான்களை, காயம் பட்ட யுத்த வீரர்களுக்கு வைத்தியம் பார்க்கப் போர்முனைக்குப் போவதாகக் கடைசியில் எதிர்பாராத திருப்பம் தந்து முடித்திருப்பதை மூல நூலாசிரியர் ஒப்பன்ஹைம் அறிந்திருந்தால், திகைத்துப்போயிருப்பார். வெறும் ஆங்கிலத் தழுவல் நாவலை, முதலாம் உலகப்போரைப் பின்புலமாகக் கொண்ட தமிழின் முதல் நாவல் என்று கூறும் முன்னட்டை ஜிகினாக்கள் கழன்று விழுவதைத் தவிர்க்கமுடிவதில்லைத்தான்.

**அடிக்குறிப்புகள்:**

[1] ஆ.இரா.வேங்கடாசலபதி (2002) நாவலும் வாசிப்பும், காலச்சுவடு, நாகர்கோவில்.

[2] Kanakaraj,S.(2018) The Rise of Detective fiction in Tamil, Indian literature, Vol 62, no 5 (307) (September/October)

[3] Asher, R.E.(1969) The Tamil Renaissance and the Beginnings of the Tamil Novel, Journal of the Royal Asiatic Society of Great Britain and Ireland, No 1.

[4] பண்டித ச.ம.நடேச சாஸ்திரி. (1922) தீனதயாளு, சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

[5] சுப்ரமண்யம், க.நா.(1957) முதல் ஐந்து தமிழ் நாவல்கள், சென்னை

[6] Venkatachalapathy, A.R.(2012) The Province of the Book-Scholars,Scribes, and Scribblers in colonial Tamilnadu, Permanent Black, page 80.)

[7] சீதாலட்சுமி, வே.(1985) தமிழ் நாவல்கள்- அகரவரிசை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

[8] செல்வராஜா, என்.(2020) ஈழத்தில் தமிழ் நாவலியல்- ஓர் ஆய்வுக்கையேடு, ஐரோப்பிய தமிழ் ஆவணக் காப்பகமும் ஆய்வகமும், லண்டன்.

[9] துரைசாமி ஐயங்கார்,வடுவூர் K. 'திவான் லொடபட சிங் பகதூர்' நாவல், Project Madurai,மதுரை, தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம் )

[10] வேங்கடாசலபதி, ஆ.இரா.(2002) நாவலும் வாசிப்பும், காலச்சுவடு, நாகர்கோவில்.

[11] David French. (1978) Spy fever in Britain, 1900-1915, The Historical Journal,21,2(1978)

[12] Ailise Bulfin and Harry Wood.(2020) Introduction: William le Queux, Master of Mis-information, Critical Survey, Vol 32, No 1/2, Spring/Summer 2020.

[13] மஹாதேவப்பிள்ளை, வி.டி.(1914) எல்லாள் அல்லது நல்ல மனைவியே நல்ல பொருள், ஆங்கிலம்: ஹுஸோ பைண்டத் எ ஒய்ப், வில்லியம் லேக்வா,விவேகானந்தா பிரஸ், சென்னை.

[14] Leonard Marcel Ares. (2016) Under Fire: A call for peace from the trenches, Leornard Marcel Ares, International Socialism, issue 151)

[15] கைலாசபதி.க.(2017) தமிழ் நாவல் இலக்கியம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில்.

[16] Oppenheim,E.Phillips. (1911) Havoc, Boston, Little, Brown & Co, Boston.

[17] Harvie Christopher. (1915) The Center of Things: Political Fiction in Britain from Disraeli to the present.

[18] பாரதி, சுப்பிரமணிய. (1912) பாஞ்சாலி சபதம், வித்தியாபிவர்த்தினி அச்சகம், புதுச்சேரி.



nithiyananthan.m@thaiveedu.com




கடந்த இதழ்களில் ஒரு நூலின் வெளியீட்டுக்கான அடிப்படைத் தகவல்களையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் உதாரண விளக்கங்களுடன் குறிப்பிட்டு வந்திருந்தேன். அடுத்ததாக, ஒரு நூலுக்கான பக்கங்களைக் குறிப்பிடும் பாரம்பரியம் எவ்வாறு காலக்கிரமத்தில் பரிமாணம் பெற்றது என்றும், பிற்காலத்தில் நவீன அச்சக / வடிவமைப்புத்துறையின் மாற்றங்களை உள்வாங்கி பக்கங்களுக்கு எண்ணிடப்படும் முறைமை எவ்வாறு மாற்றங்களை உள்வாங்கிக்கொண்டது என்பதைப் பற்றியும் இவ்விதழில் பார்ப்போம்.

நூலொன்றின் பக்கங்களுக்கு எண்ணிடல் என்பது நூலியல் மரபுமுறையில் ஆரம்பம் தொட்டே இருந்து வந்துள்ளது. எழுத்தாணி கொண்டெழுதிய ஏடுகளின் பக்கங்கள் மாறாமலிருக்க ஆரம்ப காலத்தில் இலக்கமிடப்பட்டன. பின்னர் அச்சுவாகனமேறும் காலம் தோன்றிய வேளையில் அது ஒரு நூலியல் மரபாகத் தொடர்ந்து வந்தது. மேற்குலகப் படைப்பிலக்கியச் சூழலில் பக்க எண்ணிடல் ரோமன் இலக்கம் (i, ii, iii, iv, v, vi, vii), அரபிலக்கம் (1,2,3,4,5) என்ற இருவகை இலக்கமுறைகளே பயன்படுத்தப்பட்டன.
(படம் 11.1-ஐ பார்ர்கவும்)

தமிழ் பதிப்புலகச் சூழலில் அக்காலத்தில் வழக்கிலிருந்த தமிழ் இலக்கங்கள் (க,உ,) ரோமன் இலக்கப் பயன்பாட்டிற்கு மாற்றாக தமிழகத்திலும், சமகாலத்தில் இலங்கையிலும் உள்வாங்கப்பட்டன. ஆரம்பகால நூல்களின் பக்கங்கள் அரபு இலக்கங்களுக்குப் பதிலாகத் தமிழ் இலக்கங்களையே கொண்டிருந்திருக்கின்றன என்பதை ஆறுமுகநாவலர் காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் அச்சிடப்பட்ட தமிழ் நூல்களின் வழியாக அறிய முடிகின்றது. அக்காலங்களில் வெளியான பல நூல்கள் முற்றிலும் தமிழ் இலக்கங்களையே பிரதான பக்க இலக்கங்களாகவும் கொண்டிருந்தன. ஐரோப்பியரின் வருகையினால் ஆரம்பப் பக்கங்களுக்கு ரோமன் இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. )
(படம் 11.2-ஐ பார்ர்கவும்)

அச்சிடப்படும் ஒரு நூலில் ஏன் ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கமுறைகள் பயன்படுத்தப்படவேண்டும் என்று நீங்கள் சிந்திக்கக்கூடும். பொதுவாக ஒரு நூல் அதன் உள்ளடக்க அடிப்படையில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுவது வழமை.

ROMAN NUMERALS

| | | | |
|---|---|---|---|
| 1 | I | 20 | XX |
| 2 | II | 30 | XXX |
| 3 | III | 40 | XL |
| 4 | IV | 50 | L |
| 5 | V | 60 | LX |
| 6 | VI | 70 | LXX |
| 7 | VII | 80 | LXXX |
| 8 | VIII | 90 | XC |
| 9 | IX | 100 | C |
| 10 | X | 500 | D |

படம் 11.1

நூலின் முதலாவது பகுதி, நூலின் பிரதான விடயதானத்துக்கு

| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 100 | 1000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ௦ | ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௯ | ௰ | ௱ | ௲ |

| day | month | year | debit | credit | as above | rupee | numeral |
|---|---|---|---|---|---|---|---|
| ௳ | ௴ | ௵ | ௶ | ௷ | ௸ | ௹ | ௺ |

படம் 11.2

முன்னதாக அமைவதாகும். இதனை Preliminary Pages என்று ஆங்கிலத்தில் அழைப்போம். நூலின் உபதலைப்புப் பக்கம் (Half Title Page), உபதலைப்புப் பக்கத்தின் மறுபக்கம், நூற்தலைப்புப் பக்கம் அல்லது தலையங்கப் பக்கம், வேர்சோ உள்ளிட்ட வேறும் பல பக்கங்களை உள்ளடக்கிய தாகும். நூலின் பெயர், ஆசிரியர், பதிப்பாசிரியர் போன்றோர் பற்றியும் அதன் வருகை, நோக்கம் என்பன பற்றியுமான ஆரம்பகட்டத் தகவல்களைக் கொண்ட ஆரம்பப் பக்கங்களுடன் நூலின் உருவாக்கத்துக்கான தேவை, நூல் பற்றியும் நூலாசிரியர் பற்றியுமான பிற பிரமுகர்களின் கணிப்பு, நூலின் உள்ளடக்கம் என்பன இந்தப் பகுதியில் அடங்கும்.

இரண்டாவது பகுதி, நூலின் பிரதான விடயதானமாகும். இதுவே நூலின் அதிக பக்கங்களை உள்வாங்கியிருக்கும் பிரதான பகுதியாகும். இந்த விடயதானங்கள் அத்தியாயங்களாக / இயல்களாகப் படைப்பாளியினால் வகுத்துத் தரப்பட்டிருக்கும்.

மூன்றாவது பகுதி, நூலின் பிரதான விடயதானத்துக்கு உதவுவதும், அதற்கான ஆதாரக் குறிப்புகளும், நூலில் முழுமையாகக் குறிப்பிடப்படாத பிற பட்டியல்கள், பின்னிணைப்புக்கள், நூலை ஆக்குவதற்குப் பயன்படுத்திய பிற நூல்கள் ஆவணங்களின் பட்டியல்கள், சுட்டிகள், பிழை திருத்தங்கள் என்பனவற்றின் தொகுப்பாகும்.

இவை மூன்றையும் தனித்தனியாகப் பிரித்துக் காட்டுவதற்காகவே வேறுபட்ட பக்க எண்ணிக்கைகள் நூலில் வழங்கப்பட்டுள்ளன. தலைப்புப் பக்கத்தில் பக்க எண் ‘ஒன்று’ என்று குறிப்பிடுவது நூலியல் மரபல்லவாயினும் அது நூலின் முதலாவது பக்கமாகவே கணிக்கப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட நூலின் முதலாம் பகுதியில் உள்ளடக்கப்படும் தலைப்புப் பக்கம் தொடங்கி அதன் வேர்சோ, பதிப்புரை, வெளியீட்டுரை மற்றும் பல்வேறு அணிந்துரைகள், வாழ்த்துரைகளுடன் பொருளடக்கம் ஈறாகப் பக்க ஒழுங்கை ரோமன் இலக்கத்தில் குறிப்பிடுவது வழமை. அதற்கு முன்னர் இப்பகுதியை வேறுபடுத்திக் குறிப்பிடுவதற்காகத் தமிழ் இலக்கங்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

அறிமுகம் உள்ளிட்ட நூலின் பிரதான விடயதானம் (முதலாம் அத்தியாயம் அல்லது முதலாவது இயல்) தொடங்கும் பக்கத்திலிருந்து அரபு எழுத்தில் பக்கங்கள் ஆரம்பிக்கப்படும். மூன்றாவது பிரிவான பின்னிணைப்புப் பகுதி இலக்கமிடப்படாமலோ, மீண்டும் ரோமன் எழுத்துகளுடன் தொடங்கியோ, பிரதான விடயதானத்தின் பக்க எண்ணிக்கையைத் தொடர்ந்தோ எண்ணிடப்படுவதுண்டு.

இன்று, ஈழத்துத் தமிழ் நூல்களைப் பொறுத்தவரையில் இரண்டு பிரிவுகளையே பிரதானமாகக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

- நூலின் ஆரம்பப் பக்கங்கள்
- பிரதான விடயதானமும் பின்னிணைப்புகளும் கொண்ட பக்கங்கள்

என்பனவே அவை.

அண்மைக்காலத்தில் இந்த பக்க ஒழுங்கமைப்பினை எளிதாக்கும் வகையில் இலங்கைத் தேசிய நூலகம் ஒரு புதிய விதிமுறையை அறிமுகப்படுத்தி வருகின்றது. அதன்படி முதலாம் பக்கத்திலிருந்து நூல் முழுவதும் அரபிலக்கங்களையே பயன்படுத்தும் நடவடிக்கையாகும். இலங்கை தேசிய நூலக விதிகளின்படி, முதல் அத்தியாயம் வலது பக்கத்திலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டும். சகல பக்கங்களையும் சரியாகவும் தெளிவாகவும் பக்கமிட வேண்டும். இலங்கையின் சில முக்கிய பதிப்பகங்கள் ஆரம்பப் பக்கத்தில் இலக்கமெதுவும் குறிப்பிடாமல் இரண்டாவது (இரண்டாவது பிரதான பகுதியைத் தொடங்கும் போது இடைநடுவில் பக்க இலக்கங்களை அரபிலக்கத்தில் ஆரம்பித்துத் தொடர்கின்றன. உதாரணமாக, ஒரு நூலின் எட்டுப் பக்கங்களை கொண்ட முதலாவது பகுதியில் தலைப்புப் பக்கத்திலிருந்து தொடர்ந்து எட்டுப் பக்கங்களையும் எண்ணிடாமல், இரண்டாவது பகுதியான பிரதான பகுதி தொடங்கும் இடத்தில் அப்பக்கத்துக்கு 9 என எண்ணிட்டு மூன்றாவது பகுதியின் இறுதிவரை அரபிலக்கத்திலேயே பக்கமிடலைத் தொடர்கிறார்கள்.

## நூலின் பக்கங்களில் காணப்படும் 'இயங்கும் தலைப்பு' (Running Title):

ஒரு நூலின் இரண்டாம் பகுதியில் சகல பக்கங்களிலும் மேல் பகுதியில் இயங்கும் தலைப்பு காணப்படுவது வழக்கம். சகல பக்கங்களிலும் முதலாவது வரியில் இது இடம்பெறும். இதனை ஆங்கிலத்தில் 'ரண்ணிங் டைட்டில்' என்பர். பொது வாக நூலின் இரட்டை எண்கொண்ட பக்கங்களில் நூலின் தலைப்பும், ஒற்றை எண் கொண்ட பக்கங்களில் அத்தியாயத் தலைப்பும் இடம்பெறுவதுண்டு. அத்தியாயத் தலைப்பைக் குறிப்பிடுவதா அல்லது ஆசிரியரின் பெயரைப் பயன்படுத்து வதா என்பதை நூலாசிரியரே தீர்மானிப்பார். ஆசிரியர் பெயரை இயங்கும் தலைப்பில் சேர்க்க விரும்பினால், இரட்டை இலக்கப் பக்கங்களில் நூலாசிரியரின் பெயரும் ஒற்றை இலக்கப் பக்கங்களில் நூலின் பெயரும் இடம்பெறும்.

## ஒரு நூலின் ஆரம்பப் பக்கங்களின் கூறுகள்:

ஒரு நூலின் ஆரம்பப் பக்கங்களின் கூறுகள் எவ்வாறு அமை யவேண்டும் என்று திட்டமிட்ட வரைமுறையொன்று தமிழ்ப் பதிப்புச் சூழலில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இருப்பினும் பொதுமைப்பாடமைந்த ஒரு ஒழுங்கு நிலையை ஆரம்பப் பக் கங்களுக்கு நாம் தயாரித்துக்கொள்ளலாம்.

- தலைப்புப் பக்கம்
- வேர்சோ (இரண்டாம் பக்கம்)
- பதிப்புரை / பதிப்பாசிரியருரை
- வெளியீட்டுரை
- ஆசியுரை
- அணிந்துரை / மதிப்புரை
- ஆசிரியர் உரை / என்னுரை / முகவுரை
- பொருளடக்கம்

மேற்கண்ட ஒழுங்கில் அமைந்த ஆரம்பப் பக்கங்களைத் தொடர்ந்து இரண்டாவது பிரிவு அமைகின்றது. இப்பிரிவின் இறுதியில் பின்னிணைப்புகள் காணப்படலாம். அல்லது பாடப்பரப்பில் பயன்படுத்தப்பட்ட முக்கியமான சொற்களுக் கான சுட்டி (Index) காணப்படலாம். இவற்றைப் பெரும்பாலும் பிரதான பக்கங்களின் நீட்சியாகக் கருதித் தொடர் இலக்கம் வழங்கப்படுவதுமுண்டு. சில பழைய நூல்களில் இவை எண் ணிடப்படாத பக்கங்களாகக் கருதப்படுவதை அவதானிக்க முடிகின்றது. என்னைப் பொறுத்தவரை இவற்றையும் பிரதான பகுதியின் பக்க ஒழுங்கிலேயே அதன் நீட்சியாகக் கருதிப் பக்க எண்களைத் தொடர்வது உசிதமானது.

## நூலில் தகடுகளின் பக்க ஒழுங்கமைப்பு:

அச்சுக்கலையின் ஆரம்பகாலத்தில் வெளிவந்த நூல்களில் தகடுகள் முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருந்தன. அக்கா லத்தில் நூலின் தேவைக்கான படங்கள் தனியானதொரு அச் சியந்திரத்திலேயே புறம்பாக அச்சிடப்பட்டு, நூலின் பிரதான பகுதியில் இடையிடையே பொருத்தமான இடங்களில் அவை சேர்க்கப்பட்டு நூல் மட்டை கட்டப்படுவதால் (Binding), பிர தான நூலுக்கான எண்ணிடப்படும் வேளைகளில் தகடுக ளுக்கு தொடர்ச்சியாக எண்ணிட முடிவதில்லை. இவற்றை தகடுகள் (Plates) என்பார்கள். நூலை அச்சிடப் பயன்படுத் திய நியூஸ்பிரின்ட் அல்லது வெள்ளைத் தாளில் இவை அச் சிடப்படாமல், வழுவழுப்பான தடித்த தாள்களில் அச்சிடப்பட் டிருக்கும். இன்று கணினிப் பதிப்பு யுகத்தில் புகைப்படத் தக வல்களை இணைக்கும் வேளையில இத்தகைய அச்சீட்டுச் சிக்கல்கள் ஏற்படுவதில்லை. அதனால் நவீனகால நூல்களில் தகடுகளைக் காண்பதரிது. காரணம் அச்சாக்கம் செய்யும் முன்னதாக பக்க வடிவமைப்பு நிலையிலேயே அவற்றின் படங்கள் உரிய இடங்களில் பொருத்திக்கொள்ள வாய்ப்புள் ளது. ஆயினும் பழைமை விரும்பிகள் சிலர் இன்றும் புகைப் படங்களைத் தனியாகத் தடித்த வழுவழுப்பான தாள்களில் அச்சிட்டுச் சேர்ப்பதைக் கண்டிருக்கின்றேன். குறிப்பாக சிலர் சிறப்பு மலர்களையும் கும்பாபிஷேக மலர்களையும் வெளியி டும் வேளையில் இப்பழைமையானமுறை இன்றும் கடைப்பி டிக்கப்படுவதுண்டு.

## பக்கங்களை இலக்கமிடல் தொடர்பாக தேசிய நூலகக் கொள்கை:

இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, 'நூலொன்றை ஒழுங்குபடுத்தும் முறை' என்ற தலைப்பில் சிறு கைந்நூல் ஒன்றினை 2016-ல் வெளியிட்டிருந்தது. நூல் ஒன் றின் ஆரம்பப் பக்கங்கள், உள்ளடக்கம், அதைத் தொடர்ந்து வரும் பக்கங்கள் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான தொரு வழிகாட்டியாக அந்நூல் அமைகின்றது.

இந்நூலில் குறிப்பிடப்பட்டிருந்த சில குறிப்புகள் இவ்வத்தியா யத்துக்குப் பொருந்தும் என்பதால் அதன் சாராம்சத்தையும் இங்கு பதிவுசெய்கின்றேன்.

அங்கீகரிக்கப்பட்ட கடதாசியின் அளவிற்கும் அதற்கேற்ப தயாரிக்கப்பட்ட நூலின் அளவிற்கும் பொருத்தமான முறை யில் பாடப் பகுதியை (Text Area) ஒழுங்குபடுத்த வேண்டும். வேறுபட்ட அளவிலான உயரத்திற்கு (Font Sizes) எழுத்து களை கோர்ப்பது நூலின் அழகைக் கெடுத்துவிடுமாகையால் ஒரே அளவு உயரத்தில் எழுத்துகளை ஒழுங்குபடுத்த வேண் டும்.

- பக்கங்களில் வரும் இயங்கும் தலைப்பு (Running Title) வரிக்கும் பாடப் பிரதேசத்திற்கும் இடையில் வேறுபடுத்திக் காட்டும் வகையில் ஒரு வரிக்கான இடைவெளி இருக்க வேண்டும்.
- வரிகளுக்கிடையே ஒரு வரி இடம் மட்டுமே இருக்கவேண் டும் (One line Space).
- வசனங்களுக்கிடையே அரை எழுத்தளவிலான இடை வெளி இருத்தல் வேண்டும்.
- பந்திகளுக்கிடையே இடைவெளி விடத் தேவையில்லை.
- தலைப்பு மற்றும் உபதலைப்புக்கு இடையில் 12 பொயின்ற் அளவிலான இடைவெளி விடப்பட வேண்டியது டன் உப தலைப்புகளுக்குப் பின்னால் 06 பொயின்ற் அள விலான இடைவெளி இருக்கவேண்டும்.
- பாடப்புத்தகங்கள், புனைகதை மற்றும் சிறுகதை நூல்க

ளின் பொருட்டு ஆர்ட் பேப்பர் (Art Paper) உபயோகப் படுத்தக்கூடாது.

- நூலின் பிரதான பகுதியில் அடிக்குறிப்புகள் (Footnotes) கொடுக்கப்படும் பொழுது, அந்தந்தப் பக்கங்களின் கீழ் அல்லது அந்தந்த அத்தியாயங்களின் கீழ் அடிக்குறிப்பு கள் குறிப்பிடப்பட வேண்டும். சகல பக்கங்களினதும் இறு தியில் அடிக்குறிப்புகளைக் கொடுத்தல் மிகவும் பொருத் தமானதாக இருக்கும். அடிக்குறிப்பின் எழுத்தின் அளவா னது பாடப் பகுதிக்கு பயன்படுத்திய எழுத்து வடிவத்தின் அளவை விட (Font Size) சிறியதாக இருக்கவேண்டும். கோடு ஒன்றைக் கீறுவதன் மூலம் அல்லது பக்க உள்ள டக்கத்திற்கும் அடிக்குறிப்புக்கும் இடையில் வரி ஒன்றை விடுவதன் மூலம் உள்ளடக்கத்தையும் அடிக்குறிப்பையும் வேறுபடுத்திக் காட்ட முடியும்.
- அடிக்குறிப்பானது பக்கம் பக்கமாக 1 தொடக்கம் தொடர் இலக்கமிடப்பட வேண்டும். அத்தியாயத்துக்கு அத்தியாய மும் இலக்கமிட முடியும். அத்தியாயங்கள் தோறும் அடிக் குறிப்பின் பொருட்டு தொடர் இலக்கமிடுவது மிகப் பொருத்தமாக இருக்கும். நூலின் முடிவில் நீண்ட அடிக்கு றிப்பு பட்டியலைப் பிரசுரிப்பதால் வாசகரை அசௌகரியத் துக்கு உள்ளாக்கலாம். ஒவ்வொரு அத்தியாய இறுதியி லும் அதற்குரிய அடிக்குறிப்பு பட்டியலை இடுவது வாசக ரின் வாசிப்பு அனுபவத்திற்கு பங்கம் விளைவிக்காது.

## நூல் எண்ணிடப்படுதலின் முக்கியத்துவம்:

முன்னைய காலத்து ஏடுகள் போலல்லாது சமகால நூல்கள் முறையாக மட்டை கட்டப்பட்டு (Binding) விநியோகிக்கப்படு வதால் பக்கங்களை அவற்றில் ஏன் குறிப்பிடவேண்டும் என்று கருதும் ஒரு சிலர் இன்றும் உள்ளனர். அண்மையில் மிக அழ காக வடிவமைக்கப்பட்ட வண்ணப்படங்களுடன் ஒரு கவி தைத் தொகுதியாக இலங்கையில் ஒரு இளங் கவிஞரின் நூலொன்று 2023-ல் வெளிவந்திருந்தது. அழகியலில் அதிக நாட்டம் கொண்டு வண்ணப்படங்களுக்கிடையே சிறு கவிதை களாகப் பொதித்து வெளிவந்திருந்த அந்த அறுபது பக்க நூலில் பக்கங்கள் எதுவுமே எண்ணிடப்பட்டிருக்கவில்லை. பக்க வடிவமைப்பாளரின் கவனயீனத்தால் இத்தவறு ஏற்பட்டி ருக்கலாம். 'குறித்த பக்கத்தில் உள்ள கவிதை' என்று அடை யாளப்படுத்தவாவது எண்ணிடப்படுதல் அவசியம் என்பதைக் கூட புரிந்துகொள்ள முடியாதவராகவா இந்தப் படைப்பா ளியோ பக்க வடிவமைப்பாளரோ இருந்திருப்பார்?

இத்தகைய நிலைமையைப் பரவலாகச் சிறப்பு மலர்களி லேயே அதிகம் காணமுடிகின்றது. கும்பாபிஷேக மலர்கள் மற்றும் வெள்ளிவிழா மலர்களை அச்சிடும் மலர்க் குழுவினர் பக்கங்களை எண்ணிடுவதில் குழப்பமடைவதைக் காணமுடி கின்றது. ஒரு சிறப்பு மலரின் இடையிடையே முழுப்பக்க, அரைப்பக்க விளம்பரங்கள் தலைகாட்டுவதால், அவற்றுக்கு இலக்கமிடுவதா விட்டுவிடுவதா என்ற குழப்பம் அவர்களிடம் காணப்படுவதுண்டு. ஒரு முழுமையான நூல் என்ற வகையில் அனைத்துப் பக்கங்களும் இனம் காணப்படும் வகையில் பக்க இலக்கமிடப்படவேண்டும் என்பதே எழுதாச் சட்டமாகப் பதிப்புலகச் சூழலில் கடைப்பிடிக்கப்படுகின்றது. ஒரு சிறப்பு மலரின் மொத்தப் பக்கங்கள் என்பது அதன் விளம்பரப் பக் கங்களையும் உள்ளடக்கியதாகவே இருக்க வேண்டும். மேலும், சிறப்பு மலர்களில் தனியான உள்ளுடல் அல்லது பிர தான விடயதானம் என்றிருப்பதில்லை. வாழ்த்துரைகள், ஆசி யுரைகள் என்பவற்றுக்கிடையே கட்டுரைகளும் காணப்படுவ தால் தாம் தொகுத்த மலரின் பக்கமிடலின்போது, எதுவரை ரோமன் இலக்கத்தைப் பயன்படுத்துவது அல்லது, எதிலி ருந்து அரபு இலக்கங்களைத் தொடங்குவது என்ற கேள்வி, மலர் வெளியீட்டுக் குழுவினரிடத்தே பொதுவாகவே எழுவ துண்டு. இத்தகைய நிலையில் சிறப்பு மலர்களில் ரோமன் இலக்கங்களையே தவிர்த்து முதலாம் பக்கத்திலிருந்து அர பிலக்கங்களைக் குறிப்பிட்டு அச்சிடலாம். (முதலாம் பக்க மான தலைப்புப் பக்கத்தில் இலக்கத்தை அச்சிடும் வழமை யில்லை).

மலர்களின் இடையே தகடுகள் பயன்படுத்தப்படின் அவை எண்ணிடப்படுவதில்லை. எத்தனை தகடுகள் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதை வேர்சோ பக்கத்தில் குறிப்பிடலாம். இன்று இலங்கையில் வெளிவரும் 99 வீதமான சிறப்பு மலர்க ளில் வேர்சோ பக்கத்தில் விரிவான நூலியல் தகவல்களைக் குறிப்பிடுவதேயில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். இதற்குக் காரணம் மலர்க்குழுவினர் மிகுந்த பிரயத்தனத்து டன் விளம்பரதாரர்களைக் கண்டறிந்து பணத்தைச் சேர்த்து ஒரு மலரை அச்சிடுவதுடன் தமது பணி நிறைவெய்திவிட்டதா கக் கருதுகின்றார்கள். அந்த சிறப்பு மலர் நீண்டகாலம் நிலைத்து நின்று தகவல்களை வழங்கவேண்டும் என்று நினைப்பதில்லை. தமது மலர் இலங்கையின் முக்கிய நூல கங்களில் பட்டியலிடப்பட்டு பாதுகாக்கப்படவேண்டும் என் றும் நினைப்பதில்லை. விழிப்புணர்வும், சுவடிப்படுத்தலில் தீவிர அக்கறையும் சிந்தனையும் கொண்ட சிலரே தாம் தயா ரிக்கும் சிறப்பு மலர்களை அதிக சிரத்தையோடு நூலியல் தக வல்களோடு வெளியிட்டு உரிய நூலகங்களில் வைப்பிலிட் டுப் பாதுகாக்க வழிசெய்திருக்கிறார்கள். காலம் கடந்தும் பேசப்படும் மலர்கள் பல இன்று எமது நூலகங்களில் இவ் வாறு பாதுகாக்கப்படுகின்றன. மீள்பதிப்புகளாகவும் வெளி வந்துள்ளன. (இலங்கைத் தமிழரசுக்கட்சி வெள்ளிவிழா மலர், நாவலர் நூற்றாண்டு விழா மலர்).

பக்கங்களை எண்ணிடுவதன் தற்கால நோக்கம்,

- பொருளடக்கத்தின் வழியாக ஒரு படைப்பாக்கத்தை அடையாளம் கண்டு தேடிப் பார்ப்பதற்கு உதவும்.
- ஒரு நூலின் தொடர் வாசிப்புக்கு வாசகரை வழிநடத்தும்.
- உரிய பந்தியொன்றை அல்லது கட்டுரையொன்றின் தொடர்ச்சியை நூலின் பிறிதொரு பகுதியில் அடையாளப் படுத்துவதற்கும் நூலின் பக்கங்கள் எண்ணிடப்படுவது முக்கியமாகும்.
- புத்தகம் தயாரிப்பு நிலையில் இருக்கையில் பக்கங்களின் அடுக்கொழுங்கினை உறுதிப்படுத்த பக்க எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருத்தல் இன்றியமையாததாகும். அநாவசிய மான பக்க இடமாற்றங்களை தவிர்க்க இது அவசியமாகும்.

இனி வரும் பத்தியில், ஒரு நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் வழங்கும் முறை பற்றி ஆராய்வோம்.

*(இன்னும் வரும்...)*



selvarajah.n@thaiveedu.com

# தேசியத்தினுள் பால்நிலைப்படுத்தப்பட்ட உள்ளார்ந்த ஆற்றுகைகளை அடையாளம் காணல்

- விதுர்ஷா கமலேஸ்வரன் -



தேசியவாதம் ஒரு சமூக, அரசியல் மற்றும் கலாச்சார இயக்கமாகத் தோற்றம்பெறும் போது, அடையாள அரசியல் அதன் அடிப்படைக் கூறாகச் செயற்படுத்தப்படுகின்றது. தென்னாசிய நாடுகளில், பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் காலனித்துவ எதிர்ப்பு போராட்டங்களை வழிநடத்தும் குழுக்களாகத் தேசிய இயக்கங்கள் தோற்றம் பெற்றன. இன, மத, மொழி, பால், சாதிய மற்றும் பல பன்மைத்தவ அடையாளங்களைத் தன்னகத்தே கொண்ட தென்னாசிய நாடுகளுக்கு, ஒரே மொழி, ஒரே இனம், ஒரே தேசம் என்ற ஐரோப்பிய தேசியவாதக் கருத்தியல் பொருந்திப்போகவில்லை. அத்துடன் ஒவ்வொரு இனமும் தத்தமது இனத்துவ அடையாளங்களை முன்னிலைப்படுத்தி இனத்தூய்மையை வலியுறுத்தின. அதன் அடியாக இருமை சமூகத்தை வலியுறுத்தும் ஆணாதிக்க சிந்தனையை மையப்படுத்திய பல இனத் தேசியங்கள் ஒரு நாட்டினுள்ளே தோற்றம்பெற்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் காலனித்துவத்துவ ஆட்சியாளர்களை நாட்டைவிட்டு வெளியேற்றிய பின்னர், பெரும்பாலான நாடுகளில், பெரும்பான்மை ஆதிக்கம் கொண்ட இனம் தம் இனத்துவ அடையாளங்களை முன்நிலைப்படுத்தி ஆட்சியமைத்துக் கொண்டதுடன், தேசத்தைக் கட்டியெழுப்பும் செயன்முறையில் ஈடுபட்டன. இது ஏனைய சிறுபான்மை இனங்களது இருப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்தது. எனவே சிறுபான்மைக்குழுக்களை மையப்படுத்திய இயக்கங்கள் தமது உரிமைகளை உறுதிப்படுத்த தேவைப்பட்ட செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துவந்தன. குறிப்பாக தம்மை ஒரு இனத்துவக் குழுவாக முன்நிலைப்படுத்தி, அதற்கான தனித்துவத்தை, வரலாறுகள், பண்பாடுகள், மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் ஊடாகக் கட்டியெழுப்பின. இச்செயன்முறையில் குறித்த பெருந்தேசிய அரசினுள் தமக்கான புவியியல் எல்லையினை வரித்துக் கொண்டு, தனிநாட்டுக்கோரிக்கையினை முன்வைத்தன.

இச்செயன்முறையில், தேசிய இயக்கங்கள் தம் தேசிய சின்னங்களில் ஒன்றாக உள்ளார்ந்த ரீதியிலான பால்நிலைப்படுத்தப்பட்ட ஆற்றுகைகளை முன்நிறுத்தின. தாயகக் கனவு, தாய்நாட்டுக் கோரிக்கை, தாய் வீடு, ஈழத் தாய், தாய் மண் என்ற அடிப்படையில் சுயாட்சிக்கான கோரிக்கை, தாய்நாட்டுக் கோரிக்கையாக உருவகப்படுத்தப்பட்டது. தாய்மையினைப் புனிதப்படுத்தப்படுத்துவதன் அடியாகப் பெண் உடல், இருமைநிலை கொண்ட ஆணாதிக்க சமூகத்தால் கட்டமைக்கப்பட்ட அனைத்து ஆற்றுகைகளையும் தன் நாளாந்த வாழ்வியலாக ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டது. புனிதமான அந்தப் பெண் உடல் அமைதி, அடக்கம், கற்புடமை என்பவற்றினைத் தாங்கிய அதேவேளை, ஆண் உடல் வீரம், அச்சமின்மை, துணிவு என்பவற்றை கொண்ட வலிமையான பெண்களைப் பாதுகாக்கும் கருவியாக்கப்பட்டது.

குறித்த ஆற்றுகைகள், சமூகத்தின் கலாச்சாரம் மற்றும் நெறிமுறை ஊடாக கற்பனை செய்யப்பட்டு, கட்டமைக்கப்பட்டு, இறுதியில் தேசியத்தின் பிரசைகளிடம் உள்ளார்ந்த பண்பாடாகப் புகுத்தப்பட்டதன் அடியாகப் பழக்கப்படுத்தப்பட்டது. இவ்வாறு தேசிய உருவாக்கத்தில் ஆண், மற்றும் பெண்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பால்நிலைப்படுத்தப்பட்ட ஆற்றுகைள் காணப்பட்டன. அத்துடன் இச்சமூகத்தில் ஆண், பெண் பால்நிலைகளைத் தாண்டிய பால்நிலைகள் கவனத்தில் கொள்ளப்படாததுடன், இரகசியமாக அடக்குமுறைக்குட்படுத்தவும்பட்டன. தேசியத்தின் ஒவ்வொரு பரிமாணத்திலும் வேறு வேறு வகையில் இந்த இருமைநிலைப்படுத்தப்பட்ட பால்நிலை ஆற்றுகைகள் மிகவும் இறுக்கமாகவே பின்பற்றப்பட்டுவருகின்றன. இலங்கையின் உள்நாட்டுத் தமிழ் தேசிய போராட்டச் சூழலில் தோற்றம் பெற்ற அன்னையர் முன்னணி தொடங்கி அரகலைய வரை இடம்பெற்ற ஒவ்வொரு போராட்ட களங்களிலும் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. போர் முனைகளில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக இருந்த போதிலும், போர் முடிவடைந்து பதினாறு வருடமாகியும் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்காகப் போராடும் மக்கள் போராட்டத்தில் பெண்களதும் தாய்மார்களதும் பங்கு எப்போதும் முன்னணி வகிக்கின்றது.

தமது பிள்ளைகளுக்கான நீதி தேடிப் போராடிக்கொண்டிருப்பவர்கள் ஊடகங்களாலும், நிதி நிறுவனங்களாலும் அதிக முக்கியத்துவத்துடன் நோக்கப்படுகின்றனர். குறிப்பாக தன்னார்வல செயற்பாட்டாளர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும், ஊடகங்களும் குறித்த மக்களது போராட்டங்களைத் தொடர்ச்சியாக பேசியும் எழுதியும் ஆவணப்படுத்தியும் அர்த்தம் சேர்த்தும் வருகின்றனர். இதில் பெரும்பாலானவை பெண்

களதும், தாய்மார்களதும் மகள்களதும் கண்ணீராகவே வெளி வருகின்றது. இங்கு கேள்வி என்னவென்றால், ஏன் தாய்மார்கள், ஏன் அன்னையர் முன்னணி, ஏன் தாய்மாரின் கண்ணீர் மட்டும் விடயமாக்கப்படுகின்றது?, இதில் தந்தையர்களது பங்கு எங்குள்ளது? பிள்ளைகளைத் தொலைத்த தந்தையரின் போராட்டங்கள் எங்கே? பிள்ளைகளுக்கான போராட்டம் ஏன் பெற்றோரின் போராட்டமாக முகிழவில்லை?

- வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்களின் தாய்மார், மனைவிமார், சகோதரிகள் மற்றும் மகள்கள் முதலானவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களைப் பற்றிய உண்மையைத் தேடுவதில் தொடர்ந்து ஈடுபட வைப்பது துணிச்சலான நம்பிக்கையே. (டி.பி.எஸ். ஜெயராஜ், தினக்குரல்)
- உறவுகளைத் தேடும் தாய்மாரின் கண்ணீரையும், துயரங்களையும் ஏமாற்றி வெற்றி பெற முடியாது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கண்ணீர் மல்க தெரிவிப்பு (வீரகேசரி, 28 Jun, 2024 )
- இறுதிக் கட்ட யுத்தத்தில் தனது பேத்தியை தொலைத்த 76 வயதான தனலெட்சுமி, இன்றும் அவரை தேடி வருகின்றார். (ரஞ்சன் அருண் பிரசாத், 29 ஆகஸ்ட் 2023)
- தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பிரச்சனைகளுக்கு மத்தியில் நாங்கள் போராட முடியாத நிலையில்,வீடுகளில் இருந்து தாய்மார் அழுது கொண்டு இருக்கிறார்கள். (தமிழ் பக்கம்: Aug, 30 2021)
- இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்கள் தொடர்பில் பல வருடங்களாக அயராது விடை தேடி வரும் இந்த தாய்மார்கள், ஹரீஸ் இலகுவில் தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கையில் உள்ளனர். (வீரகேசரி 24 Oct, 2024)

மேலே குறிப்பிட்டுள்ள விடயங்கள் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரையின் தலைப்புகளின் பகுதிகள் சிலவே. இதனைத் தவிர பெரும்பாலான கட்டுரைகள், ஆவணங்கள், செய்தி மடல்கள், பரிந்துரைகள், தனியார் நிறுவனங்களின் திட்ட முன்மொழிவுகளைப் பார்த்தால் தெரியும், பெண்களை மையப்படுத்திய செயல்வாதங்கள் பெரும்பாலும் பெண் இயலாமையில் அனுதாபம் தேடும் செயல்களையே செய்கின்றன. இதில் அனைத்து செயல்வாதங்களையும் இணைத்திட முடியாது, உள்ளார்ந்த சமூகத்தை, மக்களை மையப்படுத்திய செயல்வாதங்களும், செயல்வாதிகளும் எம் மத்தியில் உள்ளனர். அத்துடன் மேலே குறிப்பிட்ட பத்திரிகையாளர்கள் கூட சமூக மட்டத்தில் வேலைசெய்யும்போது தாம் உணர்ந்த வலியினால் உருவான ஆதங்கங்களை வெளிப்படுத்தியவர்களாக இருக்க முடியும், அத்துடன் அவர்களும் தினமும் அதே இருமை சமூகத்தின் பிடிக்குள் உள்ளார்ந்த ஆற்றுகைகளை ஆற்றுபவர்களாக இருக்கின்றபட்சத்தில் பகுத்தாய்ந்து எழுதுவதில் உள்ள சிக்கல்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனாலும் ஒரு சமூக பத்திரிக்கையாளர் என்ற அடிப்படையில் இவற்றை அடையாளப்படுத்தி பகுத்தாய்வதற்கான கடமைப்பாடும் அவர்களிடம் இருப்பதனை மறுக்க முடியாது.

ஏனெனின், களத்தில் தொழில்படும் செயற்பாட்டாளர்கள், இவ் இருமைநிலையினை அடிப்படையாகக் கொண்ட உள்ளார்ந்த பால்நிலை ஆற்றுகைகளை அடையாளப்படுத்தவதன் மூலமே, தமது அரசியல் பொருளாதார இலாபத்தை மையப்படுத்திய முதலாளித்துவ இலாபம் தேடும் முதலைகளைப் பிரித்தறியும் முறையினை கண்டுகொள்ள முடியும். எனவே ஒரு சமூக இயக்கமாக இந்தக் கேள்விகள் இதற்கான காரணங்கள் என்பவற்றை அடையாளம்காண இலங்கையின் தேசிய அரசியல் செயன்முறையை குறுக்குவெட்டுத் தன்மையுடன் விளங்கிக் கொள்வது அவசியமாகின்றது.

தேசிய இயக்கங்களானவை, போர்க்காலங்களிலும் சரி போருக்குப் பின்னரான காலப்பகுதியிலும் சரி, உணர்வுகளை வெளிப்படுத்தவும் போராட்ட களத்தில் எதிர் தாக்குதலைக் குறைக்கவும், அனுதாபம் மூலமாக தமது நோக்கங்களை அடைந்து கொள்ளவும் உகந்த அடையாள வடிவமாக, பொதுவாகவே பெண்களை, குறிப்பாகத் தாய்மையினைப் பயன்படுத்தியது யாவரும் அறிந்ததே. தேசிய உருவாக்கத்தில் வலிமை மிக்க ஆண்களது வெற்றியில் பெண்களது பங்குக்கென்று சில அளவுகோல்கள் இருந்தன. குறிப்பாக கற்புடமை, கன்னியம், தேசிய மண்ணின் மைந்தர்களைப் பெறல், பிள்ளைகளையும் கணவனையும் பராமரித்தலும் காத்தலும், இரக்கமாயிருத்தல் போன்றன பெண்களது இயல்புகளாகக் கற்பிக்கப்பட்டன. தேசிய போராட்டங்களில் முன்னணியில் ஈடுபட்ட பெண்களுக்கான கடமைகள் கூட அவர்களது பால்நிலைக்கேற்ப வரித்துக்கொள்ளப்பட்டிருந்தன, அத்துடன் பெரும்பாலான போராளிப் பெண்கள் உள்ளாரந்த ரீதியில் அதனை ஏற்றுக்கொண்டிருந்தனர்.

சமூக அசைவியக்கத்தில் பெண்களை மென்மையானவர்களாகவும், தினசரி தமது பிள்ளைகளுக்காகவும் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காகவும் கண்ணீர் சிந்திப்பவர்களாகவும், உணர்வுகளை வெளிப்படுத்துபவர்களாகவும் பெண்கள் மாத்திரமே உள்ளனர் என்ற இறுக்கமான ஆணாதிக்க சமூக முறைமையில் தம் பிள்ளைகளுக்காகப் போராடி வருபவர்களாகவும் பெண்களைச் சித்திரிக்கின்ற அதே வேளை, ஆண்கள் அல்லது தந்தைமார் தினசரி வேலைக்குச் செல்பவர்களாகவும், பொருளாதாரத்தில் கவனம் செலுத்துபவர்களாகவும், உணர்வுகளை பொதுவெளியில் வெளிக்காட்டாதவர்களாகவுமே சித்திரிக்கின்றனர். இதனால் தந்தையர்களது போராட்டமும் வலியும் அதனடியான செயற்திட்டங்களும் மலினப்படுத்தப்படுகின்றன. அத்துடன் இந்த அசைவியக்க செயன்முறை மீள மீள பால்நிலை ரீதியாகக் கட்டமைக்கப்பட்டுள்ள ஆற்றுகைகளை தினசரி வாழ்க்கை முறையூடாக மீளுற்பத்தி செய்கின்றது.

போர்க்காலச் சூழலில் ஆண்கள் தமது பிள்ளைகளைத் தேடிப் போகாதமைக்குக் காரணம் இருந்தது. குறிப்பாக, போர்க்காலச் சூழலில் உரிமை கேட்டு தெருவுக்கு இறங்கும் ஆண்களை எந்தவித கேட்டுக் கேள்வியும் இன்றி பிடித்துக் கொண்டு செல்லும் போக்கு அதிகமாகவிருந்தது. அதே வேளை தாய்மார் கருத்தியல் மற்றும் சமூகரீதியாக மதிக்கத் தக்கவர்களாக இருந்தனர் (யாரும் தாமாக முன்வந்து தாய்மாரையோ பெண்களையோ வலிந்து தாக்குவதில்லை) எனவே தாய்மார்கள் தமது பிள்ளைகளைத் தேடி அமைதியான போராட்டங்களை முன்னெடுப்பது பாதுகாப்பானதாகக் கருதப்பட்டது. அதுவே இன்றுவரை உள்ள நிலமையாகவும் உள்ளது. பெண்பால், சொல்லில்லாத மண்ணின் மைந்தர்களைப் பெற்றுத் தருவதும் மண்ணிற்காக அவர்களை உவந்தளிப்பதும் தாய்மையின் போற்றத்தகு பண்புகளாகக் கற்பிக்கப்பட்டன. கணவனோ பிள்ளையோ தேசத்திற்காக இறப்

பின், வீர மரணம் அது சார்ந்த சின்னங்களையும் பெருமைகளையும் ஏற்பதும், சமூகத்தின் மரியாதையான எடுத்துக்காட்டான பெண்ணாகத் திகழ்வதும் முதற் கடமையாக நோக்கப்படுகின்றது.

அதன் வழி இரண்டாம்தார மணமுறைகள் மற்றும் தவறான தொடர்புகள் என அடையாளப்படுத்தப்படும் உறவுகள் கணவனை இழந்த பெண்களுக்குக் கட்டாயம் தவிர்க்கப்படுகின்றது. இது வேற்று இனத்தவருடனான கலப்பினால் பிள்ளைகள் பிறப்பதனைத் தவிர்த்து தேசத்தின் புனிதத்தைப் பேணும் செயன்முறையாக நோக்கப்பட்டது. காலம் காலமாக சாதிய தூய்மையைப் பேணுதல் செயன்முறையாகப் பின்பற்றப்பட்ட கலப்பு மண மறுப்பு மற்றும் இரண்டாந்தார மண மறுப்பு ஆகியன தேசிய உருவாக்கத்தில் இனத்தூய்மை பேணும் செயன்முறையாகப் பின்பற்றப்பட்டது. இதனை யாரும் எங்கும் எழுதி வைப்பதோ அல்லது அடிக்கடி நினைவூட்டுவதோ, காரணம் கற்பிப்பதோ என்றில்லாது, தேசிய உருவாக்கத்தில் இது உள்ளார்ந்த ஒரு விடயமாக ஆற்றுகைப்படுத்தப்படுகின்றது. இந்தநிலையில் இராணுவத்தாலும் விடுதலைக் குழுக்களாலும் கைப்பற்றப்பட்ட பிள்ளைகளை மீட்க தாய்மார் இயக்கங்களை ஆரம்பித்தனர், அமைதியான வழியில் அவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர், அவர்களது கண்ணீருடனான அமைதியான அதேவேளை பின்வாங்காத போராட்டம் பிள்ளைகளை மீட்க உதவியது, வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் தமது பிள்ளைகளை மீட்பதற்காக அன்னையர் முன்னணி உள்நாட்டு யுத்தம் தொடங்கிய காலத்திலிருந்து தொடர்ச்சியாக இயங்கி வந்தது. ஆண்கள் போராட்டங்களில் முன்னிலை வகித்ததால் அவர்களை கடத்தவோ கைது செய்யவோ அதிகாரத் தரப்பினர்களுக்கு வாய்பிருந்தமையால், தமது பிள்ளைகளை மீட்பது தாய்மாரது உணர்வுரீதியான கடமையாக அடையாளப்படுத்தப்பட்டது.

ஆனால் போராட்டம் முடிவடைந்து பதினைந்து வருடம் கடந்த பின்னரும், அடாவடியான கைதுகள் ஆட்கடத்தல்கள் இல்லாத சூழலிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டங்களில் ஆண்களின் பங்கு இருந்தும், அது குறைவாக அடையாளப்படுத்தப்படுவதற்கும் அல்லது ஆண்களது பங்கு இல்லவே இல்லை என்பது போல மாயை ஏற்படுத்துவதற்குமான காரணம் என்ன? ஏன் இன்னமும் பெண்களது கண்ணீர் மட்டுமே முதன்மைப்படுத்தப்படுகின்றது? பெண்கள் குறிப்பாக குடும்பத்தில் உழைக்கும் ஆண்களை இழந்த பெண்கள் வேலைக்குச் செல்கின்றனர், ஆண்கள் குறிப்பாக தந்தைமாரும் தம் பிள்ளைகளுக்காகப் போராடுகின்றனர், கண்ணீர் விடுகின்றனர், *'இன்னைக்கு அவன் எங்களோட இருந்திருந்தா நான் இந்த வயசில வேலைக்குப் போக வேண்டியிருந்திருக்குமோ? என்ர பிள்ளைக்கும் உன்ட வயசு தான் வரும், உன்ர உயரமிருப்பாள், கெட்டிக்காரியும்... ம்'.* இவை காணாமலாக்கப்பட்டோருக்காகப் போராடும் கிளிநொச்சியில் உள்ள இடத்தில் நான் சந்தித்த அப்பாக்களது ஆதங்கம். பேசிக்கொண்டிருக்கும் போதே ஒரு தந்தை ஓவென குழறி அழுதபோது, அங்கிருந்த ஒரு காணாமலாக்கப்பட்ட மகனுக்காகப் போராடும் தாய் கூறுகின்றனார், *'சரி சரி, அண்ணை அழாதையுங்கோ...'* என அவரிடம் கூறிவிட்டு எங்களைப் பார்த்து, *'இவர் டக்கெண்டு கண்கலங்கியிடுவார்'* எனப் பெருமூச்செறிந்தா. அன்று அவர்களது 2,537-ஆவது நாள்.

இதே இருமை ஆணாதிக்கக் கட்டமைப்பில் வளர்ந்து வாழ்ந்துவரும் அப்பாக்கள் தங்களது மகள்களுக்காக மகன்களுக்காக அழுதுகொண்டிருக்கின்றனர், அவர்களது கைகள் உலர்ந்துபோய் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தபடியிருக்கின்றன. கண்கள் அழுதுமுடிய வானம் நோக்கியிருந்தன. ஆனாலும் இந்த முறைமைக்கு அவற்றை அடையாப்படுத்தவோ அல்லது ஆவணப்படுத்தவோ தேவை இருந்திருக்கவில்லை, அல்லது அதனை அடையாளப்படுத்துவது மற்றும் பேசுவது இந்த இருமை ஆணாதிக்க தேசிய சிந்தனா முறைமைக்கும் முதலாளித்தவத்திற்கும் ஆபத்தாக அமையக்கூடும் என்ற கூருணர்வு நம் சமூக அமைப்பில் இன்றும் நிலவிவருகின்றது. தொடர்ச்சியாக ஒரு தேசிய அமைப்புக்குள் ஆண்களும் பெண்களும் தமது அன்றாட நடவடிக்கைகளைக், கட்டமைக்கப்பட்ட தமது பால்நிலைக்கேற்ப உள்ளார்ந்த ரீதியாக ஆற்றுவதென்பது அனைத்துவித அடக்குமுறைகளையும் உள்ளடக்கிய ஆணாதிக்க இருமைக் கட்டமைப்பு தொடர்ந்து இயங்குவதனை ஊக்கப்படுத்தும். அத்துடன் முதலாளித்துவம் தொடர்ச்சியாக தன் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான சூழலை நிலைப்படுத்தும். எனவே இம்முறைமையைக் கேள்வி கேட்பது எந்தளவு தேவையோ அதேயளவு அதனை அடையாளப்படுத்தி அது தொடர்பான பிரக்ஞையை ஏற்படுத்துவது அவசியமானதாக உள்ளது.

Women in Modern India, Publisher: Cambridge University Press, Print publication year: 1996: அமெரிக்காவில் உள்ள சிங்கப்பூரை சேர்ந்த அகாதமியன் ஜெரால்டின் ஹெங் குறிப்பிட்டதுபோல்: 'மூன்றாம் உலக நாடுகளில் பெண்ணிய இயக்கங்கள் பெரும்பாலும் தேசியவாதத்துடன் இணைந்த ஒரே வரலாற்றுப் பசும்புலத்தில் வளர்ந்து, அதே காலகட்டத்தில் தோன்றியுள்ளன'.


- Thinakkural.lk
- தமிழ் தாய்மார்களின் 2000 நாள் போராட்டம், தினக்குரல் https://www.virakesari.lk/article/187178
- உறவுகளை தேடும் தாய்மாரின் கண்ணீரையும், துயரங்களையும் ஏமாற்றி வெற்றி பெற முடியாது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கண்ணீர் மல்க தெரிவிப்பு (வீரகேசரி, 28 Jun, 2024 https://www.bbc.com/tamil/articles/cgez55l21pdo
- இலங்கை யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்ட சொந்தங்களை இன்றும் தேடும் தமிழர்கள் - அந்த நாளில் என்ன நடந்தது? (ரஞ்சன் அருண் பிரசாத், 29 ஆகஸ்ட் 2023)
- இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை நிரந்தரமாக காணாமல் ஆக்கும் சர்வதேசம்! - Pagetamil
- இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை நிரந்தரமாக காணாமல் ஆக்கும் சர்வதேசம்! (தமிழ் பக்கம்: Aug 30 2021).
- கமலா ஹரிஸூக்கு அமெரிக்க தமிழ் மக்கள் வாக்களித்து இறையாண்மையை மீட்டு காணமல் போன குழந்தைகளை -
- கண்டறிய உதவ வேண்டும் - தமிழர் தாயக காணமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் | Virakesari.lk
- கமலா ஹரிஸூக்கு அமெரிக்க தமிழ் மக்கள் வாக்களித்து இறையாண்மையை மீட்டு காணமல் போன குழந்தைகளை கண்டறிய
- உதவ வேண்டும் - தமிழர் தாயக காணமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் (வீரகேசரி 24 Oct, 2024)- Judith Butler, 1990 'Gender Trouble'; Routledge London, United Kingdom




vithursha@thaiveedu.com

# பால்நிலையினை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகளுக்கு எதிரான 16 நாள் செயல்வாதம்

– சிவா மாலதி



இக்கட்டுரையின் முதலிரு பகுதிகளில் பெண்களுக்கெதிரான கட்டமைப்புரீதியான வன்முறைகள், அப்பெண்கள் வாழும் குடும்பத்தினராலும் சமூகத்தினராலும் அந்தந்த நாட்டு அரசாங்கங்களினாலும் மதவாத, பிற்போக்குவாத ஆயுதக் குழுக்களாலும், காலனித்துவ சக்திகளாலும் பல்வேறுபட்ட நோக்கங்களையும் நிகழ்ச்சி நிரல்களையும் மையப்படுத்தி மேற்கொள்ளப்படுவதனை உதாரணங்களினூடாகப் பார்த்தோம். பெண்ணுடல் இப்பல்வேறுபட்ட சக்திகளின் செயற்பாட்டு வெளியாகப் பார்க்கப்படுவதும், பேசப்படுவதும் சமூகத்தில் பெண்கள் பண்டமாக்கப்படுவதன் விரிவடைந்த நிலையாகும்.

பெண்களுக்கெதிரான வன்முறையினைச் சாதாரணமயப்படுத்தும் மற்றும் நியாயப்படுத்தும் ஆணாதிக்க கருத்தியல்களைப் பரவலடையச் செய்வதிலும், அவற்றை தொடர்ந்தும் நிலைத்திருக்கச் செய்வதிலும் ஊடகங்களும் இணையமும் பாரிய பங்காற்றுகின்றன. இவற்றின் தாக்கம் பெண்களுக்கெதிரான இணையவழி வன்முறைகளில் பிரதிபலிக்கின்றன. பெண்களுக்கெதிரான இணையவழி வன்முறைகள் அன்றாட வாழ்வில் பெண்களுக்கு இடம்பெறும் வன்முறைகளைப் பிரதிபலிப்பவையாக இருப்பதுடன், அவற்றின் தாக்கமும் குடும்பம், சமூகம் என்பவற்றிற்கும் மேலதிகமாக பரந்தளவிலானோரைச் சென்றடைவதன் மூலம் மற்றுமொரு மட்டத்தில் பெண்களைப் பாதிப்படையச் செய்பவையாக உள்ளன. பெண்களது கௌரவத்திற்கும் சுயமரியாதைக்கும் பாதிப்பு ஏற்படுத்துவதில் இணையவழி வன்முறைகளும் முக்கிய பங்காற்றுகின்றன. அத்துடன், அவை பெண்களது இணையப் பயன்பாட்டிற்குத் தடைகளை ஏற்படுத்துபவையாகவும், அதனூடாக பெண்களைத் தனிமைப்படுத்துபவையாகவும் பெண்களது வாழ்வின் பல்வேறு பகுதிகளிலும் (தகவல்களை அறிதல், கல்வி, தொழில் வாய்ப்புகள், பிறருடன் தொடர்பினைப் பேணுதல், உதவி நாடுதல் போன்ற) பாதிப்பை ஏற்படுத்துபவையாகவும் உள்ளன. அந்த வகையில் பால்நிலையினை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்படும் வன்முறைகளை ஒழித்தல் தொடர்பான செயற்பாடுகளில் இணையவழி வன்முறைகளைத் தடுப்பதற்கான முனைப்புகளும் உள்வாங்கப்பட வேண்டும். அதேவேளை, இச்செயற்பாடுகள் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுதலிக்கும் முனைப்புகளை முறியடிப்பவையாக இருத்தல் வேண்டும். குறிப்பாக இவ்வன்முறைகளை எதிர்கொள்வதற்கு தற்போதிருக்கும் சட்டங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்பி அவற்றை பெண்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆறுதலையும் நிவாரணத்தினையும் பெற்றுக்கொடுக்கத்தக்க சட்டங்களை இயற்றுதல் வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றின் போதும் பால்நிலையினை அடிப்படையாகக்கொண்ட இணையவழி வன்முறைகளும் வெறுப்பேத்தும் பேச்சுகளும் பரவலாகக் காணப்பட்டன. பெண் வேட்பாளர்களை ஆண் வேட்பாளர்களுடன் தொடர்புபடுத்திப் பதிவுகளை இடுதல், புகைப்படங்களில் மாற்றங்களைச் செய்து திரிபுபடுத்தப்பட்ட புகைப்படங்களைப் பதிவிடுதல், பெண்களின் திருமண அந்தஸ்து தொடர்பிலான கேள்விகளை எழுப்பி அவற்றைப் பெண்கள் நாட்டினை நிர்வகிக்கும் திறனுடன் தொடர்புபடுத்துதல், சமூகத்தில் பெண்களுக்கு எதிராக நிலவும் பால்நிலை பாரபட்சங்கள் மற்றும் நியமங்களைத் தேர்தலில் போட்டியிடும் பெண்களுக்கு எதிராகப் பயன்படுத்துதல், ஆண் வேட்பாளர்களின் பொறுப்பற்ற மற்றும் ஆணாதிக்கமான செயற்பாடுகளுக்கு பெண் வேட்பாளர்களை அல்லது பெண்களைக் குற்றஞ் சுமத்துதல், பாலியல் ரீதியாக இழிவுபடுத்தும் பதிவுகளை பெண் வேட்பாளர்களுக்கு எதிராகப் பதிவிடுதல் எனப் பல அருவருக்கத்தக்க செயற்பாடுகளைக் காணக்கூடியதாக இருந்தது. இவை அனைத்துமே பெண்களின் அரசியல் பங்குபற்றுதலையும், பிரதிநிதித்துவத்தையும் பாதிப்பதோடு, அவர்களது குடும்ப மற்றும் சமூக வாழ்வினையும் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தையும் பாதிக்கின்றன.



அத்துடன், தொழில் புரியும் இடங்களிலும் பெண்களின் பாதுகாப்பு தொடர்பான போதியளவு கவனம் செலுத்தப்படுவதில்லை. அண்மையில் இந்தியாவின் கல்கத்தாவில் ஒரு பெண் வைத்தியர் வைத்தியசாலைக்குள் கடமையிலிருக்கும் போதே பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்டமையும், இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள பூனா (Pune) நகரில் மற்றுமொரு பெண் (26 வயது) மிகையான வேலையின் அழுத்தத்தினால் இறந்தமையும் தொழில் புரியும் இடங்களில் பெண்களுக்கான பாதுகாப்பு இல்லை என்பதை உறுதிப்படுத்துகின்றன. நவதாராளவாத பொருளாதாரக் கொள்கைகள் தொழிற் பாதுகாப்பினை இல்லாதொழித்து மக்களை அழுத்தமான சூழ்நிலைக்குள் தள்ளி பொருளாதார ஈட்டத்திற்காகப் பாடுபடும் நிலைக்குத் தள்ளியிருக்கின்றன. இந்நிலையில் இவ்வாறான செயற்பாடுகள் வேலைத்தளங்களில் உத்தியோகம் பார்க்கும் பெண்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைகின்றன. இந்நிலை தொடரும் பட்சத்தில் பெண்களின் பொருளாதார உரிமை பறிக்கப்பட்டு அவர்கள் பாதிப்புக்கு உள்ளாகுகின்றனர். பொருளாதாரரீதியான தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு இலாபமீட்டுவதை மட்டுமே நோக்காகக்கொண்டியங்கும் பல்தேசியக் கம்பனிகள் தொடக்கம் முறைசாராத்துறைகள் வரை பெண்கள் பல்வேறுபட்ட அழுத்தங்களையும் சகித்துக்கொண்டு தொடர்ந்து உழைக்கின்றனர். வேலைவாய்ப்பற்ற நிலை, வறுமை, அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு போன்றவை பெண்களைத் தொழில் செய்வதற்கு தூண்டும் காரணியாகக் காணப்படுகின்றன. ஆதலால் பெண்கள் தொழில் புரியும் இடங்களில் மேற்கொள்ளப்படும் பாலியல் தொல்லைகளைச் சகித்துக்கொண்டு அல்லது அவற்றினால் பாதிக்கப்பட்டுக்கொண்டே அத்தொழிலைத் தொடரும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய அமைப்புக்களோ ஆதிக்க வர்கத்தோடு சேர்ந்து இயங்க முற்படுவதால் பெண் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. நவதாராளவாத பொருளாதாரக் கொள்கைகளுக்குட்பட்டு பெண் தொழிலாளர்கள் உரிமைகளை இழக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இவை தொடர்பான பரவலான உரையாடல்களானவை பெண்கள் மேலும் எத்தகைய விதங்களில் பாதிக்கப்படுகின்றார்கள் என்பது தொடர்பில் மேலதிக விழிப்புணர்வு ஏற்பட உதவுவதுடன் இவற்றிற்குத் தீர்வுகாணவேண்டிய தரப்பினருக்கு அழுத்தம் கொடுப்பதற்கும் மிகவும் அவசியமானவையாக உள்ளன.

அந்தவகையில் 16 நாள் செயல்வாதமென்பது நீண்டகால, மற்றும் குறுகியகால இலக்குகளை முன்னகர்த்திச் செல்வதற்கான பிரச்சார நடவடிக்கைகளைப் பரவலாக மேற்கொள்பவையாக இருக்கவேண்டும்.

- உலகெங்கிலும் இடம்பெறும் யுத்தங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் தமது அரசாங்கங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான தேசிய, பிராந்திய மற்றும் பூகோளரீதியான வலையமைப்புகளை, குறிப்பாக பெண்கள் வலையமைப்புகளை உருவாக்குதல். இத்தகைய வலையமைப்புகள் வல்லாதிக்க சக்திகளினால் பாதிப்பிற்குட்படுகின்ற மூன்றாம் உலக நாடுகளினால் வழிநடத்தப்பட வேண்டும்.
- பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதோடு அதனைச் சாத்தியமாக்குகின்ற உரையாடல்களைப் பரவலாக்கல். பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பில் காணப்படும் சட்டங்களிலுள்ள இடைவெளிகள் அடையாளங்காணப்பட்டு, பெண்களுக்கெதிரான உளவியல்ரீதியான வன்முறை மற்றும் நிதிச் சுரண்டல்கள் போன்றவையும் பெண்களுக்கெதிரான உரிமை மீறல்களே என அங்கீகரித்து அவற்றை எதிர்கொள்வதற்கான நடைமுறைச் சாத்தியமான சட்டங்களை உருவாக்குதல்.
- பெண்களுக்கெதிரான இணையவழி வன்முறைகளைத் தடுக்கும் வகையில் அமைந்துள்ள சட்டங்கள் அடையாளங் காணப்பட்டு அவை குறித்து உரையாடி விளிப்புணர்வை ஏற்படுத்தல். பெண்கள் தமக்கான சேவைகளை கௌரவமான முறையில் அணுகும் வகையில் சட்டங்கள் உருவாக்கப்படுதற்கும், ஏனைய துணைச் சேவைகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதற்குமான முன்மொழிவுகளையும் மேற்கொள்ளுதல்.
- தொழிலாளர்களின் பாதுகாப்பினை இல்லாதொழிக்கின்ற சட்டவாக்கங்களை எதிர்ப்பதுடன், தொழில் புரியும் இடங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் பரவலான உரையாடல்களை ஏற்படுத்தி பெண்களின் பொருளாதார பாதுகாப்பினையும் மற்றும் உடல், உள பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தல்.
- பெண்களுக்கு ஏற்படும் மாதாந்த குருதிப்போக்கு இயற்கையான உயிரியல் செயற்பாடு என்பதனை அங்கீகரித்து நாட்டிலுள்ள அனைத்துப் பெண்களுக்குமான அணையாடைகளைப் பொது சுகாதார கட்டமைப்பு மற்றும் பாடசாலைகள் போன்றவற்றினூடாக விநியோகித்தல்
- இலங்கையில் விவாகரத்து தொடர்பில் நிலவும் சட்டங்கள், மூன்று காரணங்களினடிப்படையிலேயே விவாகரத்தினை அனுமதிக்கின்றன. சோரம் (Adultary), வன்மஉறவறுப்பு (Malicious desertion), ஆண்மைக்குறைபாடு (Impotency) போன்ற காரணங்கள் விவாகரத்தினைப் பெறுவதற்கான நியாயமான காரணங்களாக இருக்கின்றபோதும் அவற்றிற்கான சமூக அங்கீகாரமின்மையால் துஸ்பிரயோகம் நிகழும் சூழலில் பெண் தொடர்ந்து வாழ நிர்ப்பந்திக்கப் படுகின்றாள். அந்த வகையில் விவாகரத்துச் சட்டங்கள் குறித்த விளிப்புணர்வை ஏற்படுத்தல்.
- சமூக மட்டத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் பற்றியும், அதன் தாக்கங்கள் தொடர்பிலும் பரவலான உரையாடல்களை முன்னெடுத்தல். பெண்களுக்கெதிராக நிலவும் சமூகப்போக்குகளும் வன்முறைகளும் எவ்வாறு பெண்களை மட்டுமல்லாது குடும்பம் தொடக்கம் சமூகம் வரை ஒவ்வொரு மட்டத்திலும் செல்வாக்கு செலுத்துகின்றது என்பது தொடர்பிலும், அதனை சாத்தியப்படுத்துகின்ற கட்டமைப்புரீதியான காரணிகள் தொடர்பிலும் இவ்வுரையாடல்களின்போது கவனஞ்செலுத்துதல்.

UNFPA-ன் அறிக்கையின்படி இலங்கையில் அரச பேருந்து மற்றும் புகையிரதங்களில் பயணம் செய்யும் 90%-ஆன பெண்கள் பாலியல் தொல்லையினை எதிர்கொள்கின்றனர். அண்மையில் 16 நாள் செயல்வாதத்தின் ஆரம்பத்தினை முன்னிறுத்தி இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பினால் ஒரு நடைபவனி ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. இதன்போது

செம்மஞ்சள் நிற ஆடைகள் மற்றும் கைப்பட்டிகளை அணிந்து 500 பேரளவில் கொழும்பு சுதந்திர சதுக்கத்திலிருந்து கொழும்பு மாநகர சபை வரை நடந்து சென்றிருந்தனர். இதன்போது இடம்பெற்ற நிகழ்வில் இலங்கையின் தற்போதைய பிரதமர் கலாநிதி. ஹரிணி அமரசூரிய, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். என்னைப் பொறுத்தவரை பொதுவெளிகளில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகளையோ, முன்மொழிவுகளையோ இத்தகைய செயற்பாடுகள் முன்வைக்கவில்லையென்பது ஒரு பாரிய குறைபாடாகவே தோன்றுகின்றது.

குறிப்பாக, பொதுப்போக்குவரத்தில் பெண்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு நடத்துனர் மற்றும் பேருந்து ஓட்டுனரின் பங்களிப்பு இன்றியமையாதது. இதுதொடர்பில்




பேருந்து நடத்துனர்கள் மற்றும் ஓட்டுனருக்கான விழிப்புணர்வுப் பயிற்சிகள் / செயற்பாடுகள் அரசாங்கத்தினாலும், அரச சார்பற்ற அமைப்புகளாலும் நடத்தப்படுவதில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தியாவில், குறிப்பாக பொதுப்போக்குவரத்தில் பெண்களுக்கான இருக்கைகள் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ளது போன்ற நடைமுறைச் சாத்தியமான சீரமைப்புச் செயலாக்கங்களை (affirmative actions) நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையினை இதுதொடர்பில் செயற்படும் அமைப்புக்களும் அரசும் உணராதிருப்பதென்பது வருந்தத்தக்கது. இந்தியாவில் அரச பேருந்துகளில் பெண்களுக்கான பிரத்தியேகமான ஆசன ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதுபோல, புகையிரதங்களிலும் பெண்களுக்கென தனியான compartments ஒதுக்கப்பட்டுள்ளன. இவை பொதுப்போக்குவரத்தில் பெண்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாது போக்குவரத்தில் எத்தகைய compartments-இல் பயணிக்கலாம் என்பது தொடர்பில் பெண்களுக்கான சில தெரிவுகளையும் வழங்குகின்றது. அதாவது ஆண்களுடன் இணைந்து பயணிக்கும் பெண்களுக்கு கலப்பான compartments-இல் சேர்ந்து பயணிக்கவும் முடியுமானதாயிருக்கின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்திற்கான மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவம் தொடர்பான இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு மனித உரிமைகள் தினத்திற்கு அடுத்த நாளான டிசம்பர் 11-ம் திகதி இடம் பெற்றிருந்தது. இதில் விருந்தினராக கலந்துகொண்டிருந்த யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் 67% பெண் மாணவியரைக் கொண்டிருக்கும் இப்பல்கலைக்கழகத்தினுள் பெண்களுக்கெதிரான பாலியல் துஸ்பிரயோகங்கள் மற்றும் தொல்லைகள் பரவலாகக் காணப்படுவதாகக் கூறியிருந்தார். அத்துடன், சில விரிவுரையாளர்கள் இரவில் மாணவியருக்கு குறுஞ்செய்திகளை அனுப்புகின்றனர், இது ஒரு சிக்கலான பிரச்சினை எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இதுதொடர்பான முறையான நடவடிக்கை எடுப்பது துணைவேந்தரின் கடமையாக இருக்கின்ற போதிலும், இத்தகைய பிரச்சினைகளுக்கெதிராக எவ்விதமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது தொடர்பில் வெளிப்படுத்தாமையானது ஏமாற்றமளிக்கின்றது. முறையான மற்றும் நம்பகத்தன்மையான விசாரணைப் பொறிமுறையினை ஏற்படுத்தி, அதனூடாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துவது பொறுப்பானவர்களின் பொறுப்பு.

குறிப்பாக யாழ். பல்கலைக்கழகத்தில் பல்லாண்டு காலமாக இத்தகைய மாணவியருக்கெதிரான பாலியல் தொல்லைகள் இருந்துவருகின்றபோதும், இது கண்டுகொள்ளப்படாமல் இருப்பதானது உரிய அதிகாரிகளின் அலட்சியப்போக்கினையே வெளிப்படுத்துகின்றது. இந்தக் கட்டுரை எழுதிய காலத்திற்குள் சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகத்திற்குள் ஒரு மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டிருக்கிறார். அதற்கு முன்பு கல்கத்தாவில் ஒரு பெண் வைத்தியர் வைத்தியசாலையில் கடமையிலிருக்கும்போது பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலைசெய்யப்பட்டார். இவற்றைக் கருத்தில் கொள்ளும்போது அரச அமைப்புக்களும், கல்விக்கூடங்களும் மேலும் மேலும் பெண்களுக்கு பாதுகாப்பற்றவையாக மாறிக்கொண்டு வருவதையே அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. பெண்களுக்கெதிரான பாலியல் தொல்லைகள் கல்விக்கூடங்களில் இடம்பெறுவதனை பொறுப்பானவர்கள் அறிந்திருந்தும் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதவிடத்து அண்ணா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது போன்றதோர் சம்பவம் இலங்கையிலுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் இடம்பெறவதை தடுக்க முடியாது போய்விடும் அவலநிலைக்கே செல்லும். வருமுன் காப்பது சாலச்சிறந்தது என்றவகையில் உரிய அதிகாரிகள் உடனடியாகச் செயற்பட்டு கல்விக்கூடங்களில் மாணவிகள் பாதுகாப்பாகக் கற்பதற்கான சூழலை ஏற்படுத்தவேண்டும்.

எனவே, பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழித்தல் என்பது முழுமையாக நோக்கப்பட்டு அதற்கான நடைமுறைச் சாத்தியமான முன்னெடுப்புகளை மேற்கொள்ளவேண்டும் என்பதோடு, 16 நாள் செயல்வாதமென்பது வெறுமனே ஒரு கண்துடைப்பாகவோ அல்லது அமைப்புகளின் செயற்படுதன்மையினை மிகைப்படுத்திக் காட்டுவதற்கான visibility அதிகரிப்புச் செயற்பாடகவோ இருக்கக்கூடாது.



siva.malathy@thaiveedu.com

## திறனாய்வுப் போட்டி - வெல்லுங்கள் 1,50,000 ரூபாய்

## எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும்

## உலகளாவிய 3வது திறனாய்வுப் போட்டி - 2025



தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

**15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய் இலங்கை ரூபாயில் வழங்கப்படு**



**முதலாம் பரிசு இலங்கை ரூபாய் - 30,000.**

**இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய் - 25,000.**

**மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய் - 20,000.**

**நாலாவது பரிசு இலங்கை ரூபாய் - 15,000.**

**ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய் - 10,000.**

**10 பாராட்டுப்பரிசுகள் இலங்கை ரூபா தலா - 5000.**

**குரு அரவிந்தனின் படைப்புகளுக்கான திறனாய்வுப் போட்டி.** குறைந்தது 2 **புதினங்கள்** அல்லது **4 சிறுகதைகள்** பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1600 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவர்களாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாகவெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது.

மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும். உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய **கடைசி நாள்: 31. 03. 2025**

போட்டி முடிவுகள் 30 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2025 இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல்: : kurufanclub@gmail.com

இணையம்: : https://kurunovelstory.blogspot.com/, http://tamilaram.blogspot.com/

https://canadiantamilsliterature.blogspot.com/

இந்த அறிவிப்பினை நண்பர்களுடன் பகிர்ந்து உதவுங்கள். நன்றி!

**செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம். kurufanclub@gmail.com**

மூத்த பத்திரிகையாளர்

## ஈ.கே. ராஜகோபால்!



# வரலாறு வாழ்த்தும் ராஜகோபால்

– எஸ். ஜெகதீசன்

கடந்த 65 வருடங்களுக்கும் மேலான ஈ.கே. ராஜகோபாலின் வரலாறு, அதுவும் புகழ் பூத்த முன்னணித் தமிழ்ப் பத்திரிகையாளராக அவரது வரலாறு, சாதாரண வரலாறு அல்ல! செய்திகளை எடுப்பதிலும் அவற்றை ஏற்ற முறையில் தயாரிப்பதிலும் ஏற்றமுடன் வாசகரிடம் சேர்ப்பிப்பதிலும் அவரிடம் தனித்துவமும் இருந்தது. கலைத்துவமும் இருந்தது.

செய்திகளுக்கு உயிரூட்டினார். கலைஞர்களுக்கு உயிர் கொடுத்தார். காகிதங்கள் அவரால் கௌரவப்பட்டன. அவருடனான முதலாவது சந்திப்புக்கூட நிரந்தரமாக எனது மூளைக்குள் முகாமிட்டுள்ளது.

ஈழநாடு பத்திரிகையின் ஆசிரிய பகுதி! அவர் அங்கு தேர்ந்த உதவி ஆசிரியர். பத்திரிகை வாழ்வின் முதல் நாள் எனக்கு.

உறுத்தாத எளிமை அவரிடம் இருந்ததை அவர் பழகிய விதம் காட்டியது. உறுத்தாத எளிமை அவரது எழுத்தில் இருந்ததை அவர் எழுதிய விதம் காட்டியது.

அசந்து போனேன். அன்று தொட்டு அந்த அன்பும் அந்த மதிப்பும் அடர்த்தியாகி அவருடன் நெருக்கமாக நெருங்க வைத்தன.

ஊடகத்துள் அவர் இருக்கின்றாரா அல்லது அவருக்குள் ஊடகம் இருக்கின்றதா என நான் விதந்தது பல காலம் நீடித்தது.

செய்திகளுக்கும், செய்தி அறிக்கைகளுக்கும், உலக விவகாரங்களுக்கும், உள்நாட்டு நடப்புகளுக்கும், முக்கியமளித்தது அவரது அன்றாட வாழ்வு.

அவற்றுடன் கலை, இலக்கியம், கலாசாரம், பண்பாட்டுக்கோலங்கள், சிறுகதை, தொடர்கதை போன்ற பிற பலவும் எந்நேரமும் ராஜனின் நினைவின் எல்லைக்குள் மேலதிக சேர்க்கையாக வாழ்ந்து கொண்டிருந்ததும் தெரிந்தவர்களுக்கு தெரியும்.

இலக்கியம், அரசியல், வரலாறு, கலை, கல்வி, ஆன்மீகம், அறிவியல், பொருளாதாரம், தொழில் நுட்பம், சினிமா, விளையாட்டு என பற்பல துறைகளிலும் உள்ள அறிவும் சரளமாகவும் சாமர்த்தியமாகவும் உரையாடும் ஆற்றலும் பல மக்களின் - விசேடமாக பல பிரமுகர்களின் இதயங்களில் இலகுவாக குடிபுக வைத்தது.

பத்திரிகையாளர்களையும், படிப்பாளர்களையும், படைப்பாளர்களையும் அரவணைத்து சமுதாயத்தை மேம்படுத்தும் சாதுரியமும் அவரிடமிருந்தது.

அற்புதமான, ஆழமான செய்திகளை அழகு தமிழில் இனிய நடையில் கவரும் தலைப்புகளில் பதியமிடும் நிமிடங்களும் அவரோடிருந்தது.

இளையதம்பி குமாரசாமி ராஜ கோபால் என்பது அவரது முழுப் பெயர். குமாரசாமி விசாலாட்சி இணையரின் மூத்த மகனாக டிசம்பர் 25, 1944-இல் வல்வெட்டியில் பிறந்தார். ஊரார் அவரது தந்தையாரை அப்பா த்துரை என்ற செல்லப் பெயரிலும் அழைத்தனர். சந்திரகோபால், பவானி, பத்மினி, நளினி, மாலினி ஆகியோர் அவரது உடன்பிறப்புகளாயினர். சர்வதேச புகழ் பூத்த நடன ஆசிரியையும், லண்டன் நாட்டியாலயா அதிபருமான ராகினி அவரது மனைவி. ஷர்மினியும், ஷியாம் ராஜுவும் அவரது பிள்ளைகள்.

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன், கந்தரோடை ஸ்கந்தவரோதயா ஆகிய கல்லூரிகளின் மாணவர்களின் அன்றைய வரவுப் பதிவேடுகளில் அவரது பெயரும் இருக்கும். கல்லூரி காலத்தில் அவரது வார இறுதி நாட்களை கலைச் செல்வி சஞ்சிகை தனதாக்கிக் கொண்டது. வசந்தம், எரிமலை, வாடாமல்லிகை ஆகிய மூன்று கையெழுத்துச் சஞ்சிகைகளை தயாரித்து வெளியிட்ட சிறப்பும் அவரது மாணவப் பிராயத்துக்கு உண்டு. வராந்தரியாக வெளிவந்துகொண்டிருந்த வரதரின் புதினம் பத்திரிகையும், வரதரின் பல குறிப்பும் அவரது எழுத்தாற்றல் பரந்து விரிய களம் காட்டின. அவரது ஆற்றலில் கவரப்பட்ட விவேகி சஞ்சிகை பொறுப்பாசிரியராக்கி தன்னை மெருகேற்றிக் கொண்டது. கலைச்செல்வியில் பல காலம் அவர் எழுதியது பலதும் பத்தும். அதில் ஒரு புதிர். எந்த விளையாட்டிலும் முன்னோக்கிச் சென்றால்தான் வெல்லலாம். ஆனால் எந்த விளையாட்டில் பின் நோக்கி செல்பவர்கள் வெற்றியீட்டுவார்கள் என்றிருந்தது. 1964-ஆம் ஆண்டு கேட்கப்பட்ட இக் கேள்விக்கான சரியான பதிலாகிய கயிறிழுத்தல் என்பதனை 2024-ஆம் ஆண்டிலும் எத்தனை பேரால் 'இழுத்தடிக்காமல்' சொல்ல முடியும்?

விவேகி சஞ்சிகையில் வந்த கேள்வி பதில் பகுதிக்கு 'டக் டக்'! என்பதே அவர் இட்ட பெயர். வாசகர் கேள்விகளுக்கு 'டக் டக்'கென சுவாரஸியமாக அவர் அளித்த பதில்கள் அந்த நாட்களில் மிகுந்த அபிமானம் பெற்றிருந்தன.

ஆரம்பத்தில் எக்கச்சக்கமான சிறுகதைகளை எழுதியுள்ளார். 'அவரது முதலாவது சிறுகதை பூங்காற்றே கேள்! கையெழுத்துப் பிரதியாக அவர் தயாரித்த வசந்தம் சஞ்சிகையில் உள்ளது' என்று அவரது உற்ற நண்பனான பிரபல எழுத்தாளர் பெரி. சண்முகநாதன் ஒரிடத்தில் குறிப்பிட்டுள்ளார். யாழ். புதினத்தில் வெளிவந்த 'அவள் தெய்வம். நீ?' என்பதே அச்சில் வெளிவந்த அவரது முதலாவது சிறுகதை. ஈழ நாட்டில் வெளிவந்த முதலாவது சிறுகதை 'மொட்டை மரம்'.

**எந்த விளையாட்டிலும் முன்னோக்கிச் சென்றால்தான் வெல்லலாம். ஆனால் எந்த விளையாட்டில் பின் நோக்கி செல்பவர்கள் வெற்றியீட்டுவார்கள்? இதற்கான சரியான பதிலை எத்தனை பேரால் 'இழுத்தடிக்காமல்' சொல்ல முடியும்?**

1964-ஆம் ஆண்டு ஈழநாடு உதவி ஆசிரியராக நியமித்தது. பக்கம் சாராது பக்கம் பக்கமாக எழுதிக் குவித்தார். காலக்கிரமத்தில் ஈழநாட்டின் இயக்குனர் சபை செங்கதிர், கமலம் போன்ற சஞ்சிகைகளை மேலதிகமாக வெளி யிடத் தீர்மானித்த பொழுது செங்கதிரின் இணை ஆசிரியராகவும் ராஜகோபாலையும் இணைத்துக்கொண்டது. சிறிது காலம் கண்டியிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த செய்தி பத்திரிகையின் யாழ். நிருபராகவும் நட்பு ரீதியில் செய்தி வழங்கினார்.

ஈழநாடு பத்திரிகை அலுவலகத்திற்கு காலுடன் நுழைந்த பல கலைஞர்கள் ராஜகோபாலை சந்தித்த பின் இறகுகளுடன் திரும்பியது பத்திரிகையாளராக அவர் பக்கத்திலிருந்ததில் எனக்கும் தெரியும்.

கலைஞர்களை நெறிப்படுத்தவும் சரிப்படுத்தவும் கூடிய வலுமிக்க சக்தியாக அமைந்தது அவர் எழுதிய நம் நாட்டுக் கலைஞர்கள். அழிக்கும் அவதூறுகளை அள்ளி வீசாத ராஜகோபாலிடம் ஆளாக்கும் அபிமானம் அதிகரித்திருந்தமையால் பல கலைஞர்கள் ராஜகோபாலின் பார்வையால் தலை தூக்கியதும், ஆக்கம் தரும் எழுத்தாளர்களாக ஆகியதும், நயத்தக்க நாகரிகம்.

அனலைதீவுக்கு அருகே அனாதரவான ஒரு நிலப்பகுதிக்கு உல்லாசப் பயணிகளைக் கவரும் மவுசைப் பெற்றுக் கொடுத்தது அவரது தொடரான பருத்தித்தீவில் ஒரு ராஜா.

தெருவில் யாசகம் பெறுவோரது சுகநலம் விசாரித்து அவர்களது குறைகளை, கஷ்டங்களை கேட்டறிந்து அவற்றை குறைப்பதற்காக, நிவர்த்திப்பதற்காக எழுதிய ஒரே ஒரு பத்திரிகையாளர் இவராகத்தான் இருக்க முடியும். வாழ்க்கை மறுக்கப்பட்டவர்களுக்கு வாழ்வு கொடுத்தது அவரின் இன்னொரு தொடரான யாரை நம்பி நாம் பிறந்தோம்.

அன்பால் அரவணைத்து, ஆதரவு நல்கும் பண்பும், துயரில் ஆறுதல் கூறும் சுபாவமும், சமூகம் மீதான பற்றும் அக்க றையும் அவரை எடுத்துக்காட்டாக எடுத்துக்காட்ட வைத்தன!

இரணைமடு குளத்திற்கு பாடசாலையுடன் சுற்றுலாச் சென்ற ஒரு பிஞ்சு மாணவி பரிதாபமாக அதற்கு பலியாகித் தனது வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்த தகவல் ராஜகோபாலின் அடிமனதை விம்மி விம்மி அழ வைத்ததால், அடுத்த நாள் செய்தி அனைத்து இதயங்களையும் பிசைந்து பிழிய வைத்தது. பலரது இதயத் துடிப்பை நிற்க வைத்து, துடிக்க வைத்ததாக அப்பொழுது பலராலும் பேசப்பட்டது.

ஏழு வயதுச் சிறுமியொருத்தி தனது இளைய சகோதரிகள் மூவருக்கு தாயாய் - தந்தையாய் - உற்றாராய் - சுற்றாராய் இருக்கும் பாழாய் போன வாழ்வு கண்டு கொதித்த ராஜகோ பாலின் பேனா, சாரை சாரையாய் இரத்த அருவி கொட்டி யதால், கவனிப்பாரற்றுக் கிடந்த அந்த ஏழு வயதுத் தாய்க்கு நிவாரணம் கிடைத்தது. ராஜனின் அச் செய்தியின் பின்னர் திரட்டப்பட்ட ஒரு லட்சம் ரூபாய் நிவாரண நிதியினை, 5,000 ரூபாய் காசோலை அனுப்பி ஆரம்பித்து வைத்தவர் அப் போதைய தபால் அமைச்சர் செல்லையா குமாரசூரியர். மர ணத்தைக்கூட மரிக்க வைக்கும் ஆற்றல் ராஜகோபாலிடமி ருந்தது.

இருவருக்கும் ஒரே நேரம் வேலை முடியும் சந்தர்ப்பங்களும் இடைக்கிடை வரும்.

காரியாலயத்திலிருந்து பஸ் நிலையம் பத்து நிமிட நடை தூரம். ஆனால் அவருடன் சென்றாலோ அதுவே பல மணி நேர தூரமாக நீண்டுவிடும். அலுவலக அலுப்பு அதன் கார ணமல்ல! காரில் செல்பவர்கள், எதிர் திசையில் நடந்து வருப வர்கள் நிறுத்தி வைத்துக் கதைப்பார்கள்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர சபை முதல் வர்கள், உள்ளூராட்சி பிரமுகர்கள், ஆணையாளர்கள், அதி காரிகள், பல்கலைகழக வேந்தர்கள், பேராசிரியர்கள், விரிவு ரையாளர்கள், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், மருத்துவர், வழக்கறிஞர், காவற்துறையினர், எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், வர்த்தகர்கள் என பிரபலங்களிடமும் பிரப லமாக இருந்தவர் ராஜகோபால்.
இதுவரை நான்கு நூல்கள் அவரிடமிருந்து சமூகத்திற்கு கிடைத்தன. மக்கள் பிரதமர் ஸ்ரீ மாவோ அவரது முதலாவது நூல் மட்டுமல்ல ஸ்ரீ மாவோ பற்றி தமிழில் வெளிவந்த முதலாவது நூலும் இதுவே ஆகும். இந்நூலை நேரடியாக பிரதமரிடம் கையளித்த ராஜகோபாலிடம் இன்னொரு பிரதியை கேட்டு வாங்கிய பிரதமர் அதில் தனது கையெழுத்தை வைத்ததுடன் நூறு ரூபாவையும் சேர்த்து ராஜனிடம் வழங்கிய ஞாபகம் எனக்கு உண்டு.

சில வெற்றிகள் கூட விலாசமற்றுப் போய்விடுகின்றன, ஆனால் சில தோல்விகளுக்குக் கூட சரித்திரம் உண்டு என் பதை நன்கு உணர்த்தியது அவரது இரண்டாவது நூலாகிய வி.பியின் சோவியத் பயணக் கதை.

வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள் என்ற அவரது மூன்றாவது நூலை வாசிக்கும் ஆற்றல் மட்டும் பசுபிக் சமுத்திரத்திற்கு இருந்திருக்குமேயானால் என்றோ அது பாக்கு நீரிணையுடன் சங்கமித்திருக்கும்.

சோதனையின் கொம்பு முறித்துச் சாதனை பலதை மனித குலத்திற்கு காட்டிய ஆழிக்குமரன் ஆனந்தனின் செயலாற் றல்கள் அவரது நான்காவது நூலானபொழுது பலர் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி காலம் போற்றும் முத்துகளுடன் மிதந்தனர்.

இலங்கையில் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் அவற்றின் ஆசிரியர்கள் உட்பட சுமார் மூன்று தலை முறை இலக்கியவாதிகளினதும் அரசியல்வாதிகளினதும் வர லாறுகளை ஞாபகத்திலிருந்தே அவர் சொல்வது ஆச்சரியம்.

இயல், இசை, நாடகம், கல்வி, கணிதம், மருத்துவம், சட்டம், காவல், அரசியல், சமயம், சோதிடம், விளையாட்டு, வணிகம், சமூகம், ஊடகம் என எத்துறையிலும் பிர பலமான ஈழத்தமிழர் எவரும் ஒரு தரமேனும் அவருடன் உரையா டாமல் இருந்திருந்தால், அது பேராச்சரியம். தினகரன் பத்திரிகை இவரை 1975-இல் துணை ஆசிரிய ராக்கி கொழும்புக்கு அழைத்தது.



அத்துடன் நாடாளுமன்றுக்கும் நிருபராகியதில் பல அமைச்சர்களுடன் நெருக்கமானார். தினகரனின் முதலாம் பக்கம் முதல் கடைசிப்பக்கம் வரை கவரும் வகையில் அவரது கைவண்ணம் கண்ட வாசகர்கள் பல்கிப் பெருகினர். இதயராகங்கள், கலையரங்கம், சினிமாப்பகுதி எனவும் பிறவுமாக பல தரப்பட்ட விஷயங்களை பக்கம் பக்கமாக எழுதி, தினகரனின் எல்லாப் பக்கங்களும் இரசிக்கத்தக்கவை என்று சொல்ல வைத்தார்.

அச்சடித்த நந்தவனமாக அழகாக மலர்ந்தது தினகரன்.

1975-ஆம் ஆண்டு லண்டன் சென்றுவிட்டேன்.

லண்டனிலிருந்து எனது பல கட்டுரைகள் தினகரனில் வருவதற்கு காரணகர்த்தாவான ராஜகோபால், எப்பொழுதும் என் மனதின் அருகிலிருந்தார்.

ஆறு வருடங்களின் பின் ஈழநாட்டிற்கு மீண்டார்.

1985-ஆம் ஆண்டு மார்ச் மாதம் யாழ். முத்திரை சந்தையடியில் ஆறு மாத இளம் கர்ப்பிணிப் பெண் மீது சிங்கள இராணுவக் காடையர் பலாத்காரம் புரிந்த கொடூரத்தை ஈழநாட்டிலிருந்த ராஜகோபாலால் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. பின்னர், இராணுவத்தாலும் ராஜகோபாலை சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை.

இங்கிலாந்து அவரை அரவணைத்தது.

1993-இல் இங்கிலாந்தில் தமிழன் என்று இவரை சொல்ல வைத்தது தமிழன் பத்திரிகை. தமிழரோடு தமிழில் பேசிய தமிழன் பத்திரிகையால் அவரை கனவானாக்கவும் முடியவில்லை. அவரை தனவானாக்கவும் முயலவில்லை. சம காலத்திலே ஆசிரியராக ஈழகேசரி பத்திரிகையையும் வெளியிட்டார். ஆனால் அவசர யுகம் அதனையும் ஆட்கொள்ளவில்லை. ஆனால் நீண்ட நாள் கனவுடனும் புதிதாய் தோன்றிய தினவுடனும் 1994-இல் புதினம், மனம் பேசுகிறது ஆகிய பத்திரிகைகளை வர்ணத்தில் வெளியிட்டு நிறைவேற்று அதிகாரியாகவும், பிரதம நிர்வாக ஆசிரியராகவும் வீறுற வீற்றிருந்தவர் ராஜகோபால் என்பதை வரலாறு அடிக்கோடிடும்!

இலக்கிய களஞ்சியமான புதினம் ராஜகோபாலின் புனிதம் என்பார்கள் படித்தவர்கள்.

தமிழ் மக்களின் உயர்வுக்காகவும், நல் வாழ்வுக்காகவும், ஏற்றமுடன் பணிசெய்வதை பணிவோடும், துணிவோடும், முத்திரை பதித்தது புதினம் மாசிகை.

கோகிலா தங்கத்துரை, ஈ.கே.ஆர், ரங்கன் தேசிகன், மகரந்தன், தேனீ, விசாலாட்சி, ராகி, ராகினி, பவானி, பாமா, ஷர்மினி, ஷியாம், ராகிராஜ் என அவரது புனை பெயர்களை கூட புகழ் பூக்க வைத்தார்.

ஈ.கே.ஆர் பப்ளிஷர்ஸ், ஈழகேசரி பப்ளிஷர்ஸ், தமிழன் பப்ளிஷர்ஸ், புதினம் வெளியீட்டகம் ஆகிய பதிப்பகங்களை சொந்தமாகக் கொண்டு இயங்கிய ராஜகோபால் அவற்றின் ஊடாக தனது படைப்புகளுக்கும் வெளியாரின் வேறு சில படைப்புகளுக்கும் நூலுருக்கொடுத்தார்.

ராஜகோபால் சிவப்பு சிந்தனையாளர். பொதுவுடமை கட்சியாளர். அந்த வட்டாரத்தில் விஸ்தாரமான நட்பு இருந்தது. எனினும் மாற்று அரசியலாளருடனும் பேத மற்ற உறவை அவர் பேணியது மனதில் குழப்ப மின்றி குமிழிடுகிறது..

ராஜகோபாலின் வல்வெட்டி வீட்டிற்கோ அல்லது நாவலியில் உள்ள அவரது சிறிய தாயாரின் வீட்டிற்கோ இரண்டொரு தடவை சென்றுள்ளேன். அப்பொழுதெல்லாம் கைகளை பற்றியவாறே உரையாடுவதும் தேநீருடன் எள்ளுருண்டை தந்து உப



சரிப்பதும் ராஜகோபாலின் தாயாரது வழமை. 2024-இன் நடுப்ப குதியில் கனடா வந்திருந்த ராஜகோபால் அவரது தங்கை மாலினி (டொலி) வீட்டில் தங்கியிருந்தார். ராஜகோபால் உரையாடிய விதமும், தங்கை உபசரித்த விதமும் அப்படியே தாயாரை நினைவில் நிறுத்தின.

செய்தி, கட்டுரை, கடிதம் எதுவாகவும் இருக்கட்டுமே! அவர் எழுதும் பாணி அலாதியானது. மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டுவதில் அவருக்கு நிகர் அவரே. விடயங்களுக்கு அருமையான விமர்சனங்களையும், கடிதங்களுக்கு அழகான பதில்களையும் உடனக்குடன் எழுதும் உன்னத சுபாவம் அவரிடம் உண்டு.

அவரது பெருமதிப்புக்கும், பெருவிருப்புக்கும் உரிய பத்திரி கையாளர்களாக, ஈழநாட்டின் பிரதம ஆசிரியராகவிருந்த திரு. கே.பி. ஹரன் அவர்களும் தினகரன் பிரதம ஆசிரியராக விருந்த திரு. ஆர். சிவகுருநாதன் அவர்களும் இதயத்தில் நீடித்து நிலைத்தனர். 'பத்திரிகை உலகில் பலர் வியக்கும் பத்திரிகையாளர்கள் அவர்கள். சில வார்த்தைகளை அல்லது சில வரிகளை அல்லது சில பந்திகளை திருத்தி சுவாரஸியம் சேர்ப்பது பத்திரிகை ஆசிரியர்களின் வழமை. ஆனால் அவர்கள் இருவரும் ஒரு கட் டுரையையே சிறிது நேரத்தில் விறுவிறு வென்று மாற்றி அச்சுக்கு அனுப்பும் ஆற்றல் நிரம்பியவர்கள் என்பது பாரறிந்த உண்மை. இவர்கள் இரு வரும் குருநாதர்களாக எனக்குக் கிடைத்தது நான் பெற்ற பாக்கியம் என்பேன்.' என இதயம் மலர என்றுமே சொல்லிக் கொள்வார் ராஜ கோபால்.

பத்திரிகையாளர்களின் அன்றைய - இன்றைய வேறுபாடுகள் எவை? என்று அவரிடம் கேட்டுப்பாருங்கள்.

'தேவையானவற்றை விரல் நுனியில் வைத்திருக்கும் தேவை அன்றிந்தது. விரல் நுனியே தேவையானவற்றை தேடிப்பிடிக்கும் சேவை இன்றுஉளது. கிட்ட இருந்தாலும் சட்டெனத் தொடர்பு கொள்ள முடியாத நிலை அன்று. எட்ட இருந்தாலும் எட்டித் தொடும் சாதனங்கள் இன்று. செய்திகளை கூட்டியும், கதைகள், கட்டுரைகளை குறைத்தும் செதுக்கினர் அன்றைய பத்திரிகையாளர். திருப்பி அனுப் பினால் அவற்றைத் தாமே கவனித்துக் கொள்கின்றார்கள் இன்றைய எழுத்தாளர்கள்! தீபாவளி மலர் தயாரிப்பு ஆறு மாதங்களுக்கு முன்பே ஆரம்பமானது அன்று. ஆறு நாட்களோ ஆறு மணித்தியாலங்களோ போதும் என்ற நிலை இன்று. ஆகக்குறை நதது நான்கு ஐந்து பேரது உழைப்பின்றி அச்சில் கொண்டு வர முடியாது அன்று. அனேகமாக ஒருவரே முடிக்கின்றார் எவ் வித களைப்புமின்றி இன்று!' என்பதே அவரது பதிலாகும்!

**செய்தி, கட்டுரை, கடிதம் எதுவாகவும் இருக்கட்டுமே! அவர் எழுதும் பாணி அலாதியானது. மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டுவதில் அவருக்கு நிகர் அவரே. மனசுக்குள் சுளுக்கெடுக்கும் ஆற்றல் பெற்றவை அவரது எழுத்துகள்! இதயத்தைத் துளைத்துத் துளைத்துத் துவாரமிடாத கண்ணியம் மிக்கவை அவரது வார்த்தைகள்!**

புதிய பத்திரிகையாளர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும் புகின்றீர்கள் என்றால் 'சொல்லப் போகும் விடயத்தை சுற்றி வளைக்காது நேரே நறுக் என்று சொல்லும் பொழுதுதான் ஆக்கங்கள் மனதைத் தொடும். ஒரு செய்தியின் முக்கிய அம்சத்தை அந்தச் செய்தியின் முதலாவது வாக்கியமாகவே கொடுத்து விட வேண்டும். வாசகர்களை செய்திக்குள் செய் தியை தேடவிடக் கூடாது என்று சொல்வேன்' என்பார்.

'தொடர்ந்து எழுதுங்கள். தொடராக எழுதுங்கள்' என்பதே எழுத்தாளர்களுக்கான அவரது பொதுவான அறிவுரை.

எனது எழுத்துகளுக்கும் களம் தந்து வளம் தந்தது அந்த நல்ல உளம்! அவரது விரல்கள் வேகமாகச் செயற்படுவ துடன் வினோ தமாக புரியும் மாயாஜாலம் கண்டு என் புரு வங்கள் பாதி நெற்றியை பல தடவைகள் தொட்டுள்ளன. மன சுக்குள் சுளுக்கெடுக்கும் ஆற்றல் பெற்றவை அவரது எழுத் துகள்! இதயத்தைத் துளைத்துத் துளைத்துத் துவாரமிடாத கண்ணியம் மிக்கவை அவரது வார்த் தைகள்!

மக்களின் எண்ணங்களையும், வாழ்வி யல் அழகையும், இதயங்களில் பதிய வைத்து முதியவர்களின் அனுபவத் தையும் இளைஞர்களின் ஆர்வத் தையும் இணைத்துக் கொண்டு, தொலை நோக்குப் பார்வையுடன் செயற்படுவதில், வல்லவராகவே வாழ்ந்த அவரது வாழ்வு புதிய பத்திரிகையாளர்களுக்கு நல்லதோர் முன்னுதாரணம்.

தனக்கென ஓர் தனியிடத்தைப்பெற்று தரணி போற்ற வாழ்ந்த ராஜகோ பாலின் ஊடக வாழ்வு சாதனை நிறை ந்தது. சுவை மிகுந்தது. ஓய்வறியா உழைப்பு பிரமிப்பு ஊட்டுவது.

இதயத்தை ஊடுருவும் ஜனரஞ்சக பத் திரிகையாளரான ராஜ கோபால் எம் முடன் வாழும் அதி மூத்த பத்திரிகை யாளர்!

அவரது ஊடக தாகம், அவரது ஊடக அர்ப்பணிப்பு என்பன உச்சக் கட்டமாக அவரை ஊடக அடையாளமாக்கியதில் வியப்பேது?

'ஈழநாடு' பத்திரிகையின் விசாலமான வரலாற்றுப் பக்கங் களில் மதிப்பார்ந்த இடம் அவருக்கு என்றும் உண்டு!

தமிழ் பத்திரிகை உலகின் மதிப்பார்ந்த வரலாற்றுப் பக்கங்க ளிலும் வியாபகமான இடம் அவருக்கென்று என்றும் உண்டு!

முதுமையை வென்று முனைப்புடன் வாழ ஏதாவது ஒரு வழி இருந்தால் எவ்வளவு நல்லது!



jegatheesan.s@thaiveedu.com



# தமிழுக்கும் தமிழருக்கும் சமிக்கை விளக்கு ஈ.கே. ராஜகோபால்

– சிவபரிமேலழகர்

தனது பாலிய பருவத்தில் இருந்து யாழ்ப்பாணத்து ஈழநாடு பத்திரிகையிலும், தொடர்ந்து கொழும்பு ஏரிக்கரை பத்திரிகையான தினகரனிலும் பணியாற்றிய ஊடகத்துறை அனுபவத்தை அத்திவாரமாகக் கொண்டு, பின்னர் தனது சொந்த முயற்சிகளாக பல வடிவங்களை வெளிக்கொணர்ந்து பரிசோதனை செய்ததுடன் இலண்டனில் புதினம் என்ற பெயரில் பத்திரிகை ஒன்றை வெளியிட்டு, தொடர்ந்து பலவிதமான நெருக்குவாரங்களுக்கிடையிலும் எதிர்நீச்சல் போடவேண்டிய காலக்கட்டங்களிலும், களைத்து சளைத்துப் போகாமல் மாதாமாதம் தவறாமல், புதினம் பத்திரிகையை வெளிக்கொணர்ந்தது மிகவும் பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

இனி புதினம் பத்திரிகையின் பக்கம் நமது பார்வையினை திருப்பினால், இன்றைய நமது சமுதாயம் சார்ந்த, பலதரப்பட்ட விடயங்களையும் பலதரப்பட்ட மட்டத்திலுள்ளவர்களுக்கும் சென்றடையும் வண்ணம், செய்திகளையும் தகவல்களையும், விளம்பரங்களையும் உள்ளடக்கிய குடும்பப் பத்திரிகையாக பிரசுரிக்கப்பட்டு இலவசமாக தமிழ் மக்கள் செறிந்து வாழுகின்ற பகுதிகளாகிய அனைத்து இடங்களிலும், பெரும்பாலும் தன் கைப்பட வினியோகித்து வருவதன் மூலம், பொது மக்கள் தனது புதினம் பத்திரிகை மீது வைத்துள்ள ஆவலையும் எதிர்பார்ப்புகளையும் நேரடியாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது எனத்தெரிவிக்கின்ற திரு. ஈ.கே. ராஜகோபால், சகல இலவச பத்திரிகைகளை போலவே புதினம் பத்திரிகையும், வினியோகத்தினருக்கும், வாடிக்கையாளர்களாகிய பொதுமக்களுக்கும், புதினம், செய்தித்தாள் என்ற நிலைப்பாடு தாண்டி வேறு பல தேவைகளையும் பூர்த்தி செய்கின்றது என, தனது மனவேதனையை நகைச்சுவையாகவும் நாசூக்காகவும் சொல்வதை நான் அறிவேன்.

புதினம் பத்திரிகை, தமிழர் தமது மண்ணில் இருந்து பிரிந்து பிறத்தியான் மண்ணில் வாழவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளவர்களுக்கு, காலத்தின் தேவை மட்டுமல்ல, காலத்தால் தந்த வரப்பிரசாதமும் ஆகும்.

புதினம் பத்திரிகையின் உள்ளடக்கத்தில் ஆசிரியர் தலையங்கமாக இருந்தால் என்ன, அல்லது மற்றவர்களது பங்களிப்பாக இருந்தால் என்ன, குறிப்பாக ஈழநாட்டினரின் சிந்தனை, சொல், செயல் என்பனவற்றை உள்ளடக்கியதாகவும், அவாக்களையும் அபிலாசைகளையும் பிரதிபலிப்பனவாகவும் அமைந்து விடுவதுடன், மக்கள் மத்தியில் புரையோடிப்போயுள்ள காலத்துக்கு ஒவ்வாத கழித்து விடவேண்டிய விடயங்களை கோடிட்டுக் காட்டுவனவாக இருப்பதுடன், நம்மவரின், குறிப்பாக குழந்தைகள், இளையவர், முதியவர் என பலதரப்பட்ட வயதினரதும் முயற்சிகளும் வெற்றிகளும் பிரபல்யப்படுத்தப்படுகின்ற அதே வேளை அவர்களது வேதனைகளையும் விரக்திகளையும் கூட ஆவணப்படுத்தப்படுகின்றது என்பது பெரிதாக பேசப்படாத நிதர்சனமான உண்மையாகும்.

பிரசுரமாகும் விளம்பரங்கள்கூட தமிழர் சமுதாய வாழ்வியல் மாற்றத்தினை கட்டியம் கூறி நிற்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

உலகில் விஞ்ஞானமாக இருந்தால் என்ன, மற்றைய எந்த துறைசார் கண்டுபிடிப்புகளோ அல்லது படைப்புகளாக இருந்தால் என்ன, அவை எல்லாவற்றினுள்ளும் அவற்றை அளவிடுகின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற, காட்டிக்கொடுக்கின்ற அளவுகாட்டிகளும் அவைகளுக்கென்று அவைக்கே உரித்தான சமிக்கை விளக்குகள், சாதக பாதக விளைவுகளை சுட்டிக்காட்டி எச்சரிப்பனவாகவும் அறிவிப்பனவாகவும் உள்ளதை நடைமுறை வாழ்க்கையில் காண்கின்றோம்.

புதினம் பத்திரிகையானது நமது சமுதாயத்தின் அளவுகோலாகவும், எச்சரிக்கை மணியாகவும் தமிழுக்கும் தமிழருக்கும் சமிக்கை விளக்காக இயங்கிக்கொண்டிருக்கின்றது.

இதன் இயக்குனர் ஈ.கே. ராஜகோபால் அவர்கள்.

இவருக்கும் இவரது குடும்பத்தினருக்கும் இவர் சார்ந்த சமுதாயத்தின் நன்றிகளும் வாழ்த்துகளும் உரித்தாகட்டும்.

info@thaiveedu.com



# சுமைதாங்கி!

## வேலா சுப்பிரமணியம்

கனடாவில் மட்டுமல்லாது உலகமெல்லாம் பரந்து வாழும் தமிழர்களுக்கெல்லாம் எம்மவர் சார்ந்த செய்திகள் கலை, பண்பாடு, விஞ்ஞானம், தொழில்நுட்பம், அரசியல், மருத்துவம், வீடு போன்ற பல சமூக விழுமியங்களை உள்ளடக்கியதாக வீறுநடை போட்டு ஒரு தரமுள்ள முதற்தர பத்திரிகையாக சரித்திரம் படைத்துக்கொண்டிருக்கும் பத்திரிகை ‘தாய்வீடு’ என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அத்தகையதொரு பத்திரிகை, தற்போது லண்டனில் வாழ்ந்து கொண்டிருக்கும் புகழ்பெற்ற ஒரு மூத்த பத்திரிகையாளனான திரு. இராஜகோபால் அவர்களை இனங்கண்டு அவர் வாழும் போதே அவரை கௌரவிக்கும் நோக்கோடு இவ்வாண்டு, முதல்மாத பத்திரிகையை சிறப்பிதழாக வெளியிட முன்வந்தமையைப் பாராட்டுவதோடு எமது குடும்ப சார்பில் எமது நன்றிகளை முதலில் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. இராஜகோபால் அவர்கள் எனது மைத்துனர். அவரது கடைக்குட்டித் தங்கை டொலியை திருமணம் செய்ததால் ஏற்பட்ட உறவு. அந்த வகையில் நான் அறிந்து கொண்ட தெரிந்து கொண்ட சில பொருத்தமான தகவல்களை, சம்பவங்களை இந்தச் சந்தர்பத்தில் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

முதலில் குடும்பம் சார்ந்த எனது பார்வையை எனது அனுபவ வாயிலாகப் பதிவு செய்கிறேன். ‘எங்கடை அண்ணா எங்களுக்கு கடவுள் மாதிரி. அவர் என்ன சொன்னாலும் நாங்கள் ஒருவரும் திருப்பிக் கதைக்க மாட்டோம்’. இது எனது மனைவியின் வாயில் இருந்து பல காலமாக நான் கேட்டுக் கொண்டிருக்கும் சுலோகம். இத்தகையதொரு பெரிய அந்தஸ்தை இவர் எவ்வாறு சம்பாதித்துக் கொண்டார் என்ற ஆச்சரியத்தில் பல காலத்திற்கு முன்னரே அதுபற்றி விசாரி த்து அறிந்து கொண்டேன்.

1944 டிசம்பர் 25-ஆம் திகதி இயேசு பிரான் அவதரித்த திகதியில் பிறந்த திரு. ராஜகோபால் அவர்கள் தனது இளம் வயதில் தனது தந்தையை 1964-இல் பறிகொடுக்கிறார். விரும்பியோ விரும்பாமேலோ குடும்பப் பொறுப்பு முழுவதையும் தனது பதின்ம வயதின் முடிவில் சுமக்க வேண்டிய நிலை உருவாகிறது. இவரது தந்தையார் திரு. குமாரசாமி அவர்கள் இறக்கும் போது இவருக்கு வயது 20. இவரது கடைசித் தங்கையான டொலிக்கு வயது 5. இவர்களுக்கு இடையில் சந்திரகோபால், பாவனி, பத்மினி, நளினி என மேலும் 4 சகோதரர்கள். இவரது அம்மாவின் வயது 38. இப்போது நினைத்துப் பார்த்தாலே மயிர்க்கூச்செறிகிறது. ஒரு தகப்பன் இல்லாத வீட்டில் ஒரு பதின்மவயது தம்பியாரை





கட்டுப்பாடாக வளர்க்கவும் 4 பெண் சகோதரர்களை மிக்க கட்டுப்பாட்டோடும், பண்போடும், ஒழுக்கத்தோடும் வளர்த்தெடுக்கவும் எவ்வளவு பிரயத்தனம் எடுத்திருக்க வேண்டும். தனது இளமைக் கால சுகபோகங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, தன்னையே அர்ப்பணித்து, சகோதரர்கள் அனைவரையும் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வர அரும்பாடுபட்டு வெற்றியும் கண்டு கொண்டார். தனது குறிக்கோளை அடைய பாசமுமுள்ள, அக்கறையுள்ள அண்ணனாக மட்டுமன்றி ஒரு கண்டிப்பான தந்தையாகவும் தன்னை மாற்றிக் கொண்டார். தனது சகோதரர்களை மட்டுமன்றி தனது இளவயதில் கணவனை இழந்த தாயாரையும் கண் கலங்கவிடாது இறுதிவரை கூட இருந்து காப்பாற்றிய பெருமைக்குரியவர். எனவே, இவரது குடும்பம் இவரைக் கடவுளாகப் பார்ப்பது இவர் சம்பாதித்த ஒன்றே தவிர சூட்டப்பட்ட பட்டமல்ல என்பதே நான் அறிந்து கொண்ட உண்மை.

1977-ஆம் ஆண்டு நான் அரசாங்க வேலையில் சேர்ந்தபோது எனது சம்பளம் 240 ரூபா அத்துடன் பிரயாணச் செலவாக 75 ரூபாவும் கிடைக்கும். அதனைத் தற்போது நினைத்துப் பார்க்கிறேன். வன்னியில் எங்களுக்கு எத்தகை பெரிய குடும்பம் இருந்தாலும் சாப்பாட்டுச் செலவு பெரிதாக வராது. உறைவிடச் செலவு இலவசம் என்பதால் சமாளித்துக் கொண்டு போகலாம். ஆனால் அப்போது ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய்களைக் காண்பது எல்லாம் எட்டாப் பழமாக இருந்தது. என்னைப் பொறுத்தவரை, அதிலும் 1964 காலப் பகுதியில் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப் பார்க்கிறேன். ஒரு சிறுவனாகப் பத்திரிகைத் துறையில் காலடியெடுத்து வைத்து எவ்வளவை உழைத்திருக்க முடியும்?. 6 பேர் கொண்ட குடும்பத்தை நகர்த்த எவ்வளவு போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன்.

இவருக்கு இருந்த ஒரே துணையும் பலமும் இவரது தந்தையார் விட்டுச் சென்ற நிலமும் புலமும் என்பதுடன், இவருக்கிருந்த நம்பிக்கையும் துணிவும் பொறுப்பும் தான். 'என் உயிரிலும் மேலான தாய்' என அடிக்கடி இவர் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். அத்தகைய பாசம்மிக்க தாயைக் கண்கலங்காது காக்க வேண்டுமென்பதில் குறியாக இருந்தார். தனது சகோதரர்கள் மீது அளவு கடந்த பாசத்தைக் கொட்டி உரிய வேளையில் செய்ய வேண்டியவற்றைத் தனித்து நின்று செய்து முடிந்திருக்கிறார். தன்னை வருத்தி தனக்கென எந்தவித சொத்தையும் சேர்த்துக் கொள்ளாது தனது உறவுகளுக்கும் பிறருக்கும் உதவி செய்வதையே தனது இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டிருக்கிறார். இத்தகைய பண்பு இவருக்குப் பிறவியில் இருந்து வந்திருக்க வேண்டும். இவரது எழுத்துலக வாழ்விலும் இதன் பரிணாமத்தைக் காணமுடிகிறது. 'என்னைப் பொறுத்தவரை இவரை நான் ஒரு 'சுமை தாங்கி' ஆகவே பார்க்கிறேன்.

1971-ஆம் ஆண்டிற்குப் பின்னர் வந்த சுமார் பத்து-பதினைந்து ஆண்டுகளுக்குள் இவர் தனது உறவுகளுக்காக செய்து முடித்த பல நிகழ்வுகளைச் சாதனைகள் என்றே கூறலாம். இது பலரது வாழ்விலும் ஒரு திருப்புமுனைக்குக் காரணமாக அமைந்தது என்பதில் ஐயமில்லை. சகோதரி பவானியின் லண்டன் பயணம், சகோதரி பத்மினியின் திருமணம், சகோதரன் சந்திரகோபாலின் லண்டன் பயணம், நடன தாரகை ராகினியை திருமணம் செய்த நிகழ்வு, சகோதரன் சந்திரகோபாலின் மனைவி சரோஜினியின் லண்டன் பயணம், இவரது லண்டன் பயணம், கடைக்குட்டி டொலியின் திருமணம், குடும்பத்துடன் லண்டன் இடப் பெயர்வு, சகோதரி நளினியின் திருமணம் என்பன முக்கியமானவை.

நான் 1982-இல் இவரது சகோதரி டொலியைத் திருமணம் செய்த பின்னர்தான் இவருடைய தொடர்பு ஆரம்பமானது. அதுவும் தாயக மண்ணில் 2-3 வருடங்கள் மட்டும் தான். இந்தக் குறுகிய காலத்திலும் என்னுடன் மட்டுமல்லாது எனது குடும்பம், சகோதரர்களுடன் ஒட்டி உறவாடிய விதம், வைத்திருந்த பிணைப்பு இன்னும் நினைவில் இருக்கிறது. இவர் ஈழநாட்டில் வேலை செய்து கொண்டிருந்த அந்தக் காலப் பகுதியில் எனது இளைய சகோதரன் கனடா வந்து இங்கு நிலைகொள்ளும் விதத்தில் இவர் செய்த உதவிகள் மறக்க முடியாதவை. அது இன்றும் என் கண்முன் நிழலாடுகிறது.

சகோதரர்களுடன் மிகக் கண்டிப்பானவராக நடந்து கொண்டாலும் தனது உறவினர்களுடனும், சுற்றத்தாருடனும் வைத்திருந்த பிணைப்பு, பாசம் என்பன எழுத்தில் வடிக்க முடியாத ஒன்று. நான் நேரில் கண்டு பல தடவை வியந்திருக்கிறேன். ஏற்றத்தாழ்வு பாராது சாதி, மதம் என்ற வேறுபாட்டைக் கடந்து இவர் கட்டி வைத்திருந்த நட்பு வட்டம் மிகப் பெரியது. முக வசீகரமா? பேச்சுவன்மையா? அல்லது எழுத்து ஆற்றலா? அல்லது உதவிக் கரம் நீட்டுவதாலா? எதனால் எல்லோரையும் தன் பக்கம் இழுத்துக் கொண்டார் என்பது அறிந்து கொள்ள முடியாத ஒரு மர்மம். அவர் தன்னைச் சுற்றி உறவினர் வட்டம், நண்பர்கள் வட்டம், வாசகர் வட்டம் கலைஞர்கள் வட்டம் எனப் பலவகையானவர்களையும் உள்ளடாக்கியதாக ஒரு சாம்ராஜ்யத்தையே கட்டி வைத்திருக்கிறார். அதற்கும் ஒரு திறமை வேண்டும்.

நாங்கள் கனடாவிற்குக் குடிபெயர்ந்த பின்னர் இவருடன் இருந்த தொடர்பும், பத்திரிகைத் துறைக்கு என்னையும் உள்





வாங்கிக் கொண்டதால் ஏற்பட்ட அனுபவங்களும் மறக்க முடியாதவை. இவர் 90-களின் ஆரம்பத்தில் நண்பன் சிவன டியார் சிறீபதியுடன் முதன் முதல் கனடாவிற்கு திடீரென வருகை தந்தார். அவரை நேரில் காணவும் கலந்துரையாடவும் உறவி னர்கள் என்பதைத்தாண்டி அவரது நண்பர்கள் எமது வீட்டை முற்றுகையிட்டவண்ணம் இருந்தார்கள்.

அவர் கனடாவில் நிற்கும் காலப் பகுதியில் எங்களுடன் யாரும் தொலைபேசியில் தொடர்புகொள்ள முடியாதவாறு எந்நேரமும் அவருக்கு தொலைபேசி அழைப்பு வந்தபடியே இருந்தது. தற்போது இருப்பது போல் வீட்டிற்கு 4 Cell Phone அன்று இருந்திருந்தால் பிரச்சினையே இருந்திருக்காது.

அவர் இங்கிருந்த காலப்பகுதியில் கனடாவில் தமிழரின் நிலை பற்றி அறிய ஆசைப்பட்டார். நானும் ஒவ்வொரு தமிழ் கடைகளையும், தமிழ் உணவகங்களையும், தமிழ் நிறுவனங் களையும், கொண்டுபோய் காட்டினேன். ஒவ்வொரு இடங்க ளிலும் பலருடனும் பேசி தகவல்கள் திரட்டுவதையும் படங்கள் எடுப்பதையும், அவதானித்தேன். எனக்கு அப்போது தெரி யாது. இவர் தனது பயணக் கட்டுரைக்கு தகவல் திரட்டுகிறார் என்று. லண்டன் சென்றதும் இவரது அப்போதய 'தமிழன்' பத் திரிகையில் 'ஸ்காபுரோ ஒரு குட்டி யாழ்ப்பாணம்' என்ற தலை ப்பில் பெரிய கட்டுரை வெளியானது. இது பலரது கவனத்தையும் அன்றைய புலம்பெயர் சூழலில் ஈர்த்த ஒன்றாக இருந்தது.
இவர் கனடாவில் நின்றபோது அமரர் கலாநிதி விஜயகுமா ருடன் அறிமுகமாகி கணினிப் பாவனைக்காகத் தமிழ் எழுத் துகளை வாங்கிக் கொண்டு போனதும் பின்னர் தனது பத்தி ரிகையை மெதுவாக கணினிமயப்படுத்த என்னால் ஆன சில உதவியைச் செய்ய முடிந்ததும் கடந்து வந்த பாதையில் மறக்க முடியாத சுவடுகள். வேலா லண்டனில் இருக்கும் சந் தர்ப்பம் இருந்திருந்தால் நான் எங்கேயோ போயிருப்பேன் என்று அவர் பல தடவை ஆதங்கப்பட்டதை உணர்ந்திருக்கிறேன்.

புகழ் பூத்த மூத்த பத்திரிகையாளர் திரு. ராஜகோபால் அவர்கள் தனது எழுத்துலக வாழ்வை பள்ளிப்பருவத்தில் கையெழுத்துப் பிரதியுடன் தொடங்கியதாக அறிகிறேன். யாழ்ப்பாணம் 'ஈழநாடு' இவரது தாய்வீடு. பள்ளியிலிருந்து நேர டியாகவே உதவி ஆசிரியராக நுழைந்து சுமார் 11 ஆண்டு காலம் அங்கு பணி செய்தார். அதன் பின்னர் கொழும்பு 'Lake House' நிறுவனத்தின் 'தினகரன்' நாளிதழில் ஏழாண்டு காலம் துணை ஆசிரியராகப் பணி புரிந்தார். மீண்டும் யாழ் 'ஈழநாடு' இவரை உள்வாங்கி பணி புரிந்து கொண்டிருந்த காலப்பகு தியில் 1985-ஆம் ஆண்டு ஆறு மாதக் கர்ப்பிணி பெண் ஒருவர் விசாரணை என்ற பெயரில் இராணுவத்தினரால் கற்ப ழிக்கப்பட்டபோது அச் சம்பவத்தை துணிச்சலோடு சொந்தப் பெயரில் கட்டுரையாக வெளி உலகத்திற்கு தெரியப்படுத்திய காரணத்தினால் இராணுவத்தின் கெடுபிடிக்கு உள்ளாகி குடும்பத்தோடு தாய் நாட்டை விட்டு வெளியேறி லண்டனில் தஞ்சம் புகுந்து கொண்டார். காலம் செய்த கோலம். இவரது அத்தியாயம் 1985-க்குப் பிறகு மீண்டும் புதிதாக எழுதப்பட வேண்டியதாயிற்று.

தாய் மண்ணையும் தமிழர்களையும் உயிராக நெஞ்சத்தில் சுமந்தபடி அந்த உணர்வோடு இன்றுவரை வாழ்ந்து வருபரின் பத்திரிக்கைத் துறைப் பணி வேறு ஒரு பரிமாணத்தில் ஆரம்ப மானது.

அச்சுக் கோர்த்து பிரசுரம் செய்யும் பாரம்பரிய முறையில் பல வருடங்கள் ஈழநாடு நிறுவனத்தின் அனுபவம் பெற்றிருந்தார். ஆனால் 1985-இல் லண்டனுக்கு இடம்பெயர்ந்த பின்னர் ஒரு பத்திரிகையை நடத்த முற்றிலும் மாறுபாடான வழியை தேட வேண்டி இருந்தது. நான் லண்டன் சென்றபோது நேரில் கண்டவை ஆச்சரியத்தைக் கொடுத்தது. கணினியில் துண்டு துண்டாக Type செய்து எடுத்து, பெரிய மட்டைகளில் வெட்டி ஒட்டி, பின்னர் அதற்கு Plate செய்து பத்திரிகையாக்கும் முறையையும், படுகின்ற கஷ்டத்தையும் பார்த்து ஆச்சரியப் பட்டேன். உடல் உழைப்பு என்பது ஒருபுறம் இருக்க அதற்கு லண்டனில் ஏற்படும் செலவு என்பதும் நினைத்துப் பார்க்க முடியாத அளவில் இருந்தது.

தமிழ் மீதும் தமிழினத்தின் மீதும் இருந்த வேட்கையும் எப்படி யாவது புலம்பெயர் தேசத்திலும் பத்திரிகையை வெளிக் கொண்டுவர வேண்டும் என்ற ஆர்வமும் இவரது பத்திரிகைப் பணியைத் தொடர வைத்தது.

லண்டனில் 'தமிழன்' என்ற பெயரில் தொடங்கிப் பின்னர் 'ஈழ கேசரி' வார இதழாக உருவெடுத்து 1993 முதல் 'புதினம்' என்ற பெயரில் Covid19 தொற்றுவரை 20 ஆண்டுகளுக்கு மேலாக லண்டன் மாநகர் முழுவதும் வெற்றி நடைபோட்டது இவரது பத்திரிகை. இது மட்டுமன்றி 'மனம் பேசுகிறது', 'ஈழ சேகரி' போன்ற மாதாந்த சஞ்சிகைகளையும் வெளியிட்டு ஐரோப்பிய வாழ் புலம்பெயர் மனங்களில் மட்டுமல்லாது உலக தமிழ் அரங்கிலும் தனக்கென ஒரு பெயரை நிலை நாட்டிக் கொண்டவர் திரு. ராஜகோபால் அவர்கள்.

1993-இல் பத்திரிகை வடிவில் வெளிவந்த ஈழகேசரி, புதினம் உதயம் பெற்ற பின்னர் மாத சஞ்சிகையாக சமகாலத்தில் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. 1994-ஆம் ஆண்டு காலப் பகுதியில் (ஆண்டு சரியாக நினைவில் இல்லை) ராஜகோபால் அவர்களின் எழுத்திலும் ஈழுகேசரி பத்திரிகை

யிலும் விருப்பம் மேலிட்ட காரணத்தினால் கனடாவில் இருந்த அன்பர் தீவகம் இராஜலிங்கம் அவர்கள் வாராவாரம் லண்டன் ஈழகேசரியை வரவழைத்து சில மாற்றங்களோடு கனடாவில் 'ஈழகேசரி' கனடா பதிப்பாக வெளியிட்டு வந்தது ஒரு புதிய அத்தியாயமாக அமைந்தது. ஆனால் சில காலங்களின் பின் பல இடர்களின் காரணமாக அது தொடரப்படவில்லை.

பிறந்து தவழ்ந்து அளைந்து எழுந்து விழுந்து சொந்தங்களோடும் பந்தங்களோடும் வாழ்ந்த சொந்த பூமியைப் பிரிந்து ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பால் அந்நிய நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்கள் மத்தியில் ஆசிரியருக்கு பேரும் புகழும் ஈட்டிக் கொடுத்த முக்கியமான நூல்கள் இரண்டு. அதில் முதலாவது 'வல்வெட்டியிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள்' இரண்டாவது 'ஆழிக்குமரன்'.

1994-இல் மேற்குறிப்பிட்ட இரண்டு நூல்களும் கனடாவில் 3 இடங்களில் மிக வெற்றிகரமாக வெளியிட்டு வைக்கப்பட்டது. ஸ்காபுரோவில் அமைந்துள்ள Woburn Collegiate-இன் கலையரங்கில் முதல் நிகழ்வு ஆசிரியரின் மகளான சர்மினியின் நாட்டிய நிகழ்ச்சியுடன் புத்தக வெளியீட்டு நிகழ்வும் ஒழுங்கு செய்யப்பட்டது. பலவித சவால்களுக்கு மத்தியில் நான் இந்த ஒழுங்குகளில் முக்கிய பங்கை எடுத்திருந்தேன். தமிழர் தகவல் ஆசிரியர் திரு. திருச்செல்வம் அவர்களின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. அரங்கம் முற்றாக நிறைந்த, வரலாறு காணாத புத்தக வெளியீடாக இந்நிகழ்வு அமைந்ததில் எனக்கும் பெருமிதம். ஆசிரியருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. இப்படியொரு நிறைவான நிகழ்வைத் தன் வாழ்க்கையில் காணவில்லை என அவர் தற்போதும் என்னிடம் கூறக் கேட்டு இருக்கிறேன்.

தமிழ் ஈழ வீரர்களின் சாதனைகளை சரித்திரமாகப் படைத்து உலகறியச் செய்த காரணத்தால்தான் உங்கள் எழுத்துகளை நேசிக்கிறோம் என்று உணர்ச்சி பொங்கும் வார்த்தைகள் பரிமாறப்பட்டன. வீரத்தின் விளைநிலமான வல்வெட்டித்துறையில் பிறந்த ஆழிக்குமரன் ஆனந்தன் 7 உலக சாதனைகளைப் படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துக் கொண்ட பின்னர் 8-வது சாதனை நோக்கி ஆங்கிலக் கால்வாயை நீச்சலடித்து கடக்க முற்பட்டபோது தனது உயிரை நீக்கவேண்டிய நிலை உருவானது. இந்த உண்மைக் கதை 'தமிழன்' பத்திரிகையில் தொடராக வெளிவந்து பலரதும் பாராட்டைப் பெற்ற பின்னர், நூல்வடிவமாக்கப்பட்டுப் பல நாடுகளிலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இரண்டாவது நிகழ்வு மொன்றியல் மாநகரில் திரு. வீணை மைந்தனின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆசிரியரின் மகளான சர்மினியுடன் மருமகள் கண்ணாவும் இணைந்து வழங்கிய மயில் நடனம் இந்நிகழ்வில் பலராலும் பாராட்டப்பட்டது. ரொறன்ரோவில் இருந்து சென்றிருந்த தமிழர் தகவல் ஆசிரியர் எஸ். திருச்செல்வம், உதயன் பத்திரிகை ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் ஆகியோருடைய பேச்சுகளை உள்ளடக்கியதாக, இங்கும் நூல் வெளியீடு சிறப்பாக நடைபெற்றது.

மூன்றாவது புத்தக வெளியீடு சம காலப்பகுதியில் ரொறன்ரோ கூட்டுறவு இல்ல மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்று முடிந்து பலரது பாராட்டையும் பெற்றது. மொத்தத்தில் கனடாவில் ஒழுங்குசெய்யப்பட்டு மிக வெற்றிகரமாக நடந்து முடிந்த மூன்று புத்தக வெளியீட்டு நிகழ்வுகளும் மனநிறைவுடனும் பண நிறைவுடனும் நடந்து முடிந்தமை ஆசிரியரின் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது பற்றிப் பல சந்தர்ப்பங்களிலும் அவர் கூறக்கேட்டிருக்கிறேன்.

புகழ்பூத்த மூத்த மூத்த பத்திரிகையாளரான திரு. ராஜகோபால் அவர்களுக்கு அவரது திறமையைப் பாராட்டி பல நாடுகளிலும் விருதுகள் வழங்கப்பட்டதும், பாராட்டப்பட்டதும் அவரது உழைப்பிற்கு கிடைத்த பரிசு. அந்த வகையில், தமிழர் தகவல் நிறுவனத்தினால் 2000-ஆம் ஆண்டு 'வாழ்நாள் முழுநேரப் பத்திரிகையாளன்' என்ற விருதும் சி.வை. தாமோரம்பிள்ளை ஞாபகார்த்த தங்கப் பதக்கமும் வழங்கி பாராட்டப்பட்டார். ஈழத்தமிழ் பத்திரிகையாளர் ராஜகோபாலுக்கு அறிமுகம் தேவையில்லை. அவர் வாழ்கின்ற இடந்தான் மாறியிருக்கிறதே தவிர அவரிலோ அல்லது அவரின் பணியிலோ எந்தவித மாற்றமுமில்லை. அங்கும் அவர் முழு நேரப் பத்திரிகையாளராக இருந்தார். புலம்பெயர்ந்து வாழும் மண்ணிலும் அவர் முழு நேரப் பத்திரிகையாளராகவே இருக்கிறார் என அறிமுகம் செய்யபட்டது இன்றும் நினைவில் இருக்கிறது.

ஒரு பொறுப்பு மிக்க பாசமுள்ள அண்ணனாக வாழ்ந்து காட்டி, அண்ணனுக்கு இலக்கணம் வகுத்துக் கொண்ட திரு. ராஜகோபால் அவர்கள் அவரது சகோதரர்களுக்கு மட்டுமன்றி, எல்லோருக்கும் பொதுவான 'அண்ணா'வாக வாழ்ந்து வருகிறார். அதனையும் தாண்டி, தனது மனைவிக்கு ஏற்ற உத்தம கணவராகவும் பாசம் மிக்க தந்தையாகவும் விருப்பத்திற்குரிய மாமனாராகவும் பிரியமுள்ள தாத்தாவாகவும் பரிணமிக்கத் தவறவில்லை.

மறுபுறம் இவரது எழுத்து வன்மையினாலும் வாசகர்களோடு அந்தரங்கமாக உறவாடும் திறமையினாலும் பயனடைந்தோர் பல்லாயிரம். சின்னஞ்சிறு ஏழைச் சிறுமிகள் முதல், அரசியல்வாதிகள், தொழில் முனைவர்கள், டாக்டர்கள், கலைஞர்கள், சட்டவாளர்கள், நகைக்கடை உரிமையாளர்கள் என பலதரப்பட்டவர்களைப் பிரபலமாக்கி அவர்கள் கொண்ட தொழில் துறைகளை உச்ச நிலைக்குக் கொண்டுவந்த இவரது பங்கு மறக்கப்பட அல்லது மறைக்கப்பட முடியாத ஒன்று. அந்த வகையில் இவரது மனைவி திருமதி ராகினி ராஜகோபாலின் 'நாட்டியாலயா' லண்டனில் மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளிலும் புகழோடு கொடி கட்டிப் பறக்கவும் கோலோச்சவும் உறுதுணையாக இருந்தது என்பது எம் கண்முன்னே காணக் கூடியதாக இருக்கின்றது.

இவரது பத்திரிகை ஆழுமையும் எழுத்தாற்றலும், அவரது பேனாவும் அவரிடம் உள்ள பெரிய ஆயுதங்கள். பலரது வெற்றிக்குப் பின்னாலும் இவரது பேனா ஏணிப்படியாக நின்றிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

முதுமையின் நியதிக்கு யாரும் விதிவிலக்கல்ல. இளைப்பாற வேண்டியதும் காலத்தின் கட்டாயம். அந்த வகையில் எட்டாவது தசாப்தத்தை எட்டிப் பிடித்திருக்கும் திரு. ராஜ கோபால் அவர்கள் சகல செல்வங்களோடும் புகழோடும் ஆரோக்கியத்தோடும் மேலும் பல தசாப்தங்களை எட்ட வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.



velasubramaniam@thaiveedu.com

# நீ ஒரு சகாப்தம்

– அ. கந்தசாமி –

இதயம் தொட்ட
என் இனிய நண்பனுக்கு

எங்களுக்குள்
எழுதித்தீரா வெற்று
எழுத்தோலைகள் பல..

முனை மழுங்கா
எழுத்தாணிகள் சில
என் வீட்டுப் பறணில்
போட்டது போட்டபடி
இன்றும் அப்படியே!

நீயும் நானும்
கைபிடித்துக் கதைத்துக்
கடந்து சென்ற காற்றடங்கள்
புழுதி போர்த்த தரையில் அல்ல..

வெளியில் எடுத்து
வெட்டிச் சீர்செய்த என்
இதயச் சுவர்களில்
இன்றும் இசை கூட்டும்.

அன்று நீ விட்ட பகிடிகளால்
எனக்குப் புரைக்கேற
நீர் தேடி நீ அலைந்த
கணங்கள் கனவிலும் வரும்
அது ஒரு வரம்.

இன்று,

தென்திசைத் தூதனை
வரவு பார்க்கும் வயது
எனக்கு...
உனக்கும் அது தூரமில்லை.

மூன்றாங் காலாய் நீண்டிருக்கும்
ஊன்றுகோல் துணையுடன்தான்
நகர்கின்றன,
கால்களும் காலங்களும்

விழித்திரை ஓரத்தில்
ஒட்டடையாய் ஒதுங்கும்
காட்சிகள்தான் எத்தனை?

சுருக்கேறிய தோலுக்குள்
நரை தொடா நினைவுகள்
ஆயிரமாயிரம்



kandasamy.a@thaiveedu.com

முன்னால் இடம் இருந்தால்
தோழனுக்கும்
உன் தோள்த் துண்டைப்
போட்டு வை.

யாழ்தேவியின் யன்னலோர
இருக்கையில் இடம் பிடிக்க
காங்கேசன்துறை வரை
காரோடிப்போன காலமடா அது.

உன் சொல் கேட்க
ஏங்கிய என் செவியும்
என் சொல் கேட்க
ஏங்கிய உன் செவியும்
இப்போதும் கூர்மை
குன்றிவிடவில்லை.

உன் வார்த்தை வரத்துக்காய்
காத்திருக்கின்றன என் காதுகள்.

பசி எடுக்கும் போதெல்லாம்
பசிய ஞாபகங்களை
இரை மீட்கும்
கிழட்டுப் பசுக்களாய் நாம்!

வாழ்வு எங்களை
வாழ வைத்துப் பார்க்கின்றது,
எனக்குந்தான்
உனக்கும்தான்.

கடந்துபோன நாட்கள்
கனதியானவை
வாழ்ந்தவை எல்லாம்
வரலாறானவை

எதிர்ப்படும் நாளொன்றில்
விதி மங்கை
கணையோடு வந்து
கதவு தட்டலாம்.

அவள் வரும்போது வரட்டும்

அதுவரை,

என் தோழனே
வாடா
வாழ்ந்துதான் பார்ப்போமே!





# நண்பர் ராஜகோபால் எனது நல்ல வழிகாட்டி

– இரத்தினம் கந்தசாமி

ஈழத் தமிழ் மக்களின் தாயகமான வடக்கு - கிழக்கில் குறிப்பாக யாழ். மண்ணில், நாட்டின் உயர்கல்வி நிறுவனமோ அல்லது அதற்கு ஈடான வேறு உயர் கல்வி நிறுவனங்களோ எதுவும் இல்லாத காலத்தில், பெருமைக்குரிய யாழ். ஈழநாடு நிறுவனம் பல்கலைக்கழகமாக - ஊடகத்துறைசார் பல்கலைக்கழகமாக மிளிர்ந்த நாட்கள் ஈழத் தமிழ் ஊடகத்துறை வரலாற்றின் அழிக்க முடியாத பக்கங்கள் என்பதை எவராலுமே மறக்க முடியாது.

யாழ். மண்ணின் மாண்புமிகு கனவான்களாகத் திகழ்ந்து கொழும்பு மாநகரிலும் பிரமுகர்களாக ஊடகத் துறைக்குப் பெருமை சேர்ந்த அமரர் கே.சி. தங்கராசா மற்றும் அவரது சகோதரர் அமரர் வைத்தியர் கே.சி. சண்முகரத்தினம் உட்பட்ட பிரமுகர்களால் ஆரம்பிக்கப்பட்டு தலைசிறந்த ஊடக நிறுவனமாகத் திகழ்ந்த யாழ் ஈழநாடு பண்ணையில்தான் முதன் முதலில் எனது அருமை நண்பர் ராஜகோபலைச் சந்தித்தேன்.

சுமார் 5 ஆண்டுகள் கொழும்பு தினபதி - சிந்தாமணி உட்பட்ட பத்திரிகைகளை வெளியிட்டு வந்த நிறுவனத்தில் பணியாற்றிய பின்னரும் பத்திரிகைப் பயிற்சியாளராக ஈழநாட்டில் இணைந்தபோது ராஜகோபால் அவர்களை எனது ஆசான்களில் ஒருவராகவே சந்தித்தேன்.

தினபதி - சிந்தாமணி பண்ணையில் பெற்றுக் கொண்ட எனது அனுபவத்தை புடம்போட்ட அனைத்துப் பெருமையும் ராஜ கோபாலையே சாரும்.

யாழ். ஈழநாடு, ஈழநாடு கொழும்பு பணியகம், பாரிஸ் ஈழநாடு, ரிஆர்ரி வானொலி - தொலைக்காட்சி, ரிரிஎன் தொலைக் காட்சி, ஜிரிவி தொலைக்காட்சி, லண்டன் தீபம் தொலைக் காட்சி என எனது ஊடகப் பணியின் நீட்சிக்கு நண்பர் ராஜகோபால் அவர்களின் அளப்பரிய பயிற்சி ஊடான வழி காட்டி பேருதவியாக அமைந்தது என்பது வெறும் முகஸ்து திக்காக அல்ல என்பதை என்னால் உறுதியாகக் குறிப்பிட முடியும்.

இலங்கையில் 1816-ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட நீண்ட வரலாறு கொண்ட TIMES OF CEYLON பத்திரிகை நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக பிற்காலத்தில் பணியாற்றிய அமரர் கே.சி. தங்கராசா அவர்களின் எண்ணத்திலும் கடும் முயற்சியாலும் உருவான ஈழநாடு பத்திரிகை 1959-ஆம் ஆண்டு முதன் முதலில் தனது முதலாவது பதிப்பை வெளியிட்டது.

இலங்கையின் தலைநகரான கொழும்பில் இருந்து மட்டுமே சகல ஆங்கில, சிங்கள, தமிழ் பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்த காலத்தில் கொழும்புக்கு வெளியே வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்தும் தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள் வெளிவர வேண்டும் என்ற அமரர் கே.சி. தங்கராசா அவர்களின் எண்ணக் கருத்து இன்று யதார்த்தமாகி வடக்கிலும் கிழக்கிலும் இருந்து பல பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருப்பது அவரது தூரநோக்குக்குக் கிடைத்த பெரும் வெற்றி.

இலங்கை வரலாற்றின் முதலாவது பிராந்திய பத்திரிகையான ஈழநாட்டின் பண்ணையில் பயின்ற பல்வேறு பத்திரிகையாளர்கள் தொடர்ந்து கொழும்பு நகரில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில் மட்டுமல்லாது ஈழத் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் ஊடகத் துறையில் கோலோச்சி வருவது அந்தப் பண்ணைக்கே பெருமை சேர்க்கிறது.

யாழ். ஈழநாடு பத்திரிகையில் பல ஊடகவியலாளர்களை உருவாக்கிய அமரர்கள் கே.பி. ஹரன், என். சபாரத்தினம், எஸ்.எம்.கோபாலரத்தினம், சசிபாரதி சபாரத்தினம் ஆகியோர் மட்டுமல்லாது என் போன்ற பத்திரிகையாளர்களின் வளர்ச்சிக்கு உந்துகோலாக அமைந்த ராஜகோபால் அவர்களும் பெருமைக்குரியவர்களே.

யாழ். ஈழநாடு நிறுவனத்தில் நண்பர் ராஜகோபாலுடன் எனது ஆசான் என்பதற்கு அப்பால் ஆரம்பமான நட்புறவு புலம் பெயர்ந்து நான் பிரான்சிலும் அவர் லண்டனிலும் எமது ஊடகப் பணியைத் தொடர்ந்தாலும் அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக எமது நட்புறவு நீடித்து வருவது எனக்குக் கிடைத்த பெரும் பேறாகவே நான் கருதுகிறேன்.

ஈழநாடு பத்திரிகையில் ஒரு சில தடவைகள் எங்கள் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு, கருத்து மோதல் ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் சில மணி நேரத்திலேயே இருவரும் சகல பேதங்களையும் மறந்து விடுவோம். நமது தூய நட்புக்கு முன்னால் கருத்து மோதல்கள் எதுவும் ஒரு பொருட்டே அல்ல.

1990-ஆம் ஆண்டில் முதன் முதலில் பிரான்ஸ் தேசத்துக்கு புலம்பெயர்ந்த ஓரிரு மாதங்களில் முதல் தடவையாக லண்டன் சென்றபோது ராஜகோபாலின் இல்லத்துக்கே சென்ற வேளையில் அவரது குடும்பத்தினர் என்னை அன்பாக வரவேற்று சில தினங்கள் தமது இல்லத்திலேயே தங்க வைத்திருந்தனர்.

இந்த வேளையில் மற்றும் ஒரு நிகழ்வும் ஞாபகத்துக்கு வருகிறது. முதல் தடவையாக லண்டன் சென்ற வேளையில் அவரது முகவரியை மட்டுமே அவர் தொலைபேசியில் தந்தார். அன்று நான் அவரது வீட்டுக்கு நேரடியாகச் சென்று அவரது கதவைத் தட்டியபோது அவராலேயே நம்ப முடியவில்லை. பல ஆண்டுகளாக ஒருவரை ஒருவர் சந்திக்கவில்லை. எனினும் எமக்கிடையே இருந்த நட்புரிமையே அவரது இல்லத்தை நோக்கி எதுவித சிரமமும் இன்றி அழைத்துச் சென்றது.

மற்றவர்களுடன் நட்புறவு பாராட்டுவதில் ராஜகோபாலுக்கு நிகராக எவருமே இல்லை என்று துணிந்து கூற முடியும். அறிமுகமற்றவரை சந்தித்தால் கூட ஓரிரு சந்திப்பிலேயே இருவரும் நண்பர்களாகி விடுவார்கள். ஒரு காலத்தில் ராஜகோபாலுக்கு நண்பர்கள் அதிகம், கூடுதலானவர்களுடன் தொடர்பு வைத்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டும் இருந்ததை மறக்க முடியாது.

ராஜகோபாலுடன் ஒரு தடவை பழகியவர்கள் சகலருமே தொடர்ந்தும் நட்புறவுடனேயே இருப்பார்கள், ராஜகோபாலும் அவர்களுடன் நட்பைத் தொடர்ந்து நீடித்துக் கொள்வார். எனது நண்பர்கள் பலர் என் மூலம் அவரது நண்பர்களாகவே இருக்கின்றர்கள். ஆண்டவன் அவருக்குக் கொடுத்த மற்றும் ஒரு கொடை நட்புரிமை - நட்புறவு. ராஜகோபாலுடன் மட்டுமல்லாது அவரது குடும்பத்தினருடன் நானும், எனது குடும்பத்தினருடன் அவரும் அன்பையும் நட்பையும் தொடர்ந்து பேணி வருகிறோம்.

ஊடகத் துறையில் பணியாற்றும்போது திடீர் திடீரென தேவைகள் உருவாகும் என்பது சகலருக்கும் தெரியும். குறிப்பிட்ட கட்டுரை உடனடியாகத் தேவை என ஆசிரியர் அவரிடம் சொன்னால் போதும் சில நிமிடங்களிலேயே எத்தகைய விடயம் என்றாலும் கட்டுரை தயாராகிவிடும்.



ஈழத்தின் தமிழ் பத்திரிகைத் துறையை குறிப்பாக புலம் பெயர் தமிழ் பத்திரிகைத் துறை வரலாற்றைப் பொறுத்தவரை ராஜகோபால் தவிர்த்துவிட முடியாத அங்கம் என்பது நிச்சயம் மிகையாகாது.

பன்முக ஆற்றலின் சொந்தக்காரரான ராஜகோபால் தமது மாணவப் பருவத்தில் சிறுகதை எழுத்தாளனாகவே ஊடகத் துறையில் காலடி எடுத்து வைத்தார். ஊடகத் துறையில் சிறுகதை எழுத்தாளர், கட்டுரையாளர், பத்தி எழுத்தாளர், உதவி ஆசிரியர், நிர்வாக ஆசிரியர் உட்பட்ட பல்வேறு பரிமாணங்களைக் கடந்து பத்திரிகை நிறுவனங்களின் தலைமை நிர்வாகியாகவும் ஊடகத் துறைக்கு தம்மை அர்ப்பணித்து செயற்பட்டு வந்தவர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் யாழ். ஈழநாடு பண்ணையில் என்னுடன் பணியாற்றிய பின்னர் இங்கிலாந்து, நோர்வே ஆகிய நாடுகளிலும் தற்போது கனடாவிலும் ஊடகப் பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் எனது அருமை நண்பர் இளவாலை எஸ். ஜெகதீசன் பற்றியும் நினைத்துக் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

யாழ். ஈழநாடு பணியகத்தில் ஒரே நாளில் இணைந்து கொண்ட நண்பர் ஜெகதீசனும் நானும், ராஜகோபாலின் மிகப் பெரிய நட்பு வட்டத்தினுள் போட்டி போட்டுக் கொண்டு உலாவி வந்த நாட்களையும் மறக்க முடியாது.

80-வது அகவையைக் கடந்து 81-வது அகவையில் காலடி எடுத்து வைத்திருக்கும் எனது இனிய நண்பர் ராஜகோபாலுக்கு எனது வாழ்த்துகளையும் எனது குடும்பத்தினர் சார்பாகவும் இதயம் நிறைந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதில் பேருவகை கொள்கின்றேன்.



ratnamkandasamy@thaiveedu.com



# ராஜன் அண்ணா ஓர் ஆழ்கடல் முத்து

**– சரோஜினி சந்திரகோபால்**

எழுதவேண்டும் என்ற எண்ணம் நெஞ்சம் நிறைய இருந்த போதும், எனது எழுத்தார்வத்தை இனம்கண்டு, என்னை முன்னின்று ஊக்குவித்து, துணிச்சலுடன் எழுத வைத்த ஒருவரைப் பற்றி எழுதவேண்டும் என்று எண்ணும்போது ஏனோ ஒரு தயக்கம்.

எழுத்துலகில், அரை நூற்றாண்டினைத் தாண்டி, தனக்கென ஒரு தனி முத்திரை பதித்தவரைப் பற்றி எழுதுவதில் தயக்கம் இருந்தபோதும், ஓர் எழுத்தாளருக்கு அதனைத் தவிர்த்து இன்னுமொரு வட்டம் இருக்கின்றதல்லவா? அந்த பெருவட்டம்தான் அவரது குடும்பம்.

'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்பார்கள். மிக மிகப் பெரிய அங்கீகாரம். குடும்பமெனும் பல்கலைக்கழகத்தில் நானும் ஒரு மாணவி என்ற பெருமகிழ்வுடன் சுழல்கின்றது என் பேனா. பத்திரிகாசிரியர் திரு. ராஜகோபால் என் கணவர் சந்திரகோபாலின் அண்ணா. என் மைத்துனர். என் உடன் பிறவாச் சகோதரர்.

ராஜன் அண்ணா வீட்டில், எப்பொழுது சென்றாலும், பேனாவைக் கையில் பிடித்தபடி வந்து கதவைத் திறப்பார். இது இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள ஒன்று. குறிப்பிட்ட நேரத்தில் பத்திரிகை வெளிவர வேண்டும் என்பதில் உள்ள வெறி.

என்றோ ஒருநாள் அவரிடம் கேட்ட ஞாபகம் 'இந்த வேலையைச் செய்ய உங்களுக்கு அலுப்பாக இல்லையா அண்ணா?' என்று. 'அலுப்பா? எனக்கா? எனக்கு ஒரு பன்னிரண்டு வயசு இருக்கும், நான் வாசிக்கத் தொடங்கியபோது. எழுத்தாளர் தமிழ்வாணன் அவர்களது பரம ரசிகன் நான். கல்கண்டு இதழ் வாசிப்பது எனக்கு கற்கண்டு சாப்பிடுவது போல. ஒவ்வொரு இதழையும் வாங்கி அடுக்கி வைத்துக் கொள்வேன். ஒரு வரி விடாமல் வாசிப்பேன். அவரைப்போல ஒரு பிரபல எழுத்தாளனாக வரவேண்டும் என்று நினைத்து மகிழ்வேன். உலகமே என் எழுத்துத் திறனைக் கண்டு வியப்பதாக கற்பனை செய்து மகிழ்ந்த அந்த நாட்களை நினைக்க எனக்கே சிரிப்பாக இருக்கிறது இப்போது'. இது அண்ணா தந்த பதில்.

இன்னாருக்கு இன்னார் என்று எழுதி வைத்த இறைவன். பேனாவைப் பிடித்து நின்ற ராஜன் அண்ணாவின் கைகளில், கொஞ்சும் சலங்கையின் நாதத்தில் திளைத்திருந்த ராகினியின் கரங்களை இணைத்துவிட்டார்.

பல ஆண்டுகளை முன்னோக்கிச் சிறகடிக்கின்றது என் சிந்தனைப் பறவை. தாயகத்தில், வல்வெட்டி 'கைலாய வாசா' என் புகுந்த வீடு. ராஜன் அண்ணா கொழும்பு Lakehouse 'தினகரன்' பத்திரிகையில் வேலை. எனது கணவர் London-இல். ராகினி இளவாலை கொன்வென்டில் நடன ஆசிரியையாக பணிபுரிந்த போதும் மாலையில் வீடு வந்து விடுவார்.

கைலாய வாசாவில் என் மாமியார், மைத்துனிமார் நளினி, மாலினி, ராகினி, நான்... ஒரு கூட்டில் வாழ்ந்த பொன்னான காலம் அது. கூத்தும், கும்மாளமும் நிரம்பி ததும்பிய அந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேன்.

ராஜன் அண்ணா லீவில் வல்வெட்டி வரும் நாட்கள், அந்த நாட்களில் நடக்கும் சின்னஞ் சிறு சம்பவங்கள். அண்ணா வந்தால் நவாலிக்கு சின்னம்மா வீடு, சினிமா, இப்படி பல outings.

இந்த இடைவெளிக்குள் அண்ணரும், ராகினியும் தனியாக வெளியில் போக விரும்பும் நேரங்கள்தான் சுவாரஷ்யமாக இருக்கும். இளம் வயதிலேயே தந்தையார் தானத்தில் இருந்து குடும்பப் பொறுப்பை ஏற்று நடந்த பொறுப்புணர்ச்சி, ராகினியுடன் தனியாக போகிறேன் என்று அவரால் தங்கைமாரிடம் கூற சங்கடப்படுவார். அந்த நேரத்தில் சரோஜினியின் சேவை தான் தேவைப்படும். அதாவது நாங்களாக அவர்களை அனுப்பி வைப்பதைப் போல ஒரு நாடகத்தை டைரக்ட் பண்ணுவேன் ராகினியுடன் சேர்ந்து. Gate-இற்கு வெளியில் அவர்கள் போனபின் தான் எனக்கு நிம்மதி.

அண்ணா ஊருக்கு வந்தால் திரும்பிப் போகுமுன் ஆகக் குறைந்து இரண்டு தடவையாவது வீட்டில் பாட்டுக் கச்சேரி நடக்கும். முக்கியமாக அண்ணாவின் ஒரு நெருங்கிய நண்பர், திருமணமாகி சுண்டுக்குழியில் வாழ்ந்த தங்கை பத்மினி அவரது கணவர் கமலகாந்தன் இன்னும் ஓரிரு உறவினர்கள். காந்தன் அண்ணா பாடிய ‘போடு போடு லேக்கா போடு ஜோராக’, ‘முல்லை மலர் மேலே மொய்க்கும் வேண்டும் போலே’ இந்த பாட்டுக்களை, இன்று... அண்ணா உட்பட எங்களில் யார் கேட்டாலும், எம்மை அறியாமல் கண்ணீர் வரும். கடந்த வருடம் அவர் மண்ணுலகை நீத்து விண்ணுலகம் சென்றுவிட்டார்.

ராகினியின் ஒவ்வொரு முன்னேற்றத்திற்கும் உந்து கோலாக இருக்கும் அண்ணா, தன் தாயின் மேல் அளவிடமுடியாத அன்பு செலுத்துபவர். அம்மாவின் உடல் நலனில் அதீத அக்கறை கொண்டவர். என் மாமியாருக்கு ‘ராஜன்’ என்றால் கடவுளுக்குச் சமம். ராஜனுக்குப் பிடிச்ச சாப்பாடு செய்து கொடுத்து, சாப்பிடு ராஜன், வடிவாச் சாப்பிடு என்று பரிமாறுவதைப் பார்த்து, ‘என்ன ராகினி, அண்ணா கொழும்பில் சாப்பிடுவதே இல்லை போல இருக்குது’ என்று நான் சொல்ல, நாங்கள் எல்லோரும் சிரிப்போம். அண்ணாவுக்கும் சிரிப்பு தான். ‘மாமி எங்களுக்கும் கொஞ்சம் மிச்சம் வையுங்கோ’ என்று சொல்வேன். ‘நீங்களெல்லாம் வீட்டை நல்லாய்ச் சாப்பிடுறியள், கொழும்பில அப்படி சாப்பாடு கிடையாது’ பட்டென்று பதில் வரும். என் தாய் பாசம் மிக்க மாமியாரிடம் இருந்து.

என்னை, தன் தம்பியாரிடம் இலண்டனுக்கு அனுப்பி வைப்பதில் மும்முரமாக செயற்பட்டார் அண்ணா. நான் இலண்டன் வந்து சேர்ந்தேன், என் தாய் வீடு, புகுந்த வீடு இரண்டையும் பிரிந்து. சுழன்றோடும் காலச் சக்கரம், மீண்டும் எம் அனைவரையும் லண்டனில் சங்கமிக்க வைத்தது.

அண்ணாவிற்கு ஒரு மகள், மகன், மருமக்கள், 5 பேரப்பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆண்டுகள் பல தாண்டினாலும், நாம் அனைவருமே நம் குழந்தைகளுடன் வாழ்ந்தாலும், அண்ணரின் உடன் பிறப்புகள் அவரை இன்றும் மதித்து அன்பு காட்டுவதில் இம்மியளவும் பிசகியதில்லை. ராஜன் அண்ணாவும் அதே தந்தை ஸ்தானத்தை விட்டு விலகவில்லை. குடும்பத்தில் யாருக்காவது ஒரு பிரச்சினை, சுகவீனம் என்றால் அவரால் தாங்க முடியாது.

Tooting-இல் உள்ள அவரது இல்லத்திற்குப் போனால், உடன் கடைக்கு ஓடுவார் என் மகளுக்கு விருப்பமான ‘சமோசா’ வாங்கி வர. அடுத்து இந்தியாவில் இருந்து வாங்கி வந்த ‘Special Brew’ கோப்பி தன் கையாலேயே தயாரித்துத் தருவதில் அவருக்கு சந்தோசம். இந்த இடைவெளியில் தொலைபேசியும் அலறி, புதினம் ஆசிரியரை அழைத்தபடி இருக்கும். எல்லா Departments-ஐயும் இலாவகமாக கையாளும் முறைகூட ‘புதினம்’ தான்.

தாயகத்தில் ஈழநாடு, தினகரன், இலண்டனில் தமிழன், ஈழகேசரி, மனம் பேசுது, புதினம் இப்படியாக அண்ணா நடந்து, கடந்து வந்த பாதைகளில் எத்தனை எத்தனை சவால்கள். அனைத்தையும் எதிர்கொண்டு, தன் குடும்பத்திலும் முழு அக்கறை காட்டும் இந்த நல்ல மனிதரைப் பார்த்து வியந்திருக்கிறேன். வேடிக்கையாகப் பேசுவது, குடும்பத்தினரை, நண்பர்களை நேர்காணல் செய்வது என்றால் எனக்கு நிறைய விருப்பம்.

ராஜன் அண்ணாவைப் பற்றி பேசுவதென்றால் என் மாமியாருக்கு கரும்பு தின்பதுபோல. இன்று இறை பதத்தில் இளைப்பாறும் என் மாமியார், என்னிடம் கண்ணீர் மல்க கூறிய ஒரு சில வரிகளை நினைத்துப் பார்க்கிறேன். ‘அவர்... அதுதான் உம்முடைய மாமா, எங்களை விட்டிட்டுப் போன நேரம், நான் இடிஞ்சு போனன். ராஜனும் சின்னப் பெடியன். அந்த நேரம் என்ர பிள்ளை ராஜன் தான் குடும்பப் பொறுப்பை ஏற்றவர். இல்லையெண்டால் நான் என்ன செய்திருப்பனோ கடவுளுக்குத் தான் வெளிச்சம். அண்டையில இருந்து இண்டு வரைக்கும், அவர் மாறவில்லை’.

ராஜன் அண்ணாவை ஒரு ‘சுமை தாங்கி’ என்று என் மனதில் நினைத்துக் கொள்வேன். குடும்பத்தில் அவருக்கு இருக்கும் பற்று, தாயகம், தாய் மொழி, எழுத்துலகில் அவருக்குள்ள நேசம், நண்பர்களுடனான பாசம். உங்கள் அண்ணாவிற்கு பல முகங்கள் உண்டு என்று என் கணவரிடமும் சொல்லிக் கொள்வேன்.

**என்றோ ஒருநாள் அவரிடம் கேட்ட ஞாபகம்**
**‘இந்த வேலையைச் செய்ய உங்களுக்கு அலுப்பாக இல்லையா அண்ணா?’ ‘அலுப்பா? எனக்கா? எனக்கு ஒரு பன்னிரண்டு வயசு இருக்கும், நான் வாசிக்கத் தொடங்கியபோது, எழுத்தாளர் தமிழ்வாணன் அவர்களது பரம ரசிகன் நான், கல்கண்டு இதழ் வாசிப்பது எனக்கு கற்கண்டு சாப்பிடுவது போல, ஒவ்வொரு இதழையும் வாங்கி அடுக்கி வைத்துக் கொள்வேன், ஒரு வரி விடாமல் வாசிப்பேன், அவரைப்போல ஒரு பிரபல எழுத்தாளனாக வரவேண்டும் என்று நினைத்து மகிழ்வேன்.’ என்றார்**











பெண்கள் எழுதவேண்டும் என்பதில் அசையா உறுதி கொண்டவர், ராஜன் அண்ணா. படிக்கும் காலத்தில் இருந்தே எனக்கும் தாய் மொழியில் எழுதுவது, பேசுவது என்றால் பேரார்வம். நான் எழுதிய இசையும் கதையும், கவிதைகளை கேட்டு வாசித்த ராஜன் அண்ணா, இலண்டன் வந்த பின்னர் என்னை எழுதும்படி ஊக்குவித்தார். சுற்றி வளைக்காமல், வாசகர்களைக் கவரும் வகையில் எழுதும்படி அறிவுரைகள் கூறுவார்.

பாடசாலை ஆண்டு விழாக்கள், சமூக விசேட தினங்கள், புத்தக வெளியீட்டு விழாக்கள், தனி மனிதர்களின் சிறப்பான முயற்சிகள் இப்படியாக எழுதத் தொடங்கினேன்.

எந்த ஒரு விடயத்தையும் செய்ய வேண்டும் என்ற ஆசை எல்லோர் மனதிலும் இருக்கலாம். ஆனால் எமக்குள் புதைந் திருக்கும் அந்த ஆசையை, இலட்சிய வேட்கையை செயற்ப டுத்த ஒரு தளம் வேண்டும். அந்த தளத்தை உருவகித்து, அனுபவமற்றவர்களை களமிறக்கி, இந்த பூமிப் பந்துக்கு அறிமுகப்படுத்தி ஊக்குவிக்க, ஒரு பண்பட்ட மனம் படைத்த சாணக்கியன் வேண்டும்.

இந்த இடத்தில் தான் என் வழிகாட்டி, ஆசான், ராஜன் அண்ணாவைப் பார்க்கிறேன். எழுதும் ஆக்கங்களை வாசித்து 'நன்றாக இருக்கிறது, இதனை வேறு முறையில் மாற்றி எழுதவேண்டும்' என்றெல்லாம் உற்சாகப்படுத்துவார்.

புலம் பெயர் நாடுகளில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் பற்றி எழுத விரும்புவதாகக் கூறினேன். 'நல்ல ஐடியா சரோ, ஆனால் எழுதத் தொடங்கினால் தொடர்ந்து எழுத வேண்டும்' என்று மகிழ்ச்சியோடு கூறி, தனது பத்திரிகையிலேயே 'புலத் தமிழ் பூங்கா' என்ற தலைப்பில் 40 பாடசாலைகள் வரையில் என்னை தொடர்ந்து எழுத வைத்த அந்தப் பரந்த உள்ளம் படைத்த பெரிய மனிதரை என்றென்றும் நன்றியுடன் நினைத்துக் கொள்கின்றது என் மனம்.

ராஜன் அண்ணாவின் அயரா உழைப்பு, தொழில் பக்தி, அரை நூற்றாண்டைத் தாண்டிய ஆழ்ந்த அனுபவம், எதிர் வரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் துணிச்சல் இவை தான் எழுத்துலகில் இவருக்கு ஒரு நிரந்தர இடத்தை அமைத்துக் கொடுத்துள்ளன.

ராஜன் அண்ணா, உங்கள் வாழ்வில் வந்த சோதனைகள் அனைத்தையும், சாதனைகளாக மாற்றிக் காட்டியவர் நீங்கள். மீண்டும் ஒரு புதிய, விசேட ஆண்டுக்குள் கால் பதிக்கின்றீர்கள்.

எங்கள் குடும்பத்தின் பெரும் சொத்தான நீங்கள், நீண்ட ஆயுள், நிறைவான மகிழ்ச்சி, அளவான செல்வம், அசையாத தன்னம்பிக்கை இவற்றுடன் அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள் புடைசூழ பல நூறாண்டுகள் வாழ எல்லாம் வல்ல இறைவன் துணை வேண்டி உங்கள் தம்பி சந்திரன், மகள், மருமகன், பேரப் பிள்ளைகள் குடும்பத்தினருடன் இணைந்து வாழ்த்துகின்றேன்.



sarojini.s@thaiveedu.com

# புதினத்தில் புதுமை - ராஜகோபால்

## பொ. சண்முகநாதன்

பாமா ராஜகோபால் என்று எழுத்துலகில் பெருமை பெற்றவர் திரு. ஈ.கே. ராஜகோபால். 'அப்பா என்பதில் உள்ள 'பா'வும் 'அம்மா' என்பதில் உள்ள 'மா'வும் சேர்ந்தாலும் அந்த 'பாமா' வரும்தானே! சும்மா சொல்லக்கூடாது அவர் தமது பெற்றோர்கள் மீது மிகுந்த பாசம் கொண்டவர்.

எனக்கும் நண்பர் ராஜகோபாலுக்கும் வயது வித்தியாசம் சற்று அதிகமாக இருந்தாலும் இன்னொரு வகையில் சமகாலத்தில் எழுத்துலகிற்கு வந்தவர்கள் எனலாம். அப்போதெல்லாம் ஒரு காலத்திலே சுயாவும் அனுசுயாவும் ஈழகேசரியில் போட்டி போட்டுக்கொண்டு எழுதியது போலத்தான் நாங்களும் ஈழநாட்டிலும் சரி, கலைச்செல்வி, புதினம், வெள்ளி, சுதந்திரன் இதழ்களிலும்கூட நானா? நீயா? விட்டேனா பார்? என்றவாறாகத்தான் எழுத்துலகில் நடைபயின்றோம்.

இலங்கை வானொலியில் குறுநாடகங்கள் எழுதத் தொடங்கியதும் அப்படித்தான்.

பின்னர் திரு. ராஜகோபாலுக்கு ஈழநாடு ஆசிரியர் குழுவில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. வாய்ப்பு என்பது ஈழநாட்டுக்கா, ராஜகோபாலுக்கா என்று சொல்லும் அளவுக்கு பிரகாசித்தார்.

பத்திரிகையாளன் இலக்கியம் படைப்பவனாக இருக்க வேண்டியது அவசியமில்லை.

ராஜகோபால் இலக்கியவாதியாக இருந்து பத்திரிகைத் துறைக்கு வந்தவர் என்பதாலும், அதன் பின்னரும் இலக்கியம் படைப்பவராக இருந்ததாலும் அங்கும் அவரால் 'புதுமை' செய்ய முடிந்தது.

எழுத்திலே ஒருவித கலைத்துவமும் சொல்ல வேண்டியதை சுவையாக எழுதுவதும் அவரது தனித்துவம் எனலாம்.

ஈழநாட்டை அடுத்து அவருக்குத் தினகரனில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது.

அங்கும் அவரது மேதா விலாசத்தையும் முத்திரைகளையும் கண்டோம். எந்தப் பத்திரிகையும் அவரை வலிய (வருந்தி) அழைத்துத் தம்முடன் சேர்த்துக்கொள்ளும் அளவிற்கு அவரது புகழ் பரவிவிட்டது.

அக்கரைச் சீமையிலும் அதுதான் கதைபோல் இருக்கிறது. முதலில் அங்கு ஈழகேசரி இதழை நடத்தி வந்தார். அந்த இதழ்களில் சிலவற்றில்கூட எனது கட்டுரைகள் இடம் பெற்றன.

சில நிர்வாகப் பிரச்சினைகள் காரணமாகவோ என்னவோ அதிலிருந்து விலகி 'புதினம்' பத்திரிகையை அவர் தொடங்க வேண்டி வந்தது. இத்துறையில் போதிய அனுபவமும் ஆற்றலும் அவரிடம்தான் இருக்கிறதே. பிறகென்ன?

நண்பன் ராஜகோபால்... ஆம், கொள்கை அளவில் எமக்கிடையே சில முரண்பாடுகள் இருந்தபோதிலும் இன்றளவும் நாம் நண்பர்கள்தான்.

அவர் இடதுசாரி எண்ணம் கொண்டவர். இலக்கிய உலகைப் பொறுத்தவரையில் அவர் முற்போக்கு... நான் தமிழரசுக் கட்சி ஆதரவாளனாக இருந்தபோதிலும், எமது நட்பு நாகரிகமாகத்தான் இருந்தது.

அவரும் சரி, நானும் சரி சந்திக்கும்போது இணக்கமான கருத்துகளைத்தான் பரிமாறிக்கொள்வோம். முரண்பாடான கருத்துகளை வெளியிடுவதை நாசூக்காகத் தவிர்த்துக்கொள்வோம்.

அவருக்குப் பிடிக்காத முறையில் நான் நடந்துகொண்டால் அல்லது எழுதினால் ஆக மிஞ்சிப்போனால் 'ஏன் ஐசே உமக்கு உந்த வேலை' என்பதுடன் நிறுத்திக்கொள்வார்.

மேற்கொண்டு பேசமாட்டார். நானும்தான். என்னுடைய வீரமெல்லாம் எழுத்தளவில்தான்.

முற்போக்காளர்களைக் கிண்டல் செய்யும் வகையில் 'யதார்த்த எழுத்தாளன்' என்ற கதையினை நான் எழுதிய போதும், இலங்கை வானொலி சன்மானமாக அனுப்பிய சிங்களக் காசோலையை நான் திருப்பி அனுப்பியபோதும் அவர் என்னுடன் அப்படித்தான் நடந்துகொண்டார்.

எம்மிடையே உள்ள அந்த நயத்தக்க நாகரிகம்தான் எமது நட்பு இன்னமும் நீடித்து வருவதற்கு காரணமாக இருக்க வேண்டும்.

சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர் அங்கும் கலை, இலக்கியம், பத்திரிகை என்று செலவழித்துக் கொண்டுதான் இருக்கிறார். எல்லாவற்றையும் மனிசிக்காரியின் வருமானத்தை வைத்துத்தான் சமாளித்து வருகின்றார்.

ஆனால், புதினத்தைப் பார்க்கின்றபோது, அது வெற்றிநடை போடுவதை கவனிக்கும்போது, எனக்கு அப்படித் தோன்றவில்லை. அவர் 'நன்றாக' வாழ்வதாகவே தெரிகின்றது.

நிறைவாகக் கூறுகின்றேன். அவர் எனக்கு நண்பனாக இருப்பதையிட்டு பெருமையடைகின்றேன்.

info@thaiveedu.com

# நட்புக்காக நல்லதைச் செய்யும் ராஜகோபால்

உடுவை

எஸ். தில்லைநடராசா

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் சிறு வகுப்புகளிலிருந்து என் இனிய நண்பன் சந்திரன் என சுருக்கமாக அழைக்கப்படும் சந்திரகோபால்.

சந்திரனின் நட்பு பற்றி வீட்டில் தெரிவித்தபோது சந்திரனின் தங்கை பவானி தன் வகுப்பில் படிப்பதாகவும் தனது சிநேகிதி எனவும் என் தங்கை பாரதி சொன்னாள்.

கிராமப்புறங்களில் இது சர்வ சாதாரணம். சந்திரனும் நானும் சிறு வயது முதல் உயர் வகுப்பு வரை class mates.

அப்படியே சந்திரனின் தங்கை பவானியும் என் தங்கை பாரதியும் class mates.

அது மட்டுமல்ல, உடுப்பிட்டிக் கிராமத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் இருந்த சிறு நகர், வல்வெட்டி. கிராமத்தில் வாங்க முடியாத பொருட்களை வாங்க எனது தாயார் வல்வெட்டித் துறை செல்லும்போது சந்திரனின் தாயாரைச் சந்திப்பார். கதைப்பார்.

இடையிடையே சந்திரனின் தாயாரும் எங்கள் வீட்டுக்கு வருவார். இப்படி, இரண்டு குடும்ப பெற்றேர்-பிள்ளைகள் நட்பு.

இருப்பினும் சந்திரனின் நட்பால் அவரது அண்ணா ராஜகோபாலுக்கும் எனக்கும் இடையே ஏற்பட்ட நட்பு வித்தியாசமானது, என்னைவிட இரண்டொரு வயது தான் கூட, ஆனால் வயதுக்கு மீறிய அறிவு, அபார திறமை, அசாத்திய துணிச்சல். கலை இலக்கியம் தொடர்பாக அவர் தெரிவிக்கும் தகவல்கள் கருத்துகளால் அவரது நட்பை வளர்த்துக் கொள்ள விரும்பினேன்.

சிறிய சிவப்பு நிற துவிச்சக்கரவண்டி ராஜகோபாலை வல்வையிலிருந்து உடுவை வரை சுமந்து வரும் வாகனம்.

அக்காலத்தில் மாணவர்கள் சைக்கிள் வைத்திருப்பது அபூர்வம்.

நான் சைக்கிள் ஓட்டப் பழகினதே க.பொ.த. வகுப்புக்கு வந்த பின்னர் தான்.

பள்ளி மாணவர்களில் பலர் ராஜகோபாலின் சைக்கிளைப் பார்ப்பதில், தொட்டு மகிழ்வதில், இரண்டொரு நிமிடம் இரவல் வாங்கி ஓடுவதில் ஒரு வகை சுகம் காண... எனது கவனமெல்லாம் அவரது கைகளில் காணப்படும் புத்தகங்களின் மேல்தான்.

அறுபதுகளின் ஆரம்பத்தில் ‘சமஷ்டி ஏன்?’ என்ற புத்தகத்தை அவரிடமிருந்து வாங்கிப் படித்த நினைவு. அந்தப் புத்தகத்தை அதிகாரத்தில் உள்ளவர்கள் அப்போதே புரிந்து ஏற்றுக்கொண்டிருந்தால் உயிரிழப்புகள், சொத்திழப்புகள், அவலங்கள் ஏற்பட்டதைத் தவிர்த்திருக்கலாம்.

கல்லூரி மாணவர் தேர்ச்சிச்சங்கம், கூட்டங்கள், நாடகம், விவாத அரங்கு என நுழையும் வேளை ராஜகோபால் அமைதியாக அவற்றை அவதானித்து ஆழமான ஆக்கபூர்வமான அபிப்பிராயம் சொல்லுவார்.



சந்திரனாக அறிமுகமான ராஜகோபால், பள்ளிப் பருவத்திலேயே எனக்கு க.தா. சிவகுருநாதன், நா. யோகேந்திரநாதன் போன்ற வர்களின் நட்பைத் தேடித்தந்தார்.

தந்தையார் தந்த ஆதரவு, வழிகாட்டல், இவர்கள் நட்பு கலை, இலக்கியத்துறையில் எனது ஈடுபாட்டை அதிகரித்தது.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தவை மூன்று பத்திரிகைகள் -

1.தினசரியாக மலர்ந்த ஈழநாடு, 2. எல்லோரும் படிக்கக்கூடிய பல்சுவை அம்சம் நிறைந்த வாரப்பத்திரிகை புதினம், 3. வசனக் கவர்ச்சிகளால் இளைஞர்களைக் கிளர்ந்தெழ வைத்த இருவாரமொருமுறை வந்த தீப்பொறி.

அதிக விற்பனை, அதிக வாசகர் கொண்ட புதினத்தில் ராஜகோபால் ‘பாமா ராஜகோபால்’ என்னும் பெயரில் எழுதிய சிறுகதையை வெளியிட்ட வரதர், ராஜகோபாலைப் பாராட்டி அவரது கைப்பட ஒரு கடிதமும் அனுப்பியிருந்தார்.

அக்கடிதத்தை ஆகக்குறைந்தது 50 தடவைகளாவது நான் படித்திருப்பேன் என எண்ணுகின்றேன். விளைவு ஈழநாடு, சுதந்திரன், வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் சிறுவர் பகுதிகளை விட்டுவைக்கவில்லை.

ராஜகோபால் எழுதிய நடிகையும் காதலும் நாடகப் பிரதியை இலங்கை வானொலி ஒலிப்பதிவு செய்த போது, ஒத்திகை, ஒலிப்பதிவு ஆகியவற்றை பார்க்க வருமாறு அழைப்புக் கடிதத்துடன் புகையிரத ஆணைச்சீட்டையும் அனுப்பி வைத்திருந்தனர்.

ஒவ்வொரு தகவல்களையும் முதலில் பெறுபவனாக நான். எனது எழுத்துகளை முதலில் படித்து ஆவன செய்பவராக ராஜகோபால். நட்பு வளர்ந்தது. எழுத்தும் மலர்ந்தது.

தீடிரென ராஜகோபாலுக்கும் எனக்கும் சஞ்சிகை நடத்தவேண்டுமென்ற ஆசை பிறந்தது.

இந்நிலையில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் சில மாதம் படித்துவிட்டு கொழும்பு சென்று ஒரு கடிதம் அனுப்பினார்.

1962-இன் நடுப்பகுதியாக இருக்கலாம்.

‘தில்லை, எப்பிடியும் ஒரு 600 ரூபா தேடு. மாதமிருமுறை மலரும் சஞ்சிகையாக வெளியிடுவம். முதலாவது இதழ் அச்சிட 300 ரூபா போதும். இரண்டாவது இதழ் அச்சிட 300 ரூபா. முதலாவது இதழ் விற்பனைக்காசில் மூன்றாவது இதழ் அச்சிடலாம். எனது எழுத்தாள நண்பர்கள் matters தருவார்கள்.’

இக்கடிதம் பல தடவை வாசித்ததும் வீட்டில் போராட ஆரம்பித்தேன். சஞ்சிகை நடத்த காசு தராவிட்டால் படிக்க மாட்டேன் சாப்பிட மாட்டேன் என்று அடம் பிடித்தேன்.

அம்மாவின் சமாதானம் ‘தம்பி 10 - 15 ரூபா எண்டால் தரலாம். 600 ரூபாவுக்கு எங்கை போறது ?

ஒரு நேரம் சாப்பாடு பிந்தினாலும் அழுகிற வயிறு எவ்வளவு நேரத்துக்கு தாக்கு பிடிக்கும்.

வீட்டாருடன் சமாதானமாகி சாப்பிட்டாலும், படித்தாலும் உள்ளுக்கு சஞ்சிகை நடத்தும் ஆசை கூடிக்கொண்டே வந்தது.

அப்படிக் கொஞ்சம், இப்படிக் கொஞ்சம் என்று தேடிய பணத்துடன், தெரிந்தவரின் திருவிழாக் கடையில் இராப்பகல் வேலை மூலம் மொத்தம் 200 ரூபாவுக்குக் கொஞ்சம் கூட.

ராஜகோபால் மூலம் அறிமுகமான நா. யோகேந்திரநாதன் (சங்கிலி), ஜோ.ஏ.எம். தாஸ் ஆகியோரின் எழுத்துகளுடன் 1962-இல் வெளியான ‘மாணவன்’ சஞ்சிகையின் ஆசிரியர், நான்.

14-வது வயதில் க.பொ.த (சா.த) இரண்டாம் ஆண்டில் கல்வி பயின்ற மாணவனான என்னை, எனக்கு கல்வி கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர்களே ‘ஆசிரியர்’ என அழைக்கும் படி உயர்த்தி வைத்தவர் ராஜகோபால்.

ஆனால் முதலாவது இதழ் விற்பனைப் பணத்தில் மூன்றாவது இதழ் அச்சிடலாம் என ராஜகோபால் சொன்னது, ‘அந்தக்காலத்தில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பென்ஸ் கார் விழும் என எதிர்பார்த்து 50 சதம் சுவீப் டிக்கட் எடுத்தவனின் கனவுக் கதையானது’.

மாணவன் இரண்டு இதழ்கள் ஓஹோ என்று வெளியாகின.

கல்லூரி மாணவனாகிய நான் படிக்க வேண்டும் என விற்பனையாளர் வாசகர்கள் விரும்பியதால், இரண்டு இதழ்களுக்கு மேல் வெளியிடக்கூடிய சந்தர்ப்பத்தை யாரும் உருவாக்கவில்லை.

இருந்தாலும் வேகமாக எழுத ஆரம்பித்தேன். ராஜகோபால் என்னைவிட வேகமாக, மிகவிவேகமாக எழுதினார். அந்த எழுத்தாற்றல் அவரை ‘விவேகி’ சஞ்சிகை ஆசிரிய பீடத்தில் அமர்த்தியது. வீட்டுப் பொறுப்புகளையும் சுமக்க வேண்டிய ராஜகோபால் எழுத்தின் மூலம் தொழில், அந்தஸ்து, சிறிதேனும் வருமானம் பெறவேண்டிய தேவையால் ஈழநாடு பத்திரிகையின் பணியாளர் ஆனார்.

அவர் யாழ். ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றும் போது, நான் யாழ். இந்துக்கல்லூரி க.பொ.த(உ.த) படித்துக் கொண்டிருந்தேன்.

நட்புக்காக நல்லதைச் செய்யும் ராஜகோபால், நான் பங்கு பற்றும் பள்ளி நிகழ்ச்சிகளைப் பார்க்க வந்து விடுவார்.

நினைவில் இரு சம்பவங்கள்:

அக்காலத்துக்கேற்ப விவாத மேடையில், ‘சீதனம் வாங்குவது நல்லதா கூடாதா ?’ என்ற தலைப்பில் கூடாது எனப் பேசும் அணித்தலைவனாக நான். ஆயத்தம் செய்து நன்றாகப் பேசியதால் பயப்படாமல் தீர்ப்பு கூறிய நடுவர் என்னை ஆதரித்தார். தீர்ப்பைக் கேட்டு கைதட்டிய ராஜன் என் காதில் போட்டார், ‘மைச்சான் சீதனம் வாங்கக்கூடாது எண்டு பேசு, பாராட்டுவம் எழுது. பத்திரிகையிலை போடுவம். ஆனால், சீதனம் வாங்கு’.

யாழ். இந்துக்கல்லூரி வைர விழாவில், சொக்கன் தயாரித்த ‘ஞானக்கவிஞன்’ நாடகத்தில், கம்பன் பாத்திரமேற்ற கணபதிப்பிள்ளைக்கு நாமம் வைத்து ஆழ்வாராக ஒப்பனை.

தேவன்-யாழ்ப்பாணம் தயாரித்த தெய்வீக்காதல் நாடகத்தில் கம்பன் பாத்திரமேற்ற எனக்கு வீபூதி சந்தன திலகத்துடன் வேறு விதமான ஒப்பனை.

ஒப்பனையை மாற்ற ஆசிரியர் சொக்கன் முயன்றபோதும் நான் மறுத்துவிட்டேன்.

நாடகம் பார்த்த ராஜகோபால் என் ஒப்பனைக் குறைபாட்டை சுட்டிக்காட்டி ஆசிரியரிடம் மன்னிப்பு கேட்க வைத்தார்.

1967-இல் கொழும்பில் எனக்கு அரசாங்கத்தில் நிரந்தர வேலை கிடைத்த போது, என்னை விட மகிழ்ந்தவர் ராஜ கோபால்.

விடுமுறையில் யாழ்ப்பாணம் செல்லும்போது எங்கள் சந்திப்பு கட்டாயம் இடம்பெறும். பலரை அறிமுகம் செய்வார். எழுதத் தூண்டுவார்.

எந்த ஒரு சிறிய விடயத்தையும் சுவையாக எழுதும் ஆற்றல் அவருக்கு இயல்பாக வரும். எல்லோரையும் வளைத்துப் போடும் அவருக்கு யாரோடும் கொழுவத் தெரியாது.

நுவரெலியா சென்ற சில தினங்களுக்குள் கலைவிழா நடத்தக்கூடிய வாய்ப்பும், விழா மலர் வெளியிடக்கூடிய வசதியும் எனக்கு கிடைத்ததும், ‘சபாஷ் தில்லை’ என என்னைப்பற்றி எழுதி பலர் என்னைப் பாராட்ட வழி செய்தார்.

வவுனியாவில் சாதாரண எழுதுநராக கடமையாற்றிய வேளையில், தன் நண்பர் மாலியுடன் வந்து என் கலை, இலக்கிய முயற்சிகளை தினகரன் வார மலர் மூலம் முழு இலங்கையும் அறியச்செய்தார்.

வவுனியாவிலிருந்து மீண்டும் கொழும்புக்கு இடமாற்றம் கிடைத்த போது, அவருக்கு தினகரனில் உதவி ஆசிரியராகும் வாய்ப்பு கிடைத்தது.

கணேசபிள்ளை, கே.எஸ். பாலச்சந்திரன், யேசுரட்ணம், கந்தசாமி போன்ற பிரபலங்களுடன் அசட்டு மாப்பிள்ளை நாடகத்தில் நான் நடித்தபோது நல்லதொரு விமர்சனம் எழுதினார்.

வழமையாக விமர்சனம் எழுதியவரின் பெயரை அடியில்தான் பத்திரிகையில் போடுவது வழக்கம். ஆனால் தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன், அசட்டு மாப்பிள்ளை என்ற தலைப்பைத் தொடர்ந்து பாமா ராஜகோபால் எனப் போட்டு ராஜகோபாலையும் என்னையும் அசட்டு மாப்பிள்ளை களாக்கிச் சிரித்தார்.

அக்காலகட்டத்தில்தான் ராஜனும் நானும் மாப்பிள்ளைக் கோலத்தில் மணவறைகளில் அமர்ந்து கொண்டோம். திருமதி. ராகினி ராஜகோபாலும் திருமதி. தேவமலர் தில்லைநடராசாவும் பல நாள் பழகியவர் போல இணை பிரியா சிநேகிதிகளானார்கள்.

இதனால் அடிக்கடி சந்திப்புகள், விருந்துண்ணல், கருத்துப் பரிமாறல்.

சாதாரண எழுதுநராக கடமையாற்றிய எனக்கு போட்டிப் பரீட்சையின் பெறுபேறாக நிர்வாகசேவை அதிகாரியாக வரும் அதிர்ஷ்டம் கிடைத்தது.

கடமைகளுக்கிடையே நிறைய எழுத வேண்டுமென்று நண்பர் எதிர்பார்த்தார். தூண்டி களம் பல அமைத்துத் தருவதாகவும் ஊக்குவித்தார்.

ஏற்கனவே எழுத்தாற்றலுள்ள நிர்வாக சேவை உத்தி யோகத்தர் பாதிக்கப்பட்டதால் பேனாவைத் தொடவும், கற்பனைக் குதிரையைத் தட்டி விடவும் பின்வாங்கினேன்.

தில்லையைக் காணவில்லை என ராஜகோபால் தினகரனில் ஒரு செய்தித் தலைப்பில், பழையதைச் சொல்லி பலரை என்னுடன் தொடர்பு கொள்ள வைத்து, மீண்டும் எழுத வைத்தார்.

நாட்டு நிலைமைகள் காரணமாக ராஜகோபால் குடும்பத்துடன் லண்டன் புகுந்தார். அரச சேவையில் என் நிலை படிப்படியாக உயர்ந்தது.

நேரடித் தொடர்பு சிரமமாக இருந்தபோதும் எனது எழுத்துகளை தேடி சிறப்பான குறிப்புகளுடன் அவர் வெளியிட்ட ‘ஈழகேசரி’, ‘மனம் பேசுது’, ‘புதினம்’ பத்திரிகைகளில் பிரசுரித்தார்.

இதனால் லண்டன், சுவிஸ், கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு கல்வி, கலை, இலக்கிய சுற்றுலா செல்லும் வாய்ப்பும் கிடைத்தது.

லண்டனுக்கு பல தடவைகள் செல்லும் அதிர்ஷ்டம். என்னை அழைத்து விருந்து தந்து. பழையதைப் பகிர்ந்துகொள்வதில் ராஜகோபாலுக்கு குதூகலம்.

இந்தக் குதூகலத்தில் ராஜகோபால் - ராகினி மட்டுமல்ல, அவர்கள் வாரிசுகள் ஷியாமும் ஷர்மினியும் களிப்புடன் கலந்து கொள்வார்கள்.

நீண்ட இரவுகளில் பழைய பரவசங்களை மீட்டி சுகானுபவம் பெற்ற பின், நான் செல்ல வேண்டிய இடங்களுக்கு வாகனத்தைச் செலுத்துவது நண்பரின் மகன் ஷியாம்.

நாமிருவரும் படித்த, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்க லண்டன் கிளை ‘வானவில்’ நிகழ்வில் கலந்துகொள்ள ஒருமுைறை இலங்கையிலிருந்து சென்றேன்.

விமான நிலையத்தில் என்னை வரவேற்க வந்திருந்த ராஜகோபாலுடன் முக்கிய பிரமுகராக வந்திருந்தவர், அவர் பேத்தி -ஷர்மினியின் மகள்.

ராஜகோபாலிடம் நினைவாற்றல் இருந்தது. தன்னம்பிக்கை இருந்தது. திட்டமிடல் இருந்தது. ஊக்குவிக்கும் மனப்பான்மை இருந்தது. திறமைகளை அடையாளம் கண்டு வெளிப்படுத்தும் திறன் இருந்தது. அதனால் அவரது ஊடக வாழ்வும் சுவை மிகுந்திருந்தது.

அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக தொடரும் நட்புக்கு இலக்கணமான நண்பன் ராஜகோபாலை இதயத்தால் வாழ்த்துகின்றேன்.



thillainadarasa.s@thaiveedu.com











# அண்ணாவும் நானும்

– பவானி ரவீந்திரன்



ஓம் என்பது இந்துக்களின் மந்திரம். அண்ணா என்பது எனது மந்திரம். எனக்குள் தற்போது ஒரு பிரச்சினை உருவாகிறது, என் நினைவுகளிலிருந்து எதை எழுதுவது எதை விடுவது என்று?

அண்ணா தனது இருபது வயதில் காலடி எடுத்து வைத்த மறுநாள், எமது தந்தையார் விண்ணுலகிற்கு ஆராய்ச்சி செய்யப் போய்விட்டார். அப்போது எமது அம்மாவுக்கு 38 வயது. கள்ளங்கபடமற்ற, ஒருவரிலும் குறை காணாத, எவருக்கும் இல்லை என்று சொல்லாத எமது தாயர் இடிந்து போய்விட்டார்.

நாங்கள் மொத்தம் 6 பிள்ளைகள். 2 அண்ணன்மாரும் 3 தங்கைமாரும். அண்ணா ராஜகோபால் தாய்க்கு தலைமகன். ஒரு குறையுமில்லாமல் வளர்ந்த அண்ணாவுக்கு தனது இளமைப் பருவத்தை அனுபவிக்க முடியாமல் போய்விட்டது. அவர் அதையிட்டு வருந்தியதுமில்லை.

பாட்டன் பாட்டிகளின் உதவியுமில்லை, வழிகாட்டலுமில்லை. குடும்பச் சுமையை சுமக்கத் தொடங்கினார். எங்கள் 5 பேருக்கும் (சகோதரர்களுக்கு) தகப்பனாக மாறினார். அம்மாவை ஒரு குழந்தைபோல பார்த்துக்கொண்டார்.

இல்லை என்று வருபவர்களுக்கு உதவுவது மட்டுமன்றி, அண்ணா தனது தாய், சகோதர்களுக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தார் - செய்தார்.

எனது பள்ளிப் பருவத்தில் அடிக்கடி நோய்கள் என்னைப் பிடித்துவிடும். சில காலங்களில் கடுமையாகவும் இருந்திருக்கிறேன். எனது தந்தை இறந்தபின் என்னை சுகமாக்க அண்ணா எடுத்த முயற்சிகள் பல, தகப்பனுக்கு மேலாக செய்தார். இயமன் வந்திருந்தால் கூட போராடி வென்றிருப்பார். ஒவ்வொரு மாதமும் 18 வயதான என்னை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போய் நோய் வராமல் தடுப்பு ஊசிகள் ஏற்றுவிப்பார். டாக்டர்களும் அண்ணாவுக்கு பயம் என்று நான் நினைப்பது உண்டு.

பள்ளிப் பருவத்தில் நான் ஒரு தடவையாவது தனியாக பஸ்ஸில் பிரயாணம் செய்தது கிடையாது. பெரும்பான்மையான நேரத்தில் ஏதோ விதமாக நேரம் ஒதுக்கி என்னோடு பஸ்ஸில் வருவார். அண்ணா சொல்லும் இருக்கையில் தான் பஸ்ஸில் இருப்பேன். எப்படித்தான் ஈழநாடு பத்திரிகை அண்ணாவுக்கு லீவு கொடுக்கிறது என்று யோசிப்பேன். எனக்கு தனியாகவோ, கூட்டமாகவே போகும் என் சிநேகிதிகளைப் பார்த்து பொறாமை. ஊரில் இருக்கும்வரை சிநேகிதிகளோடு பஸ்ஸில் போகவேண்டும் என்ற ஆசை நிறைவேறவே இல்லை.



மகன், தனது தாய்க்குத் தாயாக மாறினார். சிவபெருமான் தாயாக மாறி பிரசவம் பார்த்த கதைதான் ஞாபகம் வருகிறது. 90 வயது அம்மாவை அவர் பார்த்துக் கொண்டதை கண்டவர்கள் பலரும் வியப்படைந்தார்கள்.

அந்தக் காலத்தில் அரசர்கள் அரண்மனையைச் சுற்றி அகழி வெட்டி தங்கள் வாரிசுகளுக்கு பாதுகாப்பு வழங்கினார்கள். அதே போல எங்கள் வீடு வல்வெட்டியில் மாப்பாணர் வளவில் 40 பரப்பு காணியின் நடுவில் இருந்தது. காணியைச் சுற்றி மதில் போட்டதுமல்லாமல் வேலிக்கு மேல் வேலி போட்டு எந்த விதமான இடரும் நேராமல் செய்தார். ஒரு இராஜங்கமே நடத்தினார். அவரைக் கேளாமல் காற்றுக்கூட நுழைந்திருக்கமுடியாது.

முதன் முதலில் எனது கணவர் எங்கள் வீட்டுக்கு வந்தபோது இதுதான் ராஜகோபால் கட்டிய கோட்டையா? என்றார். தற்போதைய என்னுடைய திருப்திகரமான, மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அண்ணா ஒரு பெரும் காரணம்.

அண்ணாவின் பொறுப்பும் பாசமும் எங்களோடு மட்டும் முடிந்து விடவில்லை. தன்னுடைய பெறாமக்கள் மருமக்கள் அனைவரிடமும் பெரும் பாசம் கொண்டவர். அவர்கள் அனைவரது அன்பையும் மதிப்பையும் தக்கவைத்துக் கொள்ள அவர் தவறவில்லை.

எனது பதினான்கு வயதில் தந்தையார் எம்மை விட்டுப் பிரிந்து நெருப்போடு கலந்த அன்று, என்னால் சாப்பிட முடியவில்லை. அண்ணா சாப்பிடு, சாப்பிடு என்று வலுக்கட்டாயமாக இடியப்பத்தை ஊட்டி விட்டதையும், நான் அழுதபடியே சாப்பிட்டதையும் நினைத்துப்பார்க்கிறேன். ஒவ்வொரு நாளும், அவரின் அதே கைகள் பாலில் Sanatogen-ஐ கரைத்து நான் லண்டன் வரும் வரை (1971-ஆம் ஆண்டு வரை) ஊட்டியது மறக்க முடியாத நினைவுகள். நான் சில வேளைகளில் அவரை ஏமாற்றிவிட்டு முற்றத்தில் அதனைக் கொட்டியதையும் மறக்க முடியாது.

எமது தங்கை சில வருடங்களுக்கு முன்பு நோய்வாய்ப்பட்டு இருந்தாள். அதை அறிந்த அண்ணா 300 மைல் தொலைவில் இருந்த என்னிடம் தொலைபேசியில் அழைத்து என் தங்கையின் உடல் நிலைமையைச் சொல்லி அழுதார். நான் உயிரோடு இருக்கும்போது அவளுக்கு இந்த நிலை வந்திருக்கக்கூடாது. என்னால் தாங்க முடியவில்லையே என்று கலங்கினார். அவரின் ஆசியோடு தற்போது என் தங்கை நல்ல ஆரோக்கியத்தோடு நன்றாக வாழ்ந்து வருகிறாள்.

அம்மா சுகவீனமுற்று அண்ணா வீட்டில் இருந்த காலத்தில் அவவுக்கு ஊசி போடுவது, மருந்துகள் கொடுப்பது தொடக்கம் பலதையும் செய்தார். அவை மட்டுமல்ல அம்மா தனியாக படுக்கப் பயப்பட்டவர் என்பதால், அம்மாவோடு ஒரே கட்டிலில் நித்திரை கொள்வதையும் தனது பழக்கமாக்கிக் கொண்டார்.

அண்ணாவுக்கு உறுதுணையாக இருப்பவர் அவருடைய மனைவி - பிரபல நடன ஆசிரியை ராகினி இராஜகோபால். அவர்களது 2 பிள்ளைகளும் மருமக்களும் பேரப்பிள்ளைகளும் அவருக்கு பெரும் மகிழ்வைக் கொடுக்கிறார்கள். அவரது மகள் வழிப்பேரன் யாதவன் அண்ணா மாதிரி கலைத்துறையில் கெட்டிக்காரன், யாதவனிடம் கேட்டால் கலைத்திறமை எல்லாம் தாத்தாவிடம் இருந்து வந்தது என்பான். லண்டனில் மருத்துவக் கல்லூரியில் 3-ஆம் ஆண்டில் படிக்கிறான். அண்ணாவுக்கு பெருமையும் புகழும் சேர்க்கிறான்.

எங்கள் குடும்பம் நல்லாக இருப்பதற்கு அண்ணா மட்டுமே காரணம். Covid 19 காலத்தில் அம்மா லண்டனில் ஆஸ்பத்திரியில் இருந்தபோது அண்ணாவையும் மனைவியையும் மட்டுமே அம்மாவைப் பார்க்க அனுமதித்தார்கள். 94 வயதில் அம்மா அண்ணா, அண்ணா, என்று சொல்லியபடியே கடைசி மூச்சையும் விட்டார்.

அண்ணா, அண்ணனுக்கு இலக்கணமாக வாழ்கிறார். அவர் ஈழத்து சரித்திரத்தில் இடம்பெற வேண்டியவர். அவர் விருப்பப்படி, அவரது ஆசிகளோடு நாங்கள் எப்போதும் அவரோடு வாழ்வோம்.

இன்னும் பல ஆண்டுகள் அவர் ஆரோக்கியத்தோடும் சகல செல்வங்களோடும் வாழ நானும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.



bhavani.r@thaiveedu.com



# மறுமலர்ச்சிக் காலத்தில் முகிழ்த்த ஊடகப் பேராசான் ராஜகோபால்

– எல்.எம். வரதராஜன்

ஈழத்து இலக்கிய வரலாற்றின் மறுமலர்ச்சிக் காலத்தில் அரும்பிய ஊடகர் எங்கள் மதிப்பிற்குரிய ஈ.கே. ராஜகோபால் அவர்கள் என்று எனது குறிப்பை ஆரம்பிக்கலாம் என்று எண்ணுகிறேன்!

அழகான, சுவையான தலையங்கங்களை அக்காலத்தில் இட்டு, செய்திகள், கட்டுரைகள், செய்திக் கட்டுரைகள் அனுப்பும் இளையவர்களான எமக்கு ஓர் ஊக்க மருந்தான, ஊடக ஆசானாகத் திகழ்ந்த ஒருவர் எம் மதிப்புக்குரிய ராஜ கோபால் அண்ணர் அவர்கள்.

'சாவே உனக்கு சாவு வராதா?' என்று ஒரு காலத்தில் பேசப் பட்ட தலையங்கத்திற்குச் சொந்தக்காரர் அவர்.

'ராஜகோபால் நல்ல தலைப்புகள் இடுவார், அதில் ஒரு கலை யம்சம் இருக்கும்' என்று மூத்த எழுத்தாளர் அன்ரனி ஜீவா சொல்வார்.

தினகரன் வார மஞ்சரியை அக்காலத்தில் அழகூட்டிய ஒருவர் ராஜகோபால் என்று 'ஈழத்துச் சோமு' - சோமகாந்தன் அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டிருந்தார்.

எழுத்தாளர்கள், கலைஞர்களை தமது பத்திகள், பேட்டிகள் மூலமாக தினகரனில் அமைதியாக இருந்து அரங்கேற்றியவர் பாமா என்று சொன்ன சோமகாந்தன், எங்களது பத்திக ளுக்கும் முன்னோடி ராஜகோபால் தான் என்றார். சின்னச் சின்ன வசனங்களாக சிறு சிறு பந்திகளாக பாமா எழுதுவார். அப்படி எல்லாராலும் எழுத முடியாது என்றார்.

தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் சோமகாந்தன் தினகரன் வாரமஞ்சரியில் கலை இலக்கிய நிகழ்வுகள் பற்றிய பத்தி ஒன்றை எழுதிவந்தமை குறிப்பிடத்தக்கது.

எண்பதுகளில் தினபதி, சிந்தாமணி இதழ்களின் பிரதி ஆசிரியர் அமரர் கே.கே. இரத்தினசிங்கம் அவர்கள் யாழ்தே வியில் பயணித்துக் கொண்டிருந்தபோது, வவுனியாவுக்கு அருகில் குறுக்குப்பாதையில் சென்ற டிராக்டர் வண்டி ஒன்றுடன் மோதியபோது அதன் பெட்டி திரும்பி ரயில் வண்டி யுடன் மோதியதால் யன்னலோரத்திலிருந்த இரத்தினசிங்கம் அவர்களின் கையில் காயம் ஏற்பட்டுவிட்டது. அவரை உடன டியாக யாழ். வைத்தியசாலைக்கு அனுப்பியிருந்தார்கள்.

இந்தச் செய்தி ஈழநாட்டில் மறுநாள் வந்திருந்தது. அந்த வேளையில் நான் தினபதி, சிந்தாமணி இதழ்களின் உடுப்

பிட்டி நிருபராக கடமையாற்றியதால், ஈழநாடு அலுவலகத்துக்குச் சென்ற வேளையில் ராஜகோபால் அண்ணர் 'வாருமன் போய்ப் பார்ப்போம் அவரை' என்று கேட்டார்.

இரத்தினசிங்கம் அவர்களுடன் தொலைபேசியில் பேசி மட்டும்தான் பழக்கம். அவர் நான் போய்ப் பார்க்க என்ன நினைப்பாரோ தெரியாது என்று சொல்ல, 'என்ன வரதன்? அவர் உங்களுடைய ஆசிரியர் அவர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார். எனக்கும் அவர் பழக்கமில்லை. ஆனாலும், அவர் ஒரு பத்திரிகையாளர். போய்ப் பார்த்தால்தான் என்ன. வாரும் நீர் என்னுடன்' என்று கூறி அழைத்துச் சென்றார்.

இரத்தினசிங்கத்தார் கட்டிலில் படுத்திருந்தார். யாரும் அருகில் இல்லை. நாங்கள் அருகில் போய் அவருக்கு எம்மை அறிமுகம் செய்தோம். ராஜகோபால் அண்ணர் தான் எம் இருவரதும் அறிமுகத்தைச் செய்தார்.

இரத்தினசிங்கத்தார் 'அப்படியா வாங்கோ' என்று சொல்லித் தமக்கு நடந்ததைச் சொன்னார்.

ராஜகோபால் அண்ணரிடம் 'உமது எழுத்துகளை வாசிப்பேன். எனக்கு எல்லாம் வாசிக்க நேரம் இல்லை. ஆனால் உமது எழுத்துகள் வசனங்கள் எங்கள் நடை போல கொஞ்சச் சொற்கள்' என்றார்.

தினபதியில் ஒரு வசனம் ஆறு அல்லது ஏழு சொற்கள் கொண்டதாக இருக்க வேண்டும் என்பது நிருபர்களுக்கு வழங்கப்படும் ஆலோசனைகளில் ஒன்று.

காலையில் வேலைக்குப் போகிற ஒருத்தர், எடுத்தவுடன் வாசிச்சு, வாசிச்ச வசனம் மறக்காமல் அடுத்த வசனம் வந்துவிட வேண்டும்' என்று இரத்தினசிங்கத்தார் கட்டிலில் இருந்தபடி சொன்னார்.

**இளையவர்கள் பலரை ஊடகத்துறைக்குள் இணைய ஊக்குவித்தவர் அவர், படைப்பாளியாகவும் படைப்பாளிகளை வளர்த்து ஊக்குவித்த பத்திரிகையாளராகவும் பரிமாணம் பெற்றிருந்தார், அவரது தோற்றத்தில்கூட ஒரு கலைத்துவம் மிளிர்ந்திருந்தது.**

இரத்தினசிங்கத்தாரிடம் தொலைபேசியில் பழகியது போல, ராஜகோபால் அண்ணரிடமும் ஊடகத்துறையில் நான் பயின்ற விடயங்கள் சில உள்ளன.

நான் கரவெட்டி ஈழநாடு நிருபராக நியமனம் பெற்ற பின்னர், செய்திகள் அனுப்பி சில வாரங்களின் பின்னர், அலுவலகத்திற்குச் சென்றபோதே அவரைச் சந்தித்தேன்.

எனது எழுத்தைப் பாராட்டினார். 'நன்றாக எழுதுகிறீர் நான் வெட்டுவதில்லை' என்றவர், சனசமூக நிலையங்களில் கலை நிகழ்ச்சிகளில் அரசியற் பிரமுகர்கள் பேசினால் முதற் பந்தியில் அன்றைய அரசியல் நிலையுடன் தொடர்பாக என்ன பேசினார் என்பதை முதற் பத்தியாகவும் பின்னர் தொடரும் பந்தியில் அந்தச் சனசமூக நிலையம், கலைஞர்கள் பிரமுகர்கள் பற்றிச் சொன்னதையும் எழுதினால் செய்தி எல்லோரும் வாசிக்கக் கூடியதாக அமையும் என்று சொன்னது ஞாபகம்.

மூத்த ஊடகர் தில்லைநாதன் தமக்கு எப்படி ஒரு மரண விசாரணையை எழுதுவது என்பதையும் நீதிமன்ற விசாரணையின் படிமுறைகளையும் அவற்றை எப்படி எழுதுவது என்பதையும் சுவைபட விளங்கியவர் ராஜகோபால் என்றார்.

எனது சகோதரர் ரூபன் யாழ்ப்பாணத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றிக்கொண்டு ஈழநாடு இதழுக்குச் சுண்டிக்குழி நிருபராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அலுவலக நிருபர்கள் பலர் செய்யவேண்டிய பணியை அவர் அந்த நிருபருக்கான பதவிக்குரிய பகுதிப்பெயருடன் செய்துகொண்டிருந்தார். அந்த வேளையில் 1985-இல் 'ஈழமுரசு' என்ற புதிய நாளிதழ் வெளிவந்தது.

இரண்டு தசாப்தங்களாக ஒரேயொரு பிராந்திய நாளிதழான ஈழநாடு வெளிவந்துகொண்டிருந்த காலம் அது. ஈழமுரசின் வருகை பேசப்பட்ட வேளையில் அதன் எதிர்பார்ப்பு வாசகர் வட்டங்கள், ஊடகர்கள், கல்விமான்கள் மத்தியிலான ஊடாட்டங்களில் பெரிதும் பேசப்பட்ட பொருளாயிருந்தது.

தினகரனில் பணியாற்றிக் கொண்டிருந்த மூத்த ஊடகர் எஸ். திருச்செல்வம் அவர்கள் அதன் ஆசிரியராக வருகிறார் என்பதும் பிரபல நிதி நிறுவனம் ஒன்றின் அதிபர் ம. அமிர்தலிங்கம் அதற்கு முதலிடுவதும் அத்தகைய எதிர்பார்ப்புகளுக்கு முக்கிய காரணமாயமைந்தது.

அந்த வேளையில், எனது சகோதரரிடம் ராஜகோபால் அண்ணர் 'உப்படி ஒவ்வொன்றாக எழுதி அனுப்பிப் பகுதிநேர நிருபராக இருப்பதைவிட உமக்கு ஆர்வமான ஊடகத்துறையில் முழுநேரமாக ஈடுபடும். இப்போதைக்கு ஈழநாடு அலுவலகத்துக்கென்று ஆட்களை எடுக்கப்போவதில்லை, அப்படி எடுக்கும் நிலையும் இல்லை' என்று சொல்லி, அவரை ஊக்கப்படுத்தி, 'நான் திருவிடம் சொல்கிறேன்' என்று அவரை இணைத்து விட்டவர் ராஜ கோபால் அண்ணர். எனது சகோதரரை மட்டுமன்று, இளையவர்கள் பலரை அப்படி ஊடகத்துறைக்குள் இணைய ஊக்குவித்தவர் அவர்.

மூத்த கலைஞரும் கவிஞருமான ஶ்ரீதர் பிச்சையப்பா தம்முடைய கவிதை ஒன்று தினகரனில் வருவதற்கு காரணமானவர் ராஜகோபால் என்று சொல்லக் கேட்டுள்ளேன். தமது தந்தையார் பிச்சையப்பாவுடனும் அவர் காலத்துக் கலைஞர்களுடனும் ராஜகோபால் நட்புடன் பழகியவர் என்று சொல்லியுள்ளார்.

கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், அரசியலாளர்கள் என்று பல நட்பு வட்டங்களையும் கொண்ட ஓர் ஊடகராக அவர் திகழ்ந்தார். அவரது கலாரசனைக்குரியவராக அவரது துணையும் கிடைத்ததும் அவர் பெற்ற வரமே.

அவரது தோற்றத்தில்கூட ஒரு கலைத்துவம் மிளிர்ந்ததை நான் மட்டுமல்ல, அன்றைய ஊடகர்களும் பேசிக்கொள்வதைக் கேட்டுள்ளேன்.

> புலம்பெயர்ந்த பின்னரும் அவரது ஊடகப் பணி தமிழன் என்ற இதழாக ஆரம்பித்து லண்டன் புதினம் இதழாக மலர்ந்து அவரது ஊடக வாசனை லண்டன் முதல் ஐரோப்பிய நாடெங்கும் வீசியமை ஈழத் தமிழ் ஊடக வரலாற்றில் மாபெரும் சாதனையென்றே கொள்ளப்படவேண்டும்!

அண்மையில் மூத்த பத்திரிகையாளர் தில்லைநாதன் அவர்களிடம் இப்படி ஒரு கட்டுரை எழுதப்போகிறேன் என்றவுடன், நான் மேலே குறிப்பிட்ட 'சாவே உனக்கு சாவு வராதா' என்ற தலையங்கம் போல பல அருமையான தலைப்புகளை இட்டவர் ராஜகோபால் என்று சொன்னதுடன், அவரது புனை பெயர்களில் உள்ள கதைகளையும் சொன்னார்.

எழுத்தாளர்களின் பின்னால் ஒவ்வொரு கதை இருக்கும். அதுபோல அவர்கள் இடும் புனை பெயர்களுக்கும் கதைகள் இருக்கும். பாமா ராஜகோபால், ஈ.கே. ராஜகோபால், ஈ.கே.ஆர், ராகி என்பன அவர் தமது ஆக்கங்களில் இட்ட பெயர்கள்.

ஈழநாடு அலுவலகத்துக்கு நாம் போகும் போது ராஜகோபால் அண்ணர் சேட்டின் நீண்ட கையைக் கொஞ்சம் மடித்து நிற்பதும் அவரது இன்முகமும் நினைவில் நிற்பவை.

அது உண்மையே. ஈழநாடு அலுவலகத்துக்கு அக்காலத்தில் பிராந் திய நிருபர்களாகிய நாங்கள் போகும்போது ஆசிரிய பீடத்தில் பணியாற்றியவர்கள் மிகவும் 'சீரியஸாக' பணியாற்றிக்கொண்டிருப்பதே வழக்கம்.

ராஜகோபால் அண்ணரிடம் இவர்களைவிட ஏதோவொரு வித்தியாசம் இருந்தது. அந்த கலாவசியம் பற்றி தில்லைநாதன், ஜெயக்குமார், எனது சகோதரர் ரூபன் ஆகியோர் குறிப்பிடுகையில், 'தமாஷாக, அன்போடு குடும்ப நலன் எல்லாம் விசாரித்துப் பழகும் ஒருவர் ராஜகோபால்' என்றனர். அத்துடன் 'எழுதுங்கோ', 'தொடர்ந்து ஏதாவது எழுதுங்கோ' என்று ஊக்கப்படுத்தும் ஒருவர் என்றனர்.

ஈழநாட்டில் பிரதி ஆசிரியராயிருந்தவேளை வடமராட்சியின் இசை, நாடகக் கலைஞர்களைப் பேட்டி கண்டு எழுதும்படி என்னை ஊக்குவித்தார். அவ ரும், வடமராட்சியின் வல்வெட்டியைச் சேர்ந்தவர் என்பதாலும், நான் கரவெட்டி நிருபராயிருந்ததாலும் எனக்கு ஆலோசனை வழங்கி, என்னை ஊக்குவித்து அதனை ஒரு தொடராக ஆக்கலாம் என்பது அவரது ஆவலுக்குக் காரணமாயிருக்கலாம்.



தொடராக வந்த பின்னர் அவற்றைத் தொகுத்து ஒரு நூலாகவும் பதிப்பிக்கலாம் என்றும் சொன்னார். நூல் பற்றிய யோசனை எம்போன்றவர்களிடம் அரும்பாத காலம் அது. அவர் நூல் வெளியிடுவதில் ஆர்வ மாக இருந்தார். பதிப்பியல் மீதான அவரது ஆர்வம் புலம்பெயர்ந்த நாட்டிலும் தொடர்ந்ததை நாம் அவரில் கண்டோம்.

அவர் எழுதி வெளிவந்த வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள் என்ற நூல் வெளியீட்டில் ஈழநாடு நிருபர்கள், உள்ளூர்ப் பத்திரிகை நிருபர்கள் எனத் திரளானோர் கலந்தது நினைவு. தினகரன் பிரதம ஆசிரியர் அமரர் ஆர். சிவகுருநாதன் அதிதியாகக் கலந்து கொண்டார்.

பிற்காலத்தில் தினமுரசு வார இதழில் தொடராக அது வந்த போதும், இன்று அதனை வாசிக்கின்ற போதும் அவருள்ளேயிருக்கும் சமூகப் பிரக்ஞையும் வரலாற்றுப் பற்றும் தெரிகிறது.

படைப்பாளியான ஓர் ஊடகவியலாளருக்கு, தமது படைப்பின் மீதான தூர நோக்கும் சமூகப் பயன்பாடும் தெரியவேண்டும் என்பதை, அவரின் அந்த நூல் மூலம் அவரிடம் நாம் கற்றுக்கொள்ள முடிகிறது.

அவருடைய எழுத்துப் பிரதியைப் பற்றி பலரும் சிலாகிக்கக் கேட்டுள்ளேன். தானா, தீனா, தூனா, லூனா, தீயன்னா போன்ற எழுத்துகள் வித்தியாசமானவையாக ஓவியங்கள் போல இருக்கும். சில உதவி ஆசிரியர்களினதும் அலுவலக நிருபர்களினதும் எழுத்துகளைச் சில அச்சுக்கோப்பாளர்களே உடனடியாக விளங்கிக் கொள்வர். ஆனால், ராஜகோபாலின் எழுத்தை இலகுவாக விரைவாக விளங்கிக் கொண்டு அச்சுக் கோர்க்க முடியும் என்று அக்காலத்தில் அச்சுக்கோப்பாளர்களாகவிருந்த வேலுப்பிள்ளை அண்ணர், விக்ரர் அண்ணர் சொல்லக் கேட்டுள்ளேன்.

இலங்கையிலிருந்து லண்டன் போயிருந்த அவரது பாடசாலைத் தோழர் உடுவை தில்லைநடராஜாவிடம் எனக்கு பரிசுப் பொருளுடன் அவர் கொடுத்திருந்த கடிதத்தில் அவரது எழுத்தைக் காணலாம்.

மேலே ஒரு பந்தியில், நாங்கள் அனுப்பும் செய்திகளுக்கு அழகாக சுவையாக எளிமையாகத் தலையங்கம் போடும் ஓர் உதவி ஆசிரியராகத் திகழ்ந்தார் என்றேன்.

இதனை நான் சொன்னபோது நகைச்சுவையாகவும் தலையங்கம் போடுபவர் ராஜகோபால் என்று ஈழ நாட்டின் மூத்த நிருபர்களில் ஒருவரான எஸ்.ஜே. ஜெயக்குமார் சொன்னார்.

ஜெயக்குமார் அண்ணருடன் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் படித்த இருவர் அவர் உள்ளூர் நிருபராகப் பணியாற்றிய இதழ்களின் ஆசிரியர் பீடத்தில் கடமையாற்றியவர்கள். ஒருவர் சிந்தாமணி க.தா. சிவகுருநாதன் மற்றவர் ஈழநாடு ஈ.கே. ராஜகோபால்.

அங்கு க.தா. சிவகுருநாதன், ஈ.கே. ராஜகோபால், கொடகே விருது பெற்ற எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் ஆகி யோர் ஒரு வகுப்பிலும் ஜெயக்குமார், இந்துமாமன்ற முன்னாள் தலைவர் கந்தையா நீலகண்டன், முன்னாள் அரச அதிபரும் பணிப்பாளருமான உடுவை தில்லைநடராஜா, வில்லிசைக் கலைஞரும் இலங்கை மின்சார சபை உதவிப் பொது முகாமையாளருமான முத்து இரத்தினானந்தன் ஆகியோர் ஒரு வகுப்பிலும் படித்துள்ளனர்.

கல்லூரி நாட்களில் சஞ்சிகைகள் வெளியிடுவதிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதிலும் இவர்கள் ஆர்வமுடன் பணியாற்றியதை நினைவு கூர்ந்த ஜெயக்குமார் அண்ணர், ராஜகோபால் அவற்றில் சிறுகதைகளை எழுதுவார் என்று குறிப்பிட்டார்.

செங்கை ஆழியான் தமது சிறுகதை வரலாற்று நூலில், ராஜகோபால் பற்றிக் குறிப்பிடுவதை இங்கு தருதல் பொருத்தமாகும். அதில் அவர், அறுபது எழுபதுகளில் சிறுகதைகளைப் படைத்தவர்களில் ராஜகோபாலையும் விதந்து குறிப்பிட்டுள்ளார். ராஜகோபாலின் ‘சரன்’ என்ற சிறுகதை முக்கியமாகப் பேசப்பட்ட ஒன்று என்கிறார். மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர்களில் ஒருவரான சிற்பி சரவணபவன் ‘கலைச்செல்வி’ என்ற சஞ்சிகையை வெளியிட்டபோது ராஜகோபாலின் எழுத்து வகிபாகம் பற்றி செங்கை ஆழியான் குறிப்பிடுகிறார்.

ராஜகோபாலுடன் எழுதியவர்களாக செங்கை ஆழியான், செ. யோகநாதன், செம்பியன் செல்வன் (அவர் பெயரும் ராஜகோபால்) பெனடிக்ற் பாலன், பொ. சண்முகநாதன், தெணியான் ஆகியோரை அவர் குறிப்பிட்டுள்ளார்.

1960-களில் வரதரால் வெளியிடப்பட்ட ‘புதினம்’ வார இதழில் ராஜகோபால் அவர்கள் எழுதி வந்துள்ளார். இதனை மறுமலர்ச்சிக் காலம் என்பதுடன் ஈழத்துச் சிறுகதையின் முற்போக்குக் காலம் என்றும், 1961 முதல் 1983 வரை ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் புத்தெழுச்சிக் காலம் என்றும் செங்கை ஆழியான் குறிப்பிடுகிறார்.

ஈழத்தின் முதற் தமிழ் இதழான ஈழகேசரியுடன் ஆரம்பமான மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர்களின் வரிசையில் தம்மையும் இணைத்துக் கொண்ட ராஜகோபால் அண்ணர், இதன் முதற் பகுதியில் படைப்பாளியாகவும் இரண்டாம் பகுதியில் படைப்பாளிகளை வளர்த்து ஊக்குவித்த பத்திரிகையாளராகவும் பரிமாணம் பெறுவதைக் காணலாம்.

அதனாலேயே மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர்களின் படைப்புலகத்தில் வலம் வந்த ஊடகர் என்ற பெருமை அவருக்குரியது என்று எனது இப்பதிவை ஆரம்பித்தேன்.

புதினத்தில் எழுதி வந்த அவர் அறுபதுகளில் ஈழநாடு தொடங்கப்பெற்றபோது அதில் உதவி ஆசிரியராகச் சேர்கிறார்.

பழம்பெரும் பத்திரிகை ஆசான் கே.பி. ஹரன் ஆசிரியராக, எஸ்.எம். கோபாலரத்தினம் (கோபு) செய்தி ஆசிரியராக, அ.செ. முருகானந்தன் உதவி ஆசிரியராக, ம.வ. கானமயில்நாதன் உதவி ஆசிரியராக, இராஜ. அரியரத்தினம் உதவி ஆசிரியராக, எஸ். திருச்செல்வம் அலுவலக நிருபராக என, ஈழத் தமிழ் ஊடக வரலாற்றின் ஊடகச் சிகரங்களின் அரியாசனத்தின் சரியாசனத்தில் அமர்ந்து பணியாற்றும் வரத்தைப் பெற்ற ஒருவர்!

ஈழத்தின் ஊடக ஆசான்கள், ஊடக விண்ணர்கள் மூத்த ஊடகர்கள் என்று போற்றுதற்குரிய இ. சிவகுருநாதன், த. சபாரத்தினம், என். சபாரத்தினம், கே.ஜி. மகாதேவா, சசிபாரதி, எஸ்.எஸ். குகநாதன், இ. கந்தசாமி, மகாலிங்கசிவம், எஸ். பெருமாள், பா. அனந்தகிருஷ்ணன், ஐயா. சச்சிதானந்தம், வெற்றிவேலுப்பிள்ளை, சூரியகாந்தன், பெரி. சண்முகநாதன், கணேசலிங்கம் எனப் பலருடன் பணியாற்றவும் ஊடாடவும் கிடைத்த பெருமைக்குரியவர். (என் நினைவுக்கு, உடன் வந்த பெயர்களே அவை).

புலம்பெயர்ந்த பின்னரும் அவரது ஊடகப் பணி தமிழன் என்ற இதழாக ஆரம்பித்து லண்டன் புதினம் இதழாக மலர்ந்து அவரது ஊடக வாசனை லண்டன் முதல் ஐரோப்பிய நாடெங்கும் வீசியமை ஈழத் தமிழ் ஊடக வரலாற்றில் மாபெரும் சாதனையென்றே கொள்ளவேண்டும்!

இலங்கையில் தமிழன் என்றொரு பத்திரிகை வரவேண்டும் என்று தமக்கு ஓர் ஆசை என்று அடிக்கடி பேசும்போது சொல்வார்.

அவரது கனவு இப்போது நனவானதாக எண்ணுகிறேன்.

வல்வெட்டித்துறையிலிருந்து கப்பலோட்டிய தமிழர்கள் உரையாடலாக வரவேண்டும் அதாவது உரை ஓவியமாக வரவேண்டும் என்று நான் கேட்டபோது, அவருக்கும் அந்த விருப்பம் இருந்தது.

பல கலைஞர்களின் பங்கெடுப்புடன் அக்காலத்துக்குரிய கடல், புயல், போர்ச் சூழல் சார்ந்த உத்திகள் கலந்த, சிறந்த தொழில்நுட்ப வளத்துடன், அதனைக் கேட்கும் செவிப்புலச் சுவைஞர்களை அக்காலத்திற்கு அழைத்துச் செல்லும் வகையில், அது தயாரிக்கப்படவேண்டும்.

‘தாய்வீடு’ அந்தப் பணியைச் செய்தால் மிகச் சிறப்பான வரலாற்றுப் பணியாக அமையும் என்று நம்புகிறேன்.



varatharajan.m@thaiveedu.com

# பழகுவதற்கு இனிமையான ராஜகோபால்

## - நவஜோதி ஜோகரட்னம்



சமூகத்தின் இயக்கத்தோடு இணைந்து மொழியும் இயங்குகின்றது. சமூக விளைச்சல்களில் ஒன்றான இந்த மொழியை அரசியல், பண்பாடு மற்றும் சமூக வாழ்வியல் நடவடிக்கைகளுடன் இணைத்து பத்திரிகை மூலம் வெளிப்படுத்தி வந்தவர் 'புதினம்' ராஜகோபால் அவர்கள்.

ராஜகோபாலின் 'புதினம்' பத்திரிகை என்பது இலண்டன் போன்ற நாடுகளில் தமிழ் பத்திரிகை வளர்ச்சியில் குறிப்பிட்டுக் கூறவேண்டிய அம்சமாகும்.

இலவசமான பத்திரிகை விநியோகம் விளம்பரதாரர்களை மட்டுமே நம்பியிருக்கவேண்டிய நிலைமை. அச்சிட்டும் செலவுகளில் ஏற்படும் கஷ்டங்கள், பத்திரிகைகளை இலவசமாகக்கூட விநியோகிப்பதில் உள்ள இடர்பாடுகள், அத்தனைக்கும் மத்தியில் அயராது தளராது புதினம் பத்திரிகையைச் சிறப்பாக நடத்திய ராஜகோபால் அவர்களின் துணிச்சலையும் மன உறுதியையும் பாராட்டியாக வேண்டும்.

ராஜகோபால் அவர்கள் ஈழத்தில் பத்திரிகைத் துறையில் நீண்டகால அனுபவம் கொண்டவர். ஈழநாடு பத்திரிகையின் பின்னணியில் உருவான ராஜகோபால் அவர்கள், பின்னர் தினகரன் நாளேட்டிலும் ஆசிரியர் குழுவில் பங்காற்றி தனது பத்திரிகை அனுபவத்தைச் செழுமைப்படுத்திக் கொண்டவர். பத்திரிகைத் துறையே அவரது ஜீவநாடியாக இருந்திருக்கிறது.

இலண்டனுக்குப் புலம்பெயர்ந்த பின்னரும் பத்திரிகையாளராகவே தன்னை அடையாளம் கண்டுகொண்ட ராஜகோபால், நீண்ட காலமாகப் பத்திரிகைத் துறையில் கால் பதித்து நின்றமை விதந்துரைக்கப்பட வேண்டும் என்பதில் ஐயமில்லை.

பத்திரிகையாளராக மட்டுமன்றி ஈழத்து இலக்கிய கர்த்தாக்கள் அனைவரோடும் நெருங்கிய அன்பும் பரிவும் கொண்ட ராஜகோபாலிடம் இருக்கும் இலக்கியப் பரிச்சயம் குறிப்பிட்டுக் கூறவேண்டிய ஒன்றாகும். ஈழத்து எழுத்தாளர்கள் யாரின் பெயரைக் கூறினாலும் அவர் பரிச்சயம் கொள்ளாத எழுத்தாளர் யாருமே இல்லை என்றே கூறிவிடலாம்.

முற்போக்கு முலவர்களில் ஒருவராகக் கருதப்படும் எஸ். அகஸ்தியரின் புதல்வியாகப் பிறந்தது என் பேறாகும். ஆனைக்கோட்டையிலும் கீரிமலையிலும் நாங்கள் வாழ்ந்த காலங்களில் எங்கள் இல்லத்திற்கு வந்து சென்ற அரசியல் பிரமுகர்களை, இலக்கிய ஆளுமைகளை, கலைஞர்களை

நானும் சந்தித்திருக்கிறேன் என்பது பெருமிதத்தை ஊட்டும் ஒன்றாகும்.

இலங்கை கொம்யூனிஸ்ட் தலைவராகத் திகழ்ந்த பீற்றர் கெனமன், வி. பொன்னம்பலம், தேசாபிமானி பி. ராமநாதன், சுகந்தன், சில்லையூர்ச் செல்வராஜன், டாக்டர் நந்தி, கலையரசு சொர்ணலிங்கம், பூந்தான் யோசேப்பு, முகத்தார் யேசுரட்னம், பி.ஏ. கந்தசாமி, கே. டானியல், டொமினிக் ஜீவா, செ. யோகநாதன், பெனடிக்பாலன், சி. வைத்தியலிங்கம், கவிஞர் முருகையன், வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்), காவலுர் ஜெகநாதன், கவிஞர் சேரன், கவிஞர் ஆதவன் இவர்கள் போன்ற பல ஆளமைகளும் மற்றும் பல மலையக, முஸ்லிம், சிங்கள நண்பர்களும் என் தந்தையாரோடு உரையாடுவதையும் விருந்துண்டு சென்றிருப்பதையும் நான் அறிவேன்.

அந்த எழுத்தாளர் குழுவில் 'பாமா' ராஜகோபால் என்று அறியப்பட்ட ராஜகோபால் அவர்களும் எங்கள் குடும்பத்தில் ஒருவராகவே வந்து பழகிச் சென்றிருக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

ஈழநாட்டில் அப்போது பணி புரிந்த கே.ஜி. மகாதேவாவும் ராஜகோபாலுடன் பலமுறை எங்கள் இல்லத்திற்கு வந்திரு க்கிறார்.

இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் நான் பயின்று கொண்டிருந்த போதுதான் அவரது மனைவி ராகினி ராஜகோபால் நடன ஆசிரியையாக முதல் நியமனம் பெற்று எங்கள் கல்லூரிக்கு வந்திருந்தார். நடன ஆசிரியைகள் பாடசாலைகளில் ஆசிரிய நியமனம் பெறுவது அதுவே முதல் தடவையாக இருந்திருக்கக்கூடும் என்று நம்புகிறேன்.

அவர் மிகுந்த ஆர்வத்தோடும். பேருழைப்போடும் நடனம் பயிற்றுவதில் காட்டிய அக்கறையை கல்லூரிக் காலங்களில் நான் பார்த்திருக்கிறேன். இளவாலை கன்னியர்மடக் கல்லூரி யின் கலைவிழாக்களில் அவர் ஒழுங்கு செய்த நடன நிகழ் வுகள் மாணவர்களினதும் பெற்றோர்களினதும் பெரும் பாராட்டைப் பெற்றன.

அந்த நடன ஆசிரியை, தொடர்ந்தும் இலண்டன் வரை நடனக் கலையைப் பயிற்றுவித்து வருவது போற்றுதலுக்கு உரியதொன்றாகும்.

அவர் பங்கேற்றுச் செயற்படும் 'சாஸ்வதம்' போன்ற நிகழ்ச்சிகளில் நான் மேடை அறிவிப்பாளராகச் அவரைச் சந்தித்தமை பெருமிதம் தரும் விடயமாகும்.

இலண்டனில் வாழும் 33 தமிழ்ப் பெண்மணிகளின் நேர் காணல் தொகுப்பான 'மகரந்தச்சிதறல்', எனது தந்தை அகஸ்தியரின் இருபதாவது நினைவு தினத்தில் நூல் வடிவமா க்கியிருந்தேன்.

ராகினி ராஜகோபால்: மொழி கடந்த பரதப் பயிற்சி எனத் தலைப்பிட்டு அவரது நேர்காணலும் அந்நூலில் இடம் பெற்றி ருந்தமையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த இருவரது அறிமுகமும் பரீட்சயமும் எங்கள் வாழ்வில் மிக முக்கிய சந்திப்புகளில் ஒன்றாகும்.

இத்தகைய குடும்ப உறவுகள் எனது தந்தை பாரிஸில் வாழ்ந்த காலத்திலும் தொடர்ந்து கொண்டே இருந்தது.

என் தந்தைமீது, அவரது எழுத்தின்மீது, அவரது முற்போக்கு சிந்தனைகள் மீது ராஜகோபால் மிகுந்த மரியாதை கொண்டி ருந்தார்.

ராஜகோபால் அவர்கள் எழுதி 1991-ஆம் ஆண்டு வெளியிட்டிருந்த 'வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள்' என்ற அரிய நூலுக்கு என் தந்தை அணிந்துரை வாழங்கி அந்நூலுக்குச் சிறப்புச் சேர்த்தார்.

இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதில் என் தந்தை என்றுமே முன்னணியில் இருந்திருக்கிறார். எழுத்தா ளர்களோடு உறவாடுவதும் சம்பாஷிப்பதும் அவருக்கு எப்போதும் சுகானுபவம் தருவதாகவே இருந்திருக்கிறது.

இலண்டனில் மீண்டும் ராஜகோபால் அவர்களை நான் சந்தித்ததிலிருந்து ஒரு குடும்ப உறவுபோல் அந்த உறவு துளிர்த்தது. அவரது புதினம் இதழ்களில் நான் எழுதிய ஆக்கங்களை அவர் ஆர்வத்தோடு வரவேற்றார்.

எனது தந்தையின் நினைவு தினங்களை நினைவு கூர்வதோடு மட்டுமன்றி, இலண்டனில் இடம்பெறும் கலை நிகழ்ச்சிகள், நடன நிகழ்ச்சிகள், சமூகக் கூட்டங்கள் போன்றன பற்றி நான் எழுதிய கட்டுரைகளை அவர் அக்கறையோடு பிரசுரித்து எனக்கு உற்சாகம் தந்தார் என்பதை நான் நன்றியோடு நினைவு கூருகின்றேன்.

அத்தோடு இலண்டன் புதினம் பத்திரிகையின் 20-ஆவது நிறைவு (2016)- இல் இடம்பெற்ற சிறுகதைப் போட்டியில் 'சாதலும் புதுவதன்று' என்ற எனது சிறுகதை பரிசு பெற்றமையையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

ராஜகோபாலின் எழுத்துத் திறமை தனித்துவமானது. பழகுவதற்கு இனிமையானவர்.

இலண்டனில் சரித்திரம் படைத்திருக்கும் அவர் பணி நீடிக்க மரியாதையோடு வாழ்த்துகின்றேன்.



navajothy@thaiveedu.com

# அரிது! அரிது!! அண்ணாவை போன்றோரை காண்பது அரிது!!!

– ஆர். தியாகராஜன்



அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது...

இது ஔவையின் வாக்கு.

மானிடராய் பிறந்த நாம் ஔவையின் வாக்குப்படி மன நலத்துடனும், உடல் நலத்துடனும் வளமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஔவை பாட்டி இப்போது நம்மிடையே இருந்தால்....
குறையின்றி வாழ்ந்தாலும்,
பொருளீட்டி... பொருளாதார நிறைவு பெற்று....
கடன் இன்றி வாழ்தல் அதனிலும் அரிதென்று பாடியிருப்பாள்.

நாடும், வீடும், குடும்பமும், தனி மனிதர்களும், கடன் என்னும் அசுரனின் பிடியில் சிக்கிக் கொண்டு தத்தளிப்பதை உலகெங்கும் காணலாம். Credit card என்னும் கடன் அட்டை இல்லாத மனிதரே உலகில் இல்லை என்ற தற்போதைய பொருளாதார நிலையே இதற்கு சான்று.

இப்படிப்பட்ட தற்போதைய உலக சூழலில் ஒருவர் கடனின்றி வாழ முடியுமா என்பது மிகவும் அரிதானதே.

அவ்வாறு காண்பதற்கு அரிதான மனிதர் தான் ‘அண்ணா’ என்று அன்போடு நான் அழைக்கும் லண்டன் புதினம் பத்திரிகையின் ஆசிரியர் திரு. E.K. ராஜகோபால் அவர்கள்.

கடனற்ற கண்ணியமான பெருவாழ்வு வாழ்ந்து வரும் நல்ல மனிதர். பிறர் பொருள் மீது சிறிதும் நாட்டம் கொள்ளாதவர். சிக்கனமான சீரிய வாழ்க்கை வாழ்பவர். கடன் பெற்று ஆடம்பரம் செய்வதை ஒருபோதும் விரும்பாதவர். எல்லோருக்கும் தாராளமாக உதவும் நல்ல மனம் கொண்டவர். நல்ல குருவாக எனக்கு வழிகாட்டுபவர்.

சில விஷயங்களை, தகவல்களை, தரவுகளை சான்றுகளுடன் கூறுவது நம்பிக்கையூட்டும்.

கடந்த 2016-ஆம் ஆண்டு லண்டன் மாநகரில் சிறப்பாக நடைபெற்ற 'புதினம்' பத்திரிகையின் இருபதாம் ஆண்டு விழா நிகழ்ச்சியில் வெளியிட்ட 'புதினம் இளமை இருபது' சிறப்பு மலரில் ஆசிரியர் திரு. E.K. ராஜகோபால் அவர் களைப் பற்றி நான் எழுதிய 'குருவாக வந்தவர்' என்று தலைப் பிட்ட கட்டுரையை ஆதார ஆவணமாக உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

குருவாக வந்தவர்...

சமீபமாக நான் வாசித்த தத்துவப் புத்தகத்தில், கேள்வி பதில் பகுதியில், 'ஒரு நல்ல குரு எப்படிக் கிடைப்பார்? அவரை எப்படித் தேடிக் கண்டுபிடிப்பது?' என்ற கேள்விக்கு அந்த ஞானி அளித்த பதில் 'குருவை நீங்கள் தேடிப் போக வேண்டியதில்லை. அவரே உங்களைத் தேடி வருவார். அதற்கான விண்ணப்பமும், பிரார்த்தனையும் மட்டுமே நீங்கள் செய்ய வேண்டியது.'

மேலே குறிப்பிட்ட பதிலுடன், 2002-ஆம் ஆண்டில், லண்டனில் கவுன்சிலோவில் என் வாழ்வில் நடந்த ஒரு சந் திப்புக் குறித்து மிகவும் ஆச்சரியத்துடன் அசை போடக்கூடி யதாக இருந்தது.

பதினான்கு வருடங்கள் கடந்து, அந்த உறவு மேலும் மேலும் செழுமையாகிக் கொண்டே செல்கிறது.

ஆம், 2002-ஆம் ஆண்டு, லண்டன் கவுன்சிலோவில், STAINES ROAD-இல், ஒரு விடுதியில் தங்கி இருந்தபோது, ஒரு இனிய மாலைப் பொழுதில் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

என்னைத் தேடி வந்தார், அந்த மனிதர். அவர்தான் அன்புக் குரிய ராஜகோபால் மிகவும் ஆச்சரியமான சந்திப்பு. சந் திப்பின் முன், தொலைபேசியில் உரையாடிய போது, அவர் ஒரு பிரபலமானவர் என்றோ, பத்திரிகை ஆசிரியர் என்றோ எந்த விதமான 'பந்தா'வுமின்றி மிகவும் எளிமையுடன் உரை யாடினார்.

அந்தக் காலகட்டத்தில், லண்டனில் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருந்த ஒரே தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த அவர், மக்கள் மத்தியிலும் மிகவும் பிரபலமாகவும், உயர்வாகவும் மதிக்கப்பட்டார்.

அப்படிப்பட்ட ஒரு மனிதர் நான் தொலைபேசியில் அழைத்துத் தொடர்பு கொண்டபோது, ஓரிரண்டு வார்த்தை களிலே மிகவும் எளிமையாக அந்த உரையாடலை முடி வுக்குக் கொண்டு வந்தார்.

'நாளை உங்களைச் சிந்திக்கிறேன்' என்பதோடு முடித்து விட்டார்.

எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பே அளிக்கவில்லை. மறுநாள், பகல் 3 மணி 'நான் ராஜகோபால் கவுன்சிலோ ஸ்டேசனுக்கு வெளியே நிற்கிறேன்' என்ற அவரது தொலைபேசிச் செய்தி, அடுத்த 10 நிமிடங்களில் நேரடிச் சந்திப்பு. முதல் சந்திப் பிலேயே மிகவும் அன்புடன், அந்நியோன்யமாக உரையாட ஆரம்பித்தார். நான் அவரைவிட வயதில் இளையவராக இருந்தாலும், மிகவும் நீண்ட நாள் பழகியவர் போல, நெருக் கமாக, வயது வித்தியாசம் பாராது, தோழமையுடன் பேச ஆரம்பித்தார். எனது விடுதிக்கு மூன்று நான்கு நண்பர்கள் வந்தார்கள். அவர்கள் அனைவரும் ராஜகோபால் மீது காட்டிய மரியாதையும், அன்பும், பரிவும் மேலும் மேலும் யோசிக்கவும், ஆச்சரியப்படவும் வைத்தது.

அன்று தொடங்கிய எனது ஆச்சரியம் இதுவரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அவருடைய விஸ்வரூபம் யாரும் அள விட்டுக் காணமுடியாதது. அவருடைய எளிமையான 'விஸ்வ ரூபமே' பெரும்பாலோருக்குக் காணக் கிடைப்பது.

பதினான்கு வருடங்கள் என்பது இராமாயண பெரும் காப்பி யத்தின் முக்கிய காலகட்டம் அதுபோல, 2002 தொடக்கம் 2016 வரை பதினான்கு ஆண்டுகள் என்னுடைய வாழ்விலும் முக்கிய காலகட்டம்.

ராஜகோபால் அவர்களை 'சார்' என்று நான் அழைத்த போது, அவர் மிகவும் தன்னை அவ்வாறு பெருமைப்படுத்தி அழை க்கத் தேவையில்லை, அண்ணா என்று அழைத்தாலே தனக்குப் பெரும் மகிழ்ச்சி தரும் என்று கேட்டுக் கொண்டார். அன்று தொடக்கம் 'அண்ணா' என்று அழைக்கத் தொடங் கியது இன்றுவரை தொடர்கிறது.

குடும்பத்தில் மூத்த மகனான அவருக்குக் கீழ் இளைய சகோ தரர்கள், மற்றும் மனைவி பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவருமே என்னை அன்புடன் ஒரு குடும்ப உறுப்பினராக ஏற்றுக்கொண்டார்கள்.

அவரது குடும்ப உறுப்பினர் அனைவர் மீதும் 'அண்ணா' கொண்டுள்ள அன்பும், அக்கறையும், பொறுப்பும், பாசமும் மேலும் அண்ணா மீது காட்டும் மதிப்பும், மரியாதையுமே என்னையும் அவர்கள் ஏற்றுக்கொண்டதற்கு ஒரு முக்கிய காரணம் எனலாம். தொடர்ந்தும் நடந்து கொண்டு வரும் எத்தனையோ விஷயங்கள் அவர்மீது வைத்திருக்கும் அன் பிற்கும், மரியாதைக்கும் மேலும் மேலும் உயிர்ப்பூட்டிக் கொண்டே செல்கின்றன.

எனக்கு தனிமனித வழிபாடோ, துதி பாடுவதோ உடன்பாடு இல்லாத விஷயம். இருப்பினும், ஆசிரியர்கள் நல்ல விஷயங் களைக் கற்றுத் தரும் குருவானவர்கள், நாம் போற்றி மதிப்ப ளிக்க வேண்டியது நல்லது என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவன்.

அண்ணாவைச் சந்தித்த முதல் சந்திப்பிலேயே என்னுடைய வீட்டிலேயே வந்து தங்கலாம் என்று அன்புக் கட்டளை யிட்டார். அவருடைய அன்பை ஏற்று கடந்த பதினான்கு வரு டங்களாக ரூட்டிங்கில் அவரது இல்லத்தில் இருந்து வரும் நான் இந்த வாழ்க்கையை ஒரு குருகுல வாசமாகவே கழித்து வருகிறேன்.

ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு மணித்தியாலமும், ஒவ்வொரு நாளும் எண்ணற்ற வாழ்க்கை அனுபவங்களை அவர் மூலம் படித்துக் கொண்டே வருகிறேன்.

அவர் எதையும் சொல்லிக் கொடுப்பதில்லை. அவர் நடந்து கொள்ளும் விதம், வாழும் வாழ்க்கையே ஒரு பாடம். ஏதாவது சந்தேகங்கள் கேட்டால் மட்டும் விளக்கம் சொல்லுவார். இவ்வுலகில், பலரும் தங்களுக்குத் தெரிந்த, தெரியாத விஷயங்கள் குறித்து தங்களுடைய மேதாவித்தனத்தை பறைசாற்றும் முகமாக, எந்த நேரமும் ஏதாவது ஒன்றைப் பேசிக் கொண்டும், மறுத்துக் கொண்டும், உளறிக் கொண்டும், பிதற்றிக் கொண்டும் இருப்பதையும் காண்கிறோம்.

இதுதான் உலகநடப்பு. ஆனால் இந்தச் சூழலில், அண்ணா, பல கடுமையான பிரச்சினைகளுக்கு எளிமையாகத் தீர்வுகளைச் சொல்லிவிட்டுப் போய்விடுவார். அவரின் நீண்ட அனுபவ அடிப்படையிலேயே அந்தத் தீர்வுப் பதில் வரும்.

கடந்த 14 வருடங்களாக 'புதினம்' பத்திரிகையை தொடர்ந்து வாசித்து வரும் ஒரு வாசகன் என்ற முறையில், புதினம் ஒவ்வொரு இதழிலும் ஒரு வார்த்தை கூட அர்த்தமில்லாமல் அச்சிடப்படவில்லை என்பதை உறுதியாக என்னால் சொல்ல முடியும்.

'புதினம்' ஒவ்வொரு இதழையும் அவர் மிகுந்த ஈடுபாட்டுடன் ஒரு கைதேர்ந்த சிற்பி சிற்பத்தை செதுக்குவது போல, அவர் மிகுந்த நுணுக்கத்துடன் உருவாக்குவதை அருகில் இருந்து, கண்டு பிரமித்திருக்கிறேன்.

'புதினம்' பத்திரிகையின் தலைப்புச் செய்தி எந்தப் பத்திரிகையிலும் இல்லாத தனித்துவம், அது அண்ணாவின் தூரப் பார்வை.

ஒரு ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றாக விளங்குவது ஊடகத்துறை அதைச் செவ்வனவே செய்கிறது. 'புதினம்' அண்ணாவின் அர்ப்பணிப்பின் முழுமையே புதினத்தின் வெற்றியின் இரகசியம்.

பிரபலமான மனிதர்களுடன் தாராளமாகவும், நெருக்கமாகவும் பழகக் கூடிய எண்ணற்ற வாய்ப்புகள் எனக்குக் கிட்டி உள்ளது.

பொதுவாக, ஒரு மனிதர் ஏதாவது ஒரு துறையில் மிகவும் உயர்வாக, பிரபலமாக இருந்தால், அவர்களின் ஏனைய விஷயங்களில் 'நேரமின்மை' மற்றும் ஈடுபாடு குறைவு போன்ற காரணத்தினால், பிரகாசிக்கமாட்டார்கள், நான் அறிந்த பிரபல அரசியல்வாதிகள், புகழ் பெற்ற நடிகர்கள், தலை சிறந்த எழுத்தாளர்கள்கூட தங்களது குடும்ப வாழ்க்கையில் பெரும் நெருக்கடிகளையும் தோல்வியையும் சந்தித்ததை அறிவோம்.

'அண்ணா' பத்திரிகைத் துறையில் பிரகாசித்ததைவிட அவர் குடும்பத்தில் மிகவும் பிரகாசமாக இருந்து கொண்டு வருகிறார் என்பதை நான் நேரில் பார்த்தும் கேட்டும் ஆச்சரியத்துடன் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

குடும்பத்தில் மூத்த உறுப்பினரான அண்ணாவின் தாயார் தனது 90-ஆவது பிறந்த தினத்தை கொண்டாடினார். அவரது தாயார் முதல், இளைய உறுப்பினர் ஏழு வயது நிரம்பிய அவரது பேரக் குழந்தை சுருதி வரை மற்றும் சகோதர சகோதரிகள், அவர்களது சந்ததியினரும் அண்ணாவிடம் காட்டும் ஈடுபாடும், அன்பும், மரியாதையும் மிகவும் பிரமிப்பான விஷயம்.



அண்ணாவின் 20-வது வயதில் தந்தையை இழந்த போது, அவரது ஐந்து வயதுக் கடைசிச் சகோதரி உட்பட ஐந்து சகோதர சகோதரிகளையும் மிகவும் பொறுப்புடன் வளர்த்து இன்று அனைவருமே உயர்ந்த நிலையில் நிறைவாக வாழும் வாழ்க்கையே அவரது குடும்பப் பொறுப்பை உணர்வதற்குச் சாட்சிகளாக விளங்குகிறது.

'நான், என் மனைவி, என் பிள்ளைகள்' என்று சுருங்கி வாழும் கலியுகத்தில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதற்கு உதாரணமாக அனைவரையும் சமமாகப் பாவித்து இரத்த சொந்த பந்தங்கள் மட்டும் இல்லாது என்னையும் உடன் பிறந்த சகோதரனாக நினைத்து சகல வளர்ச்சியிலும் உறுது ணையாக இருப்பதே அவருடைய அக்கறை மிகுந்த பாச உணர்வுக்கு சிறந்த உதாரணமாகக் கூறலாம்.

மேலும் ஒரு சம்பவம் என் மனதில் நிழலாடுகிறது. அதனைப் பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சில வருடங்களுக்கு முன், கனடாவில், ஸ்காபுளோவில் வசிக்கும் அவரது கடைசித் தங்கையின் 25-வது வருட திருமண வெள்ளி விழா நிகழ்ச்சி அழகான மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் லண்டனிலி ருந்து சகோதர சகோதரிகள் சென்று சிறப்பித்தனர். நிகழ்வின் உச்சகட்டமாக விழா மேடையிலேயே கடைசித் தங்கை தங்களுடைய வாழ்வின் அனைத்து உயர்வுக்கும் காரணமாக எனது அண்ணா என்று கண்ணீர் மல்கக் கூறி, காலில் விழுந்தது அங்கு கூடியிருந்த அனைத்து மனங்க ளையும் நெகிழ வைத்துவிட்டது. குடும்பத்தின் உயர்வுக்காக ஈடுபாட்டுடன் அயராது உழைத்தமைக்கு இதைவிட வேறு என்ன நற்சான்றிதழ் கிடைக்க முடியும்? இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு நான் அவரை அண்ணா என்று அழைப்பது மிகுந்த அர்த்தமுள்ளதாகப் பெருமிதமாகக் கருதுகிறேன்.

அண்ணாவின் வெளிவட்டார பழக்க வழக்கங்கள், நட்பு விஷ யங்கள், நண்பர்கள் வலயம் விரிவானது; மிகவும் பெரியது.

அவரின் ஒரு வார்த்தைக்கே பெரும் மதிப்புக் கொடுத்து, அவரது நண்பர்கள் பலரும் பல நாடுகளுக்கு நான் சென்றபோது என்னை அவர்கள் அன்போடும், உயர் மதிப் போடும் கவனித்துக் கொண்ட அனுபவங்கள் ஏராளம்.

லண்டனிலுள்ள தமிழர்களால் அண்ணா எப்படி மதிக்கப் பட்டார் என்பதற்கு ஒரு சம்பவம்: ஒரு நாள் மாலைப் பொழுதில் கொலியேஸ்வூட் வரை சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். ஒரு தமிழரது வீடியோ கடையைக் கடக்கிறபோது, அதன் உரிமையாளர் 'டாக்டர்' என்று அன்போடு அழைத்தார். அங்கு மாலை நேரத்தில், பிர பலமான மனிதர்கள் அக்கடையில் கூடி பேசி மகிழ்வது வழக்கம்.

கடையின் உரிமையாளர் என்னை அங்கிருந்த தனது நண்பர் களுக்கு பின்வருமாறு அறிமுகப்படுத்தினார்.

'இவர் டாக்டர் தியாகராஜன். தமிழ் நாட்டிலிருந்து இங்கு அடிக்கடி வருவார். இங்கு 'புதினம்' ராஜகோபால் வீட்டில் தங் கியிருக்கிறார். ராஜகோபால் வீட்டில் தங்கியிருக்கிறார் என்றால், இவரைப் பற்றிப் புரிந்து கொள்ளுங்கள்' அந்த நொடி எனக்கு அண்ணாவின் நட்பு வட்டாரத்தில் அவருக்கு இருந்த உயர்ந்த மதிப்பைத் தெளிவாக உணரமுடிந்தது.

அண்ணா மட்டுமன்றி, அவரது மனைவி மிகப் பிரபலமான நடன ஆசிரியை. நான் அவர்களை குருவுக்கு ஏற்ற குரு பத்தி னியாக பலமுறை பார்த்து அதிசயித்து இருக்கிறேன். இருவரும் உழைப்பில் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்க ளல்ல. அவர்கள் நேரம் காலம் பார்க்காத கடும் உழைப்பை மேற்கொண்டு, இன்று லண்டன் தமிழர்கள் மத்தியில் ஒப்புயர் வற்ற உயரத்தை எட்டியிருக்கிறார்கள்.

அவர்கள் மகள் ஷர்மினி கண்ணன் நடன ஆசிரியையாகவும் குடும்பத் தலைவியாகவும், சிறந்த முறையில் மூன்று பிள்ளை களுடன் முன்னேறிக்கொண்டு வருகிறார்.

மகன் ஷியாம்ராஜ் சிறந்த நிர்வாகி. ஒரு அரச பாடசாலையில் பணியாற்றுகிறார். பிரதமர் வாசஸ்தலமான 10. Downing Street, அனைவரும் லண்டனில் அறிந்த ஒரு இடம்: 38, Moffat Road, அதற்கு இணையான என்னை மேலும் செம்மைப்ப டுத்திக் கொள்ள ஆதரவாக இருக்கும் குருகுலம், அங்கு குருவாக அண்ணா.

2016-ஆம் ஆண்டிற்கு பிறகு, கொரோனா பேரிடர், உலக பொருளாதார வீழ்ச்சி, எதிர்காலம் குறித்த பெரும் அச்சம்... இவ்வாறு ஏராளமான நெருக்கடிகளை கடந்து 2024-ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றோம். காலம் எவ்வளவோ விஷ யங்களை நமக்கு கற்றுத் தருகின்றது. ஒவ்வொரு நாளும் இயற்கையும், நடைமுறை விஷயங்களும், நம்மோடு வாழும் மனிதர்களும் நமக்கு எண்ணற்ற விஷயங்களை கற்றுக் கொடுக்கின்றார்கள். சக மனிதர்களிடம் அரிதாக நாம் பெறும் வாழ்வியல் அனுபவங்கள் நமக்கு பெரும் நன்மைகளை பெற்றுத் தருகின்றது.

இந்த வகையில் நல் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும் 'அண்ணா' அவர்களுடன் 2002-ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த 22 ஆண்டுகள் தொடர்ச்சியாக பயணித்துக் கொண்டி ருக்கும் பேரனுபவம் எனக்கு கிட்டியது இறைவன் திருவருள். டிசம்பர் 25 கிறிஸ்து அவதரித்த, கிறிஸ்துமஸ் நன்னாளில் பிறந்த ராஜகோபால் அண்ணா அவர்களின் வாழ்க்கை நல்ல நலமுடனும், மன மகிழ்வுடன், நிறைவுடனும் நீண்ட நெடுங் காலம் தொடர பிரார்த்திக்கின்றேன்.

***வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்***
***தெய்வத்துள் வைக்கப் படும்.***

என்னுடைய இதய மலர்களை அண்ணாவுக்குக் காணிக்கை யாக்குகிறேன்.



r.thyagarajan@thaiveedu.com



# நினைவுகளின் பாதையில்...

– எ.கே. ராஜகோபால்

எனக்கு வேறு வழி தெரியவில்லை. 1985-ஆம் ஆண்டு மே மாதம். முதல் வாரம் என்று நினைக்கிறேன்.

அரசின் கைப்பொம்மையாக இயங்கிக் கொண்டிருந்த கொழும்பு 'லேக்ஹவுஸ்' நிறுவனத்திலிருந்து வெளிவந்த 'தினகரன்' பத்திரிகை உதவி ஆசிரியர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு, மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பி வந்து 'ஈழநாடு'-வில் சேர்ந்து கொண்ட காலம்.

என்னைப் பெற்று வளர்த்த வல்வெட்டிக்கு சிலகாலம் போக முடியாத சூழ்நிலை.

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியில், ஆறுமாதக் கர்ப்பிணிப் பெண் ஒருவர், விசாரணை என்ற பெயரில் கற்பழிக்கப் பட்டாள். எனது பெயரோடு அச்சம்பவத்தை செய்திக் கட்டு ரையாக 'ஈழநாடு' நாளிதழில் எழுதினேன். ராணுவ உயர் அதி காரியின் பார்வைக்கு இக்கட்டுரை 'எட்டப்பர்'களினால் கொண்டுவரப்பட்டது. அவர் 'ஈழநாடு' அலுவலகத்துக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அப்படி எதுவும் நடக் கவில்லை என்று மிரட்டினார்.

இதன் பின்னர் அலுவலகத்துக்கு வந்த அதிகாரி, பிரதம ஆசிரியரைச் சந்தித்து, விசாரித்து உள்ளார். எனது முகவ ரியைக் கேட்டிருக்கிறார். இதன் பின்னர் எனது மனைவியின் ஊரான மானிப்பாயில், உறவினர் ஒருவரது அறையில் தங்கி யிருந்த இல்லத்துக்கு ராணுவம் சென்றிருக்கிறது. நாங்கள் எவரும் அங்கிருக்கவில்லை. அந்த வீட்டில் எங்கள் அறை யையும், மேலும் அவ்வீட்டின் மற்றைய அறைகளையும் அக்குவேறு ஆணி வேறாகச் சோதனை செய்தது இராணுவம்.

இதன் பிறகு அலுவலகத்துக்கு போவதைத் தவிர்த்துக் கொண்டு, சிலநாட்கள் எனது தாயாரின் பூர்வீக இல்லமான நவாலி போன்ற இடங்களில் மறைந்து வாழ்ந்தோம்.

வல்வெட்டி எனது ஊர். அது வல்வெட்டித்துறைக்கு அடுத்த ஊர். எங்கள் தலைவனின் சொந்த மண் என்பதால், ராணு வத்தின் அட்டகாசம் கட்டுக்கடங்காத காலம்.

என் மனைவியையும் கைக்குழந்தைகளையும் பார்த்தேன். அவர்கள் மானத்தோடு அந்த மண்ணில் வாழ முடியாது என்ற முடிவை எனது மனதைக் கல்லாக்கிக்கொண்டு எடுத்தேன்.

என் உயிரான அம்மாவைப் பார்க்க வேண்டும், அவர்களைப் பராமரித்துக் கொண்டிருந்த சகோதரிகளைப் பார்க்க வேண்டும்.

பிறந்து, தவழ்ந்து, அளைந்து, விளையாடி மகிழ்ந்த சொந்த மண்ணில் உறவுகள், உற்றவர்களுடன் உருத்தோடு பழகிய அந்தச் சுகங்களை எல்லாம் நினைத்துப் பார்த்தபோது அழுகைதான் வந்தது.

நான்கு வயதுச் ஷர்மினியையும், ஒரு வயது ஷியாமையும் நாங்கள் இருவரும் தூக்கிக்கொண்டு வல்வெட்டிக்கு பஸ்ஸில் போனோம். அழகான அந்தக் கிராமம் சின்னாபின்னமாக்கப் பட்டிருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்னர் சிங்கள ராணு வத்தின் வெறியாட்டத்தினால், வீடுகளைச் சுற்றி அடைக்கப் பட்டிருந்த வேலிகள் எரிக்கப்பட்டு, கருகிக் கிடந்த பசுமையான மரங்களின் கோலங்கள் எம்மைப் பதறவைத்தது. எங்கள் வீட் டிலிருந்து சிறிது தூரத்தில் உள்ள வல்வெட்டித்துறை - ஊரணி ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள சுடலையில் அமைந்த சிறு மண்டபத்துக்குள், முதல் நாள் உயிரோடு

பிடித்த எங்கள் சொந்தங்கள் துடிக்கத் துடிக்கக் கொன்றொழிக்கப்பட்ட செய்தி இருதயத்தைப் பிழந்தது. மாபெரும் தலைவன் பிறந்த மண்ணின் வல்வெட்டித்துறைச் சந்தியில், வரிசையாக வைத்துக் கொல்லப்பட்ட கொடூரத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

என் குழந்தைகளை இறுக்கமாக அணைத்துக் கொண்டேன். எனது மனைவியைப் பார்த்தேன். இவர்களை இந்தக் கொடுரர்களுடன் வாழ என்னால் அனுமதிக்க முடியாது.

எங்கள் அம்மாவையும், சகோதரிகளையும் கட்டி அணைத்து கண்ணீர் விட்டபடியே, பிரிய மனமில்லாமல் பிரிந்தோம்.

இள வயதில் என் தந்தையைப் பிரிந்து, இளமையான அம்மாவுக்காகவும், உடன்பிறப்புகளுக்காகவும் சந்தித்த துயரங்களையும், என் தந்தை எங்களுக்குத் தந்த வீடு, காணி எல்லாவற்றையும் விட்டு, உயிரான அம்மா, உடன்பிறப்புகளைப் பிரிந்து, ஏதோ கையிலிருந்த உடுப்புகளோடு யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரை பஸ்ஸில் போனோம். அப்போது வவுனியா வரை ரயில் சேவை இல்லை. எங்கள் பஸ்ஸைப் பணயமாக வைத்து பின்னால் ராணுவ டிரக்குகள் வர, வழியில் பஸ்ஸை மறித்து, எங்களை எல்லாம் இறக்கி சோதனை செய்ய, சின்னஞ்சிறு குழந்தைகளோடு அனுபவித்தவை எல்லாம் இன்றும் பயங்கரக் கனவுகளாக வந்து போகின்றன.

வேகமாகக் காட்சிகள் மாறுகின்றன.

கொழும்பிலிருந்து, விசா இல்லாமல் நாங்கள் நால்வரும். விமானத்தில் பயணம் செய்து, லண்டன் 'கீத்றோ' விமான நிலையத்தில் இறங்கிய எங்களை 'காமன்ஸ்வெல்த்' அகதிகள் முகாமில் 20 நாட்கள் வைத்திருந்தார்கள். எங்களை உறவினர்கள் யாரும் வந்து தமது சொந்தப் பிணையில் கூட்டிச் செல்வதை நான் விரும்பவில்லை. மூன்று தடவைகள் விமான நிலையத்துக்கு கூட்டிச் சென்றார்கள். என்னையும், எனது மனைவியையும் தனித்தனியாக அதிகாரிகள் விசாரித்தார்கள். இரண்டொரு நாளில் நாங்கள் தங்கியிருந்த முகாம் அதிகாரி, எங்களை அழைத்து அரசியல் தஞ்சம் அளித்திருப்பதைத் தெரிவித்து, அதனை உறுதிப்படுத்தும் கடிதத்தையும் எம்மிடம் தந்தார்கள். அன்று முதல் லண்டன் தெருக்களில் சுதந்திரமாக உலவ அனுமதித்தது பிரிட்டிஷ் அரசு. இதனைப் பத்திரிகையாளன் ஒருவனுக்கு அளிக்கப்பட்ட கௌரவமாகவே கருதினேன்.

லண்டனுக்குள் அகதியாக தஞ்சம் அடைந்து, முதல் ஓராண்டும், சுறுசுறுப்பாக என்னை இயங்க வைத்த பத்திரிகைத் தொழிலை விட்டு, அந்நிய தேசத்தில், தாயையும், தாய் மண்ணையும், உறவுகளையும், நெருங்கிப் பழகிய நண்பர்களையும் நினைத்து மௌனமாக அழுதிருக்கிறேன். விரக்தியின் எல்லைக்கே போயிருக்கிறேன். என் மனைவி எனக்கு ஆறுதலாக இருந்திருக்கிறாள்.

கொழும்பு 'தினகரன்' பத்திரிகையில் எனக்கு பிரதம ஆசிரியராகவிருந்த அமரர் ஆர். சிவகுருநாதன் லண்டனுக்குப் போகிறதைப் பற்றி போனில் அவசரமாகச் சொன்னபோது, 'இவ்வளவு நாளும் நீ ஒரு 'ஜெர்னலிஸ்ட்' என்று மதிக்கப்பட்டாய்! டாக்டர், என்ஜினியர், அக்கவுண்டன்ற் என்பதுபோல, இதுவும் ஒரு துறையில் பட்டம் பெறாமலே ஒரு தகுதியை பெற்றிருக்கிறாய். லண்டனுக்குப் போய் என்ன செய்யப் போகிறாய்? கோப்பை கழுவித்தான் பிழைக்க வேண்டும்!' என்றார். 'நான் என் மனைவி பிள்ளைகளின் உயிரைக் காக்கப் போகிறேன். அங்கு போய்ப் பார்ப்போம்' என்று அவருக்குப் பதில் சொன்னாலும், லண்டனில் அகதி அந்தஸ்துக் கிடைத்து, அரசியல் தஞ்சம் பெற்ற பின்னரும் அவரது வார்த்தைகள் சவாலாக அமைந்தன.

எங்கள் உறவுகளும் லண்டனுக்கு அகதிகளாக வந்து குவியத் தொடங்கினார்கள்.

பணம் சம்பாதிப்பதற்கு சீமையிலே பல வழிகள் இருந்தாலும், பத்திரிகைத் தொழில் என் முழு நேர வாழ்வாகி விட்டது. அது என்னோடு இரண்டறக் கலந்து, இதயத்தோடு வாழ்கிறது.

தாயகத்தில் இருபது வருடங்கள்... பள்ளியில் இருந்து நேராக 'ஈழநாடு'-க்குள் நுழைந்தேன். பதினெட்டு வயதுகூட ஆகாத வயது அது. இங்கும் முப்பத்தெட்டு வருடங்களைக் கழித்து விட்டேன்.

'தமிழன்' சில நல்ல இதயங்களை அணைத்து, ஆசிரியராக இருந்து சில காலம் லண்டனில் மாதமிருமுறை வெளியிட்டு, வாசகர்களின் அபிமானத்தை பெற்றேன். மிகுந்த ஆதரவு பெற்றாலும், தொடர்ந்து என்னால் நடத்த முடியாமல் போய் விட்டது! கூட்டு முயற்சி எனக்குச் சரிவரமாட்டாது என்ற பாடத்தை புகட்டியதால், புதிய பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்கிறபோது தனியொருவனாக இயங்குவதென்ற முடிவை எனக்குள்ளே எடுத்துக் கொண்டேன். தமிழீழ விடுதலையை நோக்கிய மாபெரும் தலைவனின் லட்சியப் பயணத்துக்கு என்னாலான பங்களிப்பை வழங்க வேண்டுமென்ற நோக்கத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்கும், முரண்பாடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கும் தயாரானேன்.

'ஈழகேசரி' பத்திரிகை மாதமிருமுறை முழுக்க முழுக்க என் உழைப்பிலே, என் பத்திரிகைக்கான கொள்கைகளுடன் ஓரிரு நண்பர்களின் ஆதரவோடு பவனிவரத் தொடங்கியது.

'ஈழகேசரி'-யின் முதல் இதழ் 15.01.1993 அன்று வெளியானது. 32 பக்கத்தில், இப்பத்திரிகை வந்தது.

'இது உங்கள் பத்திரிகை' என்ற தலைப்பில், ஆசிரிய தலையங்கம் எழுதியிருந்தேன். அது வருமாறு:

சொந்தங்களோடும் பந்தங்களோடும் வாழ்ந்த அந்தத் தாய் மண்ணை உலக அரங்கில் பெருமைப்படுத்த, அம்மண்ணுக்கு சமர்ப்பணம் 'ஈழகேசரி'.

நாற்பதாம், ஐம்பதாம் ஆண்டுகளில் யாழ்ப்பாணம் - சுண்ணாகம் திருமகள் அழுத்தக உரிமையாளர் நா. பொன்னையா பிரசுரித்த வார இதழ் அது.

வயது முதிர்ந்தவர்களுக்குத் தெரியும் அப்பத்திரிகை ஏற்படுத்திய தாக்கம்.

**Covid 19 தொற்று இவ்வுலகில்**
**பலரது வாழ்க்கையையும், தொழில்களையும் புரட்டிப்போட்டுவிட்டது.**
**நானும் அதற்கு விதிவிலக்கல்ல.**
**அடுத்தது என்ன? சூழல்கள் கனிந்து வருமா? காலம் பதில் சொல்லும்!**

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, இலங்கையில் புதிய எழுத்தாளர் பரம்பரை ஒன்றை அது உருவாக்கியது. ஈழத் தமிழகத்தில் தமிழ் உணர்வை ஏற்படுத்தியது.

அதே வழியில் செல்வது எமது நோக்கம்; திட்டம். அதேவேளை, ஈழகேசரி காலத்துக்கும், இன்றைய காலகட்டத்துக்கும் உள்ள வேறுபாடுகளையும் கவனத்தில் எடுப்போம்.

அன்றைய தேவை இன, இலக்கிய, கலை உணர்வுகளைத் தட்டி எழுப்புவது. இன்று அதே உணர்வுகளைக் கொண்ட பரம்பரையினர் உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்றனர்.

அந்த உலகத் தமிழருக்கும் ஈழத்துக்கும் பாலம் அமைக்க வேண்டியது 'ஈழகேசரி'-யின் தலையாய பணி. அடுத்தது வெவ்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களிடையே உணர்வுப் பாலம் அமைப்பது.

வீடு நெருப்புப் பிடித்து எரியும் வேளையில் வீட்டுக்கு நெருப்பு வைத்தது யார்? நண்பரா பகைவரா? சரியா பிழையா? என்பது போன்ற ஆராய்ச்சியில் 'ஈழகேசரி' தனது காலத்தை வீணாகக் கழிக்காது. வேகமாகத் தண்ணீர் கொண்டு ஊற்றி, நெருப்பை அணைக்க முற்படும். கிராமத்தவரோடும் ஊர் மக்களோடும் வாலிப வீரர்களோடும், 'ஈழகேசரி' சேர்ந்து கொண்டு தன் பணியினை ஆற்றத் தயங்காது. 'ஊர் ஓடினால் ஒத்து ஓடு; ஒருவன் ஓடினால் கேட்டு ஓடு' என்பது 'ஈழகேசரி' அறியாததல்ல. தமிழர்கள் தலை தாழ்ந்து அடிமைகளாக வாழக்கூடாது. அதேவேளையில் அவர்கள் தலைக்கனம் கொண்டவர்களாகவும் வாழக்கூடாது.

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற பொது நோக்கே 'ஈழகேசரி' பத்திரிகையின் அடிப்படை நாதமாக அமையும். உலகத் தமிழ் மக்களின் உயர்வே குறிக்கோள். இது அத்தருணத்தில் நான் எழுதிய முதல் பணிவான கருத்துக்கள்.

ஐரோப்பிய நாடுகள் எல்லாம் நல்ல வரவேற்பைப் பெற்ற இப் பத்திரிகை சில வருடங்கள் வெற்றிகரமாக வெளிவந்த போதிலும், அதனை மாதமிருமுறையாக நடத்துவதில் இருந்த நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, 'ஈழகேசரி'-யை மாத சஞ்சிகையாக வெளியிட ஆரம்பித்தேன்.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் வெற்றிக்குப் பக்கபலமாக, அக்கருத்துகளை பகிர்ந்துகொள்கின்ற வகையில், ஈழ விடுதலைக் குரலாக சில காலம் ஒலித்த அச்சஞ்சிகையைத் தொடர்ந்து நடத்த முடியாமல் போய்விட்டது என்பதை விட, வேறு சொன்னால் என்ன சொல்ல முடியும்?

ஐரோப்பிய நாடுகள், லண்டன் உள்ளடக்கி வெளியிடப்பட்ட 'ஈழகேசரி' நிறுத்தப்பட்டபோது, ஆதரவுக் கரம் நீட்டி, 'தொடர்ந்து நடத்துங்கள்' என விடுக்கப்பட்ட அன்பான வேண்டுகோள்களை என்றும் நெஞ்சம் மறவாது.

ஒரு பத்திரிகை ஆரம்பித்து அதனைத் தொடர்ந்து நடத்துவது என்பது மிகச் சிரமமான பணி. அந்த வகையில் மீண்டும் 'புதினம்' மாத இதழை 1996-ஆம் ஆண்டு ஆரம்பித்தபோது, இங்கிலாந்து தேசத்தின் தமிழர்களை மனதில் கொண்டு, அந்த எல்லைக்குள் மாதமிருமுறை இதழாக வெளியிடத் தொடங்கினேன். விளம்பரங்களை முழுக்க முழுக்க நம்பி நடத்தப்படுகிற இப்பத்திரிகைக்கு, கிடைத்த நல்ல ஆதரவை நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன்.

2006-ஆம் ஆண்டு 10-வது ஆண்டு விழாவை விளம்பரதாரர்கள், வாசகர்கள் திருவிழாவாகக் கொண்டாடியபோது, ஆயிரமெனத் திரண்ட பெரும் கூட்டத்தைக் கண்டு பிரமித்து மெய்சிலிர்த்தேன். கலைகளின் சங்கமமாக மிளிர்ந்தது அந்த விழா. அதனைத் தொடர்ந்து மற்றுமொரு பத்தாண்டுகள் கழிந்து, இருபதாவது ஆண்டு நிறைவை 'புதினம்' கொண்டாடியதென்றால், அதற்கு முழுமையான காரணமாகத் திகழ்ந்தது வாசகர்களும், விளம்பரதாரர்களுமே! அவர்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை.

'Facts are sacred; Comment is Free'. இந்தப் 'பத்திரிகை தர்மத்தின்' கோட்பாட்டை வைத்துத்தான் எனது பத்திரிகைப் பயணம் தொடர்கிறது. 'புதினம்' இதழின் இனிய வெற்றிக்கு இதுவே தாரக மந்திரம்.

'பிறர் மனம் நோகும்படியான எதையும் பத்திரிகையில் எழுதக் கூடாது. எழுதுவதற்குக் களம் வைத்துக்கொண்டு, பதில் எழுதுவதற்கு வாய்ப்பு இல்லாதவர்கள் பற்றி அவதூறு எழுதக் கூடாது'.

யாழ் 'ஈழநாடு'-வில் அதன் பிரதம ஆசிரியராக இருந்த அமரர் கே.பி. ஹரன் என்னிடம் ஒரு தடவை 'கண்டிப்போடு' சொன்ன மேற்படி வரிகள், இப்போதும் என் நெஞ்சில் எதிரொலிக்கின்றன, அவை இன்றும் வழிகாட்டுகின்றன.

பணிவோடும், பண்போடும் - ஆனாலும் துணிவோடும், துடிப்போடும் தமிழ் மக்களின் உயர்வுக்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஏற்றமுடன் பணி செய்ய வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும். Covid 19 தொற்று இவ்வுலகில் பலரது வாழ்க்கையையும், தொழில்களையும் புரட்டிப்போட்டுவிட்டது. நானும் அதற்கு விதிவிலக்கல்ல. அடுத்தது என்ன? சூழல்கள் கனிந்து வருமா? காலம் பதில் சொல்லும்!



info@thaiveedu.com














# பத்திரிகைத் துறை ராஜகோபாலுக்குக் கைவந்த கலை

– சசிபாரதி

நெஞ்சம் மறக்காத அந்த நினைவுகள்...

பள்ளிப் பையனொருவன் அரைக்காற்சட்டையுடன் 'ஈழநாடு' அலுவலகத்துக்கு வந்து ஒரு கடிதத்தை நீட்டுகிறான்.

எனது முக்கிய நண்பர்களில் ஒருவரான 'தாழையடி' சபாரத்தினம் கொடுத்த கடிதம் அது.

பிரித்துப் படிக்கின்றேன்.

'இக்கடிதம் தரும் தம்பி எழுத்துத் துறையில் பிரகாசிக்க விரும்புகிறார். அவருக்கு ஆதரவு அளிக்க வேண்டும்' என்று எழுதியிருந்தார். கடிதத்தைப் படித்து முடிக்கவும், இன்னொரு என்வலப்பை நீட்டுகிறான் பொடியன்.

அது ஒரு சிறுகதை. பெயர்: 'மொட்டை மரம்'

அடுத்த வாரமே அந்தச் சிறுகதை 'ஈழநாடு' வார மலரில் வெளியானது.

விட்டானா பின்னே ? சிறுகதை, கட்டுரை என்றெல்லாம் எழுதித் தள்ளினான்.

படித்துக் கொண்டு இருக்கும்போதே 'விவேகி' என்ற சஞ்சிகையின் பொறுப்பை ஏற்றார். ராஜகோபாலின் வேகத்துக்கு 'விவேகி' ஈடு கொடுக்காது போகவே (விவேகி மாத ஏடு) 'ஈழநாடு' ஆசிரியர் குழுவில் ஒருவராகச் சேர்ந்து கொண்டார்.

செய்திகளை எடுப்பதிலும், செய்திகளைத் தயாரிப்பதிலும் அவரிடம் ஒரு தனித்துவம் இருந்தது.

'ஈழநாடு' வாரமலர் ஆசிரியராக இருந்த எனக்கு உதவியாக இருந்து கலையரங்கம் பகுதியைச் செய்தார். 'நம் நாட்டுக் கலைஞர்கள்' என்ற அவரது வாரா வாரம் வெளிவந்த பகுதியினால், தலை நிமிர்ந்தார்கள் ஈழக் கலைஞர்கள்!

எந்த எந்தச் செய்தியை எப்படி எப்படி எழுத வேண்டும் என்ற வித்தை கைவரப்பெற்ற பத்திரிகையாளர் ராஜகோபால். வாசகர்களோடு அந்தரங்கமாக உறவாடும் சக்தி அவர் பேனாவுக் குண்டு.

அவர் எழுதிய ஒரு செய்தி, என்னை ஒரு பெண்ணைப் போலக் கேவிக் கேவி அழவைத்துவிட்டது! அந்தச் செய்தி குறிப்பிட்ட சம்பவத்தை என் நெஞ்சம் இறுக்கமாகப் படம் பிடித்துவிட்டதால், இன்றும்கூட அதனை நினைக்கும்போது என் கண்கள் கலங்கும்.

இரணைமடுக்குளத்தில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த அந்தப் பிஞ்சுச் சிறுமி பலியாகிவிட்டாள். கடைசியாக நீரின் மேல் அவளது ஒரு கையின் விரல்கள்

தெரிகின்றன. இது அழியாத காட்சியாக என் மனதில் பதிந்து விட்டது. அந்தச் செய்தியைப் படித்த அத்தனை பேரும் அந்தச் சின்னஞ்சிறு பெண்ணின் ஆத்ம இளைப்பாறுத லுக்காக நிச்சயம் வேண்டுதல் செய்திருப்பர்.

தமிழ் அமைச்சர் ஒருவர் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்த காலம் அது.

'ஏழுவயதில் தாய்' என்ற தலைப்பில் 'ஈழநாடு' வாரமலரில் அவர் எழுதிய உணர்ச்சிவசமான உண்மைச் சம்பவம் என் நினைவில் இன்னமும் நிற்கிறது.

தாய், தந்தையை இழந்த மூன்று சின்னஞ்சிறு அனாதைப் பெண் குழுந்தைகள்... மூத்தவளுக்கு வயதோ ஏழு... உறவினர் வீட்டில், ஒரு குடிசைக்குள்... அந்த ஏழு வயதுச் சிறுமியே தாயாக இருந்து, தன் சகோதரங்களைப் பேணும் காட்சியை... ஓ! இந்தக் 'கதை'யின் இறுதியில் ஒரு கேள்வி: கருணையே வடிவாக, ஈவிரக்கமுள்ளவர்களாகப் 'போட்டோ வுக்குப் போஸ்' கொடுக்கின்ற அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், வறுமையோடு போராடும் இந்த அனாதைச் சிறுமியர்களுக்கு உதவுவார்களா ?'

அடுத்த நாளே தமிழ் அமைச்சர், குறிப்பிட்ட அனாதைச் சிறுமிக்கு நிதி உதவி ஒன்றை ஆரம்பிக்கும்படி கேட்டு. 'செக்' ஒன்றை 'ஈழநாடு'க்கு அனுப்பியிருந்தார். ராஜகோபாலின் எழுத்து அந்த நிதி மூலம் அனாதைச் சிறுமிக்கு பெருந்தொ கையைச் சேர்த்துக் கொடுத்தது.

'ஈழநாடு' நிர்வாகிகளோடு, அவர் கருத்து வேறுபாடு கொண்டு வெளியேறியபோது நான் மட்டுமல்ல, அங்கு பணியாற்றிய அத்தனை பேரும் கண்கலங்கிவிட்டார்கள்! கொழும்பு 'லேக் ஹவுஸ்' நிறுவனத்தின் 'தினகரன்' பத்திரிகையில் திரு. ஆர். சிவகுருநாதனின் கீழ் துணை ஆசிரியராகச் சேர்ந்து பல புதிய அம்சங்களைச் செய்தார்.

ஆறு ஆண்டுகள் அங்கு பணியாற்றிய அவர் விடுமுறையில் 1980-ஆம் ஆண்டு லண்டனுக்குச் சென்று ஒரு வருடத்தின் பின் நாடு திரும்பினார். அதன் பின் மீண்டும் 'ஈழநாடு' அவரை அணைத்துக் கொண்டது. எந்தக் கருத்து வேறுபா டுகள் ஏற்பட்ட போதிலும், மறைந்த தமிழ்ப் பெரியார். 'ஈழநாடு' நிர்வாகி உயர்திரு. கே.ஸி. தங்கராஜா அவர்கள் ராஜகோபாலின் திறமைக்கு மதிப்புக் கொடுத்தவர் என்பதைப் பலரும் அறிவார்கள்.

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தைப் பகுதியில் ஆறுமாத இளம் கர்ப்பிணிப் பெண் ராணுவ வெறியர்களால் கற்பழிக் கப்பட்ட போது, வெகுண்டு எழுந்து தன் பேனாவால் போர் தொடுத்தார். இதனால் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தொடர்ந்து 1985 மே மாதம் குடும்பத்தோடு லண்டனுக்குத் தப்பிப் போனார். இவருக்கும், இவரது குடும்பத்துக்கும் பிரிட்டிஷ் அரசு அரசியல் புகலிடம் அளித்தது.

'கடலையும், கடற்கரையையும் தரையையும் கட்டி ஆண்ட வர்கள். எவரையும் அடிமைப்படுத்தாமல், யாருக்கும் அடி மைப்படாமல், தன்மானத்தோடு வாழ்ந்தவர்கள் வல்வெட் டித்துறை மக்கள். வீரத்தின் விளைநிலம் அது. அந்த மண்ணின் அயல் கிராமமான வல்வெட்டியில் பிறந்தவன்



நான்!' என்று ராஜகோபால் நண்பர்களிடம் சொல்லிப் பெரு மைப்படுவார்.

அவ்வப்போது 'ஈழநாடு', 'தினகரன்' பத்திரிகைகளில், வல் வெட்டித்துறை கப்பலோட்டிகள் பற்றிப் பல கட்டுரைகள் எழு தியுள்ளார். ஆனால், இப்போது அவர் செய்துள்ள பெரும் விஷயம் லண்டனிலிருந்து சரித்திரம் படைத்திருக்கிறார்.

பரந்துபட்ட பசுபிக் சமுத்திரத்தைத் தாண்டிப் பனை உயரத் துக்கு மேலாக, அலை அடித்து எழுந்து கொந்தளித்துக் கொண்டிருக்கும் 'அத்திலாந்திக்' சமுத்திரத்தினூடாக ஐந்து மைல் ஆழமுள்ள தண்ணீருக்குள் வீரசாகசப் பயணம் செய்த அந்த வரலாற்று நாயகர்களின் 'கதை'யைப் படிக்கும் போது மெய் சிலிர்க்கிறது.

ராஜகோபாலின் எழுத்துத் திறமை தனித்துவமானது.

பத்திரிகைத் துறை ராஜகோபாலுக்குக் கைவந்த கலை.



# ஈ.கே. ராஜகோபால் ஒரு சாதனையாளர்!

## – எஸ்.எம். கோபாலரத்தினம் (கோபு) –

பதினெட்டு வயதிலேயே பத்திரிகையைத் தனது வாழ்வாகத் தேர்ந்தெடுத்தவர், வெள்ளையரின் லண்டன் மாநகரில் தமிழ்ப் பத்திரிகையின் இருபதாவதாண்டு நிறைவைக் கொண்டாடியவர், ராஜகோபால்.

சிறுவன் என்று அலட்சியப்படுத்த முடியாமல், இளைஞன் என்று உற்சாகப்படுத்த முடியாமலுமுடைய தோற்றத்தில் முதல் தடவையாக ராஜகோபாலை நான் சந்தித்தேன்.

இவர் ராஜகோபால், வல்வெட்டியிலிருந்து வருகிறார். படிக்கும்போது விவேகியில் வேலை பார்த்தவர். இது இவருக்குத் திருப்திப்படவில்லை. தினசரிப் பத்திரிகையில் பணியாற்ற வேண்டுமென்ற துடிப்பில் ஈழநாடு பத்திரிகைக்கு வந்திருக்கிறார் என்று நண்பர் சசிபாரதி சபாரத்தினம் இவரை ஒரு நாள் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஈழநாடு இப்போது தினசரிப் பத்திரிகையாக பல சிரமங்களைச் சுமந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் இவருக்குச் சம்பளமும் கொடுத்துப் பத்திரிகைப் பயிற்சி அளிப்பதற்கு நிர்வாகம் தயாராக இருக்குமா? என்று தெரியவில்லை என எனது சந்தேகத்தை வெளியிட்டேன்.

அதைப் பற்றிய கவலை வேண்டாம். ஈழநாடு நிர்வாக இயக்குநரான டாக்டர் கே.சி. சண்முகரெத்தினம் இவரை பத்திரிகைப் பயிற்சிக்கு எடுப்பதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டார் என்று சசிபாரதி சொன்னார்.

யாழ்ப்பாணத்தில் புளுறிபன் என்றொரு ஹோட்டலை நவீன முறையில் பாலசிங்கம் என்பவர் துணிச்சலுடன் தொடங்கியிருந்த சமயம் அது. இந்த பாலசிங்கம் ஒரு சட்டத்தரணியுமாவார்.

இவர் ஒரு இடதுசாரி அரசியல் சார்புடையவராகவுமிருந்தார்.

அதே போக்குடைய டாக்டர் சண்முகரெத்தினமும் இவரும் நண்பர்கள்.

ராஜகோபால் ஈழநாடு பத்திரிகையில் சேர்ந்து பத்திரிகை பயிற்சி பெறலாம். முதல் மூன்று மாதங்களுக்கு வேதனம் எதுவும் வழங்கப்படமாட்டாது. போக்குவரத்து செலவும்கூடக் கொடுக்கப்பட மாட்டாது. மூன்று மாதங்களுக்கு பின் சிறிது அலவன்ஸ் வழங்கப்படுவது பற்றி இவரது பயிற்சியில் திருப்தி கண்டால் ஆலோசிக்கப்படும் என்று நிர்வாகம் தெரிவித்தது.

ராஜகோபாலும் சம்மதம் தெரிவித்துச் சேர்ந்து கொண்டார்.

புளுறிபன் பாலசிங்கம் ராஜகோபாலுக்கு உறவினர் என்று அறிந்தேன்.

சில வாரங்களின் பின்னர் நிர்வாக ஆசிரியர் ஹரன் அவர்களுடன் பேசுகையில் இராஜகோபாலுக்கு போக்குவரத்து செலவாக ஏதாவது கொடுத்தால் நல்லது என்று சொன்னேன்.

அவரே சம்மதித்து வந்து கொண்டிருக்கிறார். டாக்டர் அதைப் பற்றி பார்த்துக் கொள்வார் என்று ஹரன் ஐயா சொல்லி விட்டார்.

ஈழநாடு ஆசிரிய பகுதியில் ராஜகோபாலும் ஒருவராகப் பணி யாற்றத் தொடங்கியிருந்தார். அது ஒரு குடும்பம் போல சுக துக்கங்களில் ஒவ்வொருவரும் பங்கெடுத்துக்கொள்வார்கள். வேலைகளும் கலந்து செய்துகொள்வர்கள்.

சந்தேகங்கள் வரும்போது நான் வழிகாட்டுவேன். நிர்வாக ஆசிரியர் ஹரன் ஐயாவுடனும் கலந்தாலோசனை செய்து கொள்வோம்.

அலுவலகத்தின் உள்ளே சிறு சிறு மொழிபெயர்ப்பு வேலைகள் செய்வதுடன் வெளியே நடக்கும் அரசியல் கட்சிக் கூட்டங்கள், இலக்கிய, சமயக் கூட்டங்களுக்கும் சென்று செய்தி எடுத்துவருவதற்கும் உதவி ஆசிரியர்களாகப் பணி யாற்றும் ஆசிரிய குழுவினர் சென்று வர வேண்டும்.

இவைத்தவிர உள்நாட்டுப் பிரமுகர்கள், வெளிநாட்டிலிருந்து வருபவர்களைச் சந்தித்துப் பேட்டி கண்டும் பத்திரிகையில் வெளியிட வேண்டும். ராஜகோபாலும் இதனைச் செய்தார்.

ராஜகோபால் பழகிய வட்டாரங்களும் படித்த புத்தகங்களும் எவரையும் அமெரிக்க முதலாளித்துவவாதி என்ற சந்தேகக் கண்கொண்டே பார்க்கச் செய்தது.

எவரையும் துருவி ஆழமாகப் பார்க்கும் சக்தியுடன் சந்தேகப் பார்வையும் அதிகம் இவரிடம் இருந்தது.

தன்னை ஒரு தேர்ந்த இடதுசாரியாகவே கருதினார். இதற்கு 'ஈழநாடு' நிர்வாக சபையில் இருந்த சிலரின் போக்கும் சாதகமாக இருந்தது. அன்றைய யாழ்ப்பாண அரசியல் போக்கிற்கு சற்று மாறாகவும் இருந்தது.

தமிழ், தமிழ் அரசு என்ற கோஷம், சத்தியாக்கிரம், சாத்விக போராட்டம் மொஸ்கோவைப் பின்பற்றிய இடதுசாரிகளுக்கு வெறுப்பாக இருந்தது. தமிழ், தமிழரசு, சாத்வீக போராட்டம் பைத்தியக்காரத்தனம் என்று அவர்கள் கருதினர்.

ராஜகோபாலுக்கும் இதே கருத்து இருந்தாலும், ஈழநாடு பத் திரிகையில் அதைத் திணிக்க முயலவில்லை.

ஆனால், தமிழர்களின் சாதனைகளை உலகுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதில் ராஜகோபால் தீவிரமாக இருந்தார். குறிப்பாக வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு போன்ற வடமராட்சியைச் சேர்ந்தவர்கள் நிகழ்த்திய சாதனை களை உலகறியச் செய்ய வேண்டுமென்பதில் பெரும் ஈடு பாடு காட்டினார்.

வரலாற்றில் முதல் தடவையாக பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த நவரத்தினசாமியின் சாதனையை அச்சமயம் ஆட்சியி லிருந்த சேர். ஜோனின் ஐக்கியதேசியக் கட்சி வலதுசாரி அர சாங்கம் அதிக அக்கறை செலுத்தி உலகறியச் செய்ய வில்லை என்பது ராஜகோபாலின் கவலை.

இதன்பின் பாக்கு நிரிணையை நீந்திக் கடந்த ஆழிக்குமரன் ஆனந்தனின் சாதனையை, பாக்கு நீரிணையை நீந்தி கடந்த சாதனை மட்டுமல்ல, ஆனந்தன் பிரஞ்சுக் கால்வாயை நீந்திக் கடக்க முயன்று உயிரைப் பலி கொடுத்ததுவரை நிகழ்த்திய சாதனைகளை ராஜகோபால் பல கட்டுரைகளைப் பல்வேறு ஊடகங்களிலும் வெளியிட்டு உலகறியச் செய்து திருப்தியடைந்தார்.

இவை எல்லாவற்றையும் விட இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் தூத்துக்குடியிலிருந்து வெள்ளையருக்கு எதிரா கக் கப்பல் விட்டு வரலாறு படைத்த கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. என்ற சிதம்பரம்பிள்ளை பற்றி ம.பொ.சி. என்ற அறிஞர் நூல் எழுதி உலகறியச் செய்திருந்தார்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம்பிள்ளைக்கு முன்னரே வல்வெட்டித்துறையிலிருந்து தம்பிப்பிள்ளை என்ற தண்டை யல் தமது சகாக்களுடன் இன்றும் படுபயங்கரமாகக் கருதப் படும் அத்திலாந்திக் சமுத்திரத்தையும் தாண்டி அமெரிக்கா வுக்கு பாய்க் கப்பலில் போய்ச் சேர்ந்து சாதனை படைத்த வரலாற்றை ராஜகோபால் ஈழநாடு இதழ்களில் தொடராகவும் பின்னர் நூலாகவும் எழுதி வெளியிட்டு கப்பலோட்டிய வல் வெட்டித்துறை வரலாற்று வீரர்களை உலகறியச் செய்தார்.

ஈழத்தின் சாதனையாளர்கள் சிலரை உலகம் அறிந்து போற்ற வேண்டும். தமிழன் என்ற காரணத்தினால் இவர்களின் சாதனைகளை மறைக்கவும் மறக்கவும் கூடாது என்று எடுத் துக்காட்டியவர் ராஜகோபால்.

வாலிபத் துடிப்பும் அவர் பழகிய வட்டாரங்களும் ஆரம்ப காலத்தில் சர்வதேசவாதியாகச் சிந்தித்த ராஜகோபால் இலங் கையில் இனவாதம் பொதுவுடமைத் தத்துவத்தையே மாசுப டுத்திவிட்டதென்பதைப் பின்னர் உணர்ந்தார். அதே சமயம் மொஸ்கோவும் மாயை என்பதையும் அறிந்துகொண்டார்.

இன்று தமிழ்த் தேசியத்துக்காக உறுதியுடன் குரல் கொடுத்து உலக வரலாற்றிலேயே தமிழ்த் தேசியத்தையும் தமிழ்த் தேசியப் போராட்டத்தையும் எடுத்துக்காட்டிச் சாதனை செய் பவராக ராஜகோபால் விளங்குகிறார் என்று சொல்வது மிகையாகாது!

'கப்பலோட்டிய தமிழர்கள்' என்று வல்வெட்டித்துறையிலி ருந்து அமெரிக்காவுக்குப் பாய்க்கப்பலில் முதன்முதலாக அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து சென்று சாதனை நிகழ்த்திய தண்டையல் பற்றியும் அவரது சகாக்கள் பற்றியும் ராஜகோபால் எழுதி வெளியிட்டிருக்கும் நூல் வரலாற்றாய்வா ளர்களுக்கு வழிகாட்டியாக அமையலாம்.

ஈழத்தமிழர்களின் சாதனைகளை இனியும் புறக்கணிக்காமல் ஈ.கே. ராஜகோபால் அவர்களின் இந்நூலை ஆதாரமாக வைத்து வரலாற்றாய்வாளர்கள் கப்பலோட்டிய தமிழர்கள் பற்றி விரிவான வரலாற்றைப் படைக்க முன்வர வேண்டும்.

இதே சமயம் ராஜகோபால் அவர்களின் சாதனையையும் அங் கீகரிக்க வேண்டும் என்பதே எனது பேரவா!



info@thaiveedu.com




‘காடுகளை வெட்டிச் சாய்க்காதீர்கள். பழங்குடியினரான நாங்கள் இதுபோன்ற வளர்ச்சியை எதிர்பார்க்கவில்லை. எங்கள் பல்பொருள் அங்காடிகள் மூடப்படாமல் இருக்க, எங்கள் பிரதேசங்களைப் பாதுகாக்க நாங்கள் போராடுகிறோம். காடுதான் எங்களுக்கு சூப்பர் மார்கெட்’. என்று குமுறும் ஒரு பெரு நாட்டு பழங்குடி ஆணின் அபயக் குரலைக் கேட்கக் கிடைத்தது. அந்த அபயக் குரல் பெருவின் விசாலமான வனாந்திரத்திற்கு உள்ளிருந்தே ஒலித்துக்கொண்டிருந்தது. அந்த அபயக் குரலின் பக்கம் எனது தேடலைத் தொடங்கும்போது பெரு நாட்டின் மரங்களைக் கொறித்துத் தின்னும் பல இரும்புப் பற்களைக் காணக் கிடைத்தது.

பெரு என்பது தென்னமெரிக்காவில் மேற்கில் உள்ள ஒரு நாடாகும். இதன் வடக்கில் ஈக்வெடார், கொலம்பியா நாடுகளும் கிழக்கில் பிரேசில் நாடும் தெற்கில் சிலி மற்றும் பொலிவியா நாடுகளும் உள்ளன. தென் கிழக்கே பசிபிக் பெருங்கடல் உள்ளது பெரு. இந்த நாட்டில்தான் உலகிலேயே மிகப் பெரிய ஆறான அமேசான் பாய்கிறது. அதுபோலவே, அமேசான் பெரும் காடும் இதில் உள்ளடங்கியிருக்கிறது. பெரும்பாலான பெருவியன் பிரதேசம் ஆண்டிஸின் கிழக்குப் பகுதியில் அடர்ந்த காடுகளால் சூழப்பட்டுள்ளது. இருப்பினும் இந்தப் பகுதியில் ஐந்து சதவீத பெருவியர்கள் மட்டுமே வாழ்கின்றனர். பெருவியன் பிரதேசத்தின் அறுபது சதவீதத்திற்கும் அதிகமான பகுதிகளை அமேசான் மழைக்காடுகளே ஆக்கிரமித்துள்ளன. இது இந்நாட்டின் சிறப்பம்சமாகும். ஆனால், இவ்வாறான வனப்போர்வை வேகமாக அழிக்கப்பட்டு வருவது உலகுக்கே ஆபத்தாக அமைகிறது.

பெருவியன் பகுதியில் மனிதர்கள் சுமார் பொ.ஆ.மு. 9,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. பெருவில் இதுவரை அறியப்பட்ட மிகப்பழைய நாகரிகமாக இருப்பது, நோர்டே சிக்கோ நாகரிகமாகும். இது பசுபிக் கடற்கரைப் பகுதியில் பொ.ஆ.மு. 3000 முதல் 1800 வரை செழித்திருந்தது. இத்தகைய ஆரம்பகால முன்னேற்றங்களைத் தொடர்ந்து கபிஸ்னிக், சாவின், பரகாஸ், மொசிகா, நாஸ்கா, வாரி, மற்றும் சிமூ போன்ற தொல்பொருளியல் கலாசாரங்கள் தோற்றம் பெற்றன. 15-ம் நூற்றாண்டில், இன்காக்கள் பெரும் சக்தியாக இவ்விடத்தில் விளங்கியதுடன் ஒரு நூற்றாண்டு காலமாக, கொலம்பியாவில் மிகப்பெரிய பேரரசை உருவாக்கினார்கள். அன்டியன் சமூகங்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன், நீர்ப்பாசனம் மற்றும் படிக்கட்டுப் பயிர்ச்செய்கை போன்ற தொழினுட்பங்களையும் மேற்கொண்டன. ஒட்டக வளர்ப்பும் மீன்பிடியும் ஏனைய முக்கிய தொழில்களாக இருந்தன. இந்த சமூகத்தில் சந்தை அல்லது பணம் பற்றிய எந்த அறிவும் இல்லாமையால், இவர்களிடம் பண்டமாற்று முறையே இருந்துவந்தது. 1532-ம் ஆண்டு டிசம்பரில், பிரான்சிஸ்கோ பிசாரோவின் தலைமையிலான போர்வீரர்கள் இன்கா பேரரசர் அதகுவல்பாவை தோற்கடித்தனர். பத்து வருடங்களின் பின்னர், ஸ்பானிய மன்னரினால் பெரு உப அரசு நிறுவப்பட்டதுடன் தென் அமெரிக்கக் குடியேற்றங்கள் பலவற்றையும் இது உள்ளடக்கியிருந்தது. உப அரசராகிய பிரான்சிஸ்கோ டி டொலிடோ 1570-களில் நாட்டை மறுசீரமைத்ததுடன், அதன் பிரதான பொருளாதார நடவடிக்கையாக வெள்ளி சுரங்க அகழ்வையும் அதன் முதன்மைத் தொழிலாளர்களாக கூலிப்படையினரையும் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பெருவியன் தங்கக் கட்டிகள் ஸ்பானிய அரசுக்கு நல்ல வருவாய் அளித்ததுடன் ஐரோப்பா மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற இடங்களுக்கும் நீடித்த ஒரு சிக்கலான வர்த்தக வலையமைப்பிற்கு வழிவகுத்தது. இவ்வாறு இருந்த போதிலும், 18-ம் நூற்றாண்டு காலப்பகுதியில், வெள்ளி உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையும் பொருளாதார பன்முகத்தன்மையும் அரச வருமானத்தைப் பெரிதும் குறைத்தன. இதன் பிரதிபலிப்பாக அரசு வரியை அதிகரிக்க ஒரு தொடர்ச்சியான பிரகடனங்களாக போர்போன் சீர்திருத்தத்தை இயற்றியதனால் உப அரசானது பிரிவினைக்குள்ளாகியது. புதிய சட்டங்கள் டுப்பாக் அமாரு II அவர்களின் கிளர்ச்சியையும் ஏனைய கிளர்ச்சிகளையும் தூண்டிவிட்டதுடன், பின்னர் இவை அனைத்தும் அடக்கப்பட்டன. 19-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில், பெருமளவான தென் அமெரிக்க நாடுகள் சுதந்திரப் போர்களை எதிர்கொண்ட போதிலும், பெரு ஒரு அரச கோட்டையாகவே இருந்தது. ஸ்பானிய முடியாட்சிக்கான விடுதலை மற்றும் விசுவாசம் என்பவற்றுக்கிடையில் உயரடுக்கானது ஊசலாடிக் கொண்டிருந்தமையால், ஜோஸ் டெ சான் மார்ட்டின் மற்றும் சிமோன் பொலிவார் ஆகியோரது இராணுவ போராட்டங்களின் ஆக்கிரமிப்பின் பின்னரே பெருவிற்குச் சுதந்திரம் கிடைக்கப்பெற்றது. இருப்பினும், இயற்கை வளங்களைக் கொள்ளையடிக்கும் கொள்ளைக்காரர்களிடம் இருந்தும் வனாந்திரங்களை அழிக்கும் கொலைகாரர்களிடமிருந்தும் பெருவிற்கு இன்னமும் விமோசனம் கிடைத்துவிடவில்லை.

கடந்த தசாப்தங்களாக சட்டவிரோதமாக மரம் வெட்டுதல் பெருவியன் அமேசானில் கடுமையான பிரச்சினையாக மாறியுள்ளது. உலக வங்கியின் அறிக்கையின்படி, 2012-ல் பெருவின் மர ஏற்றுமதியில் 80 சதவீதம் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படுகின்றதென மதிப்பிடப்பட்டுள்ளது. இது கட்டுப்பாடற்றது. அமேசானில் உள்ளூர் வருமானத்தை அதிகரிக்கும் முயற்சியில், சிறிய அளவிலான மரம் வெட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ள சில விவசாயிகளுக்கு மாற்ற முடியாத ஒப்பந்தங்களை பெருவியன் அரசாங்கம் வழங்கியது. ஆனால், விரைவில் இத்திட்டம் பெரிய முதலாளிகளின் வசமானது. அதனை யடுத்து, சட்டவிரோத வெட்டுமரத் தொழில் கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்திருக்கிறது.

2000-ம் ஆண்டில், மரம் வெட்டும் துறையை மேம்படுத்துவதற்காக வனவியல் மற்றும் வனவிலங்கு சட்டத்தை பெரு மாற்றியமைத்தது. இருப்பினும், அடுத்தடுத்த ஆண்டுகளில், பெருவியன் மரத் தொழிலின் நிலைமை மோசமடைந்தது. 2001-ம் ஆண்டு முதல் பிரேசில் நாடு மஹோகனி ஏற்றுமதியை சட்டவிரோதமாக்கியது. மஹோகனி என்பது உலகின் மிகவும் மதிப்புமிக்க மற்றும் ஆபத்தான மரவகைகளில் ஒன்றாகும். பிரேசிலின் தடையானது பெருவியன் மஹோகனி ஏற்றுமதி அதிகரிப்புக்குக் காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

பெருவியன் அமேசான்களில் சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்படுவதை எளிதாகத் தடுத்து நிறுத்திவிட முடியாத நிலைமை தோன்றியிருக்கிறது. கள்ளத்தனமாகப் பல தொன் வெட்டு மரங்கள் இலகுவான வகையில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றமையை அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகளில் இருந்து அறியமுடிகிறது. எவ்வாறு மரங்கள் சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்படுகின்றன என்தைப் பற்றி எமக்குக்கொன்றும் தெரியாதென்று பெரு அரசாங்கம் கூறும் கதை வேடிக்கையாகவிருக்கிறது. 'பல ஆண்டுகளாகப் பெருவியன் அமைப்பில் உள்ள மிகப்பெரிய குறைபாடு மரம் வெட்டுவதற்கான அனுமதிகளை வழங்குவதாகும்' என்று சுற்றுச்சூழல் விசாரணை நிறுவனம் கூறும் கருத்து கவனிக்கத்தக்கது.

சட்டவிரோதமாகத் தங்கம் வெட்டியெடுக்கப்பட்டு வருவதும் காடழிப்பில் பிரதான தாக்கத்தைச் செலுத்திவருகின்றது. தனி நபர்கள் அதிகமாகத் தங்கச் சுரங்கம் வெட்டுவதாகத் தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. Interoceanic Highway உள்ள நிலையில், 30,000 சுரங்கத் தொழிலாளர்கள் சட்டப்பூர்வ அனுமதியின்றிச் செயல்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு, சட்டவிரோத நிலநெய் அகழ்வும் பெரு நாட்டில் வன அழிப்பில் செல்வாக்குச் செலுத்துகிறது. குறிப்பாகப் பெருவியன் அமேசானியாவின் ஆரோக்கியத்திற்கு ஒரு முக்கியமான அச்சுறுத்தலாக இது விளங்குகிறது. குறித்த நிலப்பரப்பு எண்ணெய் வளம் நிறைந்தது என்றாலும், அங்கு பல கலாசார மரபுகளைப் பின்பற்றுகின்ற பழங்குடிச் சமூகங்கள் வாழ்ந்து வருகின்றன. காமிசியா எரிவாயுத் திட்டம் 88 பழங்குடியினரின் அன்றாட வாழ்க்கையைப் பாதித்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. 2008-ம் ஆண்டில், மேற்கு அமேசானில் எண்ணெய் தோண்டுவதற்காக 150,000 சதுர கிலோமீட்டர்கள் ஒதுக்கப்பட்டன. இன்று அந்த எண்ணிக்கை 730,000 சதுர கிலோமீட்டருக்கு மேல் அதிவேகமாக வளர்ந்துள்ளது. நேரடி அழிவு மற்றும் காடழிப்பு பெரும்பாலும் எண்ணெய் மற்றும் எரிவாயு பிரித்தெடுப்பதற்கான அணுகல் சாலைகளை உருவாக்குவதிலிருந்து வருகிறது.

காடழிப்பு, பூர்வீகப் பழங்குடியினரின் வாழ்விடங்களை எதிர்மறையாகவும் நேரடியாகவும் பாதித்திருக்கிறது. தவிர, அங்குள்ள பல்லுயிர்களின் வாழ்க்கையிலும் காலநிலையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அத்தோடு, சட்டவிரோதக் காடழிப்பு மேலும் வன்முறைக் குற்றங்களுக்கும் வழிவகுத்துள்ளன. பிரபல சுற்றுச்சூழல் ஆர்வலர் எட்வின் சோட்டா உட்பட நான்கு பழங்குடித் தலைவர்கள் கொல்லப்பட்ட செப்டம்பர் 01, 2014 அன்று இது ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தத் தலைவர்கள் தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி, சட்டவிரோத மரம் வெட்டுபவர்களுக்கு எதிராக அரசாங்கத்தின் பாதுகாப்பைக் கேட்டனர். இதன் மூலம் இவர்களது கொலைக்குப் பின்னால் சட்டவிரோதக் கும்பல் இருப்பது தெளிவாகிறது. 2013 மற்றும் 2023-க்கு இடையில், 32 சுற்றுச்சூழல் பாதுகாவலர்கள் பெருவில் தங்கள் நிலங்களைப் பாதுகாக்கும் முயற்சிகளுக்காகக் கொல்லப்பட்டனர். பழங்குடியின உரிமைகள் அமைப்பான ஐடெசெப் அறிக்கைகள்



இத்தகவலை உறுதி செய்கிறது. போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோத மரம் வெட்டுதல், தங்கச் சுரங்கம் மற்றும் நிலநெய் பிரித்தெடுத்தல் போன்ற நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் பாதுகாவலர்களின் கொலைகளுக்குப் பின்னால் உள்ள மோதல்களுக்கான முக்கிய தீப்பொறிகளாகும்.

மோசமான விடயம் என்னவென்றால், பெருவில் அரசியல் ஸ்திரமின்மை, நிர்வாக கட்டமைப்பில் ஊழல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களின் அதிகரிப்பு ஆகியவை மேற்குறிப்பிட்டது போன்று கொலை, அச்சுறுத்தலுடன் சம்பந்தப்பட்ட வழக்குகள் எதிர்காலத்திலும் தொடர்வதற்குக் காரணமாகவிருக்கின்றன. பெருவியன் அமேசானில் இயங்கும் செம்பனை மற்றும் கோகா (Coca) நிறுவனங்கள் பெரு நாட்டின் காடுகள் நிறைந்த பகுதிகளான லொரேட்டோ மற்றும் உக்காயாலி ஆகியவற்றில் 2012 மற்றும் 2021-ஆம் ஆண்டுகளுக்கு இடையில் குறைந்தது 13,000 ஹெக்டேர் (32,000 ஏக்கர்) காடுகள் மறைவதில் செல்வாக்கு செலுத்தியுள்ளன. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் (Environmental impact assessment) 'Carving up the Amazon' விசாரணையின் புதிய அறிக்கையில், பெருவியன் அரசின் கண்களுக்குக் கீழ் தண்டனையின்றி காடழிப்பு நடந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இவ்வா

றான நடைமுறைகள் பெரு நாட்டின் பெரும் காடுகளை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளன. 2012 மற்றும் 2018-க்கு இடையில் உக்காயலி மற்றும் லொரெட்டோவில் கிட்டத்தட்ட 100% காடழிப்பு சட்டவிரோதமாக நடந்துள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. கடந்த இரண்டு தசாப்தங்களாகப் பெருவில் 2.7 மில்லியன் ஹெக்டேர் (6.7 மில்லியன் ஏக்கர்) காடுகள் அழிக்கப்பட்டுள்ளதாகச் சுற்றாடல் தாக்க மதிப்பீடு தெரிவிக்கிறது.

2015-ல் மெல்கா குழுமத்துடன் தொடர்புடைய வணிக நிறுவனங்கள் காடழிப்புக் குற்றச்சாட்டில் சிக்குப்பட்டன. அதன்படி, 2017-ல் பெருவில் சட்டவிரோத காடழிப்பு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட 25 நிறுவனங்கள் லண்டன் பங்குச் சந்தையில் இருந்து நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 2012 மற்றும் 2021-ம் ஆண்டுகளுக்கு இடையில் ஆறு நிறுவனங்கள் 7,600 ஹெக்டேர் (18,800 ஏக்கர்) காடுகளை அழித்துள்ளன. மண் ஆய்வு அல்லது அமைதியான ஆக்கிரமிப்புக்கான நிலையான சான்றுகள் இல்லாத 571 நிலத் துண்டுகளை கையகப்படுத்தியமை விசாரணையில் தெரியவந்துள்ளது. 2015-ம் ஆண்டு முதல் 2018-ம் ஆண்டு வரை 6,140 காணிகள் உக்காயலியில் வழங்கப்பட்டதாகத் தகவல் அறியும் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்படுகின்றன. இருப்பினும், மண் ஆய்வுகள் 711 வழக்குகளில் மட்டுமே நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது மொத்தத்தில் வெறும் 11.5% மட்டுமேயாகும்.

பெருவில் காடழிப்பு மற்றும் காடு சிதைவு ஆகியவை அந்நாட்டின் பல்லுயிர் பெருக்கத்திற்கு அச்சுறுத்தலாகியிருக்கிறது. இது கவலைக்கிடமான விடயமாகும். ஏனெனில், பச்சை வீட்டு வாயுக்கள் அதிகளவில் உமிழப்படுவதற்கும் முக்கிய காரணியாக இருக்கிறது. அதாவது, 2014-இல் நாட்டின் மொத்த உமிழ்வுகளில் 36 சதவீதத்திற்கு அதிகமாகப் பங்களித்துள்ளது. பெரு உலகின் 9-வது மிக அதிகமான காடுகளைக் கொண்ட நாடாகும். மேலும் பிரேசில் மற்றும் காங்கோ ஜனநாயகக் குடியரசிற்கு அடுத்தபடியாக மூன்றாவது பெரிய வெப்பமண்டல மழைக்காடுகளைப் பெரு கொண்டுள்ளது. 2020-ம் ஆண்டு நிலவரப்படி இயற்கை காடுகளின் மொத்த அளவு 70,657,944 ஹெக்டேர் (நாட்டின் நிலப்பரப்பில் 54.9%) என மதிப்பிடப்பட்டுள்ளது. அமேசானிய வெப்பமண்டல காடுகள் (96.3%), வறண்ட காடுகள் கோஸ்டா பகுதி (3.36%), மற்றும் ஆண்டியன் காடுகள் (0.34%) ஆகும். தவிர, ஏறக்குறைய 3,292 ஹெக்டேர் சதுப்புநிலங்கள் இருக்கலாம் என்றும் தரவுகள் தெரிவிக்கின்றன. உயிரியல் பன்முகத்தன்மை மற்றும் இயற்கை வளங்கள் (மரம், ஆற்றல் மற்றும் கனிம வளங்கள்) இரண்டிலும் இந்த காடுகள் உலகின் உயர் ரகத்தில் உள்ளன.

அமேசானிய வெப்பமண்டலக் காடுகளின் பகுதிகள் (2020-இன் படி 15,389,576 ஹெக்டேர்) பழங்குடிச் சமூகங்கள் வசிக்கின்ற அல்லது பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் (2020-இன் படி 18,790,396 ஹெக்டேர்) சேர்க்கப்பட்டுள்ளன. பெருவில் காடுகளை அழிப்பதால் அமேசான் காடுகள் அதிகம் பாதிக்கப்படுகின்றன. அமேசானிய வெப்பமண்டல காடுகளின் அளவு மற்றும் இழப்பு ஆகியவை சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் (MINAM) வனப்பகுதி மாற்ற கண்காணிப்பு தளத்தால் முறையாகக் கண்காணிக்கப்படுகிறது. ஏறக்குறைய 2,636,585 ஹெக்டேர் அமேசானிய வெப்பமண்டல காடுகள் 2000-ல் இருந்து மறைக்கப்பட்டுள்ளது. அதாவது, வனப்போர்வை 70,707,472 ஹெக்டேராக இருந்திருக்க வேண்டும். மேலாண்மைத் திட்டம் அல்லது அதிகார வரம்பிற்கு உட்பட்ட அதிகாரத்தின் கீழ் வகைப்படுத்தப்படாத காடுகள் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டன. மொத்தத்தில், பெரு 2001 முதல் 26,000 சதுர கிலோமீட்டருக்கும் அதிகமான காடுகளை இழந்துள்ளது. இது எல் சால்வடாரின் அளவை விடப் பெரிய பகுதி ஆகும்.

பெரு, காடுகளை அழிப்பதில் உலகில் ஐந்தாவது அதிக விகிதத்தைக் கொண்ட நாடாகவும், பிரேசில் மற்றும் பொலிவியாவுக்கு அடுத்தபடியாக அமேசானில் மூன்றாவது இடத்திலும் உள்ளது. 'பெருவில் காலநிலை நெருக்கடியைத் தூண்டும் வேளாண் வணிகம்' என்ற தலைப்பில், வடக்கு மாகாணமான லொரேட்டோவில், 2013-ஆம் ஆண்டு முதல் 5,458 ஏக்கரில் பெரிய அளவிலான கோகா உற்பத்தியானது (cacao production) 87,040 மெட்ரிக் டன் பசுமை இல்ல வாயுக்களை வெளியிட்டது, இது ஒரு வருடத்தில் சுமார் 69,000 பயணிகளின் வாகனங்களில் எரிபொருள் தீர்ந்துபோகும் அளவிற்குச் சமமானதாகும்.

2004 முதல் 2021 வரை ஏறக்குறைய 1,683 ஹெக்டேர் ஆண்டியன் காடுகள் மற்றும் 33,685 ஹெக்டேர் உலர் காடுகள் இழக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. கூடுதலாக, 1996 மற்றும் 2016-க்கு இடையில் சுமார் 314 ஹெக்டேர் சதுப்பு நிலங்கள் இழக்கப்பட்டன. பெரு நாட்டின் வரலாற்றில் காடழிப்பின் மிக உயர்ந்த அளவை எட்டியது 2020-ஆம் ஆண்டிலாகும். மொத்தம் 203,272 ஹெக்டேர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இது 2019-ஐ விட கிட்டத்தட்ட 40 சதவீதம் அதிகமாகும்.

தற்போதைய நிலைமையில் காடுகளின் அழிவு இன்னமும் சரியாக மதிப்பீடு செய்யப்படாதிருப்பதுடன், சட்டவிரோதமாக மரம் வெட்டுதல் மற்றும் காடுகளுக்குத் தீ வைத்தல் ஆகியவற்றாலே வனாந்திரம் கூடுதலாக வெட்டவெளியாக்கப்படுகிறது. பெரு வனாந்திரங்களில் பெரும்பாலான உள்நுழைவு சட்டவிரோதமானது என்று கருதப்படுகிறது. இது குறிப்பாக அமேசானிய காடுகளில் மஹோகனி போன்ற மிகவும் மதிப்புமிக்க மர இனங்கள் வளரும் லொரேட்டோ, உகயாலி மற்றும் மாட்ரே டி டியோஸ் பகுதிகளில் அதிகரித்துள்ளது. பெருவில் காடுகள் வேகமாக அழிக்கப்படுவதால் அதிகளவான காட்டுத் தீ சம்பவங்களும் பதிவாகியுள்ளன. விவசாயத்திற்காக நிலத்தைச் சுத்தப்படுத்த அல்லது கால்நடை வளர்ப்பிற்காகப் புல் மீண்டும் வளர்வதை ஊக்குவிப்பதற்காகத் தீயைப் பயன்படுத்துவதால் காட்டுத் தீ அடிக்கடி தூண்டப்படுகிறது. வறண்ட காலத்தில் இந்த தீ கட்டுப்பாட்டை மீறி வனப்பகுதிக்குள் பரவுகிறது. 2018 மற்றும் 2020-க்கு இடையில் ஒவ்வொரு ஆண்டும் 500-க்கும் மேற்பட்ட காட்டுத் தீ சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 2013 மற்றும் 2017-க்கு இடையில் ஒவ்வொரு ஆண்டும் 20 ஆயிரம் ஹெக்டேர்களுக்கு மேல் எரிக்கப்பட்டுள்ளது. இதுதான் பெரு வனாந்திரத்தின் கதையாகவிருக்கிறது. ஆகவே, வனாந்திரத்திற்கு உள்ளேயிருந்து எழும் அவலக் குரலிற்கு நியாயமான தீர்வு கிட்டவேண்டும் என்ற நம்பிக்கையோடு குரல் கொடுப்போம்.



sathees.selvarajah@thaiveedu.com




# கல்லறையிலும் தமிழ் ஆராய்ச்சியாளருடன் உறங்கும் தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள்

– ச. சத்யதேவன்

தென் தமிழகக் கடற்கரைகளில் வாழ்ந்த மீனவ சமுதாயத்தின் முதல் தமிழ் கிறிஸ்தவர்கள் அளித்த நிதியால், அவர்களுக்காக அச்சடிக்கப்பட்ட ஒரு சிறிய நூல். தமிழுக்கு, இந்திய மொழிகளிலேயே முதன்முதலில் அச்சில் மிளிர்ந்த மொழி எனும் பெருமையை வழங்கியது. அத்துடன், தென்னாசிய மொழிகளிலேயே அச்சுத் தொழில்நுட்பத்தை ஏற்ற முன்னோடி மொழியாக தமிழை உயர்த்தியது.

தென்னாசிய சூழலில் செப்புப் பட்டயங்களிலும் கற்களிலும் ஓலைச்சுவடிகளிலும் எழுதப்பட்டுவந்த காலகட்டத்தில் நிகழ்ந்த தமிழ்ப் பதிப்புலகின் முதல் அடியாக அமைந்த இவ்வச்சு நூலின் வெளியீடானது, மரபார்ந்த புலமை மற்றும் பண்டித குழாமுக்கும் மேட்டுக்குடி வட்டத்துக்கும் வெளியே சாதரணர் என்ற கருத்துக்குள் தற்போது அடையாளப்படுத்தப்படும் சனங்களின் பொது நிதியைக் கொண்டே உருவாக்கப்பட்டது என்பதுவும், அத்துடன் அது அச்சனங்களுக்காகவே ஆக்கப்பட்டது என்பதுவும் சிறப்பாக குறிப்பிட வேண்டிய விடயம்.

*‘உங்களுக்கும் உங்கள் சந்ததிகளுக்கும் சொறகத்துக்குப் பொற வழி படிப்பிக்கத்தக்க பலபல பொத்தகங்கள் அச்சிலெ உண்டாக்கவேணுமென்று அனெக முதல் அச்சுண்டாக்க சிலவளித்தீர்களெ ஆகையினால் இந்தப் பொத்தகம் உங்களுக்கு நன்கொடையாக வர விட்டோம். அனெக முதல் சிலவளித்து அச்சுண்டாக்கி வித்ததினாலே சங்கையும் கீர்த்தியும் உலொகா முன்பாகப் பெற்றீர்களெ’* (இவ்வரிகளில் எழுத்துப்பிழைகளில்லை. இவ்வாறுதான் அன்று அச்சிடப்பட்டது), என புன்னைக் காயலையும் அதனை அண்டிய தமிழ் நிலத்தின் முதல் கிறிஸ்தவர்களை சிறப்பாக குறிப்பிட்டு இந் நிகழ்வை பிரான்சிஸ்கோ டிசோசா ‘Oriente conquistado’ இல் எழுதினார்.

அக்காலத்தில் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட காகிதத்தில், ஒரு பக்கம் சிவப்பு வர்ணத்திலும் மறு பக்கம் வர்ணமில்லாமலும் 14X10 செ.மீ அளவில், பதினாறு பக்கங்கள் கொண்ட அந்நூல் கொல்லத்தில் 1578-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20-ம் தேதி அச்சிடப்பட்டது. பிரார்த்தனைப் பாடல்களையும், வினாவிடை முறையில் மதத்தைக் கற்பிக்கும் வழிமுறைகளையும் கொண்டதாக அமைந்திருந்த அச்சிறுநூலுக்கு ‘Doctrina Christam or Thambiran Vanakkam’ (தம்பிரான் வணக்கம்) என்று தலைப்பிடப்பட்டது.

இந்தியாவிற்குள் முதல் அச்சுக்கூடத்தைக் கோவாவிலிருந்த ரோமன் கத்தோலிக்க கிறித்தவர்கள் 1556-ல் நிறுவினார்கள். இலத்தீன் மற்றும் போர்த்துக்கீசிய மொழியிலேயே அச்சுப்




பணி மேற்கொள்ளப்பட்ட இவ்வச்சுக்கூடத்தில் ஐரோப்பாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இலத்தீன் எழுத்து அச்சுக்கட்டைகள் பயன்படுத்தப்பட்டன. இக்கோவா அச்சுக்கூடத்தில்த் தான் தமிழ் அச்செழுத்தால் அச்சிடப்பட்ட நூல் 1577-ல் முதன் முதலில் அச்சிடப்பட்டது. ஸ்பெயின் நாட்டு யேசுச

பைத் துறவியாகிய யோவான் கொன்சால்வஸ் கோவாவில் இத்தமிழ் அச்சுக்கட்டைகளை வடிவமைத்தார். இவ்வச்சுக்கட்டைகள் மரத்தால் ஆனதாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. ஆயினும், இவ்வச்சுக்கட்டைகளால் அச்சிடப்பட்ட முதல் முயற்சியின் பிரதி திருப்தி தரவில்லை. இதனைத் தொடர்ந்து




இரண்டாவது முயற்சியாக யோவன் தெஃபாரியா என்னும் யேசுசபைத் துறவியின் மேற்பார்வையில் கொன் சால்வஸ் மீண்டும் வார்த்துக் கொடுத்த தமிழ் அச்சுக்கட்டைகளின் (இது உலோக அச்சுக்கட்டைகள் என ஆ.சிவசுப்பிரமணியன் குறிப்பிடுகிறார்) மூலம் கொல்லத்தில் 1578-ல் அச்சிடப்பட்ட பிரதி திருப்திளிக்க்கூடியதாக அமைந்தது. இவ்விரு தமிழ் அச்சுக்கட்டைகளின் உருவாக்கத்திற்கும் பெரோ லூயிஸ் (Pero Luis) என்ற சுதேச யேசுசபைத் துறவி உதவி செய்துள்ளார்.

தம்பிரான் வணக்கம் நூலை தமிழில் எழுதியதுடன் இம்முயற்சிகளுக்கு முத்துக்குளித்துறைப் பரதவர்களிடமிருந்து 400 குருசோதாக்கள் (Cruzados) கொடையாகப் பெற்று முதல் தமிழ் அச்செழுத்துகளை வடிவமைத்து, அதை பெரோ லூயிஸ் (Pero Luis) என்ற சுதேச யேசுசபைத் துறவியின் மூலம் கோவாக்கு அனுப்பி, தமிழின் முதல் அச்சு நூலை உருவாக்கிய முன்னோடி ஹென்றிக் ஹென்றிக்குயிஸ் அடிகளாவார் (Father Henrique Henriques. S.J.). தமிழிலில் இவரது பெயர் 'என்றிக்கே என்றீக்கசு, ஹென்றிக்கே ஹென்றீக்கஸ், அன்றீக்கே அன்றீக்கசு எனப் பலவாறாகக் குறிப்பிடப்படுகிறது. ஆயினும், பொதுவாக அண்டிரிக் அடிகளார் என அறியப்படுகிறார்.

போர்ச்சுகீசிய நாட்டிலுள்ள 'விலாவிகோசா' என்னும் ஊரில் பொ.ஆ.பி. 1520-ல் பிறந்த அண்டிரிக் அடிகளார் 1546-ல் குரு பட்டம் பெற்றதுடன் அதே ஆண்டில் ஏப்ரல் 26 அன்று இந்தியா பயணமானார். அவருடன் 12 யேசு சபைக் குருக்களும் புறப்பட்டனர். அவர்கள் 17.9.1546 அன்று கோவா வந்தடைந்தனர். அக்காலத்தில் மலாக்காவில் இருந்த சவேரியர் அடிகளார் வந்திறங்கிய அண்டிரிக் அடிகளாரை 'முத்துக்குளித்துறை'-யின் தலைமைக் குருவாக இருந்த 'அந்தோணி கிரிமினாலி' என்பவரிடம் அனுப்பினார். அவர், புன்னைக்காயல் பிரதேசத்தையும் அதன் சுற்றுப்புற ஊர்களையும் மறைப் பணிக்காக இவரிடம் ஒப்படைத்தார். இந்நிலையில் கிரிமினாலி குரு இறந்து போகவே, 1549-ல் அண்ட்ரிக் தலைமைக் குருவானார். முத்துக்குளித்துறைக்கு வந்தவுடன் இங்குள்ள தமிழ் மக்களிடம் கலந்து பழக தமிழ்மொழி அவசியம் என்பதை அறிந்த அண்டிரிக் அடிகள், தமிழை முதலில் படிக்கத் தொடங்கினார். பேச்சு மொழி, எழுத்து மொழி இரண்டிலும் தேர்ந்தார்.

தமிழைத் தெளிவாகவும், தடங்களிலின்றியும் எழுதவும் பேசவும் கற்று பாண்டித்தியம் பெற்ற முதல் ஐரோப்பியரும், மிசனெரியின் குருவும் இவரே. அத்துடன் தமிழ் மொழியை அறிவியல் முறையில் படிக்கும் முறையை முதலில் தோற்றுவித்தவராகவும் 1560-இற்கு முன்பாகவே மன்னார் அல்லது புன்னைக்காயலில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவ வேண்டும் என்று முன்மொழிந்தவராகவும் அண்டிரிக் அடிகள் அறியப்படுகிறார். 1550-ல் முத்துக்குளித்துறை வாழ் பரதவர்களின் நிதியுதவியுடன் மருத்துவமனை ஒன்றை நிறுவியதுடன், 1567-ல் தமிழ்க் கல்லூரி ஒன்றையும் புன்னைக்காயலில் நிறுவி அதன் இயக்குநராகவும் ஆசிரியராகவும் பணியாற்றினார். 'மிகவும் நேர்மையானவர்; மக்களின் வணக்கத்துக்குரியவர்' என இவரை புனித சவேரியார் அடிகளார் குறிப்பிடுவார்.

தம்பிரான் வணக்கத்தை அடுத்து 1579-ஆம் ஆண்டு நவம்பர் 14-ம் திகதி Doctrina Christam: கிரீசித்தியானி வணக்கம், எனும் 120 பக்க நூல் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதனை எழுதியவரும் ஹென்றிக் ஹென்றிக்குயிஸ் அடிகளே. தமிழ் நாட்டு எல்லைக்குள் அச்சிடப்பட்ட முதலாவது நூல் தென் தமிழ் நாட்டின் கடற்கரைக் கிராமமான புன்னைக்காயலில் அச்சிடப்பட்டது. கோவாவில் பயன்படுத்தப்பட்ட உலோக அச்சுக்கட்டைகள் புன்னைக்காயல் அச்சகத்திலும் உபயோகிப்பட்டதாகத் தெரிகிறது. 'கொம்பெசியொனாயரு' என்ற பெயருடைய பாவசங்கீர்த்தன கையேடே புன்னைக்காயல் அச்சகத்தில் அச்சிடப்பட்ட முதல் நூல். 9x13.5 செ.மீ அளவுள்ள இந்நூல் 107 தாள்களைக் கொண்டது. 1578-ல் புன்னைக்காயலில் இந்நூலின் முதல் பதிப்பும் 1580-ல் கொச்சியில் இரண்டாம் பதிப்பும் அச்சாகியுள்ளதாக பேரா. ஆ. சிவசுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். புன்னைக்காயலில் அச்சிடப்பட்ட இரண்டாவது நூல் Flos Sanctorum எனப்படுகின்ற 'அடியார் வரலாறு' ஆகும். 1586-ல் வெளியிடப்பட்ட இதனை எழுதி அச்சிட்டவரும் ஹென்றிக் ஹென்றிக்குயிஸ் அடிகளே.

06.02.1600-ல் தமது 80-ம் வயதில் புன்னைக்காயலில் அவர் இறந்தபோது கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும், இந்துக்களும் துக்கம் கடைப்பிடித்தனர் எனவும் அவரை அடக்கம் செய்வதற்காகத் தோணியில் கொண்டு சென்றபோது அவ்வுடலுடன் ஏழு தோணிகளில் ஆட்கள் சென்றார்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது. அவருடைய உடலைத் தங்களுடைய ஜெபமாலையால் தொட்டு அவற்றை நினைவுச் சின்னமாக வைத்துக்கொள்ள அலைமோதிய கூட்டத்தை விலக்கி உடலைக் கரைக்கு கொண்டு செல்வதற்குப் படாதபாடு பட்டதாகவும் கூறப்படுகிறது.

தம்பிரான் வணக்கம் கொல்லத்தில் அச்சிடுவதற்கு கால்நூற்றாண்டுக்கு முன்னரே ஐரோப்பாவில் தமிழ் மொழி அச்சுவாகனமேறிவிட்டது. ஜோன் கூட்டன் பேர்க் (Johannes Gensfleisch zur Laden zum Gutenberg) தனது அச்சுப்பொறியினூடாகத் தனது முதலாவது நூலை அச்சடித்து ஏறக்குறைய 100 ஆண்டுகளே ஆகியிருந்த நிலையில், இந்தியாவுக்கு அச்சு இயந்திரம் வருவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே, உலகின் ஏனைய பிரதேசங்களில் அச்சுப் பொறி அறிமுகமாகுவதற்கு முன்னரே இது நிகழ்ந்தது. 1554-ம் ஆண்டு பிப்ரவரி 11-ம் நாள் திகதி போர்ச்சுகீசிய நாட்டின் தலைநகரான லிஸ்பனில் 'கார்த்தீயா ஏங் லிங்குவா தமுல் எ போர்த்துகேஸ்'(Cartilha lingoa Tamul e Portugues) (தமிழில்: தமிழ் மொழியிலும் போர்த்துகீசியத்திலும் அமைந்த

திருமறைச்சிற்றேடு) என்னும் தலைப்பில் முதலாவது அச்சடிக்கப்பட்ட தமிழ்ப் புத்தகம் வெளியானது. அந்த நூலில் தமிழ்ச்சொற்கள் லத்தீன் எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருந்தன. இந்த நூல்தான் வரலாற்றிலேயே முதலில் அச்சேற்றப்பட்ட தமிழ் நூல் மட்டுமல்ல, இந்திய மொழியொன்றிலிருந்து ஐரோப்பிய மொழிக்கு எழுத்து மாற்றம் செய்யப்பட்ட முதல் நூல் என்று செக்கோஸ்லேவேகியாவின் தமிழ் அறிஞர் கமில் சுவெலபில் குறிப்பிடுகிறார்.

Cartilha: pp. 38, Germano Galhardo, Lisbon, 11th February, 1554. என்ற நூலியல் விபரங்களைக் கொண்ட இச்சிறு வெளியீட்டின் தலைப்புப் பக்கத்தில் அதன் முழுத் தலைப்பு இவ்வாறு அமைந்திருக்கிறது. 'Cartilha Che conte breuemente ho q todo christo deue apreder pera sua saluacam, A qual el rey Dom Joham teraro deste nome nosso senhor mandou imprimir e lingoa Tamul e Portagues co ha deeraracam do Tamul por cima de vermulho.' இச்சிறு வெளியீடானது ஒரு கிறித்தவன் முக்தியடைவதற்கு கட்டாயம் தெரிந்திருக்க வேண்டியவற்றைச் சுருக்கமாகக் கொண்டிருக்கிறது. போர்ச்சுகீசிய அரசர் மூன்றாவது ஜோன் உத்தரவின் பேரில் இந்தநூல் உருவாக்கப்பட்டது. டொம் மூன்றாம் ஜான் அவர்களுடைய உத்தரவின்படி இந்நூல் தமிழ் மற்றும் போர்த்துக்கீசிய மொழிகளில் அச்சடிக்கப்பட்டு அதற்கு சிவப்பு நிறத்தில் தமிழ் விளக்கம் கூறப்பட்டிருக்கிறது.

அச்சுத் தொழில்நுட்பத்தின் தொடக்க காலத்திலேயே இந்நூல் இரு வண்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளது. கறுப்பு வண்ணத்தில் சற்றுப் பெரிய வடிவில் ரோமன் எழுத்துகளில் தமிழ் வாசகங்கள் உள்ளன. அதன் மேல் பகுதியில் சிவப்பு வண்ணத்தில், ஒவ்வொரு தமிழ் வார்த்தைக்கும் சரியான போர்ச்சுகீசிய சொல் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ் ஒலி வடிவில் உள்ள ரோமன் எழுத்துக்களின் கீழே கறுப்பு வண்ணத்தில் போர்ச்சுகீசிய மொழியில் தமிழ் வாசகங்களின் உச்சரிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நூலை உருவாக்கியவர்கள் 'வின்சென்ட் தெ நாசரெத் (Vicente de Nazareth), ஹோர்கே கார்வாலோ (Jorge Carvalho), மற்றும் தோமா த குருசு (Thoma da Cruz)' எனும் மூவர். மொழிபெயர்ப்புக்கும், ஒலி பெயர்ப்புக்கும் இவர்களே பொறுப்பு வகிக்கிறார்கள். அவர்கள் தமிழ் அறிந்த இந்தியர்களாகத்தான் இருக்க வேண்டும் என அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆயினும் அவர்களுடைய கிறிஸ்தவப் பெயர்களைத் தவிர மற்ற விவரங்கள் நமக்குத் தெரியவில்லை. முகவுரையின் அடிப்படையில் அவர்களுடைய பணிகளை Fra Joam de vila de conde எனும் பிரெஞ்சுக்காரர் மேலாய்வு செய்திருக்கிறார். இதனுடைய மூலப் பிரதி தற்போது லிஸ்பனில் உள்ள பீலம் (Belem) என்ற இடத்திலுள்ள 'Doctor leile de vasconcellos' என்கிற மானிடவியல் அருங்காட்சியகத்தில் தகுந்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளது.

'இவ்வாறு கற்பிக்கும் புது முறைகளையும், இரு நிறங்களையும் திறமையான எழுத்துகளையும் கொண்ட நூலை ஐரோப்பிய அச்சக வரலாற்றிலேயே காண்பது அரிது' என்று குறிப்பிடும் தமிழ்த் துது தனிநாயகம் அடிகளே தமிழின் முதல் அச்சுப் புத்தகங்களையும் அரிதின் முயன்று தேடிக் கண்டடைந்தவர். அதன் முக்கியத்துவங்களை உணர்ந்த முதலாமவரும் அவரே. தமிழ் அச்சுத் தந்தையாக ஹென்றிக் ஹென்றிக்குயிஸ் அடிகளை ஆதரத்துடன் முன்வைத்து அதன் வழி தமிழ் பதிப்புலகின் ஆரம்பச் சிறப்பை உலகுக்கு உணர்த்தியவரும் தனிநாயகம் அடிகளே.

***'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்***
***தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யு மாறே'***

என்ற 81-வது திருமந்திரப் பாட்டின் அடிகளைத் தனது உரையின் தொடக்கமாகவும் வாழ்வின் நோக்கமாகவும் கொண்டிருந்த தனிநாயகம் அடிகளின் தமிழ்ப்பணிகள் முன்னுதாரண



மில்லாத சிறப்புக்குரியன. Tamil Culture, அதன் வழி உலகத் தமிழராய்ச்சி மாநாடுகள், அதனடியாக உலகத் தமிழாராய்ச்சி மன்றம் என அவரின் பணிகள் நுண்ணுணர்வும் தொலைநோக்கும் கொண்டவையாக இருந்தன.

தமிழ் இலக்கணம், இலக்கியம் தொடர்பிலான ஆய்வுகளே தமிழாய்வுக்குரியவை எனக் கருதப்பட்ட சூழலில் அன்றிருந்த அறிஞர்களின் எண்ணத்தை மாற்றி, இலக்கண இலக்கியங்களோடு தமிழரின் கலைகள், வாணிகத் தொடர்புகள், மக்களின் வாழ்க்கை நிலை, உளவியல், அயல்நாட்டுத் தொடர்புகள், புலப்பெயர்வுகள் என்ற அகலித்த பரப்புக்களை ஆய்வுக்குட்படுத்தி, ஆழப்படுத்திய தனிநாயகம் அடிகளின் 'தமிழியல்' பணிகள் தமிழாய்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. அவரது சிந்தனையணியின் செயல்கள் தமிழிலக்கிய வரலாற்றில் 20-ம் நூற்றாண்டையும் ஈழத் தமிழர்க்கு பாத்தியையாக ஆக்கியது என்று கூறுவதற்கு ஏதுவாகியுள்ளன. தமிழ், ஆங்கிலம் தவிர ஸ்பனிஷ், உரோமமொழி, போர்த்துகீசியம், பிரெஞ்சு முதலிய மொழிகளில் சரளமாக உரையாடவும் சொற்பொழிவாற்றவும் வல்லவரான அவர், தமிழ் மொழியையும் அதன் இலக்கியச் செழுமையையும் உலகத்துக்கு பரப்பும் நோக்கோடு ஜப்பான், சிலி, பிரேசில், பெரு, மெக்சிக்கோ, எக்குவடோர், அமெரிக்கா உள்ளிட்ட பன்னாடுகளுக்கு பய

ணம் செய்து, ஓர் ஆண்டிலேயே இருநூறிற்கும் மேற்பட்ட பேருரைகளை நிகழ்த்தியமை அடிகளை தமிழ்த் தூது என தமிழறிஞர்கள் போற்றக் காரணமாகியது.

ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்தபோது அங்குள்ள நூலகங்களில் பல தமிழ்க் கையெழுத்துப்பிரதி நூல்கள், மற்றும் அச்சிடப்பெற்ற தமிழ் நூல்கள் பற்றி ஆராய்ந்தார். இதன் பெறுபேறாகவே தமிழில் அச்சான முதல் நூல்கள் பற்றிய ஆதாரபூர்வமான தகவல்கள் உலகிற்கு கிடைத்தன. தேடலும் முயற்சியும் கொண்டு தாம் கண்டறித்தவற்றையெல்லாம் திரட்டி TAMIL CULTURE, Vol - VII. No - 03 July 1958 இதழில் The First books in Tamil எனும் தலைப்பில் விரிவான கட்டுரையாக எழுதினார். (இக்கட்டுரை தமிழில் அச்சிடப்பட்ட முதல் நூல்கள் என்ற தலைப்பில் மாற்றுவெளி - ஆகஸ்ட் 2009 இதழில் முனைவர் தே. சிவகணேஷால் தமிழ்ப்படுத்தப் பட்டுள்ளது.)

TAMIL CULTURE இதழில் தனிநாயகம் அடிகளின் கட்டுரை வெளியானதின் பின்பே தமிழில் அச்சு நூல்கள் உருவான வரலாறும் அதற்கு காரணகர்த்தாவாக இருந்த ஹென்றிக் ஹென்றிக்குயிஸ் அடிகளின் அரும்பணிகளும் அறிஞர்களதும் உலகத்தினதும் பார்வைக்கு வந்தன. இவ்வாறு 400 ஆண்டுகள் மறந்தும் மறைந்தும் இருந்த ஹென்றிக் ஹென்றிக்குயிஸ் பாதிரியாரையும் தமிழின் முதல் அச்சுநூல்களையும் மீட்டெடுத்தவர் தனிநாயகம் அடிகளேயாவார்.

ஹென்றிக் ஹென்றிக்குயிஸ் அடிகளின் உடல் பனிமயமாதா ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக ஆலயம் கைமாறியதாலும், படையெடுப்புகளாலும், அவரது கல்லறை இருந்த இடம் தெரியாமல் காணாமல் போனது. கால மாற்றத்தில் ஆலயத்தில் கண்ணாடிப் பேழையில் அவரது எலும்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை ஆய்வாளர் S. ராஜமாணிக்கம் அவர்கள் கண்டறிந்து அதனை ஆய்வுக்கட்டுரையினூடாக வெளிப்படுத்தினார். தமிழுக்கு நிலைத்த புகழை ஈட்டித்தந்த ஹென்றிக் ஹென்றிக்குயிஸ் அடிகளாரின் கல்லறை எங்கிருக்கிறது என்று தேடிய சம காலத்தின் முக்கியமான பண்பாட்டு வரலாற்றாய்வாளரான நிவேதிதா லூயிஸ் அவர்கள் பனிமய மாதா ஆலயத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த ஹென்றிக் ஹென்றிக்குயிஸ் அடிகளின் மண்டையோட்டைக் கண்டறிந்தார். தொடர்ந்து செண்பகனூர் இயேசு சபை ஆவணகாப்பகத்தில் பாதுகாப்படும் ஹென்றிக் ஹென்றிக்குயிஸ் அடிகளின் வலது கை எலும்பையும் அவர் அறிந்துகொள்கிறார். அவற்றை நேரில் காண்பதுடன் மட்டும் நின்றுவிடாமல் புகைப்பட ஆதாரங்களுடன் அது குறித்து 'மிச்சங்களைத் தேடிப் பயணம் - ஹென்றிக் ஹென்றிக்ஸ், எல்லீசன்' என்ற கட்டுரையை தனது 'அறியப்படாத கிறிஸ்த்தவம்' நூலில் எழுதி பதிவுசெய்திருக்கிறார்.

புனித சவேரியாரின் உடல் கோவா ஆலயத்தில் இன்றும் பாதுகாக்கப்படுகின்றது. ஆனால் அவரது மாணக்கரும், அவரால் உயர்வாக குறிப்பிடப்பட்டவரும் ஐரோப்பாவின் முதல்த் தமிழ் மாணவரும், தமிழில் பாவமன்னிப்பை கேட்ட முதல் குருவும், தமிழின் முதல் அச்சுக்கூடத்தை நிறுவியவரும், முதலில் தமிழை அச்சிட்டவரும், முதல் தமிழ்க் கல்லூரியைத் தோற்றுவித்தவரும், மருத்துவமனையை நிறுவிய மிசனெரியின் முதல் குருவெனப் பல முதல் சாதனைகளைத் தனதாக்கிய தமிழ்த்தொண்டர் ஹென்றிக் ஹென்றிக்குயிஸ் அடிகளுடைய மண்டையோடும் வலது கை எலும்பும் இருவேறு இடங்களில் மிச்சமாக இருக்கின்றதை, வேதனையுடனும் இந்த நிலை மாறவேண்டும் என்னும் அவாவுடனும் எழுதியிருந்த ஆய்வாளர் நிவேதிதா லூயிஸின் கூற்று உண்மையானவை.

நிவேதிதா லூயிஸின் கட்டுரையைப் படித்தபோது, ஹென்றிக் ஹென்றிக்குயிஸ் அடிகளை மீளவும் நினைவுக்கு கொண்டு வந்த, தமிழின் முதல் அச்சு நூல்களை தேடிக் கண்டறிந்து, அவை தொடர்பான தகவல்களை உலகின் பார்வைக்கு கொண்டு வந்த, 20 நூற்றாண்டின் தன்னிகரற்ற தமிழ்ப் பணியாளர் தமிழ்த்தூது தனிநாயகம் அவர்களின் கல்லறை எங்கிருக்கிறது ? என்ற கேள்வி எழுந்தது. அச்சமயத்தில் தனிநாயகம் அடிகள் மீது மிகவும் விருப்பும் மதிப்பும் கொண்டவரும், தனிநாயகம் அடிகள் மற்றும் உலகத் தமிழராய்ச்சி மன்றம் தொடர்பான தகவல்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் தேடித்தேடிச் சேகரித்து அது தொடர்பில் அதிகாரபூர்வ தகவல்களைத் தரக்கூடிய ஆய்வாளரும் ஆவண சேகரிப்பாளரும் புத்தகப்பண்பாட்டாளருமான விருபா குமரேசன் அவர்கள் 'தனிநாயகம் அடிகளின் கல்லறை இருக்குமிடம் தொடர்பில் சரியான தகவல்களை அறிய முடியவில்லை' எனக் கூறினார். 'அவரது கல்லறை இப்போது அது அமைக்கப்பட்ட இடத்தில் இல்லை' என்ற தகவலையும் கூறி என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். அத்துடன் சதாவதானி புலோலியூர் நா. கதிரவேற்பிள்ளை ஆவணக் காப்பாளர் செந்தூரன் அவர்கள் தனிநாயகம் அடிகள் கல்லறை இருக்குமிடம் சென்று அங்கு எடுத்த புகைப்படத்தையும் எம்முடன் பகிர்ந்திருந்தார்.

புனித சம்பத்திரிசியர் கல்லூரியின் (St.Patrick's college) பின்புறம் உள்ள கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைத் தோட்டத்தில் அமரராகிய திருத்தந்தையர்களுக்குரிய கல்லறைப் பகுதியில் தனிநாயகம் அடிகளுடைய கல்லறையை அவர் அடையாளங் கண்டிருந்தார். அவர் பகிர்ந்திருந்த கல்லறையின் புகைப்படம் குழப்பத்தை மேலும் அதிகமாக்கியது. ஏனெனில் தனிநாயகம் அடிகளின் கல்லறை நினைவுக் கல்லில் அவருடைய பெயருடன் வேறு இரு திருத்தந்தையர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டிருந்தன. அத்துடன் அவர்கள் மூவரும் குறுகிய மாத இடைவெளியில் இறந்தவர்களாக வேறு இருந்தார்கள். இக்குழப்பத்தை தீர்ப்பதற்காக குறித்த கல்லறைத் தோட்டத்திற்கு சென்று கல்லறையை நேரில் பார்த்து ஆராய நானும் விருபா குமரேசன் அவர்களும் ஆய்வாளர் சி. ரமேஷ் அவர்களும் முடிவெடுத்தோம். ஏலவே எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய நானும் சி. ரமேஷ் அவர்களும் அவ்விடத்திற்குச் செல்ல வேறு விடயமாக அவ்விடத்துக்கு வந்திருந்த கவிஞர் தனா. விஷ்ணுவும் எம்முடன் இணைந்து கொண்டார். இவ்விடயத்தில் மிகவும் சிரத்தை எடுத்து எமக்கு தூண்டுதலாக இருந்த விருபா குமரேசன் அவர்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் அன்று எம்முடன் இணைந்துகொள்ள முடியவில்லை.

கல்லறைத் தோட்டத்தில் பராமரிப்பாளராக இருந்தவரின் உதவியை நாடி விடயத்தை சொன்னபோது அவர் குருமார்களின் கல்லறை அமைந்திருந்த பகுதியை எமக்கு காட்டினார். ஆயினும் அவருக்கு தனிநாயகம் அடிகளின் கல்லறை குறித்து தெரிந்திருக்கவில்லை. சில நிமிடங்களிலேயே

குறித்த கல்லறையையும் நினைவுக்கல்லையும் கண்டு கொண்டோம். அந்நினைவுக் கல்லில் பின்வருமாறு குறிப்பி டப்பட்டிருந்தது.

FR.X.S.THANINAYAGAM
02.08.1913 – 01.19.1980
(மாதம் 19 என்றே நினைவுக் கல்லில் உள்ளது)

FR.H.S.DAVID
08.06.1907 – 02.06.1981

FR.JOE FERNANDO
21.11.1935 – 28.07.1980




முதலில் எம்மால் ஏன் இவ்வாறு உள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. பின்பு கல்லறைத் தோட்டப் பராம ரிப்பாளரிடம் இவ்விடயத்தை தெரிவித்து ஏன் இவ்வாறு உள் ளது...? என வினவியபோது 'குருமார்களின் கல்லறைத் தோட் டத்தில் மேலும் கல்லறைகள் அமைக்க முடியாத இட நெருக் கடி தோன்றியதால் தனித்தனியாக இருந்த கல்லறை எச்சங்க ளைத் தோண்டி எடுத்து மும்மூன்றாக ஒரு கல்லறையில் மறு அடக்கம் செய்யப்பட்டது என அவர் தெரிவித்தார். எனினும், எப்போது?, எவ்வாறு... மறு அடக்கம் செய்யப்பட்டன? என் பது போன்ற தகவல்கள் அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆயினும், அண்மைக் காலத்திலேதான் இம்மாற்றங்கள் இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதையும் ஒரே ஆண்டு இறப் பெய்திய மூன்று திருத்தந்தையரின் எச்சங்கள் ஒரு கல்லறை யில் மறு அடக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதையும் ஏனைய கல்லறைகளை அவதானித்தபோது எம்மால் ஊகித்துக் கொள்ள முடிந்தது.

20-ம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழ்ப்பணியாளர் ஒருவரின் கல்லறை ஒரு நினைவுக் குறிப்போ அவரது தமிழப்பணியை குறிக்கும் அடையாளமோ எதுவுமின்றி இருந்ததைப் பார்த்த பொது நெஞ்சம் கனத்தது. கூடவே 30-இற்கும் மேற்பட்ட மொழிகளை அறிந்த சொற்பிறப்பாராய்ச்சி அறிஞரும், யாழ் நூலகத்தின் வளர்ச்சியில் மிக கரிசனை எடுத்துக்கொண்டவ ரும் யாழ்நூலக எரிப்பு செய்தி எற்படுத்திய தாக்கதால் மார டைப்பு ஏற்பட்டு மரணமடைந்ததாகச் சொல்லப்படுகின்ற தாவீது அடிகளின் (FR.H.S.DAVID) கல்லறை எச்சங்களுக்கும் இதுதான் நிலை என்பதை கண்டபோது எமக்கேற்பட்ட ஏற் பட்ட துயரும் ஆற்றாமையும் கொஞ்சமல்ல.

தனிநாயகம் அடிகளின் நூற்றாண்டு 2013-இல் நினைவு கூரப் பட்டபோது அவரது சிலைகள் யாழ்ப்பாண திருக்குடும்ப கன் னியர் மடத்திற்கு அருகில் அமைக்கப்பட்டதுடன் நூற்றாண்டு நிகழ்வுகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. தவிர, தனிநாய கம் அடிகளின் பூர்வீகமான நெடுந்தீவிலும் அடிகளுக்குச் சிலை வைக்கப்பட்டுள்ளது. அடிகளின் கரம்பொன் ஊர்கா வற் துறையில் அமைந்துள்ள இல்லம் நினைவிடமாக்கப்பட் டுள்ளதாக அறியமுடிகிறது. இடைவெளி விட்டுத்தானும் தனி நாயகம் அடிகள் பெயரால் நூற்றாண்டு சொற்பொழிவுகள், நிகழ்வுகள் நடைபெறுகின்றன. ஆயினும் அடிகளின் கல் லறை குறித்து யாரும் அக்கறை கொண்டதாகத் தெரிய வில்லை. திருச்சபை தன் குருமார்களுக்குரிய கௌரவத்தை யும் மரியாதையையும் அவரது கல்லறைக்கு வழங்கியுள்ளது. தனிநாயகம் அடிகள் முதன்மையாக தமிழ்ப்பணியாற்றுவ தையே தன் கடனாக கருதி செயற்பட்டவர், வாழ்ந்தவர், அவ ரது கல்லறைக்கு தமிழர்கள் நினைவிடமொன்றை அமைத்து மிக கௌரவத்துடனும் மரியாதையுடனும் பேணுவது நன்றிக் கடனின் பாற்பட்டது.

அவரை மறு அடக்கம் செய்யும்போது தமிழ் சொற்பிறப்பியல் ஆராய்ச்சியாளரான தாவீது அடிகளாருடன் சேர்த்தே அடக் கம் செய்துள்ளார்கள் என்பதில் சிறிது ஆறுதலடையலாம். தமிழ்ச் சொற்களின் பிறப்பு மூலங்களை ஆராய்தல் என்பது தமிழின் அடி ஆழம் வரை சென்று எல்லை காணுதல் என்பர் அறிந்தவர்கள். ஈழத்தில் ஞானப்பிரகாசருக்குப் பின்னரான ஒரேஒரு சொற்பிறப்பாராய்ச்சியாளர் தாவீது அடிகளையே கூறமுடியும். கல்லறையில் கூட தமிழராய்ச்சியாளருடன் உறங்குவதை சிலவேளை தனிநாயக அடிகளும் விரும்பியி ருக்கக் கூடும்.

**உதவியவை:**


- Thani Nayagam, Xavier S., (1958).' The First Books printed in Tamil'. Tamil Culture. Vol. VII No. 3. pp.288 - 308. 'தமிழில் அச்சிடப் பட்ட முதல் நூல்கள்', (மொ.பெ. தே.சிவகணேஷ் ) மாற்றுவெளி - ஆகஸ்ட் 2009.
- ஆ.சிவசுப்பிரமணியன், தமிழ் அச்சுத் தந்தை அண்ட்ரிக் அடிகள், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், 2003.
- நிவேதிதா லூயிஸ், அறியப்படாத கிறிஸ்தவம், கிழக்கு பதிப்பகம், 2012.
- Rajamanickam, S, 'Padre Henrique Henriques, the Father of the Tamil Press', Proceedings of the Second International Conference Seminar of Tamil Studies - Volume Two : Second International Conference Seminar of Tamil Studies, Madras, India, 3 - 10 January 1968. Edited by Asher, R. E., International Association of Tamil Research - Madras, October 1971, 520-527.




sathiyathevan.s@thaiveedu.com

# எம்.டி. வாசுதேவன் நாயர்
## இலக்கிய வானில்
## மின்னி மறைந்த ஒற்றை நட்சத்திரம்

– சாங்கிருத்தியன்



ஈழத்து வாசகர் நன்கறிந்த பெயர்களில் ஒன்று வாசுதேவன் நாயர். மனித மனத்தின் நுண்ணுணர்வின் ஆழ, அகலங்களைப் படைப்பில் சாத்தியப்படுத்தியவர். காதலின் இதமான மென்னுணர்வை நுண்மையாகச் சித்திரித்தவர். வாழும் சூழலில் தனிமனிதர் படும் அவஸ்தைகளை மன உபாதைகளைத் தன் படைப்புகளில் யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்தியவர். துன்பம், அதீத உணர்ச்சி, மனநெருக்கடி என விரிந்து செல்லும் இவரது படைப்புகள் நிதர்சனமான நாம் காணும் உலகத்தில் மையம் கொள்பவை.

புராண, இதிகாசத் தொன்மங்களை மீள்வாசிப்புக்குட்படுத்தியவர் வாசுதேவன் நாயர். இவரின் ‘இரண்டாம் இடம்’ என்னும் நாவல் ஞானபீடம் விருது பெற்றது. குறிஞ்சிவேலனின் மொழிபெயர்ப்பில் தமிழ் வாசகருக்கு அறிமுகமான இந்நாவல் ‘கங்குலியின் பரதம்’ மற்றும் ‘ஜெயம்’ எனும் நூலில் கூறப்படும் மகாபாரதக் கதையை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டதாகும். தலைசிறந்த படைப்பான இந்நாவலை கலைகௌமுதி வார இதழில் முதன்முதலில் நாயர் எழுதினார். மகாபாரதத்தின் இறுதியில், யதுவம்சம் முழுதும் அழிந்து, துவாரகையும் சீர்குலைந்த நிலையில் வேடுவன் ஒருவனின் அம்பால் கிருஷ்ணன் இறந்த பின்னர், பாண்டவர்கள் பாரதம் முழுவதையும் சுற்றிக் கடைசியில் இமய மலைக்குச் சென்றடைந்து ஒவ்வொருவராய் உயிர்விட எத்தனிக்கும் இடத்திலிருந்து இந்நாவலைத் தொடங்குகிறார் எம்.டி. வாசுதேவன் நாயர். தெய்வ சக்திகளையோ அமானுஷ்யத் தன்மைகளையோ உள்நுழைக்காமல் பாத்திரங்களையும் வரலாற்றுச் சான்றுகளையும் இணைத்து பீமனின் பார்வையில் கதையை நகர்த்திச் செல்கிறார். இந்நாவலில் இதிகாசப் பாத்திரங்களை மனிதநடத்தைவாத முறைகளை அடிப்படையாகக் கொண்டே நாயர் படைத்திருந்தார். மகாபாரதத்தின் தலைசிறந்த படைப்பான கண்ணன் கூட சாதாரண குறுநில மன்னனாகவே படைத்துள்ளார். இந்நாவலில் பகுத்தறிவற்று எல்லாமே காலத்தின் பிழை என நம்பும் சூதாடியாக சாதாரண மனிதனாகவே யுதிஷ்டிரன் சித்திரிக்கப்படுகிறான். வலிமையும் திறமையும் இருந்தும் பீமனுக்கு இரண்டாம் இடம்தான் தரப்படுகிறது என்பதை நாவல் ஆழமாகவே புலப்படுத்துகிறது. வைஷாலி திரைப்படத்துக்காக மகாபாரதக்கதையில் சொல்லப்படும் ரிஷ்யசிருங்கனின் கதையையும் மீள்வாசிப்புக்குட்படுத்தியவர் வாசுதேவன் நாயர். மழை வேண்டி ரிஷ்யசிருங்க முனிவரைப் பெண்கள் நாட்டுக்கு அழைத்து வரும்போது அக்கணத்தில் வைஷாலி பாத்திரத்தை உருவாக்கி அதில் ஒரு துரோகக் காதல் நாடகத்தையும் ஆழமாகச் சித்திரித்தவர் நாயர்.

வாசுதேவன்நாயரின் ‘காலம்’ நாவல் சாகித்திய அக்காதெமி வெளியீடாக வெளிவந்தது. மணவை முஸ்தபா இதனை மொழிபெயர்த்திருந்தார். 1970-ம் ஆண்டு சாகித்திய அக்காதெமி விருதினைப் பெற்ற இந்நாவல் எளிய மத்தியதரவர்க்க இளைஞனின் வாலிப உணர்வுகளைச் சித்திரிக்கிறது. தோல்விகளால் துவளாது எதிர்நீச்சல் போட்டுக் கொண்டு வாழ முற்படும் இளைஞனின் மனவுணர்வுகளைத் துல்லியமாக வாசுதேவன் நாயர் இதில் வெளிப்படுத்தியிருந்தார்.

நாயரின் ‘நாலுகெட்டு’ என்னும் நாவல் 1958-இல் வெளிவந்து கேரள சாகித்ய அக்காதமி விருதினைப் பெற்றது. அப்புண்ணி என்ற மையப் பாத்திரத்தின் வாயிலாக கூட்டுக் குடும்பத்துக்குள் நிகழும் அகப் - புற முரண்களைப் பேசும் இந்நாவல், மூன்று வயதில் தகப்பனை இழந்த அப்புண்ணியை வளர்க்கத் தாய் படும் பாட்டையும் சித்திரிக்கிறது. மகனைப் படிக்க வைக்க பணக்கார வீடு ஒன்றில் வேலை செய்யும் தாயின் வாழ்வியலுக்கூடாக நிலவுடமைச் சமூகத்தின் வாழ்வியல் இருப்பும் அதன் சிதைவுகளும் கூறப்படுகிறது. தகப்பன் இறந்த பின் தாய்க்கும் சங்கரனுக்கும் இடையிலான உறவால் மனம் பாதிக்கப்பட்டு அப்புண்ணி, தாயைப் பிரிந்து வாழும் நிலையையும் பின் மனந்திருந்தி தாயோடு இணைந்து வாழ்வதுமே நாவலின் கருப்பொருளாகும்.

நீண்ட காலத்துக்குப்பின் பேராசிரியர் ஸ்ரீனிவாசனின் அழைப்பின் பெயரில் சுதாகரன் வாரணாசிக்குச் சென்று அங்கிருந்தபடி தன் கடந்த காலத்தை நினைப்பதே இவரின் ‘வாராணசி’ நாவலாகும். சுதாகரன் வாராணாசி வரும்போது ஸ்ரீனிவாசன் இறந்துவிட, அவரின் துணைவியாரின் வருகைக்காகக் காத்திருக்க முடிவு செய்து அங்கு தங்கும் வேளையில் அங்கு நிகழும் சம்பவங்களும் கடந்த கால நினைவுகளுமே இந்நாவலின் உள்ளடக்கமாகும். பெண்களின் அன்பினால் ஆட்கொள்ளப்பட்ட உலகை இந்நாவலில் சுதாகரனின் அனுபவங்களுக்கூடாக வாசுதேவன் நாயர் எடுத்துரைக்கிறார். இது தவிர அசுரவித்து, பாதிராவும் பகல்வெளிச்சமும், விலாப யாத்ர, மஞ்சு முதலான நாவல்களையும் இவர் எழுதியுள்ளார். மஞ்சு அதனுடைய இலக்கியச் சித்திரிப்புக்காகவும் கவிதை

மொழிநடைக்காகவும் இத்தவரை பேசப்படுகின்ற நாவல்.

1965-ல் முறைப்பெண்ணு சிறுகதைக்கூடாக கேரளத் திரையு லகுக்குள் நுளைந்த வாசுதேவன் நாயர் பஞ்சாக்னி, அமிர் தம் கமயா, வைஷாலி, ஒரு வடக்கன் வீரகாதா, பெருந்தச்சன் உள்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட மலையாளப் படங்களுக்கு திரைக்கதை எழுதியுள்ளார். நிர்மால்யம் உட்பட ஆறு படங் களை இயக்கியுமுள்ளார். கேரளத் திரைப்பட ரசனையை தன் திரைக்கதைகளுக்கூடாக மாற்றி அமைத்த வாசுதேவன் நாய ரின் திரைக்கதைப் பாத்திரங்கள் உயிரும் உணர்வும் கொண் டவை. இவருடைய திரைப்படங்கள் பார்ப்பவரின் மனத்தில் காத்திரமான தாக்கத்தைச் செலுத்தின.

வடக்கன் பாட்டினைப் பிற்புலமாகக் கொண்டு இவர் இயக் கிய 'வடக்கன் வீர கதா' பதினாறாம் நூற்றாண்டில் கேரளா வில் நடக்கும் கதை. சந்துவிற்கும் உண்ணியாச்சாவுக்கும் இடையிலான காதலையும் உறவின் சிக்கலையும் இதில் ஆழ மாகச் சித்திரிக்கிறார் நாயர். களரி மரபில் முக்கியமான அங் கம் எனப்படும் துவந்த யுத்தம் திரைக்கு உயிரூட்டுகிறது.

எம்.டி. வாசுதேவன் நாயர் 1973-ல் அவர் எழுதிய 'பள்ளிவா ளும் கால்சிலங்கையும்' என்னும் சிறுகதையை 'நிர்மால்யம்' என்னும் பெயரில் திரைப்படமாகத் தயாரித்து இயக்கினார். ஜனாதிபதியின் தங்கப்பதக்கத்தை வென்ற இத்திரைபடத் தைத் தொடர்ந்து வெளிவந்த 'மாப்புசாக்ஷி', 'குட்டியேடத்தி', 'அசுரவித்து', 'இருட்டின்றே,' 'ஆத்மாவு' முதலான இவரின் திரைப்படங்களும் மாபெரும் வணிகவெற்றிகளைப் பெற்றன.

பெருந்தச்சன் என்கிற கதாபாத்திரம் 'பரயி பெற்ற பந்திரு குலம்' என்கிற நாட்டுப்பாடல்களில் காணப்படுகிறது. இதனை மையப்படுத்தி எழுதிய பெருந்தச்சன் அருமையான திரைக்கதை. தலைமுறை இடைவெளியையும் பெருந்தச்சன், மகன் மீது கொண்ட வெறுப்பினையும் இத்திரைப்படத்தில் அருமையாகச் சித்திரிக்கிறார். மகன் மீது கொண்ட பொறா மையாலும் காழ்ப்பினாலும் மகனின் புகழால் தன் புகழ் குறை வடைவதைக் கண்ட துவேஷத்தாலும் மகனையே உளியைக் கழுத்துக்கு நேரே விழ வைத்து தகப்பன் சாகடிப்பதாக எழு திய 'பெருந்தச்சன்' போல் ஒரு திரைக்கதையை வாசுதேவன் நாயரைத் தவிர யாராலும் எழுதிடமுடியாது.

கேரளத்தின் பிரபலமான நக்சலைட் அஜிதாவை வைத்து வாசுதேவன் நாயர் எழுதிய 'பஞ்சாக்னி' திரைக்கதை அவ ருக்கு பெயர் சொல்லும் திரைக்கதைகளில் ஒன்று. பரோலில் கொண்டு வரப்படும் காதலிக்கும் இளைஞனுக்கும் இடையி லான மனித உறவின் சிடுக்கற்ற உணர்வுப் பரிமாணங்களை இத்திரைப்படம் வெளிப்படுத்தி நிற்க, இவரின் 'தாழ்வாரம்' திரைக்கதை மனைவியைக் கொன்ற நண்பனைத் தேடிக் கண்டு பிடித்து பழி வாங்கும் சாதரண மனிதரின் வாழ்வைப் பதிவு செய்கிறது. இப்படத்தில் மோகன்லால் சிறப்பாகவே நடித்திருந்தார். காதலியைத் தகாத வாழ்வுக்குத் தள்ளிய கய வர்களையும் போகக்கூடாத இடத்துக்குச் செல்ல இருக்கும் காதலியின் தங்கைமார்களையும் கொன்றுவிட்டு தூக்குத் தண்டனை பெற்ற சத்யனின் கடைசிக்கால சிறை வாழ்க்கைச் சம்பவங்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட 'ஸதயம்' திரைக்கதையும் அவரின் பெயர் சொல்லும் படங்களில் ஒன்று. எம்டி-யின் ஒன்பது கதைகள் மனோரதங்கள் என்ற பெயரில் வலைத்தொடராகப் படமாக்கப்பட்டிருக்கின்றன. நாயரைக் கௌரவிக்கும் வகையில் மலையாளத்தின் முன் ணனி இயக்குநர்களால் இயக்கப்பட்ட இவ்வலைத் தொடரில் முன்னணி நடிகர்கள் நடித்திருந்தனர். அதன் வெளியீட்டு விழாவில் தன் 91-வது வயதையும் பொருட்படுத்தாமல் நாயர் கலந்து சிறப்பித்தார். பத்மபூஷன் விருது, ஞானபீடம், மத்திய சாகித்ய அக்காதமி, கேரள சாகித்திய அக்காதெமி, வயலார்



விருது என பல விருதுகளைப் பெற்ற நாயர் சாதரண மனி தனாகவே வாழ்ந்தார். பகட்டில்லாத இதயசுத்தி மிக்க வாசு தேவன் நாயர் இறந்த செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

கேரள மாந்தரின் வாழ்க்கை நிலைகளை அப்பழுக்கின்றி நிதர்சனமாகக் காட்டிய கலைஞனின் இறப்பு ஏற்படுத்திய வலி, அது தரும் வெற்றிடம் ஜீரணிக்க முடியாதது. காட்சிக ளால், சம்பவங்களால் மறக்க முடியாத நினைவுகளைத் தந்த வாசுதேவன் நாயர் அவரது படைப்புகளின் வாயிலாகவும் திரைப்படங்களின் வாயிலாகவும் தம் இருப்பைத் தக்கவைத் துக் கொள்வார் என்பது உறுதி.

Sankrityan@thaiveedu.com

■ ■ ■




அறிவாட்டிப் பாட்டி திரும்பி அவர்கள் மூவரையும் ஆயிரம் கால் மண்டபத்திற்குள் வருமாறு சைகை செய்துவிட்டு முன்னே நடந்தாள். ஆலயப் பணியாளர்கள் அவரிடம் என்ன விசாரித்தார்கள் என்பது பற்றி அறிவாட்டியும் எதுவும் சொல்லவில்லை. இவர்களும் எதையும் கேட்கவில்லை. அறிவாட்டிப் பாட்டி தன் அறிவையும், கலைகளையும் ஊட்டி வளர்த்து உங்கள் இருவரையும் மலை உச்சிக்குக் கொண்டு வந்திருக்கிறார். இது நமக்குக் கிடைத்த பெரிய வரம். ஒருபோதும் உங்கள் வாழ்க்கை தொடங்கின இடத்தை மறந்திடாதிங்க என்று ஆதினிக்கும், கோதைக்கும் கேட்கக் கூடிய இரகசியக் குரலில் கோதையின் தாய் அழுத்தமாகக் கூறினாள். இருவரும் அதனை ஆமோதிப்பதுபோல தலையசைத்தனர்.

கடலுக்குள் நீண்டிருக்கும் அந்த மலையில் சில நூறு அடிகளின் கீழே கடல் அலைகள் வந்து மோதும் ஓசையும், கோயில் தூண்களுக்கு நடுவில் கட்டப்பட்டிருந்த தோரணங்களைக் குளிர்ந்த காற்று அசைப்பதால் வரும் சலசலப்பும், ஆலயப் பூசகர் ஓதும் மந்திர ஒலியும், மண்டபத்தில் கூட்டமாக அமர்ந்திருந்து வாத்தியங்களை வாசிப்போரின் இசையும் ஒன்றிணைந்து வாழ்வில் அதுவரை அனுபவித்திராத மன அமைதியை ஆதினிக்குத் தந்தது. அதுவரை அவள் மனதில் இருந்து வந்த ஒரு வித பதட்டமும், எதிர்காலம் பற்றிய பயமும் மெல்ல மெல்ல அவளை விட்டுத் தூரமாகச் செல்வது போல உணர்ந்தாள்.

பூசையின் ஆரம்ப நிகழ்வு முடிவடைந்தும் கூடியிருந்த அனைவரும் அமர்ந்து கொண்டார்கள். பூசகரும், ஆலயப் பணியாளர்களும் அமைதியாக அடுத்த நிகழ்வுக்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தில் ஆலயத் தேவரடியார் ஒருவர் அறிவாட்டிப் பாட்டியின் காதுக்குள் வந்து எதையோ கூறினார். சட்டென்று எழுந்து கொண்ட அறிவாட்டி பாட்டி திரும்பி மூவரையும் தன் பின்னால் வருமாறு சைகை செய்தபடி ஆயிரங்கால் மண்டபத்தின் வடக்குப் பகுதியில் தனியாக அமர்ந்திருந்த ஒரு பெரியவரை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

மண்டபத்தில் பக்தர்கள் இல்லாத பகுதியது. மலையில் முட்டி மோதும் கடலலையின் சத்தம் மிக அருகில் கேட்டுக் கொண்டிருந்தது. அழகிய வேலைப்பாடுகள் கொண்டமைந்த தூணில் சாய்ந்தபடி கண்மூடி அமர்ந்திருந்தார் அந்தப் பெரியவர். அவருக்கு முன்னால் விரிக்கப்பட்ட சிறு துணியின் மேல் ஒரு சில ஓலைச்சுவடிக் கட்டுகளும் அருகில் எழுத்தாணியும் இருந்தது. இவர்கள் அருகில் சென்றதும் காலடி ஓசை கேட்டு கண்விழித்த அவர் அறிவாட்டியைப் பார்த்து மெல்லியதாக புன்னகைத்தார். பயபக்தியுடன் தள்ளி நின்ற அவர்களில் அறிவாட்டியை நோக்கிக் கைகாட்டி அருகில் வருமாறு அழைத்தார். ஆதினிக்கும், கோதைக்கும் பொட்டுக்கட்டும் திருக்கல்யாண நிகழ்வு நடத்துவதற்குரிய திகதி நேரங்களை அவர் அறிவாட்டிப் பாட்டியிடம் குறித்துக் கொடுத்தார். அதனைத் தொடர்ந்து அறிவாட்டியின் கண்ணசைவினைப் புரிந்து கொண்ட ஆதினியும், கோதையும் அதன் பின்னர் கோதையின் தாயும் அவரிடம் ஆசி பெற்றுக்கொண்டனர். விடைபெறுவதற்கு முன்னர் அவர் இவர்களை அழைத்துச் சென்ற தேவர

டியாரிடம் ஏதோ மெதுவாகக் கூறினார்.

ஐவரும் ஆட்கள் இல்லாத ஒரு பகுதியை பார்த்துத் தெரிவு செய்து அமர்ந்து கொண்டார்கள். எப்படி அக்கா இருக்கி றீங்க? பார்த்து எவ்வளவு காலம் ஆச்சு என்று உற்சாகமாக உரையாடலை ஆரம்பித்தாள் புதிதாக அவர்களுடன் இணைந்து இருந்த தேவரடியார்.

குறை ஒன்றும் இல்லை அபிராமி. பிரச்சினைகள் வந்தாலும் ஓடிக்கொண்டே இருக்கக்கூடிய அளவுக்கு மனசுல தைரியம் இருக்கு. உடம்புதான் அப்பப்ப ஒத்துழைக்க மறுக்கிறது என்று சிரித்தபடி அறிவாட்டிப் பாட்டி பதில் கூறினார்.

நீங்க தொடங்கினத இவங்க இரண்டு பேரும் முடிப்பார்கள் என்றாள், அபிராமி என்று அறிவாட்டிப் பாட்டியால் அழைக் கப்பட்ட தேவரடியார்.

பாசுபதர் சொன்னாரா என்று தூரத்தில் தெரிந்த அந்தப் பெரி யவரை கண்களால் பார்த்தபடி அபிராமியிடம் கேட்டாள் கோதையின் தாய்.

ஏன் நாங்கள் சொன்னால் பலிக்காதா? என்று சிரித்தவாறு கேட்டாள் அபிராமி.

அப்படி ஒன்றும் இல்லை சும்மா கேட்டேன், என்று பதறிய கோதையின் தாயினைப் பார்த்து சிரித்தவாறு, அபிராமி முகம் பார்த்துக் குறி சொல்வதில் கெட்டிக்காரி. நன்றாகப் பாடுவாள். கோணைநாதருக்கு நீண்ட காலமாக ரிஷபத்தளி யிலாராகத் தொண்டு செய்கிறாள் என்றாள், அறிவாட்டிப் பாட்டி.

ரிஷபத்தளியிலாரா என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் கோதையின் தாய்.

கோயிலில் பணி செய்கிறவங்க பதியிலார், தேவடியார், ரிஷ பத்தளியிலார் என்று மூன்று பிரிவாக இருக்கிறாங்க அம்மா என்றாள் கோதை.

அதுவரை தேவடியார்கள் என்பது கோயிலுக்குப் பணி செய் யும் தனியான பிரிவென்று நம்பிக் கொண்டிருந்த கோதையின் தாய்க்கு அந்த வார்த்தைகள் சற்று மனச்சோர்வை தந்தது. அதற்குள்ளும் மூன்று பிரிவு இருக்குமென்று அவளுக்கு அது வரை தெரிந்திருக்கவில்லை.

ஊருக்குள்ளதான் பிரிஞ்சு கிடக்குறாங்கண்ணு பார்த்தா உங் களுக்குள்ளேயுமா? என்று கவலையோடு கேட்டாள் கோதை யின் தாய்.

எல்லோரும் சாமிக்கு முன்னால நடனம் ஆடினா பாட்டுப் பாடுறது, விளக்கெரிக்கிறது, பூவாயிறது, சாணி மெழுகிறது, பாத்திரம் கழுவிறது, சமைக்கிறது எல்லாம் யார் செய்யிற? என்று கோதையின் தாயைப் பார்த்துக் கேட்டாள் அபிராமி.

இதெல்லாம் நமக்குப் பழக்கமான வேலைதானே. ஏன் எல் லோருமா பிரிச்சு எல்லாத்தையும் செய்தா என்ன என்று திரும் பிக் கேட்டாள் கோதையின் தாய்.

கேட்க நல்லாத்தான் இருக்குது. ஆனா எல்லோரையும் சமனா நடத்த மனசு வரணுமே. ஒருவேள மனசு சம்மதித்தா லும் இந்தச் சமூகம் விடாது என்றாள் சலிப்போடு அபிராமி.

அப்ப உங்களுக்குள்ள சண்டை வருமா என்று கேட்டாள் கோதையின் தாய். அவளுடைய குரலில் தன்னுடைய குழந் தைகளின் எதிர்காலம் பற்றிய பயம் ஒழிந்திருப்பதை அபி ராமி புரிந்து கொண்டாள்.

மனசுக்குள்ள புகைந்து கொண்டு இருக்கிற எல்லாம் எப்போ தாவது ஒருநாள் வெடிக்கும். சமாதானமாகி இணைஞ்சு போற தும் உண்டு, சண்டை பெரிதாகி தண்டனை கிடைப்பதும் உண்டு. அதெல்லாம் நினைச்சுப் பயப்படாதிங்க. கடல்ல விழுந்தா நீச்சலடிச்சு கரையேறத்தானே வேண்டும். எல்லாம் பழகிடும். அக்கா அவங்கள அதெற்கெல்லாம் தயார்படுத் தித்தான் கொண்டு வந்திருப்பா என்றாள் ஆதினியையும், கோதையையும் பரிவோடு பார்த்தவாறே அபிராமி.

இந்தச் சிக்கல்கள் பற்றி ஏற்கனவே தெரிந்திருந்த ஆதினி யும், கோதையும் அமைதியாக அபிராமியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மனிசராப் பிறந்தா... என்று அபிராமி ஏதோ சொல்ல எடுக்கவும் அவளை ஆலயப் பணியாளர் அழைக்கவும் சரியாக இருந்தது. அவசர அவசரமாக எழுந்து செல்லும் அபிராமியைப் பார்த்தபடி இருக்கும் கோதையின் தாயின் முகத்தைப் பார்த்தபடி அறிவாட்டிப் பாட்டி பேசத் தொடங்கினார்.

சோழ இலங்கேஸ்வர தேவர் வீரசோழன் காலத்தில மருங்கூ ரில இருந்தும் காரைக்காலில இருந்தும் கொண்டுவரப்பட்ட வங்கதான் பதியிலார். அவங்கதான் கோணேச்சரத்தில மாணிக்கம் தொழும்பச் செய்யிறாங்க. அரச ஆதரவில வந்த தால அவங்களுக்கு சலுகைகள் அதிகம். ஆலயப் பணிக ளில முன்னுரிமை கொடுப்பாங்க.

அப்ப தேவரடியார் என்றது...? ஆர்வத்துடன் கேட்டாள் கோதையின் தாய்.

நாமதான். கோயிலுக்கு நேர்த்திக்கடன் வைக்கிற பணக்காரர் களும், அரச அதிகாரிகளும் தங்கள் நேர்த்திய நிவர்த்தி செய்ய எங்கள காசுக்கு வாங்கி கோயிலுக்கு தானமா கொடுப்பாங்க. இன்றைக்கு உங்க குடும்பத்துக்கும், ஆதினி யிட குடும்பத்துக்கும் தேவையான நெல் வீட்டுக்கு வரு தெண்டா அதுக்கு நங்கை சானி அம்மையார்தானே காரணம் என்றாள் அறிவாட்டிப் பாட்டி. ஆமோதித்து மூவரும் தலை யாட்டினார்கள்.

ஆலயப் பணிகளில பதியிலாருக்கு அடுத்ததாகத்தான் நமக்கு சந்தர்ப்பம் தருவாங்க. சலுகைகளும் அப்படித்தான் என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

அப்ப அபிராமி என்று தயங்கியபடி கோதையின் தாய் கேட் டாள்.

நாட்டுல பஞ்சம் வந்த சமயத்தில அவள் தந்தை கோணேச்ச ரத்திற்கு அபிராமியை காசுக்கு விற்று விட்டதாக ஒரு முறை சொல்லி இருக்கிறாள். அதற்குமேல் அவளிடம் நான் எதுவும் கேட்டதில்லை என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

*(தொடரும்...)*



jeevarajah@thaiveedu.com



# ஆரிய - கலிங்க முரணும் ஒரு பேரரசின் மறைவும்

வ. துலாஞ்சனன்

இலங்கையில் சோழ ஆட்சி விசயவாகுவால் நிறைவுக்குக் கொணரப்பட்டாலும், இலங்கை அரசியலில் சோழப் பேரரசின் தலையீடு, அது மறைந்த பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற் பாதி வரை நீடித்திருந்தது.

விசயவாகுவுக்குப் பின் கலிங்க மாகோனால் இலங்கை கைப் பற்றப்பட்ட 1215-ம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் வெவ்வேறு வம்சங்களைச் சேர்ந்த அரசர்கள் மாறி மாறி இலங்கையை ஆண்டிருக்கிறார்கள். இவர்களில் ஓரிரவிலி ருந்து ஒரு நாள், ஒரு வாரம் மட்டுமே அரியணையில் அமர்ந் திருந்தவர்களும் அடக்கம். இந்த எல்லா அரசர்களும் அக் கால பொலனறுவை அரசின் அரசியலை தீர்மானித்த ‘ஆரிய -கலிங்க பனிப்போரில்’ பகடைக்காய்களாக உருண்டனர் என் பது தெரியவருகின்றது. இந்த முரணை சாதகமாகப் பயன்ப டுத்தியே சோழப் பேரரசு இலங்கை அரசியலில் தொடர்ச்சி யாக தலையிட்டுக்கொண்டிருந்தது.

சூரிய வம்சத்தைச் சேர்ந்ததாக தன்னைச் சொல்லிக்கொண்ட கலிங்க வம்சம் நேரடியாக இலங்கைத் தீவின் முதல் மன்னன் விசயனின் வாரிசுகள் தாங்கள் என்று உரிமை கோரியது. ஆனால் ஆரியவம்சம் என்பது பாண்டியக் கலப்பைக் கொண்ட சிங்கள வம்சம். இது தன்னை சந்திர வம்சம் என்று அழைத்துக்கொண்டதுடன் விசயனின் பட்டத்தரசியான பாண் டிய இளவரசியின் கொடிவழியில் வந்ததாகப் பெருமிதம் பேசியது. இந்த இரு வம்சங்களுக்குள் கொண்டும் கொடுத் தும் உறவு இருந்துவந்தபோதும், பொலனறுவை அரியணை யில் அமர்வது எந்த வம்சத்தவர் என்பதிலேயே பனிப்போர் நீடித்து வந்தது.

ஆரியவம்சம் பாண்டியச் சார்பை எடுத்துக்கொண்டதால், சோழ அரசு இயல்பாகவே கலிங்கச் சார்பை எடுத்துக் கொண்டு அவர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருந் தது. ஆரிய - கலிங்க பனிப்போரில் நான்கு தடவைக்கும் மேல் ‘எதிர்க்கரை’யிலிருந்து படையெடுத்து வந்தவர்கள் பொலனறுவை அரசைப் பிடித்ததாக மகாவம்சம் கூறும். அவற்றில் பல சோழ ஆதரவில் நடந்தது இன்று உறுதியாகி யிருக்கிறது.

விசயவாகு மறைவின் போது அவன் மகன் விக்கிரமபாகு உரோகணத்தில் தங்கியிருந்தான். விக்கிரமபாகுவை மீறி அவன் சிற்றப்பன் சயவாகு ஆட்சியைப் பிடிக்க, சயவாகுவை எதிர்த்து படை திரட்டி வந்து அரசைக் கைப்பற்றினான் விக்கி ரமபாகு. சயவாகுவுக்கு ஆரம்பத்தில் விசயவாகுவின் தங்கை மித்திரையின் ஆதரவு இருந்தது என்பதும், மித்திரை பாண் டிய இளவரசன் ஒருவனை மணந்திருந்தாள் என்பதும் இங்கு நாம் ஊன்றி நோக்கவேண்டியது. விக்கிரமபாகுவோ, திரி லோகசுந்தரி எனும் கலிங்க அரசிக்கு பிறந்தவன். ஆரிய - கலிங்க ஆட்சிப் போரின் விதை விழுந்தது அப்போது தான்.

கலிங்கர்களான விக்கிரமவாகுவுக்கும் (1111 - 1132) அவனது மகன் கயவாகுவுக்கும் (1132 - 1153) சோழ ஆதரவு இருந் தது. இந்நிலையில் ஆரியத்தரப்பைச் சேர்ந்த மித்திரை சோழரின் ஆதரவைப் பெற முயன்றிருக்கிறாள். எனவே ‘வீரப்-பெருமாள் பாண்டியனார்’ என்று அழைக்கப்பட்ட அவளது மகன் மானாபரணன், குலோத்துங்க சோழன் மகள் சுந்தமல்-லியாழ்வாரை மணக்க நேர்ந்தது. மானாபரணனுக்கு அவனது கலிங்கப் பட்டத்தரசி மூலம் பிறந்த பெருவீரனே பராக்கிரம பாகு.

பராக்கிரமபாகு காலத்திலும் (1153 - 1186) சோழ எதிர்ப்பு நீடித்தது என்பது வீரபாண்டியனும் குலசேகரபாண்டியனும் பாண்டிய உரிமைக்காகப் போரிட்டபோது, பராக்கிரமபாகு வீரபாண்டியனுக்கு ஆதரவாக படையுதவி வழங்க, சோழர் குலசேகரபாண்டியனுக்கு ஆதரவளித்ததன் மூலம் தெரிகின் றது. இப்போரில் பராக்கிரமபாகு தோற்றபோது சோழ ஆதர வில் வென்ற குலசேகரனுக்கு இலஞ்சம் கொடுத்து அவனை மீண்டும் சோழருக்கெதிராகத் திருப்பிவிட்டான். சீற்றமுற்ற சோழர் அவனை அரியணையிலிருந்து நீக்கி, தாங்கள் முன்பு தோற்கடித்த வீரபாண்டியனுக்கே பாண்டிய அரசை மீள அளித்தார்கள். பராக்கிரமபாகுவின் சோழ எதிர்ப்பு, அவனது மகள் ஒருத்தியை பெண் கேட்டபோது மறுத்து, அவன் பாண் டியர் குலத்திலேயே மாப்பிள்ளை கொண்டதன் மூலம் தெரிய வருகின்றது.

இதன் பின்னர் ஏற்பட்ட ஆட்சிக் குழப்பங்களினிடையே 1187-இல் கலிங்க இளவரசன் நிசங்கமல்ல மன்னன் இலங்கை வந்து முடிசூடிக்கொண்டான். அவன் ‘இலங்கை அரியணை சோழருக்கோ பாண்டியருக்கோ கேரளருக்கோ அல்ல; கலிங்கருக்கே உரியது’ என்று பொறித்துள்ள கல்வெட்டை இன்றும் பொலனறுவையில் காணலாம். நிசங்கமல்லனின் சகோதரி மகனான சோழகங்கன் என்பவன் தன் மாமன் விக்கிரமவாகுவைக் கொன்று பொலனறுவையில் அமர்ந்து 1196-ம் ஆண்டு ஒன்பது மாதங்கள் இலங்கையை ஆண்டான். சோழகங்கன் என்ற பெயர், அவனது வம்சத்துக்கும் சோழ வம்சத்துக்குமுள்ள தொடர்பை விளக்கும். ஆனால் அவன் கண்களைப் பிடுங்கி தண்டித்த கீர்த்தி எனும் (சிங்கள ?) தளபதி, பராக்கிரமவாகுவின் கைம்பெண் அரசியான லீலாவதியை அரியணையில் அமர்த்தினான். பாண்டிய இளவரசனுக்கும் மித்திரைக்கும் பேத்தியான லீலாவதி, பராக்கிரமவாகுவைப் போலவே ஆரியவம்சத்தைச் சேர்ந்தவள். அவள் மூன்று ஆண்டுகள் (1196 - 1199) கீர்த்தியின் ஆதரவுடன் இலங்கையை ஆண்டாள்.

அப்போது பொலனறுவை அரசவையில் இருந்த ஆபோநாவன், புதல்நாவன் ஆகிய இருவர் நிசங்கமல்லனின் ஒன்று விட்ட தம்பியான சாகசமல்லன் என்பவனை கங்கைகொண்ட சோழபுரத்துக்கு அழைத்து வந்தனர். அங்கு பலவிதமான கொண்டாட்டங்களுக்கு மத்தியில் வரவேற்கப்பட்ட சாகசமல்லன், பல பரிசில்களுடன் இலங்கை வந்து லீலாவதியை விரட்டி பொலனறுவையில் முடிசூடிக்கொள்கிறான். இவ்விபரம் அவனால் பொறிக்கப்பட்ட பொலனறுவை சிங்களக் கல்வெட்டொன்றில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

சாகசமல்லனுக்கு சிங்கள அதிகாரிகளின் அனுசரணை இருந்தது என்பதும், அதை விட முக்கியமாக சோழ அரசின் ஆதரவு இருந்தது என்பதும், இக்கல்வெட்டின் வழியே தெரியவருகின்றது. கலிங்கனான சாகசமல்லனின் முடிசூடல், லீலாவதிக்கும் அவளது ஆரிய ஆதரவாளர்களுக்கும் ஆரியரின் பின்னணியிலிருந்த பாண்டியருக்கும் எதிரான சோழரின் முக்கியமான இராசதந்திர நகர்வாகும்.

1200 முதல் 1202 வரை அரசாண்ட சாகசமல்லன் ஆயசுமந்தன் என்பவனால் ஆட்சி கவிழ்க்கப்பட, நிசங்கமல்லனின் அரசி கல்யாணவதி அரியணையில் அமர்த்தப்பட்டாள். ஆயசுமந்தனே சாகசமல்லனின் கல்வெட்டில் வந்த ஆபோநாவன் என்று இனங்காண்கின்றனர் வரலாற்றாசிரியர்கள். இந்த ஆபோநாவனே புதல்நாவனுடன் இணைந்து சாகசமல்லனை இலங்கை அழைத்துவர பெரும்பிரயத்தனம் செய்தவன். அந்த ஆபோநாவனுக்கு சாகசமல்லன் இலங்காதிகாரன்



என்ற பெரும்பதவி கொடுத்து பல அன்பளிப்புகளும் வழங்கியிருந்தான். ஆபோநாவனே ஆயசுமந்தன் என்ற அடையாளப்படுத்தல் உண்மையென்றால், சாகசமல்லனின் இறுதிக்காலம் துயரத்துக்குரியது. தன்னை அழைத்து வந்து அரியணை அளித்து தன்னால் கௌரவிக்கப்பட்ட ஒரு சிங்கள அதிகாரியாலேயே ஆட்சி கவிழ்க்கப்பட்டிருக்கின்றான் சாகசமல்லன்.

சாகசமல்லனைப் புறந்தள்ளி கல்யாணவதியை ஒரு பொம்மையாக அமர்த்தி ஆட்சி புரிந்த ஆயசுமந்தன் பின்பு அவள் ஆட்சியிலும் திருப்தியுறாமல் மூன்று மாதங்களே வயதான தர்மாசோகன் எனும் இளவரசனை முடிசூட்டி ஓராண்டு ஆண்டதாக மகாவம்சம் சொல்கின்றது. சிங்கள வீரனாக அடையாளப்படுத்தக்கூடிய ஆயசுமந்தன் தன் சுயநலத்துக்காக சாகசமல்லன், கல்யாணவதி ஆகிய கலிங்கக் கொடிவழியினரை ஆதரித்து, இறுதியில் சிறு குழந்தையொன்றை தன் மண்ணாசைக்கு பலிக்கடாவாக்கி இருக்கிறான். சோழப் படையின் ஆதரவுடன் தமிழகத்திலிருந்து படையெடுத்து வந்த அணிகங்கன் எனும் இலங்கையைச் சேர்ந்த வீரன் ஆயசுமந்தனையும் தர்மாசோகனையும் கொன்று அரியணையைக் கைப்பற்றினான். சோழ ஆதரவும், அவன் பெயரிலுள்ள 'கங்கன்' என்ற பெயரும் அவன் கலிங்கன் என்பதைக் காட்டுகின்றது. ஆனால் அணிகங்கன் பதினேழு நாட்களே பொலனறுவையை ஆளமுடிந்தது.

'விக்கிராந்தன்' என்ற ஆரியகுலத் தளபதி அணிகங்கனைக் கொன்று, மீண்டும் பராக்கிரமவாகுவின் கைம்பெண் அரசி லீலாவதிக்கு முடிசூட்டினான். சில நாட்களிலேயே லோகேசுவரன் என்பவன் தமிழர் படையுடன் சோழ நாட்டிலிருந்து வந்து லீலாவதியை அகற்றி ஆட்சியைக் கைப்பற்றினான். லோகேசுவரனும் கலிங்க வம்சத்தவன் ஆகக்கூடும். லோகேசுவரன் ஏழு மாதங்கள் ஆண்ட பின்னர் பராக்கிரமன் எனும் ஆரியன் அவனைக் கொன்று மீண்டும் லீலாவதிக்கு முடிசூட்டினான். இப்படி மூன்று தடவை விட்டு விட்டு இலங்கையை ஆண்ட மாதரசி எனும் பெருமையைப் பெற்றாள் லீலாவதி.

அவளது மூன்றாவது ஆட்சி தமிழகத்திலிருந்து படையெடுத்து அவளையும் ஆரியன் பராக்கிரமனையும் வீழ்த்திய பராக்கிரம பாண்டியன் எனும் பாண்டிய இளவரசன் வருகையோடு ஏழு மாதங்களில் முடிவுக்கு வந்தது. லீலாவதியின் எதிர்த் தரப்பில் இருந்த ஆரியரின் நம்பிக்கையை வென்ற ஆரிய வம்சத்தைச் சேர்ந்த பராக்கிரம பாண்டியன் இலங்கை மீது படையெடுத்து வந்து ஆட்சியில் அமர்ந்திருக்க வேண்டும்.

பராக்கிரம பாண்டியன் மனுநீதி தவறாத சிறந்த ஆட்சியாளன் என மகாவம்சமும் புகழ்வதால், நிசங்கமல்ல மன்னனின் மறைவுக்குப் பின்னர் நீண்ட காலம் குழப்ப நிலையில் இருந்த பொலனறுவை அரியணையை மூன்றாண்டுகள் தொடர்ச்சியாக அமைதியாக அவன் ஆண்டிருக்கிறான் என்பது அவனது ஆட்சித் திறனைக் காட்டுகிறது. ஆனால் தங்களுக்குப் பெருத்த தலையிடியாக விளங்கிய சுந்தரபாண்டியன் மதுரையை மீட்க முயன்றுகொண்டிருந்த 1215-களில் இன்னொரு பாண்டிய இளவரசன் இலங்கையில் முடிசூடி ஆள்வதை சோழப் பேரரசு அத்தனை விரும்பியிருக்காது. அந்நிலையில் ஈழத்திலிருந்த பாண்டியச் செல்வாக்கை ஒழிக்க அனுப்பப்பட்டவனே கலிங்க மாகோன்.

அண்மையில் திருக்கோணமலையில் கண்டறியப்பட்ட கிவுலக்கடவலைக் கல்வெட்டு, குலோத்துங்க சோழக் காலிங்கராயன் என்ற சோழத் தளபதியின் தலைமையிலேயே கலிங்க மாகோன் இலங்கை மீது படையெடுத்து வந்து வென்று முடிசூடினான் என்பது தெரியவந்திருக்கிறது. எனவே இலங்கை அரசவையில் இருந்த பாண்டிய முடியை அகற்றி வீசவும், அங்கிருந்த ஆரிய ஆதரவு அலையை நீக்கி தங்களுக்குச் சார்பான கலிங்க ஆதரவை மிகைப்படுத்தவுமே கலிங்க மாகோன் களமிறக்கப்பட்டான்.

கலிங்க மாகோன் இலங்கையைக் கைப்பற்றிய அடுத்த ஆண்டான 1216 பாண்டிய அரசு சோழ அரசின் ஆதிக்கத்திலிருந்து மீண்டு சுதந்திர நாடாகின்றது. அன்றிலிருந்து சோழப் பேரரசு சரிவைக் காணத் தொடங்கியதால், இலங்கை அரசில் தலையிடும் அவகாசம் அதற்கு இருக்கவில்லை. மாகோன் காலத்தின் இறுதியில் சாவக நாட்டிலிருந்து படையெடுத்து வந்து சந்திரபானு இலங்கையை சூறையாடிய போது, வாளாவிருக்கவே சோழரால் முடிந்தது. அங்கு மெல்ல மெல்ல கலிங்க வம்சத்தவர் வலுவிழக்க, ஆரிய வம்சத்தின் கை ஓங்க ஆரம்பிக்கிறது. கலிங்கமாகோனும் மறைந்த பின், தெற்கே ஆரிய வம்சத்து சிங்கள அரசுகள் நிலைபெற, பாண்டிய அரசின் ஆதரவுடன் வட இலங்கையில் ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசு தோன்றுகின்றது. தாங்கள் ஆதரவளித்த கலிங்க வம்சம் மறைந்து ஈழத்தீவு முழுமையாக ஆரியவம்சத்தின் கீழ் அமர்வதைக் காண்பதற்கு 1300-களில் சோழப் பேரரசு இருக்கவில்லை. அதன் இறுதி இளவரசர்களையும் இழந்து பாண்டிய அரசின் கீழ் சிற்றரசாகி அது முற்றாக மறைந்திருந்தது.

ஒன்பது முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையான நானூறு ஆண்டுகள் இலங்கை அரசியலில் தவிர்க்கவியலா இடம்பெற்றிருந்த சோழ அரசின் தாக்கம் அதன் பின்னரும் வணிகம், சமூகம், சமயம், பண்பாடு முதலிய துறைகளில் நீடித்தது. சோழமண்டல வணிகர்கள் பதினேழாம் நூற்றாண்டிலும் இலங்கையில் வணிகம் செய்ததும், இங்கிருந்த அரசியலை நன்கறிந்திருந்ததும், ஐரோப்பியக் குறிப்புகளின் மூலம் தெரிகின்றது.

இத்தொடரில் ஈழம் மீதான சோழத்தின் வரலாற்றுத் தாக்கங்களின் முக்கியமான அம்சங்களை மாத்திரம் இயன்றவரை விரிவாகப் பார்த்தோம். இன்றைய அரசியலில் அவை இந்தியா, இலங்கை எனும் இருவேறு நாடுகளாகப் பிரிந்துள்ள போதும், ஈழத்துக்கும் சோழத்துக்குமான உறவு இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் மறையவில்லை என்பதையே வரலாறு சொல்கின்றது, சொல்லும்.

ஈழம் வாழ்க, சோழம் வாழ்க!

(நிறைவு)



thulanchanan.v@thaiveedu.com

# அன்னலட்சுமி இராஜதுரை

## ஈழத்தின் முதல் தமிழ்ப் பெண் 'சாகித்ய ரத்னா'

– தங்கா



மூத்த எழுத்தாளரும் பத்திரிகையாளருமான திருமதி அன்னலட்சுமி இராஜதுரை அவர்களுக்கு 2024-ஆம் ஆண்டு இலங்கையின் உயர் அரச இலக்கிய விருதான 'சாகித்ய ரத்னா' வழங்கப்பட்டிருப்பது பெருமைக்குரிய விடயமாகும். தமிழில் இவ் உயர் இலக்கிய விருதைப் பெறும் முதல் பெண் ஆளுமை இவர் என்பது குறிப்பிடத்தக்கது.




யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த இவர், மாணவப் பருவத்திலேயே வாசிப்பிலும் எழுத்துத் துறையிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவராக விளங்கினார். 1958-ஆம் ஆண்டு 'கலைச் செல்வி'-யில்'அன்னையின் ஆவல்' என்ற கவிதையை 'யாழ் நங்கை' என்னும் புனைபெயரில் எழுதிய அன்னலட்சுமி அதேயா ண்டு தினகரனில் 'இசை இணை த்தது' என்னும் பெயரில் தம் முதல் சிறுகதையையும் எழுதினார்.

1962-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 'வீரகேசரி'-யில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். ஆரம்பத்தில் செய்தி தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்ட இவர் அங்கு வேலை செய்த காலப்பகுதியில் கலை, இலக்கிய நிகழ்ச்சி குறித்தான கட்டுரைகள் பலவற்றையும் எழுதியதோடு மொழிபெயர்ப்புப் பணி யிலும் ஈடுபட்டார். இவரது முயற்சியில் வீரகேசரியில் வெளிவந்த 'மாணவர் கேசரி', 'மங்கையர் அரங்கம்', 'இலக்கிய உலகு' என்னும் பகுதிகள் இவருக்குப் புகழையும் பெயரையும் ஈட்டித் தந்தன. 1966 முதல் 1969 வரை 'ஜோதி' என்னும் குடும்ப வார இதழின் பொறுப்பாசிரியராகவும், அதன் பின் 1971 முதல் 1984 வரை 'மித்திரன் வாரமலர்' இதழின் பொறுப்பாசிரியராகவும் 2000-இற்குப்பின் 'கலைக்கேசரி', 'மங்கையர் கேசரி' ஆகிய பத்திரிகைகளின் பொறுப்பாசிரியராகவும் இருந்தார் வீரகேசரி, மித்திரன் வாரமலர்களில் குறுநாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், நூல் மற்றும் திரைப்படங்களுக்கான விமர்சனங்களையும் எழுதியதோடு நில்லாது கலைஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரை நேர்முகம் கண்டும் அதனையும் ஆவணப்படுத்தினார்.

'நினைவுப் பெருவெளி', 'விழிச்சுடர்' (குறுநாவல்கள்), 'நெருப்பு வெளிச்சம்', 'அன்னலட்சுமி இராஜதுரை சிறுகதைகள்', (சிறுகதைத் தொகுப்புகள்), 'உள்ளத்தின் கதவுகள்' (நாவல்-வீரகேசரி வெளியீடு), 'இரு பக்கங்கள்' (கவிதைத் தொகுப்பு), 'ஈழத்து கலை இலக்கிய ஆளுமைகள்' ஆகியன இவரால் வெளியிடப்பட்ட தொகுப்புகளாகும். இவர் 'தீவாந்தரம்', 'சந்திரனில் சுந்தர்' முதலான சிறுவர் தொடர்கதைகளை முறையே சிரித்திரன், வீரகேசரி-யில் எழுதியுமுள்ளார். ஒலிபரப்புத் துறையிலும் ஈடுபாடு கொண்டு இவர் இலங்கை வானொலிக்காக நாடகங்கள், உரைச் சித்திரங்கள், உரை நிகழ்ச்சிகள் போன்றவற்றை எழுதியதோடு, 'பூஞ்சோலை', 'மகளிர் அரங்கம்' ஆகிய கிராமிய மகளிர் நிகழ்ச்சிகளையும் தயாரித்து வழங்கியவர். B.B.C வானொலியில் 'இலங்கைக் கடிதம்' என்னும் நிகழ்ச்சியையும் ஜெர்மன் தமிழருவி வானொலியில் 'மனோரஞ்சிதம்' என்னும் இலக்கிய நிகழ்ச்சியையும் நடத்தியுள்ளார்.

அறிவிலக்கியவாதியாகவும் ஆக்க இலக்கியவாதியாகவும் செயற்பட்டுவரும் திருமதி அன்னலட்சுமி இராஜதுரை அவர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளமையானது சிறப்பானதும் பொருத்தமானதும் மற்றும் மகிழ்ச்சியளிக்கும் ஒன்றாகவும் அமைகிறது.

info@thaiveedu.com



# யாழ்ப்பாணத்தில் பெயர் சொல்ல மூன்று ஆறுகள்

– இயல்வாணன்

ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் என்பார்கள். மலைகளில் திரளும் மேகம் ஒடுங்கி மழையாகப் பொழிந்து, அந்த நீர் அருவியாகப் பாய்ந்து, அருவிகள் ஒருங்கு சேர்ந்து ஆறாகி, அந்த ஆறு தான் போகும் இடங்களுக்கு அழகையும் செழிப் பையும் கொடுத்துச் செல்லும். காவியங்கள் யாவற்றிலும் நதி கள் பிரதான பகைப்புலமாகவும், பாடுபொருளாகவும் இருந் துள்ளன. இராமாயணத்தில் சரயு நதியும் கங்கை நதியும் பிர தானமாக வருகின்றன. வான்மீகி இராமாயணத்தில் 49 நதிகள் பாடப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் காவிரி நதி வருகின் றது. மதுரைக் காஞ்சியில் வைகை நதி வருகிறது. ஈழத்து இலக்கியத்தில் மகாவலியும், களனி கங்கையும் மாணிக்க கங்கையும் வந்துள்ளன.

'பூங்குறிஞ்சி முகட்டினிலேறி பொழிந்த தெள்ளமுதாகிய வெள்ளம் பாங்கிலாத பரத்தையை நாடி படருவோரிற் பரந் தது பள்ளம்' என்று நவாலியூர் சோமசுந்தரப் புலவர் மலையி லிருந்து அருவி தவழ்ந்து வந்து ஆறு உருவாவதை விபரிப் பார். தனித்த தீபகற்பமாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் இத்த கைய மலையருவி ஆறுகள் எவையுமில்லை.

யாழ்ப்பாணத்தில் கீரிமலை, கம்பர்மலை, கதிரமலை என்று மலையில் முடிகின்ற இடங்கள் இருப்பினும் இவை மலை என்று சொல்லக்கூடிய தகுதியைக் கொண்டிருப்பனவல்ல. ஒரு பிட்டியாக, மேடாக இருந்ததால் இந்தப் பெயர் பெற்றி ருக்கலாம். அவ்வளவுதான். ஆற்றை உருவாக்கும் மலைகள் இல்லாவிடினும் ஆறில்லா ஊராக யாழ்ப்பாணம் இருக்கக்கூ டாதென எமது முன்னோர்கள் கருதினரோ என்னவோ யாழ்ப் பாணத்தில் பெயர் சொல்ல மூன்று ஆறுகளைச் சொல்லிக் கொள்கின்றனர். தொண்டைமானாறு, உப்பாறு, வழுக்கை யாறு என்பனவே அவை மூன்றுமாகும்.

## தொண்டமானாறு:

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்கே வடமராட்சி கிழக்கில் உள்ள ஆழியவளையை அடுத்துள்ள மண்டலாய் என்னுமி டத்தில் ஆரம்பமாகும் தொண்டமானாறு மருதங்கேணி, செம் பியன்பற்று, நாகர்கோவில், அம்பன், குடத்தனை ஆகிய ஊர் களையும் வளப்படுத்தி, முள்ளிப் பாலத்தை ஊடறுத்து மண் டான் வழியாக முப்பது மைல்கள் ஓடி தொண்டமானாறு என்ற பெயருடைய ஊரில் அக்கரை கடற்கரையை அண்டி கடலில் கலக்கிறது. இது உப்புநீரைக் கொண்டது. இதன் நீர்ப்பரப்பு 7300 ஏக்கர் அளவுடையதாகும். தொண்டைமானாறு, தொண் டைமன்னன் வடிகால் என்றும் இது அழைக்கப்படுகிறது. வல்லி நதி என்ற பெயரும் இதற்குண்டு. புகழ்பெற்ற செல்வச் சந்நிதி ஆலயம் இந்த ஆற்றங்கரையில் அமைந்துள்ளது.

திருச்செந்தூரில் இருந்து முருகப்பெருமான் வீரவாகு தேவரை மகேந்திரபுரிக்கு சூரபன்மனிடத்து தூது அனுப்பியதாகவும், வீரவாகுதேவர் இலங்கையின் வல்லி நதிக்கரையில் உள்ள கல்லோடையில் காலடி எடுத்து வைத்தார் என்றும், மீண்டும் திரும்பிச் செல்வதற்கு இதே இடத்துக்கு வந்த போது சந்திக் காலம் ஆகிவிட்டது என்றும், அதனால் முருகப்பெருமானுக் குரிய சந்திப் பூசையை இந்த இடத்தில் செய்தார் என்றும், அந்த இடமே சந்நிதியாக மருவி இன்று செல்வச்சந்நிதி முரு கன் ஆலயமாகத் திகழ்கிறது என்றும் ஆலய வரலாற்றில் சொல்லப்பட்டுள்ளது.

பண்டிதர் சச்சிதானந்தன் எழுதிய 'யாழ்ப்பாணக் காவியம்' 3 பருவங்கள் 38 படலங்கள் 278 பக்கங்கள் கொண்ட உயரிய காவியமாகும். அக்காவியத்திலும் தொண்டமானாறு வருகின் றது. கனகசிங்கையாரியனின் புதல்வர்கள் பரராசசேகரனும், செகராசசேகரனும் தமிழ்நாட்டில் கரந்துறைந்து போர்ப் பயிற் சிகள் பெற்று தொண்டமானாற்றின் அருகே சின்னமலை என்ற இடத்திலேயே வந்திறங்குவதாக இந்நூலில் சொல்லப்பட்டுள் ளது.

தொண்டைமான் என்ற மன்னன் இந்தப் பகுதியில் விளையும் உப்பினை மரக்கலங்களின் வழியாக எடுத்துச் செல்வதற் கும், உள்ளூர் போக்குவரத்துக்குமாக இதனை வெட்டியதாக வும் கர்ண பரம்பரைக் கதைகளாகக் கூறப்பட்டுள்ளது. உள் ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கும் தொண்டமானாறு முக்கிய பங்காற்றுகிறது. யாழ்ப்பாணத்துக்கான குளம் என்ற குடிநீர்த் திட்டத்தை தொண்டமானாறு ஆற்றை இடைமறித்து நீரைத் தேக்கி ஆரம்பிப்பது தொடர்பில் ஆராயப்பட்ட போதி லும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

## உப்பாறு:

பெயருக்கேற்ப உப்பு நீரைக் கொண்டுள்ள இவ்வாறு புத்தூருக்கும் சரசாலைக்கும் இடையே அமைந்துள்ள கப்புதூ என்ற இடத்தில் ஆரம்பமாகி, 12 மைல் தூரம் ஓடி நாவற்குழியில் கடலில் கலக்கிறது. இதனுடைய நீர்ப்பரப்பு 6400 ஏக்கராகும். வெள்ளநீர் வெளியேற்றத்துக்கு பயன்படும் இவ்வாற்றில் மழைகாலத்தையண்டிய குறித்த காலப்பகுதியில் மீன்பிடி நடைபெறும். மழைக்காலத்தில் வண்ணாத்திப் பாலம், கோப்பாய் பாலம், நாவற்குழிப் பாலம் ஆகியவற்றின் கீழாக நீர் பாய்ந்து செல்லும்.

## வழுக்கையாறு:

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரேயொரு நன்னீர் ஆறு வழுக்கையாறு. ஒரு வாய்க்கால் அளவுக்கு இன்று சுருங்கிப்போயுள்ள இந்த ஆறு, அளவெட்டி பினாக்கைக் குளத்தில் ஆரம்பமாகி ஆறு மைல்கள் பயணித்து அராலியில் கடலில் கலக்கிறது. 'யாழ்ப்பாண மாதா மலடியென்று பெயர் கேளாமல் சத்திரசிகிச்சை மூலம் பெற்றெடுத்த குழந்தையிது' என்று இரசிகமணி கனக செந்திநாதன் இவ்வாற்றின் பிறப்பைப் போற்றுவார்.

தெல்லிப்பழை, அம்பனை, பன்னாலை பிரதேசங்களில் மழைக்காலத்தில் சேரும் உபரிநீர் அளவெட்டிப் பினாக்கைக் குளத்தை வந்தடையும். பினாக்கைக் குளம் நிறைந்தவுடன் வழுக்கையாறு ஆரம்பமாகி பெருமாக்கடவை, கந்தரோடை, சங்குவேலி, சண்டிலிப்பாய், நவாலி வழியாக உள்ள குளங்களையும் நிறைத்து, அராலியைச் சென்றடைகிறது.

இலக்கியத்தில் சிறப்புப் பெற்ற ஆறாகவும் இது விளங்குகிறது. செங்கை ஆழியான் எழுதிய 'நடந்தாய் வாழி! வழுக்கியாறு' என்ற நடைச்சித்திரத்தின் மூலமே இது இலக்கிய ஆவணமாகியுள்ளது. சிரித்திரன் வெளியீடாக வெளிவந்த இந்நூலின் கதைக்களம் வழுக்கியாறு ஆரம்பமாகும் இடத்தில் இருந்து முடிவுறும் இடம்வரை இடம்பெற்றுள்ளது. தொலைந்த மாட்டைத் தேடும் படலமாக ஆரம்பிக்கும் இந்நடைச்சித்திரம் ஒரு குறுநாவல் போல சம்பவ விபரிப்புகளுடன் எழுதப்பட்டுள்ளது. இயல்வாணனால் கவிதையொன்றும் இவ்வாறு தொடர்பில் எழுதப்பட்டுள்ளது.

கந்தரோடையை மையமாகக் கொண்டு கதிரமலை இராச்சியம் நிலைபெற்றிருந்ததை வரலாறு கூறுகிறது. உக்கிரசிங்கன் என்ற மன்னன் கந்தரோடையைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி புரிந்து வந்தான் என்றும், இலகுவான போக்குவரத்துக்காக இந்த வாய்க்கால் பயன்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. வழுக்கையாற்றுப் படுகையில் தொல்பொருள் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப காலங்களில் நீரைச் சேர்ப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. பின்னர் வெள்ள நிலைமை, பயிரழிவு, மலேரியா முதலான நோய்களின் தாக்கம் காரணமாக வெள்ளநீரை கடலுக்கு அனுப்பும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்படுகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் 90 ஆயிரம் ஏக்கர் கனஅடி நீர் ஒரு மழையாண்டில் கிடைப்பதாகவும், அதில் 40 ஆயிரம் ஏக்கர் கனஅடி நீர் விவசாயம், குடிநீர், இதர தேவைகளுக்குப் பயன்படுவதாகவும், 50 ஆயிரம் ஏக்கர் கனஅடி நீர் வீணாக கடலில் புகுவதாகவும் புள்ளிவிபரம் ஒன்று கூறுகிறது. அத்தகைய உபரி நீரைக் கடலுக்கு அனுப்புவதில் இந்த மூன்று ஆறுகளும் முக்கிய பங்கினை ஆற்றுகின்றன.

## ஆறே! வழுக்கை நீ வாழ்க!

*ஓடும் மேகம் ஒன்றாகி மலையில்*
*கூடும் வண்மை கண்டிலையே!*
*மூடும் பாறை மேலே ஊற்றாய்*
*பீறும் தகையும் கொண்டிலையே!*
*காரும் கறுத்து வானிடிய மழை*
*தூறும் பொழுதில் நீயுயிர்ப்பாய்.*
*பேரும் கொண்டாய் ஆறெனவே*
*பெருந்தாய்! வழுக்கை, நீ வாழ்க.*

*மண்ணும் குளிரவுன் மடி பெருக்கும்*
*மெல்ல நடந்து சென்றிடுவாய்.*
*நண்ணும் கரையின் சுற்றந் தழுவி*
*நுரைத்துச் சிரித்துச் சென்றிடுவாய்.*
*பொன்னும் பொருளும் சீர் கொண்டு*
*போவாய், காதற் கடல் சேர*
*வண்ணங் கொண்டெமை வளமூட்டும்*
*வடிவே! வழுக்கை, நீ வாழ்க.*

*பாதை மருங்கில் அணி வகுத்துப்*
*பூத்துக் குலுங்கும் மரக்கூட்டம்*
*தாதை இறைத்து மணமூட்டும்*
*தழுவிக் காற்று தாலாட்டும்*
*கோதையர்கள் குருகி னங்கள்*
*குளித்துப் புரள்வர் உன்மடியில்*
*ஓதை உனதோ? கோதையதோ?*
*ஓதாய்! வழுக்கை, நீ வாழ்க.*

*ஆறில்லா ஊருக்கு அழகுபாழ் முதுமொழியை*
*அழித்து யாழ்ப்பாண மங்கைக்கு*
*பேறாய் உதித்துப் பேர் போக்கினையே!*
*பேரரசு கதிரமலை நிலைநிற்க எல்லைச்*
*சீராய் நின்றாய்! உக்கிரசிங்க மன்னன்*
*நாவாய் நகர்ந்து பொருள் தேட*
*ஆறானாய்! வளநகராய் ஆக்கும் நல்ல*
*சூரானாய்! வழுக்கை, நீ வாழ்க.*

*அம்பனை வெளியின் நீர் சேர்ந்து*
*ஆடிப் பினாக்கைக் குளஞ் சேர*
*வந்தனை, பெருமாக் கடவையின் வழியே*
*கந்த ரோடையில் இளைப்பாறி - மெல்லச்*
*சங்குவேலியுள் நுழைந்து வயல் விரித்த*
*சண்டிலிப்பாயில் உறங்கி எழுந்து*
*சங்கரத்தையில் ஏறி அராலியில் நுழைந்தாய்*
*காணலையே! வழுக்கை, நீ எங்கே?*



iyalvaanan@thaiveedu.com



# காமன் கூத்து

## வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலை

- அருணாசலம் லெட்சுமணன்

மனிதகுலம் இயற்கை பற்றி ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கியதன் விளைவாகவே மதங்கள் தோன்றின. தீயைக் கண்டுப் பிடித்த மனிதன் சக்கரத்தையும் கண்டு பிடித்ததன் பின்னரே உலக ஓட்டம் விரைவு பெற்றது. உயிர்களின் தொடர்ச்சி நிலையில் கூர்ப்புக் கொள்கை பற்றிய அவதானம் முனைப்பு பெற்றதாக விளங்குகிறது. உலகில் தோன்றிய முதல் மனிதன் பற்றிய தேடலில் ஆதாம் பற்றிய அவதானம் பொதுவாகக் காணப்படுகிறது. 'ஏவாளே முதல் பிறந்திருக்க வேண்டும்' என்ற வாதமும் ஆதாரங்களைத் தேடிய வண்ணம் தொடர்கிறது. இயற்கையின் கற்பிதத்தோடு வாழப் பழகிய உயிரினங்கள் அதன் சீற்றங்களுக்குப் பயப்படுவதையும், அதற்கேற்றவாறான வாழ்க்கை நெறிமுறைககளையும் தன்வசமாக்கிக் கொண்டன. பகுத்தறிவால் தனது வாழ்க்கை நெறிமுறையை மாற்றிக் கொண்ட மனித இனம் இயற்கையியல் சிந்தனை மீதும் அளவற்ற இணைப்பை தன்வசமாக்கிக் கொண்டது. மனிதன் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் ஊடான மாற்றம் அறிவியல் பூர்வமான சிந்தனைக்கு வழிகோலியது. இயற்கை தந்த பாதிப்புக்களை அனுபவித்த மனிதன் அதனை நேசிக்கவும், பூஜிக்கவும் தலைப்பட்டான். அதன் ஊடாகவே சமயங்கள் பிரவாகம் எடுக்கத் தொடங்கின. மதங்கள் இயற்கை நெறிமுறைகளை நேசிக்கவும், ஒழுக்க விதிமுறைகளை போதிக்கவும் தலைப்பட்டன.

உயிரினங்கள் தோற்றம் பற்றிய தேடுதலின் பின்னணியிலேயே இயற்கையின் மகிமை உணரவும், உணர்த்தவும் படுகிறது. 'நீரிலிருந்து உயிரினங்கள் தோன்றின" என்ற மேலெழுந்த முடிவுகள் ஊர்ஜிதம் ஆனாலும் ஜீன் பற்றியதான அணுகுமுறைகள் அறிவியலின் விருத்தியின் முக்கிய அங்கமாகின்றன. உலகிலுள்ள மதங்களின் அடையாளங்களில் இயற்கை தாவரங்களின் பிரயோகங்கள் தவிர்க்க முடியாத அங்கமாக அமையப்பெற்றுள்ளன. மனித குலத்தின் நெறிப்படுத்தலின் கீழ் இயற்கையை மத நிலையில் இலிருந்து அணுகுமுறை வளர்ச்சிப் பெற்று வந்துள்ளது. அதனிலுள்ள பலவீன அமசங்கள் மதங்களுக்கு எதிரான விமர்சனங்களுக்கு வழிவகுத்தன. எது எவ்வாறாயினும் மதங்கள் என்ற அளவு கோல்களில் இருந்தே மனிதகுல நாகரீகம் விருத்திபெற்று வந்துள்ளமையை அறியலாம்.

உயிரினங்களில் விலங்கினங்கள் தொடர்பான வகைப்பாடுகள் முலையூட்டிகள், பறவைகள், மீனினங்கள், ஈரூடகவாழிகள், நகருயிர்கள் எனும் பெரும் பிரிவுகளுக்குள் வரையறுக்கப்படுகின்றன. எல்லா உயிரினங்களிலும் ஆண், பெண் என்ற வேறுபாடுகள் தவிர்க்க முடியாத அங்கமாகிறது. தான் சார்ந்த இனத்தை விருத்தி செய்யும் தகைமை பாலினங்களின் தன்மைகளில் மிக அவசியமாக உணரப்படுகிறது. இன விருத்தி செயற்பாடுகளுக்கு பொருத்தமற்ற உடலமைப்பு அதிசயத்திற்குரியதாக நோக்கப்படுகிறது. அச்செயற்பாடுகளுக்கு ஒவ்வாத உடல்கள் பலவீனமானதாக பார்க்கப்படுகிறது. அறிவியல் நுட்பங்களின் பிரயோகத்தால் இன்று பெரும்பாலும் அவற்றுக்கு தீர்வுகள் எட்டப்படும் நடவடிக்கைகள் சிறப்பு பெறுகின்றன. முலையூட்டி இனத்தின் பிரதானியாக மனிதர்கள் நோக்கப்படுவது நெடுங்காலமாகவே மரபாகிறது. இதற்கு இனவிருத்தி செயற்பாடுகளில் பின்பற்றப்படும் பண்



பாட்டு சார் நெறிமுறையும் பிரதான காரணமாகிறது.

முலையூட்டிகளின் இனப்பெருக்க செயற்பாடுகளில் ஆண், பெண் சார்ந்த உடலியல் அம்சங்கள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. இருபாலரையும் அடையாளத்தால் வேறுபடுத்தும் அங்கத்தில் ஆண், பெண் குறிகள் அவதானத்திற்குறியதாகும். இவ் அங்கங்களின் ஒன்று சேர்க்கையே இனவிருத்தி செயற்பாடுகளுக்கு அத்தியவசியமாகிறது. இனவிருத்தி செயற்பாடுகளுக்கு பிரதானம் பெறும் உடல் அங்கங்கள் மனிதனால் மதிக்கப்படுகின்ற நிலை உருவாகிறது. அவ் உறுப்புக்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன. அவ் உறுப்புக்களை வழிபடும் மரபு உருவாக்கப்படுகிறது. அதன் ஊடா

கவே சைவசமயத்தவர்களால் லிங்கத்தை வழிபடும் மரபு தோற்றம் பெறுகிறது. சிவலிங்கத்தை மாத்திரம் மேலெழுந்த நிலையில் பார்ப்பவர்கள் அவ் லிங்கத்தை தாங்கி பிடித்திருக்கும் யோனி அடையாளத்தை பார்ப்பதில்லை. லிங்கமும் யோனியும் கலந்த அடையாளமாகவே சைவர்களின் ஏக அடையாளமாக சிவலிங்கம் திகழ்கிறது. அம்மார்க்கத்தின் ஓர் பிரிவாக முருகனைப் பிரதான தெய்வமாக அடையாளப்படுத்தும் நிலையில் கௌமார மதமாக வேல் உருவம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த வேல் உருவமானது லிங்கத்தில் இருந்து யோனிக்குள் உட்செல்லும் ஆயிரங் கணக்கான விந்தணுக்களில் ஓர் அணுவின் வடிவமாக உற்று நோக்கப்படுகிறது. இயற்கையின் நெறிமுறைகளுடன் கூடிய அங்க அடையாளங்களை அடையாளப்படுத்தல் உலகியலை சிந்திக்க வைத்துள்ள விடயமாகிறது.

பாலின பாகுபாடுகள் தொடர்பான அவதானம் உலகியல் செயற்பாடுகளில் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. நாகரீக அடையாளங்களில் மேலைத்தேயம், கீழைத்தேயம் என்ற வகைபாடு முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. இருபாலருக்கும் இடையில் வேற்றுமையைக் களைந்து அப்பாலினங்களின் மேன்மை ஒன்றுக்கொன்று சளைத்தவைகள் அல்ல என்பதை வலியுறுத்தும் அடையாளமாகவே லிங்கம் யோனி, கலந்த உருவம் தகுந்த சாட்சியமாக விளங்குகிறது. அதில் பெண்ணின் அடையாளம் மறைக்கப்பட்டு பார்ப்பதில் உள்ள அரசியல்தான் அறியப்பட முடியாத புதிராக விளங்குகிறது. அதற்கு மேலாக சைவசமயத்தின் அடையாளங்களில் ஒன்றான 'அர்தநாரீஸ்வரர்' அடையாளம் போதிக்கும் அர்த்தங்கள் ஏராளம். உலகில் பாலின பாகுபாடுகளுக்கு பதிலை போதிக்கும் கைங்கரியத்தை மிக லாவகமாகவே போதிக்கின்றமை கவனிக்கத்தக்கது.

தூய நெறியாக பரிணமித்த இந்த மார்க்கத்தினுள் ஆரியவாத முனைப்பின் உட்புகுதல் தமிழர்களிடத்தே பெரிதும் தாக்கத்தை செலுத்தியுள்ளது. தமிழர்களின் பண்பாட்டு நகர்வில் ஆரியவாதத்தின் ஆக்கிரமிப்பினால் உருவான கலப்படத்தை வேறுபடுத்த முடியாத நிலை கவலைக்குறியதாகும். சிந்துவெளி நாகரிகத்தின் எச்சங்கள், அதற்கு மேலாக குமரிக்கண்ட அனுமானங்கள், கீழடி அகழ்வாராய்வு வெளிப்படுத் தும் அறிவியல் நுட்பம் கலந்த முடிவுகள் என்பதெல்லாம் தமிழ் சமூகத்தின் தூய வாழ்வியல் நெறியை தனதாக்கிக் கொண்டமையை வெளிப்படுத்துகிறது. உலகின் உற்பத்தி, மாற்றங்களை உள்வாங்கிக் கொண்ட நிலை, உயிரின் உற்பத்தி, அதன் தொடர்ச்சி நிலை என்பதெல்லாம் காலத்துக்கு காலம் மாற்றமடைந்து வரும் நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டு வருகிறது. வேறுப்பட்ட சூழல் அனுபவங்கள் கட்டமைக்கப்பட்ட அணுகுமுறைகளில் ஏற்பட்ட வேறுபட்ட தன்மைகள் பின்னிப்பிணைகின்ற போது பல மாற்றங்கள் ஏற்படுகிறது. விடுபடுதல், புதிதாக ஒன்று சேர்தல், இணைந்த புதிய வடிவம் என்பதெல்லாம் தவிர்க்க முடியாத விடயமாகிறது.

முலையூட்டிகளின் பிரதானியாக தன்னைத் தகவம் அமைக்கும் மனித குழுமம் தன்னை வழிப்படுத்திக் கொள்வதற்கு ஒழுக்க கோவையை தயார்செய்துக் கொள்கிறது. மனிதன் அறிவியல் நிலையில் அணுகப்பட்டு வந்ததன் விளைவினாலேயே ஏனைய விலங்குகளில் இருந்து வித்தியாசப்பட்டு விளங்குகிறான். காட்டு மிராண்டித்தன வாழ்வையை மூலமாக வாழ்ந்த நிலையில் தன் பாலுறுப்புகளை இலைக்குலைகளில் மறைக்க முற்பட்ட நிலையிலேயே மனித குலத்தின் நாகரிகம் மேம்படத் தொடங்கியது. இலைக்குலைகளுக்கு மாற்று பொருட்கள் தேடத் தொடங்கியதன் நிலையிலேயே பண்பாட்டின் படிநிலைகளின் வளர்ச்சி நிலையும், உற்பத்தி பொறிமுறையின் விருத்தி நிலையும் தொடங்கின. ஆண், பெண் உடல் ரீதியான இணைவு நிலைப் பற்றிய சுய கட்டுப்பாட்டு நிலைகள் பண்பாட்டின் தொடக்கத்திற்கு வழிகோலியிருக்க வேண்டும்.

இயற்கை நெறிமுறைகளுக்கு அமைவான ஆண்,பெண் சேர்க்கை, சேர்க்கையை தூண்டும் விடயங்கள், நியதிகள்



என்பதெல்லாம் காமம் என்ற வரையறைக்குள் உள்வாங்கப்படுகிறது. காமமும் ஓர் சக்தியாக அணுகப்படுகின்ற நிலையில் அதற்கு பொறுப்பாக காமன் எனும் கடவுளர் உருவாக்கத்தில் மனிதன் அக்கறை கொள்கிறான். உலக இயங்கியலில் அறிவியல் மாற்றத்தில் முக்கிய பங்காற்றிய கிரேக்கர்களும் காமன் தொடர்பிலான எண்ணக்கருவை வளர்த்தவர்களாக விளங்குகிறார்கள். அதன் காரணமாகவே தமிழில் காமன் என அழைக்கப்பவதை கிரேக்கர்கள் 'இரான்' என அழைத்து வந்துள்ளார்கள். இவ்வாறே கிரேக்கர்களுக்குச் சவாலாக விளங்கும் ரோமானியர்களின் பிரயோகத்திலும் காமன் கைக் கொள்ப்பட்டு வந்துள்ளான். கிரேககர்களால் காமன் 'கூப்பிட்' எனவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளான். இயற்கை நெறியியலுக்கு அமைய பொதுத்தன்மை வாய்ந்ததாகவே காமன் தொடர்பான அவதானம் விளங்குகிறது.



சிந்துவெளி நாகரிகத்தோடு காமன் தொடர்பான எண்ணக்கரு கவனத்தைப் பெற்றுள்ள நிலையில் வேதகாலமும் அவ்விடயம் தொடர்பில வலுவான விடயத்தை வலியுறுத்துகிறது. சங்ககால வாழ்வியல் முறையில் காதல் மிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்நிலையில் காமம் மிக முக்கிய அளவுகோலாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. சங்க மருவிய காலத்தின் பின்னர் ஆரியவாதம் தூய தமிழ் மரபோடு உள் நுழைகின்றமை கவனிக்கத்தக்கது. இந்நிலையில் காமன் தொடர்பான அணுகுமுறையோடும் ஆரிய மேலாதிக்கம் இணைகின்ற நிலை தவிர்க்க முடியாததாகிறது.

உலக சுழற்சி ஓட்டத்தில் புலம்பெயர்வுகள் பல்வேறு மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளன. பிரித்தானியர்களின் சாம்ராஜ்யத்தை வளப்படுத்தும் நோக்கில் தென்னிந்தியாவில் இருந்து தமிழர்கள் இலங்கை உட்பட தென்கிழக்காசிய நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இலங்கை மற்றும் இந்தியாவின் நிலத்தொடர்பு பண்பாட்டு அமசங்களோடும் தொடர்புபடுகிறது. பின்னர் பல ஆண்டுகள் சென்ற நிலையில் மேற்கத்தேயரின் வரவு தென்னாசிய அரசியலில் பல மாறுதல்களை ஏற்படுத்துகின்றன. அதன் தொடர்ச்சி நிலையில் இலங்கையில் நிலைகொள்ளும் இந்திய வம்சாவளி மக்கள் தொடர்பான அவதானம் ஏற்படுகிறது. இலங்கைக்கான புலம்பெயர்வு இம்மக்களில் இன்று வரையில் தாக்கத்தை ஏற்படுகிறது. தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கான புலம் பெயர்ந்து இருநூறு வருடத்தை தாண்டியுள்ள நிலையில், அவர்களது இருப்பு தொடர்பிலான விடயம் முறையாக அணுகப்படாமலே இருக்கின்றமை கவனிக்கத்தக்கது. இருநூறு வருடங்களை கடந்துள்ள நிலையில் அச்சமூகம் தொடர்பிலான அடையாளப்படுத்தல் தொடர்பான கவனம் முக்கியத்துவம் பெறுகிறது. சட்ட ஏற்பாடுகளில் 'இந்திய வம்சாவளி தமிழர்' என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அறுபதுகளின் பின்னர் ஏற்பட்ட அறிவு சார்ந்த எழுச்சி நிலையின் தூண்டுதலால் 'மலையகம்' என அடையாளப்படுத்தும் முனைப்பு விரிவுபெறுகிறது.

சட்ட ரீதியான பெயரை விட வழமையாக அழைக்கும் செல்லப் பெயரில் ஈர்ப்பு அதிகமாக காணப்படும். மலையகம் என்ற பிரயோகமும் அவ்வாறான எண்ணக்கருவாகவே வளர்ச்சி பெற்று வந்துள்ளது. மலையகம் என்பது பிரதேச எல்லைகளைக் கடந்து எண்ணரீதியில் கட்டமைக்கப்பட்டே நிலைபெறுகிறது. அடிப்படையாக இருந்த வாழ்விடச் சூழல் மீதான பற்றுணர்வுடன் மலையகம் என்ற பதம் விரிவுபெறுகிறது. அச்சமூகம் சார்ந்த அடையாளப்படுத்தல்கள், இலக்கியங்கள், கலைகள், அரசியல், கல்வி, மற்றும் இன்னோரன்ன விடயங்கள் தொடர்பில் கவனத்தை பெறுகின்றன. மலையகத்தின் கலை வடிவங்கள் தனித்துவ அம்சங்களோடு கட்டமைக்கப்பட்டுள்ளது. கூத்து கலை என்பது மிக நீண்ட காலம் பயில் நிலைக்குரிய தன்மையைப் பொருந்தியுள்ளது. அவ்வகையில் மலையக மக்களின் நேசிப்பிற்குரிய கூத்துகள் முக்கூததுக்கள் என அடையாளப்படுத்தப்படுகிறது. அவையாவன காமன் கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் ஆகியனவாகும். இவற்றுள் காமன் கூத்து மலையக மக்களால் மிக நேசிப்பிற்குரியதாகவும் தனித்துவமான பயில் நிலையிலும் அணுகப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. மலையக மக்களின் தனித்துவ அடையாளமாகத் திகழும் காமன் கூத்து பற்றிய உள்ளடக்கம், பிரயோகம், முக்கியத்துவம், தெளிவுகள், விளக்கங்கள், நிலைமாற்றங்கள், தொடர்பிலான அவதானத்தோடு இத்தொடர் பரிணாமம் பெறும்.

•

காமன் பண்டிகை ஒவ்வொரு ஆண்டும் மாசி மாசம் அமாவாசை முடிந்து அடுத்து வரும் மூன்றாவது நாள் காமன் ஊன்றி, காப்புக்கட்டுதல் செயற்பாடுடன் காமன் கூத்தை அனுஸ்டிக்கும் மரபு காணப்படுகிறது. தோட்டங்களில் கோயில்களில் வருடாந்த திருவிழாவைப் போலவே ஒவ்வொரு வருடமும் காமன் கூத்தை அனுஸ்டிக்கும் நடைமுறை

பின்பற்றப்படுகிறது. சில தோட்டங்களில் மாசி மாதத்திற்குள் ஏதாவது ஓர் நாளை தெரிவு செய்து காமனை ஊன்றும் செயற்பாடுகளை மேற்கொள்வார்கள். தோட்டங்களில் காமன் கூத்தை நடத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தை 'காமன் பொட்டல்' என அழைப்பார்கள். இப் பொட்டல் பொதுவாக பரந்த நிலப்பரப்பாக காணப்படும். ஆலயத்திற்கு அண்மைய வளாகமாக காமன் பொட்டல் அமைவதுண்டு. சில தோட்டங்களில் கோயில் வளாகங்களிலும் காமன் பண்டிகை இடம்பெறுவதுண்டு. இவ்வாறு அமையப் பெறும் காமன் பொட்டல்கள் 'முச்சந்தி', 'நாலுரோட்டு' என்ற பிரயோகத்திலும் அழைக்கப்படுவதுண்டு. மூன்று அல்லது நான்கு வீதிகள் ஒன்றோடு ஒன்று இணையும் சந்திகள் விசாலமான பரப்புகளாக அமைவதுண்டு. அதன் காரணமாகவே இவ்வாறான சந்தி இடங்களைத் தெரிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொதுவாக தமிழர்களில் முகூர்த்தக்கால் ஊன்றும் நடைமுறை பின்பற்றப்படுவது வழமையாகும். தோட்டங்களில் திருமணம், பூப்புனித நீராட்டு விழா போன்ற மங்கள் நிகழ்வுகளுக்கு பந்தல் அமைப்பதும் வழமையாகும். லயக்குடியிருப்புகளின் உள்ளே இடவசதியைக் கவனத்தில் கொண்டு, மங்கள நிகழ்வு இடம் பெறும் வீட்டின் பிரதான வீதிக்கு முன்புறமாக இவ்வாறு தற்காலிக கொட்டில் அமைப்பதுண்டு. இப்பந்தலில் வைத்தே சபை கூடும் நடைமுறை நெடுநாட்களாக பின்பற்றப்பட்டு வந்தன. ஆரத்தி எடுத்தல், நிகழ்வுக்கு பொட்டு வைத்து வரவேற்றல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறுவதுண்டு. பந்தல் நடைமுறை என்பது மலையக மக்களால் வெவ்வேறு நிகழ்வுகளுக்கு வெவ்வேறுபட்டவகையில் பயன்படுத்தப்படுவதுண்டு. தனிப்பட்ட வீடுகளில் ஏற்படும் மங்கள் நிகழ்வைப் போலவே மரண நிகழ்வுகளிலும் பந்தல் அமைப்பதுண்டு. அவ்வாறே ஆலயத் திருவிழா, காமன்கூத்து, மற்றும் கலை நிகழ்வுகள், மலைசாமி, கௌவாத்துசாமி, மற்றும் சிறுதெய்வ வழிப்பாட்டுத் தளங்களிலும் பந்தல் அமைக்கும் செயற்பாடுகள் இடம்பெறுவதுண்டு.

தோட்டங்களில் அமைக்கப்படும் பந்தல்கள் அவ்வவ் தேவைகளைப் பொறுத்து ஆற்றப்படும் கருமங்களைப் பொறுத்து வித்தியாசப்படும். தோட்டங்களில் காணப்படும் பொது செயற்பாடுகளைக் கட்டமைக்கும் அமைப்புகள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. பொதுவாகத் தோட்டங்களில் வசிக்கும் குடும்பங்களில் இடம் பெறும் ருதுசாந்தி விழா, திருமண விழாக்களின் அழைப்பிதழ்களில் தோட்ட கமிட்டி முதல் தொண்டர், மாதர் சங்கம் வரைக் குறிப்பிடப்பட்டிருக்கும். இது அத்தோட்டங்களில் காணப்படும் பொதுநலன் கருதிய செயற்பாடுகளின் அடையாளமாகத் திகழ்ந்தது. அத்தோட்டத்தில் நிலவும் ஒற்றுமைத் தன்மையைப் பறை சாற்றுவதாக அமையப்பெறும். தோட்ட கமிட்டி என்பது அவ் ஊர் நன்மையில் பாதுகாப்பில் கரிசனை கொண்ட அமைப்பாக திகழ்ந்தமை கவனிக்கத்தக்கது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள தொண்டர்கள் பந்தல் அமைக்கும் செயற்பாட்டில் முக்கிய இடம் வகிப்பார்கள். ஊரில் சலவைத் தொழிலில் ஈடுபடும் மேஸ்த்திரி வழங்கும் 'மாத்து' எனப்படும் வேட்டி அல்லது சேலைகள் பந்தலின் மேற்புறத்தில் கட்டுவதுண்டு. அவற்றைக் கட்டுவதற்கும், கழற்றுவதற்கும் சில நடைமுறைகள் பின்பற்றப்படுவதுண்டு. மாத்து கட்டும் நடைமுறை ஆலயங்களில் அமைக்கப்படும் பந்தல்களிலும், திருவிழாக்களில் அமைக்கப்படும். அம்மன் கரகம் பாலிக்கும் நிகழ்வுகளிலும் அன்னதான செயற்பாடுகளிலும் மாத்து நடைமுறை பின்பற்றப்படுகின்றது.

வீடுகளில் இடம் பெறும் மங்கள நிகழ்வுகளில் ருதுசாந்தி விழாவும் ஒன்றாகும். அந்நிகழ்வுக்கு அமைக்கப்படும் பந்தலில் தாய் மாமன்கள் சீர் கொண்டு வரும் களமாகவும், அச்சீரைப் பெற்றுக் கொள்ளும் களமாகவும் அமையப் பெறுவதுண்டு. "தாய்மாமன் சீர்" எனப்படுவதில் பருவமடைந்த பெண்ணின் தாயின் சகோரதரர்கள் சீர் கொண்டுவருவதுண்டு. அவ்வாறு கொண்டு வரும் சீரிவரிசையில் (ஆடு) கிடாவும் ஒன்றாகும். அவ்வாறு கொண்டு வரும் ஆட்டை பந்தலில் கட்டும் நடைமுறை பின்பற்றப்படுவதுமுண்டு. சீர் கொண்டு வரும் மாமாமார்களை மாலை அணிவித்து வரவேற்பதும் இப்பந்தலிலேயே இடம்பெறும். அவ்வாறே குடும்ப நிகழ்வில் கட்டாயமாகத் ' தோட்டக் கமிட்டியினர், இளைஞர் அமைப்பினர், மாதர் சங்கத்தினர்கள், தொண்டர் அமைப்பினர் அனைவரும் இணைந்து பரிசுப் பொருளுடன் வருகைத் தருவார்கள். இவ்வாறு வருகைத்தரும் குழுவினரைப் பந்தலில் வைத்தே வரவேற்பதுடன் பரிசுப் பொருளை பரிமாற்றும் களமாகவும் இப்பந்தல் அமைவதுண்டு. பின்னர் வீட்டினுள் அமைக்கப்பட்டுள்ள விருந்துபசார களத்தில் உபசார நடவடிக்கைகள் இடம்பெறும்.

திருமண வீடுகளிலும் பந்தல்களில் இடம்பெறும் சம்பவங்கள் மிக சுவாரஸ்யமிக்கதாக அமையப்பெறும். புதுமணத் தம்பதிகளை அழைத்து வரும்போது அவர்களை ஆராத்தி எடுப்பதற்காக நிறைகுடமொன்று அலங்காரத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். கோதுமை மாவினால் செய்யப்பட்ட விளக்கினால் இருவரையும் ஆராத்தி எடுப்பார்கள். மணமகன் வீட்டிற்கு வரும்போது மணமகளுக்கு மைத்துனி முறையானவரே இவ்வாறு ஆரத்தி எடுப்பார். ஆரத்தி எடுத்து நிறைவடைந்த தன் பின்னர் மணமகளிடம் ஆரத்தி செய்த குடத்தைக் கொடுத்து விடுவார்கள். பின்னர் கேட்கும் தொகையை கொடுத்ததன் பின்னர்தான் வீட்டினுள் செல்ல முடியும். இதே நிலைமை மணமகள் இல்லத்திற்கு செல்லும் போது மணமகனுக்கும் இந்நிலைமை இடம்பெறுவதுண்டு. இவ்வேளைகளில் பல சுவாராஸ்யமான சம்பாஷனைகள், வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறுவதுண்டு. முற்பட்ட காலங்களில் கேட்கப்படும் விடுகதைகளுக்குச் சரியான விடைகளை கூற வேண்டிய நடைமுறைகளும் பின்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காமன் ஊன்றுதல் செயற்பாடு என்பதும் முகூர்த்த கால் ஊன்றுதல் செயற்பாடுகளை ஒத்ததாகவே அமையப்பெறுகிறது. காமன் கூத்து நடவடிக்கையை ஒருங்கிணைத்து நடத்துபவரை அண்ணாவியார் என அழைப்பதே வழமை. மாறாக மலையகத் தோட்டங்களில் காமன் வாத்தியார் 'காமன் மாஸ்டர்' என்றே அழைக்கப்படுகிறார். காமன் மாஸ்டர் காமன் கூத்தோடு தொடர்பு பட்டவர்கள், தோட்டக்கமிட்டி தலைவர்கள், கங்காணிகள், கோயில் கமிட்டியினர், வாலிபர்கள், மாதர் சங்கத்தினர்கள், பொதுமக்கள் ஆகியோர் ஒன்றிணைந்து காமன் ஊன்றும் செயற்பாட்டில் பங்கேற்பார்கள். தோட்டங்களில் காமன் மாஸ்டர் அனைவராலும் மதிக்கப்படுபவராகத் திகழ்வார்கள். அவ்வாறே தோட்டங்களில் பஜனை மாஸ்டர், பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர் அனைவரின் மதிப்பிற்குரியவர்களாகத் திகழ்வார்கள்.

காமன் ஊன்றும் தளம் காமன் பொட்டலில் திண்ணையாக வடிவமைக்கப்பட்டிருக்கும். திண்ணை என்பது மலையக மக்களை பொறுத்தவரையில் மிக முக்கிய களமாக விளங்குகிறது. பல மலையக நாட்டார் பாடல்களில் திண்ணைகள் சித்த

ரிக்கப்பட்டிருப்பதை அறியலாம். மலையக நாடகங்களை அரங்கேற்றிய இடங்களாக இத்திண்ணைகள் விளங்குகின்றன. காமன் பொட்டலில் இத் திண்ணையைத் தொடர்ச்சியாகவே காணக்கூடியதாக இருக்கும். காமன் நடுவதற்கான ஆயத்தங்களோடு தேவையான பொருட்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். ஏலவே குறிப்பிட்டது போல தூய தமிழ் பிரயோகங்களை ஆரியவாத முனைப்பு ஆட்கொண்டிருக்கும். புனைவுகளும் இணைவுகளும் தவிர்க்க முடியாத விடயங்களாக அமையப்பெற்றிருக்கும். அதன் விளைவுளாக இங்கும் விநாயகர் வழிபாடு தொடர்பான அவதானம் வலுப்பெற்றுள்ளது. அதன் தொடர்ச்சி நிலையில் விநாயகரை வணங்கிய நிலையிலேயே காமன் ஊன்றும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

•

*ஓம் என்ற அச்சரத்தில் ஒயிலாகவே இருந்து*
*ஓதும் சிறு பிள்ளையாரே உம்மை நாம் பூசை செய்து*
*ஓடி வனம்புகுந்து நாடி மலரெடுத்து*
*ஒசந்த மலைத்தேனும் இசைந்த பிலாசுளையும்*
*ஓமருகை கொண்ட தும்பை வேரும் மரிக்கொழுந்தும்*
*அத்தனையும் கொண்டு வந்து உன் பாதம் தனில் வைத்து*
*கனகாபிசேகம் செய்து கனகப்பட்டால் துடைத்து*
*சாம்பிராணி தூபமது சதிராக நான் கொடுத்தேன்*
*சதிராக நான் தொடுத்தேன் எங்கள் செல்ல நல்ல பிள்ளையாரே...*

காமன் கூத்து பாடல் ஊடாகவே நகர்த்தப்படுக்கிறது. இக்கூத்தில் பிரதான இசையாகத் தப்பிசையே இசைக்கப்படுகிறது. தப்பிசைக்கும் கலைஞர்கள் இக்கூத்தில் தவிர்க்கமுடியாத அங்கமாக விளங்குகிறார்கள். தப்புடன் சால்ராவின் பங்கேற்பும் முக்கியமாக விளங்குகிறது. மேற்குறித்த பாடலின் பின்னர்தான் தப்பிசை முழங்க ஆரம்பிக்கும். காமன் ஊன்றுதல் செயற்பாட்டு ஆயுத்த வேளையில் இக்கூத்தில் இசைக்கப்படும் தப்புகளுக்கும் பூசை செய்ததன் பின்னரே இசைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. தொடரும் தப்பிசையோடு விநாயகர் பாமாலை தொடர்கிறது.

*முந்தி முந்தி விநாயகரே தந்தி முகத்தோனே*
*மூலாதார குண்டமே நாலாம் கலியுகத்தில்*
*முச்சந்தி வீதியிலே வச்ரமணி பீடமதில்*
*மூன்று தேங்காயுடைத்து வைத்து ஞான வேதங்கள் ஓதி*
*முப்புரம் சேர்ந்ததொரு கற்பூரம்தான் கொழுத்தி*
*முன்னால் கற்பூரமது பின்னால் பட்டாடை கட்டி*
*முந்தி விநாயகர்க்கு பந்தலிட்டு வாழைமரம் கட்டி*
*இடையில் சலங்கை கல கல எனவே*
*தலையில் கிரீடம் பள பள எனவே*
*முத்தினால் ஆபரணங்கள் பத்தரை மாற்றுத்தங்கம்*
*பதம் பொன்னால் இளைத்த இசைந்த பொன் மேசை*
*அவர் ஆசனங்களை விரித்து அமர்ந்கொண்டாரே*
*விக்கினர்க்கு முன்பாக வேண்டியதைக் கொண்டு வந்து*
*படைக்க நல்ல பச்சரிசி பதிங்கல ஆயிரமாம்*
*உடைக்க நல்ல தேங்காய் ஒன்பது நூறாயிரமாம்*
*காய்கனி நூறாம் கடலை பதிங்கவமாம்*
*மிக்க நல்ல எல்லுருண்டை விளாங்கனியும் கண்டார்*
*அப்பலமும் தோசை அதிரசமும் கொண்டு வந்து*
*அத்தனையும் கொண்டு வந்து சித்தி விநாயகர்க்கு*
*அடிவணங்கி நமஸ்கரித்து முடி வணங்கி நான் பாட*
*அருள்புரிய வேண்டுமையா எங்கள் ஆனைமுகப் பிள்ளையாரே*

ஞானத்திற்கான கடவுளராக முருகன் சித்தரிக்கும் மரபு தமிழர்களிடத்தில் நிலைப்பெற்றமை அறிந்ததே. ஆரியர்களின வருகையின் பின்னர் அதன் மரபு சார்ந்த முன்னெடுப்புகள் உள் நுழையப்பட்டுள்ளதை இங்கும் நோக்கலாம். சரஸ்வதி கல்வியின் கடவுளராகச் சித்தரிக்கப்படும் நிலையில் அவ்வாற்றலைத் தமக்கு தரவேண்டும் என்ற முனைப்பில் சரஸ்வதியிடம் அண்ணாவியார் மன்றாடும் வகையில் அமைந்த பாடல் பின்வருமாறு அமைகின்றது. சரஸ்வதி மீதான பற்றுதல் உணர்வில் மலையக மக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சரஸ்வதி என்ற பெயரை வைப்பதுடன் சரஸ்வதியைக் குறிக்கும் கலைவாணி, சரசு ஆகிய பெயர்களின் மீது அக்கறை கொண்டுள்ளதையும் அறிய முடிகிறது. காமன் மாஸ்ட்டரால் பின்வருமாறு பாடல் உரத்து ஒலிக்க கேட்கலாம்.

*செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் சரஸ்வதியே*
*வீணை கரமுடைய வித்தகியே சரஸ்வதியே*
*கல்விக் கரசியரே காகுந்தன் சோதியரே*
*கருத்தாக என் மனதில் விருந்தாக குடியிருந்து*
*காமன் கதைபாடக் கருணை மழை பொழிய*
*கார்வண்ணன் தங்கையரே உன் காலடியை*
*வணங்க என் நாவு தவறாமல் நல்லோசை தாருமம்மா*
*என் குரலில் குடியிருந்து குரலோசை தாருமம்மா*
*சொற்சோரம் இல்லாமல் துணை இருந்து காருமம்மா*
*இச் சரிதை முடியுமட்டும் என் பக்கத் துணை இருந்து*
*பாடவகையறியா பாலனை காருமம்மா.*
*எழுத வகையறியா ஏழையைக் காருமம்மா*
*ஏடு வகையறியா எழுத்தாணி சாயாமல்*
*கேட்டுத் தவறாமல் குருத்தோலை வாடாமல்*
*காரும் கருணை வைத்து கலைவாணி சரஸ்வதியே!*

•

காமன் கூத்துக் கலையை போதித்தவரை நினைவு கூறும் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. முதல் வணக்கத்திற்குரிய பிள்ளையாரையும், கல்விக்குரிய கடவுளரான சரஸ்வதியை வணங்கும் மரபும் எல்லா கலைகளுக்கும் உரித்துடையதாகும். அவ்வாறே இக்கலைகளைப் போதித்தருளிய குருமார்களை நினைத்து வழிபடும் மரபும் அவதானத்திற்குரியதாகும். இக்கூத்தில் அண்ணாவியராக விளங்கும் காமன் மாஸ்டர் தனக்கு இக்கலையைப் போதித்து உதவியவர்களை நினைவு கூறும் பாடல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இப்பாடலில் குருவானவர்களின் பெயர்கள், அவர்களின் சிறப்புகள் இடம் பெறுவதுண்டு. பொதுவாக இக்கூத்தில் செவி வழியாகப் பேணப்பட்டு வந்த பாடல்களே இசைக்கப்படுவதுண்டு. சில நேரங்களில் பாடுபவர் பாடலினுள் புதிய சொற்பிரயோகங்களை இணைத்து பாடும் சந்தர்ப்பங்களும் உள்ளன. தங்கள் குருவானவர்கள் தொடர்பில் பாடப்படும் பாடல்கள் அண்ணாவியர்களது புனைவாக அமைவதுண்டு. எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலை எடுத்து நோக்கலாம்.

*அக மகிழ கிருபை வைத்து புகழ் கவிதனை அமைத்து*
*அரகரா என் குருவே திருவடி தரும் உருவே*
*அஞ்ஞானத்தை எனக்கு மிஞ்ச மந்திரம் தனக்கு*
*அருள் செய்ய வேண்டுமென்று துதி செய்தேன் உண்மையென்று*
*அன்புள்ள என் குருவாம் அருமைமிகு கோபாலன் அவர் திருவாம்*
*அடிப்பணிந்து திருவடியை நிதம் வணங்கும் உன் சிஷ்யன்*
*உன் அருள் வேண்டுமையா அனுதினமும் உன்னை துதிக்கிறேன்*
*தலை வணங்குகிறேன் அடியேன் உன் பாதம் தொழுகிறேன்.*

*வாரி வழங்க வேண்டுமையா வார்த்தைகள் தவறாமல்*
*பாடல்கள் எல்லாம் நினைவில் நின்றிட வேண்டுமையா*
*படிமுறைகள் ஒவ்வொன்றும் பலன் தரல் வேண்டுமையா*
*நின்னை நினைத்து பணிந்தேன் உந்தன் அருளால்*
*அடுத்த அடிகளைத் தொடர்கிறேன்*
*வாழ்த்தி அருளுமைய்யா வரத்தை நீ தாருமையா.*

மேற்குறித்தவாறு பாடல்கள் பல காணப்படுகின்றன. அண்ணாவியர்களது புலமையும் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. சில நேரங்களில் நிகழ்வு இடம்பெறும் போதே சொற்களைப் புனைந்து பாடும் வல்லமையுடைய அண்ணாவியர்களும் உள்ளார்கள். குருவை மதிக்கும் பாங்கு எல்லா கலைகளிலும் வலியுறுத்தப்படுகிறது. இக்கலையில் அவ்விடயம் மிக அவசியமானதாகவே உணர்த்தப்படுகிறது. காமன் கூத்துக் கலையை குருவின் அருகில் இருந்தும் அவரின் செயற்பாடுகளுடன் இணைந்து செயற்படுகின்ற போதே இக்கலையை கற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது. இக்கலையில் பாண்டித்தியம் பெற்றிருந்தாலும் கூட குருவாக்கு பெற்றவர்களால் மாத்திரமே மாஸ்டராக உயர்வு பெறும் வாய்ப்பு ஏற்படுகிறது. தனது குருவிடமிருந்து குருவாக்கு பெறுவதற்கு சிஷ்யர்கள் பல பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பல சிஷ்யர்கள் இருந்தாலும் தன் மனதை வென்றவர்களுக்கே குருவானவர் குருவாக்கு வழங்குவார். காமன் மாஸ்டர் தனது பிள்ளைகளுக்கும் தனது உறவினர்களுக்கும் மாத்திரம் குருவாக்கு வழங்கும் அகவயம் சார்ந்த செயற்பாடுகளும் கவனிக்கத்தக்கது. குரு மீதான முக்கியத்துவத்தை வலியுறுத்திய நிலையில் காமன் ஊன்றும் செயற்பாடு முன்னெடுக்கப்படும்.

தப்பிசை முழங்க அண்ணாவியாரின் பாடல் ஒலிக்கத் தொடங்கும். இப்பாடலும் பிரதேசங்களைப் பொறுத்து வேறுபடும். பாடலில் சொல்லாடல்கள் வேறுப்பட்ட போதிலும் காமன் ஊன்றுவதற்கான அறிவுறுத்தல்களைத் தெளிவுறுத்தவதாகவே பாடலின் உள்ளடக்கம் அமையப்பெறும்.

*அவனி ஐம்பத்தாறு தேசம் புவனம் பதிநான்குலோகம்*
*ஆனதோர் கலியுகத்தில் மானிடர் எல்லோரும் கூடி*
*அன்று வரும் வருடமதில் சென்று வரும் மாசிமாதம்*
*அமாவாசை கழித்து அடுத்து வரும் மூன்றாம் பிறைதனிலே*
*ஆனவளர் பிறையில்தான் முச்சந்திதனில்*
*ஆயன்மகன் மன்மதனை வெகு நேயமுடன் உண்டு பண்ணி*
*அழகாய் வளர்த்ததொரு ஒயிலான பேய்க்கரும்பு*
*அன்புள்ள கொட்டத்தண்டும் இன்பமுள்ள மூங்கில் கிளை*
*அதன் மூன்றையும் சேர்தது வைக்கல்பிரி எடுத்து*
*வைக்கல் பிரியதனால் உச்சிதமாய் சுற்றி வைத்து*
*அரிராமர் திருநாமம் எருராட்டியில் சாற்றி*
*வெள்ளைத் துயில் ஒரு யார் துள்ளிதமாய் சாற்றி*
*ஒன்பது வகை தானியங்கள் மங்களமாய் சாற்றி*
*காதோலை கருவமணி கனமுடனேதான் சாற்றி*
*மாவிலைத் தோரணங்கள் மலர் மாலை தொங்கவிட்டு*
*கம்பத்தின் முற்றிலும் கனகமலர் சாற்றி வைத்து*
*காராம் பசும்பாலும் கங்கையில் தீர்த்தங்களும்*
*கனமுடனே வைத்து திடமான மேடையிலே*
*அழகான கம்பம் நட திடமான குழி பரித்து*
*காராம் பசும்பால் கனமுடனேதான் ஊற்றி*
*கங்கையின் தீர்த்தமும் கனமுடனே ஊற்றி*
*கற்பூரதீபம் கன விளக்கும் ஏற்றி வைத்து*
*வெள்ளிப்பணம் அதிலே துள்ளிதமாய் போட்டு*
*அழகாக காமன் நட்டு திடமான மேளம் தட்டி*
*ஆயன் மகன் மன்மதர்க்கும் அன்னரதி தேவியர்க்கும்*
*மங்களம் காப்பு கம்பத்திலே கட்டி வைத்து*
*காப்பரிசிதான் வழங்கி கற்பூரம் தீபமிட்டு*
*சாம்பிராணி தூபமது சதிராகதான் கொடுத்து*
*ஹரி ஓம் சிவாயாவென்று பரிசேனையும் தனித்து*
*அடி வணங்கி நமஸ்கரித்தோம் ஆயன் மகன் மன்மதரே*

பந்தல் அமைப்பதற்கு முன்பதாக காலைப்பொழுதில் சூரிய உதயத்தின் பின்னர் சுப நேரத்தை கணித்த நிலையில் முகூர்த்தக்கால் ஊன்றும் நடைமுறை பின்பற்றப்படுகிறது. இவ்வாறு முகூர்த்தக்கால்களாக ஊன்றிய மரத்தூணும் ஒருத் தூணாகக் கொள்ளப்படும். இத் தூணையும் கணக்கிட்ட நிலையில் ஒற்றை எண் வரும் வகையில் தூண்கள் கணக்கிடப்பட்டு பந்தல் அமைக்கப்படும். இவ்வாறு முகூர்த்தக்கால் ஊன்றும்போது மேற்குறித்த பாடலில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல் பின்பற்றப்படுகின்றமை கவனிக்கத்தக்து. இவ்வாறு ஊன்றப்படும் முகூர்த்தக்காலில் இருந்து காமன் ஊன்றும் நடைமுறை வேறுபடுவதை அவதானிக்கலாம். இங்கு கிளைகளையுடைய மரமே தரித்து ஊன்றப்படும். கிளைகளையுடைய தாவரம் என்ற வகையில் கொட்டமுத்து தாவரமே பொருத்தமாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு அந்திப் பொழுதிலேயே நல்ல நேரம் கணித்து அந்த நேரத்தில் ஊரவர்கள் ஒன்றுக்கூடி காமன் நடும் செயற்பாட்டில் ஈடுபடுவார்கள்.

குறித்த வருடத்தில் காமன் கூத்தில் வேடங்களை தரிப்பதற்கு விரும்புபவர்கள் மிகுந்த பக்தி உணர்வோடு இக்களத்தில் காணப்படுவார்கள். பாத்திரங்களை அண்ணாவியார் தெரிவு செய்து வழங்குவார். சிலர் குறித்த பாத்திரத்தை ஏற்பதற்கு நேர்த்திக்கடன் வைக்கும் வழமையும் காணப்படுகிறது. நேர்த்திக்கடன் வைத்தவர்கள் மதன், ரதி பாத்திரங்களுக்கு காப்பு கட்டும் வாய்ப்பு ஏற்படும். இவ்வேடங்களைத் தரிப்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் விரும்புகிற பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலமாக தெரிவு இடம்பெற்று அவர்களுக்கு காப்பு கட்டும் நடைமுறையும் பின்பற்றப்படும். இக்களத்தில் மதன், ரதி பாத்திரத்தோடு கோமாளி என்ற பாத்திரமும் தெரிவு செய்யப்படுவதுண்டு. காமன் கூத்தை அடுத்து வரும் நாட்களில் நிகழ்த்துவதற்கு இம் மூன்று பாத்திரங்களுமே அவசியமானதாக அமையப்பெறும். அத்தோடு 'மாத்துக்கட்டு' என்ற விடயமும் கவனத்தில் கொள்ளப்படுகிறது. அடுத்து வரும் நாட்களில் பல தூரங்கள் நடந்து சென்று மதன், ரதி ஆடல் பாடல்களில் ஈடுபடல் வேண்டும். அப் பாத்திரத்தை ஏற்றவர்களுகககு ஓய்வு வழங்கும் நோக்கம் கருதியே "மாத்துக்கட்டு" நடைமுறை பின்பற்றப்படுகிறது. பிரதான பாத்திரத்தை பெற்றவர்கள் ஓய்வு பெறும் நாட்களில் "மாத்துக்கட்டு" செயற்பாடுகளுக்கு தயாரானவர்கள் காமன் கூத்து ஆட்டத்தில் ஈடுபடுவார்கள்.

தொடரும் ...



letsumanan.a@thaiveedu.com

# ஈழத்து நவீனத் தமிழ்க் கவிதையில் பெண்நிலைவாதக் கோட்பாடுகள்

– சி.ரமேஷ்



கருத்தியல், கோட்பாட்டுரீதியாக அனைத்துப் பெண்களுக்கும் எல்லாக் காலங்களிலும் பொருந்தக்கூடிய பொதுவான வரையறைகளைத் தனக்குள் உட்படுத்தாத பெண்நிலைவாதம், வரலாற்றுச் சமூகநடைமுறைகளாலும் அதன் செயற்பாடுகளாலும் அதன் நோக்குநிலையாலும் காலத்துக்குக் காலம் புதியநியமங்களுக்கூடாகத் தன் பரப்பெல்லைகளை விஸ்தீரணப்படுத்திக்கொள்கிறது. சமூகப் பண்பாட்டுத்தளங்களில் பெண்களின் இருத்தலை அறிந்து கொள்ளவும் பெண் தன்மீது பிரயோகிக்கப்படும் வன்முறைகள், பிரச்சினைகள் முதலானவற்றை உணர்ந்து கொள்ளவும் பின் எல்லாச் சிக்கல்களையும் இனங்கண்டு அவற்றிலிருந்து நீங்கிக்கொள்ளவும் பாலினப்பாகுபாடு தொடர்பான சமூகப் பண்பாட்டு வேர்களை இனம் கண்டு கொள்ளவும் பெண்நிலைவாதம் உதவுகிறது.

கோட்பாடு என்ற சொல் கொள்கை, நிலைமை, கொண்டிருக்கும் தன்மை, அனுசரிப்பு என பன்பொருண்மையில் கட்டுருவதாக கழகத் தமிழ் அகராதி பொருள் விளக்கம் தருகிறது. இது போல க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி கோட்பாடு எனும் சொல்லுக்கு ‘ஒரு துறையில் ஒன்றை விளக்கச் சில கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு தர்க்கபூர்வமாக நிறுவப்படும் கூற்றுக்களின் தொகுப்பு எனக்கூறும். கோட்பாடுகள் என்பது ஒருமுறையான சமூகத்தில் நடக்கும் நிகழ்வுகளைக் கோர்வையாக விளக்கக்கூடிய ஒரு கூட்டுச் சிந்தனை’ என்பார் அரங்க மல்லிகா. (பெண்ணின் வெளியும் இருப்பும் பக். 8.) இதன்வழி கோட்பாடு என்பது அமைப்பு முறையை அடிப்படையாகக் கொண்ட கூற்றுகளின் தொகுப்பு அல்லது கூட்டுச்சிந்தனையின் சமூக வெளிப்பாடு என்ற கருத்தாக்கம் பெறப்படுகிறது.

தமிழகப் பண்பாட்டுமரபு வழிச் சமூகத்தில் ஆணின் ஆளுகைக்குக் கீழ் பெண் வாழுதல் என்னும் நிலைமையை உடைத்து நவீன உலகுக்கு ஏற்ற வகையில் புதுக்கோட்பாடுகளை வரையறுக்க வேண்டிய தேவை உள்ளது. பெண்களுக்கெதிராக நிகழ்த்தப்படும் வன்முறைகளையும் அடக்குமுறைகளையும் அகற்றவும், பெண்ணுரிமை மறுப்புக்கள், சுரண்டல்களைத் தடுக்கவும் பெண் கீழ்நிலைக்கான காரணங்களைக் கண்டறியவும் பெண்ணியமும் அது சார்ந்த கோட்பாடுகளும் அவசிய மாகின்றன. அவ்வகையில் சமகால பெண்ணிலைவா



தச் சிந்தனைகள் முற்போக்குவாதம் (Liberalism), தீவிர பெண்ணிய வாதம் அல்லது தூய பெண்ணியம் (Radical Feminism), மார்க்சியவாதம் (Claasical Marxism), பண்பாட்டு பெண்நிலைவாதம் (Culture Feminism) என்னும் பிரிவுகளுக்

குள் அடக்குவனவாக இருப்பது நோக்கத்தக்கது. இவை தவிர கருப்பு பெண்நிலைவாதம், தலித் பெண்நிலைவாதம், சூழல் பெண்நிலைவாதம், ஆன்மீகப் பெண்நிலைவாதம், மனைப் பெண்நிலைவாதம் முதலான பெண்நிலைவாதங்களும் காணப்படுகின்றன. மேலைத்தேய நாடுகளின் கருத்துக்கள், உள்ளோட்டங்கள் சகல சமூக அமைப்பினதும் நடைமுறைசார் விளக்கங்களாகவும் அமைவதில்லை. பன்முகப்படுத்தப்பட்ட பல்வேறு சிந்தனைகளின் விளைவாகத் தோன்றிய கோட்பாடுகள் வளர்முக நாடுகளில் பகுப்பாய்வுகளுக்கு உட்படுத்தப்படுவதுமில்லை. பெண்கள் எதிர்நோக்கும் சுரண்டல்களையும் உரிமை மறுப்புக்களையும் அடக்குமுறைகளையும் வெளிப்படுத்தும் வகையில் இப்பகுதி நான்கு பிரதான கோட்பாடுகளை ஆய்வுக்குட்படுத்துகிறது.

## முற்போக்கு பெண்நிலை வாதம் (Liberal Femilnism):

மேலைநாடுகளில் பகுத்தறிவுச் சிந்தனைகள் ஏற்பட்டபோது 1791-ல், பிரான்சிய புரட்சிக்காலத்தில் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் உரிமைகள் கொடுக்கப்படவேண்டும், பெண்ணைப் பாலியல் வழி நோக்காமல் மனித இனப்பிரிவாகவே காணவேண்டும் என்பதை வலியுறுத்தி முற்போக்கு பெண்நிலைவாதக் கருத்துக்கள் தோற்றம் பெற்றன. மிதவாதப் பெண்ணியம், தாராளவாதப் பெண்ணியம் என்ற பெயராலும் முற்போக்கு பெண்நிலைவாதம் அழைக்கப்படுகிறது. பெண்களுக்கு வாக்குரிமை, கல்வி, வேலைவாய்ப்பு, சமகூலி வழங்கப்படவேண்டிய அவசியத்தை எடுத்துரைத்து இக்கோட் பாட்டை முன்னெடுத்துச் சென்றவர்களாகப் பெற்றிவ்றைடன், மேரிவுல்ஸ்டன் கிராப்ட், ஜான்ஸ்டுவட்மில் முதலானோர் காணப்படுகின்றனர். குடும்ப நிலையில் சுயசிந்தனை, சுயமுடிவெடுப்பு, சுயதேர்வு இவற்றைப்பெற்று, பரஸ்பர மரியாதையுடன் தனித்துவம் உடையவளாகப் பெண்ணானவள் செயற்பட, தேசியபெண்கள் அமைப்பும், இங்கிலாந்தின் சமவாய்ப்பு ஆணைக்குழுகொமிசனும் தம்மை அர்ப்பணித்து வேலை செய்தன.

முற்போக்கு பெண்நிலைவாதம் பகுத்தறிவின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. கடவுளுக்கு முன் ஆண் - பெண் இருவரும் சமம் என இப்பெண்நிலைவாதம் வலியுறுத்தியது. பெண்விடுதலை, சமத்துவம் முதலானவற்றை கல்வியறிவை மேம்படுத்துவதாலும் சமூக சீர்திருத்தச் சட்டங்களை உருவாக்குவதாலும் அனைத்துப் பெண்களும் அடைந்து கொள்ளலாம் என்ற கருத்தை முன்வைத்தது. மிதவாதப் பெண்நிலைவாதம் குடும்ப அமைப்பு, திருமணம், குழந்தைப்பேறு ஆகியவற்றை ஆதரித்துப் போற்றியது. ஆண், பெண் உறவாடும் முறையான குடும்ப அமைப்பைப் பின்பற்றிக் கொண்டு சமூகப் பழக்க வழக்கங்களில் மாறுதல்களைக் கொண்டு வந்த முற்போக்கு பெண்ணிலைவாதச் சிந்தனையை ஈழத்துக் கவிதைகளில் காணலாம். காலம் தோறும் அடிமைகளாய் உரிமைகள் மறுக்கப்பட்ட பெண்ணினம் தன் கட்டுக்களை உடைத்து வெளியேறத் துடிப்பதைப் பெண்ணின் மனோநிலைக்கூடாக ஔவையின் ‘ஒரு தோழியின் குரல்’ என்னும் கவிதை வெளிப்படுத்தி நிற்கிறது.

***தோழி***<br>
***எழுந்து வா***<br>
***இன்னும் என்னடி இருட்டினில் வேலை?***<br>
***மீண்டும் மீண்டும்***<br>
***அடுப்படி தஞ்சமாய்***<br>
***அடிமை வாழ்வே தலை எழுத்தாக***<br>
***எத்தனை நாள் தான் இந்த வாழ்வு***<br>
***வீறு கொண்டு எழு***

எமது உரிமைகளை வென்றெடுப்போம் ஔவையின் கவிதையைப் போன்றே 1984-ல் தோழியில் வெளிவந்த சூரியாவின் கவிதையும் பெண் இனத்தின் விடுதலைக்காய் அனைத்துப் பெண்களும் ஒன்றிணைந்து போராடவேண்டிய அவசியத்தைக் கூறிநிற்கிறது.

***இருட்டறையில்***<br>
***முடங்கிக் கிடக்கும்***<br>
***நம் தோழியரின்***<br>
***துயில் கலைக்க***<br>
***நெருப்புக் கொள்ளியுடன்***<br>
***போராடும்***<br>
***நம் சினேகையரின்***<br>
***வெம்மை போக்க...***<br>
***“பெண் விடுதலை”***<br>
***எனும் தீபத்தை***<br>
***நம்நாட்டில்***<br>
***ஏற்ற ...***<br>
***வா!***<br>
***தோழி!***<br>
***நாமிருவரும்***<br>
***சேர்ந்து நடப்போம்...***

*தோழி - 1984.பக்.03*

1987 அன்று நங்கை இதழில் வெளிவந்த ஆதிலட்சுமி சிவகுமாரின் ‘விடியலும் காத்திருக்கிறது’ என்ற கவிதையும் இத்தளத்தில் பயணிக்கிறது. பெண்களுக்கான சமூகக்கடமைகளை வரையறுத்துவிட்டு பெண்களை அடிமைகளாகக் கருதி கொண்டு அவர்களை வீட்டுக்குள் முடக்கி வைத்திருக்கும் சமூகத்தின் மீதான அதிருப்தி நிலையை இக்கவிதை கோடிட்டுக் காட்டுகிறது.

***... உன்னைச் சுற்றி / உட்கார்ந்து கொண்டு... / ஊளையிடுபவர்களை / உயர்வென்று நினைத்து / ஒதுங்கிவிடாதேயம்மா / உன் உள்ளத்தினுள்ளே / உறைந்து கிடக்கின்ற / உணர்வுகளுக்கு / உருவம் கொடுத்துப்பார்... / பூட்டிய வீட்டிற்குள்ளே / புழுங்கிக் கிடந்தது போதும் ! / புறப்பட்டு வா ! / மந்தைக் கூட்டமாய் / மகளிரெல்லாம் / முடங்கிக் கிடந்த கதை / எங்கள் / முந்தையருடனே / முற்றுப் பெறட்டும் ... / பெண்ணே! / துடைத்துவிடு கண்ணீரை / உடைத்துவிடு உன் விலங்குகளை / வெளியே வா / வெளிச்சம் மட்டுமல்ல / விடியலும் காத்திருக்கிறது.***

*நங்கை - மார்கழி.1987. பக்.02*




தாய்வழிச் சமூகத்தில் பெண்கள் உரிமையோடும் அதிகாரத்தோடும் வாழ்ந்தனர். இன்றைய சூழலில் ஆணாதிக்க மையம் தகர்க்கப்பட்டு பெண்களின் அதிகார அமைப்பில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டு பெண் தனக்கேயுரிய உரிமையோடு சுதந்திரமாகப் பிரத்தியேகமாக இயங்க வேண்டும் என்பதை வாசுகியின் கவிதையானது எடுத்துரைக்கிறது.

***உன்னைப் போன்றே***
***நானும் நினைக்கின்றேன்***
***நான் ஒரு சின்னக்குருவிதான்***
***எல்லாத் திசையிலும் ஒரே தரத்தில்***
***பறக்கும் அவாக் கொண்டவள்***
***சுற்றிச் சுற்றிப் பறந்த எனக்கு***
***புன்னகைக்காத பூக்களில்லை***
***எந்த வாசலும் மூடியதுமில்லை***
***ஆயின்***
***நீ மகிழ்வுடன் திறந்த கதவூடு மட்டும்***
***எந்தன் கனவுகளின்***
***உலகம் தெரிந்தது***
***பரந்த திக்குகளில்***
***அலைதல் மறந்து***
***ஒரு திசைப் பறத்தல் உறுதியாயிற்று***
***எந்தத் திசை அது?***

*பெண் இதழ் - தொகுதி-6,-2001-பக்.18*

மனிதன் மனிதனாக வாழ வேண்டும். பூவுலகில் ஆண், பெண் சமத்துவம் பரஸ்பரம் பேணப்பட வேண்டும். அதிகார வன்முறையற்று பெண்ணானவள் தனக்குரிய உரிமைகளோடு மதிக்கப்பட வேண்டும் என்பதை /பஹீமா ஜஹானின் 'அவள் அவளாக' என்ற கவிதை சமூக நடைமுறைகளுக்கூடாகப் பதிவு செய்கிறது. ஆணாதிக்கத்துக்குள் நலிவுண்டு காலாதி காலமாகப் பெண்படும் அவலநிலையை இக்கவிதை உணர்த்தி நிற்கிறது.

**காலங்காலமாக நீ வகுத்த / விதிமுறைகளின் வார்ப்பாக / அவள் இருக்க வேண்டுமென்றே / இப்போதும் எதிர்பார்க்கிறாய் / உனது வாழ்வை வசீகரமாக்கிக்கொள்ள / விலங்குகளுக்குள் அவளை வசப்படுத்தினாய் / நாற்குணங்களுக்குள் அவள் / வலம் வர வேண்டுமென்றே வேலிகள் போட்டாய் / அந்த வேலிகளுக்குள் அப்பாலுள்ள / எல்லையற்றஉலகை / உனக்காக எடுத்துக் கொண்டாய் / எல்லாஇடங்களிலும் / அவளதுகழுத்தை நெரித்திடவே / நெருங்கி வருகிறது உனது ஆதிக்கம் / அவள் அவளாக வாழ வேண்டும் /வழிவிடு**

*யாத்ரா இதழ்-3- 2000 பக்.56-57*

கல்வி, உயர்ந்த பதவிகள், பொருளாதார வளர்ச்சி, சமூகப் பொறுப்புகள் போன்றவற்றில், பாலின சமத்துவம் என்பது சற்று முன்னேற்றமாகக் காணப்படுகின்றது என்று கூறினாலும் பாலின சமத்துவம் என்பது இலங்கையின் கிராமப்புறங்களில் எட்டாக்கனியாகவே காணப்படுகின்றது. பெண்களுக்குச் சமுதாயத்தில் உள்ள மதிப்பும் அவர்களைக் கணக்கிடுவதும், ஆண்களைச் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. பெண்ணானவள் ஆணினால் வரையறுக்கப்பட்ட எழுதப்படாத மரபுச் சட்டகத்துக்குள் கட்டுண்டு வாழப்பழகிய ஒருவராகவே காணப்படுகின்றாள். பெண்கள் முன்னேறுவதற்காக, இலவச கல்வி உள்ளிட்ட வசதிகள், நாட்டு மக்கள் தொகையில், மிகவும் உயர்ந்தளவு சதவீதம் என்று காணப்பட்டாலும், இலங்கையிலுள்ள தொழிலாளர்கள் படையில், பெண்கள், சிறுபான்மையினராகவே காணப்படுகின்றனர்.18 வயதுக்கும் மேற்பட்ட 64 சதவீதமான அளவு தொழிலாளர்கள் படையில் இருக்கவேண்டிய பெண்கள், தற்போது, தொழில் செய்யாமல் இருப்பதற்குக் காரணம் பெண்ணானவள் நாளாந்தம் பாலியல்ரீதியான மன உளைச்சல்களுக்கும் மனவழுத்தங்களுங்களுக்கும் ஆளாகுவதேயாகும். இதே போல பெண்களுக்கான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவமும் 5.3வீதத்துக்கும் குறைவாகவே காணப்படுகின்றது. அரசியல், சாக்கடை என்பதால் பெண் அதனை நாடிச் செல்வது குறைவாகவே உள்ளது. தம் சமூக அந்தஸ்து பாதிக்கப்படும் என்ற அச்சத்தால் பெண்கள் அரசியலினை நாடிச் செல்வதில்லை. அண்மையில் நடந்த தேர்தலிலும் பெண் பிரதிநிதித்துவம் குறைவாகவே உள்ளது.

பாலினச் சமத்துவம் என்பது, ஆண்களுக்கு எதிரானது அன்று. இச்சமூகத்தில் ஆணும் பெண்ணும் சமமானவர்கள.; உடல் மொழி ஆகியவற்றைக் கொண்டு பெண் ஒடுக்கப்படுவது தடுக்கப்படவேண்டும். பெண்ணை என்றும் ஆணின் போகப் பொருளாகப் பார்ப்பது தவிர்க்கப்படவேண்டும். இவை ஒவ்வொரு ஆண் மகனின் மனதிலும் எழ வேண்டும். இதனை விஜயலட்சுமி சேகரின் 'வெளிறிப் போன கிழக்கு' என்ற கவிதை ஆழ்படிமங்களுக்கூடாக வெளிப்படுத்தி நிற்கிறது.

**கிழக்கு வெளுத்தது**
**கீழ்வானம் சிவந்தது**
**பறவைகள் தம்**
**கூடுகளை விட்டு**
**வெளியே பறந்தன**
**கிழக்கின் உதயம்**
**பல மலைகளை**
**உடைத்து நிகழ்ந்தது** Pulse பக்.-79

உடைந்து போன வாழ்க்கை, கடந்து போன சந்தோசமற்ற காலங்கள் கழியப்பட்டுப் புதிய வாழ்வை நோக்கிய பயணமாக பெண்ணின் வாழ்வு இருக்கவேண்டும் என்பதை இக்கவிதை வெளிப்படுத்தி நிற்கிறது. தாகம் இதழில்(தை-1985-1986) வெளிவந்த ரங்காவின் அவள் அவளாக கவிதை ஆண்மையவாதத்துக்குள் புதையுண்டுபோன பெண்மையை வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது. பல்வேறு இக்கட்டான சூழலில் பெண் தன்னை அடிமையாக எண்ணாது - கருதாது ஒப்புக் கொடுப்பதைப் பட்டவர்த்தனமாய் சாடும் இக்கவிதை ஆதிக்க சக்திகளில் இருந்து பெண் விடுபடவேண்டிய தேவையையும் உணர்த்தி நிற்கிறது.

**ஒளிபடரும்**
**மாலைப்பொழுதில் – அவள்**
**தூக்கம் கலைந்தெழுந்தாள்.**
**கூட்டலும், துவைத்தலும்**
**மினுக்கிக் கழுவலும்**
**சமைத்தலுமாய்**
**நாள் முழுக்க**
**வியர்வையில் குளித்தவள்**
**இருள் சூழ்கையில்**
**மதுவாய்**
**அவன் மடிதனில்...**
**மூன்று முடிச்சிடுதற்காய்**
**கொட்டிய இலட்சமும்**
**கொடுத்த உழைப்பும்**
**பஞ்சு மெத்தையில்**
**நிர்வாணமாய்**
**ஒவ்வொரு இரவும்**
**பிறந்த மேனியைத்**
**திறந்து காட்டுதற்காய்**
**இத்தனை காலமாய்**
**பேணி வளர்த்திருந்தாள்.**

இலங்கை போன்ற ஆசியநாடுகளில் பெண்ணை ஆணோடு ஒப்பிட்டு இரண்டாம் நிலையில் வைத்துப் பார்க்கும்நிலை நெடுங்காலமாய்க் காணப்படுகின்றது. பெண்கள் மென்மையானவர்களாகவும் உடலால் ஆணைவிட வலுவற்றவராகவுமே பார்க்கப்படுகின்றனர். பெண்ணை ஆண்களுடன் அதிகம் பேசக்கூடாது எனக்கூறியும் பெண்களை ஊர் சுற்றக்கூடாது எனத்தடுத்தும் வளர்க்கும் பெற்றோர் தம் பெண்கள் இவ்வாறுதான் வாழ வேண்டுமென வரையறுத்து வளர்க்கின்றனர். இந்நிலையில் இருந்துகொண்டு பெண்கள் தம் எல்லை மீறிய செயற்பாடுகளில் ஈடுபடும்போது ஆண்மூச்சுக்காரியாகவும் அகம்பாவம் பிடித்தவளாகவும் தறிகெட்டுத்திரியும் தற்குறியாகவும் சமூகம் அவளை விமர்சிக்கிறது. இதனைக் கலைமகளின் கவிதையில் காணலாம்.

**உனக்குக் தெரியும் / நான் இப்படித்தான். /**
**நீ சொல்வது போன்று / எடுத்தற்கெல்லாம் /**
**கேள்விகள் கேட்பதும் ... / சொல்வதற்கெல்லாம்**
**தலையாட்டாமல் / சண்டைபோடும் - நீ சொல்லும் /**
**அடங்காப்பிடாரி / துணிச்சலாய்த் திரியும் / நீ**
**சொல்லும் /வாய்க்காரி / ஆண்மூச்சுக்காரிதான்**
**மூச்சுகளிலும் / ஆண் பெண் / வேறுபாடு கண்டு**
**பிடிப்பவன் நீ ... / உனக்காய் அவர்களுக்காய்**
**வாழத்தெரியாதவள்...**
**உனக்குத் தெரியும் / நான் இப்படித்தான்**
*கவிதைகள் பேசட்டும் - பக். 48-49*

ஏற்கனவே உள்ள சமூகத்தடைகளை நீக்கி இன்றைய சமூகத்தில் உள்ள பெண்களின் நிலையில் மாறுதல்களை ஏற்படுத்தி பெண்களின்நிலை உயர்த்தப்படவேண்டும் என்பதை தாராள பெண்ணியவாதிகள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர். தீவிர பெண்நிலைவாதம் அல்லது தூய பெண்நிலைவாதம் (Radical Feminism) 'நவீன பெண்ணியம்' என அழைக்கப்படும் தீவிர பெண்ணியவாதம் எழுபதுகளின் ஆரம்பத்தில் மேலைநாடுகளில் தோற்றம் பெற்ற புரட்சிகர இயக்கமாகும். பெண்களின் கீழ்மை நிலையானது உற்பத்தி முறையால் ஏற்படுவதில்லை, மாறாகச் சமூகத்தின் மறுஉற்பத்தி முறையால் அவர் வகிக்கும் பங்கினாலேயே ஏற்படுகிறது எனக் கூறும் தீவிரவாத பெண்ணியவாதிகள், கருவளமே பெண்களுக்கு முதல் எதிரி எனவும் கூறுவர். தீவிரவாதப் பெண்நிலைவாதம் ஆணை எதிர்ப்பது ஆணுடன் சேர்ந்து வாழ்வது கூடாது என பிரிவினைவாதம் பேசுவது. இது ஆணாதிக்கத்தின் எதிர்மறை விளைவாகும். ஆண் ஆதிக்கப் பிடியில் அகப்பட்டு நலிந்து நசிங்கி அவலமுற்று வாழ்ந்த பெண்களின் வெறுப்பில் விளைந்த பெண்நிலைக் கோட்பாடே தீவிரவாதப் பெண்நிலைவாதம்.

ஆண்மையவாதச் சிந்தனையை உடைத்தலை முக்கிய நோக்காகக் கொண்டு செயற்படும் இப்பெண்நிலைவாதிகள், உடலியல் சம்மந்தப்பபட்ட காரணிகளே பெண்ணடிமைத்தனத்தின் அடிப்படைகள் என நம்புவதால் அதற்கு வித்தான திருமணம், குடும்பம், என்ற சமூகக் கட்டுகளையும் வெறுத்தனர். இந்நோக்கில், பாலியல் உரிமை, உடம்பின் மீதான கட்டுப்பாடு, தன்னின அனுபவம் முதலானவை இவர்களின் செயற்பாடுகளாக அமைந்தமையால், சுதந்திரபாலுறவு (Free sex), பெண் ஓரினச் சேர்க்கை (Lesbianisim),முதலானவற்றையும் தூய பெண்ணியவாதிகள் வரவேற்றனர். தீவிர பெண்ணியவாதிகள் ஆணினைச் சார்ந்து இயங்கும் பாலியல் வாழ்வை வெறுத்து அதற்கு மாற்றீடாகப் பெண்ணுக்கும் பிறிதொரு பெண்ணுக்கும் இடையிலான பாலுறவை ஏற்கின்றனர்.

பெண்ணின் மறு உற்பத்தி மீதான ஆண் மேலாண்மையை வெறுத்த இப் பெண்ணியவாதிகள், பெண்ணின் மீதான பலாத்காரம், பெண்ணின் நிர்வாணப் படங்களைக் கண்டு மகிழ்தல் முதலான செயற்பாடுகளும் பெண் மீது இழைக்கப்படும் பாலினரீதியான வன்முறைகளின் வெளிப்பாடுகளாகும் எனக்கூறிக் கண்டித்தனர். ஆண்கள் அனைவரும் பெண்களுக்கு எதிரிகள் என்ற மனப்பான்மையை வளர்த்து கொண்ட இவர்கள் ஆண்கள் வெறுத்து ஒதுக்கப்படவேண்டியவர்கள் என்ற அதி தீவிர வெறுப்பு மனப்பான்மையைக் கொண்டிருந்தனர். பெண்ணின் ஒருங்கிணைப்பின் மூலமும் தற்சார்பின் மூலமுமே ஆணைச் சார்ந்திராத தன்மையை உருவாக்கலாம் எனக் கருதி அதற்காகத் தம்மை அர்ப்பணித்து உழைத்தனர்.

இயற்கைக்கு மாறான கருத்துக்களைக் கொண்டு இருந்தமையால் இப்பெண்ணியவாதம் நின்று நிலைபெறவில்லை. ஆயினும் பெண் மீது இழைக்கப்படும் பாலினரீதியான வன்முறைகளையும் அதன் செயற்பாடுகளையும் அதற்கெதிரான பெண்ணிய எதிர்ப்பு வாதத்தையும் ஈழத்து நவீன தமிழ்க்கவிதைகளில் காணலாம்.

அந்தரங்கம், பகிரங்கம் என்பது தீவிரவாதப் பெண்ணியத்தின் முதன்மைச் சித்தாந்தம் ஆகும். பெண்கள் உடற்கூற்றின் அடிப்படையில் ஆண்களால் நசுக்கப்படுவதை இவர்கள் எதிர்த்தனர். தந்தை வழிச்சமூகம் கற்பித்துள்ள பண்பாட்டுக்கட்டமைப்பில் ஆண் - பெண் உயிரியல் கூறுவேறுபாடுதான் குடும்பத்துக்குள் பெண்ணைப் பாலியல்ரீதியில் ஒடுக்கக் காரணமாகிறது என் றுணர்ந்த தீவிரவாதப் பெண்நிலைவாதிகள் தந்தைவழிச் சமுதாயத்தை உடைக்க முற்பட்டனர். இதனை ரேவதியின் "சிதில மடைந்துள்ள வாழ்க்கை கவிதையில் காணலாம்.

*ஊர் பெண்*
*தன் கணவன் தன்னை சந்தோசப்படுத்த முடியாதவன்*
*என்பதால் அவனை நிராகரிக்கிறாள்.*
*அதன் நேர்மை எனக்குப் பிடித்துப் போகிறது*
*நாங்கள் இப்போது என்ன செய்யப் போகின்றோம்*
*வாழ்தலுக்கான தேவையை அங்கீகரிக்கப் போகிறோமா*
*இல்லை வெற்றுக் கலாசாரம் பேசி*
*எங்களைச் சுற்றி எல்லாவற்றையும் குப்பைகளாக்கப்*
*போகிறோமா*
*எல்லாவற்றையும் விட*
*வாழ்தலிற்கான தேவைகளை ஏற்றுக் கொண்டு*
*வழிகளை உருவாக்கிக் கொடுக்கப் போகிறோமா*
*புரியவில்லை*

*ஒலிக்காத இளவேனில். பக்.25*

தீவிரவாதப் பெண்நிலைவாதம் ஆணைவிட பெண் உயர்ந்தவள் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. தாய்வழிச்சமூகத்தின் போக்கை வரவேற்கும் தீவிரவாதப் பெண்ணியம் பெண் தலைமைத்துவத்தை தன்னுள் வரித்துக்கொண்டுள்ளது. இதனால் ஆண்தலைமைத்துவத்தால் உருவாக்கப்பட்ட அனைத்து அமைப்புக்களையும் சமூக மதிப்புக்களையும் உடைத்தெறிந்து தேசமெங்கும் பெண்ணாட்சியை நிலைநிறுத்துவதே இவர்களின் குறிக்கோளாகும். இதனை ஆதிலட்சுமி சிவகுமாரின் "பேடுகளும் கூவவேண்டும் என்ற கவிதை எடுத்துரைக்கிறது.

*'கோழிகளே / நீங்கள் ஏன் கூவுவதில்லை! /அதிகார*
*அறைகூவல் / ஆண்களுக்கே சொந்தமென்றே /*
*அலட்சியமா? அல்லது பேடுகள் தானே நாங்களென்ற /*
*பேதைமை உணர்வுகளா? / எதுவாக இருந்தாலும் அது /*
*சதிகார சூழ்ச்சியென்று / சத்தியமாய் உணர்ந்திடுவீர்! /*
*கோழிகளே / ... செட்டைகள் உமக்குண்டு / சிறகடித்துப்*
*பறப்பதற்கு! / சுதந்திரம் வேண்டி / இனிமேல் செகமதில்*
*கூவிடுவீர்!'*

*என் கவிதை பக்.10*

ஈழத்துச் தமிழ்ச் சூழலில் லெஸ்பியன் தொடர்பாக முதன் முதலாக கவிதைகளில் பதிவு செய்தவர் நிக்ஷா ஆவார். சரிநிகரில் நிக்ஷா எழுதிய 'இரு லெஸ்பியன்' என்னும் கவிதை முற்றிலும் புதிய உள்ளடக்கத்தைப் பாடுபொருளாகக் கொண்டது.

*ஒரு மாலைப் பொழுது*
*அலைந்து திரிந்ததில்*
*இருவரும் களைத்திருந்தோம்*
*வியர்த்திருந்தோம்.*
*எனது மடியில் / தலை வைத்துப் படுத்திருந்த*
*அவளது கண்களினால்...*
*அது என்ன ?*
*வாழ்வில் முதன் முதலாக*
*எனது இதயத்தை*
*துளைத்துச் சென்ற அம்பு*
*என்னை இன்று*
*சிறிது சிறிதாக*
*கொலை செய்கிறது.*

சுல்பிகாவின் 'உனக்காக அல்ல' என்னும் கவிதை ஆணாதிக்க சமூகத்தில் பாலியல் விளைபொருளாகப் பெண் சித்திரிக்கப்படுவதையும் மிருகத்தனமான முறையில் பெண்ணுக்கு இழைக்கப்படும் பாலியல்ரீதியான வன்முறைகள், சுரண்டல்களையும் கண்டிக்கிறது.

*'கொட்டிக் கிடக்கிறது / பெண்ணின் பாலியல் /அது அவளுக்காக /*
*அவளின் / இயற்கையாக / எமக்கு வேண்டாம் / பாலியலின்*
*பின்னால் / அலைகின்ற சமூகம் / எமக்கு வேண்டாம் /அடுத்தவரின்*
*பாலியலை / கொள்ளையிடும் சமூகம் /எமக்கு வேண்டாம் / அவரவர்*
*உரிமையை /அவரவர் அனுபவிக்க /அனுமதிக்கும் சமூகம்'*

*உயிர்த்தெழல் - பக்.8-9*

சமூக உருவாக்கமாக உள்ள பாலியல் ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானது. மனித செயற்பாடுகளின் ஊடகமான உடல் தூலப்பார்வையால் நோக்கப்பட வேண்டும். தூஷனையற்று மதிக்கப்பட வேண்டும் என்பதை சுல்பிகா-வின் இக்கவிதை மிகத் துல்லியமாக முன்வைக்கிறது. கலவியில் திருப்தியற்று தீர்ந்தெழ முடியாத பெண்ணின் மனோநிலையை, அப்பட்டமாக வெளிப்படுத்தும் றஞ்சனியின் 'புரிதலின் அவலம்' கவிதை, ஆண்ணின் பாலினுணர்வின் தோற்றம் குறுகிய நோக்கம் கொண்டது என்பதைத் தெட்டத் தெளிவாக உணர்த்தி நிற்கிறது. நவீன தமிழ் இலக்கியத்தில் ஒழுக்க மதிப்பீடுகளுக்கு அப்பாற்பட்டு பெண்ணுடல் சார்ந்த அதன் பாலியல் அனுபவங்களை பேசும் இக்கவிதை பாரம்பரிய பண்பாட்டு வெளியை உடைத்து பெண்மொழிக்கு ஊடாகப் புதிய சுவடுகளை அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

## மார்க்சிய பெண்நிலைவாதம்:

மார்க்சியவாதிகளின் கோட்பாடுகளை உள்வாங்கி வளர்ந்த இப்பெண்நிலைவாதம் குடும்பம், தனிச்சொத்து, வாரிசுருவாக்கல், முதலியவற்றால் ஏற்படும் சமத்துவமின்மைக்கும், பால்ரீதியான ஒடுக்குமுறைக்கும் காரணம் அங்கு நிலவும் தந்தை மேலாதிக்கச் சமூகச் செயற்பாடே எனக்கூறுகிறது. தந்தை வழி சமதர்மப் பொருளாதார அமைப்பில் 'ஆண்', தலைவனாகவும், முதலாளியாகவும், சொத்துரிமையுடையவனாகவும், பெண்களைவிட உயர்ந்தவனாகவும் கருதப்பட்டான். சொத்துரிமை வழி அவன் பெற்ற முதன்மை பெண்ணடிமைத்தனத்துக்கு வித்திட்டது என வாதிடும் மார்க்சிய பெண்நிலைவாதம், ஆண்கள் பெண்ணுழைப்பைச் சுரண்டி அவர்களை அடிமைகளாக்கியதை வன்மையாகக் கண்டிக்கின்றது. இனம் மற்றும் பால்நிலை வேறுபாட்டை ஒழித்து பெண்கள் பெறுகின்ற பொருளாதார விடுதலையே சமுதாயத்தில்

பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதே மார்க்சிய பெண்ணியலாளர்களின் வாதமாகும். இதனை ஈழத்துப் பெண்கவிதைகள் மிகநுட்பமாகச் சித்திரிக்கின்றன.

ஔவையின் 'ஒரு தோழியின் குரல்' போன்றே 1984-ல் தோழி இதழில் வெளிவந்த மிதிலாவின் 'எழுவாய் தோழி' என்ற கவிதையும் பெண் அடக்குமுறைக்கு எதிரான குரலாக எழுகிறது. ஆண்டாண்டு காலமும் அடிமை வாழ்வுக்குள் புதையுண்டு ஆண்களால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளுக்குள் வாழும் பெண்கள் அதிலிருந்து மீண்டு தம் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்பதை இக்கவிதை வலியுறுத்தி நிற்கிறது.

***பாரடி தோழி / பாரினில் உண்மை / பகர்ந்திடும் சரித்திரம் / இதுவேதான் நீ இனி எழுவாய் / நெஞ்சினை உயர்த்தி / நெடுநாள் துயரை / ஒரு நாள் முடிக்க / தன்னந் தனியனாய் / நீ இனி இல்லை / பெண்ணின் அடக்கப் / பொய்மைகளைத் தகர்ப்பாய் / முன்னம் வாழ்ந்த / மூதாதை வாழ்வு / இன்னும் தொடரா / இதை நீ அறிவாய் / எல்லா உலகும் / எழுச்சி நிமிர / எங்கும் பொதுமைச் / சிவப்பு ஒளிகள் உன்னைச் சிறையில் / உட்கார வைத்த / பழைய உலகுப் / பாதகம் ஒழியுது / எங்கும் உழைப்போர் / ஏந்திய கொடிகள் / உன்னையும் தன்னுள் / இணைத்துக் கொண்டது / ஏகாதிபத்திய / தாசர்கள் தந்த வாழ்வு / முக்காடு வாழ்வு / முடிந்தது எழுவாய்...***

*தோழி சித்திரை.1984-பக்.48*

காலாகாலமாக ஆண், பெண் மீது பிரயோகிக்கும் ஒடுக்குமுறையை வான்நிலாவின் 'இருள் விலகும்' என்னும் கவிதை தத்துரூபமாகச் சித்திரிக்கிறது.

***அடுப்படியில் அறுசுவை உணவோடு / வெந்து அவிந்தோம் நாம். / எங்கள் ஆசைகள் யாவும் / விறகுடன் எரிந்தே சாம்பாராயின. / ஆணாதிக்கம் / உணவோடு எம்மையும் / சப்புக் கொட்டி / சாப்பிட்டுக் கொழுத்தது ... மதமும் பண்பாடுக் கோலமும் / இறுகப் பிணைந்திருந்ததை / கட்டறுத்துக் கொண்டு வானைத் தொட்டு விடத் துணிந்தோம் நாமின்று / கீழ்வானம் சிவக்க / ஒளியை உமிழ்ந்தபடி / எழுந்தான் இளம் பருதி / எம்மை எரித்து வதைத்த / கொடிய இருள் எங்கே ஒடிற்று / பெண்ணே! இது இன்றைய பொழுது / உனக்காக விடிந்தது. எழுந்தது சுற்றி பார் என்று / காதோரம் சொல்லிப் போனதுகாற்று***

*எழுதாத உன் கவிதை - பக்.48-49*

பெண்ணியத்தின் எழுச்சி ஒருநாள், ஆணுக்கு நிகர் பெண் என்னும் சமத்துவத்தை பெற்று நிற்கும் எனக்கூறும் வான்நிலா மரபு வழியாகப் பெண்ணுக்கு இழைக்கப்பட்டு வரும் வன்முறைகள் தகர்க்கப்பட்டு பெண், பெண்ணாக எழுந்து நிற்பாள் என்பதையும் இக்கவிதையின் ஊடாக எடுத்துரைக்கிறார். வாழ்வின் துயரங்களைக் கண்டு வெறுமனே புலம்பிக் கொண்டிராமல் அவற்றை மாற்றும் வழிமுறைகளையும் தீர்வுகளையும் எடுத்துரைத்து, அவற்றின் வழி மக்களை சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி வீறுநடை போடச்செய்யும் 'நிகரமை இயல்பு நவிற்சி' என்னும் சமதர்மப் சோசலிச கருத்தியல்வாதத் தன்மைகளை உள்வாங்கி' ஈழத்துப் பெண்கவிஞர்கள் கவிதைகளைப் படைத்தனர். பெண் ஆளுமைகளால் படைக்கப்படும் ஈழத்து நவீன கவிதைகளில் பெரும்பாலானவை இத்தளத்திலேயே கட்டமைகின்றன. அனாரின் 'கோரிக்கை' என்னும் கவிதை நிகரமை இயல்பு நவிற்சியை உள்வாங்கி அதிகாரவன்முறைக்கெதிரான எதிர்ப்பின் குரலாக ஒலிக்கிறது.

***உனது பணிப்பின் பேரில் / நான்பிறக்கவில்லை / என்னை நிர்பந்திக்காதே / ...எனது குரல் / தனித்துவமானது / என் ஆற்றலும் சிந்தனையும் / திருத்தச் சட்டங்களாலும் / புதிய ஏற்பாடுகளாலும் / வேலிகளை விசாலப்படுத்தாமல் விலகி நில் ...நீ நினைத்தபடி / சேர்க்கவும் கழிக்கவும் / செப்பனிடவும் களிமண் பொம்மையல்ல நான் / மூக்கும் முழியும் / மூளையும் / உள்ள பெண் / நீ வைத்திருக்கும் / அளவுப் பாத்திரத்தில் / என்னை ஊற்றி வார்த்துவிட / இனியும் எண்ணாதே / மன்னிக்க / உனது பணிப்பின் பேரில் / நான் பிறக்கவில்லை.***

*ஓவியம் வரையாத தூரிகை, பக்.39-40*

திருமணத்தின் பின் ஆண் தலைமைத்துவத்தில் பெண்ணானவள் தொழில் அடிப்படையில் சுரண்டப்படுவதையும் அச்சுரண்டல் வெளியுலகுத் தெரியாதபடி மறைக்கப்படுவதையும் சந்திரா இரவீந்திரனின் 'பிணவலி' என்னும் கவிதை எடுத்துரைக்கிறது.

***இன்னுயிர்க்காக / என் சுயமெல்லாம் அழித்து / என்னை அதற்காய் / அர்ப்பணமாக்கிய கணத்திலிருந்து / என்னிடமிருந்து நகர்ந்து போன இனிய உலகை எண்ணி / நேற்று வரை நான் கண்ணீர் சிந்தியதில்லை / ...முகத்தில் / முளைத்திருந்த கோரப் பற்கள் / நானறியாமலே என்றோ என்னைக் / கொன்று விட்ட சேதியினை / கொல்லைப்புறத்தில் உலாவும் / பழைய மூச்சும் காற்றும் / பறக்கும் சேலைத் துண்டுகளும் / மெல்ல மெல்ல கதை சொல்லிக் கொண்டிருக்கின்றது! /...உதடுகள் தைக்கப்பட்டு / சிறகுகள் ஒடிக்கப்பட்டு / உயிர்த்துளிகள் சிதறிவிட்ட / இக்கணத்தில்-உனது பிணத்தைப் பார்த்து / நானே அழுவதைத் தவிர / என்னால் வேறெதுவும் முடியவில்லை !***

*'பிணவலி, ஊடறு, (2002), பக். 101-102.*

பழைய மாயைகளை கிழித்தெறிந்து புதிய மாற்றுச் சிந்தனைக்கு வடிவம் கொடுத்த மார்க்சிய பெண்நிலைவாதிகளால் வர்க்க, பால் ஏற்றத்தாழ்வுகளுக்கும் ஏனைய அனைத்து ஏற்றத்தாழ்வுகளுக்கும் அதிகார உறவுகள் முக்கிய காரணமாக இருக்கிறது என்ற நிலையில் தம் கருத்துக்களை முன் வைத்தனர். அதேசமயம் 1960-களில் அமெரிக்கப் பொருளாதார நிலைமை நெருக்கடிக்குள்ளானபோது மாணவர் இயக்கம், சிவில் உரிமை இயக்கம், யுத்த எதிர்ப்பு இயக்கம், பெண்கள் இயக்கம், சூழலியக்கம் போன்றவை மார்க்ஸியத்தை நோக்கிப் புதிய வினாக்களைத் தொடுத்தன. வேலையின்மை, பணவீக்கம் முதலான பிரச்சினைகள் இடதுசாரித் தொழிலாளர்களை வர்க்க அரசியலை நோக்கித் திருப்பிய தருணத்தில் பெண்நிலைவாதப் பிரச்சினைகள் முக்கிய கவனத்தைப் பெறவில்லை. வேலையில்லாப் பிரச்சினை தோன்றிய இக்கட்டான நிலையில் பெண்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டு வறிதான பகுதிகளுக்கு ஆண்கள் நியமிகப்பட்டனர். (மார்க்சியமும் பெண்நிலைவாதமும் மிக முற்போக்கான கூட்டிணைவை நோக்கி - ஹெய்டி ஹார்ட்மன் - தமிழாக்கம் மௌ. சித்திரலேகா) இதனால் இவர்களால் அடுத்த கட்டத்தை நோக்கி நகரமுடியாதுள்ளது. பெண்கள் சொந்த அமைப்புகளையும் பல தளங்களையும் நிறுவி மக்களை ஒன்று திரட்டக் கூடிய சமூகப் பார்வையை உருவாக்கி அதிகார அடுக்கற்ற சமூகத்தில் மார்க்சிய பெண்நிலைவாதிகள் ஒருங்கிணைந்து பணியாற்றினால் வரலாற்று வளர்ச்சிப் போக்கில் ஒரு மாற்றத்தை நிர்மாணித்துக் கொள்ளலாம்.

### பண்பாட்டு பெண்நிலைவாதம்:

மரபுவழிவந்த பண்பாட்டை போற்றும் 'பண்பாட்டு பெண்நிலைவாதம்' பெண்களின் கீழ்நிலைக்குக் காரணம் உயிரியல் ரீதியான அமைவன்று மாறாக உளவியல் ரீதியான அமைவே எனக் காரணம் கூறுகின்றது. சமூகம் தார்மீகமாக வகுக்கப்பட்ட நெறி முறைகளுக்கமைய வாழ்வதே பெண்ணின் வாழ்வு எனக்கூறும் இப்பெண்நிலைவாதிகள் பிறரின் மீது பெண்கள் அன்புடையவராக இருத்தல், தியாகசிந்தனைமிக்கவராகக் காணப்படல், தயாளசிந்தனையுடையவராகவும் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு மிக்கவராகவும் விளங்குதல், போட்டியின்மை, கூட்டுறவு, தாய்மை, ஒழுக்கம், பொறுமை, ஒப்புரவு, தொண்டு போன்ற உயிரியல் ரீதியாக அளிக்கப்பட்டுள்ள பண்புகளைக் கொண்டவராகப் பெண்கள் விளங்குதல் நல்ல சமூக உருவாக்கத்துக்கு வழிவகுக்கும் எனக் கூறுவர். பெண்மைக்குரிய இலக்கணங்களை வகுத்தவர்களில் தொல்காப்பியர் முக்கியமானவர். பெண்ணின் இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு ஒன்பது குணங்களைப் பெண்ணுக்கு வகுத்தவராகத் தொல்காப்பியர் விளங்குகின்றார்.

***அச்சமும், நாணும் மடனும் முந்துறுதல்***
***நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப***

*தொல்காப்பியம். களவியல்.8*

அச்சம், நாணம், மடம் என்னும் மூன்று குணங்களும் எப்பருவத்திலும் பெண்ணுக்குரிய குணங்களாக வரையறுத்த தொல்காப்பியர்

***செறிவும் நிறையும் செம்மையும் செப்பும்***
***அருளும் அருமையும் பெண்பாலான***

*தொல்.பொருள்.15*

எனக்கூறுவார். அதாவது செறிவாகிய அடக்கமும் நிறைவு எனப்படும் அமைதியும் செம்மை எனப்படும் மனங்கோடாமையும் செப்பு எனப்படும் சொல்லுதல் அறிவு எனப்படும் நன்மை, தீமைகளை பகுத்தாய்கின்ற தன்மையும் அருமை எனப்படும் உள்ளக்கருத்தறியும் தன்மையும் பெண்களுக்குரிய குணங்களாக வகுப்பார். தொல்காப்பியர் பெண்ணுக்கு வகுத்த அச்சம், நாணம் முதலான குணங்களைப் பெண்ணுக்கு இழிவெனக் கூறி பாரதியார், ஈ.வே.ரா., பாரதிதாசன் முதலானோர் அதனை மறுத்துரைப்பர். 'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' எனக்கூறி பாரதி கண்டிக்க 'நாணமும் அச்சமும் வேண்டுமெனில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேண்டும்' என்றுகூறி அதனை வழிமொழியும் பாரதிதாசன் 'அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள், அழகிய தமிழ்நாட்டின் கண்கள்' எனக் கூறுவார். ஆனால் பண்பாட்டு பெண்ணிலைவாதிகள் தொல்காப்பிய இலக்கணத்துக்கமைய தம் வாழ்வை அமைத்துக் கொண்டவர்கள். துணிச்சல், தைரியம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி மிக்கவரான பண்பாட்டு பெண்ணியவாதிகள் அகிம்சை, காருண்யம் என அறவழியில் நின்று தம் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்கள். அநீதிகளைக் கண்டு துவண்டு விடாமல் அநீதியைத் தட்டிக் கேட்கும் பண்புள்ளவர்கள்.

பெண்ணுக்குரிய தன்மைகள் போற்றப்பட வேண்டும் என்பது இவர்களின் கருத்து. ஆணாதிக்க வெறுப்பின் காரணமாகத் தீவிர பெண்நிலைவாதிகளைப்போல் பண்பாட்டு பெண்நிலைவாதிகளும் ஆண்களைப் பகைவராகக் கருதுவர். ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதைகள் பலவற்றில் பண்பாட்டு பெண்நிலைவாதக் கருத்துக்கள் விஞ்சிநிற்பதைக் காணலாம். ஸர்மிளாஸெய்யித்தின் 'வேப்பமரம்' கவிதை பெண்மையின் உணர்வுகளை அதன் ஈரத்தை, நேசத்தை அதன் உன்னத நிலையை இயற்கையுடன் இணைத்து பேசுகிறது.

***அம்மாவின் மடிபோலதான்***
***அதன் நிழலும் குளுமையானது மிக இதமானது***
***மண்ணில் ஊன்றியிருந்த***
***அதன் வேரில் ஒரு தொகுதி***
***எனக்குள்ளும் இருக்க வேணும்***
***அதன் கம்பீரமும் பசுமையும் அழகும்***
***வேறெப்படி எனக்குள் ஊடுருவமுடியும் ...***

***மனம் பொங்கும் மகிழ்ச்சியில் இருக்கிறேன்***
***என்னை ஒரு மரமென அங்கீகரித்தனால்***
***வேரோடு சாயும் வரையிலும்***
***என் கிளைகளில் வந்தமரும்***
***எல்லா ஜீவராசிகளுக்கும்***
***நிழல் தருவேன்***
***நீங்காத நிம்மதியைத் தருவேன்***
***என் வேப்பமரம் எனக்குத் தந்ததுபோல***

*சிறகு முளைத்த பெண். பக்.27*

நவஜோதி ஜோகரட்ணத்தின் 'காற்றுப் பிரித்தபோது' கவிதை பெண்மையின் இலக்கணத்தை அதில் பொதிந்திருக்கும் நுண்ணுணர்வின் பரிபாஷைகளை எழுதிச் செல்கிறது.

***அவள் / மனதால் அழகானவள் / மென்மையின்***
***வதனத்தை அணைக்கின்றாள்... / இயல்பான***
***எளிமையை / இறுக்கின்ற அணைப்பு / எளிமை /***
***அழகானது / ஆனந்தம் தருவது / அவளுக்கு***
***பிடித்தமான / நாமத்தை / நாளுக்கு நாள் /***
***இதயத்தில் / செதுக்க செதுக்க / இனிமை கசிகிறது /***
***மகிழ்ச்சி தெரிகிறது /***

*எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன். பக்.111*

நிஜவாழ்வியலின் உண்மைப் பதிவுகளாக அமையும் இக்கவிதை அழகியல் தன்மையற்று உணர்வுகளுக்குள் கட்டுறுகிறது. பெண்ணின் சுயத்தில் தோன்றி சமூகப் பிரக்ஞைமிக்க ஆழந்த மனிதநேயத்தில் கட்டுண்ட இக்கவிதைகள் வாழ்வின் யதார்த்தத்தைப் பேசுகின்றன. அநுபவச் சூட்டில் மிளிரும் உணர்வுகளை ஆத்ம சுத்தியுடன் வெளிப்படுத்தும் இக்கவிதைகள் பெண்ணின் அவல உணர்வுடன் பிணைக்கப்பட்ட புதிய சொல்லாடலாகப் பரிணமிக்கிறது. பெண் அடக்குமுறைக்கு எதிரான குரலாகவும் பெண்ணுரிமைக்குரிய பாடுபொருளாகவும் அமையும் இக்கவிதைகள் பாலினம், சமத்துவம், இனப்பாகுபாடு மற்றும் பெண்ணின் சமூக அடையாளங்களையும் மறுவாசிப்புக்குட்படுத்துகின்றன. பெண்களின் அறிவையும் அனுபவத்தையும் மதிப்பிடுவதாக அமையும் இக்கவிதைகள் பெண் எழுத்து முறைகளைக் கண்டறிவதற்கான எத்தனமாகவும் உள்ளன. ஆண்மைய வாத கண்ணோட்டத்திலிருந்து முற்றிலும் வேறுபடும் பெண்நிலைவாதக் கவிதைகள் இலக்கியத்தை மறுமதிப்பீடு செய்யவும் உதவுகின்றன.



ramesh.s@thaiveedu.com



# இலங்கைத் தமிழ்க்கவிதைச் சஞ்சிகைகளில் மகளிர் கவிதைகள்

கோட்டி திருமுருகானந்தம்

இலங்கைத் தமிழ்க்கவிதைச் சஞ்சிகைகளில் மகளிர் கவிதைகள் என்ற கட்டுரை இலங்கைக் கவிதைச் சஞ்சிகைகளில் காணக்கிடக்கும் மகளிர் கவிதைகளை அறிமுகம் செய்கிறது. இதற்கு ஆய்வுக்களமாக இலங்கையிலிருந்து வெளிவந்துள்ள கவிதைச் சஞ்சிகைகள் அமைகின்றன. இக்கட்டுரை இலங்கையின் மூத்த தமிழ் இதழ், இலங்கையின் தொடக்க காலச் சஞ்சிகைகள், கவிதைச் சஞ்சிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ்க்கவிதைச் சஞ்சிகைகளில் மகளிர் கவிதைகள் போன்றவற்றைக் கோடிட்டுக் காட்டுகிறது.


தேன்மொழி
திங்கள் வெளியீடு
யாழ்ப்பாணம், மார்கழி, 1955.
கதிரவன் உதயம்.

உலகில் பிறந்த அனைவருமே வாழ்வில் உயரவேண்டும், முன்னேறவேண்டும், வளரவேண்டும் என விரும்புகின்றனர். இதற்கு உயர்ந்த குறிக்கோள் ஒன்றை வரையறுத்துக் கொண்டு உழைக்கத் தயாராகி விடவேண்டும். உழைப்பு இல்லையெனில் உயர்வு இல்லை. கடுமையான உழைப்பைத் தவிர வெற்றிக்கு ரகசியம் வேறு இல்லை எனலாம். பெரிய மனிதர்கள் உயர்ந்த நிலையை அடைந்தார்கள் என்றால் அதன் பின்னணியில் உழைப்பே இருக்கும். ஒரு மனிதர் தன்னுடைய வாழ்க்கையில் நல்ல பாதையில் செல்ல வேண்டும் எனில் கடுமையாக உழைக்க வேண்டும். வாழ்க்கைப் பயணத்தில் சாதனைபுரிய நாம் செய்ய வேண்டிய மூலதனம் உழைப்பு ஆகும். ஒருவர் ஆசைப்படுவதை அடைவதற்கு உழைப்பு முக்கியமாகிறது. புதிய கண்டுபிடிப்புகளுக்கும் புதிய சிந்தனைகளுக்கும் உழைப்பே முக்கியத்துவமானது. பலசாதனை மிக்க கண்டுபிடிப்புகளுக்குப் பின்னால் உழைப்பே உள்ளது. எச்செயலும் உழைப்பினால் சிறப்பு அடைகிறது. வெற்றியை உருவாக்குவதில் உழைப்பு மிகப் பெரிய மூலதனம் ஆகும். உழைப்பு ஒன்றுதான் ஒருவரை வெற்றிப்பாதைக்கு அழைத்து செல்லும். சோம்பல், சலிப்பு, மறதி போன்றவற்றை ஒழித்து முழுமனதுடன் உழைக்கும்போதுதான் வாழ்வில் உயரமுடியும். நாம் ஒரு செயலைச் செய்ய வேண்டும் என எண்ணுவது பெரிதல்ல, அதைச் செயல்படுத்தி அதற்கேற்ப எல்லோரும் உழைக்க வேண்டும். கடுமையான உழைப்பிற்கு இணை எதுவுமில்லை. இப்படி நாளும் உழைக்கும் உழைப்பாளர்களின் உன்னதத்தைக் கவிஞர்கள் பாராட்டியுள்ளார்.

**‘ஒருசாண் வயிற்றை ஓம்பிட உழைத்துச்**
**சருகா யுலர்ந்த சாதியே உன்குரல்**
**நரிவாய் ஊழையாய் நாய்களின் குரலாய்**
**புரிவார் நோக்கிற் புல்லாய்ப் புழுவாய்த்**
**தெரிவோய் உம்மாற் தேடிய தேட்டம்**
**அரசாள் கோட்டைக்(கு) அடித்தள மென்பதை**
**சிந்தித் தாயா செத்துப் பிழைத்து**
**அந்தர வாழ்வின் அலைக்கல மாகி**
**வந்தவர்க் கெல்லாம் வரையுற உழைத்துத்**
**தந்தனா பாடுந் தாழ்வினைப் போக்க**

**சுரண்டுங் கைகளைச் சுக்குநூ றாக்கத்**
**திரண்டு வா இத் தேசமுன் உடமை**
**உருண்டிடு முலகெலா மோம்பிடுங் கைகள்**
**மிரண்டு வாய்பொத்தும் மேதினி உளதேள்**
**கொத்திப் புரட்டு கொட்டும் வியர்வை**
**முத்துப் பசளையை மொய்ப்புறக் கிளறிச்**
**சத்துப் பொதிந்த சமத்துவ மென்னும்**
**புத்தம் புதிய வித்தைப் புதைத்து**

*விளைவினைக் கண்டு வெற்றிகொண் டாடு*
*அழகொளி ருலக மதுவெனப் பாடு*
*உழைக்குங் கைகளி லுலகாள் செங்கோல்*
*நிலைக்கும் நாளே நேரிலாத் திருநாள்*
*திளைக்குஞ் செழிப்பிற் தேசஞ் சிரிக்கும்*
*ஒழிக்குங் கரவு ஓடும்நல் குரவு*
*அழைக்குதோ ராவி அமர உருவிலே*
*வழிவழி வந்த வறுமையற் றொழிய*
*எழு நட விரைவாய் இலட்சிய பூமி*
*உழுபவ ருடமை ஓடிவா ஒன்றாய்'*

- பரிமளா ராசதுரை, தேன்மொழி இதழ் நான்கு, ப. 6

எனக் கவிஞர் பரிமளா ராசதுரை உழைக்கும் மக்களின் உன்னதங்களைப் பாடியுள்ளார். இவர்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாக உள்ளதா என்றால் இல்லை என்பதே பதிலாகிறது. இதற்கு உரிய பதிலைக் கண்டறிந்து உழைக்கும் மக்கள் மகிழ்ச்சியாக வாழும் நாளே நன்னாளாகும்.




காதல் வாழ்க்கை சுகமான வாழ்க்கை எனப் பலர் சொன்னாலும் காதலர்களுக்கு மட்டும்தான் அதன் துயரப் பக்கம் நன்றாகத் தெரியும். காதலுக்குச் சாதியும் மதமும் எப்போதும் தடையாகவே இருந்துள்ளதைப் பார்க்க முடிகிறது. கடித வடிவில் அமைந்துள்ள கவிதை காதலர் உள்ளத்தைக் காட்டினாலும் மதங்கள் அவர்களைத் துரத்திய வண்ணம் உள்ளதை உணரமுடிகிறது.

*'அவை கண்களல்ல / இரு மீன்கள்*
*மீன்களே வலை வீசும் /*
*அதிசயமும் / உன்னிடந்தான்*

*அந்தச் சிலுவை / உன் இதயத் தருகே*
*எப்போதும் ஆடும் / அந்தச் சிலுவையில்*
*தொங்குவது / இயேசு அல்ல / நான்தான்*

*வாழ்க்கைப் பைபிளில் /*
*நான் எழுதும்/ இனிய சுவிசேஷம் நீ*
*உன் விரல்கள் / தட்டுவது*
*தட்டெழுத்துக்களை அல்ல / என் இதயத்தை*

*உன் காதலைக் / காட்டிக் கொடுத்த / யூதாஸ்*
*உன் கண்களே*

*பரலோகத்திலிருக்கிற / உன் பிதாவின் நாமத்தை*
*நான் அர்ச்சிக்கவில்லை*
*என் மனலோகத்திலிருக்கிற / மேரியின் நாமத்தையே*
*அர்ச்சிக்கின்றேன்*

*மூப்பரிடம் / இயேசுவை ஒப்புக்கொடுத்து*
*பாவத்தை / கழுவிக்கொண்டான் / பிலாத்து*

*மூத்தோரிடம் / நாம் காதலை ஒப்புவிக்க*
*எந்தப் பிலாத்து / முன் வருவான்*
*மேரீ / நம் காதலை மறுதலிக்கும்*
*பேதுருகள்தான் / எத்தனை பேர்*

*அன்பே / முடிவாக*
*மனக் கதவைத் / திறந்து விட்டோம்*
*மதக் கதவைத் / துறப்பது'*

- நஸீறா ஸாத், தூது 9, நவம்பர் 1985

எனக் கவிஞர் நஸீறா ஸாத் காதலர் உள்ளத்தைப் பாடியுள்ளார். உண்மையான காதல் என்றும் தோற்றுப் போகாது என்பதுண்மை. காதலைவிட மதம் மனிதனிடம் புரையோடிக் கிடக்கிறது. மனிதமும் காதலும் வாழ்ந்தால் சமுதாயம் சிறக்கும் என்பதுண்மை.




இலங்கையில் உள்ள பெரும்பான்மையான இனமான சிங்கள இனம் சிறுபான்மை இனமான தமிழர்களையும் தமிழையும் விரட்டும் நோக்கில் பலதரப்பட்ட காரியங்களைச் செய்கிறது. அவர்கள் செய்யும் தகாத காரியங்களைப் பொறுக்கும் மட்டும் பொறுத்த தமிழினம் பொறுக்க முடியாதபோது எதிர்த்துப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டது. சிங்கள இனமே கூரியவாள் கொண்டு எம்மைக் கொல்ல நினைத்தாலும் எம் வீரம் என்றும் குறையாது. இங்குள்ள மக்கள் அனைவரும் உரிமையுடன் ஒன்றாக இணைந்து வாழவே விரும்புகிறார்கள். பேச்சு வார்த்தைகளால் சமாதானம் பிறக்கும் என்ற நிலை பல ஆண்டுகளாக பேசப்படுகிறது. ஆனால் பயன் ஏதும் விளைந்ததாகத் தெரியவில்லை. போர்க்களத்தில் சந்திப்பதைத் தவிர வேறுவழி இருப்பதாகத் தெரியவில்லை. உங்களின் இழிசெயலை உலகம் அறியும். தமிழினமே விழித்தெழு. நம் நாட்டைக் காக்க வேண்டிய தருணமிது எனக் கவிஞர் பாடுகிறார்.

*'அரிய எங்கள் தாய் மண்ணை*
*அழித்துவிட சிங்களமே உன்*
*கூரிய வாளால் குறி வைத்தாலும்*
*குன்றாது எம்வீரம் குறைவுறாது*
*உரிமையுடன் வாழ்ந்திடவே நாம்*
*ஒன்று பட்டோம் போரிடுவோம்*
*சரிவராது மேசைப் பேச்சு*
*சமரிடவே செருக்களம் வா...*

*அறியும் உலகுன் அதர்மச் செயலை*
*அந்நியனே உனக் கடிபணியோம்*
*குறிவைத்தாய் எம் குழந்தைகள்மேல்*
*பறித்தெடுத்தாய் உயிர் பாதகியே*
*வெறிக்குண்டால் பிளந்தாய் நெஞ்சை*
*அறிவைத்தானே அதிற் சுமந்தோம்*
*முறித்தோம் உந்தன் மூடப் பேச்சை*
*முட்டாள் அரசே மூர்க்கம் தணி*

*சோலைக் குயில்கள் நாங்களின்று*
*சொத்து சுகங்கள் கூடிழந்தோம்*
*சாலையில் நாங்கள் நின்றாலும்*
*சீனச் சட்டிக் குண்டு சரித்தாலும்*
*காலனே கொஞ்சம் நில் சென்று*
*சந்திரிகா காதில் மெல்லச் சொல்*
*வாலை ஆட்டும் பேரினப் பேயை*
*வேளை பார்த்து வேங்கை வீழ்த்தும்*

*விடுதலைக்காக எழுச்சி கொள்வோம்*
*வீணர்களாக செத்து மடியோம்*
*நாடும் மொழியும் வளமும் பெருக்க*
*நாங்கள் இன்றே பேரணியாவோம்*
*கூடும் உங்கள் நாடாளு மன்றம்*
*குலைக்க எழுந்த கூற்றுவர் நாங்கள்*
*காடும் எங்கள் கதைகள் பேசும் நாளை*
*விடுதலை வேட்கையால் விளையும் ஈழம்'*

- தே.கு. சயிலா, கவிதை இதழ் ஒன்பது, ப. 12

எனக் கவிஞர் சயிலா இலங்கைத் தமிழர்கள் விழித்தெழுந்து நாட்டையும் மக்களையும் காக்குமாறு வேண்டியுள்ளதைப் பார்க்க முடிகிறது. தமிழர்களுக்குத் தனி நாடு அமையும் எனத்திடமாகப் பாடியுள்ளார். இதனால் இத்தகைய ஆற்றல் மிக்க கவிஞர்களை இந்த இதழ் அடையாளம் கண்டு அவர்கள் கவிதைகளை வெளியிட்டுள்ளது.




இலங்கையில் நிகழ்ந்த இனப்போரினால் குடும்ப வாழ்வையும் காதல் வாழ்வையும் கணக்கற்ற இளைஞர்கள் தியாகம் செய்துள்ளனர். அவ்வகையில் இங்குள்ள கவிதை அத்தகைய இளைஞரின் வாழ்வைச் சொல்கிறது. போர்க்களத்தில் இருக்கும் இளைஞர் காதலைத் துறந்து நாடு காக்கும் பணியில் மூழ்கியிருக்கிறார். அவ்வேளையில் எழுதும் கவிதை தன்னைப் பற்றி இல்லாமல் என் மாமிசமே இந்நாட்டு விடுதலைக்குக் கடைசியாக இருக்க வேண்டும். எனக்குப் பிறகு யாரும் போரில் ஈடுபட்டு உயிர்த் தியாகம் செய்யக்கூடாது. அதாவது போர் முடிவுக்கு வரவேண்டும் என விரும்புகிறார். அதோடு மட்டுமல்லாமல் காலிழந்த தன் தங்கையையும் முதிர்ந்த பெற்றோர்களையும் கவனித்துக் கொள்ளும்படி அன்புக் கட்டளை இடுகிறார். இந்த அளவிற்கு இனப்போர் உள்ளதைக் காதல் கவிதையிலும் பாடமுடியும் எனக் கவிஞர் காட்டியுள்ளார்.

*',..கிள்ளாமல் கிள்ளும்-உன்*
*மந்திரப்புன்னகை இனிக்கிறது*
*வெயில் வதைக்கும்*
*நடுப்பகலில் ஆயுதச் சுமப்பால்*
*களைப்பேகும் என் திரேகம்*
*நிலவெறிக்கும் இரவுகளில்-உன்*
*நினைவுகளால் துளிர்க்கும் துடிக்கும்*
*என் உயிரின் நீட்சியை / நீளப்படுத்துபவளே*
*விடிந்தால் கடுஞ்சமர் / வன்மை நீட்டும்*
*உன்னிடம் இம்முறை / விடை பெறவில்லை*
*தெரியவில்லை / பிரிவிற்கான ஒத்திகையோ*

*நிர்ப்பந்தங்கள் / இதயத்தைப் பிழிகையில்*
*அழிவுகளை இயக்க / உடன்படுகிறேன்*
*எனக்காக விகாரை செல் /*
*புத்தனிடம் மன்னிப்புக் கேள்*
*உன் ஆசியும் பிராத்தனையும் / நீர் நிறைத்து*
*வழியனுப்பும் விழிகளும் / தழுவாமல் தழுவும்*
*திணவூட்டி நகர்த்தும்*

*வெளிவேச நாயகரின் / ஈரப்பார்வையுமே எனை*
*வரட்டுத்தவங்கள் நாளை /*
*எதிரணியையும் எங்களை யும்*
*காவு கேட்டுக் / காத்திருக்கின்றன*

*வீழும் சேனையில் / எனதுயிரும் வீழுமாயின்*
*எனதுடலே வெண்புறாவின் பெயருக்கான*
*கடைசி (நர) மாமிசமாயிருக்கட்டும்*

*என் தேசதி தலைமைகளே*
*ஒன்றுணர் வீர எதிரணி உயிர்குடித்து*
*சேனைகள் வெல்லலாம்*
*யுத்தம் என்றுமே வெல்லாது*

*காதலி / காலிழந்த என் / தங்கையையும்*
*முதிர்வுடைத் தாயையும்*
*கவனமாய்ப் பார்த்துக் கொள் (வாயா)*
*என்றாவது / வெண்புறாக்கள் விளையாடும்*
*எம் தாய் நாட்டில் / மீண்டும் ஜனிப்போம்*
*-தந்தியொன்று முந்திக் கொண்டது மடலை'*

- நிலா மகள், வடம் ஐந்தாம் இதழ், ப. 27

எனக் கவிஞர் நிலா மகள் பாடியுள்ள கவிதை வாசகர் கண்களைக் குளமாக்குகிறது. இந்த அளவிற்கு இனப்போர் வன்மம் கொண்டிருந்ததைப் பார்க்கமுடிகிறது. காகிதக் கவிதையே வாசகர் கண்களைக் குளமாக்கும்போது களத்தில் இருந்தவர் நிலைமை என்ன என்பதைச் சிந்திக்கவே மனம் நடுக்கம் கொள்கிறது



kotti.thirumuruganadam@thaiveedu.com

# மொழிபெயர்ப்புக் கலை

- அன்னலட்சுமி இராஜதுரை

உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கிவிட்டது எனக் கூறப்படும் இன்றைய காலகட்டத்தில், ஆய கலைகள் அறுபத்து நான்கினோடு மொழிபெயர்ப்பினையும் ஒரு கலையாகக் கொள்ளலாம் என்று எண்ணுமளவிற்கு இன்று மொழிபெயர்ப்புக் கலை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. உலகில் எந்த மூலையில் வாழ்ந்தாலும், உலக நடப்புகளைத் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு நிலை இருக்கிறது எனலாம். அது நாட்டு நடப்பு அல்லது அரசியல் நிலை என்பதோடு மட்டுமன்றி விஞ்ஞானம், மருத்துவம், தொழில்நுட்பம், வர்த்தகம், கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு என்று விரிந்து செல்லுவதையும் அவதானிக்க முடியும். மனிதரின் கருத்துப் பரிவர்த்தனைக்கு ஆதாரமாக விளங்கும் மொழியே அவர்களது வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு விடயங்களையும் அறிந்து, புரிந்து செயற்பட உயிர்நாடியாகவும் விளங்குகின்றது.

உலகில் ஆறாயிரத்துக்கும் மேலான மொழிகள் பேசப்படுவதாகக் கூறப்படுகிறது. காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்பவும் மக்களின் வரலாறு, பண்பாடு, கலாசாரம், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தேவைக்கேற்பவும் மொழிகள் பண்டைக்காலத்தில் மெல்ல மெல்ல உருப்பெற்று பின்னர் கால வளர்ச்சிக்கு ஏற்ப வளர்ச்சிகள், மாற்றங்களையும் கண்டு இன்று பேசப்பட்டு வருகின்றன. இவ்விடத்தில் செம்மொழிகள் என அதாவது தொன்மை, தனித்துவம், பொது குணாம்சங்கள், இலக்கியச் சிறப்பு, நடுநிலை, சுயாதீனம் உட்பட பதினொரு தகைமைகளைக் கொண்ட மொழிகள் என கிரேக்கம், ஹீப்று, சீனம், லத்தீன், பாரசீகம், சமஸ்கிருதம், தமிழ் ஆகியன விதந்தேற்றப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

பொதுப்படையாகக் கூறுவதானால் மொழிபெயர்ப்பு என்பது மக்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவும், பரஸ்பரம் கருத்துக்களையும் சிந்தனைகளையும் வாழ்க்கை முறைகளையும் புரிந்து கொள்ளவும் உதவுகின்ற ஒரு செயற்பாடு என்றே கூறலாம். அத்துடன் மொழிபெயர்ப்பானது விஞ்ஞானம், தொழில்நுட்பம், மருத்துவம் போன்ற இன்னோரன்ன துறைகளில் விளங்கும் மகத்தான ஆய்வுகள் மற்றும் கண்டு பிடிப்புகள் போன்றவற்றைப் புரிந்து, பகிர்ந்து கொள்ள மகத்தானதோர் தொடர்புச் சாதனமாகவும் விளங்குகின்றது.

மொழிபெயர்ப்புகள் இன்றேல் பெறுமதி மிக்க கண்டுபிடிப்புகள் யாருக்கும் எட்டாததாக அமைந்து விடுவதும் உண்டு. மேலும் அரசியல் களத்தில் மொழிபெயர்ப்பு அவசியமான தொன்றாகக் கருதப்படுகிறது. மொழி பெயர்ப்பில் சிறிது மயக்கம் தோன்றினாலும் அது தவறான புரிதலையும் தடுமாற்றத்தையும் தோற்றுவிக்கலாம்.

மொழிபெயர்ப்பு என்பது ஓர் இலகுவான பணி அல்ல. சுயமான படைப்பைக் காட்டிலும் மொழிபெயர்ப்பு ஒரு கடினமான பணியாகும். பொதுவாக மொழிபெயர்ப்பாளரை எடுத்துக் கொண்டால் அவர் இரு மொழியிலும் நிறைந்த புலமையும் சொல் வளமும் உடையவராகக் காணப்படவேண்டும். அத்துடன் அவர் இரு மொழிகளுக்கும் உரிய கலை, பண்பாட்டு அம்சங்களை நன்கு அறிந்தவராகவும் இருக்கவேண்டும். இத்தகுதிகள் இருப்பின் ஒருவர் ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளராக விளங்க முடியும். மொழிபெயர்ப்பு முயற்சி பூரணத்துவமாக அமைவதற்கு மொழிபெயர்க்க எடுத்துக் கொண்ட பொருள் குறித்த பின்னணி பற்றிய அறிவு இருத்தல் அவசியமாகும். மேலும் மொழிபெயர்ப்பில் கூறப்படும் பொருளின் தொனியையும் அவதானித்து மொழிபெயர்ப்பு செய்தல் அவசியமாகிறது. சாதாரணமாகத் தாய்மொழியை மட்டும் கற்ற ஒருவர், ஒரு மொழிபெயர்ப்பு விடயத்தை வாசிக்கின்றபோது, ஒரு மொழிபெயர்ப்பினைப் படிக்கிறோம் என்ற உணர்வினை மறந்து எளிதாகவும் படிக்கத் தூண்டுவதாகவும் அவ்மொழி பெயர்ப்பு அமையுமாயின் அதுவோர் சிறந்த மொழிபெயர்ப்பு எனக் கூறலாம்.

தற்காலத்தில் உலகெல்லாம் விஞ்ஞானம், சட்டம், பொருளியல், மருத்துவம், கணக்கியல், தொழில்நுட்பம், செய்தித்தகவல் துறை எனப் பல்வேறு துறைகளிலும் மொழிபெயர்ப்புகள் இடம்பெறுகின்றன. மொழிபெயர்ப்புகள் பல்வேறு துறை

சார்ந்த பொருளிலும் அவற்றிற்கேயுரிய கலைச் சொற்களின் காரணமாகவும் அவை மூலமொழியில் இருந்தும் வேறுபட்டும் காணப்படலாம். அரசியல் மட்டத்தில் மட்டுமன்றி, பொதுமக்கள் மட்டத்திலும் உலகத் தொடர்புகள் விரிவடைந்து காணப்படும் இன்றைய காலகட்டத்தில் செய்தித் தகவல் பரிமாற்றங்களுக்கும் தொடர்புகளுக்கும் மொழிபெயர்ப்பு மிக இன்றியமையாததாக விளங்குவதை நாமறிவோம். மொழிபெயர்ப்பு அதி முக்கியத்துவம் பெற்றுவிட்ட இந்நிலையில் செய்திப்பத்திரிகைகள் உட்பட தகவல் ஊடகங்களின் பணி பெரும் முக்கியத்துவம் பெற்றிருப்பதும் வெளிப்படை.

## ஆங்கிலத்தின் முக்கியத்துவம்:

இவ்விடத்தில் உலகப் பொது மொழியாக விளங்கும் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை யார்தான் மறுப்பர்? பரவலாக உலகத்தினர் அறிந்த மொழியாக ஆங்கிலம் கோலோச்சுவதால் உலக விடயங்கள் யாவும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படுவது யாவரும் அறிந்த விடயம். எனவே, ஆங்கில மொழித் தகைமை கொண்டவர்கள், இம்மொழிமூலமாக பல்வேறு நாடுகளின் விடயங்களையும் அறிந்திருப்பர். இற்றைக்கு 70 வருடங்களுக்கு முன்பே பாவனைக்கு வந்த பல முக்கிய ஆங்கிலச் சொற்களுக்கு பொருத்தமான தமிழ்ச் சொற்கள் நம் தமிழ் அறிஞர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவை ஊடகங்களினால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், தற்காலத்தில் ஆங்கில மொழியின் தவிர்க்க முடியாத தேவை காரணமாக, பொதுமக்கள் மத்தியில் ஆங்கிலச் சொற்கள் பல தமிழ்ச் சொற்களைப் போல் உருமாறி, அவை தமிழ் ஊடகங்களிலும் உபயோகிக்கப்பட்டு வருவதைக் காணலாம்.

'பிறமொழிச் சொற்களைத் தமிழில் சொல்லும்போது, தமிழ் ஒலி அமைப்புக்கேற்ப சொல்லுவதே முறை. பிறமொழி அறிவில்லாது, தனித்தமிழ் அறிந்தவர்கள் இதனைத் திறமையாகச் செய்கின்றனர்' என (அமரர்) அறிஞர் ச. பேரின்பநாயகம் (இற்றைக்கு 60 வருடங்களுக்கு முன் கணேசையர் நினைவு மலரில்) 'மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும்' என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதையும் இங்கு சுட்டிக்காட்டலாம். இக்கருத்துக்கு உதாரணமாக, இறைவர் (டிரைவர்), இறப்பர் (ரப்பர்), கோப்பி, கலன் போன்றவற்றை எடுத்துக் காட்டியுள்ளார்.

தற்காலத்தில் மேற்குறிப்பிட்ட சொற்கள் வழமையான பாவனையில் உள்ளன என்பதும் தெரிந்ததே. நாட்டுக்கு நாடு, பிரதேசத்திற்குப் பிரதேசம் மரபுகளும் கலாசாரமும் வேறுபடும் நிலையில், மொழிபெயர்ப்பாளர் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்புகளைச் செய்யாது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருள் விளங்கும் வகையில் மொழிபெயர்ப்புக்களைச் செய்தல் வேண்டும் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

## பாரதி கூற்று:

மொழிபெயர்ப்பு என்ற கோணத்தில் சிந்திக்கின்ற போது 'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்னும் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கூற்று எவருக்கும் ஞாபகத்தில் வராமல் போகாது. எம்மொழியிலும் இருக்கக்கூடிய நல்லறிஞர்களின் சாஸ்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்க்கப்பட வேண்டும் என்ற அவரது விசால நோக்கு, தமிழுக்கு வளம் சேர்க்க வேண்டும் என்னும் பேரார்வத்தைப் புலப்படுத்துவதாக அமைவதுடன் அத்துறையில் ஈடுபடத் தூண்டும் ஒன்றாகவும் விளங்குவதை உணரலாம்.

பாரதி ஒரு சிறந்த கவிஞராக மட்டுமன்றி சிறந்ததொரு தமிழ்ப்பத்திரிகை முன்னோடியாகவும் விளங்கியதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பன்மொழிப் புலமை மிக்க அவர் 1904-ம் ஆண்டு தமிழ்ப்பத்திரிகை உலகில் புகுந்து காலப்போக்கில் சுதேசமித்திரன், கர்மயோகி, விஜயா, சக்கரவர்த்தினி, சூரியோதயம் போன்ற பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். புதினங்கள், கட்டுரைகள் என்பதோடு நில்லாது நிறைய மொழிபெயர்ப்புகளையும் அவர் மேற்கொண்டவர். அப்போது, ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ் வார்த்தைகளைக் கண்டுபிடிப்பதார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பரவலாக, கல்வியறிவு குறைந்தளவில் இருந்திருக்கக்கூடிய ஒரு காலகட்டத்தில், பத்திரிகையாளர் என்ற வகையில், ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடிக்க தாம் பட்ட சிரமங்களையும் அவர் எடுத்துக் கூறத் தவறவில்லை. உதாரணமாக: 'மெம்பர்' என்ற ஆங்கில வார்த்தைக்கு 'அங்கத்தவர்' அல்லது உறுப்பினர் என்ற வார்த்தையினை நாம் சாதாரணமாகவே இப்போது உபயோகிக்கிறோம். ஆனால், இவ்வார்த்தைக்கு பொருத்தமாக தமிழ் வார்த்தையைக் கண்டு பிடிப்பதில் 20-ம் நூற்றாண்டு முற்பகுதியில் தாம்பட்ட சிரமத்தை விளக்குகையில் 'இந்த வார்த்தைக்குச் சமமான தமிழ் வார்த்தை எனக்கு அகப்படவில்லை. இது ஆச்சரியத்திலும் ஆச்சரியம் 'அவயவி' சரியான வார்த்தையில்லை. 'அங்கந்தான்' சுட்டி வராது 'சபிகன்' சரியான பதந்தான். ஆனால் பொது சனங்களுக்கு தெரியாது.

யாரேனும் தமிழ்ப் பண்டிதர்கள் நல்ல பதங்கள் கண்டுபிடித்துக் கொடுத்தால் புண்ணியமுண்டு. அரைமணி நேரம் யோசித்துப் பார்க்கிறேன். 'உறுப்பாளி' என எதை எல்லாமோ நினைத்தேன். ஒன்றும் மனதுக்குப் பொருத்தமில்லை. என்ன செய்யலாம். கடைசியில் 'மெம்பர்' என்றே எழுதிவிட்டேன். இன்னும் ஆற அமர யோசித்து சரியான பதங்களை கண்டுபிடித்து மற்றொருமுறை கூறுகிறேன் எனக் கட்டுரையில் தெரிவித்திருக்கிறார். இவ்விதம் பல சிரமங்களை அவர் எதிர்நோக்கி இருக்கலாம். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்னும் அவரது வேணவாவில் இலக்கியப் பண்புகள் முக்கியத்துவம் பெறுவதை உணர முடியும்.

பிற நாட்டு அறிஞர்கள், கவிஞர்கள் ஆகியோரின் சிறந்த இலக்கியப் படைப்புகளையும், உள்ளூரிலே ஆக்கப்பெற்ற சிறந்த பிறமொழி இலக்கியங்களையும் மொழிபெயர்த்து தமிழுக்கு வளம் சேர்த்த அறிஞர்கள் தமிழ் நாட்டில் பலர் உள்ளனர். நம் நாட்டிலும் சிலர் உள்ளனர். இலக்கிய மொழிபெயர்ப்பு எப்படி இருக்க வேண்டும்? அதனை மொழிபெயர்க்

கும் தகுதி யாருக்கு உள்ளது? அதில் வெற்றி பெறுவது எப்படி? என்பது குறித்து அறிஞர்கள் சிலர் தெரிவித்த கருத்துகள் சிலவற்றை இங்கு நோக்குவதும் பொருத்தமே. இக்கருத்துகள் முன்னர் தமிழ்நாடு 'தீபம்' சஞ்சிகைக்கு அளிக்கப்பட்டவை என்பதனையும் குறிப்பிட வேண்டும். 'எதை மொழிபெயர்க்கிறோம் என்பதைப் பொறுத்தே மொழிபெயர்ப்பின் வெற்றி தங்கியிருக்கிறது' என்று குறிப்பிடும் பேராசிரியர் சீனிவாச ராகவன் பின்கண்டவாறு மேலும் குறிப்பிடுகிறார்:

*'பொருளாதாரம், விஞ்ஞானம் போன்ற கலை நூல்களை மொழிபெயர்ப்பது வேறு. இலக்கிய மொழி பெயர்ப்பு வேறு. இலக்கிய மொழிபெயர்ப்பு வெற்றி பெற வேண்டுமானால் மொழிபெயர்ப்பாளர் சிறந்த படைப்பு ஆற்றல் உள்ளவராகவும் படைப்பாற்றலில் தனித்துவம் உள்ளவராகவும் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். மேலும் அவர் மொழிபெயர்க்கப்போகும் துறையில் ஆழ்ந்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அந்தந்த மொழிகளின் மரபு, அந்தந்தச் சமுதாய சூழ்நிலை, அந்தந்த இலக்கிய கர்த்தாக்களின் சூழ்நிலை, இத்தனையும் ஒன்றாக அறிந்த பின்னரே மொழிபெயர்ப்பு பணியை ஆரம்பிக்க வேண்டும். நம்மிடையே உள்ள தனித்துவம் அல்லது தனித்தன்மையை அறவே நீக்கிவிட்டு மொழிபெயர்க்கப் போகும் இலக்கியத்தைப் படைத்த கர்த்தாவாக அவர் தன்னை மாற்றிக் கொண்டு அந்த இலக்கிய கர்த்தாவே நம்முடைய மொழியில் நின்று எழுதினால் எப்படி எழுதுவாரோ அப்படி மொழிபெயர்க்க வேண்டும். இம்முயற்சி கூடுவிட்டு கூடுபாயும் ஒரு முயற்சியாகும்.*

*தனித்தன்மை உள்ள ஒரு கவிஞர் இன்னொரு கவிஞரோடு ஒன்றுபட முடியாது. அதில் வெற்றி பெற்று தன்னுடைய தனித்தன்மையை வென்று எவர் ஒருவர் மொழிபெயர்ப்பு செய்கின்றாரோ அப்போது அவர் வெற்றி பெறுகிறார் என்பது உறுதி'* எனக் குறிப்பிடுகிறார்.

## நாவல் மொழிபெயர்ப்பு:

நாவல் இலக்கியத்தை மொழிபெயர்க்கையில் மொழிபெயர்ப்பாளர் கருத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களை நாவல் ஆசிரியர் ஆர். ஷண்முக சுந்தரம் குறிப்பிடுகையில், *'மூல ஆசிரியரின் உள்ளக்கிடக்கை இன்னதென்பதை இனங்காணும் பண்பு இன்றியமையாதது. மூல ஆசிரியரே மொழிபெயர்க்கப்படும் மொழியின் எழுத்தாளரானால் எப்படி எழுதுவாரோ அப்படி எழுத வேண்டும். கூடிய அளவில் இரு மொழிப் பண்புகளையும் வாழ்க்கை இலக்கிய மரபுகளையும் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். முதலில் எழுதும் போது தப்பும் தவறும் இல்லாமல் அழித்தல், திருத்தம் இன்றி எழுதும் பழக்கம் கைவரப் பெற்றால்த்தான் சிந்தனைப் போக்கில் ஒருமையும் ஒழுங்கும் உண்டாகும்'* என்கிறார்.

நீதிபதி எஸ். மகராஜன் நாவல் மொழிபெயர்ப்பு குறித்துப் பின்கண்டவாறு குறிப்பிடுகிறார் *'பிரெஞ்சுக்காரர்கள் ஆயிரக்கணக்கான வேற்றுமொழி நூல்களைப் பிரெஞ்சு மொழியில் பெயர்த்திருக்கிறார்கள். அதைப் போலவே பிரெஞ்சு மொழியில் இருக்கும் படைப்புகளை அந்நிய மொழியில் தர உதவியிருக்கிறார்கள். இந்தக் கொடுக்கல் வாங்கல் மூலமாக பிரெஞ்சு உரைநடை மிகுந்த ஊட்டம் பெற்றிருக்கிறது. தமிழ் மொழிக்கு ஊட்டம் கொடுக்க விரும்புகிறவர்கள் மொழிபெயர்ப்பு வேலைகளில் இறங்கித்தான் ஆக வேண்டும். இந்த நோக்கத்திலேயே நான் ஷேக்ஸ்பியருடைய ஹம்லெட், கிங் லியர், மாட்பெட் ஆகிய மூன்று நாவல்களையும் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறேன்.'*

தமது சொந்த இலக்கியப்படைப்புகளுடன் இருபதுக்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டு பெயர் பெற்ற முற்போக்கு இலக்கிய ஆளுமையான தலாத்துஓயா கே. கணேஷ் அவர்களது மொழிபெயர்ப்பு குறித்த கருத்தும் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது. 'மொழிபெயர்ப்பாளன் மொழி பெயர்க்கப்படும் இரு மொழி சார்ந்த சிந்தனைகளிலும் நல்ல பயிற்சி பெற்றிருக்க வேண்டும். தவிரவும் மொழி பெயர்க்கப்படும் நூல் எழுதப்பட்ட நாட்டின் மொழி மரபுகள் மற்றும் வரலாறு, சமூக அமைப்பு அனைத்திலும் ஓரளவேனும் அறிமுகமானவனாக இருக்க வேண்டும். இவற்றைப் பெற பல நூல்களில் பயிற்சியும் பல மக்களிடையே பெற்ற பயிற்சி அனுபவமும் வேண்டும்' என்று குறிப்பிடும் கே. கணேஷ் *'இந்த இலக்கிய மொழிபெயர்ப்பு என்பது கூடுவிட்டுக் கூடுபாயும் தந்திரத்தை ஒத்தது'* என்றும் குறிப்பிடுவார். அவரின் கூற்றினை அப்படியே தருகிறேன்.

*'கூடுவிட்டுக் கூடுபாய்ந்து, உருமாறி, உடை மாறி, உணர்வுகளை ஒருமைப்பட உணர்த்தி, மூல ஆசிரியரின் கருத்தை, கற்பு நிலை மாறாது காப்பாற்ற வேண்டிய கடமை உள்ளவனாக மொழிபெயர்ப்பாளன் இருக்க வேண்டும். மொத்தத்தில் இந்தக் கூடுவிட்டுக் கூடுபாயும் பணியில், யாருக்காக இலக்கியம் ஆக்கப்படுகின்றதோ, அவர்களுக்கு மூல ஆசிரியரின் உட்கருத்தை மொழிபெயர்ப்பாளன், அனைவரும் புரிந்து கொள்ளும் நடையில் சுவைபட உணர்த்துவதே பெரும் கடமையாகும். இதற்கு நிறைய சரித்திர ஞானமும், மொழிபெயர்க்கப்படும் மக்களின் பழக்க வழக்கங்கள் பற்றியும் கற்றுத் தேர்ந்திருக்க வேண்டும்'* எனக் குறிப்பிட்டிருக்கிறார். (இது, கே. கணேஷ் அவர்கள் 'ஞானம்' சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணலில் இருந்து எடுக்கப்பட்டது.)

மேற்கண்ட கருத்துகளைத் தொகுத்து நோக்குகின்ற போது, சிறந்த மொழிபெயர்ப்பு, தேர்ந்த நுட்பம் வாய்ந்த ஒரு கலை என்பதும், ஒரு சிறந்த மொழி பெயர்ப்பாளர், உள்ளத்தில் ஒரு கலைஞராகவும் இருக்க வேண்டும் என்பதும் புலனாகிறது.



annaluxmi.rajadurai@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: +1-416-849-0594*** ***Tel: +1-416-857-6406***




**லெனினின் மார்க்சிய ஆய்வு – ரஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சி:**

விளாதிமிர் இலீயிச் லெனின் (1870-1924) ரஷ்யப் புரட்சிக்குத் தலைமை தாங்கிய புரட்சியாளர். அவர் மார்க்சிய அரசியல் செயற்பாட்டாளர் என்பதோடு ஒரு கோட்பாட்டாளரும் (Theorist) அறிவின் உற்பத்தியில் பங்கெடுத்த சிந்தனையாளருமாவர். 20-ம் நூற்றாண்டு மார்க்சியத்தில் அவருக்கு நிலையான இடம் ஒன்று உள்ளது. மார்க்சியத்திற்கு அவர் செய்த பங்களிப்பு அவரை மார்க்ஸ், எங்கல்ஸ் ஆகிய இருவருக்கும் அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படும் ஒருவராக்கியுள்ளது. தத்துவம், அரசியல், பொருளாதாரம், சமூகக் கோட்பாடு ஆகியவற்றில் லெனின் மிகுந்த ஈடுபாடு செலுத்தியதோடு அவற்றை நடைமுறையில் பிரயோகிப்பதிலும் அக்கறை கொண்டிருந்தார். அவரது தத்துவார்த்த கோட்பாட்டு எழுத்துக்களில் பல கண்டன முறையில் அமைந்தவை. இதற்கான காரணம் யாதெனில் அவர் தமது சமகாலத்தில் ஐரோப்பாவில் அறிவுசார் தளத்தில் விவாதத்திற்குரியனவாக இருந்த சிந்தனைப் போக்குகள் யாவற்றுக்கும் எதிராக மார்க்சியத்திற்காக வாதிட்டவர். அவர் ஆதரித்துப் பேசிய மார்க்சியம், மார்க்சியத்தின் பழைமை மரபாக (Orthodox Marxism) விளங்கியது எனலாம். அவர் மார்க்சிய புரட்சிக் கோட்பாட்டைப் புத்தாக்கமான முறையில் விளக்கினார், இதனால் அவரது கருத்துக்களை எதிராளிகளின் கண்டனங்களை மறுப்பதன் மூலம் விளக்கியுரைக்கும் தேவை இருந்தது, பிற மார்க்சியர்களுடனும் அவர் கண்டன முறை விவாதத்தில் ஈடுபட்டார். இவ்விவாதங்களின் ஊடாக லெனின் கூர்மையான சிந்தனையையும் நுண்மதியையும் கண்டுணர முடிகிறது. 20-ம் நூற்றாண்டு மார்க்சிஸ்ட் புலமையாளர்கள் எழுதிய தத்துவம், சமூகவியல், அரசியல் பொருளாதாரம், அரசியல் விஞ்ஞானம், வரலாறு சார்ந்த எழுத்துக்களில் லெனின் அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் ஒருவராக விளங்குவதன் காரணம் இதுவேயாகும்.

1905-ம் ஆண்டில் லெனின் எழுதி வெளியிட்ட 'ரஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சி (The Development of Capitalism in Russia) என்னும் நூல் அவரது ஆக்கங்களில் முக்கியமான ஒன்றாகும். இந்த ஆய்வை 'ஸ்தூலமான வரலாற்று நிலை' (Concrete Historical Situation) ஒன்றினைப் பற்றிய ஆய்வு என மார்க்சிஸ்டுகள் பாராட்டிக் கூறுவதுண்டு. இந்நூலின் ஆங்கிலப் பதிப்பு 750 பக்கங்களைக் கொண்டதாகும். மூன்று நான்கு ஆண்டுகளாக அவர் அரும்பாடுபட்டு நிகழ்த்திய கோட்பாட்டு ஆய்வினதும் சமூக ஆய்வினதும் (Social Research) அறுவடையாக அமைந்ததே இந்த ஆய்வு எனலாம். சமூக விஞ்ஞானத்துறையில் நிகழ்த்தப்பட்ட உயர்தரமான Ph.D பட்ட ஆய்வேடுகளிற்கு ஒப்பான தன்மையினை இந்த



ஆய்வு நூலில் காண முடிகிறது. இந்த ஆய்வு நூலைப் படிப்பதன் மூலம் சமூக விஞ்ஞான மாணவர் கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் எவை?

ஓர் ஆய்வைத் தொடங்கும்போது ஆய்வுக்காகத் தேர்ந்தெடுத்த விடயப்பொருள் சமூக மாற்றம் பற்றிய வரலாற்றுச் செல்நெறியை (The Historical Process of Social Trasformation) புரிந்து கொள்வதற்கு உதவவேண்டும்.அல்லாதவிடத்து அப்பொருள் பற்றிய ஆய்வு நிறைவுடையதாக அமைவதில்லை என்பதே லெனினின் இந்த ஆய்வு நூல் கற்றுத் தரும் முக்கிய பாடமாகும். மார்க்சிய சமூக விஞ்ஞானிகள் பொதுவாக நுண்நிலைச் சமூகப் பிரச்சினைகளில் (Micro-Level Social Problems) அக்கறை செலுத்துவதில்லை. அவர்கள் பருநிலை வரலாற்றுப் பிரச்சினைகளிலேயே (Macro-Historical Processes) கூடியளவு அக்கறை காட்டுவதுண்டு. மார்க்சியவாதிகள் சமூகமும் வரலாறும் பற்றிய பிரதான மார்க்சியக் கோட்பாடாக வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தையே கொள்வது இந்தப் போக்கிற்குப் பிரதான காரணமாகும். ரஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி பற்றிய லெனினின் ஆய்வு,

- உற்பத்தி முறைகள் (Modes of Production)
- உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளும் (Forces and Relations of Production)

- சமூக வர்க்கங்களின் உருவாக்கம்
- வர்க்க முரண்பாடுகளும் உற்பத்தி முறையின் மாறுதலும் (Class conflict and Transition of mode of Production)

ஆகிய கருத்தாக்கங்கள் பற்றியதாகும். இக் கருத்தாக்கங்கள் பருநிலை வரலாற்றுக் கருத்தாக்கங்களே (Macro-Historical Themes) என்பது தெளிவானது. ரஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி என்னும் விடயப்பொருள் ஒரு பொதுவான பருநிலைக் கருத்தாக்கமும் அன்று, அது மார்க்சியத்துக்கே உரித்தான (Specific and Peculiar) கோட்பாடான வரலாற்றுப் பொருள்முதல்வாதம் சார்ந்தது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ரஷ்யாவின் முதலாளித்துவம் பற்றிய ஆய்வின் மையமான பிரச்சினை யாது என்பதை லெனின் தமது நூலின் முன்னுரையில் அழகாக வரையறை செய்துள்ளார். முதலாளித்துவ வளர்ச்சி அங்கே 'எவ்வாறு ரஷ்ய முதலாளித்துவத்திற்கு உள்நாட்டில் ஓர் சந்தையை உருவாக்குகிறது' (How a Home Market is Being formed for Russian Capitalism) என்பதை தாம் எடுத்துக் காட்டியிருப்பதாக அவர் கூறுகிறார். (லெனின் (1905) 1956;1). இது பற்றி மேலும் கூறும் அவர் முதலாளித்துவத்திற்கான உள்நாட்டுச் சந்தையை உருவாக்குதல் என்னும் விடயம் ரஷ்ய அரசியல் பொருளாதாரச் சிந்தனையாளர்களிடையே விவாதத்திற்குரிய விடயமாக இருந்துள்ளது எனக் குறிப்பிட்டார். லெனின் உள்நாட்டுச் சந்தை என்னும் விடயத்தை ஒரு கோட்பாட்டுப் பிரச்சினையாக மட்டுமன்றி ஸ்தூலமான பிரச்சினை (Concrete Problematic) எனவும் கருதினார். இந்த விடயத்தை விரிந்த வரலாற்றுச் செயல்முறைகளின் (Broad Historical Processes) பின்புலத்தில் வைத்து நோக்குதல் வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். 'வரலாற்றுச் செயல்முறைகள்' என இங்கே குறிப்பிடப்படுவது ரஷ்யாவின் உள்நாட்டுச் சந்தையை (Domestic Market of Russia) அன்று, 'முதலாளித்துவத்தின் வளர்ச்சி' (Development of Capitalism) என்ற பொதுப்பட்ட செயல்முறை பற்றியேயாகும். இதனால் தான் லெனின் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட விடயம் மார்க்சியம் சார்ந்த கோட்பாட்டுப் பிரச்சினையாக அமைந்தது.

இனி நாம் மார்க்சிய முறையியல் வகைமைகளான 'முழுமை' என்பதையும் ஒரு விடயப்பொருள் பற்றிய 'ஸ்தூலமான ஆய்வு' (Concrete Study) என்பதையும் லெனினுடைய ரஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி பற்றிய ஆய்வினைப் பற்றிய உரையாடலில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம். லெனின் ரஷ்யாவின் நிலமானிய உற்பத்திமுறை (Feudal mode of Production) முதலாளித்து உற்பத்தி முறையாக மாற்றம் பெற்றதையே இந்நூலில் ஆராய்ந்தார். அவருடைய ஸ்தூலமான ஆய்வு ரஷ்ய முதலாளித்துவம் அந்நாட்டின் நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் எவ்வாறு ஊடுருவிப் பரந்தது என்பதை ஆராய்கிறது. முதலாளித்துவம் கைத்தொழில், விவசாயம் ஆகிய இருதுறைகளிலும் பரவியதை அவர் விபரிக்கிறார். லெனின் அவர்களின் மார்க்சிய முறையியலின் இரண்டாவது அம்சம் இதுவாகும். மூன்றாவதாக ரஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சி என்னும் நூல் கோட்பாட்டு ஆய்வாக மட்டுமன்றி அனுபவம் சார்ந்த விடய ஆய்வாகவும் (Empirical Case Study) அமைந்துள்ளது. லெனின் முன்வைக்கும் ஆய்வுப் பிரச்சினை (Research Problem) அடிப்படையில் ஒரு மார்க்சியக் கோட்பாட்டுப் பிரச்சினையாகும். அவர் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட கோட்பாட்டுப் பிரச்சினையை முதலாளித்துவ உற்பத்தி முறை என்ற வகைமைகளைக் கொண்டு (Categories of the Capitalist mode of Production) வரையறை செய்கிறார். அக்கோட்பாட்டுப் பிரச்சினையை ஸ்தூலமான விடய ஆய்வாக அவர் முன்னெடுக்கிறார். ரஷ்யாவின் நகரப்பகுதிகளிலும், கிராமப்புறங்களிலும் எவ்வாறு முதலாளித்துவம் பரவியது என்பதே அவ்விடய ஆய்வாகிறது. இந்த ஆய்வின்போது லெனின் பிறபொருளியலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்தும் அரசாங்க திணைக்களங்களின் அறிக்கைகளில் இருந்தும் ஏராளமான தரவுகளைத் தொகுத்துக் கொள்கிறார். இவை இரண்டாம் நிலை அனுபவத்தரவுகளாக (Secondary Empirical Data) அவருக்குப் பயன்படுகின்றன. நில உடைமையின் தன்மையும் போக்கும், குடியான்களின் வருமான நிலை (Peasant Income Levels), விவசாயக் கூலித் தொழிலாளர்கள், குடியான்கள் உடைமையாக எத்தனை கால்நடைகளை வைத்திருந்தனர், அவர்கள் உடைமை கொண்டிருந்த விவசாயக் கருவிகள் - உபகரணங்கள் எத்தனை ஆகியன பற்றியனவாக அவர் தொகுத்த தரவுகள் அமைந்தன. மேற்தோற்றத்தில் பார்த்தால் ரஷ்யாவின் கிராமப் புறங்களில் ஏற்பட்ட மாற்றம் குறித்த ஓர் அனுபவவாத - நேர்க்காட்சிவாத ஆய்வினை நிகழ்த்தினார்; அது காரண - காரிய (Casual) விளக்கமுறையில் அமைந்தது எனத் தோன்றலாம். ஆனால் உண்மை அதுவன்று, லெனின் தமது விளக்கத்தை காரணகாரிய விளக்க (Explanation) முறையில் மட்டும் குறுக்கி, அதனை நேர்க்காட்சிவாதத் தன்மையுடையது ஆக்கவில்லை. அவர் தமது ஆய்வை 'கோட்பாட்டுப் புரிதல்' (Theoretical Understanding) என்ற உயர் நிலைக்கு எடுத்துச் சென்றார். மார்க்சிய முறை கோட்பாடு ஆய்வுக்கான கருவியாக அமைகிறது. அதுவே மார்க்சிய முறையின் மையமான விடயம் என்பதை லெனின் அவர்களின் ஆய்வு எடுத்துக் காட்டுகிறது. லெனின் இந்நூலின் ஒவ்வொரு அத்தியாயத்தின் தொடக்கத்திலும் தாம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட கோட்பாட்டுப் பிரச்சினை (Theoretical Problem) என்ன என்பதைக் கூறுகிறார். அடுத்து அக்கோட்பாட்டுப் பிரச்சினையுடன் தொடர்புடைய தரவுகளை முன்வைக்கிறார். அவரது அணுகுமுறை 'ஸ்தூலமான பகுப்பாய்வுக்கு' (Concrete Analysis) களமமைத்து உதவுகிறது. கோட்பாட்டு வரைசட்டத்திற்கு அமைவாக அவர் தரவுகளைப் பகுப்பாய்வு செய்து விளக்கம் (Interpretation) கொடுக்கிறார். ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் விவாதத்தின் முடிவாக அமையும் கோட்பாட்டு விளக்கங்களைச் சுருக்கிக் கூறுகிறார். இவ்வாறாக லெனினின் மேற்படி நூல் ஸ்தூலமான விடய ஆய்வு ஒன்றைத் தெரிந்தெடுத்து, அனுபவத்தரவுகளை கோட்பாட்டின் வழிகாட்டலின் படி பகுப்பாய்வு செய்து எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அவரது நூல் ஸ்தூலமான நிலை பற்றிய கோட்பாட்டு விளக்கமாக அமைந்துள்ளது.

லெனினின் ஆய்வு பொருளியல், சமூகவியல், அரசியல் விஞ்ஞானம், வரலாறு ஆகிய பல துறைகளின் இணைவான பல்சங்கமத் தன்மையை (Interdisciplinarity) கொண்ட ஆய்வாகும். இதனைத் தனிமைப்படுத்தி இவற்றுள் ஏதேனும் ஒரு பெட்டிக்குள் அடைத்து விடமுடியாது. தனித் தனித் துறைகளாகப் பிரித்துவிடுதல் (Compartmentalization) என்னும் நோக்குமுறைக்கு லெனின் நூல் மாறுபட்டதாக விளங்குகிறது. மார்க்சிய வகைமைகளான முழுமை (Totality), ஸ்தூலமானது (Concrete) என்பன ஆய்வாளர்களுக்கு தனித் தனித் துறைகளின் குறுகிய எல்லைகளைத் தாண்டி விரிந்த நோக்கினை வளர்த்துக்கொள்ள உதவுகின்றன.

## லூயி அல்தூசரும் மார்க்சியமும்:

மார்க்சிய முறையியலைச் செழுமைப்படுத்திய இன்னொரு முக்கியமான சிந்தனையாளர், பிரஞ்சு தேசத்தினரான லூயி அல்தூசர் (Louis Althusser) (1918-1990) ஆவர். அவர் பிரான்ஸ் நாட்டின் தத்துவ ஞானியாகவும், பிரஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர செயற்பாட்டாளரான உறுப்பினராகவும் அறியப்பட்டவர். 1960-களின் பிற்பகுதியில் அவர் புகழ் ஓங்கியது. இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் மிகுந்த செல்வாக்குடைய மார்க்சிய சிந்தனையாளராக அவர் விளங்கினார். அல்தூசர் மார்க்சியத்தை தனித்துவமான தத்துவ-கோட்பாட்டு நோக்கில் விளக்கினார். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அல்தூசர், ஜோர்ஜ் லூகஸ் (George Lukacs) சிந்தனையைப் பின்பற்றுபவராக இருந்தார். ஆயினும் மார்க்சியத்தின் மீது அல்தூசர் சிந்தனைகள் ஏற்படுத்திய தாக்கம் ஜோர்ஜ் லூகஸ் சிந்தனைகளின் தாக்கத்தை விட அதிகமானது எனலாம். அல்தூசர் இத்தாலிய மார்க்சிஸ்ட் புரட்சியாளரும் செயற்பாட்டாளருமான அந்தோனியோ கிராம்சியின் பங்களிப்புக்கு நிகரான பங்களிப்பை மார்க்சியத்திற்கு வழங்கினார் என்று கூறலாம். மார்க்சிய சமூக விஞ்ஞான முறையியல் நோக்குமுறையைச் செழுமைப்படுத்தியனவாக அல்தூசரின் இரு கருத்தாக்கங்களைக் குறிப்பிடலாம். அவையாவன:



- மார்க்சியப் பொருள்கோடலியல் (Marxist Hermeneutics)
- அமைப்பியல் மார்ச்சியம் (Structuralist Marxism)

பொருள் கோடலியல் என்பது பனுவல்களை (Texts) பொருள் கொள்ளுதல் பற்றிய கோட்பாடாகும். 19-ம் 20-ம் நூற்றாண்டுகளில் தத்துவஞானிகள் வட்டாரத்தில் பொருள் கோடலியல் கோட்பாடு பரவலான பேசுபொருளாக இருந்து வந்தது. ஆயினும் மார்க்சிஸ்டுகள் இவ்விடயத்தில் அக்கறை கொண்டிருக்கவில்லை. இப்பின்னணியில் அல்தூசர் பொருள் கோடலியல் முறையை (Hermeneutical method) மார்க்சின் 'மூலதனம்' போன்ற பிரதிகளைப் பொருள் விளக்கம் செய்வதற்குப் பிரயோகித்தார். 1950-களில் மார்க்ஸின் கருத்துகளை விளக்கியுரைப்பதில், பொருளாதாரவாதம் (Economism), மனிதாயவாதம் (Humanism) என்னும் இரு மார்க்சியக் கோட்பாட்டு நோக்குகள் முக்கியம் பெற்றிருந்தன. பொருளாதாரவாதம் மார்க்சியத்தைப் பற்றிய பொருளாதார நோக்கை முதன்மைப்படுத்தியது. இந்நோக்கின்படி சமூக-அரசியல் தோற்றப்பாடுகளை உற்பத்தி, பரிவர்த்தனை, பண்டங்களின் சந்தை என்னும் பொருளாதார நடவடிக்கைகள் ஊடாகவும், உற்பத்தியின் அடிப்படையில் உருவாகும் வர்க்கப் போராட்டம் (Class Struggle) மூலமாகவும் விளக்கப்பட்டது. இந்த முறையைப் பொருளாதாரத் தீர்மானவாதம் (Economic Deteminism) என அழைப்பர். இதற்கு மாறான நோக்குமுறை மனிதாயவாதம் அல்லது மனிதாயவாத மார்க்சியம் (Humanistic Marxism) என அழைக்கப்பட்டது. மனிதாயவாத மார்க்சியம் சமூக-அரசியல் தோற்றப்பாடுகளை மனிதச் செயலை (Human Agency) மையப்படுத்தி விளக்கம் கொடுப்பதாக அமைந்தது. மனிதாயவாத மார்க்சிஸ்டுகள் கார்ல் மார்க்ஸ் தனது மனிதாயவாத நோக்குமுறையை ஹெகலிடம் இருந்து பெற்றுக் கொண்டார் என்றும் மார்க்சின் தத்துவத்தில் ஹெகலிய தத்துவச் சார்பு தொடர்ந்து இருந்து வந்துள்ளது என்றும் கூறினார்.

அல்தூசர் மனிதாயவாத மார்க்சிஸ்டுகளின் மேற்கூறிய கருத்தை நிராகரித்தார். மார்க்ஸ் தமக்கெனவே சொந்தமான தத்துவமுறையை (Philosophical System) உருவாக்கிக் கொண்டார் எனவும், அவர் ஹெகல், பெயர்பாக் (Feurbach) வழிவரும் 'கருத்து முதல்வாத' தத்துவ மரபில் (Idealist Philosophy) இருந்து தம்மை வேறுபடுத்திக் கொண்டார் எனவும் அல்தூசர் குறிப்பிட்டார். அல்தூசரின் இந்த வாதம் 1964-ல் அவரால் எழுதி வெளியிடப்பட்ட மூலதனத்தை வாசித்தல் (Reading Capital) 1965-ல் எழுதி வெளியிடப்பட்ட 'மார்க்சுக்காக' (For Marx) ஆகிய இரு நூல்களில் முன்வைக்கப்பட்டது.

தனது வாதங்களை எடுத்துரைப்பதற்கு அல்தூசர் பொருள் கோடலியல் முறையைப் பிரயோகித்தார் என்பது சுவாரசியமானதொரு விடயமாகும். மார்க்சின் பிரதிகளை விளக்கியுரைக்கும் தமது புதிய பொருள்கோடலியல் முறையை அல்தூசர் 'குறிப்பால் அறியும் வாசிப்பு' (Symptomatic Reading) எனக் குறிப்பிட்டார். தாம் இந்த முறையை உருவாக்குவதற்கான ஆதர்சத்தை மார்க்சியர்கள் அல்லாத ஸ்பினோசா (Spinoza), சிக்மன்ட் பிராய்டு, லாக்கான் (Lacan) ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்டதாக அவர் குறிப்பிடுகிறார். 'குறிப்பால் அறியும் வாசிப்பு' மூலம் ஒரு பிரதியில் உள்ள முரண்பாடுகளையும் மௌனிப்புகளையும் (Contradictions and Silences) கண்டுபிடித்துக் காட்டுவதன் மூலம் பிரதியில் புதைந்திருக்கும் தத்துவ நிலைப்பாடுகளை வெளிப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். இதனைவிட ஒரு தொடரில் அமையும் பிரதிகளில் மறைந்திருக்கும் 'உடைவுகளையும் முறிவுகளையும்' (Breaks and Ruptures) கண்டறிந்து கூற

முடியும் எனவும் குறிப்பிட்டார். ‘சிம்டோமற்றிக்’ அல்லது ‘குறிப்பால் அறிதல்’ (Symptomatic) முறையை உளப்பகுப்பியலில் (Psychoanalysis) இருந்து பெற்றுக்கொண்டதாக அல்தூசர் குறிப்பிடுகிறார். குறிப்பால் அறியும் முறையியல் ஒரு பிரதியின் தத்துவார்த்த முறிவுகளைக் (Ruptures) கண்டறிய உதவுகிறது. குறித்த பிரதியொன்றை ஆக்கிய எழுத்தாளர் தமது ஆக்கத்தை உருவாக்கியபோது எதிர்கொண்ட சிந்தனைச் சிக்கல்களின் (Problematic) பின்னணியையும், அதனூடே வெளிப்படும் ‘உடைவுகளையும் மௌனிப்புகளையும் (Breaks and Silences) கண்டுபிடிப்பதற்கு இம்முறை உதவுவதாக அல்தூசர் குறிப்பிட்டார். குறிப்பால் அறிதல் பிரதியில் மறைபொருளாக வெளிப்படாதிருக்கும் தத்துவார்த்த முறையை (Philosophical System) வெளிக்கொணர உதவுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## இளைய மார்க்ஸ் – முதிய மார்க்ஸ்:

மார்க்ஸின் ஆரம்பகால எழுத்துக்கள் 1840-களிலும், 1850-களிலும் வெளியாயின. இவ்வாரம்பகால எழுத்துகளை ‘குறிப்பால் அறியும் வாசிப்புக்கு’ (Symptomatic Reading) உட்படுத்திய அல்தூசர் மார்க்ஸின் எழுத்துகளை நுணுகிப் பார்க்கும்போது இளைய மார்க்ஸ், முதிய மார்க்ஸ் என இரு மார்க்ஸ் இருப்பது தெரியவரும் எனக் கூறினார், இளைய மார்க்ஸ் ஹெகலிய செல்வாக்குக்கு உட்பட்டவரான மனிதாயவாதியாக (Hegelian Humanist) இருந்தார் என்பதையும், அவர் அக்காலத்தில் தனக்குரியதான சொந்த தத்துவமுறையை (Philosophical System) கண்டடையவில்லை என்பதையும் கண்டுகொள்ள முடியும் என அல்தூசர் குறிப்பிட்டார். இளைய மார்க்சின் எழுத்துகளை முதிய மார்க்ஸின் (Mature Marx) அல்லது முதிர்ச்சி பெற்றவரான மார்க்ஸின் எழுத்துகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அவற்றுக்கிடையே தெளிவான வேறுபாடு உள்ளதைக் கண்டுகொள்ளலாம் என அல்தூசர் கூறினார். முதிர்ச்சி பெற்ற மார்க்ஸ் ஹெகல் மரபில் வரும் தத்துவம் முழுமையையும் நிராகரித்து அத்தத்துவக் கொள்கைகளில் இருந்து தம்மை வேறுபடுத்திக் கொண்டவராகக் காணப்படுகிறார். இவ்வாறாக மார்க்ஸ் தம்மை வேறுபடுத்திக் கொண்டபோது இயக்கவியல் பொருள்முதல்வாதம் (Dialectical Materialism) என்னும் தத்துவத்தைக் கண்டுபிடித்தார். அத்தத்துவத்தின் ஒரு உப பிரிவான சமூகம் பற்றிய கோட்பாடான (Theory of Society) வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்னும் ‘புதிய விஞ்ஞானம்’ (New Science) முதியமார்க்சினால் உருவாக்கப்பட்டது.

## அமைப்பியல் மார்க்சியம்:

அமைப்பியல் மார்க்கியச் சமூகக் கோட்பாட்டை (Structuralist Marxist Social Theory) உருவாக்கி அறிமுகம் செய்து வைத்தவர் அல்தூசரே ஆவர். இதனால் அவரது செல்வாக்கு மார்க்சிய சமூக விஞ்ஞான ஆய்வுலகில் மேலோங்கியது. சமூகக் கோட்பாட்டு விளக்கத்தில் மனிதாய முறைப் புரிதலும் விளக்கமும் அவரால் நிராகரிக்கப்பட்டது. மனிதாயவாத நோக்கில் வரலாற்றுச் செயல்முறையை விளக்க முனைந்த மனிதாயவாதிகள் வரலாற்றை மாற்றுவதில் (Transforming History) மனிதச் செயலிக்கு (Human Agency) முதன்மையிடத்தை வழங்கினர். மனிதாயவாத நோக்கில் மார்க்சிய சமூகக் கோட்பாட்டை விளக்க முனைவது மார்க்சை தவறான முறையில் புரிந்துகொள்வதாக அமையும் என அல்தூசர் வாதிட்டார். மனிதாயவாத நோக்கிலான விளக்கம் 1840-களின் முற்பகுதியில் மார்க்ஸ் ஹெகலின் சிந்னைகளின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தபோது எழுதிய எழுத்துக்களின் அடிப்படையிலானது என்பதையும் அல்தூசர் சுட்டிக் காட்டினார். முதிய மார்க்சின் சிந்தனையில் அடிக்கருத்தாகவும் மையப்பொருளாகவும் வகைமையாகவும் ‘உற்பத்தி முறை’ (Mode of Production) அமைந்திருந்தது. ‘உற்பத்தி முறை’ என்ற வகைமை (Category) சமூக உருவாக்கம் என்ற அமைப்பியல் முழுமையை (Structural Totality) விளங்கிக் கொள்வதற்கு உதவுவதாக அமைகிறது. உற்பத்தி முறையின் இயக்கம், மனிதச் செயல்களின் (Human Actions) எல்லைகளையும், அவற்றின் சாத்தியப்பாடுகளையும் வரையறை செய்கிறது. மனிதச் செயல்கள் உற்பத்தி முறையைக் கட்டுப்படுத்தும் தீர்மான சக்தியாகச் செயற்படுவதில்லை. ஆகையால் அல்தூசரின் அமைப்பியல் மார்க்சியக் கோட்பாடு மனிதச் செயலியை விட சமூகக் கட்டமைப்புகளுக்கு (Structures) பிரதான இடத்தை வழங்குவதாக அமைந்துள்ளது.

அல்தூசரின் அமைப்பியல் மார்க்சியம் பெரும் விவாதப்புயலைக் கிளப்பியது. மார்க்சிய சமூக விஞ்ஞானிகளில் பலர் அல்தூசரின் எழுத்துக்கள் வெளிவருவதற்கு முன்பே சமூகவியலிலும், மானிடவியலிலும் அமைப்பியலை நிராகரிக்கும் வகையிலான கோட்பாட்டு நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியிருந்தனர். அவர்களால் அல்தூசரின் அமைப்பியல் சார்பு வாதங்களை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. குறிப்பாக அல்தூசரின் அமைப்பியல், வரலாற்றில் மனிதச் செயலியின் வகிபாகத்தை முற்றாகவே நிராகரித்ததை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பிரித்தானிய மார்க்சிஸ்ட் வரலாற்றாசிரியரான E.P. தோம்சன் அல்தூசரின் கருத்துக்களை மறுத்து ‘கோட்பாட்டின் வறுமை (Poverty of Theory) என்னும் நூலை 1978-ம் ஆண்டு வெளியிட்டார். அல்தூசர் மீதான கடுமையான கண்டனமாக இந்நூல் அமைந்தது. இந்நூலைத் தொடர்ந்து எழுந்த தோம்சன் எதிர் அல்தூசர் விவாதம் மார்க்சியக் கோட்பாடு, மார்க்சிய முறையியல் என்பன பற்றிய உரையாடலை சுவாரசியம் நிறைந்ததாக ஆக்கியது. ஆயினும் பின் அமைப்பியல் (Post - Structuralism) பின்நவீனத்துவம் (Post - Modernism) என்பன தோற்றம் பெற்ற பொழுது, அல்தூசரின் அமைப்பியலின் மீது இருந்த கவர்ச்சி குறையலாயிற்று, எவ்வாறிருப்பினும் அல்தூசரின் கருத்துக்கள் சமூக விஞ்ஞானங்களில் புகுந்திருந்த நேர்க்காட்சிவாதம் என்னும் குறுகிய விஞ்ஞானவாதத்திற்கு (Narrow Scientism) எதிரான மிகப்பெரிய தத்துவார்த்த அறைகூவலாக (Philosophical Challenge) அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அல்தூசர் மார்க்சின் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை தத்துவம் பற்றிய விரிந்த நோக்கில் பார்த்தால் அதை ‘விஞ்ஞானம்’ (Science) என்றே கூறலாம் எனக் குறிப்பிட்டார். அவரின் இக்கூற்று கோட்பாடு கருத்தியல் என்ற இரண்டையும் ஒப்பிட்டு வேறுபடுத்துவதாக அமைந்தது. (Althusser called Marxs materialism a ‘science’ in a broader philosophical sense, to juxtapose theory with ideology. - பக். 263)

*(தொடரும்...)*



shanmugalingam@thaiveedu.com

# தழுவிக்கொண்ட சொற்களும் நழுவிப்போன சொற்களும்

–பால. சிவகடாட்சம்

*யாயும் ஞாயும் யாராகியரோ?*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?*
*யானும் நீயும் எவ்வழி அறிதும்?*
*செம்புலப் பெயல்நீர் போல,*
*அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே!*

இந்த சங்கத் தமிழ்க்கவிதையை ஒரு முறை வாசித்தவுடன் இன்றைய தமிழ் வாசகர்கள் எவரும் 'ஆகா அற்புதமான காதல் பாட்டு' என்று துள்ளிக் குதித்துக் கொண்டாடப் போவதில்லை. அது அவர்களுடைய குற்றம் அல்ல. அவர்களுக்கு இந்தத் தமிழ்ப்பாடலை இன்று முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழை இன்றைய தமிழர் விளங்கிக்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பது இயல்பு நிலைக்கு மாறானது.

*'எனது தாயும் உனது தாயும் யார் யாரோ*
*எனது தந்தையும் உனது தந்தையும்*
*எந்தவழியில் உறவினர்*
*நானும் நீயும் எந்த முறையில் அறிமுகமானோம்*
*(ஆனாலும் கூட)*
*செம்மண்ணில் பெய்த மழை வெள்ளம் போல*
*எங்கள் இருவரினதும் அன்பு நெஞ்சங்கள்*
*(பிரிக்கமுடியாதபடி) கலந்துவிட்டனவே'*

என்று சங்கத்தமிழ் படித்த ஒருவர் மொழிபெயர்த்தால் மட்டுமே இன்றைய தமிழ்பேசுவோர் புரிந்து கொள்வர். இன்று நாம் பேசும் தமிழ் சங்ககாலத்தமிழின் புதிய வடிவம். உரையாசிரியர்களின் உதவியினால் மட்டுமே சங்கத்தமிழ் நூல்களை மட்டுமன்றி திருக்குறள் சிலப்பதிகாரம் மணிமேகலை உள்ளிட்ட பண்டைய தமிழ்நூல்களை இன்று எம்மால் விளங்கிக்கொள்ள முடிகின்றது. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சங்ககாலம் என்று வரலாற்றாசிரியர்கள் அறிமுகப்படுத்தும் காலப்பகுதியில் தமிழ் மக்களின் பேச்சுவழக்கில் இருந்த எத்தனையோ சொற்கள் இன்று வழக்கில் இல்லை. அதேசமயம் இன்று தமிழர் நாள்தோறும் தவறாமல் உச்சரிக்கும் ஏராளமான சொற்கள் பிறமொழிகளில் இருந்து வந்து எம்மைத் தழுவிக்கொண்டவை என்பதையும் மறந்துவிடுவதற்கில்லை.

நெடுங்காலமாக மக்களால் பேசப்பட்டுவரும் மொழி ஒன்றில் பல்வேறு நாட்டவரின் தொடர்புகள் மூலம் பிறமொழிக்கலப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். எனினும் கலப்பு அளவுக்கு மீறிப் போகும்போதுதான் மூலமொழி தன் தனித்துவத்தை இழக்கின்றது அல்லது புதுவடிவம் பெறுகின்றது. சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் மாணிக்கத்தையும் பவளத்தையும் கோர்த்து மாலை செய்வதுபோல் தமிழையும் சமஸ்கிருதத்தையும் கலந்து மணிப்பிரவாள நடை என்னும் ஒன்றை உருவாக்கினர்கள். இதோ அந்த மணிப்பிரவாள நடையில் ஒரு துளி. மணவாளமாமுனிகள் தமக்காசார்யரான பிள்ளையுடைய ப்ரசாதத்தாலே, க்ரமாசுதமாய் வந்த அர்த்த விசேஷங்களைப் பின்பற்றாருமறிந்து உஜ்ஜீலிக்கும் படி, ப்ரபந்தரூபேன உபதேசித்து ப்ரகாசிப்பிக்கிறோமென்று ச்ரோத்ரு புத்தி ஸமாதாநார்த்தமாக ப்ரதிஞ்ஞை பண்ணி யருளுகிறார். (உபதேசரத்னமாலை) நல்லவேளையாக அம்முயற்சிக்குப் போதிய ஆதரவு கிடைக்காதபடியால் மணிப்பிரவாளம் கைவிடப்பட்டது. எமது தமிழும் தப்பிப்பிழைத்தது.

மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற தென்னிந்திய மொழிகளுடன் ஒப்பிடுகையில் தமிழில் சமஸ்கிருதம் உள்ளிட்ட பிறமொழிச்சொற்கள் பேச்சுவழக்கில் மிகவும் குறைவாகவே கலந்து வந்துள்ளன. தமிழ்நாட்டவரின் பேச்சுத் தமிழோடு ஒப்பிடுகையில் யாழ்ப்பாணத்தமிழரின் பேச்சுவழக்கில் பிறமொழிக்கலப்பு குறைவாகவே காணப்படுவதை அவதானிக்கலாம். புவி இயல் ரீதியாக யாழ்ப்பாணம் இந்தியப் பெருநிலப்பரப்பில் இருந்து பிரிந்திருப்பதே இதற்குக் காரணம் எழுத்திலும் பேச்சிலும் தமிழென நினைத்துப் பயன்படுத்தும் சொற்கள் இற்றைக்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே வடமொழியில் இருந்து தமிழுக்கு வந்து சேர்ந்துவிட்டன. இதனால் வடமொழிச்சொற்கள் என்பதை அறியாமலேயே இவற்றைப் பெரிதும் பயன்படுத்தி வருகின்றோம். இவை தமிழ்ச்சொற்கள் அல்ல என்று சொன்னால் தமிழ் ஆர்வலர்கள் சிலருக்குக் கோபம் வருவதுண்டு.

பொ.ஆ.பி. 300க்கும் 1300க்கும் இடைப்பட்ட, ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகாலப்பகுதியில் ஏராளமான சமஸ்கிருதமொழிச் சொற்கள் தமிழுக்கு வந்தடைந்தன. களப்பிரர், பல்லவர்,

சோழர் ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் மருத்துவம், சோதிடம், தத்துவம் முதலான கலைகள் பலவும் சமஸ்கிருதமொழியிலேயே கற்பிக்கப்பட்டு வந்துள்ளன. சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் கிரகங்களும் சாதகமும் பஞ்சாங்கமும் சனியும் புதனும் சமஸ்கிருதம் தந்த பெயர்கள்தான். சுரமும் சன்னியும் சூரணமும் கஷாயமும் லேகியமும் மாத்திரையும் இரசகற்பூரமும் இரசசெந்தூரமும் சமஸ்கிருதக் கலைச்சொற்கள்தான். இந்த சொற்கள் வந்துசேர்ந்தவுடன் இவற்றைக் குறிக்கும் பண்டைய தமிழ்ச்சொற்கள் நழுவிப்போய்விட்டன.

தமிழ் வருடங்கள் அறுபதுக்கும் வடமொழிப்பெயர்கள் வைத்து இருக்கின்றார்களே என்று உள்ளம் குமுறுவோர் இருக்கின்றார்கள். பங்குனியும் சித்திரையும் வைகாசியும் ஆனியும் ஆடியும் ஆவணியும் புரட்டாசியும் ஐப்பசியும் கார்த்திகையும் மார்கழியும் தமிழ்ப்படுத்தபட்ட சமஸ்கிருதச் சொற்கள் என்பது பலரும் உணராத ஒருவிடயம். முழுநிலவு (பௌர்ணமி) நாளன்று நிலவுக்கு அண்மித்துக் காணப்படும் நட்சத்திரத்தின் பெயரே அந்த மாதத்துக்குக் கொடுக்கப்பட்டது.

சங்க இலக்கியங்களில் நாள்மீன்கள் என்று அறியப்படும் நட்சத்திரங்கள் இருபத்தேழுக்கும் தூய தமிழ்ப்பெயர்கள் உள்ளன. வடமொழிப்பெயர்கள் வந்துசேர்ந்தவுடன் பழந்தமிழ்ப் பெயர்கள் வழக்கற்றுப்போயின. வடமொழிப்பெயர்களான சைத்ர சித்திரையாகவும் விஷாகம் வைகாசியாகவும் அனுஷம் ஆனியாகவும் ஆஷாடம் ஆடியாகவும் ஷ்ராவணம் ஆவணியாகவும் பத்ரபாதம் புரட்டாசியாகவும் அஷ்வினி ஐப்பசியாகவும் கார்த்திகா கார்த்திகையாகவும் மிருகஷீரிடம் மார்கழியாகவும் மகம் மாசயாகவும் பல்குணம் பங்குனியாகவும் தமிழ்படுத்தப்பட்டு மாதங்களின் பெயர்களாக நிலைபெற்றுவிட்டன. மாதம் அல்லது மாசம் என்னும் தமிழ்ச்சொல் மாச என்னும் வடமொழிச் சொல்லில் இருந்தே பிறந்தது. திங்கள் என்பதே மாதம் என்பதன் தூய தமிழ்ப்பெயர். அவ்வாறே தியதி என்பது திதியில் இருந்து பிறந்தது. கிழமை நாட்களின் பெயர்களுள் ஞாயிறு திங்கள் செவ்வாய் வியாழன் வெள்ளி என்பன தமிழ்ப்பெயர்களே. எனினும் புதனையும் சனியையும் சமஸ்கிருதத்தில் இருந்து எடுத்துச் சேர்த்துக்கொண்டோம்.

தனது மகளுக்கு ‘ஆசுப்பத்திரியில் ஒப்பெரேஷன் செய்வதற்கு முன்னர் குளறப்பம்’ கொடுத்திருப்பதாக என்னுடைய தாயாரிடம் பக்கத்துவீட்டு அம்மா வந்து சொன்னதை இப்போது நினைத்துப் பார்க்கின்றேன். அதிகம் படித்திராத ஒரு தமிழ்ப்பெண்மணியால் குளோறபோம் (chlorophorm) என்னும் மயக்க மருந்து குளறப்பமாகத் தமிழாக்கப்படுவதை அப்போது நேரிலே கண்டேன். தமிழ்படுத்தும்போது சிலர் தமிழைப் படுத்தி விடுகின்றார்கள். ஷேக்ஸ்பியரை செகப்பிரியர் என்று தமிழ்படுத்துவது கூடாது. சுவாமி விபுலானந்தர் ஷேக்ஸ்பியரைச் செகசிற்பியர் என்றார். அதற்கு ஒரு விளக்கமும் தந்தார். இலக்கிய உலகின் சிற்பி அவர் என்பதால் அவருக்கு இப்பெயரைச் சூட்டினேன் என்றார். ஒருவரின் பெயரையோ ஊரின் பெயரையோ மொழிமாற்றம் செய்தால் எழுதும் கடிதம் அவருக்குப் போய்ச்சேராது. ஜனவரியை தை என்றும் ஆகஸ்டை ஆவணி என்றும் மொழிபெயர்ப்பது தியதியைத் தவறாகப் புரிந்துகொள்ள வழிவகுக்கும். ஜனவரி முதலாம் தியதி ஆங்கில வருடப்பிறப்பு நாள். தை முதலாம் தியதி தைப்பொங்கல் நாள். தை முதலாம் தியதி பெரும்பாலும் ஜனவரி பதினான்கு அல்லது பதின்மூன்றில் வரக்கூடியது.

பிறமொழிச்சொற்கள் தமிழ் மக்களின் பேச்சுவழக்கில் எப்போது எவ்வாறு வந்துசேர்ந்தன என்று ஆராயப் போவோமாகில் பிறமொழிபேசுவோர் ஏதோ ஒரு வழியில் தமிழர் வாழ்வில் ஆதிக்கம் செலுத்திய காலப்பகுதியிலேயே பெருமளவு பிறமொழிச்சொற்கள் தமிழருக்கு அறிமுகமாயின என்பதைக் கண்டுகொள்ளமுடியும். இந்த அந்நிய மேலாதிக்கமானது மத நம்பிக்கைகளின் அடிப்படையிலோ ஆட்சி அதிகாரம் வழியாகவோ ஏற்பட்டிருக்கலாம். அலுமாரி, அலவாங்கு, அலுப்புனேத்தி, ரோதை, சாவி, ஜன்னல், கதிரை, கழுசான், கமிசு, கடுதாசி, கோப்பை, குசினி, மேசை, பாண், பேனை, சப்பாத்து, தவறணை, தாச்சி, துவாய், விராந்தை, வாங்கில் இவை அனைத்துமே பதினேழாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஆண்டுவந்த நேரத்தில் தமிழருக்கு அறிமுகமாகிய விடயங்கள். இவற்றை உணர்த்தும் சொற்கள் தமிழில் இல்லாதிருந்த காரணத்தால் போர்த்துக்கல் சொற்களையே தழுவிக்கொண்டோம். இது போலவே கந்தோரும் கக்கூசும் டச்சுக்காரர் நம்மை ஆண்ட போது வந்து சேர்ந்துகொண்டவை. கடன்வாங்கிய சொற்களைக்கூடப் பயன்படுத்தக் கூச்சமாய் இருக்கும்போது காலப்போக்கில் அதனையும் கைவிட்டுச் சற்று நாகரிகமாகத் தோன்றும் புதிய சொற்களை நாடுகின்றோம். இதற்குச் சிறந்த ஓர் உதாரணம் கக்கூசு. கக்கூசு என்பதே கடன் வாங்கிய சொல்தான். எனினும் இன்று கக்கூசுக்குப் பதிலாக ரொய்லெற் (toilet) அல்லது வாஷ்றூம் (washroom) என்னும் பிரெஞ்சு, ஆங்கிலச் சொற்களைப் பேச்சுவழக்கில் பயன்படுத்தும்போது எவரும் கூச்சப்படுவதில்லை.

இப்படித்தான் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் சக்கிடுத்தார்(secretary) நொத்தாரிசு (Notary), அப்புக்காத்து (advocate), சிறாப்பர் (shroff), டாக்குத்தர், (doctor) கொம்பவுண்டர் (compounder), நர்சு (nurse), ஆசுப்பத்திரி (hospital), பொலீசு (police), போன்ற ஏராளமான சொற்கள் யாழ்ப்பாணத்தமிழரின் அன்றாட பேச்சுவழக்கில் இணைந்துகொண்டன. கராம்பு, கறுவா, குரக்கன், கொப்பறா, வத்தாளம் கிழங்கு, போஞ்சி, பணிஸ், விதானை போன்ற பல சொற்கள் சிங்களத்தில் இருந்து வந்தவை. சிங்கள மக்களுடனான வியாபாரத் தொடர்பு வழியாக இச்சொற்கள் இலங்கை வாழ் தமிழரின் பேச்சுவழக்கில் இடம்பிடித்துவிட்டன. தமிழ் நாட்டில் இவை வழக்கில் இல்லை. நாங்கள் தூய தமிழ்ப்பெயர்கள் என்று இன்னமும் நம்பிக்கொண்டிருக்கும் பெயர்கள் பலவும் இவ்வாறு தமிழ்ச்சாயல் பெற்ற பிறமொழிச் சொற்கள்தான் என்பதைப் பின்னாளில் அறிந்துகொண்டேன்.

‘குசினிப் பக்கமாய் இருக்கும் அலுமாரிக்கும் ஜன்னலுக்கும் இடையில் இருக்கிற மேசையில கார்ச் சாவியும் பத்து டொலரும் எடுத்து வைச்சிருக்கிறன். காரை எடுத்துக்கொண்டு போய் ஶ்ரீ கேற்றறிங்கில புரியாணிப் பார்ஸல் ஒன்று வாங்கிக் கொண்டு வா. ரீவீயில உன்னுடைய சீரியல் தொடங்கமுதல் வந்திடலாம்’.

இது ஒரு அம்மா தன் மகளிடம் கூறியது. நிச்சயமாக இது

இன்று தமிழ்பேசும் எல்லோருக்கும் விளங்கக்கூடியதுதான். இந்த வசனத்தில் உள்ள சொற்களில் 50 சதவீதம்தான் தமிழ். மீதி போர்த்துகேயம் (P), ஆங்கிலம் (E), சமஸ்கிருதம் (S), பாரசீகம் (Pr) ஆகிய மொழிகளில் இருந்துவந்து எம்மைத் தழுவிக்கொண்டவை. இந்தப் பிறமொழிச் சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய தமிழ்ச் சொற்கள் இல்லை. இருந்தாலும் அவற்றைப் பயன்படுத்துவோர் இல்லை.

### பிறமொழிச்சொற்கள்:

| | |
|---|---|
| குசினி | (P) |
| அலுமாரி | (P) |
| ஜன்னல் | (P) |
| மேசை | (P) |
| கார் | (E) |
| சாவி | (P) |
| டொலர் | (E) |
| ஸ்ரீ | (S) |
| கேற்றரிங் | (E) |
| புரியாணி | (Pr) |
| பார்சல் | (E) |
| ரீவி | (E |
| சீரியல் | (E) |

அறிவுத்தேடலின்போது அறிமுகமாகக் கூடிய பிறமொழி நூல்கள் மற்றும் கருவிகள் மூலமாக ஏராளமான பிறமொழிச் சொற்கள் அன்றாடப் பேச்சுவழக்கினுள் இடம் பிடித்துக் கொள்கின்றன. புதிய விடயங்கள் எமக்கு அறிமுகமாகும் போது தேவைக்கேற்ப புதிய சொற்களைத் தமிழில் உருவாக் குவது தவிர்க்கமுடியாத ஒன்று. இன்றைய தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக் காலகட்டத்தில் ஏராளமான பிறமொழிக் கலைச்சொற்கள் தமிழ்பேசும் மக்களின் பயன்பாட்டில் வந்து விடுகின்றன. இத்தகைய சொற்கள் பெரும்பாலும் ஆங்கில மொழியில் இருந்தே பெறப்படுகின்றன.

இவற்றுள் ஒருசிலவற்றைத் தமிழ் ஆர்வலர்கள் தமிழ்படுத்தித் தருகின்றனர். கணனி, மடிக்கணனி, கடவுச்சொல், இணையத் தளம் இவை எல்லாமே இவ்வாறு வந்து சேர்ந்தவைதான். பென்னுக்கும் பென்சிலுக்கும் ஐபொட்டுக்கும் ஐபோனுக்கும் தூய தமிழ்ப்பெயர்களைத் தோற்றுவிக்க எவரேனும் முயற்சி செய்ததாகத் தெரியவில்லை. ஈமெயில் ஈமெயிலாகத்தான் இருக்கின்றது. ஐபட் ஐபட்டாகத்தான் இருக்கின்றது. மக்க ளுக்குப் பழகிப்போன சொற்களுக்குப் பதிலாகத் தூயதமிழ்ச் சொற்களை அறிமுகப்படுத்தும்போது அவற்றை மக்கள் இல குவில் ஏற்றுக்கொண்டுவிடமாட்டார்கள். கார், பஸ், பைசிக் கிள், ஐஸ்கிறீம், என்னும் ஆங்கிலச் சொற்களுக்குப் பதிலாக மகிழுந்து, பேருந்து, மிதிவண்டி, குளிர்களி என்னும் தூய தமிழ்ப்பெயர்களைத் தமிழ் ஆர்வலர்கள் முயன்று கண்டு பிடித்தாலும் அவற்றை அன்றாடப் பேச்சுவழக்கில் பயன்ப டுத்துவோர் இன்று எத்தனை பேர் ? ஆங்கிலமூலத்தை அடிப் படையாகக் கொண்டு தமிழ்ச்சொல் ஒன்றைத் தோற்றுவிக் கும்போது ஏற்கெனவே தமிழில் உள்ள நல்லதொரு சொல்லை இழக்க நேரிடலாம். இதுகுறித்து அவதானம் தேவை. நீர்வீழ்ச்சி என்பது waterfalls என்னும் ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் ஆகும். அருவி என்ற அருமையான தமிழ்ச்சொல் ஏற்கெனவே இருக்கும்போது நீர்வீழ்ச்சி எதற்கு. ஆனால் நயாகரா அருவி என்று யார் சொல்லப் போகின்றார் கள். கலங்கரை விளக்கம் என்னும் அருமையான தமிழ்ச் சொல்லின் பயன்பாடு குறைந்துவிட்டது. லைற்ஹவுஸ் (Light-house) என்பதன் தமிழாக்கமான வெளிச்சவீடுதான் இன்று பயன்பாட்டில் உள்ளது. நல்லவேளையாக rainbow என்பதை மழைவில் என்று தமிழாக்காமல் விட்டுவிட்டார்கள். வானவில் இனியும் பேசப்படும். பிரசங்கம் என்பதை முதன்முதலில் சொற்பொழிவு என்று அறிமுகப்படுத்தியபோது பலரும் ஏள னம் செய்தார்களாம். இன்று பிரசங்கம் வழக்கொழிந்து சொற் பொழிவு நிலைத்துவிட்டது. நல்ல தமிழ்ச் சொற்கள் நிலைத்து நிற்கும் என்பதற்குச் சொற்பொழிவு ஒரு நல்ல உதாரணம்.

கக்கூசு அல்லது ரொய்லெற் என்பதற்குப் பதிலாகக் கழி வறை என்று தூயதமிழில் எழுதிவைக்கின்றார்கள். இச்சொல் மிகவும் பொருத்தமாக உள்ளது. கழிவை அகற்றும் இடம் கழிப்பறை. ஆனால் வாஷ்ரூம் என்பதைக் கழிவறை என்று சொல்வது பொருத்தமாக இல்லை. கழுவுஅறை என்று சொன் னால் நேரடி மொழிபெயர்ப்பாக இருக்கும். இதற்குப் பதிலா கக் ‘குளியல்அறை’ என்பதே பொருத்தமாய் இருக்கும். எவ் வாறு சமஸ்கிருதம் என்னும் வடமொழிக்குரிய சொற்கள் கலை இலக்கியங்கள் வாயிலாகவும் சமயசம்பந்தமான சடங் குகள் வாயிலாகவும் அளவுக்கதிகமாகத் தமிழுக்கு வந்து சேர்ந்தனவோ அவ்வாறே இன்று தொலைத் தொடர்புத் தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாகவும் தொடர்பாடல் ஊட கங்கள் மூலமாகவும் ஆங்கிலச்சொற்கள் தமிழ்மக்களின் பேச்சுவழக்கில் அளவுக்கு அதிகமாக வந்து சேர்ந்துகொண் டிருக்கின்றன.

பேச்சுவழக்கில் தமிழையும் ஆங்கிலத்தையும் கலந்து பேசும் புதிய மணிப்பிரவாள நடை உருவாகிக்கொண்டு வருகின்றது. போன் பண்ணுங்கோ, டிறைவ் பண்ணுங்கோ, குக் பண் ணுங்கோ, ரேஸ்ற் பண்ணுங்கோ, ஒப்பின் பண்ணுங்கோ, குளோஸ் பண்ணுங்கோ, ஸ்மைல் பண்ணுங்கோ, வாக் பண் ணுங்கோ என்று பண்ணுதல் என்னும் ஒரே ஒரு தமிழ்ச்சொல் லுடன் ஆங்கிலச்சொற்கள் அர்த்தநாரீஸ்வரர் போல் இணைந்து பயணித்து வருவதைப் பார்க்கின்றோம். இப்படி ஏராளமான இங்கிலீசுத் தமிழ்ச் சொற்களை ‘ஈசி’யாக மேக் பண்ணி எங்கள் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பித்துக் கொண் டிருக்கின்றோம். இவற்றையெல்லாம் நோக்குமிடத்து

***பழையன கழிதலும் புதியன புகுதலும்***
***வழுவல கால வகையி னானே***

என்று நன்னூல் ஆசிரியர் அன்று சொல்லி வைத்ததை ஒரு பெருமூச்சுடன் நாமும் சொல்லிக்கொண்டு இருக்கவேண்டி யதுதான்.



Sivakadadcham@thaiveedu.com

# இனப்படுகொலையின் அரசியல்
# பௌத்த தத்துவத்தில் போரும் வன்முறையும்

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ



## அறிமுகக் குறிப்புகள்:

இலங்கை தன்னை ஒரு பௌத்த தேசமாக அரசியலமைப்பு ரீதியாக அறிவித்துக் கொண்டுள்ளது. இலங்கைக் குடிமக்களில் பெரும்பான்மையானோர் பௌத்தர்கள். பௌத்த தர்மத்தின் அடிப்படையிலேயே ஆட்சி நடத்துவதாக சுதந்திரத்திற்குப் பின் வந்த எல்லா ஆட்சியாளர்களும் சொல்லியிருக்கிறார்கள். பௌத்த தத்துவத்தின் அடிப்படையில் ஆட்சி நடக்கும் ஒரு நாட்டின் வரலாறு எவ்வாறு குருதி தோய்ந்ததாக இருக்க முடியும்? இந்த கேள்வி மிகவும் இயல்பானது. பௌத்தம் அன்பையும் அமைதியையும் சகிப்புத்தன்மையையும் போதிக்கிறது. அவ்வகைப்பட்ட ஒரு தத்துவத்தின் வழி நடக்கின்ற நாட்டில் ஏன் இவ்வளவு வன்முறை. இலங்கை பற்றிய சித்திரத்தின் அடிப்படையான முரண்நகை இது. பௌத்தத்தின் வழி நடக்கும் நாட்டில் இலட்சக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர், பல்லாயிரக்கணக்கானோர் காணாமல் போயினர். சித்திரவதைகள் நடைமுறையாகிப்போன காலமொன்றும் இருந்தது. இவையெல்லாம் ஏன் நடக்கின்றன. பௌத்த தர்மத்தின் வழி இதை எவ்வாறு விளங்கிக் கொள்வது.

இலங்கையின் வன்முறைகள் பற்றியும் பௌத்த தர்மம் பற்றியும் கேள்வி எழுகின்ற போதெல்லாம், இலங்கையின் ஆட்சியாளர்கள் பௌத்த தர்மத்தின் அடிப்படைகளைப் பின்பற்றுவதில்லை என்பதே பொதுவான பதிலாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் இது மட்டுமே காரணமாகிவிட முடியுமா. உலகில் உள்ள மதங்களிலேயே அகிம்சையைப் போதிக்கும் மதமாகவும், அன்பையும் சகிப்புத்தன்மையை முன்னிலைப்படுத்தும் மதமாகவும் அறியப்பட்டது பௌத்த மதம். ஆனால் உண்மையில் பௌத்தம் போரையும் வன்முறையையும் எவ்வாறு நோக்குகிறது. வரலாற்று வளர்ச்சியில் பௌத்த தத்துவங்களுக்கு வழங்கப்பட்டு வந்த வியாக்கியானங்கள் எவை, அவை எதை மையப்படுத்தின போன்ற விடயங்களை விரிவாகப் பார்ப்பது முக்கியமானது. அதேவேளை இலங்கையில் இறுதிப்போர் நடைபெற்ற போது, இலங்கை அரசாங்கத்தின் பார்வையில் மனிதாபிமான நடவடிக்கை - பௌத்தமும் நியாயமான போரும் என்றவொரு கருத்தாக்கம் முன்வைக்கப்பட்டது. இவை பௌத்தம் போருக்கு எதிரான மதம்தானா என்ற அடிப்படை வினாவை எழுப்புகிறது. அதை இக்கட்டுரை வழி விரிவாக ஆராயலாம்.

## போதனைகளும் கதைகளும் என்ற கலவை:

சமகால மற்றும் பண்டைய உலகில், பௌத்த சமூகங்கள் மற்றவர்களைப் போலவே போர்க்குணம் கொண்டவை. பௌத்தத்தால் தூண்டப்பட்ட வன்முறை என்பது வரலாறு முழுவதும் நடைபெற்று வந்திருக்கிறது. ஆனால் பௌத்த தத்துவம் வலியுறுத்தும் அன்பும் சகிப்புத்தன்மையும் பற்றி அதீத முன்னிறுத்தல்கள் பௌத்ததின் வன்முறைப் பாத்திரம் குறித்த ஆழமான ஆய்வுகளுக்கு இடந்தரவில்லை. ஆனால் இத்துறை சார்ந்து விரிவடைந்து வரும் சமகால ஆய்வுகள் பௌத்தம் எவ்வாறு வன்முறையையும் போரையும் ஆதரிக்கிறது என்பது பற்றிய சித்திரத்தைத் தர உதவுகின்றன. குறிப்பாக பௌத்தத்தை முன்னிறுத்திய இரண்டு முக்கியமான அரசர்களைப் பற்றிய பௌத்தக் கதைகள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக அமைகின்றன. முதலாமவர், அசோகச் சக்கரவர்த்தி, அவர் பௌத்த அமைதிவாத கொள்கைகளுக்கான உரைகல். இரண்டாமவர் துட்டகைமுனு, இவர் பௌத்த விழுமியங்களின் காட்டுருக்களிலிருந்து வெளிப்படையாக அதிர்ச்சியூட்டும் விதிவிலக்கு.

‘வன்முறை’ பற்றிய பௌத்த நெறிமுறைச் சிந்தனை பற்றிய விவாதங்கள் தொடர்ந்தாலும், தண்டனைகள் மற்றும் போர்முறைகளில் பண்டைய பௌத்த கலாசாரங்கள் சமீப காலங்களில் இருந்ததை விட வரலாற்று ரீதியாக அமைதியானவையாக இருக்கவில்லை என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாயுள்ளது. தென்கிழக்கு ஆசியாவில் குறிப்பாக, மியான்மார் மற்றும் தாய்லாந்தில் உள்ள முஸ்லீம் மக்களை இலக்குவைத்த பௌத்த நம்பிக்கையாளர்களின் வன்முறை அண்மைய உதாரணம். பர்மிய, மோன், கெமர், தாய் மன்னர்களால் நடத்தப்பட்ட தொடர்ச்சியான போர்களினால் நீண்ட வன்முறையின் வரலாற்றை இவ்விரு நாடுகளும் கொண்டுள்ளன. இரண்டாம் உலகப் போருக்கு ஜப்பானிய ஜென் நம்பிக்கையாளர்கள் ‘பெரிய கருணை யுத்தம்’ (The Great Mercy War) என்று போருக்கு ஆதரவு திரட்டியதை இங்கு நினைவுபடுத்தலாம். இதில் ஜென் நம்பிக்கையாளர்களால் வழிநடத்தப்பட்டு ஆதரிக்கப்படும் பயங்கரவாத படுகொலைகளுக்கான ஆதரவுப் பிரச்சாரங்களும் அடங்கும். இதற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. ஷோகுனேட்டின் கீழ் ஜப்பானை ஒன்றிணைத்த சாமுராய் போர் வீரர்களால் தோற்கடிக்கப்படும் வரை மடால

யங்களை இராணுவமயமாக்குவதில் ஜப்பான் நீண்ட முன்னோடிகளைக் கொண்டுள்ளது. இரண்டாம் உலகப் போரின் முடிவிற்கு முன்னர் அமைதிவாத ஜப்பானிய பௌத்தம் புதிதாக தன்னை உருமாற்றிக் கொண்டது. ஜப்பானில் பௌத்தம், இராணுவ சக்தியுடனும் அரச இராணுவவாதத்திற்கான ஆதரவுடனும் நீண்ட காலமாக தொடர்புடையது. எனவே, மற்ற சூழல்களைப் போல, ஆரம்பகாலந்தொட்டு இருந்து வந்த அமைதிவாத பௌத்தம் ஏதோ ஒரு வரலாற்றுச் சந்திப்பில் தவறாகப் போய்விட்டது என்பது தவறானது.

சீனாவைப் பொறுத்தவரை, பௌத்த விழுமியங்கள் அரச ஆதரவு வன்முறை மற்றும் வெகுஜன எழுச்சிகள் இரண்டையும் ஆதரித்தன. ஜப்பானிய படையெடுப்பின் கொரில்லா போர் மற்றும் எதிரிகளைப் படுகொலை செய்வதற்கான பிரச்சாரங்கள் ஆகியவற்றை பௌத்த விழுமியங்கள் ஆதரித்தன. கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ், கொரியப் போரில் சீனர்களை போரிட ஊக்குவிப்பதற்காக போரின் பௌத்த சிந்தனைகள் பயன்படுத்தப்பட்டன. அதே வேளை தென் கொரியாவில் கம்யூனிஸ்டுகளை எதிர்த்துப் போராடுவதற்கு ஆதரவாகவும் பௌத்த சிந்தனைகள் பயன்படுத்தப்பட்டன.

இந்திய பௌத்த மரபுகள், அசோகன் உட்பட பல பௌத்த அரசர்களை, பௌத்த பாரம்பரியத்தின் எதிரிகளாகக் கருதப்படும் 'வெளியாட்களுக்கு' எதிரான பாரிய வன்முறைகளுக்காக அல்லது பௌத்த கொள்கைகளால் ஆதரிக்கப்படும் வெற்றிப் போர்களுக்காக நினைவுகூருகின்றன. இந்தியச் சிந்தனை மரபின் போர் குறித்த பார்வை பற்றிய புலமைசார் கருத்தாக்கமானது பெரும்பாலும் அசோகனின் ஆணைகள் பற்றிய புரிதலற்ற வாசிப்புகளுடன் தொடங்குகிறது. அசோகனின் புகழ்பெற்ற வருத்தத்தின் வெளிப்பாடு நிலையான இந்திய அரசமைப்புடன் ஒத்துப்போகிறது என்பது இங்கே குறிப்புக்குரியது. இந்த விஷயத்தில் இலங்கை கவனத்தை ஈர்த்துள்ளது, குறிப்பாக துட்டகைமுனு அல்லது துட்டகாமினி மன்னரின் அதிர்ச்சியூட்டும் வரலாறு, இலங்கைத் தீவை ஒரு பௌத்த 'சாசனத்தின்' கீழ் ஒருங்கிணைக்க போர் செய்த கதையாகும். துட்டகாமினி ஒரு முன்மாதிரியாகக் கொண்டாடப்படுவது மட்டுமன்றி இலங்கை வரலாற்றாசிரியர்களால் அவர் நன்மனிதராகச் சித்தரிக்கப்படுகிறார். இலங்கை வரலாறு அவரது தவறுகளை 'பௌத்த சாசனத்தைக் காப்பது' என்பதன் பெயரால் மன்னிக்கிறது. இதன் தொடர்ச்சியே இலங்கையின் மக்களை இனச் சுத்திகரிப்பு செய்தலை பௌத்தத்தின் பெயரால் நியாயப்படுத்தலாகும்.

இலங்கையில் பௌத்தம் குறித்த முன்னோடியான ஆய்வுகளைச் செய்த ரிச்சர்ட் கோம்ப்ரிச் பின்வருமாறு கெள்வியெழுப்புகின்றார்: 'வரலாற்றை ஆழமாகப் பார்க்கும் ஒருவருக்கு பௌத்தர்கள் மற்ற கலாசாரங்களை விட வன்முறை குறைவானவர்கள் என்ற எண்ணம் எப்படிப் பரவலாக வந்தது என்று யோசிக்கத் தொடங்குவார்'. ஆனாலும் பௌத்தம் குறித்த சிந்தனைகளை வெறுமனே அன்பு, அகிம்சை, மன்னிப்பு போன்ற சட்டகங்களுக்குள் மட்டும் பார்த்த தவறை ஆய்வாளர்கள் தொடர்ச்சியாகச் செய்து வந்திருக்கிறார்கள் என்று கோம்ப்ரிச் வாதிடுகிறார். வரலாற்றை சில விழுமியங்களின் அடிப்படையில் அணுகும் அடிப்படைவாதப் பார்வை இந்த தவறை ஆய்வாளர்கள் மீண்டும் மீண்டும் செய்வதற்கு வழிவகுத்துள்ளது. ஏனெனில் இது சில அடிப்படை மதிப்புகள் பற்றிய கண்ணாடியின் வழி வரலாற்றை விளங்கும் செயன்முறையாகும். இந்த நோக்கில் பௌத்தத்தை அணுகியதன் விளைவால் அமைதிவாதத்தின் கருத்துக்களுக்கு முரணான எடுத்துக்காட்டுகள் நிறைந்த ஒரு பரந்த வரலாற்றை எழுதும் வாய்ப்பு விலக்கப்பட்டுவிட்டது. நவீன அறிஞர்கள் தாங்கள் எழுதும் நூல்களால் குறிக்கப்படும் ஒரு பொற்காலத்தை இலட்சியப்படுத்துவதற்காகவும் இதைச் செய்கிறார்கள்.

அத்துடன் நூல்களிலும் வரலாற்றிலும் பௌத்த வன்முறைக்கான ஆதாரங்கள் அதிகமாக இருப்பதற்கான எதிர்வினையாக பௌத்த பொற்காலத்தையும், பௌத்தத்தின் அமைதிவாதத்தையும் முன்னிலைப்படுத்த விரும்புவோருக்கான ஆதரவுத் தளத்தைக் கட்டியெழுப்பவதை நோக்கமாக கொண்டதாகவும் இது இருக்கலாம் என்று கோம்ப்ரிச் குறிப்பிடுகிறார். வரலாற்று வெளிச்சத்திலோ அல்லது சமகால நிகழ்வுகளில் கூட அமைதிவாத பௌத்தத்தின் உருவத்தை நிலைநிறுத்துவது கடினமாக இருப்பதால், அந்த உருவத்தை நிலைநிறுத்த 'தொடக்ககால' நியமன நூல்களையே இடமாற்றம் செய்ய வேண்டிய தேவை நேர்ந்தது. இந்த நூல்கள் நியமனமற்றவை என வகைப்படுத்தப்படுகின்றன, மேலும் அவை பெரும்பாலும் வரலாற்று அடுக்குகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன, ஆனால் அவை சமூக நெறிமுறைகளை, குறிப்பாக போர் மற்றும் தண்டனையுடன் தொடர்புடையவையாகும். இதனால் கட்டமைக்கப்பட்ட பௌத்த கதைகளின் பெரும்பகுதி அரசர்களின் நடத்தையை மையமாகக் கொண்டது. பௌத்த விழுமியங்களைப் புரிந்துகொள்வது 'அடிப்படையானது' அல்ல என்று பரிந்துரைக்கும் வகையில் இந்த கதைகளை மட்டும் முன்னிலைப்படுத்துவது, ஒரு கறைபடிந்த சிந்தனையின் மையத்தை பாதுகாக்க முயன்றது.

இதற்கு சிறந்த உதாரணம் அனகாரிக தர்மபால. அவர் 1893-இல் உலக மதங்களின் பாராளுமன்றத்தில், பௌத்தத்தை 'ஆசியாவை மென்மையாக்கிய' சமாதான மதமாக முன்வைத்தார். முரண்பாடாக, இலங்கையின் உள்நாட்டுப் போரைத் தூண்டும் விதத்தில் வன்முறையாளர் துட்டகாமினியை மகிமைப்படுத்தியதற்காக தர்மபாலவும் குற்றம் சாட்டப்படுகிறார். அதேபோல 20-ம் நூற்றாண்டைச் சேர்ந்த இலங்கைத் துறவியான, வல்பொல ராகுலா அமெரிக்காவில் பேராசிரியராகப் பணியாற்றியவர். அவருடைய 'புத்தர் கற்பித்தது என்ன' என்ற நூல் பல தசாப்தங்களாக பௌத்த ஆய்வுப் படிப்புகளில் ஒரு முன்னோடியான அடிப்படை நூலாக இருந்தது. அதில் அவர்: '2500 ஆண்டுகால நீண்ட வரலாற்றில் மக்களை பௌத்த மதத்திற்கு மாற்றுவதற்கோ அல்லது அதற்கான பிரச்சாரத்திலோ மக்களைத் துன்புறுத்தப்படுவதற்கோ அல்லது ஒரு துளி இரத்தம் சிந்தப்பட்டதற்கோ ஓர் உதாரணம் கூட இல்லை' என்று அடிக்கடி திரும்பத் திரும்பக் கூறினார். பௌத்த வரலாற்றை வெண்மையாக்குவதற்கும், திரிபுபடுத்துவதற்கும் மேலாக இத்தகைய கூற்றுக்கள் பல்வேறு நோக்கங்களுக்கு உதவின. இது கொலனித்துவ பௌத்தர்களை சுரண்டுபவர்களிடமிருந்து தார்மீக உயர்நிலையைப் பெறவும், அவர்களின் உயர்ந்த மதக் கொள்கைகளின் விளைவாக அவர்களின் ஆதிக்கத்தை விளக்கவும் அனுமதித்தது.

புத்தரின் போர் குறித்த சிந்தனைகள் இதுவரை விரிவான ஆய்வுக்கு உட்படவில்லை. இதில் பிரச்சினை என்னவென்றால், புத்தர் பொதுவாக போரைப் பற்றி அறியாதவர். உதாரணமாக, போரில் இறப்பவர்களின் கதியைப் பற்றி போர் வீரர்கள் மூன்று முறை அவரிடம் கேட்டபோதும் அவர் பதிலளிக்கவில்லை. வஜ்ஜிகளுக்கு எதிரான போர் பற்றி அஜாதசத்து ஆலோசனை கேட்டபோது, போரைக் கண்டிப்பதை விட, புத்

தர் அவர்கள் ஒற்றுமையாக இருக்கும் வரை அவர்கள் ஒரு போதும் தோற்கடிக்கப்பட மாட்டார்கள் என்று கூறுகிறார். ஆய்வாளர்கள், போர் மற்றும் வன்முறை ஆகிய விடயங்களில் புத்தரின் மௌனத்தையும் கவனித்துள்ளனர்.

பௌத்தத்தை அமைதிவாதமாகக் கருதுவதற்கு நல்ல காரணங்கள் உள்ளன. பௌத்த மரபுகள் நிபந்தனையின்றி தீங்கு மற்றும் தீங்கு விளைவிக்கும் நோக்கங்களுக்கு எதிராக இருப்பதுடன் அனைத்து உணர்வுள்ள உயிரினங்களின் மகிழ்ச்சி, நல்வாழ்வை மதிக்கின்றன. தீங்குகளைத் தவிர்ப்பதற்கான அக்கறை பல வழிகளில் காட்டப்படுகிறது. புத்தர் பாமர மக்களை ஆயுதக் கடத்தலில் இருந்து விலகி இருக்குமாறு கேட்டுக் கொண்டார். புத்தர் ஒருபோதும் பாமர மக்களின் இராணுவ சேவையை கண்டிக்கவில்லை என்றாலும் துறவிகள், இராணுவ முகாம்கள், அணிவகுப்புகள் மற்றும் போர்களில் ஈடுபடுவதை அவர் ஊக்குவிக்கவில்லை. இந்த விடயங்களும் கணிப்பில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். தீங்குகளைத் தவிர்ப்பதற்கான பௌத்தர்களின் அக்கறை மிகவும் சமரசமற்றது. சூழல்களையும் நிலைமைகளையும் காரணங்காட்டி தீங்கிழைப்பதை நியாயப்படுத்தி சமரசம் செய்வது சாத்தியமில்லை. கொல்லக்கூடாது என்ற கட்டளையும், தீங்கு விளைவிப்பதற்கான பொதுவான வெறுப்பும் புத்தரின் போதனைகளில் முக்கியமானவை.



பௌத்த சிந்தனைகளை முன்னிறுத்தும் கதைகள் இதற்கு முரண்பாடாக இயங்குகின்றன. இந்தக் கதைகள் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட வகையான வேலையைச் செய்கின்றன; சிலவற்றில் போரின் மதிப்பு வலியுறுத்தப்படுகிறது; இன்னும் சிலவற்றில் போரில் திறமையாக இருந்தால், போரின் தார்மீக அபாயங்களைப் புறந்தள்ளி அத்திறமையை மிகைப்படுத்தப் பட்டதாகக் காட்டுகின்றன. புத்தரின் போதனைகளுக்கும் நடைமுறையில் உள்ள பௌத்தத்திற்குமிடையிலான விலகலின் தொடக்கப்புள்ளி இது.

இந்த கதைகளில் பலவற்றில் போர் வீரர்கள் கொல்லப்படும் போது வீரமரணம் என்று நாயகநிலைப்படுத்தி உணர்ச்சிவசப் படச் செய்கின்ற முடிவுகள் போரில் கொல்லப்படுபவர்கள் சொர்க்கத்திற்குப் போவதை விட நரகத்திற்குச் செல்வார்கள் என்ற புத்தரின் புகழ்மிக்கதும் நன்கறியப்பட்டதுமான மேற்கோளுடன் ஒருபோதும் ஒத்துப்போவதில்லை. ஆனாலும் இந்தக் கூற்று போரில் கொல்லப்பட்டதன் விளைவாக அவர்கள் நரகத்திற்குச் செல்வார்கள் என்று சொல்வதாகவே பெரும்பாலான இடங்களில் பிழையாகப் பொருள்கொள்ளப்படுகின்றது. உண்மையில் போரில் கொல்லப்படும் வீரர்கள் இறக்கும் போது இன்னொருவரைக் கொல்லவேண்டும் என்ற நினைவுடனேயே இறப்பதாலேயே அவர்கள் நரகத்திற்குச் செல்கின்றார்கள் என்ற பொருளில் இக்கூற்று சொல்லப்பட்டுள்ளது. ஆனாலும் ஜாதகக் கதைகளை உருவாக்கியவர்கள் படையெடுப்புகளதும் பேய்களையும் மனிதர்களையும் எதிர்த்துப் போராடும் தற்காப்பு வீரர்கள் பற்றிய ஏராளமான எடுத்துக் காட்டுகளையும் கூறி போரில் ஈடுபடுபவர்களுக்கு நரகம் அவசியமான விதி அல்ல என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறார்கள்.

கொலை நோக்கங்கள் இல்லாமல், அல்லது இரக்கத்துடன் கூட ஒருவர் போரில் ஈடுபட முடியுமா என்ற முக்கிய நெறிமுறை கேள்விக்கு இது நம்மைக் கொண்டுவருகிறது. மகாயான, வஜ்ஜிராயன மரபுகளில், கருணைக் கொலையும் போர்களும் சாத்தியம் என்றும், கொல்லும் வீரர்கள் பெரும் கர்ம பலன்களைப் பெறலாம் என்றும் சொல்லப்படுகிறது. இது போன்ற செயல்களைச் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும் போது அதைத் தவிர்ப்பது தார்மீக தோல்வியாகக் கூட கருதப்படுகிறது. இவ்வாறே புத்தரின் சிந்தனைகள் காலவோட்டத்தில் புதிய வியாக்கியானங்களைப் பெற்றன.

கொலை செய்ததை நியாயப்படுத்துவதை, பாதிக்கப்பட்டவர்களின் நிலையை தார்மீகரீதியில் அணுகிக் கேள்வி எழுப்புவதுஇந்தியச் சிந்தனை மரபில் வேரூன்றியிருக்கின்றது. இது கொலை செய்வது தவறு என்ற முதன்மைக் கொள்கைக்கும் தீங்கைத் தவிர்ப்பதற்காக எதிரெதிர் அக்கறைகளின் நடைமுறைச் சமநிலைக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்கிறது. மிருகங்களைக் கொல்வது கூட விதிகளில் தடைசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும், துறவறக் கோட்பாட்டில், ஒரு காகத்தைக் கொல்வதற்கு ஒரு துறவியின் ஒப்புதல் வாக்குமூலம் தேவை என்ற விளக்கமும் இருக்கின்றது. தேரவாத வினய சிந்தனைகள் துறவிகள் தற்காப்புக்காக ஆயுதங்களை எடுப்பதை அனுமதிக்கிறது. தாக்குபவர்கள் கொல்லப்பட்டால் துறவிகளைப் பாவத்திலிருந்து விடுவிக்கிறது.

பௌத்த தர்மத்தின் எதிரிகள் என்று வரையறுக்கப்பட்ட மிக மோசமான நபர்களைக் கொல்வது மிகக் குறைவான எதிர்மறையான கர்ம பலன்களையே தருகிறது. அத்தகையவர்களைக் கொல்வது, ஒரு விலங்கு அல்லது பூச்சியைக் கொல்வதை விட குறைவான எதிர்மறையானது என்று தேரவாதமும் மஹாயானமும் கூறுகின்றன. பாதிக்கப்பட்டவர்களை தர்மத்தின் எதிரிகளாகவும், கொலையாளியை பாதுகாவலராகவும் சித்தரிக்கும் வன்முறையினை நியாயப்படுத்துவது இவ்வாறே தார்மீக ரீதியான ஒன்றாகவும் மாறியது. பௌத்த ஒழுக்கக் கணக்கீட்டில் தர்மத்தின் எதிரிகள் மிகவும் ஆபத்தான இடத்தில் உள்ளனர். எனவே முக்கிய கேள்வி என்னவென்றால், கொலை என்பது எதிர்மறையான நோக்கங்களுடன் தொடர்புடையதா அல்லது நேர்மறை எண்ணங்களை விலக்குகிறதா என்பதே. பௌத்த கதை இலக்கியங்கள் கைதிகளை சரியான முறையில் நடத்துவது முதல் போரை நடத்துவது வரை போருக்குப் பிந்தைய நல்லிணக்கம் வரை அனைத்திற்கும் ஏராளமான உதாரணங்களை வழங்குகின்றன. ஆனாலும் போர் நெறிமுறைகள் பற்றிய நவீன முறையான சிந்தனைகள் வளர்ச்சியடையவில்லை. போர் குறித்த நிலையான பௌத்த வாதங்கள் அத்தகைய நடத்தை (போருக்குப் பிந்தைய நல்

லிணக்கம்) பல தலைமுறை வன்முறைச் சுழற்சிகளை மட்டுமே நிலைநிறுத்துவதாகக் கூறுகின்றன.

### வரலாற்றில் பௌத்தமும் போரும்:

பௌத்தத்தின் வன்முறை மற்றும் போர் பற்றிய வரலாற்றைப் பார்க்கும் போது, இதில் அரசின் முக்கியமான பங்கையும் அவ்வரசில் மிகுந்த செல்வாக்குச் செலுத்திய பௌத்தத்தின் தன்மையையும் நாம் இனங்காணல் முக்கியமானது. பொ.ஆ. மு மூன்றாம் நூற்றாண்டிலிருந்து, பௌத்த அரசாங்கங்களும் குழுக்களும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த பௌத்தர்கள் மற்றும் ஒரே நாட்டிற்குள்ளேயே வெவ்வேறு வழிபாட்டு முறைகளைக் கொண்ட பௌத்தர்கள் என வெவ்வேறு நம்பிக்கைகளின் எதிர்ப்பாளர்களுடன் போரிலும் வன்முறையிலும் ஈடுபட்டனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பௌத்த அதிகாரமானது, அரசியல் அதிகாரத்தின் கூட்டு வன்முறைக்கான பலத்தினை வழங்கியுள்ளது. பொ.ஆ.மு ஐந்தாம் நூற்றாண்டில் வட இந்தியாவின் மகத, கோசல மன்னர்களின் காலத்திலேயே பௌத்த கொள்கைகளுக்கும் இறையாண்மைக்கும் இடையிலான உறவைப் பற்றிய ஆரம்பகால தொடர்புகளை இனங்காண முடிகிறது.

அரசுகள் உருவாகும்போது, பௌத்த அதிகாரம் சக்கரவர்த்தி, தம்மராஜா (பௌத்த கோட்பாட்டின் ஆட்சியாளர்), மங்கோலியர்கள், திபெத்தியர்களுக்கு தலாய் லாமா (ஞானத்தின் கடல்) போன்ற மத-அரசியல் பட்டங்களை வழங்குவதன் மூலம் மன்னர்களையும் ஆட்சியாளர்களையும் சட்டபூர்வமாக்க உதவியது. பௌத்த அரசுகள் வன்முறையை வெளிப்புறமாகவும் உள்நாட்டிலும் பயன்படுத்துகின்றன. ஆரம்ப கால தெற்காசிய மத இலக்கியங்கள், போரில் ஈடுபடும் வெளிச் சக்திகளிடமிருந்து தங்கள் குடிமக்களைப் பாதுகாப்பதற்காக வன்முறையில் ஈடுபட ஆட்சியாளர்களுக்கு அதிகாரமளித்தன.

பொ.ஆ.மு மூன்றாம் நூற்றாண்டில் அசோகர் காலத்திலிருந்தே பௌத்தர்கள் போரில் ஈடுபட முடிவு செய்துள்ளனர். இந்தப் போர்கள் எண்ணற்ற காரணங்களையும் காரணிகளையும் கொண்டிருக்கின்றன. இருப்பினும், புத்திசாலித்தனமான தலைவர்கள், பௌத்த சொல்லாட்சிகள் (தம்மம்) மற்றும் பௌத்த துறவிகள் மூலம் போரின் பங்கேற்பாளர்களை புனிதமானவர்களாக சித்தரித்தார்கள். இதனால் போரில் ஈடுபடல் புனிதக் கடமை போலானது. பௌத்தத்தால் ஈர்க்கப்பட்ட பெரும்பாலான போர்கள், துறவறம் மற்றும் அரசின் ஆதரவு என்ற கூட்டுக்கலவையின் ஆயிரமாண்டுக் கூறுகளைக் கொண்ட இயக்கத்தின் விளைவாகும்.

முதலாம் நூற்றாண்டில் பௌத்த துறவிகள் தங்கள் பாரம்பரியங்களை சீனாவிற்கு கொண்டு வந்தனர். முந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, சீனாவில் பௌத்த கிளர்ச்சிகளும் போராட்டங்களும் பெரும்பாலும் துறவிகளால் வழிநடத்தப்பட்டன. பௌத்தத்தால் தூண்டப்பட்ட கிளர்ச்சிகள் டாப்காட்ச் சாம்ராஜ்யத்தில் (Tabgatch Empire) மத நம்பிக்கை அற்றவர்கள், பிற மத நம்பிக்கையாளர்களுக்கு எதிராக (பொ.ஆ.பி 402-517) நிகழ்ந்தன. பௌத்தத்திற்கு எதிரானவர்கள் மாராவாக (பௌத்த தத்ததுவத்தின்படி பேய் அல்லது துர்தேவதை) சித்தரிக்கப்பட்டனர். இது இவர்கள் மீதான கட்டற்ற வன்முறைக்கு நியாயம் கற்பித்தது. சுய் மற்றும் டாங் வம்சங்களின் (Sui and Tang dynasties) போது (613-626) இறைதூதத் துறவிகள் கலகம் செய்தனர். டாங் வம்சத்தில் தான் ஃபாகிங் தனது சிப்பாய் துறவிகளை கிளர்ச்சியில் வழிநடத்தினார். பதின்மூன்றாம் மற்றும் பதினான்காம் நூற்றாண்டுகளில், பௌத்தர்கள் தங்கள் சொந்த அரசுகளை நிறுவுவதற்கும் மங்கோலிய வம்சத்தை அகற்றுவதற்கும் ஆயுதமேந்திய கிளர்ச்சிகளை நடத்தினர்.

மஹாயான பௌத்த மரபுகள் நான்காம் நூற்றாண்டில் சீனாவிலிருந்து கொரியாவிற்கு கொண்டு செல்லப்பட்டன. இரத்தம் தோய்ந்த சீன ஆட்சிக்காலத்தின் போது (பொ.ஆ.பி 220-589) கொரியா பௌத்த முறைகளை ஏற்றுக்கொண்டது. இந்த புதிய சில்லா இராச்சியம் பொ.ஆ.பி 671-ல் சீனர்கள் அவர்களுடன் சமாதானத்தை ஏற்படுத்தியமைக்கு பௌத்த பாதுகாவலர்களே காரணம் என்றது. பின்னர் கொரியர்கள் பௌத்த நடைமுறைகளையும் நம்பிக்கைகளையும் ஜப்பானுக்கு ஆறாம் நூற்றாண்டில் கொண்டு வந்தனர். ஜப்பானில், சக்தி வாய்ந்த பௌத்த மடாலயங்கள் படிப்படியாக தோன்றின, மேலும் அவர்களது நில உடைமைகளைப் பாதுகாக்க இராணுவங்கள் கோரப்பட்டன. ஹீயன் காலத்தில் (பொ.ஆ.பி 94-1185) மடங்களுக்கும் அரசுக்கும் இடையிலான நெருங்கிய அரசியல் உறவுகள் துறவிகளை மோதல்களுக்குள் இழுத்தன. பன்னிரண்டாம் நூற்றாண்டில், சீன மற்றும் கொரிய துறவிகள் மங்கோலியர்கள் மற்றும் ஜப்பானியர்களுக்கு எதிராக போர்களில் ஈடுபட்டனர். அடுத்த நூற்றாண்டில், ஜப்பானியஷின் ஆதரவாளர்கள் போர்களை நடத்தினர்.

தேரவாத மரபுகளுக்குள், பதினாறாம் நூற்றாண்டில் தாய்லாந்து நாளேடுகள் துறவிகளை உளவாளிகளாகவும் சதிகாரர்களாகவும் வெளிப்படுத்துகின்றன. 1699 முதல் 1950-களின் நடுப்பகுதி வரை, லாவோ மற்றும் தாய் புனித மனிதர்கள் (புமிபன்) தாய்லாந்திற்கு எதிராக டஜன் கணக்கான மெசியானிக் கிளர்ச்சிகளை நடத்தினர். தாய்லாந்து மன்னர் தக்சின் 1767-ல் தனது மக்களை பர்மிய ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்து, தன்னை ஒரு நீரோடைக்குள் நுழைபவராக அறிவித்தார்.

பௌத்தர்களும் பௌத்த துறவிகளும் தங்கள் நம்பிக்கைகளையும் நடைமுறைகளையும் ஆசியா முழுவதிலும் போர்களாக வழிநடத்தினர். ஜப்பானிய விவசாயிகள், தூய நில போதனைகளால் ஈர்க்கப்பட்டு, 1500-களில் பௌத்த சொர்க்கத்தை மேம்படுத்துவதற்காக பிரபஞ்ச பொருத்தத்தின் போரில் போராடினர். பின்னர், ஜப்பானிய ஜென் துறவிகள் 1904 மற்றும் 1905-ம் ஆண்டு ரஷ்ய-ஜப்பானியப் போரில் வீரர்களாகப் போரிட்டனர். திபெத்திய மரபுகளுக்குள் போர் துறவிகளின் சகோதரத்துவம் உள்ளது. இந்தத் துறவிகள் வீரர்கள் இல்லையென்றாலும், குறைந்தபட்சம் ஒரு ஆயுதமாவது வைத்திருந்தார்கள். மிக சமீபத்தில், தாய்லாந்து வீரர்கள் இராணுவ துறவிகளாக இரகசிய நடவடிக்கைகளில் பணியாற்றுகின்றனர். அவர்களின் மடாதிபதிகளுக்குத் தெரியாமல், இந்த ஆண்கள் தங்கள் இராணுவ அந்தஸ்து, துப்பாக்கிகள் மற்றும் மாதாந்திர உதவித் தொகைகளை முழுமையாக நியமித்து தக்கவைத்துக்கொள்கிறார்கள்.

கொலனித்துவ மற்றும் கொலனித்துவத்துக்குப் பிந்தைய காலங்களில், பௌத்தர்கள் பெரும்பாலும் கிறிஸ்தவ கொலனித்துவவாதிகளுக்கு எதிராக கிளர்ச்சி செய்தனர், மேலும் தங்கள் அடையாளங்களை மீண்டும் உறுதிப்படுத்தினர். யு ஓட்டமா போன்ற பர்மிய துறவிகள் 1930-களில் ஆங்கிலேயருக்கு எதிராக கொலனித்துவ எதிர்ப்பு இயக்கங்களை வழிந

டத்தினர். 1940-களின் முற்பகுதியில், கொரிய துறவிகள் அமெரிக்காவின் வளர்ந்து வரும் இராணுவ செல்வாக்கை ‘கிறிஸ்தவ சக்தியுடன்’ இணைத்துப் பார்த்தனர். கொரியப் போரின் போது (1951-1953) சீனப் பௌத்தர்களால் அவர்கஎது உணர்வுகள் பிரதிபலித்தன. வென் போன்ற குறிப்பிடத் தக்க சீன துறவிகள், சீனப் பௌத்தர்களைத் தங்கள் தேசபக்திக் கடமையை நிறைவேற்றும்படியும், தீமைகளை அடக்குவதைப் போலவே அமெரிக்காவின் செல்வாக்கின் அத்துமீறலை எதிர்ப்பதன் மூலம் வட கொரியாவுக்கு உதவுமாறும் சவால் விடுத்தார்.

இருப்பினும், வெளி சக்திகளுக்கு எதிரான கொரிய பௌத்த இயக்கங்கள் 1950-களில் உள்நாட்டிற்குள் நெருக்கடியாக மாறியது. கொரிய பௌத்த சோகியே துறவிகள் திருமணமான துறவிகளுடன் பிரம்மச்சரியம் தொடர்பான பிரச்சினையில் இரத்தக்களரி ஏற்படுத்திய மோதல்களில் ஈடுபட்டனர். அவர்கள் துறவறம் பூண்டோரின் திருமண நடைமுறைகள் ஜப்பானிய கொலனித்துவத்தின் துணை விளைவு என்று வாதிட்டனர்.

பெர்லின் சுவர் வீழ்ச்சிக்குப் பிறகு, பௌத்த உலகம் மாறியது. சமகாலத்தில் பௌத்தச் செல்வாக்குப் பெற்ற அரசுகள் போரி ஸிலும் கட்டற்ற வன்முறையிலும் ஈடுபடுகின்றன. விடுதலைப் புலிகளுக்கு எதிரான இலங்கையின் உள்நாட்டுப் போர் (1983-2009), லடாக், இந்தியாவின் லடாய் பகுதி, சீனாவின் திபெத் பகுதி, மியான்மார், தெற்கு தாய்லாந்து ஆகியன குறிப்பிடத்தக்கன.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்கள், பௌத்தர்கள் போருக்குச் செல்வதற்கான எண்ணற்ற நியாயங்களைக் காட்டுகின்றன. பௌத்தர்களுக்கு நிலம் மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பது போன்ற சாதாரண காரணங்களும், ஆயிரமாண்டு கால மேலாதிக்க வரலாறு போன்ற தகுதிகளும் உள்ளன. மேலும் பௌத்த மரபுகளுக்குள் நியாயமான போர் சித்தாந்தத்திற்கான சான்றுகள் உள்ளன. இது சமீபத்திய சமகால உதாரணங்களில் தெரிகிறது. மேலும், சமகாலத்தில், மனித உரிமைகள் பற்றிய விவாதத்தில் மிகவும் உண்மையான ஒன்றாக பௌத்தத்தின் இரக்கம் (‘கருணா’) இருக்கிறது என்றாலும், பல நவீன அரசுகள் (பாரம்பரியமான மியான்மார் போன்ற பௌத்த நாடுகள் கூட) தங்கள் குடிமக்களைப் பற்றி சிறிதும் அக்கறை காட்டுவதில்லை என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

## தொடரும் குறிப்புகள்:

பௌத்தம் அடிக்கடி அமைதிவாதத்திற்கு உதாரணமாக உள்ளது போல தோற்றம் தருகிறது. ‘போரும் வன்முறையும் நியாயப்படுத்த முடியாதவை, அனைத்து மோதல்களும் அமைதியான வழிகளில் தீர்க்கப்பட வேண்டும் என்ற நம்பிக்கையே அடிப்படையான பௌத்த தத்துவம் போல முன்மொழியப்பட்டுள்ளது. முழுமையான அமைதிவாதத்திலிருந்து (இராணுவப் பாதுகாப்பிற்காக கூட மனித உயிரைப் பறிப்பதை எந்தக் காரணமும் நியாயப்படுத்த முடியாது என்ற நம்பிக்கை) நிபந்தனைக்குட்பட்ட மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைதிவாதம் (இராணுவ நடவடிக்கை என்று கருதப்படும் குறைந்த தீமையுடைய சில சூழ்நிலைகள் இருப்பதை இது ஏற்றுக்கொள்கிறது) நோக்கியதாக பௌத்த அமைதிவாதம் மாற்றமடைந்துள்ளது. நியதி நூல்களில் காணப்படும் பௌத்த போதனைகள் அமைதிவாதத்தை பிரதிபலிப்பனவாக இல்லையென்பதுடன் இவை தேவைப்பட்டால் இராணுவ வழிமுறைகளால் ஒரு நாடு தன்னைத் தற்காத்துக் கொள்ள அனுமதிக்கிறது.

‘உண்மையான பௌத்தம்’ என்பது நிபந்தனையற்ற சமாதானம் என்ற புரிதல், அதன் வரலாற்றால் மட்டுமல்ல, நவீன மேற்கத்திய சிந்தனை மரபால் ஈர்க்கப்பட்ட விளக்கமாகும். இது அடிப்படையில் தவறானது. மோதல் சூழ்நிலைகளில், அரசு மற்றும் பௌத்த சங்கத்தின் நெருக்கம் சில நேரங்களில் பௌத்தம் வன்முறையை மறைமுகமாக ஆதரிக்கிறது என்ற கருத்தை உருவாக்குகிறது. பௌத்தத்தை முழுமையான அமைதிவாதத்துடன் இணைக்கும் செயலைச் செய்வோர், இராணுவத்திற்கு ஆதரவாக சங்கத்தில் இருந்து வரும் குரல்களை பாசாங்குத்தனமாகவும் அவர்களின் நடத்தையை மனித தோல்விகளின் பிரதிபலிப்பாகவும் விளக்குவது எளிது. ஆனால் போருக்கான சங்கத்தின் ஆதரவின் பின்புலத்தில் பல காரணிகள் உண்டு. சங்கத்தின் தலைமையில் உள்ளோரின் மோசமான நோக்கத்தையும் ஊழலையும் இங்கு கணிப்பிலெடுக்க வேண்டும். சங்கம் மேலும் ஆதரவைப் பெறுவதற்காக அரசுடன் தன்னை இணைத்துக் கொள்ள முயற்சிக்கிறது. இலங்கையின் கதை இதற்குச் சிறந்த உதாரணம்.

வரலாற்றில் போர்களில் பௌத்த பங்கேற்பின் பல்வேறு எடுத்துக்காட்டுகளில் ஒருவரின் நிலைப்பாடு எதுவாக இருந்தாலும், ஒரு மோதலின் பல காரணிகளில் மதம் ஒன்றாகும், இது பெரும்பாலும் இன அடையாளத்துடன் வலுவாக ஒன்றுடன் ஒன்று உள்ளது. பார்வையாளர்கள் ‘பௌத்தப் போர்’ பற்றிப் பேசும்போது, பெரும்பாலும், மோதலில் உள்ள குழுக்களில் ஒன்று தங்களை பௌத்தர்கள் என்று அடையாளப்படுத்துவதே இதற்குக் காரணம். நல்லொழுக்க நம்பிக்கைகள் பரவலாகக் கடைப்பிடிக்கப்படும் சமூகங்களில் கூட, வரலாறு முழுவதிலும் இதேபோன்ற மனித தோல்விகள் மிகவும் தெளிவாகக் காணப்படுகின்றன. அனைத்து முக்கிய மதங்களிலும் வன்முறை பற்றிய அறஞ்சார் தடைகள் உள்ளன, இருப்பினும் அனைத்து மத நியாயங்களைக் கூறி மோசமான செயல்களைச் செய்வோரும் உள்ளனர். ஒரு நம்பிக்கையை ஏற்றுக்கொள்வதற்கும் உண்மையில் அந்த நம்பிக்கைக்கு ஏற்ப செயற்படுவதற்கும் இடையே ஆழமான வேறுபாடு இருப்பதை பௌத்த சிந்தனையாளர்கள் மீண்டும் மீண்டும் ஒப்புக்கொண்டுள்ளனர். மனித குலத்தின் வரலாறு மக்களின் பேராசை, வெறுப்பு மற்றும் மாயையில் தொடர்ந்து வெளிப்படுவதால், போரும் வன்முறையும் மனிதகுல வரலாற்றின் பிரிக்க முடியாத பகுதியாகும். இந்தப் பின்புலத்திலேயே பௌத்தத்தில் நியாயமான போர் குறித்த கருத்தாக்கங்கள் இலங்கையின் இறுதிப்போரை ஒட்டி வெளியாகத் தொடங்கின. அவை போரை மட்டுமன்றி, அதனோடு இணைந்த வன்முறையையும் ஆதரித்தன. இது குறித்து அடுத்த கட்டுரையில் நோக்கலாம்.



meenilankco@thaiveedu.com

# வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்தற் பணியில் ஈழத்தவர் பங்களிப்பு - அறிமுகம்

– மைதிலி தயாநிதி

வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்தல் என்பது நெடுங்காலமாகத் தமிழில் நிலவிவரும் ஒரு இலக்கியச் செயற்பாடாகும். தமிழ்நாட்டில் இது பன்னூற்றாண்டுகளாக நிலவி வந்துள்ளது. 'மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்று பொ.ஆ.பி இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சாதனைகளைப் பட்டியலிடும் சின்னமனூர் செப்பேடுகள் மகாபாரத மொழிபெயர்ப்புப் பற்றிப் பேசுகின்றன. எனவே, முதலில் தமிழ்ப்படுத்தப்பட்ட வடமொழி நூல் மகாபாரதமே என்ற கருத்தும் உண்டு. பிற்காலத்தில் மகாபாரத இதிகாசத்தைத் தழுவித் தமிழில் ஒன்பதாம் நூற்றாண்டில் பாரத வெண்பாவும், பதினைந்தாம் நூற்றாண்டில் வில்லிபாரதமும், பதினெட்டாம் நூற்றாண்டில் அரங்கநாதர் பாரதம், நல்லாப்பிள்ளை மகாபாரதம் என்பனவும் எழுந்தன. வான்மீகி இராமாயணத்தைத் தழுவிப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கம்பராமாயணம் இயற்றப்பட்டது. தமிழகத்தில் பதினைந்தாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை வடமொழிப் புராணங்களின் மொழிபெயர்ப்புகளாகவும், தழுவல்களாகவும் தமிழில் புராண நூல்கள் ஆக்கப்பட்டன. இருபதாம் நூற்றாண்டிலும் அது தொடர்ந்தது. மேலும், காளிதாசன் போன்ற கவிஞர்களின் காவியங்களும், நாடகங்களும், பாசரின் ஸ்வப்ன வாசவதத்தம், சூத்திரகரின் மிருச்சகடிகம், பவபூதியின் உத்தரராமசரிதம் முதலான நாடகங்களும், காதம்பரி போன்ற உரைநடையிலமைந்த காவியங்களும் இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட செய்திகளை மு. வளர்மதியின் தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள் எனும் நூல் பதிவு செய்துள்ளது.

வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்தும் பணியில் ஈழத்தவரும் பின்னின்றாரில்லை. அவர்களின் பங்களிப்பும் கணிசமானது. இவ்விடயம் தொடர்பாக ஏலவே எழுதப்பட்ட இரண்டு கட்டுரைகளும், ஒரு சிறுநூலும் உண்டு. முதலாவது, பேராசிரியர் வி. சிவசாமி 07.09.1992ம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 'The Sanskrit Traditions of the Sri Lankan Tamils-A Historical Perspective' எனும் தலைப்பில் ஆங்கிலத்தில் வழங்கிய லேடி. லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையாகும். இப்பேருரையில் 'Tamil Translation and Adaptations of Sanskrit Literary works(வடமொழி இலக்கிய நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்புகளும், தழுவல்களும்)' என்ற பகுதி, வடமொழி இலக்கிய நூல்களுக்கு இலங்கையில் எழுந்த தமிழ் மொழிபெயர்ப்புகளையும், தழுவல்களையும் தொகுத்துக் கூறுகின்றது. இரண்டாவது, 2000-ம் ஆண்டு வெளிவந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வடமொழித்துறை விரிவுரையாளராக விளங்கிய ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மாவின் யாழ்ப்பாணத்தில் சம்ஸ்க்ருதக் கல்வியை வளர்த்த நிறுவனங்களும் அறிஞர்களும் என்ற 35 பக்கங்கள் கொண்ட ஒரு சிறுநூல். இங்கு குறிப்பிடப்படும் அறிஞர் பற்றிய சுருக்கமான



பேராசிரியர் வி. சிவசாமி

குறிப்புகளிலிருந்து வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட நூல்களின் பெயர்களை அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. எனினும், முக்கியமான வடமொழி மொழிபெயர்ப்பாளராகத் திகழ்ந்த சோ. நடராசன், யாழ்ப்பாண வடமொழிக் கல்வி வளர்ச்சியில் பங்காற்றிய யாழ்ப்பாணக் கல்லூரியையும் இந்நூல் குறிப்பிடவில்லை. ஆனால் யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னோடியாகத் திகழ்ந்த வட்டுக்கோட்டை செமினறியின் பெயர் மட்டும் இங்கு காணப்படுகிறது. மூன்றாவது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சம்ஸ்கிருதத் துறை சார்ந்த ச. பத்மநாபன் எழுதிய 'யாழ்ப்பாணத் தமிழர்

பண்பாடும் சம்ஸ்கிருத மொழியின் செல்வாக்கும்-மொழிபெயர்ப்பியலூடான பார்வை' எனும் கட்டுரை ஆகும். இது டிசம்பர் 2017-இல் வெளியான உலகளாவிய தமிழ்-காலந்தோறும் தமிழ் இலக்கியங்களில் பொருண்மைகளும் புதுமைகளும் (பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்)-தொகுதி 2 எனும் நூலில் இடம் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தவரால் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகளை, அவர்

- செய்யுளாக மொழிபெயர்க்கப்பட்டவை
- உரைநடையாக மொழிபெயர்க்கப்பட்டவை
- சாரமாக மொழிபெயர்க்கப்பட்டவை
- தமிழில் உரை செய்யப்பட்டவை



என நான்காக வகைப்படுத்தித் தந்துள்ளார். வடமொழியிலிருந்து தமிழ்ப்படுத்தப்பட்ட நூல்கள் தொடர்பான அடிப்படை விடயங்களை அறிந்து கொள்வதற்கு விவரணபாணியிலான இம்மூன்று ஆவணங்களும் உதவுகின்றன. எனினும், எத்தகைய அரசியல், சமூக, பண்பாட்டுச் சூழற் பின்னணிகளில் இத்தமிழாக்கங்கள் நிகழ்ந்தன என்பது பற்றி இவை பெரிதாக எதுவும் குறிப்பிட்டில. அக்குறையை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் நோக்குடனேயே இக்கட்டுரை எழுதப்படுகின்றது. இக்கட்டுரைத் தொடர் வடமொழித் தமிழாக்கமுயற்சிகளை மொழிபெயர்ப்புகளை மூன்று காலகட்டங்களாக வகுத்து நோக்குவதுடன், இக்காலகட்டங்களில் இத்தகைய தமிழாக்கங்களுக்கான அரசியல், சமூக உந்துதல்கள் குறித்தும் சில புரிதல்களைத் தரமுயல்கிறது.

- முதலாவது காலகட்டம், பொது சகாப்தம் பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரையிலான ஆரியச்சக்கரவர்த்திகள் காலம்.
- இரண்டாவது காலகட்டம் 1619-ல் யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் கைப்பற்றிய முதல் 1948-ல் இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் வரையிலாகும்.
- மூன்றாவது, இலங்கை சுதந்திரம் பெற்றதற்குப் பிற்பட்ட காலகட்டமாகும்.

இக்காலகட்டங்களில் எழுந்த நூல்களின் பட்டியல்கள், ஏலவே குறிப்பிடப்பட்ட மூன்று ஆவணங்கள் வாயிலாக நமக்குக் கிடைத்திருப்பதால், இக்கால கட்டங்களில் எழுந்த குறிப்பிட்டசில நூல்களின் மொழிபெயர்ப்புகளுக்கான அரசியல், சமூக உந்துசக்திகள் குறித்தும், அந்நூல்களின் இயல்புகள் குறித்தும் இக்கட்டுரைத்தொடர் சற்று ஆழமாக நோக்கவுள்ளது.

ஈழத்தவரின் வடமொழி-தமிழ் மொழிபெயர்ப்புகளில் ஈடுபட்டவர்களின் சமூகப்பின்னணியை ஆராயின், அந்தணரல்லாதோரும் இப்பணியில் ஆர்வமுடன் ஈடுபட்டிருந்தமை கவனத்திற்கு உரியதாகிறது. இவ்விடத்தில் வடமொழியானது அந்தணர் பயிலும் மொழியாக மட்டுமே இருந்து வந்துள்ளது என்ற தவறான பிம்பத்தை உடைக்கவேண்டியுள்ளது.

வடமொழி வரலாற்றில் இரண்டு காலகட்டங்கள் முக்கியமானவை.

- முதலாவது அது யாகங்கள் இயற்றும் புரோகிதர் மொழியாக உருவானமை. இருக்குவேதம் முதலான வேதங்கள் காணப்படும் அம்மொழியை வைதிகமொழி அல்லது Vedic Sanskrit என்பர். வைதிகமதம் சார்ந்த மொழியாக நாம் அதை விளங்கிக்கொள்ளலாம்.
- இரண்டாவது பொது சகாப்தத்திற்கு முன் நான்காம் நூற்றாண்டளவில் பாணினியால் செப்பனிடப்பட்ட சம்ஸ்கிருதம் என வழங்கப்படுவது.

சம்ஸ்கிருதம் என்பதற்கு நன்றாகச்செய்யப்பட்டது அல்லது நன்றாகப் பண்படுத்தப்பட்டது என்று பொருள் கொள்ளலாம். இக்கட்டுரையில் சம்ஸ்கிருத மொழியே வடமொழி எனும் பெயரால் சுட்டப்படுகின்றது. வடமொழி அரசவை மொழியாகச் சிறப்புப் பெற்றது. இம்மொழியிற்றான் அரசகுலத்தோர் கதைகள் கூறும் இதிகாசங்களும், கடவுளர் பற்றிய தொன்மங்களைக் கொண்ட புராணங்களும், செய்யுள்நடையில் அமைந்த காவியங்களும், உரைநடைக்காவியங்களும்.நாடகங்களும், வானியல், கணித நூல்களும் எழுந்தன. சாதி வேறுபாடிகளின்றிக் கல்வியாளர்களால் பயிலப்பட்ட புலமைத்துவ மொழியாக அது விளங்கியது. எடுத்துக்காட்டாக இராமாயணம் பாடியதாகக் கூறப்படும் வான்மீகியோ, புகழ்பெற்ற காவியங்களும், நாடகங்களும் யாத்த காளிதாசனோ, மிருச்சகடிகம் எனும் மண்ணியற்சிறு தேர் நாடகாசிரியர் சூத்திரகரோ அந்தணர்களாக அறியப்படவில்லை. அத்துடன் மகாயான பௌத்தர்களினதும், பிற்கால சமணர்களினதும் மொழியாகவும் வடமொழி விளங்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது. சுருங்கக்கூறின், வைதிகமொழி அந்தணர் மட்டும் பயில்மொழியாகத் திகழ்ந்த அதேசமயம் வடமொழியினை அந்தணரல்லாதோரும் கற்றனர்.

நவீனகாலத்தை நோக்கும்போதும், ஈழத்தில் அந்தணர், அந்தணரல்லாதோர் என இருசாராரும் வடமொழிக்கல்வியிலும், வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்துவதிலும் ஆர்வம் காட்டி வந்துள்ளமை தெரிகிறது.

காளிதாசனின் மேகதூதத்தை தமிழில் மொழிபெயர்த்த சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரோ அல்லது சோ. நடராசனோ அந்தணரல்லர். முன்னவர் பாரம்பரியத் தமிழ்க்கல்வியறிவு வாய்க்கப் பெற்றவர் பின்னவர் நவீன ஆங்கிலக் கல்வி பெற்றவர். இவ்விரு மொழிபெயர்ப்பாளர்களின் வடமொழிப் புலமை ஈழத்துக் கல்விப்புலத்தைப் பற்றிய முக்கியமான செய்திகளைத் தன்னுள் பொதிந்துள்ளது. அக்காலத்தில் தமிழிலக்கண இலக்கியங்களை மரபுரீதியாக ஆழமாகப் பயின்ற கல்வியாளர் வடமொழியையும் கற்றார்கள் என்பதும், காலனியம் அறிமுகம் செய்த நவீன கல்வி முறைமையில் வடமொழி போன்ற செவ்வியல் மொழிகளுக்கு குறிப்பிடத்தக்க அளவு

முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது என்பதும் நமது கவனத்தைக் கோரும் செய்திகளாகும். எனவே, இலங்கையில் அந்தணர் மாத்திரம் பயிலும் மொழியாக மட்டும் வடமொழி இருந்ததில்லை. இன்னொரு வகையிற் சொன்னால் வடமொழிக் கல்வி என்பது அந்தணர் குருகுலங்களிலோ, ஆகமப் பாடசாலைகளிலோ மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கவில்லை.

கிறிஸ்தவர்களும் வடமொழி கற்றார்கள் என்பதும், 1823-ல் தாபிக்கப்பட்ட Batticotta seminary இலும், பின் அதன் வழி 1871-ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட யாழ்ப்பாணக்கல்லூரியிலும் வடமொழி கற்பிக்கப்பட்டது என்பதும் கவனத்திற்குரியவை. புராணங்களையும், தோத்திரநூல்களயும் தமிழில் மொழிபெயர்ப்பதில் அந்தணர் அதிக சிரத்தை காட்டினர் என்றும் அந்தணரல்லாதோர் ஏனைய இலக்கிய வகைகளை மொழிபெயர்ப்பதில் ஆர்வம் காட்டினர் என்றும் பொதுவாகக் கூறத் தோன்றினும், இதற்கு விதி விலக்குகள் உண்டு. அடுத்து, இக்கட்டுரை தமிழ்ப்படுத்தல் எனும் செயற்பாட்டை மொழிபெயர்ப்பு (translation), தழுவல் (adaptation) என இரண்டாக வகுத்து நோக்குகிறது. மொழிபெயர்ப்பு என்பது சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பாகவோ, பொழிப்புரையான மொழிபெயர்ப்பாகவோ, சாராம்சமான மொழிபெயர்ப்பாகவோ அமையும்.

ஆனால் தழுவல் என்பது மூல நூலை ஒட்டி அமையும் அதே சமயத்தில், மூலநூலில் இல்லாத விடயங்களையும் பண்புகளையும் கொண்டிருக்கும். வடமொழி நூல்கள் எவ்வாறு தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறித்த ஒப்பீட்டுரீதியான ஆய்வுகள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால், வடமொழி நூலைத் தமிழ்ப்படுத்துவோர் எவ்வடிப்படையில் தாம் அச்செயற்பாட்டை மேற்கொண்டது தொடர்பில் நூன்முகத்தில் குறிப்பிட்டிருப்பார்களாயின் அந்நூலை மொழிபெயர்ப்பா அல்லது தழுவலா என்று வகைப்படுத்தல் இலகுவானதாக இருக்கும். எடுத்துக் காட்டாக, காளிதாசரின் இருதுசம்ஹாரத்தினை மொழிபெயர்த்த தி. சதாசிவ ஐயர் தம் நூலுக்கு ஆங்கிலத்தில் எழுதிய ‘அறிமுகத்தில்’ (Introduction)

‘தமிழ்ச் செய்யுளிலான இந்த மொழிபெயர்ப்பில், வடமொழி மூலத்தின் உணர்வைப் பேணுவதிலும், கவிஞரின் கருத்தை அப்படியே, முழுமையாக வெளிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளேன். தமிழ்யாப்பிற்காகத் தேவைப்படும் மேலதிக சொற்களைப் மிகவும் குறைந்த அளவில் பயன்படுத்தியுள்ளேன்’ என்று குறிப்பிடுகின்றார். சதாசிவ ஐயரின் மொழிபெயர்ப்புக் கொள்கையானது, மொழிபெயர்ப்புப் பற்றிய நவீன புரிதலுடன் ஒத்துப்போகின்றது: பொதுநிலையில், மூலநூலின் முழு உணர்வினையும் கருத்துகளையும், நிகழ்வுகளையும் உரையாடல்களையும் சிறிதும் விடுபடாமலும், அதிகப்படுத்தாமலும், மாற்றாமலும் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மாற்றுதலை உண்மையான மொழிபெயர்ப்பாகக் கொள்ளலாம். என்று ச. சிவகாமி, மொழிபெயர்ப்புத் தமிழ் எனும் நூலிற் கூறுகின்றார்.

மொழிபெயர்ப்பு, தழுவல் எனும் இரு பதங்களுமே புலமையாளர்களால் கவலையீனமாகப் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் உள. எடுத்துக்காட்டாக, சேர். பொன். இராமநாதனின் மருகராகிய சு. நடேசபிள்ளையின் ‘சகுந்தலை வெண்பா’ எனும் நூலைக் காளிதாசரின் அபிக்ஞானசாகுந்தலத்தின் மொழிபெயர்ப்பு என்று சிவசாமி குறிப்பிடுகின்றார். ஆனால், ஆசிரியர் நடேசபிள்ளையோ, ‘இச்சிறு காப்பியத்தின் கதைப் போக்கு வடமொழியில் காளிதாச மகாகவி இயற்றிய சகுந்தலை நாடகத்தைப் பெரும்பாலும் தழுவியதாகும். அக்கவிஞருடைய விழுமிய கருத்துகள் இதில் ஆங்காங்கு பொன்னேபோற் போற்றப்பட்டுள்ளன. எனது கற்பனையாக அமைந்த பகுதிகளும் இதிற் காணப்படும்’. என்று கூறுகின்றார். எனவே, இந்நூலைத் தழுவல் நூல் என்று கொள்ளலே பொருத்தம்.

‘மொழிபெயர்ப்பு நூல்’ என்று கருதப்படத்தக்க நூலிலும், சில சமயங்களில் மொழிபெயர்ப்பாளர் தமது கருத்துகளைப் புகுத்துவதுண்டு. எடுத்துக்காட்டாக, பண்டிதர் சுப்பிரமணியம் மொழிபெயர்த்த காளிதாசரின் குமாரசம்பவ காவியத்தின் 17-ம் சருக்கத்திலுள்ள இறுதிச் செய்யுட்கள் நான்கும் மொழிபெயர்ப்பாசிரியர் கூற்றுகளே என அந்நூலுக்கு அணிந்துரை எழுதிய சிவசாமி கூறுகின்றார். ‘17-ம் சருக்கம் 57-ம் செய்யுளில் தாரகனைக் கொன்றபின் குமரன், அமரர் சூழ அன்னை தந்தையரை வழிபடக் கைலைமலை செல்லுதலும், அடுத்த செய்யுளிலே அம்மையப்பர் குமரனை மடியில் வைத்து உச்சி மோந்து பாராட்டுதலும், அடுத்த பாடலில் சிவபிரான் அங்கே தம்மை வணங்க வந்த தேவர்களை அவரிடம் செல்லுமாறு அருள் புரிதலும், இறுதியாயுள்ள 50-ஆம் பாடலில் சோமாஸ் கந்தமூர்த்தி வழிபாடும் பலனும் கூறப்பட்டுள்ளன. இவையன்றி, 13-ம் சருக்கத்தில் 42-47 வரையுள்ள ஆறு கவிதைகளிலும் முருகனுக்குரிய திருச்செந்தூர் முதலிய ஆறுபடைவீடுகளும் கூறப்படுவதும் மூலத்தில் இல்லாததே. இவை தமிழ் மரபிற்கேற்ப ஏற்படுத்தப்பட்ட புதுமையாகும். இவ்வாறு மூலத்துக்கு மாறுபாடில்லாதபடி புதிய அம்சங்களும் நூலிற் சேர்க்கப்பட்டுள்ளன என்று பண்டிதர் ச. சுப்பிரமணியத்தின் ‘குமாரசம்பவம்:தமிழாக்கம்’ (1997) என்ற நூலுக்கு எழுதிய அணிந்துரையில் பேராசிரியர் வி. சிவசாமி குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிமுகக் கட்டுரையில் வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்தல் என்பது நீண்டகாலச் செயற்பாடாக இருந்து வருவது என்பதும், அச்செயற்பாட்டில் ஈழத்தவரும் பங்கு கொண்டுள்ளனர் என்பதும், தமிழ்ப்படுத்தும் செயற்பாட்டினை மொழிபெயர்ப்பு, தழுவல் என இரண்டாக வகுத்து நோக்கலாம் என்பதும், ஈழத்தவர் தமிழ்ப்படுத்தற்பணி

- காலனிதுவத்திற்கு முந்திய காலகட்டம்,
- காலனித்துவ காலம்,
- சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலம்

என மூன்று காலகட்டங்களாக வகுத்து நோக்கப்படும் என்பதும் சுருக்கமாகக் கூறப்பட்டது. இனி அடுத்தகட்டுரையில் காலனித்துவகாலத்திற்கு முற்பட்ட ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் தமிழ்ப்படுத்தப்பட்ட காவியமான அரசகேசரியின் இரகுவமிசம் குறித்து நோக்கலாம்.



maithilithayanithy@thaiveedu.com

# நாக்கில் சனி

– நாஞ்சில் நாடன்

நேரம் காலை ஒன்பதரை மணி இருக்கும். ஏன், பத்தரை யாகத்தான் இருந்தால் என்ன, இருந்துவிட்டுப் போகட்டுமே! பெண்களுக்கு மது இலவசம் என்றா அறிவித்துவிடப் போகி றார்கள்? நகராட்சி, மாநகராட்சி பேருந்து நிலையங்களில் சிறுநீர் கழிக்கப் போனால் ஆண் - பெண் வேறுபாடு இன்றி, சமயப் பாகுபாடு இன்றி, இனபேதம் இன்றி யாவர்க்கும் ஐந்து பணம்தானே வாங்குகிறார்கள்! அழுக்கும் நாற்றமும் ஆபாச விளம்பரங்களும் அரசியலை எதிரொலிப்பது போன்றே நிலைத்து நிற்கிறது!

அன்று சனிக்கிழமை. ஒன்பது பத்தரை ராகு காலம் என்று எண்ணிக் கொண்டார் கும்பமுனி. கும்பமுனிக்கு என்ன ராவு காலம், பகல் காலம் என உசாவுவதும் நேர்தான். நாளும் கிழ மையும் நலிந்தோர்க்கு இல்லைதானே! நாள் என் செயும், வினைதான் என் செயும், நமை நாடி வந்த கோள் என் செயும், கொடுங்கூற்று என் செயும் என்பதறியாரா? இல்லை - அல் லல் என் செயும், அருவினை என் செயும், தொல்லை வல்வி னைத் தொந்தம்தான் என் செயும் என்பது தெரியாதவரா?

என்றாலும் சிறு பிராயம் முதலே கற்ற விடயம் அது. நாட்டை வழிநடத்தும் அதி தீவிர முற்போக்கு, சமூக நீதி செயல் முனைவோர் அதைக் கண்டு கொள்வதில்லையா என்ன? அதெப்படி கும்பமுனி இவற்றைச் சரியாக நினைவு வைத்தி ருக்கிறார் எனக் கேட்கலாம். அதற்கானதொரு சூத்திரம் மனப்பாடம் அவருக்கு. 'திருவிழாச் சந்தடியில் வெளியே புகுந்து விளையாடச் செல்வதுவும் ஞாயமோ?' என்பதது. ஒவ் வொரு சொல்லின் முதலெழுத்து - தி - திங்கள், ச - சனி, வெ - வெள்ளி, பு - புதன், வி - வியாழன், செ - செவ்வாய், ஞா - ஞாயிறு.

சரி! இதில் ராகு காலம் எப்படி?

திங்கள் 7.30-9.00, சனி 9.00-10.30, வெள்ளி 10.30-12.00, புதன் 12.00-01.30, வியாழன் 01.30-3.00, செவ்வாய் 3.00-4.30, ஞாயிறு 4.30-6.00

சரி ஐயா! இல்லை என்றால் - சரி அய்யா! இதைத் தெரிந்து வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறோம் என்ற வினா பொருள் உள்ளது! அகில இந்தியப் புகழ் கன தனத் தாரகை குண்டிஸ்ரீ பிறந்தநாள் (அதுவே உண்மையோ சமைக்கப்பட் டதோ?) தெரிந்து வைத்துக்கொண்டு என் செய உள்ளீர்?

தெருவில் ஒலிபெருக்கியில் கூவியபடி கீரை விற்றுக் கொண்டு போன குரல் கேட்டுத் தலை நிமிர்ந்து பார்த்தார் கும்பமுனி. இருசக்கர வாகனத்தின் பின்னிருக்கையில் பிணைக்கப்பட்ட பிளாஸ்டிக் நீள்கன சதுரக் கூடையில் கீரைக்கட்டுகள் தலைநீட்டிப் பார்த்தன. தெருவே அலறும் வண்ணம் கரகரத்த ஒலிபெருக்கிக் குரல். 'தண்டங்கீரை, அரைக்கீரை, முளைக்கீரை, அகத்திக்கீரை, முருங்கைக் கீரை, கொடும்பைக்கீரை' என்று வரிசையாக, மறுபடி மறுபடி விளம்பரக் கூக்குரல்.

கரகரத்த குரலில் பேசியே மக்கள் செல்வாக்கும் பெற்றனர் ஒரு காலத்து. இன்று அந்த யுக்தி எடுபடாது. பொது மேடை யில் அந்தரங்க ஆடைகளுடன் ஆடவேண்டும். மேலும், கையிலே காசு வாயிலே தோசை என்றாயிற்று. இன்று தோசை என்பதற்கு கோழி பிரியாணி, கால் குப்பி சரக்கு, இரண்டாயிரம் பணம் என்று உரையெழுதுவார்கள் அடி யார்க்கு நல்லார், இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பரிமேல- ழகர், மணக்குடவர், காளிங்கர், உ.வே.சா., சி.வை.தா., ஔவை துரைசாமிப் பிள்ளை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், பெருமழைப் புலவர் சோமசுந்தரனார், கே.என். சிவராஜ பிள்ளை, புலியூர்கேசிகன், ச.வே. சுப்பிரமணியன் முதலா னோர் இன்றிருந்தால். எவர் பெயரும் விடுபட்டிருந்தால் முதுமை காலத்து மறதியே காரணம் அல்லாது சமூகநீதிக் காரணங்கள் அல்ல.

கும்பமுனி சிந்தனையில் ஆழ்ந்தார். சங்க காலத்திலேயே இடியாப்பம், அப்பம், கும்மாயம் எனத் தெருவில் கூவி விற்றி ருக்கிறார்கள். அவர்களைக் 'கூவியர்' என்று விளித்துள்ளனர். ஐம்பதாண்டுகள் முன்புகூட காசுக்கும் பண்டமாற்றுக்கும் கூவி விற்றுள்ளனர். கருப்பட்டி, புளி, சுண்டவற்றல், மிதக்க வற்றல், பதநீர், மாம்பழம், சோளம், கூவரகு, அவல், பொரி... என.

கூவுவதற்குக் குரல் வளம் அற்றோ, கூவியதால் தொண்டை அடைத்தது என்பதாலோ, இன்றெல்லாம் ஒலிபெருக்கிகளில் பதிவு செய்யப்பட்ட குரல்கள் கூவுகின்றன. காலை ஏழு மணி முதல் மாலை ஏழு மணி வரை கீரை, காய்கறிகள், கனிகள், வேட்டி துண்டு சமுக்காளம், பொதப்பு, கண்டாங்கி, கருவாடு, மீன், கோலப்பொடி மாவு, சாணை பிடிக்கிறது, கனகாம்பரம் செவந்திப்பூ பிச்சிப்பூ... என. விரைவில் கஞ்சா, அபின், வாற்றுச் சாராயம், மக்களாட்சிச் சாராயம், விந்து முந்தாமலி



ருக்க மாத்திரை, ஆண்குறி நீளமாக இலேகியம் எனவும் கூவியர் திரிவர் தினமும் தெருத்தெருவாக.

‘கீரை வேணுமாவே?’ என்றார் கும்பமுனி உட்பக்கம் திரும்பி, தவசிப்பிள்ளையிடம்.

‘வேண்டாம் பாட்டா... பக்கத்து வீட்டு முருங்கை மரத்திலே இருந்து கீரை பறிச்சு உருவி வச்சிருக்கேன் சம்ச்சோறு வைக்கதுக்கு...’ என்று எதிர்க்குரல் விடுத்தார் தவசிப்பிள்ளை. சம்ச்சோறு என்றால் என்ன என்று அறிய இருப்பவர் ‘நாஞ்சில் நாட்டு உணவு’ வாங்கிப் படியுங்கள்.

ஒலிபெருக்கி உச்சத்தில் அலறிக் கொண்டிருக்க, வண்டியை நிறுத்திவிட்டு, வாசல் கதவாகிய நொச்சிச் செடிப் படலையைத் தள்ளி இறங்கி, முற்றம் கடந்து கும்பமுனி சமீபம் வந்து நின்றார் கீரை வியாபாரி.

‘கீரை வேண்டாம்யா... முருங்கைக்கீரை பறிச்சு உருவி வச்சாச்சு’ என்றார் கும்பமுனி.

‘எண்ணைக்குத்தான் நீரு காய்கறி, பழம், கீரை வாங்கீருக்கேரு? நாங்க எப்பிடிப் பொழைக்கது?’ என்று மனம் சலித்தார் கீரைக்காரர்.

‘ஓய்! நீரு என்னைக்காவது என் பொஸ்தகம் ஒண்ணாவது வாங்கீருக்கேரா? போன மாசம் ஒண்ணு வெளியாகியிருக்கு... ‘விக்னேவ் எமராஸ்கியின் முன்பின் நவீனத்துவக் கோட்பாடுகள்’ அப்பிடீண்ணு... எழுநூற்றறுபது பக்கம்... ஆயிரம் ரூவாதான்... இருவது சதமானக் கழிவு தாறேன். ஒண்ணு வாங்கீட்டுப் போவுமே பார்ப்போம்...’

‘அதுக்கு எனக்கு விரை வீக்கம் நோய் வரவில்லையே’ என்றார் கீரைக்காரர்.

‘இது தேவைதானா உமக்கு?’ என்று கண்டனத் தீர்மானம் நிறைவேற்றினார் தவசிப்பிள்ளை.

‘இனியாவது நம்மளை சிறைப்படுத்த மாட்டான்லாவே!’ என்று சமரசம் செய்தார் கும்பமுனி.

வெட்டுக்கு வெட்டு, குத்துக்கு குத்து என்பதுவே நடப்பு அறமாக இருக்கும் போலும் என்றும் தீர்மானித்துக் கொண்டார். கீரை கூவிய ஒலிபெருக்கி திடீரென தமிழ்க் கலைப் பண்பாட்டுக் காப்பிய சினிமாப் பாட்டு ஒன்றை முழங்கியது.

‘சுண்டக் கஞ்சிச் சோறு சுட்ட கருவாடு
துண்டு பீடி பீரு குஷ்பு வாரா பாரு...’

முன்னே வந்து நின்ற தவசிப்பிள்ளையைக் கொல்வது போலப் பார்த்தார் கும்பமுனி.

‘என்னை எரிக்கதுபோலப் பாத்து என்ன காரியம் பாட்டா? சும்மாவா சொன்னான் - பிள்ளை திறத்தைப் பேல விட்டுப் பாருண்ணு... இருக்கிறவன் சரியா இருந்தா சிரைக்கிறவன்

சரியா சிரைப்பான் பாட்டா...'

'நீரு இப்பம் என்ன சொல்ல வாறேரு? இருக்கப்பட்டவன் சரி யாட்டு இருக்கல்லேண்ணா?'

'நீருதானே பாட்டா அடிக்கடி சொல்லுவேரு! அப்பன் நிண் ணுக்கிட்டு ஒண்ணுக்குப் போனா பிள்ளையாண்டான் நடந் துக்கிட்டே ஒண்ணுக்குப் போவான்னு...'

'வே... வே... வே... நீரு இப்பிடி அரசியல் உள்குத்து வச்சுப் பேசுனா நம்ம சோலியை முடிச்சுருவான் கேட்டேரா? ஆள் வச்சு என்னைப் போட்டுத் தள்ளீட்டு, நீருதான் கொண்ணே ருண்ணு உம்மைக் கைது பண்ணிக் கொண்டு போயிரு வான்... சிறைச்சாலைக்குப் போன அண்ணைக்கே குளிமுறீல வழுக்கி விழுந்து இடுப்பெலும்பு, தொடை எலும்பு, தோள் பட்டை எலும்பு எல்லாம் முறிஞ்சு கெட்டுப் போடவேண்டியது இருக்கும். பாத்துக்கிடும் எது சௌகரியம்ணு... இல்லாட்டா அடுத்த நாள் கோர்ட்டுக்கு கொண்டு போகச்சிலே நீரு அரைஞ்ஞாண் கொடியிலே கெடந்த ஊக்கைக் கழற்றி உதவி ஆய்வாளரைக் குத்திக் கொல்லப் பாத்தேருண்ணு அவரு தற்காப்புக்காகச் சுட்டு நீரு செத்துப் போவேரு... மனு நீதிச் சோழன் பிறந்த மண்ணு, யானே அரசன் யானே கள் வன்னு உண்மை பேசிய பாண்டியன் நெடுஞ்செழியன் அர சாண்ட மண்ணு, சேரன் செங்குட்டுவன் உலவிய மண் ணுண்ணு பீத்தித் திரிகிற தேசமாக்கும். நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றம்தான்... சரி, விடும்... அந்தக் கீரைக்காரரைக் கொஞ்சம் கூப்பிடும்' என்றார் கும்பமுனி.

'என்னத்துக்கு பாட்டா? அதான் கீரை வேண்டாம்ணு சொல் லியாச்சுல்லா...'

'சொன்னாக் கேளும்வே... பிரஸ் ரிப்போர்ட்டர் மாதிரி கவர் வாங்கீட்டுக் குறுக்கக் குறுக்க கேள்வி கேக்காதயும்...'

தவசிப்பிள்ளை கூப்பிட, கீரைக்காரர் வந்து முற்றத்தில் நின் றார். 'என்ன பாட்டா?' என்றார்.

'தயவு செய்து, அருள் கூர்ந்து, கருணை காட்டி, பெரிய மனது வைத்து இந்த ஸ்பீக்கர் சத்தத்தைக் கொஞ்சம்... கொஞ்சம்... கொறச்சு வையும் ஓய்...'

'இதைவிட எப்பிடி கொறக்கது? வீட்டுக்கு உள்ளே அடுக்க ளையிலே நிக்கும் பொம்பளைகளுக்குக் கேக்காண்டாமா?'

'அதெல்லாம் கேக்கும்வே... திண்ணையிலே இருக்கப்பட்ட டி.வி. சீரியல்லே பேசப்பட்டது கேக்கு... நீரு சத்தம் கொறச்சா கேக்காதா?'

'அது... அது வந்து பாட்டா... வியாபாரம் ஆகணும்லா!'

'கீரை விக்கணும்வே... அதுக்காக உம்ம ஸ்பீக்கர் சத்தம் கூரை ஓட்டைப் பறத்தீரப்பிடாதுல்லா?'

'நீரு ஒருத்தர்தான் இதைச் சொல்லுகேரு பாட்டா...'

'அதும் சரிதான்வே... எல்லாருக்கும் மரத்துப் போச்சு... தேர் தல் சமயத்திலே காலம்பற மத்தியானம் சாயந்திரம் எந்நேர மும் ஸ்பீக்கர் சத்தம். காலம்பறயும் சாயந்திரமும் கோயில் பக்திப்பாடல். பொறவு கல்யாண வீடு, மறுவீடு வீடு, சடங்கு வீடு, பொறந்தநாள் வீடு... அதெல்லாம் இல்லாம காலம்பற ஏழு மணீல இருந்து சாயங்காலம் ஏழு மணி வரைக்கும் உங்க ஸ்பீக்கர் சத்தம்... ஸ்பெஷலா ஒவ்வொரு வீட்டுக்கு முன்னால யும் நிறுத்தி சினிமாப் பாட்டு... கோலப்பொடி மாவு, காளான், சோளக்கதிர், நிலக்கடலை, வாழைப்பூ... வாழைத்தண்டு, ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை, கொய்யா, மாதுளை, இடியாப் பம், சேவை, சந்தகை, நூல்புட்டு, ஏத்தம்பழம், பேயன்பழம், பாளையங்கோட்டன் பழம், செந்துளுவன், வெள்ளைத் துளு வன், ரசகதலி, மட்டி, சுண்ட வத்தல், மிதக்க வத்தல், மோர் மிளகாய், அடமாங்காய், மூலக்கடுப்பு - மூலப்பவுந்தரம் - உள்மூலம் - வெளிமூலம் களிம்பு, பெட்ஷீட், வேட்டி, துண்டு, மிதியடி, அப்பம், அதிரசம், சீடை, முறுக்கு... பத்துப் பதி னைஞ்சு பேரு... வண்டீல ஸ்பீக்கர் கட்டீட்டு தினமும் வந்தா எப்பிடிவே?'

'நீரு சொல்லப்பட்டது மனசிலாகுது பாட்டா... ஆனா நாங்க ளும் பொழைக்காண்டாமா?'

'எல்லாரும் பொழைக்கணும்வே... ஆனா அதுக்காக மத்த வங்களை சித்திரவதை செய்தா எப்பிடி?'

'கெவர்மெண்ட் ரோட்லேதானே போறோம்? உங்க வீட்டுக் குள்ள வந்தா ஒச்சம் வைக்கோம்?'

கனத்த மௌனத்துடன் உரையாடலைக் கவனித்துக் கொண் டிருந்த தவசிப்பிள்ளை சொன்னார் -

'ஏன் பாட்டா, வேலீல போற தெண்டலைப் புடிச்சு வேட்டிக் குள்ளே விட்டுக்கிட்டு...'

கும்பமுனிக்கு விளம் வந்து இறங்கியது.

'ஏம்வே கீரைக்காரரே! கெவர்ன்மெண்ட் ரோடுதானேண்ணு உம்ம வீட்டுக்கு முன்னால வந்து பேண்டு வச்சா விடுவேரா?'

'அதெப்படி? குண்டியை அரிஞ்சிட மாட்டேன்!'

'பின்னே இதுமட்டும் கெவர்ன்மெண்ட் ரோடுங்கேரு? போவும்வே... போவும்... போயிப் பொழப்பைப் பாரும்... கொஞ்சம் சத்தம் கொறச்சு வையும். அன்னா கேக்குது பாரும் உம்ம ரேடியோவிலே, ஆத்துப் பக்கம் போவமா, அவுத்துப் போட்டுக் கெடப்பமா, வெசம்ணு தெரிஞ்சே குடிக் கானுவோ... தெரியாமலும் குடிக்கானுவோ... நமக்கும் ஊத் திக் கொடுக்கானுவோ... அம்மணங்குண்டி ராச்சியத்திலே கோமணம் கட்டினவன் பைத்தியக்காரன்! போவும்... போவும்!' கும்பமுனிக்கு மூச்சு வாங்கியது.

அதுவே இறுதி மூச்சாக இருந்துவிடலாகாது என்று பதைத் தது தவசிப்பிள்ளைக்கு.



nanjilnadan@thaiveedu.com




**சென்ற இதழ்களில்...**

- பொ.ஆ.முன், 6-ம் நூற்றாண்டளவில் வட இந்தியாவில், உயிரினங்களைப் பலியிடுதல், வைதீகச் சடங்குகள், சாதீயம் முதலிய வைதீகச் சடங்குகளுக்கும் கொள்கைகளுக்கும் எதிராக அவைதீகர்கள் என்னும் மக்கள் பிரிவுகளும் கொள்கைகளும் உருவாயின. இப் பிரிவுகள், தத்துவ சிந்தனை மரபாகவும், மதங்களாகவும் உருமாறின. இந்த வகையில் தோன்றிய மதங்கள் 1. உலகாயதம் 2. ஆசீவகம் 3. பௌத்தம் 4. ஜைனம் ஆகும்.
- பொ.ஆ.பின் 5-ம் நூற்றாண்டளவில் வேதங்கள் முறையாக உருவாகித் தொகுக்கப்பட்டதாக அறியப்படுகிறது. 'கர்மா' என்னும் கொள்கையைப் புகுத்தியவர்களே வைதீக மதத்தவர்தான்.
- பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டளவில் ஆசீவகம், பௌத்தம், சமணம் முதலிய சமயங்கள் வடக்கே இருந்து தெற்கே பரவத் தொடங்கின.
- இது, அசோகர் காலத்தில் பௌத்தம் தென்னகத்திற்கும் ஈழம் முதலிய நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறும் அசோகச் சக்கரவர்த்தியின் இரண்டாம் பாறைக் கல்வெட்டுத் தகவலுடன் ஒத்துப்போகிறது.
- மகாவம்சம், தீபவம்சம் முதலிய இலக்கியங்கள் தொடக்க காலத்தில் நாடோடிப் பாடல்களாக இருந்து 'அட்டகதா மகாவம்சம்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டவையே. எனவே, இவை சங்க இலக்கியங்களில் புறத்திணைப் பாடல்களில் குறிப்பாகப் பத்துச் சேர மன்னர் மேல் பாடப்பட்ட கூறப்படும் வரலாற்றுக் கதைகளை ஒத்தவையே.
- பிற்கால வரலாற்று ஆசிரியர்கள் இக்கதைகளுக்கு வரலாற்று முக்கியத்துவத்தைக் கொடுத்து, தொடர்ந்து சொல்லிச் சொல்லி வந்து இவை உண்மைத்தன்மையைப் பெற்றுவிட்டன. இவையும் இலக்கியமாகக் கொள்ளப்பட்டு பிற சான்றுகளுடன் உறுதிப்படுத்த வேண்டிய தன்மையைப் பெறுகின்றன.
- பிராமி வரிவடிவங்களில் எழுதிய பிராகிருதக் கல்வெட்டுக்களில் தமிழ்ர் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

**'ஈழத் தமிழர்', என்ற ஒரு இனம் பற்றி நாம் வரலாற்றில் அறியும் காலம் எது?**

**நாகர் சமூகம்:**

ஆதிகாலத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் வாழ்ந்த சமூகங்களில் நாகர் சமூகமும் ஒன்று என்பதை இலக்கியக் குறிப்புக்கள், தொல்பொருள் சான்றுகள் வாயிலாக அறிய முடிகிறது. இதனையே வரலாற்று அறிஞர்கள் இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஆதிகால இந்திய வரலாற்றிலும் பண்பாட்டு வரலாற்றிலும் அதிக செல்வாக்கை ஏற்படுத்தினார்கள் என்பதை இதிகாச, புராணக் கதைகள் வாயிலாக அறிய முடிகிறது. ஆதிகாலத்தில் நீலநாகன் என்பவன் காஷ்மீரின் காவலனாக விளங்கினான் என்பது ஒரு கதை. வரலாற்று ரீதியாக நோக்குமிடத்து மகத நாட்டு அரசரான சிசு-நாகன், நாகதர்சகன் என்பவர்கள் நாகர்குல மன்னர்கள்.

இந்தியத் துணைக்கண்டத்தின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்த நாகர் பிற சமூகங்களுடன் கலந்து தமது தனித்துவமான அடையாளங்களை இழந்துவிட்டனர். நாகபுரம் (நாக்பூர்) நாகபட்டினம், நாககண்ட(ம்), நாகர்கோயில் முதலான இடப்பெயர்கள் நாகருடன் தொடர்பு கொண்டவை. 'நாக' என்னும் சொல், வரலாற்று ஆவணங்களில் பலரது பெயர்களின் முன்னொட்டாகவும் பின்னொட்டாகவும் வருகிறது. பல பிரசித்தமான அரசர்களின் பெயர்களில் இத்தன்மையைக் காணலாம். புராதன நாகரின் வழிபாட்டு அம்சங்கள் பௌத்தம், சமணம், சைவம், வைணவம் ஆகிய சமயங்களில் கலப்படைந்து விட்டன. இது இந்தியப் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களில் நாகர் பற்றிப் பேசப்படுகிறது. அவை பெரும்பாலும் நாகர் சமூகம், அரசு புரிந்த நாகர் குலங்கள் பற்றியவை. மௌரிய மன்னனான அசோகன் காலத்தில் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் வாழ்ந்த நாகர் பற்றி மகாவம்சம் குறிப்பிடுகிறது. அசோ-கன் காலத்தில், பாடலிபுரத்தில் மொக்கலிபுத்த திஸ்ஸ தேரர்

தலைமையில் கூடிய மூன்றாம் பௌத்த மகாநாட்டில் பௌத்த சமயத்தைப் பரப்புவதற்குக் குழுக்களை அனுப்பு வது என்று தீர்மானிக்கப்பட்டு காந்தாரம், காஷ்மீரம் ஆகிய நாடுகளுக்கு மஜ்ஜாந்திக தேரர் தலைமையில் குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டது. அங்கு வாழ்ந்த நாகர் இதனை எதிர்த்தார்கள். நாக மன்னனான அரவாள நாகன் கடும் எதிர்ப்பின் முடிவில் மஜ்ஜாந்திக தேரருக்குப் பணிந்து விட் டான். இதன் பயனாக, எண்ணிறைந்த நாகர், கந்தர்வர், இயக் கர், கும்பாண்டகர் முதலியோர் இமாச்சலப் பிரதேசத்தில் பௌத்தராயினர் என மகாவம்சம் கூறுகிறது.

அது மட்டுமல்லாமல், அசோகன், அதிசயமான பலங் கொண்ட மகாகாளன் என்னும் நாக மன்னனைச் சிறைப்பி டித்து, அவன் திரிசரணங்களை ஒப்புக் கொண்டதும் அவனுக் குச் சரியாசனம் கொடுத்ததாகவும், மகாகாளன் 32 மகாலட்ச ணங்களும் கொண்ட புத்தர் படிமம் ஒன்றினை செய்து கொடுத்தான் என்றும் மகாவம்சம் கூறுகிறது. சாசனங்கள், நூல்கள், நாணயங்கள் முதலியவற்றில் புராதன, மத்திய காலங்களிலே துணைக்கண்டத்தின் பல பகுதிகளில் வாழ்ந்த நாகர் குலத்தவர் பற்றியும் அங்கு அரசு புரிந்த நாகர் குலத்த வர் பற்றியும் அவர்களின் வம்சாவழியினர் பற்றியும் பல சான் றுகள் காணப்படுகின்றன. வடநாட்டில் குஷாணர் நிலை குலைந்த பின் விதிசா, காந்திபுரி, மதுரா, பத்மாவதி ஆகிய நகர்களில் நாகர் ஆட்சி புரிந்தனர் எனப் புராணங்கள் கூறு கின்றன. பொ.ஆ.பி. 3-ம், 4-ம் நூற்றாண்டுகளுக்குரிய பல சாசனங்களும் நாணயங்களும் குறிப்பிடும் நாக மன்னர் பலர், புராணங்கள் குறிப்பிடும் நகரங்கள் பலவற்றை ஆட்சி புரிந்திருக்கிறார்கள். லாகூரில் கிடைத்த செப்பு முத்திரை ஒன்று மகாராஜா நாக பட்டனுடைய மகன் மகேஸ்வர நாக னைக் குறிப்பிடுகிறது.

பவநாகனன் பாரசிவ நாகரின் குலத்தவன். பாரசிவநாகர் சைவ சமயத்தவர். இவர்கள் இலிங்கத்தைத் தோளில் சுமந்து சென்றதால் பாரசிவர் என்னும் பெயர் பெற்றவர்கள். கங்கா தீர்த்தம் தலையில் தெளிக்கப்பட்டதால் அவர்கள் பரிசுத்தமா னவர்கள் என்று சாசனங்கள் கூறுகின்றன. குஷாணரின் ஆதிக்கம் அழிவுற்றபின் பாரசிவநாகர் ஒரு பலம் மிக்க இராச் சியத்தை உருவாக்கியிருந்ததில் ஐயமில்லை என்கிறார் பேரா. சி. பத்மநாதன் அவர்கள். ‘பவநாக’ என்னும் பெயர் பொறித்த நாணயங்கள் பதம்பயாவிற் கிடைத்துள்ளன. அதில் அவன் அதிராசன் என்று வருணிக்கப்படுகிறான். சமுத் திரகுப்தனின் (345-375) மகன் சந்திரகுப்தன் நாகர் குல இள வரசியான குபேரநாகாவை விவாகம் செய்தமை கவனித்தற்கு ரியது. வாகாடகரின் ஆவணங்கள் முதலாம் உருத்திரசேன னின் பாட்டனாகிய பவநாகனைக் குறிப்பிடுகின்றன. உருத்தி ரசேனனின் பேரன் குப்தப் பேரரசன் இரண்டாம் சந்திரகுப்த னின் காலத்தவன். எனவே பவநாகன் பொ.ஆ.பி. மூன்றாம் நூற்றாண்டுக்குரியவன் என்று கொள்ளமுடிகிறது.

பொ.ஆ.பி. 7-ம் நூற்றாண்டில் நாகர் குலத்தவரான கார்க் கோட வம்சத்தவர் காஷ்மீர தேசத்தில் ஆட்சி புரிந்தனர் காஷ் மீரத்தில் துர்லபவர்த்தனன் என்பவனே நாகர் குல ஆட்சியை முதன் முதலாக ஏற்படுத்தினான். அவன் காலத்தில் சீன யாத் திரிகரான சுவன் சாங் (Tsuan Tsang) காஷ்மீரத்திற்குப் பிரயா ணம் செய்தார். தக்ஷசீலா, உரஸா, சிங்கபுர, பஞ்ச், ராஜபுரம் ஆகிய பிரதேசங்களையும் காஷ்மீரத்தின் புதிய வம்சத்தினர் கைப்பற்றிவிட்டனர் என்று அவரது குறிப்புக்கள் மூலம் அறி யக்கிடைக்கிறது. அந்நிலப் பகுதிகள் பஞ்சாப்பின் மேற்கு, வடமேற்குப் பகுதிகளில் அமைந்திருந்தன. ராஜஸ்தானத்தில் கோட்டா இராச்சியத்திலுள்ள ஷேர்காட் என்னுமிடத்தில் கிடைத்த கல்வெட்டொன்று 8-ம் நூற்றாண்டில் அங்கு நாகர் குலத்தினரின் ஆட்சி நிலவியதைக் கூறுகிறது. அக் கல் வெட்டு சாமந்ததேவதத்தனைக் குறிப்பிடுவதுடன் 3 தலைமு றைக்குரிய அவனது முன்னோர்கள் பெயர்கள் நாக என்னும் சொல்லோடு முடிவதையும் குறிப்பிடுகிறது. வனவாசியிலி ருந்து குந்தள தேசத்தில் ஆட்சி புரிந்த கதம்பர் தம் முன் னோர்கள் நாகர் குலத்தவர் என்று உரிமை பாராட்டியுள்ளனர்.

பல்லவர் குலத்தின் தொடக்கம் பழங்குடியினரான நாகருடன் தொடர்புடையது எனச் சிலர் கொள்வர். ஆதிப் பல்லவனாக வீரகுர்ச்சன் நாக கன்னியை மணந்து அரச குலச் சின்னங்க ளைப் பெற்றான் என்ற கதை வேலூர்ப்பாளையம் செப்பேடுக ளில் சொல்லப்படுகிறது. எனவே நாகர் தென் இந்தியத் தீப கற்பகத்தில் நெடுங்காலமாக அதிகாரம் செலுத்திய குலத்த வராக அறியப்பட்டிருக்கிறார்கள் என்று கொள்ளலாம்.

### ஈழ வரலாறும் நாகரும்:

வரலாற்று ஆய்வில், மூன்று வகையான மூலாதாரங்கள் வர லாற்றை உறுதிசெய்வனவாகக் கொள்ளப்படுகின்றன எனக் கண்டோம். அவற்றை மீண்டும் நினைவில் கொள்வோம்.

- இலக்கியங்கள் (சமகாலம், பிற்காலம்)
- தொல்பொருட் சின்னங்கள்
- பிறநாட்டார் குறிப்புக்கள் முதலியன.

தமிழர் வரலாற்றைக் குறிக்கும் மூலச் சான்றுகளுள் தொடக்க காலத்தில் எமக்குக் கிடைக்கப் பெற்றவை தமிழர் வரலாற்றுக் குறிப்புக்களைத் தாங்கி வரும் பண்டைய இலக்கண, இலக்கி யங்கள். இலக்கியங்கள் குறிப்பிடும் தகவல்கள் பிற வர லாற்று மூலங்களான தொல்பொருட் சின்னங்கள், பிறநாட்டார் குறிப்புக்கள் முதலியவற்றால் உறுதிப்படுத்தப்பட்டால் அன்றி அவை சான்றுகளாகக் கொள்ளும் தரமற்றவை. ஈழத் தமிழர் வரலாற்றைப் பொறுத்தவரை, தமிழ் இலக்கியங்களை விடப் பாளி மொழியில் எழுதப்பட்ட பண்டைய வரலாற்று நூல் களாகக் கொள்ளப்படும் தீபவம்சம், மகாவம்சம் ஆகியவை தமிழர் பற்றிய தகவல்களைத் தாங்கி வருகின்றன.

பெருமளவில் ஆதித் தமிழர் பற்றிய உண்மை வரலாறு திரிக் கப்பட்டு, மாற்றப்பட்டு தெளிவற்ற நிலையிலேயே நெடுங்கா லமாக இருந்து வந்திருக்கிறது. ஒப்பியல் முறையியல் ஆய்வு கள் மேற்கொள்ளப்படுவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் காணப்பட்டிருக்கின்றன.

## இலக்கியங்கள்:

பண்டைத் தமிழ் இலக்கியங்களும் இலங்கை இலக்கியங்களும் நாகர் என்னும் இனத்தவரைப் பழங்குடி மக்களாக அடையாளம் காட்டுகின்றன. ஏனைய பகுதிகளில் வாழும் நாகர்கள் போல இவர்களும் பாம்பை வழிபட்டுத் தம் வாழ்விடங்களுக்கு நாகம் என்னும் பொருள்படும் பெயரை வைத்தவர்களாகவும் அறியப்படுகிறார்கள். நாகர் என்பவர் யார் என்பது பற்றி அறியப்படும் இலக்கியச் சான்றுகள்: விஜயன் இலங்கையை ஆள்வதற்கு முன்னதாகவே முடிநாகர் என்னும் தமிழ் இனத்தவர் இலங்கையை ஆண்டதாக ஆய்வாளர் கருதுவர். முரிஞ்சியூர் முடிநாகராயர் என்னும் சங்கப் புலவர் சேர மன்னன் உதியஞ் சேரலாதனைப் பாடிய பாடல் ஒன்று சங்கத் தொகை நூல்களில் இடம் பெற்றிருக்கிறது.

***மண் திணிந்த நிலனும்,***<br>
***நிலன் ஏந்திய விசும்பும்,***<br>
***விசும்பு தைவரு வளியும்,***<br>
***வளித் தலைஇய தீயும்,***<br>
***தீ முரணிய நீரும், என்றாங்கு***<br>
***ஐம் பெரும் பூதத்து இயற்கை போல***<br>
***போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்,***<br>
***வலியும், தெறலும், அளியும், உடையோய்!***<br>
***நின் கடல் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின்***<br>
***வெண் தலைப் புணரிக் குட கடல் குளிக்கும்,***<br>
***யாணர் வைப்பின், நல் நாட்டுப் பொருந!***<br>
***வான வரம்பனை! நீயோ, பெரும!***<br>
***அலங்கு உளைப் புரவி ஐவரொடு சினைஇ,***<br>
***நிலம் தலைக்கொண்ட பொலம் பூந் தும்பை***<br>
***ஈர் ஐம்பதின்மரும் பொருது, களத்து ஒழிய,***<br>
***பெருஞ் சோற்று மிகு பதம் வரையாது கொடுத்தோய்!***<br>
***பாஅல் புளிப்பினும், பகல் இருளினும்,***<br>
***நாஅல் வேத நெறி திரியினும்,***<br>
***திரியாச் சுற்றமொடு முழுது சேண் விளங்கி,***<br>
***நடுக்கின்றி நிலியரோ அத்தை அடுக்கத்து,***<br>
***சிறு தலை நவ்விப் பெருங் கண் மாப் பிணை,***<br>
***அந்தி அந்தணர் அருங் கடன் இறுக்கும்***<br>
***முத் தீ விளக்கின், துஞ்சும்***<br>
***பொற் கோட்டு இமயமும், பொதியமும், போன்றே!***

- புறநானூறு: 02

மகாபாரத யுத்தம் பேசப்படுவதாகப் பொருள் கொள்வர். ஆனால், 'ஈர் ஐம்பதின்மரும் பொருது, களத்து ஒழிய' என்னும் பாடல் அடி, இங்கு மகாபாரதப் போரைக் குறிப்பிடவில்லை என்னும் தகவலைத் தருகிறது. தமிழ் நாட்டு அரசர்களிடையே நடந்த போர் இங்கு குறிப்பிடப்படுகிறது எனலாம். நாகர் குலத்தைச் சேர்ந்த இவர்கள் தமது முடியில் நாகத்தைத் தாங்கியிருப்பதால் இப் பெயர் பெற்றார்கள் என்று கூறப்படுகிறது. சரித்திர காலத்திற்கு முற்பட்ட, பெரும்பாலும் தமிழர்களாகவே இருந்திருக்கக் கூடிய காலத்தில், தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் பரந்து வாழ்ந்த இனத்தவரின் ஒரு கிளையினரே நாகர் என்று சேர். பொன். அருணாசலம் அவர்கள், 'Sketches of Ceylon History' என்னும் தமது நூலில் கூறுகிறார்.

பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரை அவர்கள் 'நாகர்கள் தமிழராகவே தமிழகத்தில் வாழ்ந்தனர். அவர்கள் எங்கும் வேறு இன மொழிக்கு உரியரென்ற பேச்சும் ஏற்படவில்லை. தனி இனமாகவே வாழ்ந்தனர். ஆகவே, அவர்கள் கடல் கொண்ட தமிழகத்திலோ, தமிழகம் சூழ்ந்த நிலத்திலோ இருந்த தமிழினப் பிரிவினர் என்றும், கடல்கோளின் பயனாகவோ, வேறு காரணங்களாலோ எங்கும் பரந்தவர் என்றும் கருத இடமுண்டு.' என்று குறிப்பிட்டுள்ளார். மிக அண்மைக் காலத்தில், தென்னிந்தியாவில், ஆதிச்சநல்லூரில் நூற்றுக்க



ணக்கான 'முதுமக்கள் தாழிகள்' (இறந்தோரைப் புதைக்கும் மண்சாடிகள்) அகழ்வாய்வாளர்களால் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இந்தப் புதைகுழிகளிலிருந்து சிலநூறு மீற்றர் தூரத்தில் மக்கள் குடியிருப்புக்களும் தொழிலகப் பகுதியும் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இங்கு, சிவப்பு, கறுப்பு நிற மட்பாண்டங்களின் உடைந்த துண்டுகளும் எலும்பாலான ஆயுதங்களும் இரும்பு, செம்பு, பொன் முதலிய உலோகங்களால் செய்யப்பட்ட பொருட்களும் கிடைத்துள்ளன. அகழ்வாய்வில் கிடைத்த அரும்பொருட்களை உலோகவியல், மானிடவியல் முதலிய துறைசார் வல்லுநர்களின் சோதனைக்கு ஆட்படுத்திச் சில முடிவுகளை அறிவித்தனர். அவற்றுள் குறிப்பிடத்தக்கது,

உலோகங்களின் அறிமுகம், குறிப்பாக இரும்பின் அறிமுகம் பொ.ஆ.மு. 1000-வது ஆண்டுக்கு முன்னரே நிகழ்ந்துள்ளது. இது ஏறக்குறைய பொ.ஆ.மு. 1500 அளவில் இருக்கலாம்.

அங்கு கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டம் ஒன்றின் உட்புறத் தில் தமிழ்-பிராமி எழுத்துக்களில் வரையப்பட்ட ஒருவருடைய பெயர் என்று கருதப்படும் ஏழு எழுத்துச் சொல் காணப்பட்



டுள்ளது. ஆதிச்சநல்லூர் குறித்த ஆய்வு உலகிற்கு ஒரு உண்மையை எடுத்துக் கூறுகிறது. தமிழர் வரலாற்றின் முதன்மை ஆவணங்களான தொல்காப்பியம், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு முதலிய சங்க இலக்கண, இலக்கியங்கள், மணிமேகலை, பாண்டி நாட்டின் மிகப் பழைய வரலாற்று நிகழ்வுகளைப் புராண வடிவில் கூறும் திருவிளையாடற் புரா ணம் போன்ற இடைக்கால இலக்கியங்களையும் அவற்றின் உண்மைத் தன்மையை ஆதிச்சநல்லூர் ஆய்வு மூலம் கண்ட றியப்பட்ட தகவல்களுடன் தொடர்புபடுத்திய ஆய்வு தற் போது தொடக்க நிலையிலேயே இருக்கிறது.

முதுமக்கள் தாழி பற்றிய பாடல்கள் புறநானூறு, நற்றிணை, பதிற்றுப்பத்து முதலிய சங்கத் தொகை இலக்கியங்களிலும் மணிமேகலையிலும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆதிச் சநல்லூர்த் தாழிகள் பற்றி ஆராய்ந்த ஆய்வாளர்கள் புதைக் கப்பட்டவர்கள் உயரமானவர்களாகவும் மொங்கோலிய உருவ அமைப்பின் அம்சங்களைக் கொண்டவர்களாகவும் இருந்தனர் என்று கூறியிருப்பது, இதுவரை சரித்திர காலத் திற்கு முற்பட்ட இந்தியர் (திராவிடர்) குள்ளமானவர்கள் என்று நம்பப்பட்டதைப் பொய்யாக்குகிறது. இத்தகவல்கள் புதைக் கப்பட்ட மக்கள் தமிழ் நாகர் என்று சுட்டுவதாக உள்ளது. நாகர்களின் தசைக் கட்டமைப்பு, மஞ்சள் நிறம், சப்பை மூக்கு, சிறிய கண்கள், உயர்ந்த கன்ன எலும்புகள், குறுந் தாடி முதலியவை அவர்கள் முன்னொரு காலத்தில் மொங் கோலிய இனக் குழுமத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர் என்பதைக் காட்டும் என்று ‘இந்து வரலாறு’(Hindu History) என்னும் நூல் ஆசிரியர் திரு. ஏ. கே. மஜூம்தார் குறிப்பிட்டது நோக்கத்தக்கது.

ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் கண்டறியப்பட்ட தாழிகளை ஒத்த தாழிகள் இலங்கையின் மேற்குப் பகுதியில் ‘பொம்ப ரிப்பு’ என்று உச்சரிக்கப்பட்ட பொன்பரப்பி (தாமிரவருணி) என்னும் ஊரிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டது. இவை முறையாக ஆராயப்பட்டால், புத்தர் பிறப்பதற்குக் குறைந்தது 500 ஆண் டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையில் தமிழ் நாகர் வாழ்ந்த உண்மை உறுதிப்படுத்தப்படும். இவ்வாறான தாழிகள் திரு நெல்வேலி மாவட்டத்தில் சங்கரன் கோவிலை அடுத்த குவ ளக்கரைக் கிராமத்திலும் திருநெல்வேலிக்கு மேற்கே கேரள எல்லைக்குட்பட்ட கொல்லம் நகரை அடுத்த அட்டமுடி ஏரிக் கரையில் மாங்காடு என்னும் இடத்திலும் அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன. நாகவழிபாட்டில் திளைத்த தமிழ்த் தொல்குடியி னரான நாகர்கள், நயினாதீவு மற்றும் தீவுகளிலும் யாழ்ப்பா ணக் குடாநாட்டிலும் ஒரு காலத்தில் சிறப்பாக வாழ்ந்தனர் என்றும் பிற்காலத்தில் இந்து, பௌத்தம், கிறிஸ்த்தவம், இஸ் லாம் என்ற பிறமதப் பாதிப்பால் தமது நாக வழிபாட்டு அடை யாளத்தை இழந்தும் சாதியக் கொடுமைகளால் ஒடுக்கப்பட் டும் நாகர்கள் இன்று சிறப்பொழிந்தனர். நாகர்களின் வழிவந் தோர் நயினாதீவில் இன்றும் உளர், பொ.ஆ.பின் 1620 அள வில் நயினாதீவிலுள்ள நயினார் கோவில் போத்துக்கீசரால் தாக்கி அழிக்கப்பட்ட போது, இங்கு வாழ்ந்த நாகர்வழி வந் தோர் தமது நயினார் கோவிலைப் பாதுகாக்கும் முயற்சியில் உயிர் இழந்ததாக அறியப்படுகிறது. இவர்களே நயினையின் முதற்குடிகளாக அறியப்படுகின்றனர்.

நாகர்களின் நாடு நாகரிகமும் செல்வவளமும் நிரம்பியது என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. மணிமேகலையில் நாக இள வரசியான பீலிவளை மீது கிள்ளி என்னும் சோழ வேந்தன் காதலுற்று அவளைப் பிரிந்து வருடம் தோறும் நடக்கும் இந்தி ரவிழாவையும் நடத்த மறந்தான் என்று கூறப்பட்டுள்ளது. சாவக நாட்டை ஆண்ட பூமிச்சந்திரனும் அவன் வளர்ப்பு மக னான புண்ணிய ராசனும் நாக மரபினரே என்று மணிமேகலை கூறுகிறது.

யாழ்ப்பாணம் நாக பூசணி அம்மன்
இலங்கையிலுள்ள நாக புத்தர் சிலை...

*(தொடரும்...)*



selvanayaki.s@thaiveedu.com

# எங்கிருந்தோ வந்த கண்ணன்

– கிருங்கை சேதுபதி

மகாகவி பாரதியின் மகத்தான படைப்புகளுள் ஒன்று கண்ணன் பாட்டு. ஆழ்வார் அமுது பருகிய நிறைவில் அவரிடமிருந்து தோன்றிய அற்புதப் பாடல்கள் அவை. 'எல்லாவுயிரிலும் நானே இருக்கிறேன்' என்று உரைத்த கண்ணபெருமானை, மனித வடிவில் கண்டு பாடிய பாடல்கள் இவை; என்று சொல்வதைவிடவும், தான் கண்ட மனிதர்களுள் தரிசித்த கண்ணனைக் கவித்துவத்துடன் பாரதி பாடியவை இவை என்று சொல்வது சாலப் பொருந்தும். எட்டயபுரம், நெல்லை, காசி, சென்னை என்று அறிமுகமாகிய தலங்களில் உறவு சொல்லிக் கொள்ளும் மனிதர்களிடையே வாழ்ந்த பாரதிக்கு முற்றிலும் புதிய இடம் புதுச்சேரி; உண்மையில் அவருக்கு இது புதிய சேரிதான். உறவென்றோ, நட்பென்றோ சொல்லிக் கொள்ள ஆளின்றி, நிராதரவாகப் புதுவைக்குள் புகுந்த பாரதியின் முன் ஒருவன் வந்து நிற்கிறான்.

அவன் யார்? எங்கிருந்து வந்தான்? எதற்காக வந்தான்? எதுவும் தெரியாது. நிர்க்கதியாய் நிற்கும் தன்னைத் தாங்க முன் வந்த அவன், எங்கிருந்தோ வந்தான். தன் பெயரைக் கண்ணன் என்று சொல்லிக் கொண்டான். என்ன வகையான உதவிகள் வேண்டுமோ, அவை யாவும் செய்தான். அவனை என்னவென்று சொல்வது? எவ்வகையில் உறவு சொல்லிப் போற்றுவது? சிலிர்க்கச் சிலிர்க்கப் பல அற்புதங்கள் அந்தக் கண்ணனால் தன் வாழ்வில் அரங்கேறுவதை அனுபவித்த பாரதிக்குள் கீதாவுபதேசம் செய்த கண்ணன் புதிய அவதாரம் எடுக்கிறான். கலியுகத்தைக் கிருதயுகமாக்கத் தன்னை ஓர் ஆயுதமாய்த் தரித்துக் கொண்ட கண்ணனாய்க் குவளைக் கண்ணனைக் கண்டு கொண்டார் பாரதி. சிறைக்கூடத்தில் கண்ணனைத் தரிசித்துவிட்டுப் புதுவைக்கு வந்தவர் ஸ்ரீஅரவிந்தர் என்றால், தன்னைத் தானே சிறையிட்டுக் கொண்டதுபோல், புதுவைக்குள் வந்து புகுந்துகொண்ட பாரதிக்கு, இறுதிவரையிலும் கூடவே இருக்கிற கண்ணனாய் ஒருவன் வந்து கைகொடுக்கும் பேற்றினை என்னவென்று சொல்வது?

குவளைக் கண்ணனையும் கோகுலக் கண்ணனையும் கலந்து புதிய கண்ணனைக் கண்முன் நிறுத்திக் கவிதை பிறக்கிறது, பாரதிக்குள். 'எங்கிருந்தோ வந்தான்.' என்ன சாதி என்று பாரதி கேட்டாரா? கண்ணன் தானாகவே சொன்னானா? தெரியாது. 'இடைச்சாதி' நான் என்றான். இது இடையர் குலத்தில் வளர்ந்த கண்ணனையும் குறிக்கும் மனிதகுலத்திற்கும், தேவ குலத்திற்கும் இடைப்பட்ட நிலையில் வந்து தன்னைக் காக்கும் இந்தக் குவளைக் கண்ணனையும் குறிக்கும். பார்ப்பாரக் குலத்தில் பிறந்தாலும், பறையரையும் மறவரையும் நிகராக் கொண்டவன் அல்லவா, இந்தக் கண்ணன்? தனக்குத் தெரிந்த வித்தைகளையெல்லாம் விளக்கிச் சொன்னது, இந்தக் கண்ணனா? அல்லது கண்டு காட்டிய பாரதிக்குள் முகிழ்த்த கண்ணனா? என்று பேதம் பார்க்க முடியாமல் நேரடியாகவோ, நுட்பமாகவோ, அபேத நிலையில் ஒன்றாக்கிய பாரதியின் கவிச்சாதுர்யத்தில் கண்ணன் சித்திரமாகிறான்.

'ஏது பெயர்? சொல்' என்றேன்-இது பாரதி. 'ஒன்றுமில்லை; கண்ணனென்பார் ஊரிலுள்ளோர் என்னை' என்றான்-இது கண்ணன் கூற்று. ஏது பெயர்? என்ற கேள்விக்கு ஏக பதில், 'கண்ணன்.' இது போதுமே. 'ஒன்றுமில்லை கண்ணனென்பார் ஊரிலுள்ளோர் என்னை' ஏன் இத்தனை நீண்ட பதில்? கேள்வி ஒன்று. பதில் உணர்த்துவன பல. கேட்டவர் பாரதி. சொல்பவன் கண்ணன். எந்தக் கண்ணன்? குவளைக் கண்ணன் ஆனால், சொல்ல வைப்பவன் கண்ணன். அதையும் இந்தப் பதில் சொல்லலிலேயே சொல்லியும் விடுகிறான். என்+ஐ (ஐ-தலைவன்) மற்றொன்று விரித்தல் என்று குற்றம் சுமத்த வேண்டாம். பேச்சு வழக்கில் 'என்னயக் கண்ணன்னு ஊர்ல கூப்பிடுவாங்க' என்றுதான் சொல்வதுண்டு. அப்படியே எழுதினால், 'என்னையைக் கண்ணன் என்று...' வளரும். அது இன்னும் செறிவாகி, என்னைக் கண்ணன் என்பார் ஊரில் உள்ளோர். என்று ஆகும்.

என் ஐயை(என் தலைவனை)க் கண்ணன் என்பார் ஊரில் உள்ளோர். என்னை(யும்) கண்ணன் என்பார் ஊரில் உள்ளோர். ஆனால், எனக்கு ஊர் என்று ஒன்றுமில்லை. பேர் என்று ஒன்றுமில்லை. இது மாயக் கண்ணனுக்கும் பொருந்தும் இந்த மனிதக்கண்ணனுக்கும் பொருந்தும். பிறந்த ஊர், குவளையூர் இப்போது இருக்கும் ஊர் புதுச்சேரி இனி இருந்து மறையும் ஊர் சென்னை. ஆக, நிரந்தரமான ஊர் என்று குவளைக் கண்ணனுக்கும் ஒன்றுமில்லை. அது மட்



டுமா? வந்து பிறந்தபோது பெயர்உண்டா? உயிர் பிரிந்து மாண்டபோது பெயர் உண்டா? வந்தது எங்கிருந்து? 'எங்கிருந்தோ...' ஆதி கண்டுணர முடியாத பெருமை, மனிதனுக்கும் உண்டு. மாயவனுக்கும் உண்டே! ஒருருவம் ஒருநாமம் இல்லாத பெருமானுக்கு ஆயிரம் திருநாமங்கள். அளவில்லாத் தோற்றங்கள். இந்தப் பொருள் அடர்த்தி மிக எளிதாய், பாரதியின் வாக்கில் வசப்பட்டுவிடுகிறது. 'ஒன்றுமில்லை' எனக்குப் பெயர் ஒன்றுமில்லை. உருவம் என்று ஒன்றுமில்லை. உறவு என்றும் ஒன்றுமில்லை. சாதி என்று ஒன்றுமில்லை... என்று எத்தனையோ ஒன்றுமில்லைகள் வந்து ஒன்றுகின்ற தொடர், இந்த 'ஒன்றுமில்லை.' ஆனாலும், கேட்ட கேள்விக்கான பதிலும் இந்த 'ஒன்றுமில்லை'யில் வந்து ஒன்ற வேண்டுமே, 'கண்ணன்' சொல்லி முடிக்கவில்லை. 'கண்ணன் என்பார்'- இன்னும் மிச்சம் இருக்கிறது. 'கண்ணன் என்பார் யார்? அவர் யாரைக் கண்ணன் என்பார்? ஊரில் உள்ளோர்.' கூடவே பிறக்கிறது மற்றுமொரு கேள்வி. எந்த ஊரில்? குவளையூரிலா? வேதபுரத்திலா? கண்ணன் என்று எந்த ஊரில் சொல்கிறார்களோ, அந்த ஊர் எல்லாம் இந்த ஊரில் வந்து ஒன்றிவிடுகிறது. அது சரி, யாரை? 'என்னை.'

இது என்னை என்று சொல்லும் குவளைக் கண்ணனையும், அவர் தன்னுள் உறையும் தலைவனாகிய (என்+ஐ) கோகுலக் கண்ணனையும் குறிக்கிறது. தன்னுளே உலகம் யாவையும் தாங்கிய மன்னன் ஆகிய கண்ணன், தனக்கும் தலைவனாகிற தரிசனத்தை, பாரதியின் பாடல் காட்டிவிடுகிறது. உற்றுப் பார்க்கிறது, பாரதியின் சந்தேக மனம். அது நமக்கும் ஆனது தானே.

***தெற்றெனத் தெரிகிறது, குவளைக் கண்ணனின் தோற்றம்.***
***கட்டுறுதி உள்ளவுடல், கண்ணிலே நல்லகுணம்***
***ஒட்டுறவே நன்றா உரைத்திடுஞ்சொல்***

பிறகென்ன? உரையாடல் தொடர்கிறது. தனக்குப் பணி செய்யத் தக்கவன் வந்துவிட்டான் என்று தெரிந்துகொண்ட அளவில் கூலி தொடர்பான பேரமும், குடும்ப விவகாரமும் ஆகப் பேச்சு வளர்கிறது. மூலக் கண்ணனும் முன் நிற்கும் கண்ணனும் பேதம் காட்டாமல் இப்பேச்சு வார்த்தையில் காட்சிப்படுகிறார்கள்.

பாரதி:
***ஈங்கிவற்றால்***
***தக்கவன் என்று உள்ளத்தே சார்ந்த மகிழ்ச்சியுடன்,***
***'மிக்கஉரை பலசொல்லி விருதுபல சாற்றுகிறாய்***
***கூலிஎன்ன கேட்கின்றாய்? கூறுக' என்றேன்.'***

கண்ணன்:
***ஐயனே!***
***தாலிகட்டும் பெண்டாட்டி சந்ததிக ளேதுமில்லை***
***நானோர் தனியாள்; நரைதிரை தோன்றா விடினும்***
***ஆன வயதிற்கு அளவில்லை தேவரீர்***
***ஆதரித்தால் போதும் அடியேனை நெஞ்சிலுள்ள***
***காதல் பெரிது எனக்குக் காசுபெரி தில்லை.' என்றான்.***

பாரதி:

***பண்டைக் காலத்து பயித்தியத்தில் ஒன்றெனவே***
***கண்டு மிகவும் களிப்புடனே நானவனை***
***ஆளாகக் கொண்டு விட்டேன்!***
***பேச்சு வார்த்தை முடிந்தது. வேலை தொடர்ந்தது.***
***அன்று முதற்கொண்டு,***
***நாளாக நாளாக, நம்மிடத்தே கண்ணனுக்குப்***
***பற்று மிகுந்துவரல் பார்க்கின்றேன் கண்ணனால்***
***பெற்றுவரும் நன்மையெல்லாம் பேசி முடியாது***

என்று கூறுகிற பாரதி, அவற்றைப் பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

***கண்ணை இமைஇரண்டும் காப்பதுபோல், என் குடும்பம்***
***வண்ணமுறக் காக்கின்றான் வாய்முணுத்தல் கண்டறியேன்***
***வீதி பெருக்குகிறான்; வீடு சுத்த மாக்குகிறான்***
***தாதியர்செய் குற்றமெல்லாம் தட்டி அடக்குகிறான்***
***மக்களுக்கு வாத்தி, வளர்ப்புத்தாய், வைத்தியனாய்***
***ஒக்கநயம் காட்டுகிறான்; ஒன்றும் குறைவின்றிப்***
***பண்டமெலாம் சேர்த்துவைத்துப் பால்வாங்கி மோர் வாங்கிப்***
***பெண்டுகளைத் தாய்போல் பிரியமுற ஆதரித்து***

அவன் செய்யும் பணிகளைச் சொல்லி முடியவில்லை, பாரதிக்கு. பணியாளாய்க் கண்ணுக்குத் தெரிய வந்து பண்பிலே உயர்ந்து நிற்கும் கண்ணனின் விசுவரூப தரிசனத்தை மனிதக் கோலத்தில் கண்டு பாரதி காட்டுகிறார்.

***நண்பனாய், மந்திரியாய், நல் ஆசிரியனுமாய்,***
***பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்...***

இது மனித தரிசனம். மாண்புறு தரிசனம். நண்பனாய் வந்தவனும் கண்ணனே. மந்திரியாய் அமைபவனும் கண்ணனே. நல் ஆசிரியனும் கண்ணனே. பார்வையிலே சேவகனாய்த் தெரியும் அவன் பண்பிலே தெய்வம். இந்தப் பார்வைதான், பாரதியைச் சர்வதேசக் கவியாக்குகின்றது. இக்கவிதைக்குள் காட்சிப்படும், தெய்வக் கண்ணனும், தெருவழியே வந்து தரிசனம் காட்டிக் குருநிகர்த்த குவளைக் கண்ணனும் மட்டுமா? கண்ணன். இன்னும் யார் யாருக்கோ, எங்கெங்கோ, எங்கெங்கிருந்தோ வந்து உதவப் போகின்ற எல்லா மனிதர்களையும் கண்ணனாய்த் தரிசனப்படுத்தும் இந்தக் காட்சி. 'எங்கிருந்தோ வந்தான், இடைச்சாதியென்று சொன்னான்' இந்தப் பாடலில் இன்னுமொரு முறை இடம்பெறும் தொடர் இது. முந்தையத் தொடரில் வந்த கண்ணன், 'மாடுகன்று மேய்த்திடுவேன், மக்களை நான் காத்திடுவேன்...' என்று தொடங்கிப் பேசியவன். இப்போது, எங்கிருந்தோ வந்து இடைச்சாதி என்று சொன்ன கண்ணன், குவளைக் கண்ணன். அவனும் இவனும் பண்பிலே ஒன்றினாலும், பார்வையில், செயலில் இவன் தனி தானே. இந்தக் கண்ணனது பணியில் நெகிழ்ந்த பாரதி பாடுகிறார். இங்குஇவனை யான் பெறவே என்னதவம் செய்துவிட்டேன்! கண்ணன் எனது அகத்தே கால்வைத்த நாள்முதலாய் பிராமணப் பேச்சின்படி, வீடு - அகம். ஆனாலும், கவிதையில் வரும்போது, அகம் உள்ளம் என்றும் உணரப்படுகிறது. கண்ணன் தன் உள்ளத்தில் கால் வைத்து விட்டான். அதாவது திருவடியை உளம் பதித்துவிட்டான். அதுமட்டுமல்ல. அவன் தன் அருளில் கால் பாகம் தான் இப்போது பாரதியின் அகத்தில் பதித்திருக்கிறான். மீதி முக்கால் பாகம் இருக்கிறதே... அதற்குள் முடிந்துவிடுமா என்ன?

***கண்ணன் எனது அகத்தே கால்வைத்த நாள்முதலாய்***
***என்னவெல்லாம் நடந்தன?***
***கண்ணன் எனது அகத்தே கால்வைத்த நாள்முதலாய்***
***எண்ணம் விசாரம் எதுவும் அவன் பொறுப்பாய்ச்***
***செல்வம், இளமாண்பு, சீர், சிறப்பு, நற்கீர்த்தி,***
***கல்வி, அறிவு, கவிதை, சிவ யோகம்,***
***தெளிவே வடிவாம் சிவஞானம், என்றும்***
***ஒளிசேர் நலம் அனைத்தும் ஓங்கிவரு கின்றன காண்!***

மெய் சிலிர்த்துப் போகிறது, நமக்கும். மகாகவி பாரதியும் நமக்கு அப்படி வாய்த்தவர் தானே. எங்கிருந்தோ வந்து எப்படியோ, அகம் புகுந்து, இங்கு இப்பொழுது இவையெல்லாம் சிந்திக்க வைத்துச் சிறக்கிறாரே. கண்ணன் என் சேவகன் கவிதை நிறைவை நோக்கி முன்னேறுகிறது. கண்ணனைநான் ஆட்கொண்டேன்!

ஆட்கொள்ளல் என்றால் என்ன? தமக்கு உரிய ஆளாகக் கொள்ளுதல். தேவாரம் பாடிய மூவருள் ஒருவரான சுந்தரரை, சிவபெருமான் ஆட்கொண்ட வரலாறு அறியக் கிடைக்கிறது. அந்த வரலாறு சொல்வதென்ன? முதலில் இறைவன் தன்னை ஆட்கொள்கிறான். இறுதியில் அவனே நமக்கு உற்ற ஆளாய் இருந்து உதவுகிறான். அதனால், சுந்தரர் பெற்ற பெரும்பயன்கள் எத்தனை?

***நண்பனாய், மந்திரியாய், நல் ஆசிரியனுமாய்,***
***பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்...***
***தோழனுமாய்ச் சிவபெருமான் சுந்தரருக்கு வாய்த்ததுபோல்,***
***பாரதிக்குக் கண்ணன்...***
***கண்ணனைநான் ஆட்கொண்டேன்!***
***கண்கொண்டேன்! கண்கொண்டேன்!***

என்கிறார். கண்ணிலார்க்குக் கண்ணுடையாரே கண்ணாய் விளங்குதல்போல், கண்ணன் இப்போது பாரதியின் கண் ஆனான். சுந்தரர் வாழ்விலும், 'கண் காட்டுவித்தை' நிகழ்ந்திருக்கிறதே. கண்ணன், இப்பாடலில், பாரதியின் கண் ஆனான். கண்ணுளே புகுந்து கருத்தினைக் கவர்ந்து நெஞ்சிலே குடிகொண்ட கண்ணன், நீலவண்ணனா? முன்னிற்கும் கார் வண்ணனா? விந்தை மிக்க இப்பாடல் விளக்கம் சொல்லாமல் இப்படி முடிகிறது.

'கண்ணனை ஆட்கொள்ளக் காரணமும் உள்ளனவே' அவை யாவை? பாரதி சொல்லவில்லை. அதனால் என்ன? இந்தப் பாடலின்வழியே கண்ணனை நாமும் கண்டுகொண்டால், அவனே கண் ஆனால், அனைத்தும் புலப்படுமே. எங்கிருந்தோ வந்த குவளைக் கண்ணனை இவர் ஆட்கொண்டது போல், நாமும் இவரை பாரதியை குவளைக் கண்ணனை ஆட்கொண்டால் காரணம் அறியலாம்.



sethupathi@thaiveedu.com




சென்ற இதழில் கம்பராமாயணம், அயோத்தியா காண்டத்தின் 10-வது படலமாகிய ஆறுசெல் படலத்திலுள்ள சில செய்யுள்களை எடுத்துச் சுவைத்தோம். இவ்விதழில் இராமனைக் கானகத்திலிருந்து மீண்டும் அயோத்திக்கு அழைத்து வருவதற்காகப் புறப்பட்ட பரதனும் அவனது பரிவாரங்களும் கங்கைக் கரையில் குகனை எதிர்கொள்ளும்போது நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கூறும் குகப் படலத்திலுள்ள சுவையான செய்யுள்கள் சிலவற்றை எடுத்து வருகின்றேன். கம்பனின் கவித்துவத்தின் சிறப்பை எடுத்துக் காட்டுவன போன்று இப்படலத்தில் அத்தனை செய்யுள்களுமே அமைந்திருக்கின்றன. அவற்றுள் எதனை எடுப்பது, எதனை விடுப்பது எனத் தெரியாது குழம்பிய நிலையில் முயன்று சிலவற்றை இங்கே தருகின்றேன். சில பிரதிகளில் இப்படலத்துக்குக் கங்கைகாண் படலமென்றும், வேறு சில பிரதிகளில் கங்கைப் படலமென்றும் காணப்படுவதையும் அறிந்து கொள்க. காலால் நடந்து சென்ற பரதன் தனது பரிவாரங்களுடன் கோசல நாட்டைக் கடந்து கங்கைக் கரையை அடைகின்றான்.

***பூவிரி பொலன்கழற் பொருவில் தானையான்***
***காவிரி நாடன்ன கழனி நாடொரீஇத்***
***தாவர சங்கமம் என்னும் தன்மைய***
***யாவையும் இரங்கிடக் கங்கை யெய்தினான்.***

*கம்ப. அயோத்தி. 1011*

பூவிரி பொலன்கழல் - விரிந்த பூவைப்போல அழகிய பொன்னாலாகிய வீரக் கழல் எனப்படும் ஆண்கள் காலில் அணிகின்ற அணிகலனை அணிந்தவனும், பொரு இல் தானையான் - ஒப்பில்லாத சேனையைக் கொண்டவனுமாகிய பரதன், காவிரி நாடன்ன கழனி நாடொரீஇத் -காவிரியாறு பாயும் சோழ நாட்டையொத்த வயல்களால் நிறையப் பெற்ற தனது கோசல நாட்டை விட்டு நீங்கி, தாவர சங்கமம் என்னும் தன்மைய யாவையும் இரங்கிடக் கங்கை யெய்தினான் - தாவர சங்கமம் எனப்படும்; அசையும் பொருள் அசையாப்பொருள் என்னும் இருவகைத் தன்மையுடைய எல்லா உயிர்களும் இரங்கி ஏங்கியிருக்கக் கங்கைக் கரையை அடைந்தான் என்பது பொருள்.

இளவரசனுக்குரிய அணிகலன்களையெல்லாம் களைந்து மரவுரி தரித்து இராமனைப்பிரிந்த துயரெலாம் தனது முகத்திலே தோன்றுமாறு செல்வதைக்கண்ட அத்தனை உயிர்களும் இரக்கமெய்தின என்கிறார் கம்பர். காவிரி ஆறு பாய்கின்ற வளம்மிக்க தனது சோழ நாட்டை கோசல நாட்டுக்குக் கம்பர் உவமை கூறுவது கம்பரின் நாட்டுப்பற்றையும் அதனை அவர் பெருமையுடன் வெளிப்படுத்துவதையும் பறைசாற்றுகிறது. காலந்தவறாது வேண்டிய அளவினும் மிக்கதாகக் காவிரியாறு பாய்ந்து கொண்டிருந்ததால் 'புனல் நாடு' என்று அழைக்கப்பட்டதும், நிலவளம் மிகுந்து, சோழவள நாடு 'சோறுடைத்து' என்று போற்றப்பட்டதுமான சோழ நாட்டை மற்றொரு வளம்மிக்க நாட்டுக்கு உவமை கூறியது சாலப் பொருத்தமானது. இத்தகைய நாடுதான் இன்றைக்குப் பிறரிடம் நீருக்குக் கையேந்துகின்ற நிலையிலே வீழ்ந்திருக்கின்றதென்பது நமக்கு வேதனை தருவதாக உள்ளது. கங்கையை நிறைத்தவாறு பெரிய சேனையுடன் பரதன் வருவதைக்கண்டு ஐயுற்று குகுனும் தன் சேனையோடு கங்கையின் தென்கரையை அடைகின்றன்.

***குகனெனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்***
***தொகைமுரண் சேனையைத் துகளின் நோக்குவான்***
***நகைமிகக் கண்கள்தீ நாற நாசியிற்***
***புகையுறக் குனிப்புறும் புருவப் போர்விலான்.***

*கம்ப. அயோத்தி. 1017*

குகனெனப் பெயரிய கூற்றின் ஆற்றலான் - குகன் என்னும் பேரையுடைய காலனை விட வலிமை மிக்க வேடர்கோன், தொகைமுரண் சேனையைத் துகளின் நோக்குவான் - தொகையாகத் தெரிந்த ஆற்றலைக் கொண்ட அந்தப்படையை அவற்றைச் சுற்றி எழுந்திருந்த புழுதிப்படலத்தினூடாகப் பார்த்தவேளையிலே, நகைமிக - நகைப்பு ஏற்படவும், கண்கள்தீ நாற - கண்களிலிருந்து நெருப்புப் பொறி பறக்கவும், நாசியிற் புகையுற - சினத்தின் வெப்பத்தினால் மூச்சிலிருந்து புகை வெளிப்படவும், குனிப்புறும் புருவப் போர்விலான் - வளைந்த புருவத்தோடு போர்செய்யும் வில்லையும் வளைத்தவனாக நின்றான் என்பது பொருள். குகன் அடைந்த சினத்தை அவனின் மொய்ப்பாடுகளால் இங்கே வெளிப்படுத்துவது சிறப்பாக உள்ளது. இச்செய்யுளில் தொகைமுரண் சேனையைத் துகளின் நோக்குவான் என்ற தொடருக்கு அந்தச் சேனையை அவற்றைச் சுற்றி எழுந்திருந்த புழுதிப்படலத்தினூடாகப் பார்த்தான் என்று பொருள் கொள்வதற்குப் பதிலாகத் தனது படையாற்றலுக்கு ஒப்பிடுகையில் அதனை ஒரு தூசுபோலப் பார்த்தான் என்றும் பொருள் கொள்வார்கள்.

எதிர்க்கரையில் நின்ற சேனையைக் கண்டு தனது தலைவனான இராமனைக் காட்டுக்குத் துரத்தியதோடில்லாமல் இங்கும் அவனுக்குத் தொல்லை தருவதற்கு வந்திருக்கின்றார்



கள் போலும் எனக்கருதிச் சினம் பொங்கியவனாகக் குகன் தனது படைகளுக்குக் கூறுவதாக பத்துச் செய்யுள்களைச் அழகான சந்தத்துடன் கலித்துறை என்னும் பாவின யாப்பு வடிவத்தில் கம்பர் படைத்துள்ளார்.

***அஞ்சன வண்ணனென் ஆருயிர் நாயகன் ஆளாமே***
***வஞ்சனை யால்அர செய்திய மன்னரும் வந்தாரே***
***செஞ்சரம் என்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ***
***உஞ்சிவர் போய்விடின் நாய்க்குகன் என்றெனை ஓதாரோ!***

*கம்ப. அயோத்தி. 1024*

அஞ்சன வண்ணனென் ஆருயிர் நாயகன் ஆளாமே - அழகிய கருநிறமுடைய என் ஆருயிர்த் தலைவனாகிய இராமன் அரசாட்சி செய்யாமல் இருக்கும்படி, வஞ்சனை யால்அர செய்திய மன்னரும் வந்தாரே - சூழ்ச்சியினாலே அரசாட்சியைப் பெற்ற மன்னர்கள் இங்கு வந்துள்ளார்களே. செஞ்சரம் என்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ - நெருப்பை உமிழ்கின்ற எனது சிவந்த அம்புகள் இவர்மேல் பாயமாட்டாவோ? உஞ்சிவர் போய்விடின் நாய்க்குகன் என்றெனை ஓதாரோ! - எனது அம்புக்கு இவர்கள் தப்பிப்பிழைத்து போய்விட்டார்களானால் உலகத்தார் என்னை நாய் என்று இகழ்ந்து பேசமாட்டார்களா? என்று குகன் சொல்வதாகக் கம்பர் படைத்துள்ளார். செஞ்சரம் என்பதை நெருப்பை உமிழ்கின்ற சிவந்த அம்பு எனப் பொருள் கொள்வதுடன், வளையாது பகைவரை நேரே சென்று தாக்கும் அம்பு என்றும் பொருள் கொள்வர். நாய்க்குகன் என்றெனை ஓதாரோ! என்ற சொல்லாட்சியைக் கம்பர் சிறந்த பொருள் பொதிந்ததாக இங்கே வைத்துள்ளார். சொல்லாரோ அல்லது கூறாரோ என்ற சொல்லைக் கம்பர் அங்கே வைத்திருக்கலாம். ஆனால் ஓதாரோ என்னும் சொல்லை இங்கே வைத்தது நோக்கத் தக்கது. ஓதுவதென்பது நாள்தோறும் சொல்லிக்கொண்டேயிருப்பது. இராமனைக் காக்கத் தவறிவிட்டேனானால் நாய்க்குகன் என்று என்னை என்நேரமும் உலகம் தூற்றாதா? என்று குகன் கேட்பதாகக் கூறும் கம்பரின் சொல்லாட்சியின் சிறப்பை இங்கே காண்கிறோம். இவ்வாறு குகன் சினம் மேலிடத் தன் படையினருக்கு மேலும் கூறுவான்.

***ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ***
***வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ***
***தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ***
***ஏழமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ?***

*கம்ப. அயோத்தி. 1025*

ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ - ஆழமும் நீளமும் கொண்ட இக்கங்கையாற்றைக் கடந்து எனது படைகளையும் தாண்டி இவர்கள் போய்விடுவார்களா? வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ - இப்பெரும் யானைப் படைகளைக் கண்டு அஞ்சி ஒதுங்கிப்போகின்ற வில்வீரனா நான்? தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ - நீ எனது தோழன் என்று என்னை நோக்கி இராமன் சொல்லிய சொல் மதிக்கத்தக்க ஒரு சொல் அல்லவா? ஏழமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ? - அந்த நட்பைக் காப்பாற்றி இராமனது சொல்லுக்கு ஏற்ப நடக்காவிட்டால் இந்த ஏழை வேடன் மானங்கெட்டு வாழ்தலிலும் இறந்தொழிந்திருக்கக் கூடாதா என்று உலகத்தார் என்னைப் பழிதூற்ற மாட்டார்களா? என்று தனது ஆதங்கத்தைக் குகன் வெளிப்படுத்துவதாக இச்செய்யுள் அமைந்திருக்கிறது.

‘என்னைக் கடந்து இவர்களால் இக்கங்கையாற்றைக் கடந்து செல்லமுடியாது. தமது பெரிய சேனையைக் கொண்டு என்னை அச்சப்படுத்திக் கங்கையைக் கடப்பதும் சாத்தியமற்றது. தாழ்ந்த குலத்தவன் என்று என்னைத் தள்ளி வைக்காது, தனக்குச் சரிநிகராக என்னை வைத்து என்னுயிரைப் போன்றவனே, இலக்குவன் உனக்குத் தம்பி, சீதை உனக்குக் கொழுந்தி என்று என்னிடம் தோழமை கொண்டு சொன்ன சொற்கள் மெய்யான சொற்கள் அல்லவா? அவ்வாறு நட்புக் கொண்ட இராமனுக்கு என்னுயிர் இருக்கும்வரை எத்தீங்கும் வராது காப்பேன். பரதனுடன் சண்டையிட்டு அவனை வெல்லும் ஆற்றல் இல்லாது போனால் உலகம் பழிதூற்றுவதற்கு இடம் வைக்காது இறந்து படுவேன்’| என்று குகன் சூழுரைக்கின்றான். நட்புரிமையைப் பாதுகாக்காத பிறப்பினால் பயனில்லை என்பதைக் குகன் வாயிலாகக் கம்பர் இச்செய்யுளில் கூறியுள்ளார்.

இவ்வாறு குகன் எதிர்க்கரையில் நிற்பவர்களுடன் போர்செய் வதற்குத் தயாராகித் தனது படைகளையும் தயார் நிலையில் வைத்துக் கொண்டிருப்பதை மறு கரையிலிருந்து தேர்ப்பாக னும், அமைச்சனுமாகிய சுமந்திரன் கண்டுகொண்டு அத னைப் பரதனுக்குத் தெரிவிக்கின்றான்.

***கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்***
***உங்கள்குலத் தனிநாதற்கு உயிர்த்துணைவன் உயர்தோளான்***
***வெங்கரியில் ஏறனையான் விற்பிடித்த வேலையினான்***
***கொங்கலரும் நறுந்தண்டார்க் குகனென்னும் குறியுடையான்.***

*கம்ப. அயோத்தி. 1035*

கங்கையிரு கரையுடையான் - நமக்கெதிரே நிற்கின்றானே அவன், கங்கைநதியின் இருகரைகளையும் தனது ஆட்சிக் குள் வைத்திருப்பவன். கணக்கிறந்த நாவாயான் - அளவி றந்த படகுகளையுடையவன், உங்கள்குலத் தனிநாதற்கு உயிர்த்துணைவன் உயர்தோளான் - உங்கள் குலத்திலே உதித்த ஒப்பற்ற தலைவனான இராமனுக்கு உயிரான நட் போடு துணையிருப்பவன், உயர்ந்த தோள் வலிமை கொண்ட வன், வெங்கரியில் ஏறனையான் விற்பிடித்த வேலையினான் - மதம் மிக்க ஆண்யானையை ஒத்தவன், வில்பிடித்தவர்க ளைக் கொண்ட கடல்போலும் படையணியைக் கொண்டுள்ள வன். கொங்கலரும் நறுந்தண்டார்க் குகனென்னும் குறியுடை யான் - தேன் சொரிகின்ற நறுமணம் வீசுகின்ற மலர்மா லையை அணிந்தவன், குகன் என்னும் பெயரையுடையவனு மாகிய வேடர் தலைவன் உன்னெதிரே நிற்கின்றான் என்று சுமந்திரன் பரதனிடம் தெரிவிக்கின்றான். சுமந்திரன் சொல் லைக் கேட்ட பரதன் குகன் இராமனிடம் பேரன்பு கொண்டுள் ளான் என்பதனை அறிந்து தானே போய் அவனைக் காண் பேன் என்றுகூறிப் புறப்படுகின்றான். அங்கே வருகின்ற பரத னின் நிலையைக்கண்டு குகன் ஒருகணம் திடுக்குற்றுப் போகின்றான்.

***வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை***
***நற்கலையில் மதியென்ன நகையிழந்த முகத்தானை***
***கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்***
***விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான்.***

*கம்ப. அயோத்தி. 1039*

வற்கலையினுடையானை - மரவுரியை ஆடையாக உடுத்தி ருக்கின்றவனை, மாசடைந்த மெய்யானை - புழுதி படிந்த மேனியையுடையவனை, நற்கலையில் மதியென்ன நகையி ழந்த முகத்தானை - அழகிய கலைகளில்லாத நிலவைப் போல ஒளியிழந்த முகத்தையுடையவனை, கற்கனியக் கனி கின்ற துயரானைக் கண்ணுற்றான் - கல்லும் கனிந்துருகும்படி துயரம் மிகுந்து காணப்படுகின்ற பரதனைக் குகன் காண்கின் றான். விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான் - அப்போது அவன் கையிலிருந்த வில் நழுவி விழவும் விம்மிக் கலங்குகின்ற நெஞ்சோடு செயலற்றுப்போய் நிற்கின்றான் என்று குகனின் உணர்வு நிலையைக் கம்பர் காட்சிப்படுத்து வது மிக அருமையாக இருக்கிறது. பரதனின் தோற்றம் அவன் போர் செய்ய வந்தவனாக இல்லை. இராமனிடம் பேரன்பு படைத்தவனாகத் தெரியக் குகனின் கையிலிருந்த வில் அவனையறியாமலேயே நழுவி விழுந்தது குகனின் மன உணர்வை வெளிப்படுத்துகின்றது.

பரதனைத் தாம் தவறாகப் புரிந்து கொண்டு விட்டோமோ எனக் கலங்கியவனாகக் குகன் தானே படகொன்றில் பரதனி டம் சென்றடைகின்றான்.

***வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த***
***அந்தணனும் தனைவணங்கும் அவனும்அவனடி வீழ்ந்தான்***
***தந்தையினும் களிகூரத் தழுவினான் தகவுடையோர்***
***சிந்தையிலும் சென்னியிலும் வீற்றிருக்கும் சீர்த்தியான்.***

*கம்ப. அயோத்தி. 1042*

வந்தெதிரே தொழுதானை வணங்கினான்- குகன் கங்கையின் வடகரையைச் சென்று சேர்ந்து இராமன் இருக்கும் திசை நோக்கித் தொழுதுகொண்டிருக்கின்ற பரதனை வணங்கி னான். தகவுடையோர் சிந்தையிலும் சென்னியிலும் வீற்றிருக் கும் சீர்த்தியான் - பெருமையான குணம்படைத்தவர்களினது உள்ளத்திலும், எண்ணத்திலும் தங்கியிருக்கின்ற பெரும் புக ழையுடையவனான, மலரிருந்த அந்தணனும் - தாமரையிலே வீற்றிருக்கின்ற அறத்தைக் காப்பவனாகிய பிரமனும், தனை வணங்கும் அவனும் அவனடி வீழ்ந்தான் - தன்னை வணங்கத் தக்கவனான பரதனும் குகனது அடிவீழ்ந்து வணங்கினான். தந்தையினும் களிகூரத் தழுவினான். குகனும் மைந்தனைக் கண்ட தந்தைக்கு ஏற்படும் களிப்பைவிட மேலான களிப்பு மிகுதியால் அவனை ஆரத் தழுவினான்.

இந்தச் செய்யுளிலே பல சிறப்புகளைக் கம்பர் பொதித்து வைத்துள்ளார். செய்யுளிலே மாறிக் கிடக்கும் அடிகளை அல் லது சொற்களைப் பொருளுக்குப் பொருந்துமாறு கூட்டிவைத் துப் பொருள் கொள்ளும் கொண்டு கூட்டுப் பொருள் கோள் என் னும் உத்தியில் இச் செய்யுள் படைக்கப்பட்டுள்ளது. எந்த முயற் சியுமின்றித் தனக்குக் கிடைத்த அரசாட்சியை உதறித்தள்ளி அதனைத் தன் மூத்தோனுக்குக் கொடுப்பதற்காக அவனை மீட்டுவரச் சென்றுகொண்டிருக்கும் பெருங் குணத்தால் நிலை பெற்ற புகழைப் பெற்றான் என்பதற்காக அவனைச் சீர்த்தி யான் என்கிறார். சிலர் சீர்த்தி என்பது கீர்த்தி என்னும் வடமொ ழியின் திரிபு என்பர். ஆனால் சீர் என்னும் உரிச்சொல்லடியா கப் பிறந்தது சீர்த்தி என்னும் தூய தமிழ்ச்சால். இதற்குச் சான் றாக, சீர்த்தி மிகுபுகழ் என்னும் தொல்காப்பிய நூற்பாத் தொடர் சீர்த்தியென்பது பெரும் புகழ் என்பதனை உணர்த்து கிறது. சீர்த்தி என்னும் தமிழ்ச் சொல்லிலிருந்தே கீர்த்தியென் னும் வடமொழிச்சொல் பிறந்திருக்கலாம் என்றும் கருதலாம். இச்செய்யுளில் தொழுதான் வணங்கினான் எனவருமிடங்க ளில் பல உரையசிரியர்களிடையே கருத்து முரண்பாடு காணப்படுகிறது. இதற்கு முன்னைய செய்யுளின் படி குகன் தான் தனியே நாவாயில் பரதனிடம் செல்கின்றான். எனவே குகன் பரதன் எதிரே வரப் பரதன் அவனடியில் வீழ்ந்து தொழுகின்றான் அவ்வாறு தொழுதவனை வணங்கினான் என் பது குகனது செயலாகும். தனதடியில் அரச குமரன் வீழ்ந்து வணங்குவதா என்று தானும் அவனடியில் வீழ்ந்து வணங்கிப் பின் ஒரு தந்தையைப் போலப் பரதனை அணைத்துத் தழு விக்கொண்டான் என்பதே பொருந்துவதாக இருக்கிறது. ஒரு வரையொருவர் வணங்கியதும், ஒருவரையொருவர் தொழுத தும், ஒருவரையொருவர் கட்டித் தழுவியதும் இங்கே நிகழ்ந் தது என்பதைக் கம்பர் மிகச் சுவைபடத் தந்துள்ளார். இந்தக் காட்சி வான்மீகத்தில் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. குடிப்பிறப்பின் அடிப்படையில் இருந்த வேற்றுமையைப் பண் பின் அடிப்படையில் கம்பர் இங்கே தகர்த்தெறிந்துள்ளார்.

மேலும் தொழுவதற்கும், வணங்குவதற்குமிடையேயான வேறு பாட்டைக் கம்பர் இச்செய்யுளில் நன்கு வெளிப்படுத்தியுள்ள தும் காண்க.

இங்கே வந்ததற்கான காரணம் என்னவெனக் குகன் பரதனி டம் வினவ, அதற்கு அவன் எமது தந்தை முன்னையோரின் நெறிமுறையிலிருந்து வழுவிவிட்டார். அந்த வழுவை நீக்க என் முன்னவனாகிய இராமனை மீண்டும் அழைத்துச் சென்று அவனுக்கு முடிசூட்டி வைக்கவே வந்துள்ளேன் எனத் தெரி விக்கின்றான். பரதனது பெருந்தன்மையையுணர்ந்த குகன் மறுபடியும் அவனை வணங்கிப் பரதனைப் பலவாறு புகழ்கி றான்.

***தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்***
***தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்***
***போயினை யென்ற போழ்து புகழினோய் தன்மை கொண்டாய்***
***ஆயிரம் இராமர் நின்கேள் ஆவரோ தெரியி னம்மா.***

*கம்ப. அயோத்தி. 1045*

புகழினோய்! தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன் னைத் - புகழினையுடையவனே! உன்தாயினது சொல்லைக் கேட்டுத் தரணியை ஆள்வதற்கு உன்தந்தை உனக்குக் கொடுத்த அந்தப் பேற்றினை, தீவினை யென்ன நீத்துச்- கொடிய செயல் என்று விட்டெறிந்து விட்டு, சிந்தனை முகத் தில் தேக்கிப் - முகத்திலே கவலையை நிறைத்தவனாக, போயினை யென்ற போழ்து - இங்கே வந்துள்ளாய் என்ற போது, தன்மை கொண்டாய் - நீ கொண்ட தன்மையைப் பார்த்தால், ஆயிரம் இராமர் நின்கேள் ஆவரோ தெரியி னம்மா - உன்னொருவனுக்கு ஆயிரம் இராமர்கள் ஒப்பா வாரோ அறியேன் என்று குகன் பரதனைப் புகழ்கின்றான். இராமனோ தன்தந்தையின் சொல்லை மீறக்கூடாது என்பதற் காகக் காட்டுக்கு வந்தான். ஆனால் நீயோ உனக்குக் கிடைத்த அத்தனை செல்வங்களையும் அறநெறிக்குப் புற னானது எனக்கருதி அற்றை ஏற்காது வந்துள்ளாய். ஆதலால் ஆயிரம் இராமர்கள் உனக்கு ஒப்பாவாரோ எனக் குகன் வாயி லாக வெளிப்படுத்தும் கம்பரின் அறநெறிச் சிந்தனை போற் றத்தக்கது.

பரதன் இராமன் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறான். இராமன் வந்தபோது அவர்கள் தங்கியிருந்த இடத்தைக் குகன் பரதனக்குக் காட்டுகிறான். அதனைப்பார்த்த பரதன் பெருஞ்சோகம் அடைகின்றான். அவர்கள் அங்கே தங்கியி ருந்தபோது இலக்குவன் செய்ததையும் குகன் எடுத்துக் கூறு கிறான்.

***அல்லையாண் டமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச***
***வில்லையூன் றியகையோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்***
***கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கணீர் சொரியக் கங்குல்***
***எல்லைகாண் பளவும் நின்றான் இமைப்பிலன் நயனம் என்றான்.***

*கம்ப. அயோத்தி. 1052*

கல்லையாண் டுயர்ந்த தோளாய் - மலையையொத்த வலி மையுடைய தோள்களையுடையவனே! அல்லையாண்ட- மைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச - இருளையொத்த அழகிய கரிய மேனியையுடைய இராமனும், சீதையும் நித் திரை செய்ய, வீரன் வில்லையூன் றியகையோடும் வெய்து யிர்ப் போடும் - இலக்குமணன் வில்லினை ஊன்றிய கையோ டும், வெம்மையான மூச்சுடனும், கண்கணீர் சொரியக் - கண்க ளில் நீர் சொரியவும், கங்குல் எல்லைகாண் பளவும் நின்றான் -இரவு முடிந்து பொழுது விடியுமளவும், இமைப்பிலன் நயனம் என்றான் - கண்ணிமைக்காது காத்துக்கொண்டிருந்தான் என்று குகன் இலக்குமணனின் செயல் பற்றிக் கூறுகின்றான். இதனைக் கேட்ட பரதன், இராமனின் துன்பத்திற்கு நான் துணைநின்றேன். இலக்குமணனோ அதனைத் துடைப்பதற் குத் துணைநின்றான் என்று தன்னைப் பழிக்கின்றான். பரதனு டன் வந்த யானைகள் நீந்தி அக்கரை சேர, பரதனுடன் வந்த வர்கள் யாவரும் படகுகள் மூலமாக அக்கரை சென்றடைகின் றனர். படகில் பயணிக்கும்போது குகன் கோசலையை அறிந்து அவளை வணங்குகின்றான். குகனை அறிந்த கோசலை இவ்வாறு கூறுவாள்.

***நைவீ ரலீர்மைந்தீர் இனித்துயரால் நாடிறந்து காடு நோக்கி***
***மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற் றாமென்றே விலங்கல் திண்டோள்***
***கைவீரக் களிறனைய காளையிவன் தன்னோடும் கலந்து நீவிர்***
***ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்தி ரென்றாள்.***

*கம்ப. அயோத்தி. 1077*

நைவீர லீர்மைந்தீர் நீங்கள் இனித்துயரால் - மைந்தர்களே! இனிமேல் துயரத்தால் நலிவடைய வேண்டாம், நாடிறந்து காடு நோக்கி மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற் றா மென்றே - சிறந்த வீரர்களான இராம இலக்குமணர் நாட்டை விட்டுக் காட்டுக்கு ஏகியதும் ஒருவகையில் நல்லதே ஆயிற்று. விலங்கல் திண்டோள் கைவீரக் களிறனைய காளை யிவன் தன்னோடும் கலந்து - மலைபோலும் திண்மையான தோள்களையும் துதிக்கையின் பலங்கொண்ட களிற்று யானையையும் ஒத்த இந்தக் குகனுடன் கூடி, நீவிர் ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்தி ரென்றாள் - நீங்கள் ஐவரும் இந்த அகன்ற நிலத்தை நெடுங்காலம் பாது காப்பீராக என்று கோசலை அவர்களை வாழ்த்துகிறாள்.

இராம இலக்குமணர்கள் காடேகியபோது இரு மைந்தர்க ளைப் பிரியும்படி நேரிட்டதே என்று முன்பு வருந்தினேன். ஆனால் இப்போது அவர்கள் காடேகியதால் குகனுடனும் ஐந்து மைந்தர்களைப் பெற்றவளானேன்| என்று வாய்விட்டுக் கூறிப் பரதனையும் குகனையும் மகிழ்ச்சிப் படுத்துவதாகக் கம்பரின் சிந்தனை கோசலை வழியாகப் பரந்து விரிந்திருக் கின்றது. மற்றத்தாய்மாரையும் குகன் வினவியறிந்து வணங் கிப் பின் எல்லோரும் அக்கரை சேர்ந்து பரத்துவாச முனிவன் இருக்குமிடம் சென்று சேர்கிறார்கள். இத்துடன் குகப்படலம் நிறைவுற்றது. அடுத்த இதழில் அயோத்தியா காண்டத்தின் இறுதிப்படலமாகிய திருவடி சூட்டுப்படலத்திலுள்ள கம்ப னின் கவித்துவத்தை எடுத்து வருகிறேன்.
சுவைத்து மகிழ் வோம்.

வளரும் ...



shanmugarajah@thaiveedu.com

# தமிழ்வலை - 111

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-111 வினா

### இடமிருந்து வலம்

1 முன்னாள் சிரிய அதிபர்
2 இந்தியாவுக்கு சொந்தமான ஒரு தீவு
3 ஆசிரியர்
5 முறையல்ல
7 மஞ்சள் வான அந்தி வேளை (2-3-3)
8 வடிவம்
10 வசை
12 பாடகி மாதங்கியின் புனைபெயர்
13 பயிரும் விலங்கினமும் கொண்ட களம்
16 மட்டக்களப்பு (2-3-3)

### மேலிருந்து கீழ்

1 நூதனசாலை
2 அரண்மனையில் அரசியர், மகளிர் உறைவிடம்
4 பாண்டு
5 தாக்குண்ட வடு
6 செவி
9 கைதுக் கட்டளை
11 துரத்து
12 பெருமை
14 கண்டி
15 ஓர் ஆபிரிக்க நாடு

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி**
**மினன்னஞ்சல் முகவரி:**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை-110-க்கான விடைகள்



## தமிழ்வலை-110 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

பாண்டியன் வீராசாமி, திருச்சி,
ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ.
சுமதி முத்துராஜா, யாழ்ப்பாணம்
தேவாம்பிகை அரவிந்தன், இங்கிலாந்து
விநோதா வசீகரன், மார்க்கம்.
மேரி கெலன் தேவதாஸ், நோத்யோர்க்
சாந்தி அரவிந், மொன்றியால்.
சண்முகம் சபேசன், கிளிநொச்சி.

### பரிசுபெறும் போட்டியாளர்

**சிவகுமார் கம்சிகா,**
**சுன்னாகம்.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.





# வாழ்வுரிமை!

**மா. சித்திவினாயகம்**

என்றும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த விலங்குப் பண்ணைக்கு வந்திருந்தது கேடு. ஆகாயம் பிளந்து மழை கொட்டோ கொட்டென்று கொட்டி நிலப் பரப்பெங்கும் வெள் ளம் பெருங்காடாகியது. குளங்கள் நிறைந்தன. இரணைமடுக் குளம் வான் பாய்ந்தது. அதன் உதிரித் தண்ணர் வாய்க்கா லெங்கும் பேராறாய் பெருகிப் பாய்ந்தது. நீர்ப்பாசனத் திட்ட மிடல் அமைச்சும், மந்திரிகளும், பொறியாளர்களும், பல ஆண்டுகளாக வெறும் பெயருக்கே இருக்கின்றார்கள். நீர் வடிந்தோட பெருந்திட்டமிடல்கள் எதையும் குடா நாட்டுள் செய்யவில்லை என்பதற்குச் சாட்சியாக நீர் மட்டம் உயர்ந்து உயர்ந்து விலங்குப் பண்ணையை நீருள் அமிழ்த்தியது. பன் றியாகிய தேவன் சொன்னான். இது மூடர்களான மனித குலத் தால் எமக்கு வந்திருக்கிற கேடு. நீர் வடிய வக்கற்ற இந்த நிலத்தில் விலங்குப் பண்ணையமைக்கலாம் எனச் சான்றிதழ் கொடுத்த அதிகாரி தண்டிக்கப்பட வேண்டியவன். ஆனால் அவர்களோ பணத்திற்காக எதையும் செய்பவர்களாயிருக் கின்றார்கள்.

திரவியத்தின் கனடாக் காசு நன்றாகவே விளையாடி இருக்கி றது என்றது குளிர் தாங்காமல் எருது. நம் முயற்சியால் நாம் தப்பிக்கொள்வது ஒன்றே நமக்கான இன்றைய தலைவிதி. என்றது கொம்பனாடு, கொஞ்சம் பொறுங்கோ பண்ணையாட் களும், வெள்ளைக்கார ஸ்ரெவ்வனியும் வந்து பாதுகாப்பாக எம்மைவேறிடம் கூட்டிப் போவார்கள் என்றது மனிதர் சூட்சிய றியாச் செவ்வந்தியாடு.

இந்த மானிடப் பசாசுகளா கூட்டிப்போவார்கள்? முள்ளி வாய்க்காலில் மொத்தமாய்ச் சுருண்ட தன் இன அப்பாவிக ளையே அப்படியே இல்லாது அழித்தொழித்த இவர்கள். தம் சுயநலத்திற்காய் எந்த எல்லைக்கும் போவார்கள். இந்த மனி தர்கள் இப்படியே எம்மைப் பண்ணையோடு சாகவிட்டு இன் சூரன்ஸில் பெரும் பணம் பெற்றுவிடுவார்கள். நாம் இதற்குள் ளேயே கிடந்து சாகவேண்டியதுதான் என்றது கொம்பனாடு.

உடனேயே நாம் பண்ணையை விட்டுத் தப்ப வேண்டும். இப்போ ஒருவருக்கு ஒருவர் இங்கிருந்து தப்ப உதவுங்கள் என்றது பெரும் பதற்றத்தோடு பன்றித்தேவன். படைத்த கட வுள் நம்மைக் காப்பாற்றுவான் என்றும், நல்லவர் சொர்க்கம் போகலாம் என்றும் தினமும் பைபிள்படிப்பாளே எம் முதலா ளியம்மா ஸ்ரெவ்வனி. அந்தக் கடவுள் நம்மைக் காப்பாற் றாதா என்றது நாயான அமாயா?

கடவுள் என்பது பிழைப்பு வாதிகளின் கண்டுபிடிப்புத் தோழர் களே! அதில் சந்தேகம் வேண்டாம். இந்தப் புவியின் எல்லா

விலங்கும் இறையால்தான் படைக்கப்பட்டது என்பதும், மரணத்திற்குப் பிறகு இறையிட்ட சொர்கத்துக்கோ, நரகத்திற்கோ போவோம் என்பதெல்லாம் சந்தர்ப்பவாத மனிதரின் ஏமாற்றுக்கட்டுக் கதை. அதனை இங்கு தத்துவார்த்தமாக எல்லோரும் அறிந்த பிறகும், அதனையே நம்புவதாக இன்னமும் நடித்துக் கொண்டிருக்கிற இந்த மனிதர்கள், மிகவும் ஆபத்தான கேடு கெட்ட ஜென்மங்கள் என்றது கம்யூனிசம் அறிந்த அந்தக் கொம்பனாடு.

பண்ணையே கதியென்றிருந்த அந்த விலங்குகள் கையாலாதனவாகி தம்கையே தனக்குதவியெனத் தம் கட்டுகளை அறுத்து நீரில் நீந்தின. யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் நீர்வளங்களைத் தேக்கிப், பேணிப் பாதுகாத்து அவற்றின் பயன் உத்திகளை, பங்கீடுகளை நிலத்தடி நீர் இருப்பு ஆய்வுகளை யாரும் இங்கு சரிவரக் காப்பதுமில்லை, கணிப்பதுமில்லை. குடாநாடானது நீரை சுண்ணாம்புக் கல் நீர்நிலைகளில் சேமித்து வைக்க மழையை மட்டுமே நம்பியுள்ளது. சராசரி ஆண்டு மழைப்பொழிவை தேக்கும் குளங்கள் மேல் பெருங் கட்டடங்களும், நவீன வீடுகளும், கடைகளும், தெருக்களும் எழுகின்றன.

நகரமயமாக்கல் திட்டமிடப்படாமல் எதிர்காலத்தைச் சூனியமாக்கி அச்சுறுத்துகிறது. இந்த மனிதர்கள் கேட்ட தனிநாடும், தண்ணீர் நாடாகிப் போகும் அவலத்தில் இருந்தது என்றபடி ஒவ்வோர் விலங்கும் மூலைக்கொன்றாய் உயிர் தப்ப ஓடின. கரடிப்போக்குப் பெரு வயல்களைத் தாண்டி பல மைல் தொலைவில் பரந்தனில் ஒரு சிறிய, வீட்டில் இத்தகு பேரிடர் வருமென்றறிந்தோ என்னவோதான் குடியிருந்த கல்வீட்டை மிக உயரத்தில் கட்டியிருந்தார் வேலன். அவர் கிளிநொச்சியின் திட்டமிடல் பெரு அதிகாரிகளோடு நீர் போகும் பாதைகளை மறைத்து திட்டமில்லாமல் கட்டடங்களைக் கட்டுவது அபாயம், அதற்கு அனுமதி வழங்காதீர்கள் என்று, பலமுறை பேசிய போதும், அவர்கள் அவரைக் கண்டு கொண்டவர்களல்ல.

பெயர்தான் திட்டமிடல் அதிகாரிகள் என்ற போதும், அவர்கள் கையிலும் அந்த ஒப்பந்தங்களை நிறுத்தும் அதிகாரம் இல்லை. அனைத்தையும் தீர்மானிப்பதாக முதலாளித்துவ ஆளும் அரசும், அதன் ஒத்தூதிகளுமே அங்கு இருந்தார்கள். பணம் எவர்ரெவர் கூடுதலாகக் கொடுக்கின்றார்களோ அவர்கள் நினைத்த இடத்தில் கட்டடங்கள் எழுந்தன. வாழ்வியல் சூழலை கெடுப்பதற்கு இந்த சுயநலவாத மனிதர்களே துணை நிற்கின்றார்கள். அச்சம் தருகிற ஆபத்து இது. பண்ணை விலங்குகள் அறிந்த விவேகத்தைக் கூட இந்த அற்ப மனிதர்கள் அறியாத அஞ்ஞானிகளாயிருந்தார்கள்.

படித்தவர்கள், கல்லாநிதிகள் என்கின்ற அந்த மனித மேதைகள் என்றைக்கும் மக்களுக்கானவர்களாகவோ, தம்மாநகரத்தைப் பாதுகாப்போடு அபிவிருத்தியாக்குகிற செயல்களிலோ இறங்கியவர்களல்ல. நகரமயமாக்கல் பற்றிய அறிவை, புரிதலை பாமர மக்களுக்கு ஊட்டியதாகவோ, அவ்வகையான ஆரோக்கியத் திட்டமிடலுக்கு எதிரானவர்களை எதிர்த்து தெருவில் இறங்கிப் போராடியதாகவோ விலங்குப் பண்ணை விலங்குகள் என்றைக்கும் கண்டவையுமல்ல. இந்த விலங்குப் பண்ணை மட்டுமல்ல மனிதர்களின் ஆஸ்பத்திரிகளும், குடிமனைகளும் நீரில் மூழ்கும் அபாயத்தில் ஏன் வர வேண்டும் என அவர்கள் ஆராய்பவர்களுமல்ல. பேரிடரைத்தடுக்க மார்க்கம் தேடாமல், பேரிடர் வந்து அழிந்த பின்னால் செத்தவர்க்குப் பூ வைக்க மட்டும் முண்டியடிக்கிற நடிகர்கள் அவர்கள். இந்த வியாபார மனிதர்களும், இன்றைய காணி விற்பனை முகவர்களும் தனிநாடெனப் போற்றி தம் சொந்த நிலங்களென உரிமைகொண்டு போர் புரிந்த தேசிய நிலங்களைப் பெருங் கட்டடமாக்கிக் கூவிக் கூவிவிற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

'நிலமிழந்து போனால் பலமிழந்து போகும்! பலமிழந்து போனால் இனம் அழிந்து போகும்' என்றான் போராளிக் கவிஞனான புதுவை! அந்த வரிகளைப் பாடிக்கொண்டே நிலத்தை விற்கிற பெரும் சமர்த்தர்கள் இவர்கள். ஈழத்தின் தமிழர் நிலப்பகுதிகள் பலவும் குடியேற்றங்கள், இனப்படுகொலைகள், விகாரைகள், இராணுவத்திற்கான நில அபகரிப்பு, குரோதமான தொல்லியல் அகழ்வு என்பனவூடாகப் பெருந்தேசியத்தால் பறிக்கப்பட்டிருந்தன. அந்நிலையில் தன்மானத்தோடும், தன்னுரிமையோடும் வாழ, தமிழருக்கெனத் தனிநாடு என்கிற ஈழம் வேண்டி நடந்த போர்தோற்றுப் போனது. சொந்த மண்ணின் விடுதலைக்காகப் பல விடுதலை வீரர்கள் தமது உயிர்களை ஈகம் செய்தனர்.

ஆனால் இன்று எஞ்சியுள்ள அவர்களே தமது மண்ணை விட்டகன்று நிலங்களை விற்கத் துடிக்கின்றார்கள். காலங்காலமாக பாலஸ்தீனத்தில் வாழ்ந்ததாகச் சொல்லி வருகிற பாலஸ்தீனியர்களும் இப்படித்தான் தம்நிலங்களை பெருவிலை கண்டவுடன் யூதரிடம் விற்று விட்டு இன்று சுதந்திரப் பாலஸ்தீனுக்கு அழுவதாகப் போராடிச் சாகின்றார்கள். இவற்றையெலாம் எண்ணியெண்ணி மனிதரிடம் விலங்குகளுக்கு வந்த ஆத்திரம் போலவே வேலனுக்கும் நினைக்க, நினைக்க ஆத்திரமாய் வந்தது. ஏன் இங்கு போர்? இத்தனை இழப்புகள் எதற்கு? யாரும் இத்தனை அவலப்பட்டும், எதையும் உணர்ந்தது போல் இங்கு இல்லையே.

வேலன் இத்தனைக்கும் ஓர் மருத்துவர். அவர் திட்டமிடல் அதிகாரியல்ல. ஆனால் தமிழுணர்வாளர். மலேசியாவில் படித்து அங்கு வேலைசெய்து கொண்டிருந்த அவர் ஈழப் போராட்டத்தில் தன்பங்கும் இருக்கவேண்டுமென்பதற்காகத் தான்காதலித்து மணமுடித்த மலேசியப் பெண்ணான தேவகியோடு இலங்கைக்குச் சடுதியாக வந்திறங்கியவர். வந்த வேளை அவர்களைத் தமிழர்கள் அறியாதபோதும் அவர்களின் அயராத மனிதநேயப் பணியால் அவர்கள் அனைவராலும் மதிக்கப் பட்டவர்களானார்கள். அப்போது போர் உக்கிரமடையாக் காலம். மருத்துவர் வேலனும், அவரின் பிரிய காதலியான செவிலியர் தேவகியும் தமிழர் மத்தியில் பிரபலமடையத் தொடங்கியிருந்தார்கள். வைத்தியத்தை தன் வருமான மிக்க மூலதனமாக வைத்திருக்கிற உலகில் வேலன் வித்தியாசமானவர். இன்றைக்கு நோயும் இலகுவில் தீர்ந்து விடக்கூடாது, அவன் இறந்து விடவும் கூடாது என வெறும் நாட்கடத்தல் மருந்துகளைக் காசாக்குகின்ற விற்பனைச் சந்தையாகி நிற்கிற மருத்துவ உலகில் அவர்கள் இருவரும்மக்களுக்கான மகத்தான சேவை செய்யத் துணிந்தவர்கள்.

தண்ணீரில் அமிழ்ந்து கொண்டிருந்த பண்ணை விலங்குகளில் ஓடித் தப்பியவைகள் போக மிகுதியான பலவிலங்குகளும் அபாயத்திலிருந்தன. தண்ணீரில் மிதந்துமிதந்து நெடுந்தூரம் வந்த சின்னஞ்சிறு வெள்ளாட்டுக்குட்டியொன்று வைத்தியர் வீட்டுத் திண்ணையில் வைக்கப்பட்டிருந்த ஆட்டுப் பொம்மையருகே அந்தரித்து ஒதுங்கியது. தாயென்றோ, தன்னினமென்றோ நம்பிக்கையோடு நம்பி அந்தப் பொம்மையை

உரசி நக்கியது. அந்தரித்து யாருமற்று, அகதியாவது இவ்வுல
கில் எத்துணை அவலம்? தன் திண்ணையில் தரிக்க வந்த
அநாதரவான அந்த ஆட்டுக்குட்டியை ஆதரவோடு தடவி
னார் அந்த வைத்தியர்.

எப்பிடி இருக்கின்றீர்கள்? சாப்பிட்டீர்களோ? மருந்து குடித்
தாச்சோ? கெதியா வெளிக்கிடுங்கோ? நானிருக்கிறன்
வாங்கோ என்றெல்லாம் கேட்டு உரையாட எவருமின்றித்
தனித்துப் போய் ஒண்டியாய் நிற்கிற துன்ப வாழ்வு எத்துணை
பேரவலம்? துயர் அழுத்தும் கணங்களில் அருகிருந்து கண்
ணீர்த்துடைக்கவும், ஒருவர் கவலையை ஒருவருக்குச்
சொல்லி ஆறுதல் பெறவும் ஒருவர் இருக்கும் வரைதானே
இதற்கு வாழ்வு என்று பெயர்.

மருத்துவரும் இந்த அநாதரவான ஆட்டுக்குட்டியும் இப்போ
ஒன்றுதான் ஆட்டுக்குட்டி மருத்துவரின் அரவணைப்பில்
அவர் மடியில் சுருண்டது. எத்தனை பேரின் ஆதரவாக இருக்
குமென்று நம்பிய இந்தக் கிளிநொச்சி நிலமும், முள்ளிவாய்க்
காலும் எத்தனைபேர் உயிர்களைக் கண்முன்னால் அநியாய
மாகப் பறித்தது. வைத்தியரின் எண்ணங்கள் 2009-ன் முள்ளி
வாய்க்கால் காலத்திற்குத் தாவியது. முள்ளிவாய்க்கால்
போகும் வரை இவ்வீட்டில் தான் இன்று முதியவராகத் தனித்
துப் போய் நிற்கிற வேலனும் அவரின் பிரிய காதலி தேவகி
யும் இருந்தார்கள். தன்னலங் கருதாமல் ஓடியோடி எல்
லோர்க்கும் உதவிய மருத்துவர் வேலனோடு மருத்துவச்
செவிலியான அவளும் ஒன்றித்திருந்தவள். மாதொருபாக
னாய் தன் நெஞ்சில் அந்தக் காதலியோடுஅர்த்தநாரீஸ்வர
ராகி நின்றவர் வேலன்.

அவர்கள் தங்கள் இளமைக்காலக் காதலையும், அதன் இன்
பமூட்டும் மோகத்திளைப்பையும் தமிழ்மக்களுக்காக விட்டுக்
கொடுத்தவர்கள். கண்முன்னால் இந்த அப்பாவி மக்கள் ப
டும் சொல்லொணா வேதனையை, துன்பத்தைக் கண்டு
துவண்டு போனவர்கள். அவர்களுக்கு ஆதரவாகி, மருத்துவ
உதவிகளைத் தன்னலமற்று, தங்களால் இயன்றவரை செய்து
கொண்டிருந்தவர்கள். இது அதிக காலம் நீடிக்கவில்லை.
இப்படித் தமிழ்மக்களுக்கு அவர்கள் மிகுந்த உதவியாக
இருந்தபோதுதான் போர் உக்கிரமானது. அவர்களும் மக்க
ளோடு மக்களாக இயக்கம் கைகாட்டி நடந்த திசையில் நடந்
தார்கள். முள்ளிவாய்க்காலுள் அகப்பட்டபோது மூர்க்கமான
போர் மூண்டது.

அவர்கள் இருவரும் அந்தப்பெரும் போர்க்களத்துள் விரும்
பியோ, விரும்பாமலோ இறங்க வேண்டிய கட்டாயத்திலிருந்
தார்கள். 30 வருடகால தொடர் போரில் சிதைந்த மக்கள் பல
லட்சம் பேரும் படபடக்கும் இதயங்களுடன் கூடிய இடமது.
ஒதுங்கவும், ஒளியவும் இடமற்று ஒருவரோடு ஒருவர் உரசியப
டியே உயிரை விடக் காத்திருந்த பொல்லாத பொழுது. திறந்
தவெளியெங்கும் மணல் பகுதியில் கூடாரங்களைக் கட்டி,
விலங்குகளோடு மக்களும் குவிந்திருந்தனர். தங்களிடமி
ருந்த எஞ்சிய சொத்துகளும் இயக்கத்தின், மக்களின் எண்
ணுக்கணக்கில்லா வாகனங்களும், நிறுத்தப்பட்டிருந்த அந்நி
லத்தின் கீழே பதுங்கு குழி தோண்டிப் பாதுகாப்பெனப் பதுங்
கிக் கிடந்தனர் மக்கள்.

பதுங்கு குழிகளை அமைப்பதற்கான மணல் மூடைகளைச்
செய்வதற்கு, சாக்குகள் கூட அற்ற நிலையில் மக்கள் தங்கள்
பழைய ஆடைகளைப் பயன்படுத்திய பரிதாபம்கூட அங்கு
நிகழ்ந்தது. மண்போட்டால் மண் கீழே விழாத நெரிசலாக
காணப்பட்ட அந்த மக்கள் கூட்டத்தின் மீதே தொடர் ஷெல்க
ளினாலும், இடைவிடாத குண்டுமழையாலும் தாக்குதல் நடந்
தபோது, நந்திக்கடலெங்கும் குருதியாறு பெருகி உயிர்நீத்து
வீழ்ந்து பரவிக் கிடந்தது தமிழரினம்.

காயம் பட்ட குழந்தைகள், முதியோர், பெண்களென பதைப
தைத்து நிற்கிற மக்களில் யாருக்கு வைத்தியம்பார்ப்பது?
யாரை விடுவது? வேலன் திகைத்துப் போன தருணமது. மக்
கள் ஓடும் காட்சியும், மரண ஓலமும் இன்னமும் மண்டையைப்
பிளக்கும் மறக்கமுடியாத வடு. மின்சாரம் இல்லை, உண
வில்லை, உறக்கமில்லை, தேவையான மருந்தோ மற்றும்
அத்தியாவசியப் பொருட்களோ எதுவுமில்லை காயம் பட்டவர்
களை வெற்றுத் தரையில் படுக்க வைத்து வைத்தியம்
பார்த்த நாட்களை இனியும் நினைக்க முடியாது வேலனால்.
ஒரு சின்னஞ்சிறு சிறுவன், அவனது காலில் வெடிகுண்டு பட்டு
உடம்பெங்கும் ஷெல் பாகங்கள் ஏறி உயிரோடு போராடிய
போது காப்பாற்றத் துடித்த வேலனும், மனைவியும் படாத
பாடுபட்டு அவனைக் காப்பாற்றினார்கள்.

*‘உடலிடைத் தோன்றிற்று ஒன்றை*
*அறுத்து அதன் உதிரம் ஊற்றிச்*
*சுடலுறச் சுட்டு வேறோர்*
*மருந்தினால் துயரம் தீர்வர்’*

என்பது கம்பரின் பாட்டு. மருந்தற்ற பூமியில் அந்தப் பாட்டுத்
தான் கருப்பொருள். உண்மையில் செத்துப் பிழைத்த சிறு
வனை காப்பாற்றப் போராடிய அவர்களின் அந்தப் போராட்
டம் அவர்களைச் செத்துப் பிழைக்க வைத்தது. அவர்கள்
காப்பாற்றிய அந்தச் சிறுவனின் தாய் டாக்டர் கையைப்
பிடித்து நன்றி கூறியபோது இன்னும் வந்துவிழுகிற ஷெல்க
ளிலிருந்து இவர்கள் தப்ப வேண்டுமே என்ற எண்ணம் மட்
டுமே அவர்கள் இருவரின் பெரு ஏக்கமாக இருந்தது.

அந்த எண்ணங் கலையுமுன்பே எங்கிருந்தோ வந்த ஷெல்
அவரது பிரிய காதலியை துண்டு துண்டாக அந்த இடத்தி
லேயே அவர் கண்முன்னாலேயே சிதைத்து எறிந்தது. மூச்சு
விடும் கணத்துள் நடந்த கொடூர நிகழ்வு அது. முள்ளிவாய்க்
காலினுள் வேலனும், தேவகியும் அதிகமாக மக்களால்
நேசிக்கப்பட்டவர்கள். காயமடைந்த அனைவர்க்கும், அவர்
கள் தான் காக்கும் தெய்வம். அந்த முள்ளிவாய்க்கால் என்
பது, ஆயுதப்போராட்டத்திற்கான முடிவு மட்டுமல்ல, ஈழத் தமி
ழரது இனப் படுகொலை. ஒன்றரை இலட்சம் தமிழர்களைக்
காவு கொண்ட இடம். அரச படையும் அதன் வெளிநாட்டு
ஆதரவு சக்திகளும், உள்ளூர் துணைக் குழுக்களும் சேர்ந்து
ஈழத்தவரை அழித்து ஒழித்த பகுதி அது. கொன்றவர்கள்
போகப் பல்லாயிரக் கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்ட
மைக்கான குறியீட்டுப் பெருங்களமது.

முள்ளிவாய்க்கால் நினைவிலிருந்து வேலனை மீளச் செய்தது
தெருப்புற மக்களின் ஆரவாரம். இந்த வெள்ளத்தைத் தாண்
டியும் மக்கள் எங்கோ கூட்டமாகப் போனார்கள்.

தொடரும்...



sithivinayagam@thaiveedu.com

# இது கதையல்ல கண்மணியே



**அ.கந்தசாமி**

சின்னி விரலின் நுனிக்கணு அளவுதான் இருக்கும். கழுகுக் கண் இருந்தால்தான் மனிதக் கண்களுக்கு அந்தப் புழு தெரியும். அதன் அனுக்கம் அதன் செவிகளையே தொடுவதில்லை. இந்தச் சீத்துவக்கேட்டில் அது புலம்பி என்ன? கூவி அழுதென்ன? அதைப் படைத்த கூறுகெட்ட பரமனுக்கே அது வெளிச்சம். அவனுக்கென்ன முக்கண்ணன். கண்ணிருந்தும் குருடராய் வாழ்வோரைப் படைத்த முக்கண்ணன். ஏனென்று கேட்டால் நெற்றிக் கண்ணைத் திறப்பான். அதில் பட்டதெல்

லாம் பஸ்ப்ப மாகிவிடுமாம். உருப்படுமா உலகம். மன்பதை காலகாலமாய்க் குடியிருக்கக் குன்றுமணி நிழலின்றி, கழி வுக்கால்வாய்களில், துர்மணத்துளைகளில், பள்ளத்தாக்குக ளின் நிழல்களில் குடும்பம் நடத்தி விந்தணுக்களை விரயம் செய்து வீணாய்ப்போவது இந்தப் பாழாய்ப்போன இறை வனார்க்குத் தெரியாதா? தெரியும்.

ஊனக் கண் இரண்டுடைய எமக்கு இந்த விண்ணாணங்கள் விபரமாய்த் தெரியும்போது முக்கண்ணன் அவனுக்கு இதன் சூச்சுமங்கள் தெரியாதா என்ன? கல்லினுள் இருப்பதையும் கருப்பைக்குள் துடிப்பதையும் காவாந்து பண்ணிக் காத்தரு ளும் கர்த்தாவுக்கு இது புரியாதா? புரியும். நன்றாகவே அவன் அறிவான்.

இந்தப் புழுவுக்கு ஊசி முனையளவு விழிகளிரண்டையும் படைத்தவனும் அவன்தான். அதன் பார்வைப்புலத்தை மட் டுப்படுத்திய மாயக்கரங்களும் அவனுடையதே. மனிதர்க ளின் மனசில் ஊறிபோன ஓரவஞ்சனையின் ஊற்றுக் கண் ணும் அவனே. பழி ஓரிடம் பாவம் பிறிதோரிடம். இமயத்தின் உச்சியில் கண்மூடிக் கனாக்கண்டு காலத்தை வீணடித்தால் காரியங்கள் நடக்குமா? விஸ்வாமித்திரனும் மானிடன்தானே. கடவுளுடைய படைப்புத்தானே. அவனுடைய சந்ததிகள் வழக்கொழிந்து போயினரா? இல்லை. வாழ்கிறார்கள்.

இறைவா! ஒளித்தோடித் திரிவதுதானே உன் வரலாறு. கஞ் சாப் புகை மூட்டத்தில் உனக்குக் கண்ணும் மங்கல். கருத்து களும் புரிவதில்லை. இந்தச் சீர்கேட்டில் சடங்குப்படி மூன்று மனைவிமார். ஒருத்தி சிவப்பி. அடுத்தவள் அடுப்புக் கரி. நீயோ சுடுக்காட்டுச் சாம்பரில் கிடந்து புரண்டுவிட்டுக் குளிக் காமலே வந்து அவர்களுக்கு நடுவில் படுப்பாய். அது அப் பெண்களுக்குப் பழகிப் போய்விட்டது.

மூன்றாமவள் கங்கை. பரிசுத்தமானவள். அவள் தலைவிதி. உன்னிடம் சிக்கிக் கொண்டாள். உனக்கு நன்றாகவே தெரி யும், கண்களில் ஆமணக்கெண்ணை ஊற்றி எத்தனை சிவ ராத்திரிகள் விழித்திருந்தாலும் அவள் உன்னை உச்சி விட்டு ஓடிப்போய் விடுவாள் என்பது. நீ என்ன செய்தாய்? சடைபி டித்துப் பிரிபிரியாய்த் தொங்கிச் சிணி மணக்கும் உன் உச்சந் தலை மயிரை சும்மாடாக்கி, அதற்குள் அவளைச் சிறை வைத்தாய். அவள் சிந்தும் கண்ணீர்தான் கங்கை நீராய்ப் பிர வகித்துப் பாய்வதாய் ஐதிகம். இந்த கங்கை நீரினாலாவது உன் பாவங்களைக் கரைத்துக் கொள்ளக்கூடாதா? தண்ணீர் என்றால் உனக்கு ஒவ்வாமை.

ஏன் சிவனே!

படைத்தவனை நொந்து என்ன பயன்?

பாவம் இந்த புழுவுக்குச் சொல்லிக் கூப்பிட ஒரு பெயர் இல்லை. சிலவேளை மிருக உடற்கூறு விற்பன்னர் எழுதிய சாஸ்த்திரங்களில் ஏதாவது மூலையில் பூதக்கண்ணாடியின் துணையுடன் துழாவினால் கிடைக்கக் கூடும். அதற்கும் உத் திரவாதம் இல்லை. பெயரா முக்கியம்? புழு என்ற பொதுப் பெயருக்குள்தான் எல்லாம் அடங்கிவிடுகின்றனவே. அப்பா, அம்மா யார் எனத் தெரியாது. அப்பா என்று யார் வந்து நின் றாலும் ஆதாரம் கேட்கும் உலகம் இது. அம்மாவை எங்கே தேடுவது?

புல்லுப் பற்றைகளில்தான் இந்தப் புழுவின் சீவியம். அந்தப் பிரதேசத்தில் கைச்சிறங்கை அளவு தோற்றம் கொண்ட சிட் டுக் குருவிகள் பல, பகல் பன்னிரண்டு மணி நேரமும் கிண் டிக் கிளறிக் கொத்தித் தின்று வயிற்றை நிரப்புகின்றன. இந்த அற்பப் புழு சாமர்த்தியசாலிதான். அவற்றின் பார்வையில் சிக்குப்படாமல் எப்படியோ தன்னைத் தாக்காட்டிக் கொள் கின்றது.

கல்லினுள் தேரையையும் கருப்பையுள் முட்டையையும் காத் தருளும் அவன் திசையிலேயே பந்தை நகர்த்துவோம். பூமி யின் அதிர்வைக் கொண்டும், அதன்மீது கவிகின்ற ஒளியின் உஷ்ணத்தை உணர்ந்தும் அது தன் அசைவை நிகழ்த்துவ தாக நமக்கு தெரிந்த அற்பசொற்ப விஞ்ஞான அறிவை ஆதாரம் காட்டலாம். அறிவு சம்பந்தமான உரையாடல்களில் எங்கள் மக்களுக்குப் பெரிதும் அக்கறையில்லை என்பதால் தப்பிக்க இது போதும்.

இந்தப் புழு எதைத்தான் சாப்பிடுகின்றது? பச்சையாய்த் தெரியும் எதையும் இது உணவாய் உண்டுவிடும். இந்த வியாக்கி யானங்களைச் சுருக்கிக் கொண்டு கதைக்குள் செல்வோம்.

அன்று அந்தப் புலுணிக் குருவிக்குத் தலைபோகிற அவசரம். பனம்பொந்தில் பொத்தி வைத்திருந்த கூடு, தவறி நிலத்தில் விழ, செத்தவைபோக எஞ்சிய நாலு குஞ்சுகளும் ஆவா வென்று பசியில் காந்திக் கொண்டு கிடக்கின்றன. 'சத்தம் போட்டு குடியிருக்கிற கூட்டை எதிரிகளுக்குக் காட்டிக் குடுத் திட வேண்டாம்' என்று எச்சரித்துவிட்டுத்தான் புலுணி இரை தேடிப் புறப்பட்டிருந்தது. இன்னும் இரைகள் சிக்கவில்லை. போகத் தாமதமானால் குஞ்சுகள் கீச்சிடத் தொடங்கிவிடும். இந்தச் சத்தம் பருந்துக்கும் கேட்கலாம் பாம்புக்கும் கேட்க லாம். வாழும் கணம் ஒவ்வொன்றிலும் மரணத்துக்கு உச்சா காட்டித்தான் பிழைக்க வேண்டியிருக்கின்றது.

மனிதரைப் போல் தன் தலைவிதியை நொந்து புலம்ப புலுணிக்கு யாரும் சொல்லித்தரவில்லை.

குஞ்சுகளுக்குப் பசி, புலுணி, தாயாகி நின்று இரையைத் தேடியது. சிட்டுகளுக்குப் போக்குக் காட்டிய புழுவால் புலு ணியிட மிருந்து தப்ப முடியவில்லை. புழுவைப் புலுணி தன் கொடுப்பிற்குள் அதக்கிக்கொண்டு இறக்கை விரித்தது. நாலு சீவன் களுக்கும் இதனை எப்படிப் பகிர்வதென்பதே அதன் இக்கணத்துக் கவலை. மேலும் சில பூச்சி புழுக்களை சேகரித்தபின்தான் பனம்பொந்துப் பக்கம் தலை காட்டலாம்.

புலுணியின் இரை தேடல் தொடர்ந்தது.

ஓர் ஆலமரத்துக்குக் கீழே கபிலநிறத்தில் ஒரு கும்பிடுபூச்சி, இரண்டு கால்களில் நிமிர்ந்து நின்று இரு கைகளையும் துடைத்தபடி உண்ண என்ன கிடைக்கும் என்று துளாவிக்

கொண்டிருந்த காட்சி புலுணியின் கண்ணில் பட்டது.

கும்பிடுபூச்சியின் வீச்செல்லைக்கு வெளியே, வந்தமர்ந்த புலுணி நின்று நிதானித்தது.

கும்பிடு பூச்சிகள் பலவகை. பச்சை நிறத்தில் ஒரு பாபப்பட்ட கும்பிடு பூச்சி ஊரெல்லாம் பிரபலம். கபிலநிறத்து கும்பிடு பூச்சி உயிர் கொல்லி. இது ஒரு ஆபத்தான வஸ்து. அதைப் பூச்சி என்று அழைப்பதே தவறு.

இதன் உணர்கொம்பின் விஷம் பாம்புகளைக் கூடக் கொல் லும். தன் விஷத்தைக் கொட்டிக் கொன்று சிறிய மிருகங்க ளையே இது தின்னவல்லது. இக்காட்சிகளைக் காணொளிக ளில் காணலாம். இது மனிதர்களுக்குதான் புதினமும் வியப் பும். உயிரினங்கள் அனைத்தும் உணர்ந்த உண்மை இது.

எல்லா விலங்குகளுக்கும் உள்ளுணர்வாலும் மரபுக் கூறுக ளாலும் கும்பிடு பூச்சியைத் 'துஷ்டனைக் கண்டால் தூர விலகு' என்று புறங்காட்டும். தத்தம் உயிர் வாழ்தலுக்கு இது கோழைத்தனமல்ல. இயற்கை அளித்த பாதுகாப்புக் கவசம்.

புலுணி யோசித்தது. 'மூளை கெட்டதனமாய் போய் மாட்டிக் கொண்டால் நாமே அதற்கு வாழை இலை பிரியாணியாக மாட்டிக் கொள்வோம்' புலுணி மனசுக்குள் சலனம். கொடுப் புக்குள் இருக்கும் புழு குஞ்சுகளுக்குப் போதாது. இதை மடக்கிப் போட்டால் நாலு குஞ்சுகளும் சில நாட்களுக்கு அனுக்கம் காட்டாமல் நிம்மதியாய்க் கிடக்குமே! தலைவிதி என்பது மனிதர் களுக்கு மட்டுமல்ல, சகல ஜீவராசிகளுக்கும் பொதுவானதே. இன்று புலுணியின் தலைவிதியை எழுதிச் சென்ற எழுதுகோலின் உயிர்த்திரவம் தீர்ந்து போயிருக்க வேண்டும்.

புலுணி கும்பிடுபூச்சியைச் சுற்றி ஒரு பாதுகாப்பு எல்லையை நிர்ணயித்துக்கொண்டு நிலத்தில் சில வட்டங்களில் நடைப் பயிற்சி செய்தது. கும்பிடுபூச்சியின் நிலையில் மாற்ற மில்லை. அது தனக்கான இரையாய்ப் புலுணியைக் கருதிக் கொண்டது. மோனநிலையில் நின்றபடி கைகளை தேய்த்தது. இரைகள் கிட்டாத வேளைகளில் தானியங்கியாகத் தலை யைச் சுழற்றி எல்லாத் திக்குகளையும் நோட்டம் விடுவது அதனியல்பு.

புலுணி தன் பாதுகாப்புப் பரப்பை மேலும் விரிவுபடுத்தியது. கும்பிடுபூச்சி முதலில் தாக்குதலைத் தொடுத்தாலும் தப்பி யோடக்கூடிய பகுதியில் நின்றுகொண்டு, கும்பிடுபூச்சி அச ரும் ஒரு கணத்துக்காகக் காத்து நின்றது. வானத்தின் நீலத்தை கருமுகில் மறைக்க குளிர்காற்று சில்லென்று வீசி யது. மழை வருவதற்கான அறிகுறி. இனி குஞ்சுகள் குரலோங் கத் துவங்கும். இது விரோதிகளுக்கு வரவேற்பு வளைவு வைப்பதைப் போன்றது.

கொடுப்புக்குள் சேகரிக்கப்பட புழு புலுணியின் உமிழ் நீரில் கரைந்து மிதந்து கொண்டிருந்தது. செல்லமாய் வளரும் குஞ் சுகள். உணவு ஈரலிப்பாக இருந்தால் உண்ணுமா தெரிய வில்லை. துப்பிவிடவும் கூடும்.

புல்லுணி இறக்கைகளைக் கோதி விரைந்து பறப்பதற்கான தயார் நிலையில் காத்திருந்தது.

கும்பிடுபூச்சி சலனமின்றிப் புலுணியின் பதட்ட நிலையை ரசித்தபடி 'வாடி மவளே உன்னைப்போலை எத்தினை பேரைப் பாத்திருப்பன். நீ என்ரை ஒரு கடிக்கு நிண்டு பிடிக்க மாட்டாய்...' அதன் மனசுக்குள் ஏளனம் குதியாட்டமிட்டது.

கண்கள் புலுணியில் நிலைக்க கைகளை அழுத்தித் தேய்த்து 'சனியனே ஒன்றில் பறந்துபோ, இல்லை, என்ரை எல் லைக்குள்ளை கிட்டவா வா.'

அதன் பொறுமை நிகழ்தகவு எல்லையை தொட்டும் தொடாத துமான திரிசங்கு நிலை. அதுதான் புலுணிக்குத் தேவை.

காலத்தின் நகர்வு விசித்திரமானது. நினைத்தது நிலைக்காது. நினைத்துப் பார்க்காத ஒன்று நிகழ்ந்துவிடும். விசித்திரங்க ளின் விளையாட்டுத்தானே வாழ்க்கை.

ஆலமரத்தின் அடிக்கிளையில் குந்தியிருந்து தன் இளமைக் கால இனிமைகளை இரை மீட்டிக்கொண்டிருந்த கிழப்பருந் தொன்றின் கிட்டப் பார்வையில் பதட்டநிலையில் அல்லாடிக் கொண்டிருக்கும் புலுணியின் காட்சி பனிப்புகாராய் நகர்ந் தது.

வல்லமையில் கணிசமானவற்றை வயதால் இழந்திருந்த பருத்துக்குக் காலுக்கடியில் காத்திருந்த புலுணி, தேவர்கள் வழங்கிய விருந்தாய்த் தெரிந்தது.

கணத்திலும் பாதிக் கணந்தான். புலுணியின் தலையைத் தன் கால் நகங்களால் கொத்திக்கொண்டு பருந்து இலாவகமாய்க் காற்றில் ஏறியது. புலுணி சேகரித்து வைத்திருந்த புழு, பாதி வாயிலும் மீதி வெளியிலுமாய்த் தவித்தது.

விதி தன் விளையாட்டை நிறுத்தியபாடில்லை.

கிழப்பருந்து புலுணியைக் கொத்திய அக்கணத்தில் பருந் தின் கால்காலில் பாய்ந்து தொற்றியிருந்தது கும்பிடுபூச்சி.

விழுந்த சில மழைத்துளிகளில் அனைத்தும் நனைந்தன. இப் போது எதுவும் எதற்கும் இரையாகவில்லை. ஆனால் எந்தப் பொழுதிலும் எதுவும் எதற்கும் இரையாகலாம்.

பனம் பொந்துக்குள் குஞ்சுகள் பசியின் தீனக்குரல் மற்று மொரு பருந்துக்கும் கேட்கலாம். பாம்புகளும் உணரலாம். பாற் கடலில் பாம்பு மெத்தையில் பாய்விரித்துப் பாவையின் அணைப்பில் சுகித்திருக்கும் பரமனுக்கும் கேட்கக் கூடும்.

உதவிக்கு உடுக்கடிக்க யாருக்கு யாரை
அனுப்புவாய் பராபரமே!



kandasamy.a@thaiveedu.com



# கவிஞன்

– ஹேமன் ஹெஸ்ஸே

தமிழில் : என்.கே. மகாலிங்கம்

ஹான் ஃபுக் என்ற சீனாவின் கவிஞன் பற்றி ஒரு கதை சொல்லப்படுகிறது. அவன் இளைஞனாக இருந்த காலத்திலிருந்தே கவிதைக் கலையை முழுவதாகக் கற்க வேண்டும் என்ற தீவிரமான விழைவுடன் இருந்தான். அந்த நாட்களில் அவன் மஞ்சள் ஆற்றுக் கரையில் இருந்த சொந்த நகரத்தில்தான் வாழ்ந்து வந்தான். அப்பொழுது நல்லதொரு குடும்பத்திலுள்ள ஒரு பெண்ணை அவனுக்கு நிச்சயதார்த்தமும் செய்திருந்தார்கள். பெற்றோரின் விருப்பத்தோடும் அது நடந்தது. அவனும் அவளை விரும்பியதனால்தான் அந்த நிச்சயதார்த்தம் நடந்தது. அவன் பெற்றோர்கள் அவனில் மிக அன்பானவர்களாக இருந்தார்கள். திருமணத்தை ஒரு நல்ல நாள் பார்த்து விரைவில் செய்ய இருந்தார்கள். ஹான் ஃபுக்குக்கு அப்பொழுது இருபது வயது. அழகான இளைஞன். பலராலும் விரும்பத்தக்கவனாகவும் இருந்தான். அறிவியல் துறைகளில் கல்வி கற்றிருந்தான். இளைஞனாக இருந்தபோதிலும் அந்த மாவட்டத்திலுள்ள இலக்கியக்காரர்களிடையே அவன் எழுதிய குறிப்பிடத்தக்க பல கவிதைகளால் ஏற்கெனவே அறியப்பட்டவனாகவும் இருந்தான். அத்தனை பணக்காரனாக இல்லாவிட்டாலும் வசதியாக வாழக்கூடிய அளவு வருமானம் இருந்தது. பெண் வீட்டார் கொடுக்கும் சீதனத்தால் அந்த வருமானம் இன்னும் அதிகரிக்கும் என்பதும் உண்மை. அந்தப் பெண்ணும் மிகவும் அழகானவள். நல்லொழுக்கமும் உள்ளவள். அதனால் அவனுடைய மகிழ்ச்சிக்கு எதுவித குறையும் இருக்கப் போவதில்லை. இருந்தும் அவன் முற்றாகத் திருப்தியானவனாக இல்லை. காரணம், அவன் மனம் தான் சிறந்ததொரு கவிஞனாக வேண்டும் என்ற பேரார்வத்தால் நிரம்பி இருந்தது.

ஒருநாள் மாலை, அந்த மஞ்சள் ஆற்றங்கரையில் விளக்கு விழா நிகழ்ந்தது. அப்போது ஆற்றின் மறுகரையில் தனியாக அவன் அலைந்து கொண்டிருந்தான். பின் ஆற்றின் மேல் வளைந்து செல்லும் ஒரு மரத்தின் அடியில் சாய்ந்து கொண்டான். அந்த ஆற்றின் நீரில் ஆயிரம் விளக்குகள் மிதந்தும் நடுங்கிக் கொண்டும் அவற்றின் ஒளி நீரில் பிரதிபலித்துக் கொண்டும் இருந்தன. ஆண்களும் பெண்களும் படகுகளிலும் சுமை தாங்கிப் படகுகளிலும் சென்று கொண்டும் ஒருவருக்கொருவர் வணக்கம் சொல்லிக் கொண்டும் இருந்தார்கள். அழகான மலர்களைப் போல தங்கள் விழாக்கோல ஆடைகளில் அவர்கள் இருந்தார்கள். பெண்கள் சிதார் என்ற நரம்புக் கருவிகளில் முரலொலி எழுப்பிக் கொண்டிருப்பதும் அவனுக்குக் கேட்டது. புல்லாங்குழல் இசைப்போர் இனிமையான தொனியில் பாடுவதும் கேட்டது. இவற்றின் மேலாக, நீல நிற இரவு கோயில் குவிமாடம் போல வளைந்து காணப்பட்டதையும் அவன் கண்டான். இத்தனை அழகுகளை கண்ட அந்த இளைஞனின் இதயம் வேகமாகத் துடித்தது. தனிமையில் அவன் தன் ஆசைகளை நிறைவேற்ற அலைந்து கொண்டிருந்தான். ஆற்றைக் கடந்து போய் அவனுக்கு மணமகள் ஆகப்போகும் பெண்ணுடனும் நண்பர்கள் கொடுக்கும் விருந்திலும் கலந்து கொள்ள விரும்பினான். இருந்தும் அவனுடைய ஆழமான மனதில் உண்மையில் இருந்தது வேறொரு விருப்பம். நுண்ணறிவுடைய அவன் தான் கண்ட காட்சிகளை எல்லாம் உள்வாங்கி முழுமையான துல்லியமான ஒரு கவிதையை ஆக்கும் எண்ணத்துடன் இருந்தான். இரவின் நீலம், ஆற்றின் மேல் நிகழும் வெளிச்ச விளையாட்டு, விருந்தினர்களின் மகிழ்ச்சி, ஆற்றின் கரையில் உள்ள மரக்கிளையில் சாய்ந்து கொண்டு அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த அவனுக்கு அவை எல்லாமே அதன் கருப்பொருட்கள். அந்த விழாக்களிலும் பூமியின் இன்பங்களிலும் அவனால் எதிலும் முற்றாக மகிழ்ச்சியாகவோ இதயத்தில் அமைதியாகவோ இருக்க இயலாது என்பதை அவன் உணர்ந்தான். பூமியின் அழகையும் ஒருத்தனின் விருப்பங்களையும் அறிய வாழ்வின் மத்தியில் கூட தனிமையில்தான் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்தான். அப்படி உணர்ந்தபோது அவன் துயரப்பட்டான். அந்த விடயத்தைப் பற்றிச் சிந்தித்தான். அவனுடைய சிந்தனையின் முடிவு இதுதான். உண்மையான மகிழ்ச்சியும் ஆழமான திருப்தியும் அவனுடையது மட்டுமே. சிலவேளைகளில் அவன் தன் கவிதைகளில் உலகத்தைச் சரியாகப் பிரதிபலித்து வெற்றி பெற்றிருந் தால், அவற்றில் உலகத்தின் தூய்மையான, நிரந்தரமான சாரத்தை கண்டிருந்தால் அது அவனுடையது மட்டுமே.

ஹான் ஃபுக் தான் இன்னும் விழிப்புடன் தான் இருக்கிறானா அல்லது துயில்கின்றானா என்பதைச் சிறிய சலசலப்பொன்று



கேட்டபோது உணர்ந்தான். அப்போது அங்கே ஒரு மனிதர் மரத்தின் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார். அவர் ஒரு முதியவர். வணக்கத்திற்குரிய அம்சங்களுடன் ஊதா நிற அங்கியில் இருந்தார். ஹான் ஃபுக் எழுந்து ஒரு முதியவருக்கு, மேன்மையான ஒருவருக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையுடன் அவரை வணங்கினான். அந்த மனிதர் முறுவலித்தார். ஒரு சில வசனங்கள் சொன்னார். அவற்றில் அவன் உணர்ந்த அத்தனையும் முழுவதாகவும் அழகாகவும் சரியாகவும் இருந்தன. பெரும் கவிஞர்கள் எடுத்தாளும் விதிகளுடன் அவற்றைச் சொன்னார். அதைக் கேட்ட அந்த இளைஞனின் இதயம் வியப்பில் உறைந்து போனது.

‘ஓ, யார் நீங்கள்?’ என்று கத்தினான், பணிவுடன் குனிந்து கொண்டே. ‘என்னுடைய எந்த ஆசிரியர்களிடம் கேட்டதிலும் பார்க்க உங்களால் என் ஆன்மாவின் உள்ளே சென்று அழ கான கவிதைகளில் உங்களால் அதைச் சொல்ல முடிகிறது!

அந்த மனிதர் இன்னொரு தரம் முறுவலித்து விட்டுச் சொன் னார். ‘நீயொரு ஒரு கவிஞனாக வர விரும்பினால் என்னிடம் வா. என்னுடைய குடிசையை வட மேற்கு மலைகளில் உள்ள பேராற்றின் தோற்றுவாயின் பக்கத்தில் காண்பாய். என்னை மிகச் சரியான சொற்களின் குரு என்றழைப்பார்கள். அதன் பின் அந்த முதிய மனிதர் மரத்தின் ஒடுங்கிய நிழலின் உள்ளே சென்று திடீரென மறைந்து விட்டார். ஹான் ஃபுக் அவரை வீணாகத் தேடி அலைந்தான். அவரின் தடையத் தைக் கூட கண்டு பிடிக்க முடியவில்லை. இறுதியில், நிகழ்ந் தவை எல்லாம் தான் களைத்துப் போய் விட்டதால் வந்த கனவு என்றே நினைத்தான். அதன் பின் அவசரமாகப் படகுக ளைக் கடந்து போய் விளக்கு விழாவில் இணைந்து கொண் டான். புல்லாங்குழல்களின் இசைக்கு இடையிலும் அவனுக் கும் அவருக்கும் நடந்த உரையாடல்களையும், அந்த மனித ரின் மர்மமான குரலையும் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந் தான். அவனுடைய ஆன்மா அந்த முதியவரிடம் போய் விட் டது போல உணர்ந்தான். விழித்துக் கொண்டு கனவு கொண் டிருக்கும் கண்களுடனும் மகிழ்ச்சியுடனும் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் இருந்து கொண்டிருந்தான். அந்த மக்கள் காதலில் அவன் கனவு கொண்டிருக்கிறான் என்று அவனை நையாண்டி செய்தார் கள்.

சில நாட்களின் பின்னர் ஹான் ஃபுக்கின் தந்தை திருமண நாளைத் தீர்மானிப்பதற்காக அவனுடைய நண்பர்களையும் உறவினர்களையும் அழைக்கத் தயாரானார். அப்போது மண மகன் தயங்கிக் கொண்டு, ‘தந்தைக்கு எதிராக மகனுடைய கடமையை செய்யாமல் பேசுகிறேன் என்று நினைக்காதீர்கள். அதற்காக என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். கவிதைக் கலையில் என்னை மேம்படுத்துவதற்கு எத்துணை பேரார்வத் துடன் இருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். என்னு டைய நண்பர்கள் என்னுடைய கவிதைகளைப் புகழ்கிறார் கள். என்றாலும் நான் இன்னும் ஆரம்ப நிலையிலேயே இருக் கிறேன் என்பதும் என் பயணத்தில் முதல் கட்டத்தில்தான் இருக்கிறேன் என்பதும் எனக்குத் தெரியும். ஆதலால் நான் தனியாக என்னுடைய போக்கில் கொஞ்சக் காலம் போய் என் கல்விக்கு என்னை அர்ப்பணிக்க அனுமதியுங்கள் என்று உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். அதில் நான் கவனம் செலுத்தாமல் இருப்பதற்கு மனைவியும் வீடும் தடையாக இருக்கும் என்பது என் எண்ணம். நான் இன்னும் இளையவனா கவும் கடமைகள் அற்றவனாகவும் இருக்கிறேன். ஆகவே இன்னும் கொஞ்சக் காலம் என் கவிதைகளை எழுத அனுமதி யுங்கள். அதில் நான் மகிழ்ச்சியும் புகழும் அடைவேன் என்று நம்புகிறேன்,’ என்று சொன்னான்.

அந்தப் பேச்சு அவனுடைய தந்தைக்கு பெரும் ஆச்சரியத் தைக் கொடுத்தது. அவர் சொன்னார். ‘இந்தக் கலை உனக்கு எல்லாவற்றிலும் பார்க்க உயர்ந்தது என்பது எனக்குத் தெரி யும். அதற்காக உன் திருமணத்தை ஒத்தி வைக்க விரும்புகி றாயா? அல்லது உனக்கும் மணமகளுக்கும் ஏதாவது பிரச்சி னையா? அப்படியானல் உங்களைச் சமரசப்படுத்துகிறேன். அல்லது உனக்கு இன்னொரு பெண்ணை மணமகளாக தெரிவு செய்கிறேன்,’ என்றார். ‘எனக்கு மணமகளாகப் போகி றவளும் எனக்கு மிகவும் உகந்தவளே. எங்களுக்கிடையே எந் தவிதமான முரண்பாட்டின் நிழல்கள் கூட விழவில்லை,’ என் றான். அதன் பின் அவன் தன் தந்தைக்குப் பின்வருமாறு சொன்னான். ‘விளக்கு விழா நாளில் ஓர் ஆசான் என் கனவில் தோன்றி, உலகத்திலுள்ள அத்தனை மகிழ்ச்சியிலும் பார்க் கத் என்னை சீடனாக ஏற்றுக் கொள்வதில் தனக்கு விருப்பம் என்று சொன்னார், ‘மிகவும் நல்லது. உனக்கு நான் ஒரு வரு டம் தருகிறேன். அந்தக் காலத்தில் உன் கனவை தொடர்ந்து செல். அது சிலவேளை உனக்குக் கடவுள் தந்த கொடையா கக் கூட இருக்கலாம்,’ என்றார் தந்தை.

‘அது இரண்டாண்டுகளாகக் கூட இருக்கலாம். யாருக்குத் தெரியும்?’ என்று தயக்கத்துடன் ஹான் ஃபுக் சொன்னான். அதன் பின் தந்தை அவனைப் போக அனுமதித்தார். ஆனால் துக்கத்துடன் தான் அவனுக்கு விடை கொடுத்தார். இளைஞன் தன் மணமகளுக்கு ஒரு கடிதம் எழுதி அவளிட மும் விடை பெற்றான். பின் பிரிந்து சென்றான். அவன் பல காலம் அலைந்து திரிந்து ஓர் ஆற்றின் தோற்றுவாயை அடைந்தான். அங்கே முற்றிலும் தனியாக மூங்கில் மரத்தில் கட்டப்பட்ட ஒரு குடிசை இருந்ததைக் கண்டான். குடிசைக்கு முன்னால் ஓலையில் இழைத்த பாயில் ஒருவர் குந்தி இருந் தார். ஆற்றின் கரையோரத்தில் நின்ற அவன் முன்பு பார்த்த அந்த முதியவர் குந்தி இருந்து, புல்லாங்குழல் ஒன்றை இசைத்துக் கொண்டிருந்தார். அவரை நோக்கி அவன் சென் றபோது அவர் எழும்பவோ வணக்கம் சொல்லவோ இல்லை. சும்மா முறுவலித்து விட்டு தன் மென்மையான விரல்களால் புல்லாங்குழலை வாசித்துக் கொண்டிருந்தார். மாய இசை ஒன்று வெள்ளி மேகம் போல அந்தப் பள்ளத்தாக்கில் வழிந் தோடியது. இளைஞன் வியப்பில் மலைத்துப்போய் நின்றான். இனிமையான திகைப்பில் அனைத்தையும் மறந்து போனான். துல்லியமான சொற்களின் குரு தன் சிறிய புல்லாங்குழலை வைத்து விட்டுத் தன் குடிசைக்குள் காலடி எடுத்து வைக்கும் வரை அவன் அப்படியே நின்றான். அதன் பின் ஹான் ஃபுக் ப யபக்தியுடன் அவரைத் தொடர்ந்து உள்ளே சென்றான். பின் னர், அவருடைய சேவகன் போலவும் சீடன் போலவும் அங்கே அவருடன் தங்கினான்.

ஒரு மாதம் போனது. அதற்குள் இதுவரை அவன் எழுதிய எல் லாக் கவிதைகளையும் அவன் வெறுக்கக் கற்றுக் கொண் டான். அவற்றைத் தன் நினைவில் இருந்தும் அழித்தும் விட் டான். இன்னும் சில மாதங்களின் பின் தன் ஊரில் அவனு டைய ஆசிரியர்களிடம் இருந்து கற்ற கவிதைகளையும் தன் மனதிலிருந்து அழித்து விட்டான். குரு அருமையாகத்தான் அவனுடன் பேசுவார். மௌனத்தில் இருக்கும்போது, அவன் இசையில் முற்று முழுவதுமாக தோயும்வரை புல்லாங்குழல் இசைக்கும் கலையையும் அவர் அவனுக்குக் கற்றுக் கொடுத் தார். ஒருமுறை ஹான் ஃபுக் சிறியதொரு கவிதையை எழுதி னான். அதில் இரண்டு பறவைகள் இலையுதிர் கால வானத்



இவர் 1877-இல் ஜேர்மன் பேரரசின் வேட்
டன்பேர்க்கில் பிறந்து 1962-இல் ரிஷினோ,
சுவிர்சலாந்தில் இறந்தார். இவருடைய
பெற்றோரின் பெற்றோர் தென்னிந்தியாவில்
புரட்டஸ்தாந்த திருச்சபையில் வேலை பார்த்
தார்கள். பைபிளை மலையாளத்தில் மொழி
பெயர்க்கும் குழுவிலும் இருந்திருக்கிறார்.
இவர் ஒரு கவிஞர், நாவலாசிரியர், ஓவியர். தந்தை ஜேர்
மனியர். தாய், பிரெஞ்-சுவிஸ் வேர் கொண்டவர். கவிதை
யிலும் இசையிலும் இளமையில் பேரார்வம் கொண்டவர்.
பெரும் வாசகர். கிரேக்க மறைஞானம், கதே, லெஸ்ஸிங்,
ஷில்லர், நீற்ஷே ஆகியோரை இளமையிலேயே வாசித்து
விட்டார். 1911-இல் இந்தியா சென்றார். அங்கே இந்திய
மறைஞானத்திற்கு அறிமுகமானார். அவரின் இலக்கியப்
படைப்புக்களில் கிழக்கத்தைய ஆத்மிக மதிப்பீடுகள்
அதிகம் இடம் பெற்றுள்ளன. அவருடைய முதல் கவிதை
களும் உரைநடைகளும் 1890-களிலும் 1900-களிலும் பிர
சுரமாகின. அவருடைய முதல் நாவல் Peter Carmanzind
1904 பிரசுரமாகியது. மிகவும் அறியப்பட்ட படைப்புக்
களான Demian, Bead Game, Steppenwolf, Siddhartha,
The Narcissus and Goldmand, The Glass ஆகியவை நம்
பகத்தன்மை, சுய அறிவு, மற்றும் ஆத்மிகத்தை ஆராய்
கின்றன. 1946-இல் இவருக்கு இலக்கியத்துக்கான நோபல்
பரிசு கிடைத்தது. அதற்கு முன்பே அவர் ஜேர்மன் மொழி
யில் மிகவும் புகழ் வாய்ந்தவராக திகழ்ந்தார். அவரின்
நண்பர்களாக அக்காலத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற எழுத்
தாளர்கள் இருந்தனர். உதாரணமாக, றொமன் றோலன்ட்,
பெற்றோல்ட் பிறெச்ற், தோமஸ் மான். ஷோபன்ஹோபர்
இவரில் செல்வாக்குச் செலுத்திய மெய்யியல்வாதி. சிக்மன்ட்
ஃப்றொய்ட் இவருடைய நாவலான பீற்றர் கொம்மன்சின்ட்
டைத் தனக்குப் பிடித்த எழுத்துகளில் ஒன்று என்கிறார்.
சித்தார்த்த நாவல் பல மொழிகளில் மொழியாக்கம் பெற்ற
தொரு நாவல். தமிழிலும் கிடைக்கின்றது. இவருடைய பல
படைப்புக்கள் திரைப்படங்களாக, பாடல்களாக வெளி
வந்துள்ளன.

தில் பறந்து கொண்டிருந்தன. அதை வாசித்து அவன் சந்தோ
சமடைந்தான். அதை அவன் தன் குருவிடம் காட்டுவதற்கு
அவன் துணியவில்லை. ஆனால் ஒருநாள் மாலை அதை
அவன் குடிசைக்கு வெளியே பாடிக் கொண்டிருந்தான்.
அதைக் குரு மிகவும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.
ஆனால் ஒரு வார்த்தை கூட அதைப்பற்றிச் சொல்லவில்லை.
வெறுமனே மென்மையாகத் தன் புல்லாங்குழலில் பாடிக்
கொண்டிருந்தார். அது நடுவேனிற் காலமாக இருந்தபோதும்
கூர்மையான காற்று குளிரத் தொடங்கியது. சாம்பல் நிறமா
கிய வானத்தின் ஊடாக இரண்டு நாரைகள் கம்பீரமாகப்
புலம் பெயர்ந்து கொண்டிருந்தன. சீடனின் கவிதையிலும்
பார்க்க இயற்கைக் காட்சிகள் எல்லாம் மிகவும் அழகாகவும்
துல்லியமாகவும் இருந்தன. சீடன் கவலை அடைந்து அமைதி
யாகி தான் எதற்கும் பயனற்றவன் என்பதை உணர்ந்தான்.
இதைத்தான் அந்தக் குரு ஒவ்வொரு முறையும் செய்தார்.
அப்படி ஓராண்டு சென்றது. ஹான் ஃபுக் புல்லாங்குழல் இசை
யில் ஏறக்குறைய முற்றாகத் தேர்ச்சி பெற்றான். ஆனால் கவி
தைக் கலை அவனுக்குக் கடினமாகவும் பிடிபடாத உன்னத
மானதாகவும் இருந்தது.

இரண்டு ஆண்டுகள் சென்றன. அவனுக்கு வீட்டைப்பற்றிய
கவலை வந்துவிட்டது. தன் குடும்பம், தன் நகரம், தன் மணம
கள் ஆகியவற்றைப் பற்றிய ஏக்கம் பிடித்துக் கொண்டது.
அவன் தன் வீட்டுக்குப் போக விடும்படி குருவை வேண்டி
னான்.

குரு முறுவலித்து விட்டு சரியெனத் தலையாட்டினார். ‘நீ
போகலாம். நீ விரும்பிய இடத்திற்குப் போ. நீ திரும்பி வர
லாம். அல்லது அங்கேயே தங்கி விடலாம். நீ விரும்பியது
போலச் செய்,’ என்றார். அதன் பின் அவன் தன் பயணத்தை
ஆரம்பித்தான். தொடர்ந்து நில்லாமல் பயணித்தான். ஒரு
நாள் விடியற்காலையில் அரை வெளிச்சத்தில் அவனுடைய
நகரத்தின் ஆற்றங்கரையில் நின்று பாலத்தின் வளைவின்
எதிரே பார்த்தான். அவன் தந்தையின் தோட்டத்திற்குள் இரக
சியமாகச் சென்றான். தந்தை துயில்வதை அவரின் படுக்கை
யறை யன்னலூடாகப் பார்த்தான். அவர் மூச்சு விடுவதைக்
கவனித்தான். தன் மணமகளின் வீட்டின் அருகாமையில்
உள்ள பழத்தோட்டத்திற்குள் சென்று ஒரு பேரிக்காய் மரத்
தில் ஏறினான். அங்கிருந்து பார்த்தபோது மணமகள் அவ
ளின் அறையில் தலைமுடியை வாரிக் கொண்டு நின்றாள்.
வீட்டு நினைப்பில் கற்பனை செய்து கொண்டிருந்தவற்றுடன்
இவற்றை ஒப்பிட்டுப் பார்த்தபோது தான் ஒரு கவிஞனாக
ஆகுவதற்காகத்தான் பிறப்பெடுத்தான். இந்த உலகாயுத
வாழ்க்கை வாழ்வதற்காக அல்ல என்று நினைத்தான். ஒரு
கவிஞனின் கனவில் அழகும் மாயமும் குடிகொள்கிறது என்ப
தைக் கண்டான். யதார்த்த உலகில் அதைக் காண ஒருவன்
வீணாக முயல்கிறான் என்பதை நினைத்துக் கொண்டான்.
மரத்தில் இருந்து இறங்கி தோட்டத்திற்கு வெளியே ஓடினான்.
பாலத்தில் மேலாகச் சென்று தன் நகரத்தில் இருந்து வெளி
யேறி உயர்ந்த மலைகள் உள்ள பள்ளத்தாக்குக்கு வந்து
சேர்ந்தான். அங்கே முன்பு போல குரு தன் குடிசைக்கு முன்
தன் எளிய பாயில் உட்கார்ந்து புல்லாங்குழலை தன் விரல்க
ளால் மீட்டுக் கொண்டிருந்தார். அவனுக்கு அவர் வணக்கம்
சொல்லவில்லை. கலையின் ஆசீர்வாதங்களை இரண்டு கவி
தைகளில் ஓதினார். அவற்றின் ஆழத்திலும் ஒத்திசைவிலும்
இளைஞனின் கண்களில் கண்ணீர் நிரம்பியது.

இன்னும் ஒருமுறை ஹான் ஃபுக் துல்லியமான சொற்களின்
குருவுடன் தங்கினான். அவர் இப்பொழுது தன் சீடன் புல்லாங்
குழல் வாசிப்பதில் தேர்ச்சி பெற்று விட்டான் என்பதைக்
கண்டு கொண்டார். அதன் பின் அவர் சிதர் வாத்தியத்தைக்
கற்றுக் கொடுத்தார். மாதங்கள் பல உறைபனி மேற்கத்தைய
காற்றில் கரைவது போலக் கரைந்தன. இன்னும் இரண்டு
முறை அவனுக்கு வீட்டுக் கவலை வந்தது. ஒருமுறை இரவில்
இரகசியமாக ஓட்டம் எடுத்தான். பள்ளத்தாக்கின் கடைசி
வளைவை அவன் எட்ட முன்பு குடிசைக் கதவில் தொங்கிக்
கொண்டிருந்த சிதர் இசைக் கருவியில் காற்று வீசியது. அதி
லிருந்து வந்த இசைச் சுரம் அவனைப் பின் தொடர்ந்து
சென்று அவனை அழைத்துக் கொண்டே இருந்தது. அதை
மறுக்க முடியாமல் அவன் திரும்பி வந்தான்.

அடுத்த முறை அவனுடைய தோட்டத்தில் அவன் ஓர் இளம்

மரக்கன்றொன்றை நடுவது போலக் கனவு கண்டான். அங்கே அவனுடைய மனைவியும் குழந்தைகளும் குழுமி நிற்கிறார்கள். குழந்தைகள் அந்த மரக்கன்றுக்கு வைன் மதுவையும் பாலையும் ஊற்றுகிறார்கள். அவன் எழும்பியபோது அவன் அறைக்குள் நிலவு பிரகாசித்துக் கொண்டிருந்தது. மனம் குழம்பி பார்த்தபோது அடுத்த அறையில் குரு துயின்று கொண்டிருந்தார். அவருடைய நரைத்த தாடி மெதுவாக நடுங்கிக் கொண்டிருந்தது. அப்போது அவனுக்கு அவரில் கடுமையான வெறுப்பு ஏற்பட்டது. அவர் தன் வாழ்க்கையை அழித்து விட்டார் என்றும் தன் எதிர்காலத்தை நாசமாக்கி விட்டார் என்றும் எண்ணினான். அவரின் மேல் பாய்ந்து அவரைக் கொல்ல நினைத்தான். அப்போது முதியவர் தன் கண்களை விழித்து அவனைப் பார்த்து இனிமையான சோகத்துடன் மென்மையாகப் புன்னகைத்தார். அது சீடனை சாந்தப்படுத்தியது.

'ஹான் ஃபுக் உனக்கு எதைச் செய்வதற்கும் சுதந்திரம் இருக்கிறது. நீ உன் வீட்டுக்குப் போகலாம். மரம் நடலாம். என்னை வெறுக்கலாம். என்னைக் கொல்லலாம். எதுவுமே எந்தவித வித்தியாசத்தையும் ஏற்படுத்தாது,' என்றார் மென்மையாக 'ஓ, நான் உங்களை எப்படி வெறுக்க முடியும்? அது சொர்க்கத்தை வெறுப்பது போலிருக்கும்,' என்றான். ஆழமாக நெகிழ்ந்து போய் அழுது கொண்டே அதைச் சொன்னான். பின் அங்கே தங்கியிருந்து சிதர் கருவியை இசைக்கக் கற்றுக் கொண்டான். அதன்பின் குருவின் வழிகாட்டலில் கவிதை எழுதக் கற்றுக் கொண்டான். மெதுமெதுவாகக் கலையின் இரகசியத்தைக் கற்றான். எளிய, இனிய விசயங்களைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். கேட்பவரின் ஆன்மாவின் உணர்ச்சியை காற்று நீரின் மேற்பரப்பைக் கிளறி விடுவது போல சொல்ல வேண்டும். சூரியனின் வருகையை விபரித்தான், அது எப்படி மலையின் விளிம்பில் தயங்கி நிற்கின்றது, நீரின் கீழே மீன்கள் எப்படி சத்தமில்லாமல் நிழல்கள் போல சுழன்று ஓடுகின்றன. இளம் பேர்ச் மரம் வசந்த காலக் காற்றில் எப்படி ஆடுகின்றது. மக்கள் அவற்றைக் கேட்கும்போது சூரியன் மட்டுமல்ல, மீன்களின் விளையாட்டு மட்டுமல்ல, பேர்ச் மரங்களின் குசுகுசுப்பு மட்டுமல்ல, சுவர்க்கமும் பூமியும் கூட ஒவ்வொரு முறையும் ஒரு கணம் துல்லியமான ஒத்திசைவுடன் ஒன்றாக முணுமுணுத்தன. கேட்போர் ஒவ்வொருவரையும் மகிழ்ச்சியுடனும் வலியுடனும் சிந்திக்கத் தூண்டின. எதை அவன் விரும்பினான் அல்லது வெறுத்தான் என்பதையும் விபரித்தான். சிறுவர்கள் விளையாட்டுகள் பற்றிச் சொன்னான். இளைஞர்கள் தம் காதலிகள் பற்றிச் சொல்வதைச் சொன்னான். முதியவர்கள் மரணத்தைப் பற்றிச் சிந்திப்பதைச் சொன்னான்.

பேராற்றின் தோற்றுவாயின் பக்கத்தில் உள்ள குருவுடன் எத்தனை ஆண்டுகளைக் கழித்தான் என்பது ஹான் ஃபுக்குக்கு நினைவில் இல்லை. அவன் நேற்று மாலை தான் இந்த மலைப் பள்ளத்தாக்கிற்கு வந்தது போல இருந்தது. வந்த போது குரு தன் நரம்புக் கருவியை இசைத்துக் கொண்டிருந்தார். மனிதனின் எல்லா யுகங்களும் சகாப்தங்களும் அவனுக்குப் பின்னால் மறைந்து விட்டன போலவும் அது வியக்கத்தக்கது போலவும் அவனுக்குத் தோன்றியது. பின்னொரு நாள் காலையில் அவன் தனியாகவே வீட்டில் எழும்பினான். எழுந்து எல்லாவிடமும் குருவைத் தேடினான். அவரை அழைத்தான். குரு மறைந்து விட்டார். ஒரே இரவில் வாழ்க்கை இலையுதிர் காலம் போலாகி விட்டது. கடும் குளிர் காற்று குடிசையை இழுத்துச் சென்றுவிட்டது. அதற்கான பருவ காலம் வரவில்லை என்ற போதிலும் மலைமுகட்டின் மேல் பெருமளவில் வலசை போகும் பறவைகள் சென்று கொண்டிருந்தன.

பின்னர் ஹான் ஃபுக் தன் சிறிய புல்லாங்குழலை தன்னுடன் எடுத்துக் கொண்டு தன் சொந்த மாகாணத்திற்குப் போவதற்கு மலையிலிருந்து இறங்கினான். அவன் மனிதர்களிடையே வந்து சேர்ந்தான். அவர்கள் வயது முதிர்ந்தவர்களுக்கும் மேன்மையானவர்களுக்குமுரிய வணக்கத்தை அவனுக்குச் செலுத்தினார்கள். அவன் தன் நகரத்திற்கு வந்தபோது அவனுடைய தந்தையும் மணமகளும் உறவினர்களும் இறந்து போனதைக் அறிந்தான். அவர்களுடைய வீட்டில் வேறு மனிதர்கள் வாழ்ந்தார்கள். மாலையில் விளக்கு விழா ஆற்றின்மீது கொண்டாடப்பட்டது. கவிஞன் ஹான் ஃபுக் தூரத்திலுள்ள ஆற்றின் கருமையான கரையில் நின்ற தொன்மையான அடிமரத்தின்மீது சாய்ந்து கொண்டு நின்றான். அவன் தன் சிறிய புல்லாங்குழலை வாசித்தபோது பெண்கள் ஏக்கப் பெருமூச்செறியத் தொடங்கினார்கள். மயங்கியும் நெகிழ்ந்தும் போய் இரவைக் பார்த்தார்கள். இளைஞர்கள் புல்லாங்குழல் இசைத்தவனை எங்கும் காணாது தங்களிடம் வரச் சொல்லி அவனை அழைத்தார்கள். அப்படியானதொரு புல்லாங்குழல் இசையை எவருமே கேட்டதில்லை என்று வியப்புடன் கூறினார்கள். ஆனால் ஹான் ஃபுக் அதைக் கேட்டு முறுவலிக்க மட்டுமே செய்தான். ஆயிரம் விளக்குகளின் படிமங்கள் ஆற்றுக்குள் மிதப்பதையும் பிரதிபலித்ததையுமே அவன் பார்த்துக் கொண்டிருந்தான். பிரதிபலிப்புக்களையும் மெய்ம்மையையும் அவனால் இனிமேலும் பிரித்தறிய முடியாதது போலவே இருந்தது. அவன் ஆன்மாவில் இந்த விழாவுக்கும் முதல் முதல் அவன் இளைஞனாக நின்றபோது கேட்ட அந்த விசித்திரமான குருவின் சொற்களுக்கும் எந்த வித வேறுபாட்டையும் அவனால் அறிய முடியவில்லை.



mahalingam.k@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: +1-416-849-0594*** ***Tel: +1-416-857-6406***


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You

33 Years Canadian Experience

AUGUSTINE & ASSOCIATES

# INCOME TAX

OUR SERVICES

- Personal, Business and Corporate Tax Services
- GST, HST & QST
- Accounting & Bookkeeping
- Payroll
- T4, T4A, T5, Rental Releve 31 (QC)
- Business Registration
- E-filing
- Ontario, Quebec & Other Provinces

EFILE Canada

CONTACT US TODAY
416-617-6735 or 514-279-7138
wimalendran.augustine@gmail.com



Helping you find your dream home, one key at a time.

JW PROPERTY REALTORS

# REAL ESTATE

Residential, Commercial, Investment, and New Development Properties.

Jesmine Wimal
647-871-1921

Wimal Augustine
416-617-6735

www.propertyrealtors.ca

HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE
Independently Owned And Operated
Office: 905-201-9977





HOMELIFE HIGHER STANDARDS

Buy or Sell Your Home call me 24-7



Cell: 416 856 6900

Kathir Subramaniam Kathirgamanathan P.Eng.
Sales Representative

www.kathirsubramaniam.com

HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090 kathirhomes@gmail.com



With best compliments from

ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்

GNANAMS STUDIOS

Since 1987

Digital Prints from 16"x20" to 40"x60"

- Family Portraits
- Children Portraits
- Business Portraits
- Passport & Citizenship Photos
- Classic Weddings
- Arangetram
- Puberty Ceremony

New Location



Bus: 416.750.8118
www.gnanamsstudios.com

2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2 ( BRIMLEY & EGLINTON ERA PLAZA NEAR CIBC BANK)

Digitally Redefined



BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality

Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management

Kathir
416 856 6900
Subramaniam Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
cpa CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272


- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Ervamatin Hair Lotion Lotion Capilar
Amazon HEALTHCARE.COM
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
FUNERAL HOME INC.
Providing Peaceful Final Arrangements
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது



BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YS
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474


கடன் தொல்லையா?
CREDIT CARD
BANK
ROBERT JONES
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை
கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?
சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்
Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்
அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com


BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radiusfinancial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
தரமான வீடு தவறிப்போகாது
பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
Chairman's Club Award Winner 2015
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner 2016
Chairman's Club Award Winner 2017
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8


அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
AATEK HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
FREE Inspection in GTA
Over 10 yrs in Business Experience
Flat Rate Pricing
Parts and Labour guarantee
Guaranteed Repairs
Professional Service
Fully Insured
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician
ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280


Buy, Sell Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani - Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasingham
Realtor
416.937.8090


SABONA


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan Subramaniam
Free Home Evaluation with No Obligation
416-816-0141


Daniels FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions Realty Inc. Brokerage
RAVEEN VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage



NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice




Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111




வீடு | வணிகம்
* வாங்க * விற்க * வாடகைக்கு...
Residential | Commercial
* BUY * SELL * LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
Home Evaluation
Home Staging
Professional Photography
Social Media Marketing
Just Listed & Feature Sheet




நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6




COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Ravi Kana




"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753




Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5




DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah
Realtor
647-888 3500
DILEEP Thangavel
Realtor
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

$8475.00
416-888-9492
Swapna Chan, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749
HOMELIFE LANDMARK REALTY INC.,BROKERAGE* OFFICE: 905-305-1600

HomeLife Today Realty Ltd., Brokerage*
Bus: 416-298-3200
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
Office: 905.471.0002

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMIDGROUP

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
RE/MAX ACE

Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120

Sri Vallipuranathar
Credit Solution Centre
416.439.0224
416.450.5011

Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage

Aazon
2468 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8

Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com
RE/MAX ACE

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd., Brokerage*

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
INFORCE LIFE Financial Services Inc.
416-909-0400 416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM
President & CEO

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
Cell: 416 505 8532

DR. YALINI ARAVINTHAN BDS, DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524

RE/MAX
LATHAN VARATHARAJAH
Broker Owner